இலங்கைத் தீவுடன் ஒரு வரலாற்றுத் தொடர்பு



JPL
C12844

லாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
01 SEP 2019
மாநகர சபை
யாழ்ப்பாணம்
KOHA JPL

இலங்கைத் தீவுடன் ஒரு வரலாற்றுத் தொடர்பு

தமிழாக்கம்

திருவேணிசங்கமம்

பதிப்பாசிரியர்

பேராசிரியர் சி. பத்மநாதன்

(தகைசார் பேராசிரியர்)

12844 CC
273573
273573 CC

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
954.93

நூலின் பெயர் :

இலங்கைத் தீவுடன் ஒரு வரலாற்றுத் தொடர்பு

பதிப்பாசிரியர்கள் :

பேராசிரியர் சி. பத்மநாதன்

முதற் பதிப்பு : 2013

வெளியீடு :

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

248, 1/1, காலி வீதி, கொழும்பு – 04,

இலங்கை

அச்சு :

யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

48 B, புளூமென்டால் வீதி, கொழும்பு – 13

தொ. பே. : 2330195

பக்கங்கள் : XLIV + 328

பிரதிகள் : 500

அளவு : 1/8

கடதாசி : 80 ஜி. எஸ். எம். வெள்ளைத்தாள்

விலை : ரூபா 550/=

Title:

An Historical Relation of the Island Ceylon

Editor:

Prof. S. Pathmanathan

First Edition : 2013

Published by:

Dept. of Hindu Religious & Cultural Affairs

248, 1/1, Galle Road, Colombo - 04,

Sri Lanka

Printers :

Unie Arts (Pvt) Ltd.,

48 B, Bloemendhal Road, Colombo 13.

Tel: 2330195

No of Pages : XLIV + 328

No of Copies : 500

Size : 1/8

Paper Used : 80 GSM White Paper

Price : Rs. 550 /=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டுரை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆய்வுப்பிரிவின் பணிகளுள் காலத்தால் நிலைத்து நிற்கும் பணி நூல்கள் பதிப்பித்தல் ஆகும். கிடைத்தற்கரிய நூல்கள், இந்துக்கலைக்களஞ்சியம், திணைக்களப் பதிப்புகள், ஆய்வரங்குக் கட்டுரைத் தொகுப்புக்கள், சிறப்புமலர், கோபுரம், பண்பாடு போன்ற இதழ்கள் இப்பணியில் அடங்குவன. அவற்றுள் கிடைத்தற்கரிய நூல்களைத் தேடி இனங்கண்டு பதிப்பித்தல்பணி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இவ்வருடம் இரண்டு கிடைத்தற்கரிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

அவற்றுள் ஒன்றாக An Historical Relation of the Island Ceylon என்னும் இந்நூல் வெளியீடு செய்து வைக்கப்படுவதுடன், இந்நூல் பிரித்தானியரான றொபேட் நொக்ஸ் என்பவரால் இலங்கை பற்றி அவரது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் எழுதப்பட்டதாகும். கண்டி இராச்சியம், அங்கு வாழ்ந்த மக்கள், அரசன் பற்றிய விபரங்கள், விவசாய முறை, கைவினைப் பொருட்கள் ஆகிய பல்வேறு விடயங்களைத் தரும் நூலாக அமைகின்றது. இந்நூல் மிகவும் சுவாரசியமாக அமைகின்றது. இந்நூலினை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகியோர் வாசித்துப் பயனடைய வேண்டுமெனத் திணைக்களம் எதிர்பார்க்கின்றது.

பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் இந்நூலைப் பதிப்பித்தல் தொடர்பான ஆலோசனைகளை வழங்கியதுடன், இந்நூலின் பதிப்பாசிரியராக விளங்குகின்றார். அவருக்கு எமது திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றது. மேலும் இந்நூலை ஆங்கில மொழியிலிருந்து செம்மையான முறையில் தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்து வழங்கிய திரு. திருவேணிசங்கமம் அவர்களுக்கும் இந்நூலின் பிரதி ஒப்பீட்டுப் பணியில் ஈடுபட்ட உதவிப்பணிப்பாளர் திரு. ம.சண்முகநாதன், ஆராய்ச்சி அலுவலர் திருமதி தேவகுமாரி ஹரன் ஆகியோருக்கும் இந்நூலின் பதிப்புப்பணியில் ஈடுபட்ட யுனி ஆட்ஸ் பதிப்பகத்தாருக்கும் அதன் ஊழியர்களுக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி சாந்தி நாவுக்கரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

கண்டி இராச்சியம் பற்றிய சமகால நூல்

இலங்கையிலே ஆதி காலம் முதலாக இக்காலம் வரையான வரலாற்றைப் படிப்பதற்கு பல வகையான மூலாதாரங்கள் உண்டு. அவற்றுள் இலக்கியங்கள் ஒரு வகை. அந்த வகையில் உள்ளவற்றில் மகாவம்சம் முதன்மையானது. அநுராதபுர இராச்சியம் தோன்றிய காலம் முதல் 1815 இல் இலங்கையில் முடியாட்சி முடிவடைந்த காலம் வரையான சில வரலாற்று அம்சங்களை அந்நூலிலே கண்டு கொள்ளலாம். நவீன கால அறிவியல் நோக்கில் அந்நூலிலே காணப்படுவன. எல்லாவற்றையும் வரலாறு என்று அறிஞர்கள் எவரும் இந்நாட்களிலே கருதுவதில்லை. அது இராசதானியை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட நூல் அரசர்கள் பற்றிய வரலாற்றை பல பகுதிகளிற் சுருக்கமாகவும் சிலரைப்பற்றிப் பௌராணிக முறையிலும் வேறு சிலரைப் பற்றி விரிவாகவும் கூறும் நூல் இராசதானியில் உள்ள சங்கத்தார் பற்றிய விபரங்களும் அதிலே கணிசமான அளவிலே இடம் பெற்றுள்ளன.

நாடளாவிய ரீதியிற் பரந்து இருந்த சமூகங்கள், குடியிருப்புக்கள் கிராமங்கள் உற்பத்தி முறை, வியாபாரப், கைப்பணித் துறைகள் என்பன பற்றி அதில் விபரங்களை அதிகமாக எதிர்பார்க்க முடியாது. மேலும் அந்நூல் சங்கத்தாரால் உருவாக்கப்பட்டது. அவர்களின் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டது. இந்நூலைப் பற்றிய அறிவுசார் விமர்சனங்கள் செம்மையாக இன்னும் வெளிவரவில்லை. தங்கள் கருத்துக்களை முன்வைப்பதற்கு அறிஞர்கள் தயங்குகின்றனர். இந்நாட்களில் அவர்களின் தயக்கம் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றாகும். ஐரோப்பியரின் வருகையோடு இலங்கை வரலாறு பற்றிய நூல்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணங்களும் ஒரு புதிய பரிணாமத்தைப் பெறுகின்றன. ஐரோப்பிய தேசாதிபதிகள், பிராந்திய நிர்வாக அதிகாரிகள் எனப் பலதரப்பட்டோர் தங்கள் அனுபவங்களின் அடிப்படையிலும் கடமைகளின் காரணமாகவும் விரிவான விபரங்கள் அடங்கிய அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளனர். இவற்றில் ஒரு சிறுபகுதி கொழும்பில் உள்ள ஆவணச் சுவடிகள் நிலையத்தில் வைத்துப் பேணப்பட்டு வருகின்றன. மிகப் பெரும்பாலானவை போர்த்துக்கல், ஒல்லாந்தர் இந்தோனேசியா, பிரித்தானியா ஆகிய நாடுகளிலே ஆவணச் சுவடிகள் நிலையங்களில் உள்ளன. ஆயினும் சமகாலத்தில் நவீன இலங்கை பற்றிய வரலாற்று ஆய்வு முயற்சிகள் தடைப்பட்டு விட்டன. எனவே ஒரு தேக்கநிலை ஏற்பட்டு அது சில தசாப்தங்களாக நிலவி வருகின்றது.

நிர்வாகத்திலே பங்கு கொள்ளாத சில வரலாற்று ஆசிரியர்களும் இலங்கையிலே சில காலம் தங்கி அங்குள்ள நிலைமைகளை அவதானித்தவர்களும் நூல்களை எழுதியுள்ளனர். போர்த்துக்கேய ஆசிரியர்கள் சிலர் வரலாற்று நூல்களை எழுதியுள்ளனர். அவர்களில் கேரோஸ் பாதிரியார் எழுதிய நூல் விரிவானது போர்த்துக்கேயரின் ஆட்சி நடவடிக்கைகளை விபரித்து இலங்கையில் அவர்களின் ஆதிக்கம் வீழ்ச்சி அடைந்தமையின் காரணங்களைத் தமது தேசத்தவர்களுக்கும், சமயத்தவர்க்கும் அறிவிப்பதே பிரதான நோக்கமாகும். அவரது நூல் 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. ஒல்லாந்த பாதிரியாரான பிலிப்பூஸ் வோல்டே என்பவர் இலங்கை பற்றி விரிவாக எழுதியுள்ளார். அவரது நூல் தென் இந்தியா தொடர்பான வரலாறுகள் அடங்கிய ஒரு பெருநூலின் சிறு பிரிவாகும். வோய்டே யாழ்ப்பாணப்பட்டினத்திற் கிறிஸ்தவ சமயம் பரப்பும் துறை முதல்வராக விளங்கியவர். எனவே இலங்கை பற்றிய அவர் கூறும் வரலாற்றிலே வட இலங்கை பற்றிய வரலாறே கூடுதலாக விரிவாக்கம் பெற்றுள்ளது.

அதே நூற்றாண்டில் பிரித்தானியரான றொபேட் நொக்ஸ் இலங்கையினைப் பற்றி ஒரு நூலினைத் தனது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் எழுதியுள்ளார். இவருக்கும் மற்றவர்களுக்கும் இடையில் மிகுந்த வேறுபாடு உண்டு. கிழக்கிந்திய வர்த்தக கம்பனியின் கப்பலொன்றின் அதிபராக இருந்தவர் இவரின் தந்தையாவார். இவர் தனது மகன் றொபேட் நொக்சுடனும் வேறு சில பிரித்தானியர்களோடும் வாணிபம் செய்ய இலங்கை வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டியாராப் துறை முகத்திலே இவர்களது கப்பல் தரையிறங்கியது. இவர்கள் அரசனுடைய கட்டளைப்படி கைது செய்யப்பட்டு அவனுடைய முன்னிலைக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் எந்த ஒரு அரசாங்கத்தினது தூதுவர்களாகவோ ஒற்றர்களாகவோ வரவில்லை. அவர்களுக்கு நேர்ந்த கதி விபரீதமானது. கண்டி அரசனாகிய இரண்டாம் இராஜசிங்கன் தொடக்கத்திலே போர்த்துக்கேயருக்கு எதிராகவும் பின்பு தான் வரவழைத்த ஒல்லாந்தருக்கு எதிராகவும் பல போர்கள் புரிந்தவன். இயல்பாகவே வெள்ளையர்கள் மீது அவனிடம் ஐயுறவு ஏற்பட்டது. ஏதோ காரணத்தினால் வந்து எதுவித குற்றமும் புரியாத ஐரோப்பியரைச் சிறைப்பிடித்துத் தனது நாட்டிலே வைத்து இருந்தனர். இருபது வருடங்களாக கண்டி இராச்சியத்தில் ஒரு கைதியாக இருந்து இறுதியிலே நுவரக்காலாவியா ஊடாகச் சென்று தமிழர் வாழும் பிரதேசமான வன்னிக்கு நுழைந்து அங்குள்ள சிலரின் உதவியோடு ஒல்லாந்தரை அடைந்தான். ஒல்லாந்தர் அவனைச் சொந்த நாட்டுக்கு அனுப்பி வைத்தனர். அங்கு வாழும் காலத்தில் இலங்கை பற்றிய நூலை றொபேட் நொக்ஸ் எழுதினார். அது பேரோஸ் எழுதிய நூலைப் போன்று ஒரு வரலாற்று நூலன்று. அதேபோல வோர்டே எழுதிய நூலிலிருந்தும் அது வேறுபட்டது. அந்நூல்களுக்கு இல்லாத சிறப்பு நொக்ஸ் எழுதிய நூலுக்கு உண்டு. அது இலங்கை பற்றிய நூல் என்று சொன்னாலும் அந்நூல் கண்டி இராச்சியம் பற்றியதாகும். இது போன்ற வேறொரு நூலும் அந்த இராச்சியம் பற்றி எழுதப்படவில்லை. எனத் துணிந்து கூறலாம். இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாகத்தின் ஆரம்ப காலத்து இலங்கை வரலாற்றின் ஆசிரியர்கள் தேசியக் கண்ணோட்டத்தோடு பார்த்தனர். அவர்களின் அரசனைப்பற்றி நொக்ஸ் கூறியவை பக்கசார்பானவை எனவும் விளங்கிக் கொண்டனர். ஆயினும் இந்தப் போக்கு தவறான ஒன்றாகவே காணப்படுகின்றது. நடைமுறையில் எந்த ஆட்சியும் இலட்சிய பூர்வமானதன்று. மகாவம்ச ஆசிரியர்களைப் போல் நவீனகால வரலாற்று ஆய்விற் சென்றகால மன்னர்களை உன்னதமான குணங்கள் எல்லாவற்றையும் கொண்டவர்கள் என்று நோக்குவது தவறாகும்.

இரண்டாம் இராஜசிங்கன் போர்த்துக்கேயருக்கு எதிராக அருஞ்சாதனைகளை ஈட்டியவன். ஒல்லாந்தர்கள் அவனோடு செய்து கொண்ட உடன்படிக்கையை மீறி கரையோரப் பகுதிகளில் நிலை கொண்டபோது அவர்களின் கண்டி மீதான ஆதிக்கப்படர்ச்சியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்து நிறுத்தியவன் ஆயினும் அவன் பல கொடுமைகளைப் புரிந்தவன் என்பதை அறிய முடிகின்றது. அவனுக்கு எதிராகச் சிங்களவர் கிளர்ச்சி புரிந்தனர். அரசனைத் துரத்திவிட்டு பாலகனாகிய இராசகுமாரனை முடி சூட்ட முற்பட்டனர். ஆயினும் கிளர்ச்சி தோல்வியடைந்தது. நொக்சும் வேறு வெள்ளையர்கள் பலரும் சிறைச்சாலையிலே பூட்டிவைக்கப்படாத ஒரு வினோதமான கைதிகள் சொந்த நாட்டிற்கு திரும்புவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. கண்டி நகரங்களிலும் சுற்றுப்புறங்களிலும் அவர்கள் தங்கி இருந்தனர். அவர்களுக்குச் சீவாதாரமாக மானியங்கள் வழங்கப்பட்டன. அவர்கள் வாழ்க்கை நடத்த அது போதாமையால் சில பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்தனர். இவ்வாறான ஐரோப்பியர்கள் சிலர் கண்டிப் பெண்களைத் திருமணம் செய்தனர். நொக்ஸ் என்றோ ஒரு நாள் நாடுதிரும்ப முடியும் என்ற நம்பிக்கையோடு இருந்தான். கிறிஸ்தவ சமயத்தில் நம்பிக்கை கொண்டவன் ஆயினும் கண்டி மக்களின் பௌத்த, இந்து சமயங்களை இழிவுபடுத்தி எழுதவில்லை. அந்த வகையில் சமகால ஐரோப்பியருடன் ஒப்பிடுமிடத்து அவரிடம் இழிவுபடுத்தும் தன்மை காணப்படவில்லை. கைதியாக இருந்த போதிலும் அரசனைப் பற்றியும் கண்டி இராச்சிய வாசிகளைப் பற்றியும் நொக்ஸ் காழ்ப்புணர்ச்சி கொண்டிருக்கவில்லை. கண்டி இராச்சியத்தின் எல்லா அம்சங்களையும் நொக்ஸ் குறிப்பிட்டமை கவனிக்கத்தக்கது.

அரசாங்கம், நாட்டுமக்கள், அவர்களுடைய வழமைகள், வழிபாட்டு முறைகள், பழக்க வழக்கங்கள், விவசாய முறை, உற்பத்தியாகும் உணவு தானியங்கள், கைவினைப்பொருட்கள் மந்தைகள், வீட்டுவளர்ப்புப் பறவைகள் வனங்களிலும் வயல்களிலும் நீர் நிலைகளிலும் சஞ்சரிக்கின்ற பறவைகள், காட்டு மிருகங்கள், புல்பூண்டு வகைகள், மரஞ் செடிகள், மருந்து மூலிகைகள், மருத்துவமுறை, காய்கனி வர்க்கங்கள், சுவாத்திய நிலைகள், நிலவளம், நீர்வளம் முதலானவற்றை பற்றி விபரமாக எழுதுகின்றார்.

நூலைப் படிக்கின்ற போது ஒரு நாவலைப் படிப்பது போன்ற உணர்ச்சி ஏற்படும் ஆனால் நொக்ஸ் தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் தான் புரிந்தவாறு பதிவு செய்தான். ஒரு வரலாற்று ஆதாரம் போன்று வேறெந்த நூலும் இதனைப் போன்று எழுதப்படவில்லை. இது வரலாற்று ஆசிரியர்கள், மாணவர்கள் ஆழமாகப் படிக்க வேண்டிய நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி இராச்சியத்தின் சமூக வழமைகள், ஆட்சிமுறை, பொருளாதாரம் என்பனபற்றி அறிந்து கொள்ள விரும்புபவர்கள் எல்லோரும் இதனைப் படிப்பதன் மூலம் அதிக பயன் பெறுவர். பதினேழாம் நூற்றாண்டிலே கண்டிச் சிங்களவரிடையே காணப்பட்ட சமூக, பண்பாட்டு நிலைகள் இந்த நாட்களிற் பெரிதும் மாற்றம் அடைந்துவிட்டன.

நொக்ஸினுடைய நூலைப் படிக்கின்ற பொழுது 17ஆம் நூற்றாண்டுக் காலத்துச் சமுதாயமும், நிகழ்ச்சிகளும் சித்திரக்கோலம் போல் படிப்பவர்களின் உள்ளங்களிற் பதிந்துவிடுகின்றன. இந்நூலைத் தமிழாக்கம் செய்த நண்பர் திருவேணி சங்கம் மூலநூலிலுள்ள சிக்கலான வசனங்களை இலகுபடுத்தியும் பொருள் மாறுபடாத வண்ணமும், படிப்போரைக் கவரக்கூடிய வகையிலும் தனது பணியை நிறைவேற்றியுள்ளார். அவரது பணி பாராட்டிற்குரியது.

இவ்வரிய நூலை வெளியிடுவதற்கு இணங்கிய இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களமும் குறிப்பாக அதன் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசனும் பாராட்டுக்குரியவர்கள். இந்நாட்களில் வரலாறு கற்க வேண்டும், அதன் மூலமாக வாழ்வியலைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற உணர்வு தமிழ் மாணவர்களிடையே முனைப்புப் பெற்று வருகின்றது. மூலநூல்கள் தமிழாக்கம் பெறாதுள்ளமை இப்பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு ஒரு பெருங்குறையாகவுள்ளது. **மகாவம்சம்** முதலான வரலாற்றாதாரங்களை இத்திணைக்களம் தெரிவு செய்து வெளியிடுமாயின் அது கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர் என்போரிடையிலே பெருமளவிலான பாராட்டைப்பெறும்.

பேராசிரியர் சி. பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகவுரை

1681இல் முதன்முதலாக இலண்டனில் வெளியிடப்பட்ட நொக்ஸின் இலங்கையுடனான வரலாற்றுத் தொடர்புகள் என்ற நூலுக்கு அறிமுகவுரை அவசியமில்லை. இந்தப் புத்தகம் இலங்கை பற்றி ஆங்கிலத்தில் வெளிவந்த முதல் புத்தகமாகவும் இன்னும் பல வழிகளில் சிறப்புடையதாகவுமிருக்கிறது. இந்த நூலின் ஆசிரியரான றொபர்ட் நொக்ஸ் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் சேவையில் இருந்த ஒரு மாலுமி. அவர் கண்டியரசனாற் சிறைப்பிடிக்கப்பட்டு, இலங்கையில் கிட்டத்தட்ட இருபது வருடங்கள் தடுப்புக் காவலில் இருந்து தப்பி, தாயகம் மீண்டு இந்நூலை எழுதிவெளியிட்டார். அக்காலத்துக் கண்டி பற்றிய தகவல்களையும் அவனின் தனிப்பட்ட அநுபவங்களையும் இந்நூல் விபரிக்கிறது. பல காரணங்களால் இந்நூல் பெறுமதிக்குரியதாகிறது. பதினேழாம் நூற்றாண்டின் சமூக பொருளாதார மாற்றங்களை விபரிப்பதோடு ஆங்கில புனைகதையின் சிறந்த படைப்பான டானியேல் டிஃபோவின் றொபின்சன் குருசோ போன்றவை தோன்றுவதற்கும் அடி கோலிக் கொடுத்தது. இவைகள் எல்லாவற்றையும் விட இது வாசகருக்கு ஆர்வமூட்டும் பிரயாணக்கதையாகவுமிருக்கிறது.

வரலாற்றுத் தொடர்பு பற்றிய, பதினேழாம் நூற்றாண்டு ஐரோப்பாவிற் பரவலாக வாசிக்கப்பட்ட நூலாகும். ஆசிரியர் உயிருடன் இருக்கும் போது இரு பதிப்புகள் வெளிவந்தன. இதை விட டச்சு, ஜேர்மன், பிரெஞ்சு, மொழிகளிலும் மொழிப்பெயர்ப்புகள் வெளியிடப்பட்டன. பின்னர் வாசகர் ரசனை மாறிப்போனமையால் இந்தப் புத்தகம் மறக்கப்பட்டிருந்தது. இதனால் இரண்டரை நூற்றாண்டு காலத்தில் இந்த நூலின் இருபதிப்புகள் தான் வெளிவந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொக்ஸ் பற்றிய வெளியிடப்படாத குறிப்புகள் மற்றும், அவன் இரண்டாம் பதிப்புக்கு எழுதிய குறிப்புகள் மற்றும் கடிதங்களைப் பார்க்க எங்களால் முடியவில்லை. அவை ஆவணக் காப்பகங்களில் மறைந்து கிடக்கின்றன. இதனால் இப் பதிப்பில் குறைகள் ஏற்படலாம் என்று எங்களுக்குத் தெரியும். இந்த நாட்டின் பெரிய நூலகங்கள் எதுவும் அவைகளின் போட்டோ பிரதிகளைத்தானும் கொண்டிருக்கவில்லை என்பது மனவருத்தத் துக்குரியது.

நொக்ஸின் வாழ்க்கை

1910இல் நொக்ஸின் சுயசரிதம் போல்டியன் நூலகத்திற் கண்டுபிடிக்கப்படும் வரை, அவரின் ஆரம்ப வாழ்க்கை பற்றி அதிகம் தெரியாமல் இருந்தது. அச்சுயசரிதத்திலிருந்து நொக்ஸ் ஸ்கொத்லாந்து பூர்வீகம் உடையவன் என்று தெரிகிறது. தனது சுயசரிதத்தில் தனது பாட்டனாரும் தகப்பனாரும் சஃப்போல்க் பிரதேசத்தில் உள்ள நக்டனிலே பிறந்தவர்கள் என்று நொக்ஸ் கூறியிருக்கிறான். டச்சு இனத்தினரான பெசன்னல்கள், ஸ்ராப்கள் ஆகியவர்களுடன் திருமண உறவு கொண்டிருப்பதால் நொக்ஸ்கள் டச்சு வம்சாவழியைக் கொண்டவர்கள் என்று ராயன் கருதுகிறார்.

நக்டனிற் பிறந்த முதிய நொக்ஸ் மார்ச் 15, 1606 இல் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். அவர் இளைஞனாக இருக்கும் போது கிழக்கு மத்தியதரைக்கடல் பிராந்திய முஸ்லீம் நாடுகளுடன் வர்த்தகம் செய்துவந்த லேவன்ற் கம்பெனிக்குச் சொந்தமான கப்பலிற் கடலுக்கு சென்றிருந்தார். இந்தப் பிரயாணங்களின் போது பல ஆபத்துக்களை அவர் சந்திக்க நேர்ந்தது. ஜிப்ரால்டர் நீரிணையிலும் மற்றும் பல இடங்களிலும் துருக்கியர் முதலானவர்களின் தாக்குதல்களுக்கு அவர் முகம் கொடுக்க நேரிட்டது. அவைகள் விரிவானவை என்பதால் இங்கு விபரிக்க முடியாதுள்ளது. இக்கப்பலிற் செய்துவந்த வர்த்தகத்தால் முதிய நொக்ஸ் நிறைய வருமானத்தை ஈட்டிக்கொண்டார். இளைய நொக்ஸின் குழந்தைப்பருவமான 1640இல் முதிய நொக்ஸ் கப்பலின் கொமாண்டராகப் பதவி உயர்த்தப்பட்டிருந்தார். நொக்ஸின் மூத்த சகோதரி அபிகெயில் 1639இற் பிறந்தவர். றொபர்ட் நொக்ஸ் 1641லும் அவனின் சகோதரன் றொபர்ட் ஜேம்ஸ் 1647-1648 க்குள்ளும் பிறந்தவர்கள். நொக்ஸ் குறிப்பிடுவது போல் எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித பிச்சுபிடுங்கலுமில்லாமல் குடும்பம் நல்ல நிலையில் ஓடிக் கொண்டிருந்தது. கப்டன் நொக்ஸ் ஆன் என்னும் புதிய கப்பலை 1655இலே கட்டிக் கொண்டார். தனது இளமைக் காலத்தை பற்றி நொக்ஸ் விபரிக்கும் போது, "எனது ஆரம்பக் கல்வியை தாயாரிடமிருந்து பெற்றேன். தந்தை அநேகமாகக் கடலுக்குப் போய்விடுவார்; எனது தாயார் தீவிர சமய ஈடுபாடு கொண்டவள். அவரின் எண்ணமெல்லாம் கடவுள்தான்; அவள் எங்களுக்குக் கடவுள் பற்றிய எண்ணத்தையும் பயத்தையும் அவருக்கு சேவை செய்ய வேண்டிய அவசியத்தையும் ஊட்டமுனைந்தாள். இதுவே எப்பொழுதும் அவருடைய நோக்கமாக இருந்தது. அவர் என்னை பைபிளையும் மற்றச் சமய நூல்களையும் வாசிக்க வைத்தார். அவர் காலை, மாலை, பிரார்த்தனையை நாங்கள் தவறவிட அனுமதிக்க மாட்டார். நான் போகுமிடமெல்லாம் பைபிளின் பகுதிகள் என்னிடமிருக்கும்."

தனது பாடசாலைக் கல்வி பற்றி நொக்ஸ் குறிப்பிடும் போது "நான் ஓரளவு வளர்ந்தவுடன் றோகம்டன் என்னும் இடத்தில் உள்ள விடுதிப்பாடசாலைக்கு அனுப்பப்பட்டேன்" வசதியான மத்தியதர வர்க்கத்து பிள்ளை பெறும் இயல்பான கல்வியை நொக்ஸ் அங்கே பெற்றான். முதிய நொக்ஸ் தனது மகனை ஒரு வர்த்தகனாக்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டிருந்தார். ஆனால் நொக்ஸ் தான் கடலுக்கு போக வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தான். முதிய நொக்ஸ் மறுத்தார். கடைசியாக பலரின் வற்புறுத்தலுக்கு பின் மகனின் விருப்பத்திற்கு இசைந்தார். தான் புதிதாக கட்டிய ஆன் என்ற கப்பலில் நொக்ஸையும் இணைத்துக் கொண்டார்.

ஆன் தனது சேவையை கிழக்கிந்திய கம்பெனியில் இணைந்து ஜனவரி 21,1658 இல் இந்தியாவில் உள்ள சென். ஜோர்ஜ் கோட்டையை நோக்கி ஆரம்பித்தது. வங்காள விரிகுடாவிலுள்ள சோழமண்டலச் கடற்கரைப் பகுதிகளில் வர்த்தகம் செய்ய ஒரு வருடகாலம் டிசெம்பர் 31, 1657இல் இருந்து கப்பல் ஆணைக்குழ அனுமதி வழங்கி இருந்தது. போதியளவு பொருட்கள் கிட்டாதுவிட்டாற் பாரசீகத்திலும் வர்த்தகம் செய்ய அனுமதிக்கப்பட்டது. தனது பிரயாணத்தில் முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

தடவையாகப் பாரசீகத்தில் உள்ள கம்ரூனுக்கும் இன்றைய பண்டர் அப்பார்ஸ் அதன் பிறகு சூரத்துக்கும் மற்றும் வர்த்தகம் செய்யக்கூடிய இடங்களுக்கும் போனது. சுமத்திரா தீவிலுள்ள ஆச்சேக்கும் இக்கப்பல் போனதாகத் தெரிகிறது. ஆன் குறித்த காலப்பகுதியில் கொண்டுபோன பொருட்கள் எல்லாவற்றையும் விற்கவும் உரியபொருட்களை வாங்கவும் முடியவில்லை. என்பதால் கம்ரூனுக்கு சென்றது. அங்கும் வியாபாரமும் செய்தும் கப்பல் போதியளவு நிரம்பாததால் மீண்டும் சென்.ஜோர்ஜ் கோட்டைக்குச் சென்று அங்கிருந்து பாண்டிச்சேரிக்கு சென்றது. நவம்பர் 19,1659 இல் மசூலிப்பட்டணம் போகும் வழியில் ஒரு பலமான புயல் காற்றில் கப்பல் சிக்கிக்கொண்டது. இதனால் பல கப்பல்கள் கரைக்குத் தள்ளப்பட்டன. ‘‘நாங்கள் எங்கள் கப்பலின் பிரதான பாய்மரத்தை வெட்டி விட நேர்ந்தது. அதனால் எங்கள் பிரயாணத்தைத் தொடரமுடியாத நிலையேற்பட்டது. இது விடயம் சென்.ஜோர்ஜ் கோட்டையில் உள்ள எங்கள் கம்பெனி முகவருக்கு அறிவிக்கப்பட்டது. முகவர் எங்களைக் கொட்டியாரக்குடாவிற்குப் போகுமாறும் அங்கே வர்த்தகம் செய்து கொண்டு பாய்மரத்தைப் பொருத்தும் வேலைகளைப் பார்க்குமாறும் பணித்தார். இதன் படி ஆன் கொட்டியாரத்துக்கு வந்தது. புதிதாகப் பாய்மரத்தைப் பொருத்தி மற்றப் பாதிப்புகளையும் திருத்திக்கொள்வது. எங்கள் நோக்கமாக இருந்தது. அப்பகுதி ஆளுநர் எங்களை வரவேற்றது மாத்திரமல்லாது உணவுப் பொருட்களை வாங்கிக்கொள்வதற்கும் அனுமதியளித்தார். 1649 இல் சன்பிளவர் கப்பலின் கப்டன் சாள்ஸ் வைல்ட் பாண்டத்துக்கு போகும் வழியில் எந்தவித தொந்தரவுமின்றி கொட்டியாரக்குடாவிலே தரித்து நின்றதும், அவனின் மாலுமிகள் எந்தவித இடையூறுகளுமின்றி முப்பது மைல் தூரம் உள்நாட்டுக்குள் போய் வந்ததும் அங்கே ஒரு கிறிஸ்தவ நகரமொன்றை கண்டதாகச் சொன்னதும் அவர்களுக்கு மேலும் நம்பிக்கையை ஊட்டியது. ஆயினும் முன்னைய வருடத்தில் பேர்ஸியா மேசன்ற் மாலுமிகள் சிங்கள அரசனாற் சிறைப்பிடிக்கப்பட்டிருப்பது தெரிந்தும், முன் ஜாக்கிரதையில்லாமல் தனது ஆட்களை கரைக்கு அனுப்பியது மடைத்தனமான செயலாகும். கம்பெனியின் பதிவேடுகள் பேர்ஸியா மேசன்ற் கப்பலின் மாலுமிகளைப் பற்றி விசாரிக்கும் படி கப்டன் நொக்ஸிடம் கேட்டுக்கொண்டதாக தனது புத்தகத்தில் குறிப்பிடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் இராசசிங்கன் தனது தந்தையாரான சேனரத் மன்னனை அடுத்து 1635 இல் அரசபதவி பெற்றான். இளவரசனாக இருந்தபோது 1630 இல் நடந்த போரில் மிக வலிமையுடன் இருந்த போர்த்துக்கீச ஆளுநர் கொன்ஸ்டான்டின் டிசாவைக் கொன்று தனது திறமையை காட்டி இருந்தான். அரசனானவுடன் இராசசிங்கன் போர்த்துக்கீசரை இலங்கையின் கடற்கரையோரத்திலிருந்து வெளியேற்றுவதற்காக டச்சுக்காரர்களுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டான். இக்கூட்டால் அவர்கள் வெளியேற்றப்பட்டனர். ஆனால் விரைவில் தான் 'மிளகை கொடுத்து இஞ்சியை பெற்றுக்கொண்டதைப்போல' என்ற சிங்களப் பழமொழி கூறும் நிலைக்கு உட்பட்டிருப்பதை உணர்ந்தான். ஏனென்றால் டச்சுக்காரர்கள் போர்த்துக்கீசரிடமிருந்து கைப்பற்றிய இடங்களை அரசனிடம் ஒப்படைக்க மறுத்து, அவற்றைத் தங்களது கிழக்கிந்திய கம்பெனிக்கு சொந்தமாக்கிக் கொண்டனர். தனது வெளிநாட்டுக்கொள்கை தோல்வியடைந்ததைக் கண்ட மன்னன் மனநிலை குழம்பி மேலும் கொடுங்கோலனானான். அவன் உன்மத்தம் கொண்டு மிருகக்காட்சி சாலையில் காட்டுமிருகங்களை அடைத்தது போல ஐரோப்பிய இனத்தவர்களை அடைத்து வைப்பதில் ஒருவித திருப்தி கொண்டான். இந்த விசித்திர பொழுதுபோக்கு அவனது இறுதிக் காலம் வரையும் தொடர்ந்தது.

அரசன் எங்களது நோக்கத்தையும் எதிர்பார்ப்பையும் நாங்கள் யார் என்பதையும் எவ்வளவு காலம் தரித்து நிற்போம் என்பதையும் அறிவதற்காக ஒரு திசாவையை அனுப்பினான். ஆயினும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கைதிகளைப் பிடித்து வைத்திருப்பது அவனது உள் நோக்கமாக இருந்தது என்பதைப் பிற்கால நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன. திசாவை கடற்கரைக்கு வந்தவுடன் கப்டனுக்கு ஒரு செய்தியைக் கொண்டு வந்திருப்பதாகத் தூது அனுப்பினான். இதனால் கப்பல் கப்டன் தனது மகனையும் ஜோன்வல்லாண்ட் என்ற இன்னொரு மாலுமியையும் கரைக்கு அனுப்பி வைத்தான். அவர்கள் கடற்கரையிலிருந்து 12மைல் உள்ளே சென்று திசாவையைச் சந்தித்தனர். நொக்ஸும் வல்லாண்டும் திசாவையின் உள் நோக்கம் பற்றிச் சந்தேகித்தனர். அதனால் கப்டனை எக்காரணம் கொண்டும் கரைக்கு வர வேண்டாம் என்று கடிதம் அனுப்பினர். இக்கடிதம் கப்டனிடம் போய்ச் சேரவில்லை. பதிலாக சிங்கள தூதுவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்டனிடம் திசாவை நொக்ஸூடனும் வல்லாண்டுடனும் கரைக்கு வந்து கொண்டிருப்பதாகவும் கப்டனை கரைக்கு வந்து கடிதத்தை பெற்றுக்கொள்ளுமாறும் கூறினர். கப்டன் சந்தேகிக்கக் கூடியவாறு ஒன்றும் நிகழாததைக் கண்டு ஒரு சிறுபடகில் ஏறி ஆற்றுக்கு வந்து அங்கிருந்த புளிய மரத்தடியில் எங்களையும் திசாவையும் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தார். இந்த நேரத்தில் உள்ளூர்ச் சிப்பாய்கள் அவரையும் குழுவினரையும் சூழ்ந்து கொண்டனர். இங்கு நடந்தவைகள் தெரியாமல் இன்னொரு குழுவினர் கரைக்கு வந்து மரம் ஒன்றை தறித்து பாய்மரமாகத் தயார் பண்ணிக் கொண்டிருக்கும் போது உள்ளூர்ச் சிப்பாய்களுடன் ஏற்பட்ட பலமான கைகலப்பை அடுத்து பிடிபட்டனர். இவ்வாறு கப்பலைச் சூழ்ச்சியாற் கைப்பற்ற முயற்சி எடுத்தான். அவர்களைத் தடுத்து வைத்திருப்பதன் காரணம் அரசன் ஆங்கில நாட்டுக்கு ஓர் அன்பளிப்பையும், கடிதத்தையும் தருவதாக இருக்கலாம் என்று திசாவை கூறினான். மேலும் கப்பலை ஆற்றுக்கு கொண்டு வருமாறும், குடாவில் கப்பல் நிற்பது பாதுகாப்பில்லை என்றும், ஒரு வேளை ஒல்லாந்தர் கப்பலுக்கு தீ வைத்து விடலாம் என்றும் கூறி, திசாவை பயமுறுத்தினான். இந்த ஆலோசனையைக் கப்பல் கப்டன் கருத்தில் கொள்ளவில்லை. இரு மாதம் தடுப்பில் இருந்த பிறகு தங்களது விடுதலைக்கான அறிகுறி எதுவும் தென்படாததால் கப்டன் கப்பலை போட்டோ நோவாவிற்கு கொண்டு சென்று அங்குள்ள முகவரின் ஆலோசனைப்படி செயல்படுமாறு கூறினார். கப்பலுக்கு இந்தச் செய்தியை கொண்டு சென்று கூறிவிட்டு தனது முதிய தகப்பனாரை கவனித்துக்கொள்ளும் பொறுப்பிருக்கிறது. என்று நொக்ஸ் கரைக்குத் திரும்பிவிட்டான்.

பதினெட்டுப் பேரில் கப்பலுக்கு சென்ற இருவர் திரும்பாததால் பதினாறு பேர் இப்போது இருந்தனர். அவர்கள் யாவரும் உள் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டனர். அவர்கள் அரசனின் கட்டளைப்படி தனித்தனியாகவும் சிறு குழுவினராகவும் கிராமங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். கைதிகளை பராமரிப்பது அவர்கள் தங்கி இருக்கும் கிராமத்தின் பொறுப்பாகும். இதற்குப் பதிலாக கைதிகளிடமிருந்து எந்த வேலையும் வாங்கக் கூடாது என்பது அரசனின் கண்டிப்பான கட்டளையாகும். இது பற்றி நொக்ஸ் குறிப்பிடும் போது “ எங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாளைக்கு இருதடவை அந்த நாட்டில் கிடைக்கக் கூடிய தரமான உணவு வகைகளை நாங்கள் சாப்பிடக்கூடிய மட்டும் இலவசமாகத் தந்தனர். ஆயினும் கிராமத்தவர்கள் எங்களுக்கு உணவு மட்டுமே தந்ததால் மற்றத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஏதும் தொழில்களைச் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. பலர் தொப்பி தைக்கத் தொடங்கினர். ஆங்கில பணத்தில் ஒரு தொப்பிக்கு ஒன்பது பென்ஸ் நூல் செலவு மூன்று பென்ஸ் மீதி இலாபம். கூடியவிரைவில் தொப்பி உற்பத்தி தேவையை மிஞ்சிவிட்டது. கடைசியில் எங்கள் தொப்பிகள் விற்காமல் தேங்கி அந்த தொழில் செத்துவிட்டது. எங்கள் தேசத்தவர்கள் எல்லாம் தங்கள் தேவையை நிறைவேற்ற முடியாமல் திண்டாடினர். அவர்கள் புதிய தொழில்களை நாடினர். சிலர் மந்தை மேய்ப்பையும், உழவுத் தொழிலையும் மேற்கொண்டனர். சிலர் தமக்குரிய வாழ்வாதாரத்தைச் சிங்கள குடும்பங்களுடன் திருமண உறவு வைத்துக் கொள்வதன் ஊடாகத் தேடினர், சிலர் சாராயம் வடித்துவிற்றும், சிலர் கிராமங்களுக்கு பொருட்களை காவிக் கொண்டு சென்று வியாபாரம் செய்தும் பிழைத்தனர். சோம்பேறிகள் சமைக்கப்படாமல் உணவுப்பொருட்களை வாங்கி தமது உணவுக்கு போக மீதியை சேமித்து விற்றும் தம் பிறதேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர்.'' புத்திசாலியான நொக்ஸ் தானியத்தைக் கொடுத்து வருடவட்டியாக மேலதிகமாக அரைவாசியை அல்லது ஐம்பது வீதத்தைப் பெற்றான். இவ்வேலையில் சில கைதிகளை ஈடுபடுத்தினான். அவர்களில் ஒருவன் ரிச்சர்ட் வெங்காம். அவன் ஆன் கப்பலில் ஒரு மாலுமியாக இருந்தவன். அவன் அரச சேவையிற் சேர்ந்து தொள்ளாயிரத்து ஏழு பேர்களுக்கு கொமாண்டராகப் பதவியுயர்ந்தான். அவன் பொறுப்பில் பல பட்டணங்களும் பீரங்கிகளும் கொடுப்பட்டிருந்தன. மற்றவன் ஹென்ரிமேன்; பேர்ஸியா மேசன்ற் கப்பலைச் சேர்ந்த அவன் அதிர்ஷ்டம் இல்லாதவன். சில அரண்மனை ஊழியர்களின் சதியிலே சிக்கி இராசசிங்கனால் யானையைக் கொண்டு துண்டுதுண்டாகக் கிழித்தெறியப்பட்டவன்.

மிக விரைவிற் கிராமங்களிற் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆங்கிலேயர்கள் தாங்கள் அரசனின் கைதிகள் என்ற சிறப்புரிமைக்கு உரியவர்கள் என்பதை உணர்ந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனின் உத்தியோகத்தர்கள் யாரும் தங்களைக் கண்டிக்க முடியாதென்பதையும், தாங்கள் பிழை செய்தாலும் தங்களுக்கு பாதுகாப்பு உண்டென்பதையும் தெரிந்து கொண்டனர். இதனால் சிலர் கிராமங்களில் தன்னிச்சையாக நடந்துகொண்டனர். கிராம மக்களைக் கொள்ளையடித்தும் துன்புறுத்தியும் மகிழ்ந்தனர். ஒரு தடவை அவர்கள் பசுவொன்றைக் கொன்று வயிறுகொள்ளும் மட்டும் இறைச்சியைப் புசிக்க விரும்பினர். 'சிங்களவர்களின் உடைமையாக ஆங்கில கைதிகளின் உடல்கள் இருப்பதால் அவ்வுடல்களை திருப்திப்படுத்த அவர்களின் (சிங்களவர்களின்) உடைமைகளைப் பயன்படுத்துவதில் தவறில்லை; அது சட்ட பூர்வமானது' இந்த வகையில் பல மாடுகள் ஆங்கிலேயர்களின் வயிற்றுக்குள் புகுந்தன. சிலர் அரசனின் கட்டளைக்கெதிராக செயல்பட்டுத் தங்களது துணிவை வெளிக்காட்டினர். ஒரு தடவை ஆங்கிலேயர்களை வைத்திருந்த வீட்டு வளவில் அரசனின் உத்தியோகத்தவர்கள் பலாப்பழம் எடுக்க வந்தனர். ஆங்கிலேயர்கள் அவர்களைத் தடுத்து தம் தோளில் தூக்கிக் கொண்டு வெளியில் விட்டனர். இந்தச் செயலை ஒரு சிங்கள மகன் செய்திருந்தால் மரணதண்டனை நிச்சயம். ஆங்கிலேயர்கள் செய்ததால் பெரிதாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. 1664 இல் நடந்த கிளர்ச்சியின் போது கைதிகள் கண்டபாட்டில் 'அரசனுடன்' ஓடியவர்களின் வீடுகளைக் கொள்ளையடித்தனர்.

தனது ஆட்சிக்காலத்தில் இராசசிங்கன் இராச்சியம் பூராவிலும் உள்ள கிராமங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஐரோப்பியர்களை தடுத்து வைத்திருந்தான். அவர்கள் பல வழிகளில் எடுத்துவரப்பட்டவர்கள். 1656 இல் கொழும்பில் டச்சுக்காரர்கள் போர்த்துக்கீசரை முறியடித்த போது, தப்பிஓடிவந்து, இராசசிங்கனிடம் சரணடைந்தவர்கள் ஒரு வகையினர். டச்சுக்காரர்களால் அனுப்பப்பட்ட தூதுவர்களும் பரிவாரத்தினரும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இன்னொரு வகையினர். தான் வாழ்ந்த காலத்தில் ஐந்து தூதுவர்களும் பரிவாரமும் வந்ததாகவும் அவர்களனைவரும் தடுத்து வைக்கப்பட்டதாகவும் 1664 இல் டச்சுக்காரர்களால் அனுப்பப்பட்ட தூதுவர் ஹென்ரிக்ட்ரக் ஆங்கிலேயக் கைதிகளின் விடுதலை பற்றி அரசனுடன் கதைத்ததாகவும் நொக்ஸ் குறிப்பிடுகிறான் பிறிதொரு வகையினர் 1672 இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரெஞ்சு அட்மிரல் டிவா ஹெய்க்கால் அனுப்பப்பட்ட தூதுவரும் எட்டுப்பேர் அடங்கிய அவரின் குழுவினருமாவர். மற்ற வகையினர் டச்சுக்காரரோடு நடந்த போரில் பிடிபட்ட கைதிகளும் மற்றும் டச்சு நீதிமன்றங்களின் தண்டனைக்கு பயந்து ஓடிவந்தவர்களுமாவர். ஆன் கப்பல் போன்று கடலிலே தத்தளித்துக் கரை சேர்ந்த மாலுமிகளும் இவ்வகைக்குள் அடங்குகின்றனர். இந்த வகையில் மாலைதீவுக்கு அப்பால் கப்பல் உடைந்து தத்தளித்து வந்த ஆங்கிலேய மாலுமிகள் முதல் குழுவினராவர். இவர்கள் கண்டிராச்சியத்துக்கு உட்பட்ட கற்பிட்டியை அடைந்த போது. பிடிபட்டவர்கள் பின்னர் ஆங்கிலக் கப்பல்களான ஹேர்பேர்ட், ஹேசெஸ்டர் என்பவைகளின் மாலுமிகளும் இவ்வாறு பிடிப்பட்டவர்களில் அடங்குவர்.

இவ்வாறு பெரும் தொகை ஐரோப்பிய இனத்தவர்கள் கண்டிராச்சியத்தின் கிராமங்களிலே தடுத்து வைக்கப்பட்டிருந்தமை. மலைநாட்டுச் சிங்களவர்களை முதன்முதலாக ஐரோப்பியர்களுடன் தொடர்பு கொள்ளச் செய்தது. இது சமூகவியல் அடிப்படையில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. ஐரோப்பியர்கள் சிங்களப் பெண்களை மணந்து கொண்டனர். இதைப்பற்றி நொக்ஸ் குறிப்பிடுமிடத்து, விடுதலைக்கான நம்பிக்கையை இழந்து அவர்கள் மனைவிமாரையும் படுக்கைத் துணைகளையும் தேடிக்கொண்டனர். " இந்தத் திருமணங்களால், நொக்ஸ் குறிப்பிடுவது போல், கண்டி சிங்களவரிடையே ஐரோப்பிய இரத்தக்கலப்பு பெருமளவு ஏற்பட்டது. இந்த ஐரோப்பியச் செல்வாக்கு கண்டியில் இருந்த போதைப் பொருட்களுக்கான இறுக்கமான தடையைத் தளர்க்கவும் வழிகோலியது.

பௌத்த போதனை போதை தரும் மதுபானங்களைத் தடுக்கிறது. நொக்ஸ சொல்கிறான் " கண்டியர்கள் வெறியை கடுமையாக வெறுத்தனர். அவர்களின் பொதுவான பானம் பச்சை தண்ணீராகும்" தென்னை, கித்துள் மரங்களில் பாளைசீவும் கலை கண்டியர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் அதை அல்ககோல் பெறுவதற்கு அல்லாமல் மிக அவசியமான வெல்லத்தை (சீனிக்கு பதில்) பெற்றுக் கொள்வதற்கு உபயோகித்தனர். ஐரோப்பிய கைதிகள் தங்கள் பிழைப்புக்காக சாராயம் வடித்து விற்பனை செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மாத்திரமல்லாது, தாங்களும் மதுவருந்தி தாறுமாறாக நடந்து கொண்டனர். 1656 இல் கண்டியில் அடைக்கலம் கொடுக்கப்பட்டிருந்த போர்த்துக்கீசரைப் பற்றி நொக்ஸ் குறிப்பிடுமிடத்தில், அவர்களிற்சிறந்த தகைமை கொண்டவர்களை அரசன் தனது சேவையில் சேர்த்துக் கொண்டான். மீதிப் பேர்களுக்கு அரசன் மந்தை வளர்ப்பதற்கும் ஊர்ஊராக சென்று வியாபாரம் செய்வற்கும் சாராயம் வடிப்பதற்கும் தவறணை நடத்துவதற்கும் படிகள் வழங்கினான். மேலும் "இங்குள்ள டச்சுக்காரர்கள் மிடாகுடியராகவும் கெட்டகாரியங்களில் அதிகம் ஈடுபாடு கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். உண்மையில் இங்கிருந்த வெள்ளையர்கள் எல்லாம் இதே பாணியில் இருக்கின்றனர். இதனால் சிங்களவர்கள் கூறிக் கொள்வார்கள் " குழந்தைகளுக்குப் பால் எப்படி இயற்கையானதோ அதே போல் வைன் வெள்ளையர்களுக்கு இயற்கையானது" நொக்ஸ் கூறுகின்றான் " மாட்டிறைச்சி உண்ணுவது இங்கு வெறுக்கத்தக்கது. இங்கு அது உண்ணப்படுவது இல்லை. எனினும், மாட்டிறைச்சி உண்ணும் பழக்கம் கண்டியர்களிடம் தலைகாட்டத்தொடங்கியது. இதற்கெதிரான பலமான எதிர்ப்புணர்வும் வெளிப்பட்டது. கிறிஸ்தவர்களையும் வெள்ளையர்களையும் வையும் போது மாட்டிறைச்சி தின்னிகள் என்று சிங்களவர்கள் கூறுவார்கள். கண்டியர்களின் பழக்கவழக்கங்களில் மாற்றத்தை கொண்டுவந்தவர்கள் ஐரோப்பியர்களாவர்.

கொட்டியாரத்திலிருந்து கண்டிக்கு கொண்டுவரப்பட்ட கைதிகளில் நொக்சும் அவன் தகப்பனும் 1660 செப்டம்பரில் கண்டி நகரத்தின் வடக்கில் 30மைல் தொலைவில் உள்ள பொண்டர்கூஸ்வத்த (பண்டார கொஸ்வத்த) என்ற கிராமத்தில் வைக்கப்பட்டிருந்தனர். இக்கிராமம் ஹெட்கோர்லி பிரதேசத்தில் அமைந்துள்ளது. (வட மேற்கு மாகாணத்தில் வாரியப்பொலவுக்கு கிட்டவுள்ள இன்றைய கிராமமான பட்டாரகொஸ் வத்த) இக்கிராமம் அசாதாரணமான குளிர் காய்ச்சலும் மலேரியாக்காய்ச்சலும் பரவும் இடமாக இருந்ததையும், பலர் இறந்து படுவதையும், அவர்கள் கண்ணுற்றனர்.நொக்ஸ்களும் விரைவில் மலேரியாக் காய்ச்சலுக்காளாகினர். நீண்ட மூன்று மாதங்கள் நோயால் பீடிக்கப்பட்டிருந்த கப்டன் நொக்ஸ் பெப்ரவரி 1661 இல் உயிர் நீத்தார். தனித்துப்போன நொக்ஸ் நோயிலிருந்து மீண்டு, கிராமத்தவர்களின் உதவியுடன் வீடொன்றைக் கட்டிக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்றி.கோழி. வளர்த்தும் தொப்பி பின்னியும் வாழத்தொடங்கினான். அக்காலையில் அதிஷ்டவசமாக பைபிள் பிரதி ஒன்று அவனுக்கு கிட்டுகிறது. அதை அவன் 1679 இல் தப்பி ஓடும் வரை தொடர்ந்து வாசித்தான். தன்னை ஓரளவு வசதியாக நிலை நாட்டிக்கொண்டு ஹெட்ட கோர்லியில் (இன்றைய கேகாலை மாவட்டம்)இருந்த மற்ற ஆங்கிலேயக் கைதிகளையும் சந்தித்து வரலானான்.

1664 இல் சென். ஜோர்ஜ் கோட்டையின் ஆளுநர் ஆங்கிலக் கைதிகளின் விடுதலையைக் கோரி அரசனுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். இந்த நோக்கத்துக்காக ஹென்ரிக் ட்ரக் வருகை தந்திருந்தார். இந்த செயற்பாடுகளால் மகிழ்ச்சியடைந்த மன்னன், கைதிகளை கண்டி நகரத்துக்கு அழைத்திருந்தான். இக்காலத்தில்தான் அரசனுக் கெதிராக பெரும் கலவரமொன்று வெடித்தது. கலகம் அடக்கப்பட்டபின் ஐரோப்பிய கைதிகளை விடுவிக்கும் மனநிலை அரசனுக்கு இல்லாமல் போய்விட்டது. அவன் அவர்களை கிராமங்களுக்கு அனுப்பிவைத்தான். நொக்ஸ் ஹண்டபொன் பிரதேசத்தில் உள்ள அக்கிராரீகல் (கேகாலைக்கு தென்கிழக்கில் உள்ள இன்றைய டெயலடாஹமூவபற்றில் உள்ள கந்தபந்துன பிரிவைச் சேர்ந்த தற்போதைய எறிற்றியாகல கிராமம்) கிராமத்தில் 1664இல் இருந்து 1666வரை தங்கி இருந்தான். 1666 இல் டச்சுக்காரர்கள் அறன்டொற என்ற இடத்தில் (அக்கிராரிகல் கிராமத்தில் இருந்து சில மைல் தொலைவில்) ஒரு கோட்டையைக் கட்டத்தொடங்கியதால் மலை மேல் உள்ள லக்கெத்தனி (கண்டி மாவட்டத்தின் உட்பிரிவை சேர்ந்த கண்டுக்காபஹலா கோரளையில் உள்ள இன்றைய லெகுண்டெனியா கிராமம்) கிராமத்துக்கு மாற்றப்பட்டான். இக்கிராமம் கம்பொல நகரத்திலிருந்து 5மைல் தொலைவில் உள்ளது. இந்த இடம் நொக்ஸிற்கு மிகுந்த திகிலை ஊட்டியது. "இந்த நாட்டில் நான் கண்ட பெரும் திகிலை ஏற்படுத்தும் இடம் இதுவாகும். இவ்விடத்துக்கு குற்றம் செய்தவர்கள் அனுப்பட்டுக்கொண்டிருந்தனர்." அவன் அவர்களைத் திடீரென சிரச்சேதம் செய்யும் எண்ணம் கொண்டிருந்தான். நொக்ஸ் இங்கே பின்னல் வேலைகளைச் செய்தும், அதனால் வந்த இலாபத்தைச் சேமித்தும் மூன்று ஆண்டுகள் வாழ்ந்தான். எல்லா வகையிலும் இவ்விடம் அவனுக்கு பொருத்தமில்லாததாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அரசனின் மறு அறிவித்தலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். 1669 இல் நொக்ஸ் லெகுண்டெனியாவைவிட்டு தனது கடன்களை அறவிடுவதற்காக தற்காலிகமாக கந்தபந்துனவிற்கு இடம் மாறினான். அவனிடமிருந்த சேமிப்பால் ஒரு துண்டுக் காணியை அப்பிரதேச ஆளுநரின் அனுமதியைப் பெற்று எலடெற்றா(கண்டிக்கு வடக்கில் 10மைல் தொலைவில் உடுநுவர பிரதேசத்தில் உள்ள இன்றைய லெடெற்றா கிராமம்) என்ற இடத்தில் 5லாரிக்கு வாங்கினான்.

அங்கே ஒரு வீட்டைக் கட்டி அதில் தன்னைப் போல் பிரமச்சாரிகளாக இருந்த மூவரைக் குடியிருக்க வைத்துவிட்டு, லெகுண்டெனியாவுக்கு போய் வாழ்ந்தான்.எலடெற்றாவில் இருந்தால் தனக்குரிய உணவுப் பொருட்களை லெகுண்டெனியா மக்களிடமிருந்து பெறமுடியாது என்பதே அவ்விடத்துக்கு வரக்காரணமாகும். (ஆயினும் அதை பெற நொக்ஸ் கடும் முயற்சி எடுத்தும் அதனைப் பெறமுடியவில்லை) ஆயினும் இதனால் நொக்ஸ் பாதிப்புறவில்லை. எலடெற்றாவில் வாங்கிய காணியில் தோட்டம் துரவுகளை உருவாக்கி நல்ல வசதியுள்ளவனாக மாறியிருந்தான். பழமரங்களை நட்டும் கோழி, பன்றிகள் வளர்த்தும் 'விடுதலைக்கு எந்த சாத்தியமுமில்லாததால் வசதிவாய்ப்பைத் தேடிக் கொண்டிருந்தோம்' இயல்பில் வர்த்தகரான நொக்ஸால் விரைவில் சிக்கல்கள் இல்லாமல் சிங்களவர்களிடையே வியாபாரம் செய்து கூடியளவு பொருளீட்ட முடிந்தது. இந்தவகையில் வருடத்துக்கு அரைவாசிக்கு நெல்லைக் கொடுத்து வந்தான். விரைவில் 'கடவுள் அருளால் எனது சிறிய முதல் பெரிதாக வளர்ந்தது. நான் எனது எதிரிகளிடையே இறக்காமல் சிறப்பாக வாழ்ந்தேன்,

எலடெற்றாவில் கட்டிய வீட்டில் தன்னையொத்த பிரமச்சாரிகளாக இருந்த ரோஜர் கோல்ட், ரால்வ் வைட், ஸ்பென்சர்ருட்லாண்ட் என்பவர்களை வாழ வைத்திருந்தான். “ நாங்கள் எல்லாம் தனிக்கட்டைகள். நாங்கள் ஆளுக்காள் உதவியாக வாழ்வதென்று முடிவெடுத்திருந்தோம். தோட்டத்தை அவர்கள் கவனிப்பதற்கு பதிலாக அதன் உற்பத்திகளை அவர்கள் பயன்படுத்த அனுமதித்திருந்தான். 'இந்த இருப்பிடம் திருமணம் செய்யாதவர்களுக்கானது. எங்களிடையே சண்டை சச்சரவுகளைத் தவிர்ப்பதற்காக பெண்கள் நுழைவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைசெய்திருந்தோம். இந்த ஏற்பாடு எங்களிடையே அன்பையும் ஆதரவையும் வளர்த்தது. கைதியாக இருக்கையிலும் தான் கப்டனின் மகன் என்பதை மறக்காமல் மற்றகைதிகள் பாற் தகப்பனுக்குரிய கரிசனையைக் காட்டி வந்தான். கிறிஸ்மஸ், ஈஸ்டர், பண்டிகை நாட்களில் மனைவிமார், பிள்ளைகள் சகிதம் எல்லா ஆங்கிலேயர்களையும் அழைத்து ஆடுகள், பன்றிகள், கோழிகள், அறுத்து இரண்டு மூன்று நாட்களுக்கு விருந்து உபசாரம் செய்து வந்தான். “நான் அவர்களின் மனைவிமாரை அழைத்தது உணவுவகைகளைச் சமைப்பதற்காகும்”

பெண்கள் தொடர்பாக அவர்களின் நடைமுறை மிகக் கடுமையாக இருந்தது. ஆயினும் நொக்ஸ் குழுவில் பலர் சிங்கள பெண்களில் மயங்கித் திருமணம் செய்து கொண்டனர். இப்போது அவனது ஒரே கூட்டாளியாக மிஞ்சி இருந்தது ஸ்டீபன் ருட்லாண்டாகும். “அவனது எண்ணமும் திருமணத்துக்கு எதிரானதாக இருந்தது. நாங்கள் கடைசிவரை பிரியவில்லை” நொக்ஸ் ஒரு பெண் குழந்தையைத் தத்து எடுத்துக்கொண்டான். அக்குழந்தை அவனது நாட்டுமனிதனின் கலப்பு திருமணத்தால் பிறந்ததாகும். வீட்டைப் பாதுகாத்துக் கொள்வதோடு தனது வயோதிப காலத்தில் உதவியாக இருக்கும் என்று அன்புடன் அதை வளர்த்து வந்தான். லுசியா என அழைக்கப்பட்ட அக்குழந்தைக்கு தனது மொழியையும் சமயத்தையும் கற்பித்தான். அவளின் கள்ளங்கபடமற்ற தன்மையும் சமயோசிதமும் நொக்ஸிற்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அவன் ஓடிப்போனபோது லுசியாவிற்கு ஏழு வயதாகும். அவளைப் பிரிந்த நொக்ஸிற்கு அவளது பிரிவு மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்தியது. தனது வளமிக்க தோட்டத்தை அவளுக்கு விட்டுச்சென்றான். பிற்பாடு நொக்ஸ் கொச்சியிலிருந்து தனது சக கைதிகளுக்கு எழுதிய கடிதத்தில் அச்சிறுமிக்கு கொடுக்கும் படி தனது படம் ஒன்றை அனுப்பி வைத்தான். அதில் “ லுசியா நான் வளர்த்த குழந்தை. அக்குழந்தை மீது நான் மிகுந்த பாசம் கொண்டுள்ளேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்” என்று எழுதி இருந்தான். ஒரு எழுத்தாளர் குறிப்பிடுவது போல, நொக்ஸ் அக்குழந்தை மீது கொண்ட அளவற்ற பாசம் அவனின் கடுமையான இறுக்கமான இயல்புகளுக்கு எதிராக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

எலெடெற்றாவில் வளமான தோட்டத்தைக் கொண்டிருந்த போதும், தனது தாய் நாட்டை அவனால் மறக்க முடியவில்லை. தப்பி ஓட வேண்டும் என்ற எண்ணம் அவனது அடிமன அவாவாக இருந்ததால் 1673 இல் இருந்து சிறுவியாபாரியாக பொருட்களை விற்கும் சாட்டில் அதற்குச் சாதகமான நிலைமைகள் உள்ளதா என்பதைப் பார்த்துவர கிளம்பினான். இந்தப் பிரயாணங்கள் இரு நன்மைகளைக் கொண்டு வந்தன. ஒன்று நாட்டின் வித்தியாசமான பகுதிகளைக் காணவும், தப்பி ஓடுவதற்கான பாதையை தீர்மானிக்கவும் உதவின. இவற்றைவிட வெள்ளையர்களின் நடமாட்டத்தை இயல்பானதாக மக்களுக்கு பரிச்சயப்படுத்தவும் முடிந்தது. பல வருடத் தீவிர ஆலோசனைக்கு பின்னர் வடக்கு பக்கமாக ஓடுவதுதான் சாதகமானது என்ற முடிவுக்கு வந்தான். ஏனென்றால் வடக்கு பகுதியில் சனங்கள் மிக ஐதாக வாழ்ந்தனர். இதனால் வடக்கு பகுதியில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டான். அப்பகுதிக்கு எட்டுபத்து தடவைகள் சென்று வந்ததால் அவ்விடங்கள் நொக்ஸிற்கு மிகவும் பரிச்சயமாகின. 1679 இல் தனது இறுதி இலக்கை நோக்கிய பிரயாணத்தை நொக்ஸும் ருட்லாண்டும் ஆரம்பித்தனர். அவர்களின் திட்டம் அநுராதபுரத்துக்குப் போய் மல்வத்தை ஓயாவூடாக அரிப்பில் உள்ள ஒல்லாந்தர் கோட்டையை அடைவதாகும். இந்த இடத்தை 1679 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி அவர்கள் அடைந்த போது கண்டியில் 19வருடங்கள் 6மோதம் 17 நாட்களைக் கழித்திருந்தனர்.

அரிப்பில் நொக்ஸும் அவன் கூட்டாளியும் மிகவும் அன்புடன் ஒல்லாந்தரால் உபசரிக்கப்பட்டனர். மன்னாருக்கும் தலைமையகமான கொழும்புக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர். அங்கிருந்த ஆளுநர் நிக்லோஃப்வான்கோயன்(ஜூனியர்)அவர்களை வரவேற்று நன்கு உபசரித்தார். கொழும்பிலிருந்து பட்டேயாவுக்கு மாற்றம் பெற்று செல்லும் அவருடன் நொக்ஸும் ருட்லாண்டும் சென்றனர். ஆளுநர் வான்கோயன்(ஜூனியர்) தந்தையாரான ஆளுநர் ஜெனரல் வான்கோயன் (சீனியர்) அவர்களை மிகுந்த பரிவுடன் வரவேற்று உபசரித்தார். அவர் கண்டி நிலைமை பற்றி அவர்களுடன் நெருக்கமாக உரையாடினார். அவரிடம் நொக்ஸ் சொன்னான்; இராசசிங்கன் ஒரு கொடுங்கோலன். அவன் தன்னைப்பற்றி மட்டுமே சிந்திப்பவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பெனி கடைப்பிடிக்கும் கொள்கை சரியானது. அவனின் இறப்புக்கு பிறகு ராச்சியம் உங்கள் கைக்கு வரும். பட்டேவியாலிருந்து நொக்ஸ் பாண்டத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து சீசர் என்ற கப்பலில் இங்கிலாந்தை இருபத்து மூன்று வருடங்களுக்கு பின்னர் வந்து அடைந்தான்.

நொக்ஸிற்கு பின்னர் காலத்துக்காலம் சிலர் தப்பி ஓடினர். பதிவுகளின் படி கடைசியாக தப்பியோடியவன் வில்லியம் ஹப்பார்ட். அவன் 1703ல் தப்பிஓடத்தொடங்கி 1706ல் இங்கிலாந்தை 49ஆண்டுகளின் பின்னர் சென்றடைந்தார்.

இராசசிங்கனோடு ஆங்கிலேயர்கள் இணக்கமாகப் பேசுவதை டச்சுக்காரர்கள் விரும்பவில்லை. ஆங்கிலேயர்கள் கண்டி வர்த்தகத்தின் மீது ஒரு கண் வைத்துள்ளனர் என்று சந்தேகப்பட்டனர். அவர்கள் சந்தேகப்பட்டபடி, ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் ஈடுபாடு, இலங்கையில் உள்ள கைதிகளை விடுதலை செய்வதற்கும் அப்பால் ஒல்லாந்தர் பிடியில் இல்லாத துறைமுகங்களூடாக கறுவா வியாபாரத்தை கைப்பற்றிக் கொள்வதாகவுமிருந்தது. கைதிகளைப் பற்றி குறிப்பிட்ட கடிதத்துக்கு பின்னர் எழுதிய கடிதம் ஒன்றில் ஆங்கிலக் கம்பெனியின் கட்டுப்பாட்டில் உள்ள சென்.ஹெலென்னா பிரதேசத்தில் கறுவாவை பயிரிடுவதைப் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது நோக்கத்தக்கது.

இலங்கையுடன் ஒரு வரலாற்று தொடர்பு

நொக்ஸ் தனது சுயசரிதைக் குறிப்பில் கூறுகிறான். "பாண்டத்திலிருந்து இங்கிலாந்திற்கு போகும் வழியில் 1679 இல் நான் இந்தப் புத்தகத்தை எழுதத் தொடங்கினேன். இதை எழுதியது எனது தனிப்பட்ட உபயோகத்திற்காகவே தவிர, வெளியிடுவதற்காகவல்ல. இருந்த போதிலும் இலண்டனை அடைந்தவுடன் நான் எழுதிய காகிதங்களைக் குப்பைத்தொட்டிக்குள் போடத் தீர்மானித்த போது அதனை பார்வையிடத்தருமாறு கேட்டனர். அவர்களிடம் அவைகளை கொடுத்தேன். அவைகளைப் பார்வையிட்ட இயக்குனர் சேர்.ஜோசையா சைல்ட் அவை வெளியிடத்தக்கன என்று கூறினார். இந்தக் காகிதங்கள் புதிய விசித்திரமான கதைகளை கொண்டுள்ளன என்று கிழக்கிந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பெனியின் அவைக்குழுவால் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. அவ் அவை குழுவிற்கே நொக்ஸ் தனது புத்தகத்தைச் சமர்ப்பித்திருக்கின்றார். இந்தப் புத்தகம் கப்பற் பிரயாணத்தில் நொக்ஸ் எழுதியது போலவே வெளியிடப்பட்டது. ஆயினும் நொக்ஸின் குறிப்பின்படி "எனது காகிதங்கள் ஒழுங்கற்று கண்டபடி கலந்தும் குழம்பியும் கிடந்தன. அவைகளுக்கு ஒரு தலைப்பிட்டுக் குறைவான பகுதிகளை விரிவுபடுத்தி எழுதுமாறு கூறி அதிகாரங்களாக வகைப்படுத்தி நீங்கள் காணும் வடிவத்திற்கு கொண்டுவந்தது ஸ்ரைப்தான். "றோயல் சொசைட்டி" என்று அழைக்கப்படும் இயற்கை அறிவை விருத்தி செய்வதற்கான றோயல் சொசைட்டி என்ற முழுப்பெயர் கொண்ட அமைப்பு 1660 இல் தோற்றுவிக்கப்பட்டது. இதன் நோக்கம் காரணமாக இச்சங்கம் கிழக்கிந்திய நாடுகளுக்குப் போய்வருவதை தனியுரிமையாக கம்பெனியோடு நெருங்கிய உறவைப் பேணிவந்தது. இந்தச் சங்கம் வெளிநாடுகள் பற்றிய விபரங்களை ஆராய்ந்து கொண்டிருந்த நேரத்தில்தான் நொக்ஸ் நாடு திரும்பியிருந்தான். சங்கத்தின் ஆற்றல் மிக்க செயலாளரான டாக்டர் றொபேர்ட் ஹுக், நொக்ஸுடன் கலந்துரையாடிய பின்னர் அவனின் புத்தகத்தை வெளியிடலாம் என்று பரிந்துரைத்தார்.

நொக்ஸிற்கு தனது புத்தகம் வெளியிடத்தகுந்ததா என்பதில் பெரும் சந்தேகம் இருந்தது. 'தனது திறமையிலும் தகைமையிலும் குறைந்த மதிப்பீடே நொக்ஸிற்கு இருந்தது. இந்த புத்தகத்தின் கையெழுத்துப்படி பிரசுரத்துக்குத் தயாராகி மார்ச் 17, 1681 இல் கிழக்கிந்திய கம்பெனியின் அவைக்குழுவுக்கு அனுப்பப்பட்டது. றோயல் சொசைட்டியின் வேலையை கவனிக்கும் ரிச்சேர்ட் சிஸ்வெலுக்கு இந்தப் புத்தகத்தின் பிரதிகளை விற்பதற்கு நொக்ஸ் அனுமதியளித்தான். இயக்குனர் அவைக்கு சமர்ப்பிப்போடும் றோயல் சங்கத்தின் செயலாளர் டாக்டர் ரொபர்ட் ஹுக்கின் முன்னுரையோடும் றோயல் சங்கத்தின் தலைவர் கிறிஸ்தோபர் ரென்னின் 'உண்மையுடனும் நேர்மையுடனும் எழுதப்பட்டிருக்கிறது' என்ற குறிப்புரையுடனும் ஒகஸ்டு 1, 1681இல் இந்நூல் வெளியிடப்பட்டது.

இந்தப் புத்தகம் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் மூன்று பாகங்களும் நாடு, மற்றும் சமூக அமைப்புகள் ஆகியவற்றையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலாவது பாகம் நொக்ஸின் தனிப்பட்ட வாழ்க்கையிலிருந்து அவன் கைதியாக்கப்பட்டு தப்பியோடியது வரையும் விபரிக்கிறது. அதாவது மூன்று பாகங்களிலும் நொக்ஸ் நாட்டின் புவியியல், விவசாயம், இயற்கை வரலாறு, சமூகம், சமயம், சமூகவரலாறு, பொருளாதாரம், சட்டம் ஆகிய பல்வேறு விடயங்களைப் பேசுகிறான். இவைகள் 17 ஆம் நூற்றாண்டுச் சிங்கள ராச்சியத்தில் காணப்பட்ட வாழ்க்கை அம்சங்களின் விரிவான விபரங்களாகும். இதைப் பற்றி ஹூக் கூறினார். ''கப்டன் நொக்ஸ் அங்கிருந்து முதுகில் பொருளையும் பையில் பணத்தையும் கொண்டு வரவில்லை. பதிலாக தனது மூளையில் கண்டிராச்சியத்தை பதிந்து கொண்டு வந்துள்ளார். அதனை வாசகராகிய உங்களுக்கு தருகிறார்.'' நொக்ஸின் புத்தகம் பற்றிய ஹூக்கின் கணிப்பு இன்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கது.

இந்தப் புத்தகத்தின் சிறப்பு, அது கொண்டிருக்கும் விரிந்த பரப்பில் இல்லை. மாறாக அது தரும் உண்மையான விபரங்களில் இருக்கிறது. நொக்ஸ் தன்னுடைய கணிப்பில் 'எனது சுய அறிவுக்கு உண்மையாகப்பட்டதை அல்லது பொதுவான தகவல்கள் என்று சுதேசிகள் கருதுவதைத் தவிர நான் வேறு ஒன்றையும் எழுதவில்லை.' இது உண்மையில் விஞ்ஞான பூர்வமான ஆவணமாகும். பதினேழாம் நூற்றாண்டின் மூன்று வித்தியாசமான சூழ்நிலைகள் இணைந்து 'இலங்கையுடனான வரலாற்றுத் தொடர்பை உருவாக்குகின்றன. முதலாவது, நொக்ஸின் சமயம்; அவன் உருவான சமூகம் இந்தப் புத்தகத்தில் அவை இரண்டும் ஒரு சிறிய செல்வாக்கைச் செலுத்துகின்றன. இரண்டாவது, நொக்ஸ் இருபது வருடங்கள் கண்டிராச்சியத்தில் வாழ்ந்ததால் நேரடியாக அந்த நாட்டை பற்றி அறிய முடிந்தமை. மூன்றாவது, நொக்ஸை இந்தப் புத்தகம் எழுதத்தூண்டிய காரணங்கள் என்பவையே அவையாகும்.

நொக்ஸ் ஒரு தூய்மைவாதி, மாறுபட்ட கருத்துக்கள் அவனிடம் இல்லை. அவனுடைய சமகால இங்கிலாந்து சமயவாதங்களால் சஞ்சலமடையாத மனத்தை கொண்டிருக்க நொக்ஸிற்கு இங்கே தடுத்து வைக்கப்பட்டிருந்தமையால் சந்தர்ப்பம் கிடைத்தது. அவனுடைய சமய நம்பிக்கைகள் எளிமையானவை. அதாவது புனித நூலைப்பற்றிய எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயமும் அவனிடமில்லை. தனிமனித உரிமைகளைச் சமயநூல்களின் வழியில் அவன் விளங்கிக் கொண்டிருந்தான். ஆயினும் மற்ற சமயத்தவர்கள் மீது வியக்கத்தக்க முறையில் சகிப்புத்தன்மை கொண்டவனாக அவன் இருந்தான். உதாரணமாக, மற்ற சமயத்தவர்கள் மீது கத்தோலிக்கர் காட்டும் வெறுப்புணர்வு அவனிடமிருக்கவில்லை. கண்டி வாழ்க்கையினூடாக அங்குள்ள சமய நம்பிக்கைகளை அவனால் பார்க்க முடிந்தது. புரோகிதத்தையும் புரோகிதர்களையும் எள்ளி நகையாடாமல் இயல்பாக விபரிக்க முடிந்தது. கண்டியர்களிடம் பைபிள் இல்லாததால் அவர்களால் உண்மையான கடவுளை அடையமுடியாது. ஆயினும் தான் பைபிளைக் கொண்டிருப்பதால் தான் அவர்களை விட உயர்ந்தவன் என்ற பெருமிதம் அவனிடம் இருந்தது. இந்தப் புத்தகத்தில் நொக்ஸ் தனது சமயத்திலிருந்து அடிக்கடி மேற்கோள் காட்டினாலும் அக்கண்கொண்டு நிலைமைகளை விபரிக்கவில்லை. அவன் கூறியவைகள் எல்லாருக்கும் பொதுவாக இருந்தன.

நொக்ஸ் பிறந்து வளர்ந்த சமூகம் கைத்தொழில் புரட்சிக்கு முன்னைய இங்கிலாந்தாகும். அச்சமூகம் பலவழிகளில் பதினேழாம் நூற்றாண்டு சிங்கள சமூகத்தை ஒத்தது. லுட்விக் சொல்வதைப்போல் நொக்ஸ் சிங்கள சமூகம் போல் பாரம்பரிய கலாசாரமொன்றின் உற்பத்தி. அவனால் கண்டிராச்சியத்தில் இணக்கமாக இருபது வருடங்கள் வாழமுடிந்தது. அவன் அவதானித்தவைகளை அவனால் விளங்கிக்கொள்ளமுடிந்தது. சராசரி கீழ்மட்ட வகுப்பினரின் வாழ்க்கையில் அவனுக்கு பரிச்சயமானவைகளை மாத்திரம் அவன் விபரித்தான். அதனால் அவை பதிவுக்குரியதாகவும் உண்மையானதாகவுமிருந்தன.

இங்கிலாந்திலும் இலங்கையிலும் பெரிய வித்தியாசங்கள் இருக்கவில்லை. அதனால் வரலாற்று தொடர்பில் கிழக்குநாடுகள் மீதான தரக்குறைவான பார்வை அவனிடம் இருக்கவில்லை. கைத் தொழிற் புரட்சியைத் தொடர்ந்து மேற்கு நாடுகளில் வாழ்வாதார மேம்பாடு ஏற்பட்டதை அக்காலகட்ட எழுத்துக்கள் காட்டுகின்றன. அதாவது பிரித்தானிய ஏகாதிபத்தியமும் அதனோடு இணைந்த உயர்மனோபாவக் கோட்பாடுகளும் நொக்ஸின் காலத்தில் தோற்றமுறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் புத்தகத்தின் ஏற்புடைமைக்கு இரண்டாவது பெரிய காரணம், கண்டிராச்சியத்தைப் புரிந்து கொள்ள உதவுவதாகும். இது விரைந்து செல்லும் பார்வையாளரின் மேம்போக்கான குறிப்பு அல்ல. இருபது ஆண்டு காலம் வாழ்ந்த ஒருவரின் அநுபவக் குறிப்பாகும். இந்த இருபது ஆண்டுகளையும் தனியாக ஓர் இடத்தில் அவன் கழிக்கவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. முன்னர் குறிப்பிட்டமாதிரி நொக்ஸ் ராச்சியத்தின் பல்வேறு இடங்களில் வாழ்ந்தான். முதலில் மேற்குக் கரை ஓரத்தில் உள்ள பண்டார கொஸ்வத்த என்ற இடத்திலும், பின்னர் கண்டி நகரத்துக்கு பக்கத்தில் உள்ள பிரதேசகிராமங்களான நிகம்போஎற்றியாகல, லெகுண்டெனியா, எலடெற்றா போன்ற இடங்களிலும் வாழ்ந்தான். குறித்த கிராமங்களில் வாழ்ந்தாலும் சுதந்திரமாக எங்கும் சென்றுவர உரிமை பெற்றிருந்தான். பிற்கால ஆண்டுகளில் பல கைதிகள் குடும்ப வாழ்க்கையில் இறங்கியதால் அவர்கள் தப்பி ஓடுவார்கள் என்ற சந்தேகம் மறைந்தது. உண்மையில் நொக்ஸ் பூரணமாக கண்டிக் கிராமியவாசியாக மாறி இருந்தான். அவன் தப்பிஓடும் போது சிங்களவரைப் போல் இடுப்புவரையும் வளர்ந்த கூந்தல்,குட்டைத்தாடி போன்றவற்றைக் கொண்ட சிங்களவரின் தோற்றத்துடன் இருந்தான். சிங்களவரைப் போல் சாப்பாட்டை விட வெற்றிலை பாக்குக்கு அடிமையாகி இருந்தான்.

1673-1679 வரை ஆறு வருடங்கள் நொக்ஸ் பொருட்களை ஊராக ஊராக காவிச் சென்று விற்கும் வியாபாரியாக நாடு பூராவும் சுற்றித் திரிந்தான். அவன் தனது புத்தகத்தில் சொல்வது போல் நாட்டின் ஒவ்வொரு படியையும் அறிந்து வைத்திருந்தான். நாட்டின் பௌதீக இயல்புகள், நிர்வாகப் பிரிவுகள் போன்ற ஒவ்வொரு அம்சத்திலும் அவனுக்கு நல்ல பரிச்சயம் ஏற்பட்டிருந்தது. தப்பி ஓடுவதற்குரிய துல்லியமான தேசப்படம் ஒன்றையும் வரைந்து வைத்திருந்தான். இந்த தேசப்படம் கண்டி இராச்சியத்தைப் பற்றிய சரியான படமாக ஒல்லாந்தர் ஆட்சிமுடியும் வரை கருதப்பட்டது. இவற்றைவிட நொக்ஸ் சிங்களமொழியை சரளமாகக் பேசவும் பழகி இருந்தான்.

மூன்றாவது, சூழ்நிலைகள் நொக்ஸ் புத்தகம் எழுத காரணமாக அமைந்தவை. தனது சுயசரிதைக்குறிப்பில் தான் புத்தகம் எழுத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்தமை பற்றி நொக்ஸ் குறிப்பிடுகிறான். அன்னோ என்ற கப்பலில் 1679 இல் பாண்டத்திலிருந்து இங்கிலாந்திற்கு போகும்போது இந்தப் புத்தகத்தை எழுதத்தொடங்கினேன் மூன்று காரணங்கள் அதற்கு இருந்தன. முதலாவது, எனது எதிரிகளின் நாட்டில் கடவுளின் அருள் தாராளமாகக் கிடைத்ததையும் அங்கிருந்து தப்பி ஓடிவரும் போது அவர் என்னை நெறிப்படுத்தியதையும் பதிவுசெய்தல். இரண்டாவது, வழியில் நான் இறந்தால் எனது உறவினர்களுக்கும் எனக்கும் எனது தகப்பனாருக்கும் என்ன நடந்தது என்பதைத் தெரியப்படுத்தல். மூன்றாவது, நான் கைதியாக இருந்த காலத்தில் எனக்கு கடதாசியோ பேனாவோ கிடைக்கவில்லை. இப்போது புது உலகத்துக்கு வந்துள்ளதால் எழுதத் தெரிவது அவசியமாக உள்ளது. இந்த புத்தகத்தின் ஏற்புடைமைபற்றிச் சிந்திக்கும்போது இக்காரணங்கள் முக்கியமானது நொக்ஸ் புத்தகம் எழுதியது தனது சொந்த திருப்திக்காகும். இதனை வெளியிடவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கில்லை. பொய்யையும் புனைவுகளையும் விபரிக்கும் தேவை அவனுக்கில்லை. எதையும் இலங்கை பற்றிய விபரங்களை மறைக்க அல்லது ஆதரித்து பேச அல்லது நியாயப்படுத்த வேண்டிய தேவை அவனுக்கில்லை. எதையும் எழுதி வைக்க வேண்டும் என்பதை விட உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்பதே அவனின் விருப்பமாகும். "அவனோடு உரையாடத் தொடங்கிய சிறிது நேரத்தில், அவன் எந்த வகையிலும் தப்பெண்ணம் கொள்ளும் அல்லது வெறுப்பால் அல்லது பயத்தால் அல்லது நம்பிக்கையால் அல்லது தற்பெருமையால் பாதிக்கப்படக்கூடிய மனிதரல்லவென்பதை புரிந்து கொண்டேன்" என்று ரொபர்ட் ஹூக் எழுதி இருக்கிறார். நொக்ஸின் வரலாற்றுக் குறிப்பு இலங்கை பற்றி எழுதப்பட்ட ஒரு சார்பற்ற நூலாகும்.

நொக்ஸின் இந்த நாடு பற்றிய அறிவு மிக ஆழமானது. "சிங்களவர்களின் வயல்கள் சிறிதாக இருப்பதால் கலப்பை சிறிதாக இருக்கிறது. பெரிதாக இருந்தால் சேற்றில் புதைந்து போகும்" "மக்கள் உழைப்பாளிகளாகவும், சுறுசுறுப்பானவர்களாகவும் இருந்தால் இந்த நாட்டின் உற்பத்தி கூடுதலாக இருக்கும். ஆனால் அவர்கள் அப்படியில்லை. பொதுவாக அவர்கள் அடிப்படையில் சோம்பேறிகள். அவர்கள் வேலை செய்வதை வெறுக்கிறார்கள்." இதற்கு பரிகாரமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொக்ஸ் சொல்கின்றான். "நான் இதற்கு ஒரு பரிந்துரை செய்வேன் அவர்களின் சொத்துக்களுக்கு உரிய வரியைக் கூட்ட வேண்டும்." தன்னை தடுத்து வைத்திருப்பவர்கள் மீது ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் நொக்ஸ் கோபப்படுகிறார். தனது தகப்பனாரின் இறப்பை விபரித்துவிட்டு சொல்லுகிறார் " என்னுடன் அந்தக் கறுவல் பையனைத்தவிர வேறு யாருமில்லை. அந்த பட்டணத்து மக்களிடம் போய் எனது தகப்பனாரை புதைகுழிவரை கொண்டு செல்ல உதவுவதற்குக் கேட்குமாறு கூறினேன். ஏனென்றால் அம்மக்களின் மொழி எனக்கு தெரியாது. அவர்கள் தங்கள் மாடுகளைக் கட்டும் பெரிய கயிறுடன் வந்தனர். அதனை அவர் கழுத்தில் கட்டி புதைகுழிவரை இழுத்துச் சென்றனர். செல்லும் போது நீங்கள் கூலி தரவில்லை என்றால் நாங்கள் மற்ற உதவிகளைச் செய்யமாட்டோம் என்றனர். அந்த அஞ்ஞானிகளின் தடித்த வார்த்தைகள் எனது துயரத்தை அதிகரித்தன.

சிங்கள இராச்சியத்தில் இருந்த இரண்டு பண்புகளை நொக்ஸ் வெறுக்கின்றான். அவைகள் சர்வாதிகார ஆட்சியமைப்பும் பிரபுத்துவ சொத்துடமையுமாகும். பதினேழாம் நூற்றாண்டில் இருந்து ஆட்சியதிகாரத்துக்கான சட்டங்கள் வெளிப்படத் தொடங்கியிருந்தன. இதனால் மன்னனின் ஏகபோக ஆட்சியின் பிடி இங்கிலாந்தில் தளர்ந்திருந்தது. இந்த பின்னணியில் இருந்து வந்த நொக்ஸிற்கு சிங்கள சமூகம் பின்னடைந்திருக்கிறது என்றுபட்டதில், வியப்பில்லை. அவனுக்கு இரண்டாம் இராசசிங்கனது அரசு ஒரு காட்டுமிராண்டி கொடுங்கோன்மையாகும். இங்கே யாருக்கும் சட்டப்படி பாதுகாப்பு இல்லை. அரசன் விரும்பியதுதான் சட்டம்; 1688 இல் நடந்த பெருமை மிகு புரட்சியின் விளைவாக நொக்ஸின் ஆங்கில வாசகர்களுக்கு இந்த அம்சம் முக்கியம் மிகுந்த ஒன்றாக இருந்தது. சர்வாதிகார ஆட்சியின் அவலத்துக்கு எடுத்துக்காட்டாக ஜோன் வெல்லக் தனது குடிமை அரசின் இரண்டு உடன்படிக்கைகள் என்ற நூலில் நொக்ஸ் விபரித்திருந்த கண்டிராச்சியத்தை சுட்டிக்காட்டுகிறார். பிரபுத்துவம் உடைந்து கொண்டிருந்த நாட்டில் இருந்து வந்த ஒரு வர்த்தகனுக்கு, வர்த்தக வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் ஒன்றாகத்தான் பிரபுத்துவத்தை பார்க்க முடிந்தது. அவனால் வேறு வகையில் அதை விளங்கிக் கொள்ள முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் புத்தகத்தின் தப்பான விளக்கங்களுக்குப் பிரதான காரணம் சிங்கள வழமைகளை ஐரோப்பிய வழமையூடாக விளங்கிக் கொள்ள முனைந்தமையேயாகும். கிறிஸ்தவத்தைப் போல தனிப்பட்ட கடவுள் பௌத்தத்தில் உண்டு என்றும் அவன் நினைத்தான். அவரை என்றும் கிறிஸ்தவ நம்பிக்கைக்கிசைய மாற்றிக் கொள்ளலாம். நொக்ஸின் இந்த தப்பான புரிதல் பற்றி சமாதானம் கொள்ளலாம். ஏனென்றால், பதினெட்டாம் நூற்றாண்டில் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஆட்சிக்காலத்தில் பௌத்தம் பிராமணிய முறையில் மாற்றமடைந்தது. புத்தர் கடவுளாக மறு அவதாரமெடுத்தார். நொக்ஸ் சிங்கள நிலவுடமையைப் பற்றிக் கூறுமிடத்து " இந்நாடு அரசனுக்குரியது. நிலங்களைக் காசுக்கு விற்க முடியாது. சேவைக்குப் பெற்றுச் செய்யலாம்" இந்த விபரம் சரியானதல்ல. அரசன் எல்லா நிலங்களையும் சொந்தமாகக் கொண்டிருக்கவில்லை.

இரண்டாம் பாகத்தில் மூன்றாவது அத்தியாயத்தில் நொக்ஸ் நிகழ்வுகள் சம்பந்தமாக பிழையான தகவல்களைத் தருகிறான். இரண்டாம் இராசசிங்கனுக்கெதிரான பெரும் கிளர்ச்சிக்குப் பிறகு தனது ஒரே மகனுக்கு நஞ்சூட்டினான் என்று நொக்ஸ் குறிப்பிடுகிறான். இது சரியான கூற்று அல்ல. இரண்டாம் இராசசிங்கன் 1687 இல் இறந்தான். பின்னர் அவனின் மகன் இரண்டாம் விமலதர்ம சூரியன் என்ற பட்டப்பெயருடன் ஆட்சிப்பீடமேறினான். நொக்ஸ் 1696 இல் எழுதிய சுயசரிதைக்குறிப்பில் பட்டேவியாவில் இருந்த போது தனது பிழையை அறிந்துகொண்டதாகக் குறிப்பிட்டுள்ளான். இந்தப் பிழைக்குக் கராணம் நொக்ஸ் அல்ல. தன்னை பதவியிலிருந்து இறக்கிவிட்டு இளவரசனை அரசனாக்க கிளர்ச்சிக்காரர்கள் முனைகிறார்கள் என்பதைக் கேள்வியுற்ற இராசிங்கன்தான் தனது மகனை நஞ்சூட்டிக் கொன்று விட்டதாகக் கதை பரப்பினான். இனியும் இவ்வாறான முயற்சிகள் நடப்பதைத் தடுப்பது அதன் நோக்கமாகும். அந்த பிழையைப்பற்றி நொக்ஸ் குறிப்பிடும்போது " பிழையான தகவல் ஒன்றை சொன்னதாக வாசகர்களிடம் மன்னிப்புக்கேட்டக வேண்திடியல்லை என்று நினைக்கின்றேன். அந்த மூடப்பட்ட இடத்தில் என்னைப்போல அவர்களும் இருந்திருந்தால் இந்தப் பிழையை அவர்களும் விட்டிருப்பார்கள். " நான்கு தெய்வங்களைக் கௌரவப்படுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரஹறராவை விபரிக்கும் நொக்ஸ் தந்ததாதுவைப் பற்றி விபரிக்காதது இன்னுமொரு பிழையாகும். இராசசிங்கன் தந்தை சேனரதன் ஆட்சிக்காலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தந்ததாது, மீண்டும் இரண்டாம் விமல தர்ம சூரியன் ஆட்சிக்காலத்தில் வெளிப்படுத்தப்பட்டது. 50 வருடங்களின் பின்னர் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஆட்சிக்காலத்தில் தந்த தாதுவுக்கு பெரஹறராவில் ஓர் இடம் கொடுக்கப்பட்டது.

நொக்ஸின் விபரங்களைப் பல வழிகளில் ஊர்ஜிதப்படுத்தலாம். முதலாவது பாகத்தில் இயற்கை வரலாறு மற்றும் பௌதீக நிலைமைகள் பற்றி நொக்ஸ் விபரிப்பவைகளை இன்றும் அவதானிக்கலாம். கண்டிச் சமூகம் பற்றி அவர் விபரிப்பவைகள் சரியானவை; இயல்பானவை இன்றும் ஏற்றுக்கொள்ளக்கூடியவை. சில வழக்கங்கள் வழக்கொழிந்துள்ளன. இரண்டாவது, ஒல்லாந்த பதிவுக்காப்பகங்கள், கிழக்கிந்திய கம்பெனி ஆவணங்கள் மூலம் இப்புத்தகத்தின் தகவல்களை உறுதிப்படுத்தலாம். மூன்றாவது, சிங்கள மற்றும் ஐரோப்பிய மொழிகளிற் கண்டிராச்சியம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கும், எண்ணற்ற தகவல்கள் எல்லாம் நொக்ஸின் விபரிப்போடு இசைந்து செல்கின்றன. (இவ்வறிமுகவுரை தேவையை நோக்கிச் சுருக்கி மொழிபெயர்க்கப்பட்டது.)

எஸ்.டி. சப்ரமாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவுரை

உலகின் பல பாகங்கள் பற்றிய எமது அறிவு, அண்மைக்காலக் கண்டுபிடிப்புகளால் எவ்வளவுக்குப் பெருகியுள்ளது என்பதை அக்கண்டுபிடிப்புகளைப் பண்டைய நாளில் எழுதப்பட்டவற்றுடன் ஒப்பிடுவதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். பண்டைக் காலத்தில் பல நூல்கள் எழுதப்பட்டிருக்கலாம். அவற்றுள் காலத்தின் தாக்கத்திலிருந்து தப்பி எமது கைகளுக்கு கிடைத்திருப்பவை மிகச் சிலவே. அப்படி சில இருப்பது சிலருக்கு மாத்திரந்தான் தெரியும். அவர்களில் ஒரு சிலர்தான் அவைகளை வாசித்தறிந்துள்ளனர். அவர்களினது ஒரு சிலர்தான் குறித்த நோக்கத்துக்காக அவற்றைப் பயன்படுத்துகின்றனர். அவைகள் உலகின் ஒரு சில நூலகங்களின் அல்லது படிப்பறைகளின் அலுமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அவைகளை நாடுபவர்கள் குறைவாக இருப்பதால் அவைகள் காலத்தின் தாக்கத்தால் சிதிலமடைந்து வருகின்றன. பிளினி போன்ற புராதன ஆசிரியர்களின் நூற் பட்டியலைப் பார்க்கையில் நாங்கள் பழைய நூல்களில் எவ்வளவை இழந்திருக்கிறோம் என்பது தெரிகிறது. இற்றைக்கு 240 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட அச்சுக்கலையும் அவைகளில் ஒரு சிலவற்றைத் தான் காப்பாற்றி இருக்கிறது. இந்த இழப்புகள் புதிய புதிய வரவால் ஈடுகட்டப்பட்டு வருகின்றன. புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய இவ்வெளியீடுகள் அறிவார்வமுள்ளவர்களுக்குத் திருப்தியை அளிப்பதோடு பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்துவனவாகவுமுள்ளன. நாங்கள் இழந்தவைகளைப்போல இப்புதிய கண்டுபிடிப்புகளைப் பற்றிய நூல்களையும் இழந்தால் அது மனித சமூகத்துக்குப் பாரிய பின்னடைவாக இருக்கும். இதனால் இழப்புகள் நிகழும் காரணத்தையும் அதைத் தடுப்பதற்கான வழிவகைகளையும் அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். எனது மனதில் படும் பிரதான காரணங்கள் வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது, கடலோடிகளுக்கும் பயணிகளுக்கும் பயணத்தை எவ்வாறு அவதானித்துப் பதிந்து கொள்ள வேண்டும் என்பதற்குப் பொருத்தமான அறிவுறுத்தல்கள்.

இரண்டாவது, இவ்வாறான செயற்பாடுகளுக்குப் பொது மக்களின் ஆதரவு கிடைக்கப்பெறல் வேண்டும்.

மூன்றாவது, சம்பந்தப்பட்டவர்கள் தம்மைப்போல ஈடுபாடு கொண்டவர்கள் மத்தியில் இந்த தகவல்களைப் பரப்ப வேண்டும். அதைப்பற்றி சிறப்பறிவு கொண்டவர்களோடு பரிசீலித்து, பொருத்தமானவற்றை ஏற்று, பொருத்தமற்றவைகளை நீக்கி, தொகுத்து வரலாறாக்க வேண்டும். இச்செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படுதலும் அவசியமானது.

நாலாவது, இப்பயணக்குறிப்புகள் முதலில் தனித்தனியாகவும் பின்னர் ஒன்று சேர்த்து தொகுதியாகவும் அச்சிடப்படல் வேண்டும். சில வெளியீடுகளும் அச்சிடப்படாதவைகளும் காணாமல் போயுள்ளமை கருத்திற் கொள்ளத்தக்கது. இவைகள் பலவற்றைப் பாதுகாப்பதில் பங்காற்றிய திரு. ஹக்லுட்டுக்கும் திரு பேர் சாஸ்ஸுக்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

ஐந்தாவது, கடற் பிரயாணங்களையும் புதிய நாடுகளையும் பற்றி மற்ற மொழிகளில் வெளியாகி இருப்பவைகளை ஆங்கிலத்துக்கும் ஐரோப்பாவின் கற்றோர் மொழியான இலத்தீனுக்கும் மொழி பெயர்க்க வேண்டும். அநேக நாடுகளைப்பற்றி இங்கிலாந்து இன்னமும் கேள்விப்படவேயில்லை.

இந்தச் செயற்பாடுகளில் உள்ள குறைபாடுகளை நீக்குதல் பெரிய காரியமல்ல. தனி ஆளுமை பெற்றவர்களின் யுக்திகள் இக்குறைபாடுகளை எளிதாக நீக்கிவிட வல்லன. இதற்கெல்லாம் பொதுமக்கள் அநுசரணை மிக அவசியமானதாகும். இக்காரியங்களை உற்சாகப்படுத்தலும் பிரதியுபகாரமுமில்லாமல் எதிர்பார்க்க முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை அறிவை விருத்தி செய்வதற்காக இலண்டனில் உள்ள றோயல் சங்கம் அவ்வறிவு பற்றிய தகவல்களைச் சேகரித்து பரப்ப விரும்புகிறது. இதனைப் பொறுப்பேற்பவர்களுக்கு பிரதியுபகாரம் செய்யப் பொதுமக்கள் முன் வருதல் வேண்டும். இதற்காக, நான் நினைக்கிறேன், முதலில் குறுகிய காலப்பணிகளையே முன் எடுக்க வேண்டும். காலகதியில் அவைகளையெல்லாம் ஒன்று திரட்டிக் கொள்ளலாம். கூடுதலாக அறிந்த சிலர் இருக்கிறார்கள். அவர்கள் அறிந்தவை வெளியிடத்தக்கவை என்பதை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். அவைகள் மனித சமுதாயம் அறிய வேண்டியவை என்பதை அவர்களுக்கு உணர்த்தல் வேண்டும். தான் அறிந்தவைகளை மற்றவர்களுக்குச் சொல்லாமல் வைத்திருக்கும் தப்பெண்ணம் சிறப்பான மற்றும் பொதுவான துறைகளுக்குக் கெடுதி விளைவிக்கிறது. இது முதலில் களையப்படல் வேண்டும். இன்னும் சிலர் இருக்கிறார்கள், அவர்கள் தமது அறிவு பற்றி சுய பிரக்ஞை உள்ளவர்கள். ஆனால் அவர்களிடம் தொகுத்தெழுதும் திறமையில்லை. அதற்குரிய கால அவகாசமும் அவர்களிடமில்லை. தாங்கள் எழுதுவதை அச்சிற் பார்ப்பதில் ஒருவித பயமும் அவர்களிற் சிலரிடம் உள்ளது. ஒரு நூலுக்கான போதிய விடயதானங்கள் தம்மிடம் இல்லை என்றும், பிறரிடமிருந்து மீதித் தகவல்களைப் பெறுவது சரியில்லை என்றும் எண்ணுபவர்களுமுண்டு. இப்படியானவர்கள் நீண்டகாலஞ் செல்லத்தாம் அறிந்தவைகளை மறந்துவிடும் நிலையும் ஏற்படலாம். தகுதி வாய்ந்தவர்கள் இவர்களை அணுகி, கெஞ்சிக் கேட்டாவது விடயங்களைத் திரட்டித் தொகுத்து வரலாறு எழுத வேண்டும். இந்த வகையில் அண்மையில் தூய ஒல்லாந்து மொழியில் வெளியிடப்பட்ட கிரின்லாந்தின் வரலாறு விதந்துரைக்கத்தக்கது. அந்த இடத்திற்கு பல தடவைகள் கடற்பிரயாணம் செய்து மீண்ட பிரடெரிக் மார்ட்டின் வழங்கிய தகவல்களைக் கொண்டு ஹம்போசை சேர்ந்த டொக்டர் ஃபோஜெஸியஸ் இந்த நூலை எழுதியுள்ளார். இந்த பிரயாணங்களை றோயல் சங்கத்தினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவே பிரடெரிக் மார்ட்டின் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது எங்களுக்கு மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள கொலனிகளைப்பற்றிய நல்ல வரலாறு தேவைப்படுகிறது. இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் லிதொனின் பார்படோஸ் தீவு பற்றிய நூல் குறிப்பிடத்தக்கது. சம்மர் மற்றும் வேர்ஜீனியா தீவுகள் பற்றியும் அவர் எழுதியுள்ளார். அவர் எழுதியுள்ளவைகளைப் பற்றி அங்கே தோட்டங்களை வைத்திருக்கும் லண்டனில் வாழ்பவர்களுக்குக் கூடச் சரியாகத் தெரியாது. அங்கே இருக்கிற கூர்மதிபடைத்தவர்களுக்கு உபகாரங்கள் வழங்கி இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம் அல்லவா? கப்டன் நொக்ஸின் இந்த நூல் இவ்வாறான செயல்பாடுகளுக்கு நல்லதொரு உதாரணமாகும். அவர் தனது மூளையிற் பதிந்துள்ள கண்டிராச்சியத்தை இந்த நூலில் கொண்டுவந்துள்ளார். அவர் அங்கிருந்து முதுகில் பொருட்களையும் பையில் பணத்தையும் கொண்டுவரவில்லையாயினும் நமது நாட்டுக்கு அறிவைக் கொண்டுவந்துள்ளார். அதனை எழுதி வாசகராகிய உங்களுக்கு வழங்குகிறார்.

அவர் அந்த நாட்டின் மக்களை முதன் முதற் சந்தித்தவர் என்ற முறையிலும், அங்குள்ள தனித்துவமான விடயங்களை அவதானித்தவர் என்ற வகையிலும், இதை இன்னும் வளமுள்ளதாகத் தந்திருக்கலாம். அந்த நாட்டின் தனித்துவமான தாவரங்கள், பழங்கள், பறவைகள், மீன்கள், பூச்சிகள், கனிப்பொருட்கள், இரத்தினங்கள் போன்ற இன்னோரன்னவைகள் மற்றும் மருத்துவ முறைகள், வர்த்தகம், உற்பத்திகள் போன்றவைகளைப் பற்றி இன்னும் எழுதியிருக்கலாம். அவர்களின் மொழியை நாங்கள் தாய்மொழி போல பேசவும் விளங்கவும் கூடிய பூரண அகராதி ஒன்றை அவர் ஆக்கி இருக்கலாம். அவைகளுக்கெல்லாம் அவர் ஏற்றிருக்கும் தற்போதைய பொறுப்பு இடம் தரவில்லை. எனினும், அவரின் புத்தம் புது விபரிப்புகள் இன்னும் இன்னும் மக்களை பயணங்கள் செய்யத் தூண்டி, அவை வழி புதிய அவதானிப்புகளையும் கண்டுபிடிப்புகளையும் நிகழ்த்த வைக்கும் என எதிர்பார்க்கலாம். இதற்காக மக்கள் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இந்த வரலாற்றில் அவரின் அவதானிப்பு மிகவும் சுவையானதாக உள்ளது. வித்தியாசமான நிலையில் உள்ள ஒவ்வொருவரும்-ஆட்சியாளர்கள், மதத்தோடு சம்பந்தப்பட்டவர்கள், வைத்தியர்கள், சட்டத்துறையினர், வியாபாரிகள் யாவரும்-தத்தமது ஈடுபாடுகளை இந்நூலிற் கண்டு மகிழமுடியும். தத்துவஞானிகளுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றாசிரியர்களுக்கும் இங்கே அதிகம் உள்ளது. அவரோடு உரையாடத் தொடங்கியவுடன், அவர் எந்த வகையிலும் தப்பெண்ணம் கொள்ளும் அல்லது வெறுப்பால் அல்லது பயத்தால் அல்லது நம்பிக்கையால் அல்லது தற்பெருமையால் பாதிக்கப்படக்கூடிய மனிதரல்ல என்பதைப் புரிந்து கொண்டேன். அந்த நாட்டில் இருபது வருடங்கள் இருந்து; அங்குள்ள மக்களுடன் கலந்துறவாடியவர் என்பதால், அவரின் தகவல்கள் உண்மையானவை என்பதை நிரூபிக்க எந்தப் பிரமாணமும் வேண்டியதில்லை.

அவர்களின் மொழியிலும் வழமைகளிலும் அவருக்குள்ள தேர்ச்சியும், மற்றும் அந்த நாட்டின் பல பாகங்களிற் பயணம் செய்தும் வர்த்தகம் செய்தும் அவர் பெற்ற அனுபவமும், கிழக்கிந்திய கம்பெனியின் கப்டனான அவரின் தந்தையாரின் கண்காணிப்பின் கீழே பத்தொன்பது வருடங்கள் அவர் வளர்க்கப்பட்டதும், இயற்கையான அவரின் கூர்மதியும், எல்லாவற்றுக்கும் மேலாக அவரின் புகழும் கிழக்கிந்திய கம்பெனியாரால் டர்குயின் கப்பலின் கொமாண்டராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்குக் காரணங்களாகும். அக்கப்பல் அவர் பொறுப்பில் டார்குயினுக்கு தனது பிரயாணத்தை ஆரம்பிக்க உள்ளது.

இந்தப் புத்தகத்தை நீங்கள் வாசிக்க வேண்டும். அப்போது இதன் ஆசிரியரால் நீங்கள் வசியப்படுத்தப்பட்டு அவர் கைதியாக இப்புத்தகத்துக்குள் சிறைபிடிக்கப்படுவீர்கள். சுதேசிகளால் சிறைபிடிக்கப்பட்ட இவ்வாசிரியரின் சிறைவாசம் போல் அல்லாமல் அது சுகமானதாக இருக்கும்.

சிறைக்கைதியாக உங்களைக் கடற்கரையிலிருந்து காவலர்கள், முட்கடப்புகள் ஊடாக அந்த ராச்சியத்தைச் சூழ்ந்து, அதற்கு அரணாக விளங்கும் மலைகளுக்கு அழைத்து சென்று, அங்கிருந்து ஹம்மலெட் என்று அழைக்கப்படும் மலை உச்சிக்குக் கொண்டு போய், பின்னர் இறக்கி, அவர்களின் முக்கிய நகரங்களையும் பட்டினங்களையும் காட்டுவதோடு வேளாண்மை முறைகள் மற்றும் பழங்கள், பூக்கள், மூலிகைகள், கிழங்குகள் போன்றவற்றையும் உங்களுக்கு பரிச்சயம் பண்ணி வைப்பார். உங்களுக்கு தளப்பத்து ஓலையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசிறி ஒன்றையும் ஆக்கித்தருவார். மழைக்கும் வெயிலுக்கும் அங்குள்ள தாவரங்கள், மரங்களுக்கு கீழ் உங்களை ஒதுங்க வைப்பார். அங்குள்ள மிருகங்கள், பறவைகள், மீன்கள், பாம்புகள், பூச்சிகள், மற்றும் பண்டங்களையும் காண்பிப்பார். அங்கிருந்து உங்களை அரசசபைக்கு அழைத்துச் சென்று, அங்குள்ள வாழ்வின் சகல ஒழுங்குகளுக்கும் அதிபதியாக இருக்கின்ற அரசனையும், அவனின் ஆட்சிமுறைகளையும், வருமான வழிகளையும், செல்வச் செழிப்பையும், உத்தியோகத்தர்களையும், ஆளுநர்களையும், இராணுவ பலத்தையும் போர்த் திறமையையும் உங்களுக்கு அறியத் தருவார். அத்தோடு அந்த அரசனுக்கெதிராக நடந்த கிளர்ச்சியைப் பற்றியும் உங்களுக்கு விளக்குவார். அதன் பிறகு சுதேசிகளையும் அவர்களின் தரங்களையும் அந்தஸ்த்துகளையும் எடுத்துரைப்பார். அவைகளில் உள்ள நகைச்சுவையை உங்களுக்குச் சொல்லி மகிழ்வார். அதன் பிறகு நீங்கள் மதகுருக்களின் சடங்குகளைத் தரிசித்து அங்கே காணிக்கை செலுத்தி, சுதேசிகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களுடன் கலந்துறவாடி மகிழலாம். அவர்களின் வீட்டுப்பெண்கள், தட்டுமுட்டுச் சாமான்கள், அவர்களின் ஆடையணிகள், அவர்கள் எவ்வாறு பிள்ளைகளை வளர்க்கிறார்கள், எவ்வாறு கலியாணம் முடிக்கிறார்கள், என்ன தொழில்களை, பொழுது போக்குகளை செய்கிறார்கள் என்பதை அறியலாம். இதன் பிறகு அவர்களது மொழி, கல்வி, சட்டம் என்பவைகளையும் விரும்பினால் மந்திர வித்தைகளையும் மாயவித்தைகளையும் பரிச்சயமாக்கி கொள்ளலாம். கடைசியாக அவர்களின் நோய் நொடிகள், இறப்பு, அடக்கம் செய்யும் முறைமை என்பவற்றை அறியலாம்.

அதன் பிறகு, அவர் இலங்கைக்கு போன காரணத்தையும் அங்கு கண்டிராச்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டதையும் விளக்குவார். அங்கே அவர் பத்தொன்பதரை வருடங்களில் எதிர்கொண்ட சூழ்நிலைகளையும் எதிர்பாராத நிகழ்வுகளையும் எடுத்துரைப்பார். அத்தோடு அவர் 1680 செப்டம்பர் கடைசியில் தப்பியோடி இங்கிலாந்துக்கு மீண்ட வழிகளையும் உபாயங்களையும் உங்களுக்கு விளக்குவார்.

ஒகஸ்ட் 1, 1681 **ரொபர்ட் ஹுக்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த கௌரவத்துக்குரிய சேர் வில்லியம் தொம்சன் நைற், ஆளுநர் அவர்களுக்கும், அவரது துணை அலுவலர் தோமஸ் பபிலோன் அவர்களுக்கும் பின்வரும் கௌரவத்துக்குரிய கிழக்கிந்திய கம்பெனியின் 24 உறுப்பினர்களுக்கும்

மதிப்புக்குரிய ஜோர்ஜ் ஏர்ள் (பெர்க்கிலி)
மதிப்புக்குரிய ஜேம்ஸ் லோர்ட் சண்டோய்ஸ்.
சேர் மத்தியு அன்ட்றூஸ் நைற்.
சேர் ஜோன் பக்ஸ் பார்நெட்.
சேர் சாமுவேல் பர்னாட்டிஸ்ரோன் பரோநெட்.
திரு கிறிஸ்தோபர் பூண்
திரு ஜோண் பர்த்தூஸ்ட்
சேர் ஜோசியா சயில்ட் பரோனட்
திரு தோமஸ் கன்ஹம்.
திரு. கொலோனெல் ஜோண் கிளார்க்
சேர். ஜேம்ஸ் எட்வர்ட் நைற்
திரு ஜோசப் ஹெர்ன்.
திரு றிச்சர்ட் ஹட்சிகன்.
திரு ஜேம்ஸ் ஹம்லேன்.
சேர் ஜோன் லெதில்லியர்.
திரு நாதானியல் பெற்றோன்.
சேர். ஜோன் மூர் நைற்
திரு சாமுவேல் மோயர்.
திரு ஜோன் மோடன்.
திரு ஜோண்பஜ்
திரு எட்வர்ட் ருட்ஜ்
திரு டானியல் செல்டன்.
திரு ஜேரமி சம்புறுக்.
திரு ரொபர்ட் தொம்சன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கத்துக்குரியவர்களே,

நெடிய துயர் நிறைந்த சிறை வாழ்க்கையிலிருந்து தப்பி, தாயகமான இங்கிலாந்திற்கு ஓடி வந்த பின்னர், நண்பர்களும் அறிமுகமானவர்களும் நான் சிறை வைக்கப்பட்டிருந்த நாட்டைப் பற்றி ஆர்வமுடன் விசாரித்தனர். எனது பேச்சு அவர்களின் ஆர்வத்தை ஒருவாறு தணித்தது. அந்த நாட்டின் பல இடங்களில் எனக்கேற்பட்ட தொடர்புகளும் ஊடாட்டங்களும் புதினமாகவும் வித்தியாசமாகவும் விநோதமாகவும் மேற்கு நாட்டவர்களுக்கு இருக்கின்றமையே அவர்களின் ஆர்வத்துக்கு காரணங்களாகும். அவர்கள் அடிக்கடி நான் இலங்கையில் கண்டவற்றையும் அறிந்தவற்றையும் எழுதித் தொகுத்து வெளியிட்டால் பொது மக்களும் அவற்றை அறிந்து கொள்வார்கள் என்று கூறி வந்தனர். எனக்கு இதில் ஆர்வமில்லாமல் இருந்தாலும், அவர்களின் வற்புறுத்தலாலும், என் மீது கடவுள் கருணை கொண்டுள்ளான் என்பதைக் காட்டுவதற்காகவும் என்னோடு இருந்த சக மனிதர்களின் நினைவுகளுக்காகவும் இதை எழுதி வெளியிடுகிறேன்.

பண்டம் என்ற இடத்திலிருந்து தாயகத்தை நோக்கி கடற் பிரயாணத்தை மேற் கொண்ட போது பொழுதுபோக்கிற்காக பல பக்கங்களில் குறிப்புகள் எழுதியிருந்தேன். அக்குறிப்புகள் அரசனையும் அவன் நாட்டையும் அங்கிருந்த ஆங்கிலேயர்களான எங்களையும் நாங்கள் தப்பி ஓடி வந்ததையும் பற்றி இருந்தன. அந்தக் குறிப்புகளின் பக்கங்களை கவனமாகப் பரிசீலித்து மேலதிகமாக சேர்க்க வேண்டியவைகளை உட்படுத்தி ஒரு முறைமைக்குள் கொண்டு வந்தேன். அவைகள் நான்கு தலைப்பில் இருந்தன. முதலாவது, அந்நாட்டையும் அங்குள்ள உற்பத்திகளையும் பற்றியது. இரண்டாவது, அரசனையும் அவனின் அரசாங்கத்தையும் பற்றியது. மூன்றாவது, சுதேசிகளையும் அவர்களின் சமயம் மற்றும் வழமை போன்றவைகளைப்பற்றியும், நான்காவது, எங்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி, தடுத்து வைக்கப்படல் மற்றும் தப்பியோடல் பற்றியதாகவும் அமைந்திருந்தன. இந்த வகையில் இந்நூல் பூர்த்தியடைந்திருக்கிறது. தங்களுடைய ஞானத்தாலும் சாதனையாலும் கிழக்கிந்திய பகுதிகளை எங்களுக்கு அறிமுகமுள்ளதாகவும் நெருக்கமுள்ளதாகவும் மாற்றிய எனது மேலோர்களான உங்களுக்கு, இந்த நூலை அங்கீகரிக்க நீண்ட காலம் எடுக்காது. பெருமதிப்புக்குரிய உங்களின் ஆதரவையும் அநுசரணையையும் வேண்டி மிகத் தாழ்மையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலை சமர்ப்பிக்கின்றேன். தங்களின் ஆதரவு ஏற்கெனவே கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சி கொள்கிறேன். அடுத்ததாக உங்களது எதிர்கால நம்பிக்கைகள், நினைப்புகள் ஈடேற கடவுள் துணைபுரிவாராக.

மிக்க மரியாதையுடன், உங்களுக்கு மிகவும்
கடமைப்பட்ட, மிகவும் தாழ்மையுடைய, உங்களது
கட்டளைக்கு மிகவும் விசுவாசமுடன் கீழ்ப் படியும் சேவகன்.

றொபர்ட் நொக்ஸ்.

இலண்டன்
18 மார்ச் 1680/81

ஓகஸ்ட் 8, 1681

திரு. சிஸ்வெல்

நான் நொக்ஸின் இலங்கை பற்றிய விபரங்களைக் கருத்தூன்றி வாசித்தேன். அது நாங்கள் இது வரையும் அறிந்திராத ஒரு நாட்டையும், அதன் மக்களையும் பற்றி உண்மையுடனும் நேர்மையுடனும் எழுதப்பட்டிருக்கிறது. (அதனுடைய உள்ளடக்கம் புதியது) அறிவார்வமுள்ளவர்களுக்கு இது பெரும் திருப்தியை அளிக்கும் என்று நான் நம்புகிறேன் இந்நூல் வெளியிடத்தக்கதாகும்.

கிறிஸ்தோபர் ரென்.

கிழக்கிந்திய கம்பெனி அவை குழாம்.
ஓகஸ்ட் 10, 1681.

உண்மையும் நேர்மையும் வாய்ந்த கப்டன் நொக்ஸை நாங்கள் மதிக்கிறோம். அவருடைய இலங்கைத் தீவு பற்றிய விபரங்களும் தொடர்புகளும் (அவருடைய கையெழுத்துப்படியை நாங்கள் படித்தோம்) பாராட்டத்தக்கதாகும். அதனை வெளியிடுமாறு அவரை நாங்கள் வேண்டுகிறோம்.

றொபர்ட் பிளேக் போர்ண்
மேற்குறித்த அவைக்குழுவின்
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்

பாகம் – I

01	தீவு பற்றிய பொதுவான விபரணம்	3
02	இந்த தீவின் முக்கிய நகரங்களும் பட்டினங்களும்	9
03	அவர்களின் தானியமும் அதனை பராபரிக்கும் முறைகளும்	14
04	பழங்களும் மரங்களும்	22
05	கிழங்குகள், பயிர்கள், மூலிகைகள் மற்றும் பூக்கள்	32
06	பழக்கப்பட்ட மற்றும் பழக்கப்படாத காட்டு மிருகங்களும் பூச்சிகளும்	36
07	பறவைகள், மீன்கள், பாம்புகள் மற்றும் பண்டங்கள்	47

பாகம் – II

01	கண்டியின் தற்போதைய அரசன்	57
02	அரசனின் குணங்களும் குறைகளும் பொழுதுபோக்குகளும் சமயமும்	65
03	அரசனின் கொடுங்கோல் ஆட்சி	75
04	வருமானமும் வளங்களும்	82
05	மாகாணங்களின் உயர் அதிகாரிகள் மற்றும் ஆளுநர்கள்	87
06	அரசனின் வலிமையும் போர்த்திறமும்	95
07	அரசனுக்கெதிரான கலவரம்	101

பாகம் – III

01	இந்தத் தீவில் வசிப்பவர்கள்	107
02	அவர்களிடையேயுள்ளபல்வேறு கௌரவங்களும், தரங்களும், தன்மைகளும்	116
03	அவர்களின் சமயம், கடவுளர்கள், கோயில்கள்,மற்றும் மதகுருக்கள்	126
04	அவர்களின் வழிபாடும் திருவிழாக்களும்	134
05	சமயமும் கோட்பாடுகளும், நடைமுறையும்	144
06	அவர்களின் வீடுகள் பராமரிப்பு, உணவுகள் மற்றும் வரவேற்புகள்	150
07	அவர்களின் தங்குமிடம், படுக்கை, பரத்தமை, திருமணம் மற்றும் பிள்ளைகள்	159
08	அவர்களின் தொழில்களும் பொழுது போக்குகளும்	166
09	அவர்களின் சட்டமும், மொழியும்	175

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 அவர்களின் கல்வித்தரம், வானியல் மற்றும் மந்திரவித்தை 192
11 நோய், இறப்பு மற்றும் அடக்கம் 198

பாகம் – IV

01 நாங்கள் இலங்கைக்குச் செல்ல வேண்டிய காரணமும், அங்கே தடுத்து வைக்கப்படுதலும் 207
02 நாங்கள் உள்நாட்டுக்கு கொண்டு வரப்பட்டு தடுத்து வைக்கப்படுதலும் எங்கள் நோய் நொடிகளும் கப்டனின் மரணமும் 213
03 எனது தந்தையாரின் இறப்புக்கு பின் எனதும் மற்ற ஆங்கிலேயர்களினதும் வாழ்க்கை நிலைமைகளை பற்றி எங்கள் வாக்கு மூலம் 222
04 அந்த நாட்டில் ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு குழு ஆங்கிலேயர்களைப் பற்றி 232
05 விடுதலைக்கான உபாயங்கள் மற்றும் கிளர்ச்சியின் போதும் பின்னரும் எங்கள் நிலைமைகள் 240
06 கிளர்ச்சிக்குப்பின் எனது நிலைமையும் மற்றும் ஒரு துண்டு நிலத்தைக் கொள்வனவு செய்தலும் 248
07 மீதி ஆங்கிலேயர்களின் விபரங்களும் மற்றும் எனது வாழ்க்கையின் போக்கும் 257
08 அரசசேவைக்கு உட்பட கட்டாயப்படுத்தப்படலும் அதை தவிர்த்துக் கொள்ளலும் தப்பி ஓடும் முயற்சி தோல்வி அடைதலும். 263
09 நூற்றுக்கணக்கான மைல்களை கடந்துக் தப்பி ஓடுதல் 272
10 அநுராதபுரத்திலிருந்து காடுகள் ஊடாக மலபார்களின் நாட்டுக்கு வரும் வரையில் எங்கள் நிலைமைகள் 281
11 மலபார் தேசத்தில் இருவரைக் கண்டு உரையாடல். டச்சுக் கோட்டைக்குப் பாதுகாப்பாக வந்து சேரலும் வரவேற்பும். மன்னார் தீவிலிருந்து கொழும்பைச் சென்றடைதல். 289
12 கொழும்பு வருகையும், விருந்துபசாரங்களும்,பட்டேவியாவுக்கு புறப்படுதலும், அங்கிருந்து பன்டம் ஊடாக இங்கிலாந்தை அடைதலும் 296
13 இந்த நாட்டில் வாழும் மற்ற நாட்டவர்களைப் பற்றி, குறிப்பாக, ஐரோப்பியர்களான போர்த்துக்கீசர்களையும் ஒல்லாந்தர்களையும் பற்றி! 304
14 அங்கு தடுத்து வைத்திருக்கும் பிரெஞ்சுக்காரர்கள், மற்றும் அங்குள்ள கிறிஸ்தவ சமயத்தின் நிலைமை 318

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் I

பொதுசன நூலகம்
01 SEP 2019
மாநகரசபை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01

தீவு பற்றிய பொதுவான விபரணம்

இந்தத் தீவு அதன் அண்டை நாடுகளுக்கிடையே எவ்வாறு அமைந்துள்ளது என்று சாதாரண கடற்காவலர்கள் நோக்குவதைப் போல நான் இங்கு நோக்கவில்லை. ஒல்லாந்தர் ஆட்சிக்குட்பட்டிருக்கும் அதன் கடற்கரைப் பிரதேசங்களைப் பற்றியும் எனக்கு அக்கறையில்லை. எனது நோக்கம் இது வரையும் இத்தீவு பற்றி ஐரோப்பிய நாடுகளுக்குத் தெரிந்திராத புதிய விடயங்களை விபரிப்பதாகும். அவை அங்கு வாழும் ஒல்லாந்தருக்கு கூடத் தெரியாமல் இருக்கும் அதன் உட்பிரதேசங்களைப் பற்றியதாகும். அவைகளைக் காட்டும் தேசப்படம் ஒன்று அவர்களிடம் உண்டு. அதில் பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. சரியான, உண்மையான தேசப்படம் ஒன்றை வரைந்து எடுத்துக்கொள்ளவேண்டும். இருபது வருடங்களாக அலைந்து திரிந்து, இவ்விடங்களை சரியாக அறிந்த நான், வரையப்படும் படத்தைச் சரியாக மதிப்பிடப் பொருத்தமானவன் என்று கருதுகின்றேன்.

நான் கடற்கரையிலிருந்து ஆரம்பிக்கின்றேன். இக் கடற்கரை பிரதேசங்களைப் பற்றி ஒல்லாந்தர்கள் சிறப்பாக அறிந்து வைத்திருக்கின்றனர். வடக்குப் பக்கத்தில் உள்ள பிரதான இடங்கள் யாழ்ப்பாண பட்டினமும்[1] மன்னார்[2] தீவுமாகும். கிழக்கே திருகோணமலையும்[3] மட்டக்களப்பும்[4] உள்ளன. தெற்கு பக்கத்தில் காலி நகரமும் மேற்கு பக்கத்தில் கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரமும்[5] அமைந்துள்ளன. கொழும்பு என்னும் பெயர் இங்கு வளரும் அம்போ (மாம்பழத்தை தரும் மரம்) என்னும் மரத்தைக் குறிப்பதாகும். கொல என்பது அவர்கள் மொழியில் இலையைக் குறிக்கும் சொல்லாகும். ஆகவே கொல - அம்போ என்பது இடத்துக்கும் ஆகிவிட்டது. இவ்விடத்தை கிறிஸ்தவர்கள் கொலம்பஸ்ஸின் நினைவாக கொலம்பு என்று அழைக்கிறார்கள். இது கடற்கரையில் இருக்கும் பிரதான நகரமாதலால் தலைமை ஆளுநரின் வாசஸ்தலம் இங்கே உள்ளது. இதன் பக்கத்தில் நீர்கொழும்பும்[6] கல்பிட்டியும்[7] உள்ளன. இவைகள் நன்கு பலப்படுத்தப்பட்ட இடங்களாகும். இவைகளை விட சிறிய கோட்டைகளும் அரண்களுமுள்ளன. சொல்லப்போனால் இவைகள் எல்லாம் குறிப்பிடத்தக்க ஆட்சிப் பகுதிகளாகும். இவைகள் ஒல்லாந்து தேசத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் கடற்கரைப் பிரதேசத்தை எல்லையாகக் கொண்டிருக்கும் பிரதேசங்களாகும்.

நான் இப்போது கண்டி அரசனின் கட்டுப்பாட்டில் இருக்கும் உள்நாடு பற்றி விபரிக்கத் தொடங்குகின்றேன். இந்நாடு கூடியும், குறைந்தும் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்பது இதனைப் புரிந்து கொள்ளுவதற்கு அவசியமானது. பெரிய பகுதிகள் மாகாணங்கள் என்று அழைக்கப்படுகின்றன. சிறிய பகுதிகள் எங்களுடைய இங்கிலாந்தில் பிரிக்கப்பட்டிருப்பது போன்ற அளவில் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் மாவட்டங்கள் (county) என்று குறிப்பிடப்படுகின்றன. வடக்குப் பக்கத்தில் இருக்கும் நவ்ரக்கலாவ மாகாணம் ஐந்து சிறிய பகுதிகளாக அல்லது ஐந்து மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அப்பக்கத்தில் ஹெட்கோலி மாகாணமும் உண்டு. அது ஏழு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. கிழக்கு பக்கத்தில் உள்ள மாத்தளை மாகாணம் மூன்று மாவட்டங்களைக் கொண்டது. இதன் அருகே தம்பன்கடவை, பிந்தென, வெல்லாஸ, பைநுவே ஆகிய தனித்தனி மாவட்டங்கள் உள்ளன. ஊவா மாகாணம் மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியது. இந்த மாகாணத்தில் முப்பத்திரண்டு அரசனின் கப்டன்கள் தங்கள் படை வீரர்களுடன் நிலைகொண்டுள்ளனர். நாட்டின் நடுப்பகுதியில் வலப்பொனகோய் (இது மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்தது) பொஞ்சிபொட் (ஐநூறு படை வீரர்கள் கொண்டது) கோட்டப்பொன்னகோய் (ஐம்பது வரண்ட பகுதிகள் கொண்டது) ஹெவாகெட்ட (அறுபது படைவீரர்கள் கொண்டது) கோட்டிஸ், கோர்ஸ்பொட் (நானூறு படை வீரர்கள் கொண்டது) றொன் போனாகொய் (நூற்றியம்பது படை வீரர்கள் கொண்டது) ஓடாநர் (மேல்நகரம் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்படுவது. இதனுள் கண்டிராச்சியத்தின் பிரதான அரச நகரம் உடுநுவர உள்ளது) ஆகிய நகரங்களும் ஆட்சிப்பிரிவுகளும் அடங்குகின்றன. கடைசியாக நான் குறிப்பிட்ட இரு இடங்கள் யாவருக்கும் தெரிந்த பிரபலமான இடங்களாகும். இங்குதான் நாட்டின் முக்கிய பிரதானிகளும் பிரமுகர்களும் வாழ்கிறார்கள். அவர்களுக்கிடையே சாதாரணமாகச் சொல்லப்படும் வழக்கும் ஒன்றுண்டு: இந்த இரு இடங்களில், ஏதாவதொன்றிற் பிறந்த தகைமைகள் உடைய எவரையும் அரசனாக்கலாம். முதலில் அவனின் தகைமைகளை ஆராய வேண்டும். பின்னர் அவனிற் படிந்துள்ள எல்லா அழுக்குகளையும் போக்க வேண்டும். பிறகு அவனை அரசனாக்கலாம். இந்த விசித்திரமான சலுகையை தங்களின் இவ்விரு பிரதேசங்களில் பிறந்தவர்களுக்கு அவர்கள் கொடுக்கின்றனர். தங்கள் நாட்டில் பிறக்காத எவரும் தங்கள் ஆளுநராக முடியாது என்ற எண்ணம் பல பிரதேசத்தவர்களிடம் உண்டு. புத்தளமும், திருக்கோணமலையும் மூன்று பிரிவுகளைக் கொண்டன. திருக்கோணமலையோடு இணைந்திருந்த கொட்டியாரத்தையும் மட்டக்களப்பையும் நான் அங்கு தங்கியிருந்த காலப்பகுதியில் ஒல்லாந்தர் தம் வசம் ஆக்கிக்கொண்டனர். இவைகளை விட பத்து பன்னிரெண்டு பெயர் தெரியாத பிரதேசங்கள் கரையோரத்தை அண்டியுள்ளன. அவை யாவும் ஒல்லாந்தர் வசமுள்ளவை. தம்பன்கடவை வெல்லச, பௌனவா, ஹெற்றகோலி, ஹெட்கேலி, நவரங்கலாவ ஆகிய ஆறு பிரதேசங்கள் தவிர எல்லா மாகாணங்களும் மாவட்டங்களும் மலைப்பாங்கானவை; நீர் வளம் நிறைந்தவை. இவை எல்லாம் கண்டிமேல் ராச்சியம் எனக் குறிப்பிடப்படுபவை. மலை உச்சியில் அரசன் வீற்றிருக்கிறான் என்ற அர்த்தத்தில் கண்டி மேல் அரசன் என்று அழைக்கப்படுகின்றான்.

ஒவ்வொரு மாவட்டமும் பெரும் காடுகளாற் சூழப்பட்டுள்ளது. ஒன்றும் போரில் வீழ்ச்சியடையாதவாறு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. அநேகமானவற்றில் காவலர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். சிக்கலான காலகட்டங்களில் எல்லாவற்றிலுங் காவலர்கள் உசார் நிலையில் வைக்கப்படுவர்.

முன்னர் சொல்லப்பட்டது போல் நிறைய மலைகளும் அளவுக்கதிகமான நீர்வளமும் இந்த நாட்டில் மிகுந்திருக்கின்றன. தெளிந்த தூய்மையான ஆறுகள் நாட்டின் குறுக்கே பாய்கின்றன. இவ்வாறு ஆறுகள் பெருகிப் பாய்வதால் அவர்களின் பிரதான உணவான நெல்தானியத்தைச் சிறப்பாக விளைவித்துக் கொள்ள முடிகிறது. ஆறுகள் மலைகளுக்கிடையே விழுந்து அடித்துக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி வருவதாற் கப்பல், படகு போக்குவரத்துக்கு ஏற்றதாயில்லை. இவைகளில் நிறைய மீன் வளம் இருக்கிறது. ஆனால் இங்குள்ளவர்களுக்குச் சிறந்த மீன்பிடி முறை தெரியாது. பிரதான ஆறு மகாவலி கங்கை என அழைக்கப்படுகின்றது. இது ஆதம் மலை என்னும் மலையில் உற்பத்தியாகி வடக்கு நோக்கி உள்ள நிலங்களின் வழியே ஓடித் திருக்கோணமலையிலே கடலிற் கலக்கிறது. இதன் கழிமுகத்தில் நிறைய முதலைகள் உள்ளன. ஆனால் மலையின் ஊடாக வரும் வழியில் அவைகள் இல்லை. மகாவலி கங்கை உற்பத்தியாகும் இடத்தைத் தவிர மற்ற இடங்களில் மிகவும் வரண்ட காலத்திலும் ஒரு மனிதனால் அதனைக் கடக்க முடியாது. ஆறுகளின் மேற் பாலங்கள் அறவே கிடையாது. அதனால் அவர்கள் ஆற்றைக் கடக்கச் சிறுதோணிகளை உபயோகிக்கின்றனர். மழைக் காலங்களில் ஆறுகள் பொங்கிப் பாய்வதால் அக்காலங்களிலே தோணிகள் மூ லமும் அதனைக் கடக்க முடியாது. அதற்கு அனுமதியும் இல்லை. அரசன் தனது நாட்டில் இலகுவாகப் பயணம் செய்யும் வழிகளைச் செய்ய விரும்புவதில்லை. அதை சிக்கலாக வைத்திருப்பதே அவனது நோக்கம். இந்த ஆறு கண்டி நகருக்கு ஒரு மைல் அல்லது அதற்கும் குறைந்த தூரத்தில் ஓடுகின்றது.

மகாவலிகங்கை ஓடும் வழியில் மற்றுமொரு பெரிய ஆறு கற்றமுல் வழியாகப் பாய்ந்துவந்து அதனுடன் கலக்கிறது. விரைவாகப் பாயும் ஆறுகளை திருப்பிவிடத்தக்க அணைக்கட்டுகள் அதன் குறுக்கே உள்ளன.

பொதுவாக நாடு காடு மூடிக்காணப்படுகின்றது. ஊவாவும் மற்றும் ஒடிபல்லற்று, டொலுஸ்பங்சு ஆகிய மாவட்டங்களும் காடுகள் இல்லாத இடங்களாகும்.

கடற்கரை ஓரத்திலும் மையப்பகுதியிலும் உள்ள பிரதேசங்களில் மக்கள் செறிந்து காணப்படுகின்றனர். இவைகள் ஒல்லாந்தரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள். இவைகளைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. வடபகுதி, அசுத்த நீர் காரணமாக சுகாதாரமற்ற இடமாக இருக்கிறது. எனினும் மீதிப்பகுதிகள் சுகாதாரமானவை.

மலைகளுக்கிடையே உள்ள பள்ளத்தாக்குகள் அநேகமாக சேற்று நிலங்களால் நிறைந்துள்ளன. அவைகளின் குறுக்கே சுத்தமான அருவிகள் பாய்கின்றன. இந்த அருவிகள் பாயும் பள்ளத்தாக்கு நிலங்கள் அவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு, தானியத்தை விளைவிக்க வாய்ப்பாக உள்ளது. அவர்கள் தானியம் விளைய நன்கு ஈரலிப்பான நிலம் தேவை என்பதை நான் இங்கு குறிப்பிடவேண்டும்.

கண்டிராச்சியத்தின் தெற்கு பக்கத்தில் தீவிலேயே உயரமான மலை என்று கருதப்படும் சிங்களவர்களால் ஹமலலகந்தை என்று அழைக்கப்படுவதும் போர்த்துக்கீசர்களாலும் மற்ற ஐரோப்பியர்களால் ஆதம்மலை என்று குறிப்பிடப்படுவதுமான ஒரு மலை உண்டு. இது பாண் போல் செங்குத்தானது. இதன் உச்சியில் தட்டையான இடத்தில் மனிதனின் காலடித்தடம் போன்ற பதிவு ஒன்றுண்டு. இது இரண்டு அடி நீளமானது. இந்தப் பதிவை நாட்டில் உள்ளவர்கள் சென்று வழிபடுவது நன்மை பயக்கும் என்று நம்புகிறார்கள். அவர்களின் புது வருடத்தில் - அது மார்ச் மாதம் வருகின்றது - ஆண்,பெண், பிள்ளைகள் சகிதமாக மலை உச்சிக்கு ஏறி இந்தத் தடத்தை வழிபடுகிறார்கள். இது பற்றிய விபரங்களை அவர்களின் சமயத்தை விபரிக்க நேரிடும் போது கூறுவேன். இந்த மலையிற் பல ஆறுகள் உற்பத்தியாகிச் சில மேற்கு நோக்கியும், சில தெற்கு நோக்கியும் ஓடுகின்றன. பிரதான ஆறு மகாவலிகங்கை வடக்கு நோக்கிப் பாய்கின்றது.

கண்டிராச்சியம் இயற்கை அரண்மிக்கது. ஒருவர் இந்நாட்டுக்கு வரவேண்டும் என்றால் உயர்ந்த அகன்ற மலைகள் மீது ஏறி இறங்கி வரவேண்டும். இதற்குப் பல வழிகள் உள்ளன. அவைகள் எல்லாம் ஒடுக்கமானவை. ஒருவர் பின் ஒருவராகச் செல்ல வேண்டும். அடர்ந்த காடுகளால் மூடப்பட்டும் நீட்டிக்கொண்டிருக்கும் பாறைகள் மிகுந்தும் உள்ளவையாதலால் குறிப்பிட்ட வழிகளால் மாத்திரமே செல்ல இயலும். அவைகளிலும் முட் கடப்புகள் இடையிடையே போடப்பட்டுள்ளன. அக்கடப்புகளின் அடியில் ஒருவரும் மேலே ஒருவரும் காவல் காத்துக் கொண்டிருப்பார்கள். இன்னும் இரண்டு மூன்று பேர் மேற்பார்வை பார்த்துக்கொண்டிருப்பார்கள், போகிறவர்கள் வருகிறவர்கள் என்ன கொண்டு செல்கிறார்கள் என்பதைக் கண்காணித்துக் கொண்டிருப்பர். கடிதங்கள் கொண்டு செல்ல முடியாது. அடிமைகளும், கைதிகளும் ஓடித்தப்ப இயலாது. இந்தக் காவலர்கள் அரசுக்கு எதிராகக் கலவரம் நடக்கும் காலப்பகுதிகளில் அதற்கு உதவப் பட்டணங்களுக்கு அழைப்படுவார்கள். அவர்கள் பக்கத்தில் உள்ள பட்டணங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களிடம் ஆயுதம் எதுவுமில்லை. அவர்களின் ஒரே ஆயுதம் அரசனின் பெயராகும். மீறுபவர்களுக்குக் கடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டனை கிடைக்கும். ஆகவே ஒருவரும் மீறமாட்டார்கள். போர்க்காலங்களில் கொமாண்டர்களும், சிப்பாய்களும் இங்கே தங்க வைக்கப்படுவார்கள். ஒரு ராச்சியத்தின் உறுதிப்பாடு மற்றும் நோக்கம் என்பவைகளைப் பற்றி யோசித்தால் இச்செயற்பாடுகள் சரியானவைகளாகத் தோன்றும்.

இந்தத் தீவின் ஒரு பகுதிக்கும் மறு பகுதிக்குமிடையே உள்ள மண் மற்றும் பருவகாலங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நிறைய வித்தியாசம் காணப்படுகின்றது. மேற்குப் பெயர்ச்சி காற்று அடிக்கும் போது மேற்கு பக்கத்தில் மழை பெய்யும். அங்கு உழுது விதைக்க ஏற்ற காலம் அது. அதே நேரம் கிழக்கு பக்கத்தில் வெயில் எறிக்கும். அங்கு அறுவடை நடக்கும். கிழக்குப் பெயர்ச்சிக் காற்று அடிக்கும் போது கிழக்கு பக்கத்தில் மழை பெய்யும். உழவு வேலைகள் ஆரம்பமாகும். அதே நேரம் மேற்கு பக்கத்தில் வெயில் எறிக்கும். அறுவடை வேலைகள் நடைபெறும். ஆகவே வருடம் பூராகவும் எங்கேயோ ஒரு பக்கத்தில் அறுவடை நடைபெறும். மழைகாலமும் வரண்ட காலமும் மாறிமாறி வருவதை நான் மத்திய பகுதியில் இருந்த போது கண்டிருக்கிறேன். கௌரகாஸ்கோக் என்ற மலையில் ஒரு பக்கத்தில் இருந்த போது மழைபெய்யும் காலமாக இருந்ததையும் உடனே மறுபக்கம் வந்தபோது வெறுங் காலுடன் நடக்க முடியாத வெப்பமான வரண்ட காலமாக இருந்ததையும் கண்டேன்.

கண்டியின் உயர் பிரதேசங்களில் மழை அதிகமாகப் பெய்கிறது. தாழ் நிலங்களிலும் கணிசமாகப் பெய்கிறது. தீவின் வடக்கு முனை வரண்ட காலநிலைக்குரிய பிரதேசமாகும். இந்தப் பிரதேசத்திலே தொடர்ந்தாற் போல ஐந்து வருடங்களுக்கு மழை பெய்யாமல் இருக்குமாம் என்று கேள்விப்பட்டுள்ளேன். (மழை இல்லை. நீரைப்பெறுவதற்கான வழிகளும் இல்லை, ஆயினும் மூன்று அருவிகள் அங்கு பாய்கின்றன என்று கேள்விப்பட்டுள்ளேன். அது பற்றி எனக்குத் தெரியாது) அதனால் அவர்கள் உழுவதுமில்லை, விதைப்பதுமில்லை. அவர்கள் நீரைப்பெறுவதற்கு ஆழமாகத் தோண்டினாலும் கிடைப்பது உப்புக்கரிக்கும் நீர்தான். அதேநேரம் மற்றப் பாகங்களில் மழை தேவைக்கு அதிகமாகப் பெய்கிறது. இதனால் வடபகுதி மக்கள் உணவுப்பொருட்களை வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகின்றனர். நான் இந்தத் தீவிலுள்ள நாடுகள், மண் மற்றும் இயற்கை இயல்புகள் பற்றிப் போதியளவு பேசிவிட்டேன். நான் இனி இங்குள்ள நகரங்களையும் பட்டினங்களையும் அவைகளோடு தொடர்புடைய குறிப்பிடத்தக்க அம்சங்களையும் பற்றிக் கூறத் தொடங்குகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02

இந்த தீவின் முக்கிய நகரங்களும் பட்டினங்களும்

இந்தத் தீவில் முன்னர் பல நகரங்கள் இருந்தன, இன்று அவைகள் தமது பெயரை மாத்திரம் தக்க வைத்துள்ளன என்று இங்குள்ளவர்கள் கூறுகின்றனர். அவ்விடங்களில் கட்டடங்களின் அழிபாடுகள் மண்ணிற் புதைந்தும் வெளிப்பட்டும் காணப்படுகின்றன. ஆயினும் முக்கியமான ஐந்து நகரங்கள் இன்று உள்ளன. அங்கே அரசர்களின் அரண்மனைகளும் பொருட்களும் உள்ளன.

முதன்மையான நகரம் கண்டியாகும்.[8] பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் தான் அதைக் கண்டி (Kandy) என்று அழைக்கிறார்கள். சிங்கள மொழியில் அது அமைந்திருக்கும் மலைப்பகுதியை குறிக்கும் வகையில் கெண்டே (Conde) எனக் குறிக்கப்படுகின்றது. இங்கு வாழ்பவர்கள் அதை செங்கல கட் நுவர (Hingodagul neure) என்று அழைக்கிறார்கள். அதிகமான சிங்கள மக்கள் தங்களின் பிரதான அல்லது அரச நகர் என்ற அர்த்தத்தில் அதை மாநுவர என்று சொல்கிறார்கள். முழுத் தீவிலும் பிரதான அல்லது பெரும் நகர் இதுவாகும். ரட்டநுவர் என்னும் சகல வசதிகளும் நீர் வளமும் பொருந்திய தீவில் இந்நகரம் அமைந்துள்ளது. நாட்டின் வழக்கப்படி அரசனின் மாளிகை தீவின் கிழக்கு முனையில் கட்டப்பட்டுள்ளது. இந்நகரம் தெற்கு பக்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர மற்றப்பக்கங்கள் எல்லாம் இயற்கை அரண் மிக்கதாக உள்ளது. தெற்குப் பக்கம் இயற்கையாகத் திறந்து அதிகம் செங்குத்தில்லாமல் இருக்கின்றது. இங்கே இது இருபது அடி வரைதான் உயரமானது. இந்த இடத்திலிருந்து ஒரு மனிதன் இலகுவாக ஏறிச்செல்ல முடியும். இவ்விடத்திலிருந்து ஒரு இரண்டு மூன்று மைல் இடைவெளிகளில் முள்கடப்புகள் வைத்துக் காவலாளிகள் போவோர் வருவோரைக் கண்காணித்துக்கொண்டு இருப்பார்கள். ஆதம்மலையில் உற்பத்தியாகும் பெரிய ஆறு ஒரு மைலுக்கும் குறைவான தூரத்தில் மேற்கு பக்கத்தில் பாய்கிறது. தமக்கு வாக்களித்திருந்த வருடத்திற்கு மூன்று யானைகளைத் தராததால் மன்னன் மீது கோபம் கொண்ட போர்த்துக்கீசர், முற்றுகையிட்டு அவனின் அரண்மனையினையும் கோவில்களையும் எரித்துவிட்டனர். அன்றிலிருந்து இருபது வருடகாலமாக அதை அவன் எட்டியும் பார்க்கவில்லை, இதனால் அங்குள்ள அரண்மனையும் கோவில்களும் மேலும் சிதிலமடைந்து வருகின்றன.

இரண்டாவது நகரமாக உள்ளது நெலம்பே பட்டணமாகும். இது கண்டியில் இருந்து இருபது மைல் தூரத்தில் ஓடி பொலற் பிரதேசத்தில் இருக்கிறது. அரசன் ஓய்வு எடுக்க விரும்பும் போது, இங்கே தனது பரிவாரத்துடன் வாழ்வான்.

மூன்றாவதாக உள்ளது, கண்டிக்கு வடகிழக்கில் உள்ள அலுத்நுவர என்னும் நகரமாகும். இங்கே அரசன் தனது தானியம் மற்றும் உப்புக் களஞ்சியங்களை வைத்துள்ளான். இதன் நோக்கம் போர் மற்றும் சிக்கலான காலகட்டங்களிற் பயன்படுத்துவதற்காகும். பிந்தென பிரிவில் இருக்கும் இந்நகரில் தான் இந்த அரசன் பிறந்தான். அது மலைப்பாங்கானது என்று சொல்லமுடியாத சமதரை கொண்டது. அதன் மத்தியில் ஆறு ஒன்று ஓடினாலும் வரண்ட காலநிலை கொண்டது. இப்பிரதேசம் அநேகமாக அடர்ந்த காடுகளாற் போர்த்தப்பட்டுள்ளது. அதில் நிறைய மான்கள் காணப்படுகின்றன. இக்காடுகள் காட்டுவாசிகளின் கோட்டையாக விளங்குகின்றது. இவர்களைப் பற்றி பின்னர் கூறுவேன்.

கண்டியில் இருந்து கிழக்கு நோக்கி, இரண்டு நாள் பயண தூரத்தில் படேலா என்கிற நகரம் உள்ளது. யுத்தத்தின் போது போர்த்துக்கீசப் படைகள் இந்நகரத்தைத் தீயிட்டுக் கொளுத்தி தரைமட்டமாக்கி விட்டனர். அரண்மனை முற்றாகச் சேதமாகி விட்டது. தாதுகோபம் மட்டும் மிஞ்சி இருக்கின்றது. ஆயினும் திருத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊவா[9] மாகாணத்தில் உள்ள பிரதேசமொன்றில் இந்நகரம் இருக்கிறது. இங்கு நல்ல நீர்வளமுள்ளது, நிலம் சமதரையுமன்று, மலைப்பாங்கானதுமன்று, உயரமானது, காடுகள் குறைவு. குடிமனைகள் நிறைய உள்ளன. காடுகள் இல்லாத நிலம் அதிகளவு உள்ளதால் மந்தைகள் மிகுதியாக மேய்கின்றன. இந்த மந்தைகளை மற்ற இடங்களுக்குக் கொண்டு சென்றால் அவைகள் இறந்து விடுகின்றன. இதற்கான காரணம் மர்மமானது. இந்த ஊவா மாகாணத்தைத் தவிர மற்ற இடங்களில் வளரும் ஒரு வகை நச்சுப் பூண்டை இக்கால்நடைகள் மேய்வதால் இவ்வாறு நிகழ்கிறது என்று அநுமானிக்கின்றனர். இந்த நச்சுப் பூண்டைத் தொடுவதோ நுகர்வதோ ஆபத்தானது. இந்தப் பூண்டின் வாசனை அப்போதிக்கரிகடையிலிருந்து வரும் வாசனை போல் இருக்கும். மற்ற மாகாணங்களில் உள்ள மாடுகள் இவற்றின் பக்கத்திலும் செல்லாது. ஊவா மந்தைகளுக்கு இப்பூண்டின் ஆபத்துத் தெரியாது. இம்மாவட்டத்தில் சிறந்த புகையிலை விளைகிறது. அரிசியும் மற்ற பொருட்களை விட மலிவாகக் கிடைக்கின்றது.

ஐந்தாவது நகரம் ஹேவாகட்ட பிராந்தியத்தில் இருக்கும் டிக்கிலிக்கி ஆகும். இது கண்டியின் கிழக்குப் பக்கத்தில் உள்ளது. 1664 ஆண்டு நடந்த அண்ணோ கலவரத்தின் பின்னர் அரசன் நிலம்பே நகரத்தைக் கைவிட்டு இங்கே வாழ்ந்து வருகின்றான். இங்கு அவன் தனது அரச சபையையும் வைத்துள்ளான். இடம் மலைப்பாங்கானதும் பாறைகள் நிறைந்ததாகவும் கட்டாந்தரையாகவும் காணப்படுகின்றது. இப்படிப்பட்ட ஓரிடம் இந்நாட்டில் இருப்பது அருமை. ஆயினும் அரசன் இப்படிப்பட்ட ஓரிடத்தை அரசிருக் கையாக ஏன் தேர்ந்தெடுத்தான் என்ற கேள்விக்கான விடைகளிலொன்று அது நாட்டின் மையத்திலுள்ளது என்பதாகும். மற்றவை இது பாதுகாப்பானது, கலவர காலங்களில் அரண்மனைக்குப் பின்புறமுள்ள பெரிய, உயரமான மலையில் ஒளிந்து கொள்ளலாம் என்பதாகும். இம்மலையின் உச்சியில் மூன்று பட்டணங்கள் உண்டு. வயல்களும் வேறு இருக்கின்றபடியால் சிரமமில்லாமல் காலம் கழிக்கலாம். இம்மலை செங்குத்தானது, பாறைகள், மற்றும் காடுகள் செறிந்தது. பெரும்படையினரிடமிருந்து அரசனைக் காக்கும் தன்மையது.

மேலே குறிப்பிட்டவை தவிர பல சிதைந்த நகரங்கள் இங்கே உள்ளன. அங்கெல்லாம் இருந்து அரசர்கள் இந்நாட்டை ஆண்டிருக்கின்றனர். அவைகள் தங்கள் பெயரையும் சிறிதளவு தடயங்களையும் தக்க வைத்துள்ளன. வடக்கில், அநுராதபுரம்[10] என்னும் நகரில் தொண்ணூறு அரசர்கள் ஆட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்தனர் என்றும், அவர்களின் ஆத்மாக்கள் இன்றும் தங்களுக்கு ஆசி வழங்குகின்றன என்றும், அவர்களின் நினைவாக தாதுகோபங்களையும் கற்றூண்களையும் சிற்பங்களையும் தாங்கள் அமைப்பதாகவும் இங்குள்ளவர்கள் கூறுகின்றனர். இதனால் அரச சபைகளைச் சொர்க்கத்துக்கு அடுத்த நிலையில் வைத்து சிங்களவர்கள் பூசிக்கின்றனர். நாங்கள் தப்பி வரும் வழியில் இங்குள்ள ஆற்றங்கரைக்கு வந்தோம். ஆற்றங்கரைக்கு நெடுக செதுக்கப்பட்ட கற்களையும் கற்தூண்களையும் கற்களையும் பரவுவதற்குரிய கற்பலகைகளையும் கண்டோம். இந்த ஆற்றுக்கு மேலாக மூன்று கற்பாலங்கள் இடிந்து விழுந்த நிலையில் இருப்பதைப் பார்த்தோம். இப்பிரதேசம் மக்கள் இல்லாமல் பாழடைந்து கிடந்தது. அநுராதபுரத்து மக்கள் இடம்பெயர்ந்து கண்டிக்குப் போய்விட்டார்கள். இதனால் கண்டியில் சனப்பெருக்கம் அதிகமாக உள்ளது.

இந்தத் தீவின் மேற்கு பக்கத்தில் உள்ள புத்தளம்[11] பிரதேசத்தில் ஒரு துறைமுகம் உண்டு. இங்கிருந்து அரசனுக்கு உப்பும் மீனும் வழங்கப்படுகின்றது. இங்குள்ளவர்கள் ஒல்லாந்தருடன் சிறிய வர்த்தகம் செய்கின்றனர். ஒல்லாந்தருக்கும் இங்குள்ள முனையில் துறைமுகம் ஒன்றுள்ளதால் அவர்களால் வெளியிலிருந்து வரும் படகுகளைத் தடுக்க முடிகிறது. ஆனால் கிழக்கு பக்கம் மலைகள் நிறைந்தும் காணப்படுவதால், உப்பைக் கொண்டுவர மாடுகளைக் கொண்டு செல்வது சிரமமாக உள்ளது. எனினும் கடவுள் கிருபையால் கிழக்குப் பக்கத்தில் கிட்டவுள்ள இடத்தில் உப்பெடுக்கக் கூடிய இடமொன்று அமைந்துள்ளது என்று இங்குள்ளவர்கள் கூறுகிறார்கள். அவ்விடங்களை லீவவா[12] என்று அவர்கள் மொழியில் அழைக்கின்றார்கள். இங்கு கிழக்கு நோக்கி காற்று அடிக்கும் போது கடல் பெருகுகிறது. லீவவா கடல் நீரால் நிறைகிறது. காற்று மேல் நோக்கி அடிக்கும் போது வறண்ட காலநிலை உருவாகிறது. இதனால் உப்பு அபரிமிதமாக விளைவதால் மக்கள் அதை விற்கிறார்கள். இந்த இடம் எல்லாம் வல்ல இறைவன் அருளால் தங்களுக்கு கிடைத்திருப்பதால் போர்த்துக்கீசர்களோ ஒல்லாந்தர்களோ அதைப் பறித்தெடுக்கமுடியாது என்று சுதேசிகள் கருதுகின்றனர். போர் மற்றும் கலவர காலங்களில் உப்பைப் பெறுவது கஷ்டமாக உள்ளதால் அக்காலங்களில் அது மதிப்புமிக்க பொருளாகக் கருதப்படுகின்றது. இந்நிலைமைகள் ஏற்படும் போது பயன்படுத்துவதற்காக அநேகர் முன்னேற்பாடாக அதைச் சேமித்து வைத்திருப்பார்கள். மலைப்பாங்கான பிரதேசங்களிலும் கப்பல் தரித்து நிற்க முடியாத கரைகளைக்கொண்ட பிரதேசங்களிலும் வாழும் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12844 CC
KOHA JPL
KOHA JPL

கடவுள் தம்மை வஞ்சித்துவிட்டார் என்று கூறுகின்றனர். ஏனென்றால் அவ்விடங்களில் உப்பைப் பெறுவது முயற்கொம்பாகும். பட்டணங்களில், வீதியோரமாக வைத்திருக்கும் தெய்யோ என்னும் கடவுளுக்கு சிறிய அளவிலோ பெரிய அளவிலோ காணிக்கையாக உப்பைச் செலுத்துகின்றனர் என்று கேள்விப்பட்டுள்ளேன். இக்கடவுளின் பெயரும் ஆற்றல்களும் சிங்களவர்களுக்குப் பயத்தை ஊட்டுகிறது. அவர்கள் போர்த்துக்கீசர்களுக்கும் ஒல்லாந்தருக்கும் சேவை செய்வதால் அரசனின் எதிரியாக உள்ளனர். ஆயினும் அவர்கள் அரசனுக்கு எதிராக முற்றுகை மேற்கொண்டால் ஒத்துழைக்க மாட்டார்கள்.

இந்த ராச்சியத்தில் உள்ள நகரங்களையும் முக்கிய இடங்களையும் பற்றி அதிகம் சொல்லிவிட்டதால் நான் இப்போது அங்குள்ள பட்டணங்களைப்பற்றிச் சொல்லத் தொடங்குகின்றேன். அவர்களுக்கு கோயில்கள் அல்லது தேவாலயங்களில் இருக்கும் சிலைகள் முக்கியமானவைகளாகும். அவர்கள் வரிசையாக வீடுகள் அமைத்து, வீதிகளை உருவாக்குவது பற்றி அக்கறை கொள்ளவில்லை. இங்கு ஒவ்வொருவரும், தனது தோட்டத்தைச் சுற்றி கொத்து வேலி அமைத்து, அகழிகளை வெட்டி, மந்தைகள் உட்புக முடியாதவாறு செய்து வாழ்கின்றனர். யாவரும் பட்டணத்துக்கு வந்து போகக்கூடியவாறு இருக்க வேண்டும் என்ற எண்ணம் எவரிடமும் இல்லை. தங்களோடு வர்த்தகம் செய்வோர் மாத்திரம் வந்தால் போதும் என்று நினைக்கிறார்கள். இப்பட்டணங்கள் பெரிதல்ல. சிலவற்றில் நாற்பது ஐம்பது வீடுகள் தான் இருக்கும். ஒரு சிலதான் நூறு வீடுகளைக் கொண்டுள்ளன. சிலவற்றில் எட்டுப்பத்து வீடுகளுக்கும் குறைவாக உள்ளது.

பல வீடுகள் சிதைந்த நிலையிலும் கைவிடப்பட்ட நிலயிலும் காணப்படுகின்றன. இங்கும் அங்குமாக பல பட்டணங்கள் எல்லாவற்றிலும் இந்நிலையே காணப்படுகின்றது. மக்கள் தமது வீடுகளைத் தாமாகவே கைவிடுகின்றனர். இடைக்கிடை அவ்வாறு செய்கின்றனர். அடுத்தடுத்து நோயினால் மரணம் ஏற்பட்டால் தேவதைகளுக்கு வீடுகளை அர்ப்பணித்துவிட்டு அகன்று விடுகின்றனர். சிலவேளைகளில் ஒரு பட்டணத்தைக் கைவிட்டு வேறொன்றுக்கு சென்று வாழ்வதுமுண்டு. தேவதைகள் அந்த இடத்தை விட்டு நீங்கி விட்டது என்பதை நிச்சயித்த பின் போனவர்கள் திரும்பி வந்து மீண்டும் தம் வாழ்க்கையைத் தொடங்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

அவர்களின் தானியமும் அதனை பராபரிக்கும் முறைகளும்

இந்த நாட்டின் பழங்கள், பயிர்கள், மிருகங்கள், பறவைகள், மற்றும் பிராணிகள், கனிப்பொருட்கள் பண்டங்கள் என்பனவற்றைப் பற்றிச் சொல்லத்தொடங்கி, இந்த நாட்டின் உற்பத்திகளையும் கைவினைப்பொருட்களையும் பற்றி விபரிப்பேன். நான் அவைகளைப் பற்றிப் பூரணமாக அறிந்தவன் என்று பாசாங்கு காட்ட விரும்பவில்லை. எனது ஈடுபாடும், நேரமும் அதற்கு ஒத்து வரவில்லை. நான் அவ்விடயங்களின் பிரதான அம்சங்களை எனது ஞாபகத்தில் உள்ளவாறு விபரிப்பேன். நான் முதலில் அவர்களின் பிரதான உணவாக இருக்கும் தானியத்தைப் பற்றிக் கூறுகின்றேன்.

அவர்களிடம் பலவகைத் தானியங்கள் உள்ளன. எல்லாம் எங்களுடையவைகளிலிருந்தும் வேறுபட்டன. நெல் தானியத்தில் பல வகையுண்டு. ஒவ்வொன்றும் விளைய எடுக்கும் காலத்தைப் பொறுத்து அவைகளுக்கு தனித்தனிப் பெயர்கள் உள்ளன. ஒவ்வொன்றின் சுவையும் மாறுபடுகின்றது. சில நெல் ரகங்கள் விளைய ஏழு மாதங்கள் வரை எடுக்கும். அவை மோவி என அழைக்கப்படுகின்றன. ஹௌரல் ரகங்கள் ஆறுமாதமும் ஹெநோரோவல் ரகங்கள் ஐந்து மாதங்களும் பிடிக்கும். ஹெனிற்ரகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைய நாலு மாதமாகும்.பன்கோல் ரகங்கள் மூன்று மாதம் எடுக்கும். எல்லா நெல் வகைகளுக்கும் ஒரே விலைதான் நிலவுகின்றது. குறைந்த காலத்தில் விளைவன புளிப்புச்சுவையுடையவாகவும் குறைந்த விளைவு தருவனவாகவும் இருக்கும். ஏன் அவைகள் விதைக்கப்படுகின்றன? நீண்ட கால ரகங்களை, கூடிய விளைவு தருகின்ற ரகங்களை அவர்கள் ஏன் தேர்ந்தெடுப்பதில்லை? என்று கேள்வி எழலாம். எல்லா நெல் வகைகளும் போதிய நீரை வேண்டி நிற்பன. அதனால் விவசாயிகள் தம் வயலிற் போதிய நீரைத் தேக்கி வைப்பதில் முழுக்கவனம் செலுத்துவர். இதில் அவர்கள் புத்திசாலிகள். விளை நிலத்தைச் செம்மையாக சமப்படுத்தி எல்லா பயிர்களும் அதைப் பெறுமாறு செய்வர். செங்குத்து மற்றும் பாறைகள் மற்றும் துருத்திக்கொண்டிருக்கும் தரையையும் சமப்படுத்தி நீர் சமமாக பரவி நிற்கச் செய்யும் கலையில் அவர்கள் தேர்ந்தவர்கள். அது எவ்வாறு எனில், அவ்வாறான நிலங்களில் மூன்றிலிருந்து எட்டடி அகலத்தில் துண்டுதுண்டாக மேலிருந்து கீழாக ஒழுங்குபடுத்துவர். பின் கொத்தி அத்துண்டுகளுக்குள் இருக்கும் நிலத்தைச் சமமாக்குவர். மேல் துண்டில் மழையினால் பிடிபடும் தண்ணீர் சதா கசிந்து கீழ்த்துண்டுகளை ஈரலிப்பாக்கிக் கொண்டு இருக்கும். சில வேளைகளில் மேல் துண்டுகளின் நீரால் ஒரு போகமே விளையக் கூடியதாக இருக்கும். நீர் கிடைக்கும் அளவைப் பொறுத்து நீண்ட கால மற்றும் குறுகிய கால ரகங்களை அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். நீர் கிடைப்பது தடைப்பட்டால் அவர்களின் விதைப்பு பயன் தராது. நீண்ட காலத்துக்கு நீர் கிடைக்கும் என அவர்கள் எதிர்பார்த்தால் மிகவும் லாபம் தருகின்ற வகைகளைத் தெரிந்து எடுத்து விதைப்பார்கள். இவைகள் அநேகமாக நீண்ட கால ரகங்களாயிருக்கும். அவ்வாறு மழை நிச்சயமில்லாவிட்டால் குறைந்த விளைவு தரும் குறுகிய கால ரகங்களை விதைத்து திருப்தியடைகின்றனர். நீண்ட கால, கூடிய விளைவு தரும் ரகங்களை விதைத்து நட்டமடையாமல் தவிர்த்துக்கொள்கின்றனர். அவர்களுடைய வயல்கள் எல்லாம் ஒரே மாதிரியானவை. அவைகளில் அவர்கள் விதைத்த பின்னர் வயலைச்சுற்றி வேலி போட்டுவிடுவார்கள். முதலில் வயலை அறுவடை செய்தவர் தனது பங்கு வேலியை நீக்கிவிடுவார். அதனால் தாமதித்து அறுவடை செய்ய இருக்கும் வயல்களுக்குக் கால்நடைகளால் ஆபத்தாக இருக்கும். எனினும் இது சட்ட ரீதியானது என அங்கு கருதப்படுகின்றது. இதனைத் தடுக்கும் முகமாக பிந்துகிறவர்கள் விளைவு குறைவாக இருந்தாலும் குறுகிய நெல் ரகங்களை தேர்ந்து விதைக்கின்றனர். ஆகவே அவர்கள் முந்திப்பிந்தி விதைத்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே காலத்தில் அறுவடை செய்கின்றனர். இதனால் கால் நடைகள் புகுந்து தின்றுமிதித்து விடாமல் பயிர்கள் அறுவடை செய்யப்படுகின்றன.

அருவிகளோ, ஆறுகளோ இல்லாத இடங்களில் செயற்கையாக அமைத்த குளங்கள் உள்ளன. இவைகள் மழைத்தண்ணீரை தேக்கி தேவைப்படும் காலத்தில் வழங்குகின்றன. வடக்கு பக்கத்தில் இரண்டு மூன்று அருவிகள் உண்டு. அதன் குறுக்கே பெரிய அணைக்கட்டுகளை வசதியான இடங்களில் அமைத்து நீரைத் தேக்கி தங்களது வயல்களுக்கு பாய்ச்சுகின்றனர். அக்குளங்கள் அரைச்சந்திரன் வடிவில் எழுத்துப்போல் இருக்கும்.ஒவ்வொரு பட்டினத்திலும் இம்மாதிரிக் குளங்கள் ஒன்றாவது இருக்கும். தமது தானிய அளவை தமக்குள்ள களஞ்சியங்களின் அளவைக் கொண்டே தீர்மானிப்பர்.

இந்த அணைகளைக் கட்டிய புராதன மனிதர்களுக்கு இது இலகுவான காரியமாக இருந்திருக்காது. அப்படிப்பட்ட அணைகள் அநேகம் இங்குண்டு. சில இரண்டு மூன்று பாகம் உயரம் கொண்டவனவாகவும் ஒரு மைல் வரையில் நீளம் கொண்டவனமாகவுமுள்ளன. எல்லா அணைகளும் ஒரே அளவானதல்ல. அவைகள் இங்கு வளரும் மரங்களை விட உயரமானவைகளாக இருப்பதால் மலைகள் போலத் தோன்றுகின்றன. அணையில் படிப்படியாக வெட்டி சிறிதுசிறிதாக நீரைப் பாய்ச்சுவார்கள். வறண்டகாலத்தில் குளம் வற்றிவிடும். மக்கள் எந்த நேரத்திலும் குளத்தில் தண்ணீர் வற்றிப்போகுமோ என்ற கவலையில் சதா ஆழ்ந்திருப்பர். இந்தக் குளங்களை ஆழமாகத் தோண்டுவதால் அவர்களுக்கு பிரயோசனம் இல்லை. அவை வற்றிவிட்டால் எருமைகளைக் குளத்தில் இறக்கி நீரை உயர்த்திப் பாய்ச்சுவார்கள். அதுவும் முடியாவிட்டால் கரண்டி போன்ற உபகரணமொன்றால் மண்டி நீரை வயல்களுக்கு இறைப்பர். இக்குளங்களில் முதலைகள் உள்ளன. குளம் வற்றும்போது அருகில் உள்ள காடுகளுக்குச் சென்று வாழுகின்றன. மழை பெய்யும் போது மீண்டும் குளங்களுக்கு வரும். இவைகள் சின்ன முதலைகளாதலால் மனிதர்களைப் பிடிப்பதில்லை என்றாலும் அவர்களுக்கு இவைகள் மீது பயம் இருக்கவே செய்கின்றது.

நான் இதுவரையும் விளைவதற்கு நிறைய நீர் தேவைப்படும் நெல்லினங்களைப் பற்றியே கூறினேன். இன்னொரு வகை நெல் இனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. அது விளைய முன் சொன்னவற்றை போல் நீர் தேங்கி நிற்கத் தேவையில்லை. இந்நெல் இனம் அபரிமிதமாக நீர் இல்லாத இடங்களிலும் மழை நீரை மாத்திரம் கொண்டு விளைய வல்லது. இது மற்ற நீரில் விளையும் நெல்லினங்களுக்கு சமமாகவே கருதப்படுகின்றது. ஆயினும் மணத்திலும் சுவையிலும் சற்று வித்தியாசப்படுகின்றது.

நீர் அதிகம் தேவைப்படும் நெல்லினங்களின் விதைப்புக் காலம் ஜுலை, ஆகஸ்ட் மாதங்களாகும். ஏனென்றால் இக்காலத்தில் தான் நன்கு நீர் கிடைக்கும். அறுவடைக் காலம் பெப்ரவரி மாதமாக இருக்கும். ஆனால் இந்த வகை நெல்லை எக்காலத்திலும் விதைக்கலாம். இவற்றுக்கு குறிப்பிட்ட பருவம் கிடையாது.

அவர்கள் விதைக்கின்ற போதும் அறுவடை செய்கின்ற போதும் ஒருவருக்கொருவர் ஒத்தாசை புரிவர். ஒருவருக்கு எத்தனை வேலை நாட்கள் மற்றவர் உதவுகிறாரோ, அத்தனை நாட்கள் அவர் மற்றவருக்கு உதவுதல் வேண்டும். இதை அற்றம் என அழைப்பர். முழங்கை போன்ற வடிவுடைய உபகரணத்தால் அவர்கள் வயலை உழுவர்.

அவர்கள் தானியத்தை விதைப்பதற்கு முன்னர் நிலத்தை எவ்வாறு தயார்ப்படுத்துகின்றனர் என்பது சுவாரஸ்யமான விடயம். இதை விபரிப்பதற்கு முன்னர் அதற்கு பயன்படுத்துகின்ற கருவிகளைப் பற்றிச் சொன்னால் இலகுவாக இருக்கும். நான் முன்னர் உழுவதற்குப் பயன்படும் கருவிகளைப் பற்றி சொல்லியிருக்கிறேன். அது ஒரு மனிதனின் புயத்தை விடப் பெரியது. ஒருவர் ஒரு முனையைப் பிடித்திருக்க மற்ற முனை உழுவிப்போகும். இம்முனை இலகுவிற் தேய்ந்துபோகாமலிருக்கக் கனமான இரும்புத்தகடு ஒன்றைப் பொருத்தி இருப்பார்கள். எருமைகள் இரண்டு ஏரை இழுத்துக்கொண்டு போகும்.

இந்த நாட்டுக்கு இந்தக் கலப்பைகள் பொருத்தமானவைகளாகும். இவைகள் இலேசானவைகளாதலால் சேற்றிலே புதையாது. இலகுவாக திரும்பக் கூடியவை. வரைவைகள் சிறிதாக இருந்தால் மாடுகள் இலகுவிலே திரும்பாது. எங்களது கலப்பைகள் போல இவைகள் புல்லிற் புதையாது. இவர்களது நோக்கம் மண்ணைப் புரட்டிப் போட்டுப் புல்லை நீரில் அழுக வைப்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைப்பதற்கு முன்னர் அவர்கள் இருதடவை உழுவார்கள். அதற்கு முன்னர் நீர் பாய்ச்சுகின்றனர். இதனால் நிலம் நன்கு நெகிழ்ந்து கொடுக்கக் கூடியதாக இருக்கும். ஒரு தடவை உழுத பின் வரம்பு கட்டுகின்றனர். வயல் சேறாக வரம்பு கட்டுவதற்கு இலேசாக இருக்கும். இந்த வரம்பு நடப்பதற்கு மட்டுமல்லாது நீரைப் பற்றி பிடித்து வைத்திருக்கவும் செய்கின்றது. இதன் மேலால் நீர் பரவி ஓடும். இந்த வரம்புகள் வழவழப்பாகச் சாந்து பூசியது மாதிரி இருக்கும். இதன் பின்னர் சிறிது காலம் நீர் நிறைத்து வயலை வைத்திருப்பார்கள். பின்னர் இரண்டாவது உழவு நடைபெறும். இல்லாது போனால் எருமைகளை விட்டு மிதிப்பார்கள். வயல் இன்னும் சேறாக மாறும்.

விதை நெல்லை ஒரு இரவு பூராகவும் தண்ணீரில் ஊற வைத்திருந்து பின் அதை வடித்து, பரப்பி இலைகளால் மூடி ஐந்து அல்லது ஆறு நாட்கள் வைத்திருந்து அதை முளைக்கச் செய்து, பின்னர் விதைத் தானியத்தை ஈரமாக்கி முளையும் தாளும் வரும்படி செய்வர். நான்கு அல்லது ஐந்து அடி மரப்பலகையின் நடுவில் ஒரு நீண்ட தடியைப் பொருத்தி அதை இரு எருமை மாடுகளால் வயல்களுக்குள் இழுக்கச் செய்வர். இதனால் வயல் மட்டமாவதோடு அழுகி இருந்த புல்லுகளும், களைகளும் சேற்றிற் புதையுண்டு போகும். இந்த நேரத்திலும் வயலில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் திட்டுகள் தெரியும். அதனை ஓரடி அல்லது அதற்கும் குறைவான நீளமுள்ள மரப்பலகையில் ஒரு தடியை பொருத்திய உபகரணமொன்றால் தட்டி மட்டப்படுத்துவர். இதனாற் சிறுகுழிகளிலே தேங்கி நிற்கும் நீர் வழிந்தோடும். மழை பெய்தாலும் அது விதைகளை இழுத்து ஒன்றாகத் திரட்டிக் கொண்டு குழிக்குள் குவிக்காது. மேலும் குழிகளுக்குள் தேங்கி நிற்கும் நீரால் முளைகள் அழுகிப்போவதும் தடைப்படும். இதன் பிறகு முளைகளை விதைப்பார்கள். இறைச்சி மேலால் உப்பு தடவுவது போல் அவர்களின் விதைப்பு இருக்கும்.

பின்னர் நிலத்திலிருந்து மூன்று, நான்கு அங்குல உயரம் நெற்பயிர் வளரும் வரை பயிருக்குத் தண்ணீர் விட மாட்டார்கள். நீர் போக வரம்புகளில் இடைவெளி இருக்கும். அதனை மூடி விடுவார்கள். இதனாற் பயிர்கள் ஊட்டம் பெறுவதோடு களைகளும் அழிகின்றன. அவர்கள் தமது வயலை தோட்டத்தைப் போல சுத்தமாக வைத்திருப்பார்கள். ஒரு சாண் உயரத்திற்கு பயிர்கள் வளர்ந்த பின் பெண்களை விட்டு வளரும் களைகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடுங்கி எடுப்பதோடு அடர்த்தியாக இருக்கின்ற பயிரையும் பிடுங்கி ஐதாக அல்லது வெறுமையான இடங்களில் நடுவர். வயலில் தண்ணீர் வரம்பில் வழிந்தோடும் வண்ணம் நெற்கதிர் பழுக்கும் வரை இருக்கும். இதன் பிறகு நீரைத் திறந்து விட்டு அறுவடைக்கு வயலைத் தயாராக்குவர். அவர்கள் வயலுக்கு எருப் போடுவதில்லை. ஆனால், அதற்கு பதிலாக அவர்களின் உழவு குறையும். நீரில் வயலை ஆழ்த்தி வைப்பதும் பயிருக்கு ஊட்டம் அளிக்கின்றது.

ஆங்கிலேயர்களின் முறைகளுக்கு அடுத்துச் சிறந்ததாக அவர்கள் அறுவடை முறை உள்ளது. நான் முதலில் சொன்னதைப் போல அவர்கள் ஒரே நேரத்தில் விதைத்து ஒரே நேரத்தில் அறுவடையும் செய்வர். எல்லோரும் ஒன்று பட்டு ஒரு மனிதனின் வயலில் அறுவடை செய்கின்றனர். பின்னர் அடுத்த மனிதனின் வயலில் வேலை செய்கின்றனர். இவ்வாறு ஒவ்வொருவரின் வயலிலும் வேலை செய்கின்றனர். மற்றவர்கள் வந்து வேலை செய்யும் போது வயற் சொந்தக்காரனின் கடமை அவர்களுக்கு வேண்டிய உணவு மற்றும் பான வகைகளை வழங்குவதாகும்.

பக்கத்தில் உள்ள வசதியான இடமொன்றைத் தேர்ந்தெடுத்து இருபது அல்லது இருபைத்தைந்து அடி சுற்றளவுள்ள களம் ஒன்றைத் துப்பரவாக்கிக் கொள்வர். அங்கே குறிப்பிட்ட சடங்குகளை செய்வர். சாம்பல், பூ மற்றும் கொத்துக்களால் அலங்கரிப்பர். கொஞ்சம் வெற்றிலை,பாக்கு சில வகை மரத்துண்டுகள் இரும்பு மற்றும் சங்கு போன்றவைகளை எடுத்து ஒரு குழியில் இடுவர். அதன் மேல் ஒரு கல்லை வைப்பர். பெண்கள் அறுவடை செய்த கதிர்களை கட்டி தலையில் வைத்து சுமந்து மூன்று முறை களத்தை வலம் வந்து நடுவில் போடுவர். இதன் பின் கட்டுகளை போட்டு அடுக்கி வைக்கற்போர் வைப்பது போல் ஒழுங்குபடுத்துவர். இவ்வேலைகளுக்காகவும் களை பிடுங்குவதற்கும் பெண்கள் உள்ளனர். அவர்களுக்கு வரப்பொல் என்று பெயர். அவர்களுக்கு ஏற்ற கூலி கொடுக்கப்படும்.

அவர்கள் கதிரை அடித்துத் தானியத்தைப் பிரிப்பதில்லை. மாடுகளை உபயோகித்துப் பிரிக்கின்றனர். இது விரைவானதாகவும் இலகுவானதாகவுமுள்ளது. அவர்கள் ஒரு நாளில் குறைந்தது நாற்பது, ஐம்பது புசல் நெல்லை ஒரு அரை டசின் மாடுகளைக் கொண்டு பிரித்தெடுப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் உரலில் அல்லது பாறையில் உள்ள குழியில் நெல்லைப் போட்டு அதன் மேற் தோலை அல்லது உமியை நீக்குவர். சில வகை அரிசி நெல்லை முதலில் அவித்து பின்னர் உமிநீக்கி எடுப்பர். அரிசியாகிய பின் மீண்டும் ஒரு முறை குற்றி எடுப்பதும் உண்டு. இவ்வகை அரிசி தூய வெண்மை நிறமாக இருக்கும்.

அரிசியை விடக் குறைந்த தரத்தில் உள்ள தானியங்கள் பலவுண்டு. பலருக்கு வருடத்தில் அரைவாசி காலத்தில் அரிசி தீர்ந்து விடும். அக்காலத்தில் இவைகளை உபயோகிப்பர். அவைகளில் ஒன்று குரக்கனாகும். அது கடுகு மணி போன்றது. இதை அரைத்து மாவாக்கி எடுக்க ஒரு உபகரணத்தை உபயோகிப்பர். இது வட்டமான இரு கற்களாலானது. மேல் கல்லில் ஒரு தடி பொருத்தப்பட்டிருக்கும். கீழ்க் கல்லில் பொருத்தப்பட்டிருக்கும் மரத்துண்டு மேற்கல்லில் உள்ள தடியை பிடித்து பிடித்து சுற்ற மா அரைபட்டுக் கீழே வழியும். இம்மாவை உணவுப்பண்டங்கள் செய்யப் பயன்படுத்துவர். பலவகை குரக்கன்கள் உண்டு. சில மூன்று மாதத்தில் விளைவன. சிலவற்றுக்கு நான்கு மாதங்கள் பிடிக்கும். நிலம் நல்லதென்றால் இதன் விளைவு அதிகமாக இருக்கும். அது மலைப் பாங்கான நிலத்திலும் சமதரையிலும் விளையும். இதை விட இன்னுமொரு தானியம் உண்டு. அது[13] தன்னா என்று அழைக்கப்படும். வடக்குப் பக்கத்தில் உள்ளவர்கள் இதனை அவ்வளவாக விரும்புவதில்லை. இது முன் சொன்ன தானியத்தை விடச் சிறியதாகிலும் நன்கு விளைவு தரக்கூடியது. ஒரு விதையிலிருந்து இரண்டிலிருந்து ஐந்து தண்டுகள், நிலத்தின் தன்மையைப் பொறுத்து வெளிப்படும். ஒரு தண்டு ஒரு கதிரைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு தண்டிலும் ஆயிரம் மணிகள் வரும். எந்த உணவுத் தானியத்தையும் விட இந்த உலகத்தின் உணவுத்தேவைக்கு பொருத்தமான தானியம் அதுதான் என்று நினைக்கின்றேன். அது மண்ணிலிருந்து இரண்டு அல்லது இரண்டரை அடி உயரம் வரை வளரும். முற்றி விளைந்து விட்டால் பெண்கள் போய் அதன் தொப்பையைக் கலைந்து கதிரை எடுத்துக் கூடைக்குட் போட்டு எடுத்து வருவர். இதுதான் இதன் அறுவடை. இதைப்போல்தான் குரக்கன் அறுவடை என்றாலும் கதிரைக் கத்தியால் அறுக்க வேண்டும். இந்த தன்னாவை பானையில் போட்டு வறுக்க வேண்டும். கோது நீக்க உரலில் இட்டுக் குத்த வேண்டும். இது அரிசியைப் போன்றதுதான். நீர் ஊற்றி அவிக்கும் போது அரிசியை விடப் பெரிதாக வீங்கும். சுவை பரவாயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் உலர்ந்த தன்மை கொண்டது. இதன் நிறம் பார்ப்பதற்கு இதமான மஞ்சள் நிறமாகும். இது சாதாரணமாக நான்கு மாதத்தில் விளையும்; மூன்று மாதத்தில் விளையும் ரகங்களுமுண்டு. வரண்ட நிலத்தில் வளரும் ரகங்களில் வெற்சொல் (vetches) போன்ற வகையுண்டு. இதனை மைங்க் என்று அழைப்பார். ஓம்ப் என்னும் ஒரு வகையை அவித்து அரிசியோடு உண்ணலாம். இத்தானியத்தைப் பாகம் செய்யும் முறை புதுமையானது. இதனைக் குடிப்பது போற் சாப்பிட வேண்டும். சில வேளைகளில் வயிற்றிலே குமட்டலை ஏற்படுத்தும். இதனை விதைத்தால் எல்லாம் முளைக்காது. ஆகவும் முதிர்ந்த மணிகள் நிச்சயம் முளைக்காது. மினெரெ ரகம் சிறியது. ரொலா ரகத்தில் எண்ணெய் எடுத்துக் கழிம்பாக உபயோகிப்பர். சில வேளைகளில் இதை வறுத்து வெல்லத்துடன் கலந்து உண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04

பழங்களும் மரங்களும்

பழங்களை இங்குள்ளவர்கள் ஊட்டமிக்கதாகவும் சிறந்த உணவாகவும் கருதுகிறார்களோ என்னவோ, அவற்றிற் பல வகைகள் இங்கே உள்ளன. அவைகளை உண்பது மகிழ்ச்சியானது. எனினும் அவைகளை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. அவர்களின் நோக்கம் வயிற்றை நிரப்புவதாகும்; அதை எதைக் கொண்டாவது நிரப்பிவிடுதல் வேண்டும். இதற்காகத் தானியத்துடன் திருப்திப்பட்டுக்கொள்வர். அதனாலே தானியங்களில் மாத்திரம் கவனம் கொள்கின்றனர். பழங்கள் பழுத்து விழுந்து அவைகளின் விதை பரவி, இயற்கையாக முளைக்கின்றன. இந்தியாவிலுள்ள பழவர்க்கங்கள் எல்லாம் இங்கும் உண்டு. இவைகளைப் பழுப்பதற்கு முன் பறித்து அவித்துக் கறியாக்கி விடுவர். கறி என்பது போர்த்துக்கீச மொழிச் சொல்லாகும். இது அரிசிச் சோறுடன் கலந்து சாப்பிடப் பயன்படுவது. சாதாரண பழங்களை விடச் சிறந்த பழங்களை எங்கேயாவது கண்டால், நாட்டின் உத்தியோகத்தர்கள் அரசனின் பெயரை எழுதி ஒரு நூலில் கட்டி மூன்று முடிச்சு போட்டுவிடுவர். இதை யாரும் தொடமாட்டார்கள். அதன் சொந்தக்காரன் கூட அதை தொடமாட்டான். அதைத் தொட்டவருக்கு கடுமையான தண்டனை கிடைக்கும். அவைகள் நன்கு பழுத்தவுடன் அரசனுக்கு அனுப்புவதற்காக வெள்ளைத்துணியாற் சுற்றி அப்பிரதேச ஆளுநரிடம் சமர்ப்பிப்பர். ஆளுநர் அவைகளில் எவ்வித பழுதும் குறைபாடுகளுமில்லை எனக் கண்டால், மீண்டும் வெள்ளைத் துணியாற் சுற்றி, எடுத்துக் கொண்டு சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனுக்குப் பரிசளிப்பார். இதற்காக அந்த பழச்சொந்தக்காரனுக்கு எந்த வெகுமதியும் கிட்டாது. அந்தச் சொந்தக்காரன் நேரடியாக எடுத்துக் கொண்டு போய் காட்டி விலை பேசலாம்தான். ஆயினும் இவ்வாறு ஒரு போதும் நடப்பதில்லை. இதன் காரணமாகத்தான் மக்கள் தங்கள் தேவைக்கு அதிகமான மரங்களை நாட்டுவதில்லை போலும்.

கமுகு (Bettle - nut) அவர்களிடமுள்ள முக்கிய மரமாகும். இந்த மரங்கள் தீவின் தெற்கு மேற்குப் பக்கத்தில் மாத்திரம் வளருகிறது. இது காடுகளில் வளருவதில்லை. அவைகள் பட்டினங்களில் மாத்திரம் வளர்கின்றன. காடு மாதிரி ஒரு மனிதனின் இடத்துக்கும் மற்ற மனிதனின் இடத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் வளர்கிறது.ஆயினும் பாறைகள்,மற்ற மரங்கள், திட்டுகள் என்பனவற்றைக் கொண்டு தனக்குச் சொந்தமான காணியை ஒருவர் எளிதாக அடையாளம் கண்டு விடுவார். மரத்தில் இருந்து பழுத்துவிழும் பழங்கள் தானாக முளைக்கத் தொடங்கும். அவைகள் நேராகவும், உயரமாகவும் வளரும். அவைகளிற் சில ஒரு மனிதனின் காலை விடத்தடிப்பானவை. பழங்கள் கொத்து கொத்தாக அதன் உச்சியிலே பழுக்கும். பார்ப்பதற்கு அழகாகத் தோன்றும். பழுத்த பழங்களைப் பொறுக்கி அவைகளின் மேல்தோல் அழுகும் வரை நீரில் அமிழ்த்தி வைத்து, பின்னர் எடுத்துக் காய வைப்பர். இந்த மரம் 500,1000,1500, வரையில் பழங்களை தருகின்றது. மாடுகளை கொண்டு மிதித்து தோலை அகற்றுவதுமுண்டு. அது விரைவானதும், இலகுவானதுமான வழியாகும். ஒரு அரை டசின் மாடுகளைக் கொண்டு ஒரு நாளைக்கு நாற்பது, ஐம்பது புசலை வெளியாக்கலாம்.அவை வருடத்திற்கு ஒரு முறைதான் காய்க்கும். ஆனால் சாப்பிடுவதற்கு தட்டுப்பாடு இல்லாமல் யாவருக்கும் கிடைக்கின்றது. அவைகளின் ஓலைகள் ஐந்து ஆறு அடி நீளத்தில் தென்னை மரத்தின் ஓலைகள் போன்றதாயிருக்கும். பறவைகளின் இறகு போல நடுத் தண்டில் ஒட்டியிருக்கும்.சிங்களவர்கள் அதை இலைகள் என்றும் அழைக்கிறார்கள். அவ்வோலைகள் பழுத்து வருடத்தில் எந்த நேரமும் விழுந்து கொண்டிருக்கும். மரத்தோடு ஒட்டியிருக்கும் இலையின் பாகத்தில் பட்டை போன்ற ஒரு அமைப்பு ஒன்றுண்டு. அது மொட்டை அல்லது பூவை மூடியிருக்கும். மொட்டு வளரும் போது அது தானாக வழி விடும். அந்த பட்டையும் அதனோடு இணைந்த இலைகளும் கூந்தலும் பழுத்துவிழும். இந்தப் பட்டை தோல் போன்றது. இந்த நாட்டு மக்களுக்கு பல வகைகளில் அது பயன்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சோறு சாப்பிடுவதற்குரிய ஏதனம் போன்றும் பிரயாணம் போகும் போது அவர்களின் உணவைக் கொண்டு போவதற்குரிய உபகரணமாகவும் திரவ பதார்த்தங்களான தண்ணீர், எண்ணெய் போன்றவற்றை வைத்திருக்கக் கூடிய பாத்திரமாகவும் உபயோகிக்கப்படுகிறது. மரத்தை பொறுத்து பெரிதாகவும் சிறிதாகவும் அது இருக்கும்.

இந்த நாட்டிற் பிரயாணம் செய்தால் தங்குவதற்குரிய விடுதிகள் இல்லை. அவரவருக்கேற்ற வசதிப்படி பிரயாணம் செய்வர். அப்போது கமுகு மரத்தின் பட்டைகளால் ஆன உபகரணத்தில் தமக்குத் தேவையான உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வர். இந்த மரத்தின் நடுவில் சோற்றுப் பகுதி உண்டு. மற்றப்படி இது உறுதியான கடினமான மரமாகும். இதனை அவர்கள் வீடுகளுக்குரிய சாலைகளாகவும், வேலிக்கட்டைகளாகவும் உபயோகிப்பர். இந்த நாட்டில் பணப்புழக்கம் அவ்வளவாக இல்லை. ஆனால் சோழ மண்டல (Coromandel) கடற்கரைக்கு ஏற்றுமதிக்காக கொண்டு செல்லும் பிரதான பண்டமான இதனைக் கொண்டே மற்றப் பண்டங்களை மதிப்பிடுகின்றனர். நான் இந்த நாட்டுக்கு வந்தபோது 200000 கொட்டைகள் ஒரு டொலராக மதிப்பிடப்பட்டன. கொட்டைகள் எல்லாம் அநேகமாக ஒரே மாதிரியானவை. ஆனால் சிலவற்றைப் பச்சையாக உட்கொண்டால் மதுவருந்தியது போன்று மயக்கமும் கிறுகிறுப்பும் ஏற்படும்.

அடுத்து முக்கியமானது பலாப்பழமாகும். இங்கு வாழ்பவர்கள் அதை இளமையாக இருக்கும் போது பொலோஸ் என்றும் கரும் காயாக இருக்கும் போது கொஸ் என்றும் பழுத்தவுடன் வரக்கா, அல்லது வெல்லாஸ் என்றும் கூறுகின்றனர். வரக்கா(வருக்கன்) பழம் கடினமானது. ஆனால் வெல்லஸ்(கூளன்) மென்மையானது. ஆனால் இரண்டு மரங்களும் பார்வைக்கு ஒன்று போலவே தெரியும். ஆயினும் அவைகள் வித்தியாசமான மரங்கள். இவைகள் மக்களுக்கு பெரிதும் உதவுகின்றன. அவர்களின் உணவில் அவைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. அவைகள் பெரும் மரமாக வளருகின்றன. பழங்கள் பெரிய பாண் போன்று பச்சை நிறத்தில் இருக்கும். இவைகளில் கொட்டைகள் உண்டு. அவற்றை சிங்களவர் முட்டைகள் என்பர். பழுத்து நிலத்தில் விழுந்த கொட்டைகள் வெள்ளரிப் பழத்தின் விதைகள் போலச் சிதறிக்கிடக்கும். அவர்கள் வழமையாகப் பழுப்பதற்கு முன்னர் அதைப் பறித்து அதனில் துளையிட்டு அது தமது உபயோகத்திற்குத் தயாராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

இருக்கிறதா என்று பார்ப்பர். அவ்வாறிருந்தால், துண்டுதுண்டாக வெட்டி, அவித்துச் சோற்றுடன் சேர்த்துத் தமது வயிற்றை நிரப்புவர். நாங்கள் சிவப்பு முள்ளங்கி அல்லது முட்டை கோஸைச் சாப்பிடுவது போல் அவர்கள் அதைச் சாப்பிடுவார்கள். சுவையும் மணமும் பின்சொன்னது போல் இருக்கும். ஒரு காய் ஆறு அல்லது ஏழு மனிதர்களுக்குப் போதுமானது. காய்கள் பழுத்தால் மிகவும் இனிப்பாக, சாப்பிட இதமாக இருக்கும். கொட்டைகளின் சுவையும் மணமும் கசுக் கொட்டை போல் இருக்கும். ஏழை மக்கள் பிரயாணம் போகும் போது அவர்களது உணவுப் பையில் கட்டாயம் இக்கொட்டைகள் இருக்கும். அவர்கள் இதனை அவித்தோ, வறுத்தோ உண்பர். அவர்களின் அடுப்பு அருகில் அவைகள் குவியலாக இருக்கும். ஒரு பழத்திற் சராசரியாக மூன்று பிற்கள் (Pits) அல்லது இரண்டு குவாட் (Quarts) நிறையுடைய கொட்டைகள் இருக்கும். இந்த பழத்தை வெட்டும் போது தார் போன்ற பதார்த்தம் வெள்ளை நிறத்தில் வெளிவரும், இது ஒட்டும் தன்மை வாய்ந்தது. பிள்ளைகள் இதனை எடுத்து கோலா அல்லது பிளொட், கொரப் என்னும் சிறிய பறவைகளைப் பிடிக்கப் பயன்படுத்துவர். சிலர் நெல்லிப் பூவுடன் இதனைக் கலந்து முட்டை போலச் சாப்பிடுவர்.

மற்றொரு பழம் ஜம்போவாகும். நான் இந்தியாவில் எப்பாகத்திலும் இதனைக் காணவில்லை. இதனுடைய சுவை அப்பிள் மணத்தின் சுவையை நிகர்த்து வாய்க்குச் சுவையாகவும் சாறு நிரம்பியதாகவுமிருக்கும். ஆனால் இது உடலுக்கு சத்து தருவதில்லை. கண்ணுக்கு குளிர்ச்சியான வெள்ளை நிறத்திலும் நிறம் தீட்டியது போல் சிவப்பு நிறத்திலும் இப்பழம் இருக்கும்.

காடுகளில் பலவகைப் பழங்கள் உண்டு. மர்ரே பழம் போலவும் செர்ரி பழம் போலவும் அவைகள் தோற்றத்திலும் சுவையிலுமுள்ளன. டொங்கஸ் பழம் கறுத்த, செர்ரி பழங்களை ஒத்தது. அம்பலோ பார்பெரியைப் போன்றது. காரோலோ கபெலா, காபெலா பூக்கா, பொல்லா போன்றன பிளம்ஸை போன்று மிகவும் சுவையானவை. பரடிங்கே எங்கள் பியர் பழத்தை ஒத்தபழம்.

வாழைப்பழத்தில் பல வகையுண்டு. அவைகள் எல்லாம் சுவையிலும் பெயரிலும் வித்தியாசப்படுகின்றன. அரிய இனிப்பு, தோடைகள், புளிப்புத் தோடைகள், எலுமிச்சை வகைகள், இரண்டு பேரின் கைமுஷ்டியைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பெரிய அளவு நாரத்தம் பழங்கள், மாம்பழத்தில் அநேகம் வகைகள் அவர்களிடம் உள்ளன. எங்களது லெமன் வகைகள் அவர்களிடமில்லை. இக்கனி வகைகளின் மீது அரசன் பெரு விருப்புடையவன். தீவின் பல பாகங்களிலுமிருந்து அவைகள் அவனுக்கு அனுப்பப்படுகின்றன. அன்னாசி வகைகள், மாதுளம் பழங்கள், கறுப்பு வெள்ளைத் திராட்சை பழங்கள் மற்றும் கரும்பு வகைகள் அங்கேயுள்ளன.

நான் இங்கே குறிப்பிடத் தவறக் கூடாத மூன்று வகை மரங்கள் உள்ளன. அவைகள் உண்ணக்கூடிய பழங்களைத் தருபவை அல்ல. இருப்பினும் ஒன்றின் இலைகளும் அடுத்ததன் சாறும் மூன்றாவதின் பட்டையும் மிகவும் பிரபல்யமானவை; பயன் மிக்கவை. முதலாவது தழைப்பத்து மரம். அதன் இலைகள் படகின் பாய் போன்று பெரிதாகவும் அகலமாகவுமிருக்கும். இது மக்களுக்கு மிகவும் பிரயோசனமானவை. ஒரு இலை பதினைந்து அல்லது இருபது பேரை மழையில் நனையாது காக்கும். ஆயினும் பெண்களின் விசிறி போல மடித்து வைக்கலாம். அப்போதும் ஒரு மனிதனின் புயத்தை விட பெரிதல்ல. இந்த இலைகள் காய்ந்தால் உறுதியாக இருக்கும். சிலர் இதனை வெட்டித் துண்டுகளாக்கி எப்போதும் தம் கையில் வைத்திருப்பார்கள். இதனைத் தலையிற் பிடித்துப் பிரயாணம் செய்தால் மரங்களுக்குக் கீழே நடந்து செல்வது போல் இருக்கும். படைவீரர்கள் மழையில் நனையாமல் இருக்க தம்முடன் எடுத்துச் செல்வர். அவர்கள் கூடாரமடித்து தங்கவும் இது உதவுகிறது. இந்தக் கோவணம் கட்டும் எளிய மக்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் வழங்கிய கொடை என்று இதனைக் கூறலாம். நான் இங்கிலாந்துக்கு வரும் போது ஒன்றைக் கொண்டு வந்தேன். மரத்தின் உச்சியில் இவ்விலைகள் காணப்படுகின்றன. இதன் வாழ்வின் கடைசி வருடம்தான் காய்த்து பூக்கும்; பூ மஞ்சள் நிறமாக மனோகரமாகத் தோன்றும். பூக்களிலிருந்து உறுதியான வட்டமான காய்கள் வெளிவரும். அவைகள் பெரிய செர்ரி பழம் அளவு இருக்கும். ஒரு மரம் நாடு பூராகவும் நாட்டக் கூடிய விதைகள் தரும். இந்த மரம் வீட்டின் பக்கத்தில் இருந்தால் அதில் உள்ளவர்கள் அதன் மணத்தை சகிக்க மாட்டார்கள். இதனால் அதனைத் தறித்து அகற்றி விடுவர். இந்த மரத்தைப் பூப்பதற்கு முன் வெட்டினால் அதன் சோற்றுப் பகுதி சாப்பிடுவதற்கு இனிப்பாக இருக்கும். சிலர் உரலிற் போட்டு இடித்து மாவாக்கிப் பணியாரங்கள் செய்வர். இதன் சுவை வெள்ளைப் பாண் போன்றது. அறுவடைக்கு முன் அவர்களுக்குத் தானியத்தை போன்று பயன்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த மரம் கித்துள். இது நேராகவும் உயரமாகவும் வளர்கிறது. ஆயினும் உயரம் தென்னை மரத்தை விடக் கூடியதல்ல. முன்னர் குறிப்பிட்ட மரத்தைப்போல் இம் மரத்திலும் நடுவில் சோற்றுப்பகுதியுண்டு. இது ஒரு வகை திரவத்தைத் தருகிறது. ரெலிக்கி என அழைக்கப்படும் பானமானது அவ்வளவாக இனிக்காது; ஆனால் நாவுக்கு இதமானது. உடம்புக்கு ஊட்டம் தர வல்லது. அவர்கள் ஒரு நாளைக்கு இரண்டு தரம், நல்ல மரம் என்றால் மூன்று தரம், இதனை மரத்தில் ஏறி இறக்குவார்கள். ஒரு சாதாரண மரம் ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு கலன் பானத்தைத் தரும். இதைவிட கூடியோ குறைந்தோ தரும் மரங்களும் உண்டு. இந்தப் பானத்தை காய்ச்சினால் கபில நிற வெல்லம் வரும். அவர்கள் தங்கள் திறமையை நன்கு பயன்படுத்தினால் வெள்ளை நிற வெல்லத்தைப் பெற முடியும். இந்த மரம் முழு வளர்ச்சியடைகிறபோது இதன் உச்சியிலிருந்து பாளை வெளிவருகிறது. இந்தப் பாளையை வெட்டியே இந்தத் திரவத்தைப் பெறுகின்றனர். அதைத் வெட்டாமல் விட்டால் அதிலிருந்து காய்கள் வெளிவந்து பழுக்கும். இதை நாட்டுவதற்கு மாத்திரமே உபயோகிக்கலாம். இந்த மொட்டை வெட்டி அதனுடன் உப்பு,கடுகு, எலுமிச்சைச் சாறு, வெள்ளைப் பூடு மற்றும் குறித்த சில இலைகளைப் போட்டு ஒரு இடத்தில் வைப்பர். இதனால் இது முதிராது. ஒவ்வொரு நாளும் பாளையின் நுனியில் ஒரு துண்டை வெட்டி எடுக்க அதிலிருந்து திரவம் வடியும். தொங்கவிட்டிருக்கும் பானையிற் சேரும்.

இதனுடைய இலைகள் கமுகு மரத்தின் இலைகளை ஒத்தன. தோல் கடினமானது; உறுதியானது; இதைப் பயன்படுத்திக் கயிறு திரிப்பர். கயிறு வயர் போன்று உறுதியாக இருக்கும். இந்த மரம் வளர வளர இலைகளை உதிர்த்துக்கொண்டே இருக்கும். மரம் முழு வளர்ச்சியடைந்தவுடன் இலைகள் பல வருடங்களுக்கு உதிராது. அவைகள் மீண்டும் விழத்தொடங்கும் போது புதிய இலைகள் மீண்டும் தோன்றாது. உச்சி மொட்டு முதிர்ந்தவுடன் மரமும் சுருங்கத் தொடங்கும். அதிலிருந்து வெளிவருகிற மொட்டுகளும் சுருங்கிச் சுருங்கி வெளிவரும். இந்த நிலை தொடர்ந்தால் ஏழிலிருந்து பத்து வருடத்துக்குள் மரம் தனது வாழ்க்கையை முடித்துவிடும்.

சோத்திப் பகுதி கழிந்தால் மூன்று அங்குலத்துக்கு மேல் வரும் இம்மரம் வைரமானது. மேலிலிருந்து கீழாக பிளக்கக் கூடியது. கடினமானதாகையால் நெல் குத்தும் உலக்கைகள் செய்ய சிறந்தது. அது கறுப்பாக இருப்பதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

இயற்கையான மரம் போல் தோன்றாது. இதன் மொட்டுக்கள் தென்னை, கமுகைப் போல இருக்கும். ஆனால் அவை சாப்பிட வாதுமைக் கொட்டை போன்றும் அக்ரோட்டு கொட்டை போன்றும் சுவையாக இருக்கும்.

அவர்கள் மொழியில் கொரூடா என்று அழைக்கப்படும் கறுவா மரத்தைப்பற்றி இப்போது சொல்லத் தொடங்குகிறேன். இது காட்டு மரம் போல் அங்கு வளருகிறது. எந்த பராமரிப்புக்கும் அது உட்படுவதில்லை. மகாவலி கங்கை என்னும் ஆற்றுக்கு பக்கத்திலேதான் இம்மரம் அநேகமாக வளர்கிறது. இங்கிலாந்தில் இருக்கும் ஹஸெல் மரத்தைப் போல இது சில இடங்களில் அதிகமாகவும், சில இடங்களிற் குறைவாகவும், இன்னும் சில இடங்களில் முற்றாக இல்லாமலும் இருக்கிறது. இம்மரம் அவ்வளவு பெரிதல்ல. இந்த மரம் வளர்ந்து வெள்ளையாகத் தெரியும் போது அதன்பட்டைதான் கறுவாவாகும். அவர்கள் அதை உரித்தெடுத்து வெயிலிற் காயப்போடுவார்கள். இந்த மரத்திற் பட்டை எடுக்கும் போது சின்ன மரங்களிலிருந்துதான் எடுப்பார்கள். அப்போதுதான் அது மணம் வீசும். பெரிய மரத்தில் இருந்து எடுத்தால் மணக்காது. பெரிய மரம் வேறொன்றுக்கும் உபயோகமில்லை என்பதால், அதைத் தறித்து அகற்றி விடுவர். இதன் இலைகள் மணத்திலும் தடிப்பிலும் லௌரல் இலைகளை ஒத்தன. இளம் இலைகள் வெளிவரும் போது அவை நல்ல சிவப்பு நிறத்தில் இருக்கும். அவைகளைக் கசக்கி முகர்ந்தால் கறுவா பட்டை போல் மணக்காது. கிராம்பு போல் மணக்கும். செப்டம்பர் மாதத்தில் இதன் பழங்கள் பழுக்கும் ஆகொன் போல இருக்கும். ஆனால் அவற்றை விடச் சிறியது. அவைகளுக்கு சுவையோ மணமோ கிடையாது. ஆனால் அவற்றை அவித்தால் ஓர் எண்ணெயைப் போன்ற பதார்த்தம் ஒன்று மேற்பரப்பில் தோன்றும். அதை எடுத்து குளிரப் பண்ணினால் இறுகிய கொழுப்பு போன்ற வெள்ளைப் பொருள் ஒன்று வரும். அது நல்ல மணம் வீசும். அதை அவர்கள் எடுத்து தைலமாக பருக்களுக்கும் நோவுக்கும் தடவுவார்கள். இதை மெழுகுவர்த்தியாக அவர்கள் உபயோகிப்பதில்லை. அரசன் உபயோகிப்பான்.

இங்கே காடுகளிலும் தோட்டங்களிலும் வளரும் சிறு காய்கள் கொண்ட பல மரங்கள் உள்ளன. அவைகளிலிருந்து எண்ணெய் எடுக்கலாம். அவ்வெண்ணெய்கள் உண்ணத்தக்கதன்று. அவைகள் அவர்களின் விளக்கு எரிய உதவுபவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிக்கும் பிரயோசனத்துக்கும் பேர்போன மரங்கள் பல இங்கே உள்ளன. அவைகளில் ஒரு சிலவற்றை நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

[14]ஒறுலா என்னும் மரம் ஒன்று உண்டு. அது பார்ப்பதற்கு நமது அப்பிள் பழம் மாதிரி இருக்கும். பழங்கள் ஒலிவ் மரத்தின் பழங்களை ஒத்தன. பழங்கள் சிவப்பு கலந்த பச்சை நிறமானவை. ஓரங்கள் கூராகவும் தடித்த கனமான ஓடுகள் உடையதாகவும் இருக்கும். வைத்தியர்களால் பேதிக்கு கொடுக்க உபயோகிக்கப்படுகின்றன. வெயிலில் காய்ந்தால் கரிய நிறமாக இருக்கும். அதனை எடுத்து உரலிற் போட்டு, இடித்துத் தண்ணீர் ஊற்றி இரண்டு மூன்று நாட்கள் வைத்தாற் பீர்போன்ற திரவமாக மாறும். இத்திரவத்தில் அவர்கள் துளையிட்டு எடுத்துகாய வைப்பர். அதன் பின் சேற்றிலே தோய்ந்து ஒரு மணித்தியாலத்தின் பின் கழுவுவர். இதன் பிறகு துணிகள் நிரந்தரமான மெல்லிய கறுப்பு நிறமாக மாறும். இதன் பிறகு மேற்கூறிய குழம்பில் மீண்டும் ஒரு முறை தோய்த்து எடுத்து காயவைத்தால் துணி பிரகாசமான கறுப்பு நிறமாகத் தெரியும்.

துருப்பிடித்த இரும்பை இக்குழம்பில் அமிழ்த்தி வைத்து எடுத்தால் துருவெல்லாம் நீங்கி இரும்பு பளிச்சென்று இருக்கும். இவை இம்மரம் தரும் பிரயோசனங்களாகும். இது சில இடங்களில் மாத்திரமே வளருகிறது. கறுவா மரத்தைப் போல அதிகம் காணப்படுவதில்லை. இதன் பழங்களை மருந்துக் கடைகளில் வைத்து விற்பனை செய்வர்.

டவுணக்கியா என்னும் புதர்ச்செடி ஒன்றுண்டு. அது இரண்டு விரல் அகலமுள்ள ஆறு எட்டு அடிவரை நீளமுள்ள இலைகளைக் கொண்டது. இதன் இலையின் நடு நரம்பில் மேலும் கீழும் முட்கள் உள்ளன. இந்த இலைகளைக் கிழித்துப் பாய் பின்னுவார்கள்.

இந்த மரம் ஒரு சாண் நீளமான, கூம்பு வடிவிலான மொட்டைக் கொண்டிருக்கும். கோவா இலைகளைப் போல இந்த மொட்டை இலைகள் மூடியிருக்கும். இது அருமையான இனிய மணமொன்றை வீசும். தங்க நிறம் போன்ற பிரகாசமான மஞ்சள் நிறப்பூக்களைப் பல கொத்துக்களாக இந்த மொட்டு வெளியிடும். சிறிய பூக்களான இவைகள் பறவையின் செட்டையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறகுகள் போன்று காணப்படும். இந்தச் செடியின் வேர்களைப் பிளந்து நார்நாராக ஆக்கிக் கயிறு திரிப்பர்.

[15]கபிடா மரம் என்பதும் ஒரு மனிதனின் புயத்தை விட பெரிதல்லாத புதர்ச் செடி மரம். இலைகள் எல்லாம் மருந்து மணத்தை கொண்டன. இவை சில சமயங்களில் மருத்துவத்தில் பயன்படுகின்றன. இதன் இலைகள் மனிதனின் உள்ளங்கை அகலத்தில் இருக்கும். எந்தக் கால்நடைகளும், ஆடும் கூட, இதன் அருகே நெருங்காது. இது ஊவா மாகாணத்தை விட எங்கும் காணப்படுகின்றன. ஊவா மகாணத்திலிருந்து கால்நடைகளை வேறு பிரதேசங்களுக்குக் கொண்டு வரும் போது இந்தச் செடியின் நச்சுதன்மையைத் தெரியாத அப்பாவிக் கால்நடைகள் அதன் இலைகளை உண்டு இறக்கின்றன. தெள்ளுப் பூச்சிகள் போன்றவைகள் இல்லாமல் வீட்டை வைத்திருக்க இதன் தடிகளாலான வாருகோலை உபயோகிப்பர். பொற்கொல்லர்கள் கரி செய்யவும் இதனைப் பயன்படுத்துவர்.

இந்தத் தீவில் பிரம்புகள் அமோகமாக வளர்கின்றன. அவைகள் நிலத்திலும் மரங்களின் மேலும் கொடிகள் போல இருபது பாகம் வரையிலும் படர்கின்றன. இந்தப் பிரம்புகளைச் சுற்றி கடினமான மூடி ஒன்றிருக்கும். இது இளமையாக, மெல்லியதாக அதன் முனைகள் இருக்கும் போது அதனைக் காக்கிறது. அதனை ஒருவர் தொடமுடியாதவாறு முட்கள் படர்ந்திருக்கும். பிரம்புகள் வளர வளர முட்கள் மறைந்து போகும்.

இந்த பிரம்புக் கொடிகளில் பழங்கள் கொத்துக்கொத்தாகத் திராட்சைப் பழங்கள் போலக் காணப்படும். இப்பழங்களின் தோல் மீனின் செதில்கள் போன்றது. இலகுவில் உடையக் கூடியவை. இப்பழத்துக்குள் நிறைய சதையிருக்கிறது. இந்தப் பழங்களை மக்கள் பொறுக்கி அவித்துக் கஞ்சியாக்கி தாகம் தணியக் குடிப்பார்கள். இக்கஞ்சி புளிப்புச் சுவை கொண்டது.

வெற்றிலைக் கொடி, மரங்களிலே பற்றிப் படர்கிறது. இதன் இலைகளை இந்நாட்டில் உள்ளவர்கள் விரும்பி உண்பர். இந்த இலைகளின் வடிவம் நீளமானது. இதன் நுனி கூரானது. மிளகு இலைக்கும், வெற்றிலை இலைக்கும் வித்தியாசம் அதன் நிறமாகும். மிளகு இலை கடும் பச்சை, வெற்றிலை மெல்லிய பச்சை. இது மிளகை சற்று நீட்டிவிட்டாற் போற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்க்கும். இந்த விதைகள் முளைக்காது வெறுமனே மண்ணில் விழுந்து இற்றுபோகும். இதை வளர்க்க விரும்புபவர்கள் இதன் கொடியை நட்டாற் போதும்.

நான் ஒரு மரத்தைப் பற்றிக் கட்டாயம் சொல்ல வேண்டும். இது புனிதமாகக் கருதப்படும் அரசமரமாகும். இது எங்கும் நடப்பட்டு, மிகுந்த அவதானத்துடன் பேணிப் பராமரிக்கப்படும் மரமாகும். அவர்கள் மொழியில் போ மரம் என்று அழைப்பர். இது ஒரு பாரிய மரமாகும். இதனுடைய இலைகள் நாகபாம்பின் படம் போல இருக்கும். அவர்கள் இந்த மரத்தை வழிபடுகிறார்கள். மரபின் பிரகாரம் புத்தர் அவர்களின் பிரதான கடவுள். இந்தப் பூமிக்கு வந்த போது இந்த மரத்தின் கீழ்தான் இருந்தாராம். அதன் அடியில் மேடை அமைத்து அதில் புத்தர் சிலைகளை வைத்து அடிக்கடி அதைத் துப்பரவு செய்து, விளக்கு வைத்து வழிபடுவார்கள். நிவேதனப் பொருட்களை வைப்பதற்குச் சில இடங்களில் ஒரு கற்பலகையை வைத்திருப்பார்கள். ஒவ்வொரு பட்டினத்திலும் பெருந் தெருவோரங்களிலும் இப்படிப்பட்ட இடங்கள் ஒன்றோ பலவோ இருக்கும். இம்மரம் வழிப்போக்கர்கள் இளைப்பாற இடம் தருகிறது. நினைவு படுத்தக்கூடியவர்கள் இறந்தால், அவர்களை எரித்த இடங்களில் இவ்வழிப்பாட்டிடங்களை அமைப்பர். இதனை அமைத்தவர்கள் இறந்த சிறிது நேரத்தில் சொர்க்கம் புகுவர் என்று இங்குள்ளவர்கள் கூறுகிறார்கள். அதனால் வயோதிபம் அடைந்தவர்கள் இவ்வாறான இடங்களை அமைப்பதிற் பெரிதும் ஈடுபடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05

கிழங்குகள், பயிர்கள், மூலிகைகள் மற்றும் பூக்கள்

இவைகளிற் சில உணவுகள், சில மருந்துகளாகப் பயன்படுபவை. நான் அவர்களின் கிழங்குகளிலிருந்து ஆரம்பிக்கின்றேன். அவர்களின் பிரதான உணவாக இக்கிழங்குகளும் நான் முன்னர் குறிப்பிட்ட பலாக்காயும் அமைகின்றன. நாமும் போர்த்துக்கேசர்களும் யாம் (Yams) என்று கிழங்குகளைப் பொதுப் பெயரிட்டு அழைப்பது போல சிங்களவர்கள் எல்லாக் கிழங்குகளையும் அல என்று அழைக்கிறார்கள். அவைகள் நானா விதமானவை. சில நாட்டி வளர்க்கப்படுகின்றன. சில காட்டுச் செடி போல் தாமாக வளருகின்றன. அவ்வாறானவை ஆழமாகத் தோண்டினால் மட்டுமே கிடைக்கும். கிடைப்பது கொஞ்சமாகத்தான் இருக்கும். எனது நோக்கம் அவைகளின் குறித்த பெயர்களைக் கூறுவதல்ல. நான் பொதுவாக அவற்றைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அவை அவர்களுக்கு உணவாகவும் அரிசிச் சோற்றுடன் சேர்த்துச் சாப்பிடக்கூடிய கறிகளாக்கவும் பயன்படுகின்றன. அரிசிச் சோற்றுக்குப் பதிலாகப் பல்வகை உணவுகளுக்கும் பயன்படுகின்றன. இக்கிழங்குகள் போதியளவு கிடைக்கின்றன.

இரண்டு வகைக் கிழங்குப் பயிர்கள் உண்டு. ஒன்று கொடிகளாக மரத்திலே, தடிகளிற் பற்றி படர்வன. மற்றவை தாமாக நிற்கும் தன்மையன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னவைகளிற் சில உயரமான மரக்கொம்புகளிற் படர்ந்து, பெரிதாகப் பூத்து நிற்பன. அப்பூக்களால் எவ்வித பிரயோசனமுமில்லை. இலைகள் ஒவ்வொரு வருடமும் வாடி விழும்; ஆனால் கிழங்குகள் வளரும் ஓரிரு வருடத்தில் ஒரு மனிதனின் இடுப்பளவு பருமனான கிழங்குகளை அவை தரும். கிழங்குகள் ஒப்பமில்லாத உருண்டை வடிவானவை. சாப்பிட்டால் மெல்லிய கனிந்த புளிப்புச் சுவை கொண்டதாக இருக்கும்.

மரத்திற் படராத வகைகளிற் பல வகை ரகங்கள் உள்ளன. சில ரகங்கள் தண்டுகள் நீண்டும், அகன்ற இலைகளைக் கொண்டும் இருக்கும். இவைகளின் கிழங்குகள் ஓரளவு உருண்டையானவை.

சில ரகங்கள் மனிதனின் விரல்கள் போன்ற வடிவத்திற் கிழங்குகளைத் தருகின்றன. இதனால் அவைகள் விரற் கிழங்குகள் என்ற அர்த்தத்தில் அங்குல அல என அழைக்கப்படுகின்றன. அவைகளிற் சில வகைகள் சிவப்பு நிறக் கிழங்குகளையும், சில வகைகள் வெள்ளை நிறக் கிழங்குகளையும் தருகின்றன.

காட்டிலே தன்னிச்சையாக வளரும் கிழங்குப் பயிர்களின் வேர்கள் மண்ணில் ஆழமாக ஊடுருவிச் செல்கின்றன. அவைகளின் கிழங்குகள் ஒரு மனிதனின் புயம் அளவு பெரிதாக இருக்கும்.

மூலிகைகள் அவித்து வெண்ணெய் உடன் சேர்த்து உண்ணப்படுபவை. அவைகளில் வித்தியாசமான இனங்கள் உள்ளன. சில முதிர்ச்சியடைய ஆறு மாதங்கள் செல்லும். தண்டுகள் ஒரு மனிதனின் உயரமளவு வளரக்கூடியன. சில வகைகள் உயரம் குறைந்தவையாகவும் இரத்தச் சிவப்பு நிறம் கொண்டவையாகவும் உள்ளன. சில பச்சை நிறமானவை. சிலவற்றின் தண்டுகள் வெள்ளையாகவும் இலைகள் பச்சையாகவுமிருக்கும்.

இங்கிலாந்தில் கிடைக்கும் பழவகைகள் எவற்றோடும் ஒப்பிட முடியாத பழ வகைகள் - காவெல, வட்டக்குல, மொரங்கோ, ககோரெஹௌன் என்று அழைக்கப்படும் பழவகைகள் - அவர்களிடம் உள்ளன. அவை கறிசமைத்துச் சோற்றுடன் சேர்த்து உண்ணப்படுபவை. அவைகளின் சுவை புளிப்பானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம் எங்களின் ஆங்கில மூலிகைகளும் பயிர்களும் உள்ளன. அவை கோல்வோர்ட், கரட், ரடிஷ், பென்னல், பல்சம், ஸ்பெமின்ட், மஸ்டட், கடுகு என்பனவாகும். அவைகளில் கடைசியாகச் சொன்ன இரண்டைத்தவிர மற்றவைகள் அங்கே இயற்கையாக வளர்வனவல்ல, அவைகள் அங்கே கொண்டுவந்து நாட்டப்பட்டவை. இதிலிருந்து நான் தெரிந்து கொண்டது என்னவெனில் ஐரோப்பியப் பயிர்கள்யாவும் அங்கு வளரக்கூடியன என்பதாகும். அவர்களிடம் பேர்ண்ணும் சோளமும் உள்ளன. இங்கிலாந்தில் உள்ளது போல அங்கே பல வகை பீன்ஸ்கள் உண்டு. வெள்ளரி மற்றும் கலாபேஸ் வகைகள் அங்கு உள்ளன. எங்கள் நாட்டில் உள்ளவைகளான லற்றீஸ், ரோஸ்மரி, சோஜ் மற்றும் பல வகை மூலிகைகளை ஒல்லாந்தர் இந்தத் தீவில் உள்ள தோட்டங்களில் நாட்டி வளர்க்கிறார்கள்.

இந்நாட்டவர்களின் தோட்டங்கள் அப்போதிக்கரியின் கடை போல மணக்கும். இந்த மூலிகைகளின் இலைகள், பட்டைகள் மருந்தாகப் பயன்படுகின்றன. நூற்றுக்கணக்காக உள்ள அவர்களின் மூலிகைகளையும் அவைகளின் பண்புகளையும் பற்றி நான் இங்கு விபரிக்கவில்லை. அவைகளில் முக்கியமானவைகளைப்பற்றி ஒரு இரண்டு பக்கத்தில் கூறுவேன். எனக்குப் பக்கத்தில் வாழ்ந்த சிங்களவர் ஒருவர் சில வகை மூலிகைகளைக் கொண்டு ஒரு மனிதனின் உடைந்த கைகால் எலும்புகளை, சோறும் மூன்று கறிகளும் ஆக்கும் நேரத்தில் பொருந்தியதைக் கண்டிருக்கிறேன். அந்த மனிதன் பக்கத்தில் இருந்த என்னிடம் இப்போது சுகம் என்று கூறினான். அவர்கள் தொண்டை வீக்கத்தை அமரங்கா என்னும் மரத்தின் பட்டையை அரைத்துப் பூசி ஒரு நாள் இரு நாட்களுக்குள் குணமாக்கி விடுவர். நான் அந்நோயால் பெரிதும் பாதிக்கப்பட்டு, சாப்பாட்டையே விழுங்க முடியாமல் அவதிப்பட்ட போது, அவ்வாறு செய்ய ஒரு பகலுக்கும் ஓர் இரவுக்குமிடையே எனக்குச் சுகமாகிவிட்டது.

பூவுக்காக அவர்கள் செடிகளை நாட்டி வளர்ப்பதில்லை. பூச்செடிகள் தாமாகவே வளர்ந்து பூக்கின்றன. எங்களைப் போலவே அவர்களிடமும் வெள்ளை, சிவப்பு நிற ரோசா வகைகள் உள்ளன. அவைகள் இனிய மணமுடையவை. இள வயதுடைய ஆண்களும் பெண்களும் அவைகளின் இனிய மணத்துக்காக தம் தலை மயிரில் அவைகளைச் சூடிக்கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இங்கு குறிப்பிடக்கூடிய அரியவகை மலர் ஒன்று உண்டு. அதை அவர்கள்[16] சிற்றிக் மலர் என்று அழைப்பர். சில கபில நிறத்திலும் சில வெள்ளை நிறத்திலுமிருக்கும். அது மாலை நான்கு மணிக்கு மலர்ந்து இரவு நாலு மணி வரையும் மணம் வீசிக்கொண்டிருக்கும். பின் வாடி உதிர்ந்து போகும். அதனை சிலர் காட்டிலிருந்து பிடுங்கி தமது வீட்டு வளவில் நட்டு வளர்ப்பார்கள். இதன் பிரதான நோக்கம் நேரத்தைச் சரியாக அளவிட்டுக்கொள்ளுவதாகும்.

எங்களது மல்லிகை[17] போன்று மணக்கும் வெள்ளிநிற பூவொன்று அங்கேயுண்டு. இந்த மலரை இதற்கென நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்த்தர்கள் பறித்து ஒரு தடியில் தொடுத்து வெள்ளை துணியினால் மூடிக்கொண்டு ஒவ்வொரு நாள் காலையும் அரசனிடம் கொடுப்பார்கள். இப்பணியினைச் செய்பவர்களுக்கு பொருத்தமான ஆற்றோர நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இம்மலர்கள் விளையப் பொருத்தமான நிலத்தை வேறு ஒருவர் கொண்டிருந்தால் அவரை அகற்றி விட்டு இம்மலர்ச் செய்கையை மேற்கொள்ள அவர்களுக்கு அதிகாரம் உண்டு. இனிமேல் இம்மலர்ச் செய்கையை இந்நிலத்தில் மேற்கொள்ள முடியாது என்று நிலத்தைக் கைவிடும் வரை பொறுத்திருக்க வேண்டும்.

பெரு மரமாக வளரும் ஹேப் மரத்தில் அபூர்வ மணத்தைத் தரும் பூவொன்று மலர்கிறது. இது இளவயதினரைப் பெரிதும் கவர்கிறது. இதனை அவர்கள் விரும்பி தம் தலையில் சூடிக்கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06

பழக்கப்பட்ட மற்றும் பழக்கப்படாத காட்டு மிருகங்களும் பூச்சிகளும்

மரங்களையும் பயிர்களையும் பற்றி முன்னர் பேசினோம். நாங்கள் இப்பொழுது இந்தத் தீவில் வாழும் உயிரினங்களைப் பார்ப்போம். அவர்களுடைய மிருகங்கள், பூச்சிகள், பறவைகள், மீனினங்கள், பாம்பு வகைகள் என்பனவற்றில் உபயோகமானவைகளுமுண்டு. உபயோகமற்றவைகளும் தீங்கானவைகளுமுண்டு. நாங்கள் முதலில் மிருகங்களைப் பற்றிப் பார்ப்போம். அவை பசு, எருமை, காட்டுப்பன்றி, ஆடு, மான், முயல், நாய், நரி, கரடி, யானை, புலி, ஓநாய், குதிரை, கழுதை மற்றும் குரங்கு வகைகள் என்பனவாகும். அவைகளிற் பசுபோன்று பெரியனவும் முயல் போன்று சிறியனவும் உண்டு. மேமின்னா என்னும் மான் வகை நரை நிறத்தில் வெள்ளைப் புள்ளிகளுடன் எங்கும் காணப்படுகிறது. அவை சராசரி அளவுடையன. இங்கே பெரிய காளைமாடு போன்ற தோற்றம் கொண்ட காட்டு எருமைகள் நிறைய உண்டு. அவர்கள் அவற்றை கௌவெரா என்று அழைப்பர். அவைகளில் நடுமுதுகு கூராகவும் கால்களின் அரைப்பகுதி வெள்ளை நிறமானவைகளாகவுமிருக்கும். நான் ஒரு போதும் அவைகளைக் காணவில்லை. அவைகளின் ஒன்று அரசனின் பிராணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அரசன் இங்கே ஒரு கறுத்தப் புலியையும் பால் போன்ற ஒரு வெள்ளை மானையும் பிடித்து வளர்க்கிறான். அவைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் கரிசனையுடன் பராமரிக்கின்றான். அவைகள் இந்நாட்டில் இருப்பதாக நான் முன்னரும். பின்னரும் கேள்விப்பட்டதில்லை.

இந்த மான் எவ்வாறு பிடிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புவீர்களாயின் அது வருமாறு: இந்த மான் தனது கூட்டத்துடன் மாலையில் ஒரு குளத்திற்கு நீர் அருந்த வருவதை அவதானித்ததன் பின்னர் ஆட்களுக்கு அதனைப்பிடிக்கும் படி கட்டளையிடப்பட்டது. அதற்காக ஒரு இடைவெளி மாத்திரம் விட்டு குளத்தைச் சுற்றி உயரமான கொத்து வேலி போடப்பட்டது. ஒவ்வொருவரும் தடிகளுடன் மறைந்திருந்தனர். மாலையில் வழமை போல அந்த மான் கூட்டத்துடன் நீரருந்தக் குளத்துக்கு வந்தது. அவைகள் உள் நுழைந்தவுடன் தடிகளோடு நின்றிருந்தவர்கள் தடாரெனப் பாய்ந்து தமது தடிகளைக் குற்றி இடைவெளியை மறித்தனர். இப்போது மான் கூட்டம் வகையாக குளத்துக்குள் மாட்டிக்கொண்டது. வெள்ளை மானை தெரிந்து இலகுவாகப் பிடித்துக் கொண்டனர்.

அரசன் தனது விருப்பத்துக்கேற்ப பல யானைகளை வைத்திருக்கிறான். அவைகள் எல்லாவற்றிலும் அண்மையில் பிடிபட்ட யானையைத்தான் அவன் பெரிதும் விரும்புகிறான். அந்த யானை உடலெல்லாம் புள்ளிகளைக் கொண்டது. ஒரு யானை செல்லும் வழியில் தடுக்கி விழுந்ததன் பின்னர் நான் அவைகளுக்குக்கிட்டச் செல்வதில்லை. இந்தியாவை விட இலங்கை, யானைகளுக்கு பெயர் பெற்றது.

நான் முதலில் அவைகள் எவ்வாறு பிடிபடுகின்றன என்பதையும் அவைகளின் புத்தி சாதுரியத்தையும் பற்றி என் நினைவில் உள்ளவற்றை உங்களுக்கு எடுத்துரைக்கிறேன். இந்த மிருகம் மிகவும் பெரியதாகவும் புத்திசாலித்தனமாகவும் இருந்த போதிலும் எளிதாகப் பிடிபடுகின்றன. பெருமளவு யானைகள் காடுகளில் காணப்பட்டாலும் தந்தமுள்ள யானைகள் ஒரு சிலவே. ஆண்யானைகளிற் சில வற்றுக்குதான் தந்தம் வளரும். இந்த தந்தமுள்ள யானைகளையே பெரும்பாலும் பிடிப்பர். பிடிப்பதற்கு அரசனின் அனுமதி வேண்டும். யானைகளைப் பிடிப்பதற்கு பெண்யானைகளைப் பயன்படுத்துவர். பெண்யானைகளைக் கண்டால் ஆண்யானைகள் அவைகளைப் பின்தொடரும். மறைந்திருக்கும் யானைப்பாகர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்யானைகளை சமிக்ஞைகளால் இயக்கி நகரத்தெருக்கள் ஊடாக, சில வேளைகளில் அரண்மனை வாசலுக்கு ஆண்யானைகளை வரவைப்பர். அரண்மனை வாசலுக்கு அவைகளை வரவைப்பது அரசன் தனக்குப் பிடித்த யானைகளைத் தேர்ந்தெடுக்கவாகும். அப்போது பொறியில் அல்லது கண்ணியில் யானைகளைச் சிக்க வைத்துப் பிடிப்பர். அரசனுக்குப் பிடிக்காத யானைகளை காட்டுக்குள் விரட்டிவிடுவர். பிடித்துக்கொண்ட யானைகள் போக, பிடித்த யானைகளை பெண்யானைகளைப் பயன்படுத்தி பக்கத்தில் உள்ள காடுகளில் அவைகள் தங்கி இருக்கச் செய்வான். பின்னர் அரசன் விரும்பும் நேரத்தில் அவைகளைப் பிடிப்பான். யானை பிடிப்பது அரசனுக்கு விருப்பமான பொழுதுபோக்காகும்.

யானைகள் இந்த நாட்டுக்கு பல தீமைகளைப் புரிகின்றன. வயல்களில் தானியத்தை உண்கின்றன; தமது அகன்ற பாதத்தால் பயிர்களை மிதித்து துவைக்கின்றன; தென்னைகளைப் பிடுங்கி எறிகின்றன. அவர்களின் வீடுகளை உடைத்து தரைமட்டமாக்குகின்றன. இதைப்பற்றி அரசனிடம் முறையிட்டால் அவைகளை அடர்ந்த காட்டுக்கு விரட்டி விடுமாறு உத்தரவிடுவான்.

மற்ற மிருகங்கள் செய்யமுடியாத எந்த வேலையையும் பாகன் கட்டளையிட்டால் யானைகள் செய்யும். அதற்கு தும்பிக்கை என்றொரு உறுப்பு இருப்பது இதற்குக் காரணமாகும். சிங்களவர்கள் கூறுவது போல் அவைகள் தமது குட்டிகள் மீது மிகுந்த பாசம் கொண்டவையாகும். கூட்டத்தில் உள்ள எந்த தாய் யானைகளிடமும் குட்டிகள் பால் குடிக்கும். அக்குட்டிகள் அழுதால் எல்லாத்தாய் யானைகளும் அதற்கு உதவ ஓடி வரும். குளிப்பதற்கு அவைகளுக்கு அலாதிப்பிரியம். குளிப்பதற்கு போகும் போது சில ஆறுகள் மிகுந்த வேகத்துடன் ஓடினால் தங்களின் தும்பிக்கையினால் தாக்குப் பிடித்துக்கொள்ளும்; தமது குட்டிகளையும் ஆறு இழுத்துச் செல்லாமல் பிடித்துவைத்திருக்கும். அவைகள் நீரில் நீந்தக் கூடியன. யானைகள் பழக்கப்பட்டதோ பழக்கப்படாததோ பற்களை ஒருபோதும் இழப்பதில்லை. அவைகள் இறைச்சிகளைக் கண்டால் நிலைகொள்ளாது தவிக்கும். அவைகளின் கருத்தரிப்புக் காலம் ஒரு வருடமாகும்.

அவைகளிடம் ஒரு பழக்கம் உண்டு. தமது தலைக்கு மேல் உள்ள மரங்களின் இலைகளை உண்ண ஆவலுறுவதாகும். தம் முன்னங்கால்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளப்பி காட்டுச் செடிகளை மடக்கி உண்ணும். காட்டு யானைகள் பழக்கப்பட்ட யானைகளை விட விரைவாக ஓடும் தன்மையன. அடிக்கடி ஆட்களை அது கொல்வதால் அதற்கு கிட்டப் போக அவர்கள் பயப்படுவார்கள். காடுகளின் பக்கமுள்ள பட்டணங்களில் உள்ளவர்கள் இரவில் விழித்திருக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஏனென்றால் அவைகள் வந்து உடமைகளையும் உயிர்களையும் நாசம் செய்வதால். அவர்கள் தமது வில்லை எடுத்து அம்பை அதன் மீது ஏவினால் யானைகள் மூர்க்கம் கொண்டு அவர்களைத் துவம்சம் செய்து விடும். பக்கத்தில் ஏறித்தப்பக் கூடிய பெரிய மரங்கள் இருந்தால் ஒழிய அவர்கள் அவ்விதம் செய்யமாட்டார்கள். இங்கே கரடிகளும், புலிகளுமுண்டு. எனினும் அவைகள் பயங்கரமானவை அன்று. அவைகள் மக்களை ஒருபோதும் தாக்க முற்படுவதில்லை. பயணிகளும், வழிப்போக்கர்களும் யானைகளுக்குப் பயந்துதான் பயணம் செய்வர்.

அரசர்கள் மரண தண்டனை நிறைவேற்ற யானைகளைப் பயன்படுத்துவதுமுண்டு. அவைகள் தமது தந்தங்களால் குற்றவாளியின் உடலைத் துண்டுதுண்டாகக் கிழித்து வீசும். அதற்கு வசதியாக யானைப்பாகர்கள் அதன் தந்தத்தை கூராக்கி இரும்பு ஆணிகளை அதன் முனையில் பொருத்தி இருப்பர்.

சில வேளைகளில் யானைகளுக்கு 'மதம்' பிடிக்கும். அதாவது யாராலும் கட்டுப்படுத்த முடியாதவாறு பைத்தியம் பிடித்தது போல் வெறி பிடித்தலையும் சில வேளைகளில் வெறி அடங்காமல் தமது பாகர்களையே கொன்று விடுவதுமுண்டு. இந்நிலைக்கு யானை உட்படப்போகிறது என்பதற்கு அறிகுறியாக எண்ணெய் போன்ற திரவம் ஒன்று அதன் காதுகளில் வடியும். இதனைக் கண்டவுடன் அதனைச் சங்கிலியால் பிணைத்து பெரிய மரமொன்றில் கட்டிவிடுவர். இதற்கு ஒரு மருந்தும் அவர்கள் உபயோகிப்பதில்லை, இந்த நிலைக்கு பெண்யானைகள் ஒரு போதும் உட்படுவதில்லை.

இந்த நிலைக்குப் பின்னர் அரசனின் யானைப்பாகர்கள் சில விளையாட்டுகளை அதனைக் கொண்டு செய்வர். அவர்கள் யானைகளை நீர்நிலைக்குக் கூட்டிச்சென்று நீரை உறிஞ்ச வைப்பர். பின்னர் அத்தண்ணீரை ஏதாவதொன்றை நோக்கி பீச்சுமாறு பண்ணுவர். அது பலமாகப் பீச்சுமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணுவர். அது பலமாகப் பீச்சும் போது ஒரு மனிதனால் விழாமல் தாக்குப் பிடிப்பது கடினம்.

இங்கே பலவகை எறும்புகள் உண்டு. அவற்றில் சில இங்கே குறிப்பிடத்தக்கன. முதலில் கம்பியா என்னும் ஒருவகை சிறியசிவப்பு நிற எறும்புகளைப் பற்றிச் சொல்லலாம். அவைகள் எங்களது இங்கிலாந்தில் உள்ளவை போன்றன.

இரண்டாவதாக ரெலே கம்பியா முற்கூறியதை போன்றது. ஆனால் அவைகள் கரிய நிறமானவை. அவைகள் போர் மரங்களிலும் அழுகும் மரங்களிலும் வாழும். அவை குத்தினால் மிகவும் வேதனையாக இருக்கும்.

மூன்றாவதாக [18]டிம்பியோஸ் என்னும் சிவப்பு நிற எறும்புகள். அவைகள் உயர்ந்த மரக்கிளைகளில் இலைகளை இணைத்து கூடுகட்டி வாழும். அக்கூடுகள் ஒரு மனிதனின் தலையளவு பெரியவை. இதனுள் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்றன. இவைகள் குத்தும் என்ற பயத்தால் மரமேற ஆட்கள் தயங்குவர்.

நாலாவது வகை எறும்புகள் கௌரா அர்ச் என்று அழைக்கப்படுபவை. அவை பெரியதாகவும் கருமை நிறம் கொண்டனவாகவுமிருக்கும். அவைகள் மண்ணில் வாழ்பவை. மண்ணில் துளைகளைத் தோண்டி வெளியில் அழுகும் பொருட்களை கொண்டு வந்து சேர்ப்பது அவற்றின் நாளாந்த கருமங்களாகும். இந்த வகையில் மண்புழுக்களை ஒத்தன. இவைகளை அங்கே பெருந்தொகையாகக் காணலாம். கால்நடைகள் செல்லும் போது இவைகளின் துளைகள் அழிகின்றன. இவைகள் கடிப்பதில்லை.

ஐந்தாவதாகக் குறிப்பிடத்தக்கது [19]கொட்டியாவாகும். இந்த எறும்புகள் கடும் கரிய நிறமானவையாகும். முதல் குறிப்பிட்டதன் அளவுடையதாகவும் உள்ளது. இவைகள் நிலத்தில் வாழ்கின்றன. அவைகள் பெரும் எண்ணிக்கையில் ஊர்ந்து செல்லும். மக்கள் தெருக்களில் விரைந்து செல்வது போல இவைகளும் ஏதோ அவசர கருமமாக விரைந்து செல்கின்றன. எனக்கு அவைகள் எங்கே செல்கின்றன; ஏன் செல்கின்றன என்பது தெரியாது. நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் வழியில் குறுக்கிட்டு தொந்தரவு செய்தால் ஒழிய அது உங்களைக் கடிக்காது. இந்த வகையில் அவை உயர்ந்த பண்பு கொண்டனவெனலாம். இவைகள் கடித்தால் நெருப்புக் கோலால் சுடுவது போல் கடும் வேதனையாக இருக்கும். இவ்வாறு இவைகளின் கடி வலிப்பதற்கு சிங்களவர்கள் கூறும் கர்ணபரம்பரைக் கதையொன்றுண்டு; முன்னொரு காலத்தில் இந்த எறும்புகள் பாம்பின் அரசனான நாகபாம்பின் மனைவியிடம் சென்று தமக்குத் தொந்தரவு செய்பவர்களைக் கடிக்க நஞ்சு தரவேண்டும் என்று மன்றாடின. அவைகளின் மன்றாட்டுக்கு இரங்கிய நாகத்தின் மனைவி அவைகளுக்கு நஞ்சை வழங்கியது. அன்றிலிருந்து அவை கடித்தால் விஷம் பாய்வது போல் வலியேற்படுகிறது. இவ்வாறான கதைகளில் சிங்களவரின் அறிவுஞானம் மறைந்துகிடக்கிறது.

ஆறாவதாக வருவது [20]வேயோ என்னும் எறும்பினமாகும். அவைகள் முன்னர் குறிப்பிட்டவைகளை விட அதிகமாக காணப்படுகின்றன. உலகின் எப்பாகத்திலும் அவைகளை கூட்டங்கூட்டமாக காணலாம். அவைகள் பெரிய சிறிய எறும்பினங்களில் நடுத்தர அளவைக் கொண்டவை. அவைகள் தம் பாதையில் எதிர்ப்படும் எவற்றையும் - உணவுப்பொருட்கள், துணிகள், மரங்கள், கூரை மேயும் கிடுகுகள் யாவற்றையும் இரும்பையும், கற்களையும் தவிர்த்து சகலவற்றையும் தின்று அல்லது விழுங்கி விடுகின்றன. இதனால் மக்கள் தமது பொருட்களை வெளியில் போடமாட்டார்கள். அவைகள் வீடுகளின் சுவர்களில் ஊர்ந்து சென்று அழுக்குகளினாலான கூடுகளை அமைக்கின்றன. இக்கூடுகள் உடையும் தன்மையானவை. இக்கூடுகள் உடைந்தால் மீண்டும் சரிபண்ணுகின்றன. அங்குள்ள மக்களுக்கு இவற்றால் அதிகம் தொந்தரவில்லை.

வீடுகள் இல்லாத இடங்களில் சிறிய குன்றுகள் போன்ற மண்மேடுகள் அமைக்கின்றன. அவைகள் நாலு,ஐந்து ஆறடி உயரமும், உறுதியும் கொண்டவையாக இருக்கும். பெரிய பிக்காசு போன்ற கருவிகளால்தான் அவைகளை உடைக்க முடியும். சிங்களவர்கள் இவற்றை [21]ஹம்போசஸ் என்று அழைக்கிறார்கள். இவைகள் நிறைய சுரங்க அறைகளைக் கொண்டவை. இவைகளில் வாழ்ந்து முட்டையிட்டு குஞ்சு பொரித்து தம் இனத்தைப் பெருக்குகின்றன. இவைகளை தேன்கூடுகளுக்கு ஒப்பிடலாம். இந்த ஹம்போசஸ்கள் சுத்தமான களியினால் கட்டப்பட்டிருப்பது இவ்வெறும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையின் புத்தி சாதுரியத்தைக் காட்டுகிறது. மக்கள் இக்களியை உபயோகித்து தெய்வ விக்கிரகங்கள் செய்கின்றனர்.

இந்த எறும்பினங்கள் பெரும் எண்ணிக்கையில் பெருகி அழிகின்றன. இவைகள் முதிர்ச்சியடைந்ததும் சிறகு முளைக்கின்றன. அவைகள் பறக்கும் போது இருள் படர்வது போல இருக்கும். சூரிய ஒளியில் களைத்து விழும்வரை உயர உயரப் பறக்கின்றன. பறவைகள் விழுந்து கிடக்கும் அவைகளின் உடலை உண்கின்றன.

இந்த நாட்டில் உள்ளவர்கள் தாங்கள் வளர்க்கும் கோழிகளுக்கு உணவு கொடுப்பதில்லை. அவை விழுந்து கிடக்கும் எறும்புகளை அரிசி போன்ற தானியங்களை மிகவும் விரும்பி உண்கின்றன. இங்கே விபரிக்கப்பட்ட எறும்புகளை விடவும் பல்வேறு வகை எறும்புகள் அங்கே உள்ளன.

இப்போது நாங்கள் மிகவும் நன்மை பயக்கும் பூச்சிகளான தேனீக்களைப் பார்ப்போம். அவைகளில் மூன்று வகைகள் உள்ளன. முதல் வகை மீமாஸ்ஸோ எனப்படுவது அவைகள் சரியாக ஆங்கில தேனீக்கள் போன்றன. இவைகள் மரத்துளைகள், மரப்போர்கள் என்பனவற்றிலே கூடு கட்டுகின்றன. அவைகள் மேல் மனிதன் ஊதினால் தேனீக்கள் பறந்தோடி விடுகின்றன. பின்னர் தமது கையை விட்டு கூட்டைத் தேனுடன் எடுத்துச் சேகரிப்பார்கள். தேனீ கொட்டும் என்ற குறைந்த பட்ச பயமும் அவர்களிடமில்லை; தமது கையைப் பாதுகாக்க துணிகொண்டு சுற்றுவதுமில்லை.

இரண்டாவது தேனீவகை பம்ரோஸ் ஆங்கில தேனீக்களை விட பிரகாசமான நிறம்கொண்டவை. இவை தரும் தேன் தண்ணீர் போன்று இலேசானது. இவை தமது கூட்டை கண்பார்வைக்குத் தெரியும் உயரமான மரக்கொம்புகளில் அமைக்கின்றன. பட்டணத்தில் உள்ளவர்கள் நாற்பது, ஐம்பது பேர் திரண்டு காட்டுக்குச் சென்று தமது பாத்திரம் நிறையத் தேனுடன் திரும்புவர்.

குருட்டுத் தேனீக்கள் என்ற அர்த்தத்தில் கொன்னமினியா என்று அழைக்கப்படுகின்ற தேனீக்கள் மூன்றாவது வகையாகும். அவைகள் ஈக்கள் போன்று சிறியன. கறுத்த நிறம் கொண்ட இவை போர் மரத்தில் கூடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுகின்றன. அவைகளின் தேன் தார் போன்றது. குறைந்த அளவுடைய தேனை இக்கூடுகள் கொண்டுள்ளதால் மக்கள் இதில் அதிக நாட்டம் கொள்வதில்லை. சிறுவர்கள் மரத்தை வெட்டி இவ்வகைத் தேனை எடுப்பதில் அதிகம் ஈடுபடுவர்.

தேனீக்கள் கூட்டம் மரத்தில் தொங்கினால் அவர்கள் எரியும் தீப்பந்தம் ஒன்றை அதன் கீழ் பிடிக்கின்றனர். இதனால் தேனீக்கள் எரிந்து கீழே விழும். அவைகளை பொறுக்கி எடுத்து அவித்து உண்பர். இதை சிறந்த உணவு என்று சொல்கிறார்கள்.

இங்கு பல வகை அட்டைகள் காணப்படுகின்றன. எங்கள் நாட்டில் உள்ளவைகளை விட இவைகள் நிறத்திலும், பருமனிலும் வித்தியாசப்படுகின்றன. இவைகளின் நிறம் உப்பிட்ட பன்றி இறைச்சி போன்று இருண்ட சிவப்பு நிறமாகும். பருமன் கீரியின் வால் போல இரண்டு அல்லது மூன்று அங்குல நீளமிருக்கும். அவைகள் இளமையாக இருக்கும் போது குதிரையின் வால் மயிர் அளவு சிறியதாக இருப்பதால் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால் மழை பெய்தவுடன் மரத்தில், புல்லில் எங்கும் நிறைந்திருக்கும். வரண்ட காலத்தில் அவைகள் ஒன்றையும் காணமுடியாது. இந்த நாட்டின் வழக்கப்படி வெறும் காலுடன் கடந்து போவோரின் கால்களைப் பற்றிக்கொள்ளும். தமது வயிறுகள் இரத்தத்தால் நிறையும் வரை அவை காலை விடாது. காயத்தை சாம்பல் பூசி ஆற்றுவர். அவை அந்த நாட்டில் எங்கும் பெருமளவு காணப்படுவதால் அவை பற்றிப் பிடிக்க முடியாத வேகத்தில் நடப்பது கடினம்.

கொஞ்சம் எலுமிச்சை புளி, அல்லது உப்பு போன்றவற்றைத் தடவினால் அவை தாமாக கழன்று விழும். சிலர் கத்தியின் ஓரத்தால் அல்லது புல்லின் ஓரத்தால் உராய்ந்து கழட்டுவர். அவைகள் அதிகளவிற் கடித்தால் தொல்லைதான். சிறிய அளவில் கடிப்பது உடம்புக்கு நல்லதென்று கூறுகிறார்கள். இவைகளை விட நீர் அட்டைகள் அங்கு உண்டு. அவைகள் எங்கள் நாட்டில் உள்ளவை போன்றன.

காடுகளில் பெருமளவு குரங்குகள் காணப்படுகின்றன. அவைகள் பல வகைப்பட்டன. ஒருவகை எங்களது ஆங்கில ஸ்பானிய நாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவு பெரியதாகவும் கரும் நரை நிறம் கொண்டதாகவும், கறுத்த முகமுடையதாகவும், ஒரு காதிலிருந்து மறு காதுவரை நீளும் வெள்ளை தாடி உடையதாகவும் காணப்படுகின்றன. அவைகள் ஒரு முதியோனைப் பார்ப்பது போன்று தோன்றுகின்றன. இன்னொரு வகை முற் கூறியதை போன்று பெரியதாகவும், நிறத்தில் வித்தியாசம் கொண்டவனவாகவும் உள்ளன. இவைகளின் உடலும் முகமும் வெள்ளை நிறமானவை. ஆனால் தாடி முன் கூறியதை போலத்தான் அமைந்துள்ளது. இவ்வகைக் குரங்குகள் அதிகம் காணப்படுவதில்லை. இந்த இரண்டு வகையும் தொந்தரவில்லை. இவைகள் காட்டில் மரங்களின் இலைகளையும் மொட்டுகளையும் தின்று உயிர் வாழ்கின்றன. ஆனால் அவைகளைப் பிடித்து வளர்த்தால் எதையும் சாப்பிடப் பழக்கலாம். குரங்குகளை வந்துரா என்று அவர்கள் குறிப்பிடுவர்.

இன்னும் ஒரு வகைக் குரங்கினங்கள் உள்ளன. அவைகள் அதிகளவாகக் காணப்படுகின்றன. அவைகள் அதிகளவு தொல்லை கொடுப்பவை. தானியங்களைத் தின்னாமல் அவைகளை விரட்டுவது மக்களுக்கு பெரும்பாடாக இருக்கிறது. தோட்டத்தில் ஓர் அந்தத்திலிருந்து விரட்டினால் மறு அந்தத்திலிருந்து தானியங்களை கவ்விச் செல்லும். இந்த வகை குரங்குகளுக்கு தாடியில்லை. முகம் வெள்ளை. அவைகளின் தலையில் நீண்ட மயிர் தொங்கும். அம்மயிர்கள் மனிதர்களின் தலைமயிர் போல் அங்கும் இங்கும் பரந்து கிடக்கும். அவை தோட்டத்திலே தாம் நாட்டி வளர்த்தவை போலக் காய்கனிகளைப் பிடுங்கித் தின்கின்றன. இந்தக் குரங்குகளின் இறைச்சி உண்பதற்கு நல்லதென்று கூறப்படுகின்றது. இவற்றை விடப் பல வகை அணில்கள் அங்கே உண்டு. அவைகளைப் பிடித்து உண்கின்றனர்.

இந்த மிருகங்களைப் பற்றிய விபரணத்தை முடிப்பதற்கு முன்னர் அவைகளைப் பிடிக்கும் முறைகளைப் பற்றி விபரிக்க வேண்டும். இதில் அவர்கள் திறமைசாலிகள்.

மான்களையும் மற்றும் காட்டு மிருகங்களையும் பிடிப்பதற்கு மிக நுணுக்கமான உபகரணம் அவர்களிடம் உண்டு. அவர்களிடம் பிரம்பினால் செய்த புனல் போன்ற வடிவம் கொண்ட கூடை ஒன்றுண்டு. அக்கூடைக்குள் நின்று எரியக்கூடிய விறகுகளை கொண்ட சட்டி ஒன்றை வைத்து நன்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிய விடுவர். இதனால் பிரகாசமான வெளிச்சம் ஏற்படும். மழை பெய்யும் ஓர் இருண்ட இரவில் ஒருவர் கூடையை தூக்கிக்கொண்டு செல்வார். அவர் தனது கையில் ஓசை எழுப்பக்கூடிய மணிகளைக் கட்டி இருப்பார். அவரை மூன்று நான்கு பேர் நாணேற்றிய வில்லுடன் பின் தொடர்வர். கூடையை தூக்கி செல்பவரினதும், பின்தொடர்பவர்களினதும் காலடிச் சத்தம் மிருகங்களுக்கு கேட்காமல் இருப்பதற்கே இந்த ஏற்பாடு. அவர்கள் பெரும்பாலும் குளம், சமவெளி போன்ற மிருகங்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களிலேயே இவ்வாறு செல்வர். தம்மை நோக்கி ஓர் பிரகாசமான ஒளிஒலி எழுப்பிக்கொண்டு வருவதைக் கண்டு மிருகங்கள் திகைத்து நிற்கும். அவைகளின் கண்களிலிருந்து வரும் ஒளியைக் கொண்டு பார்ப்பது எந்த மிருகம் என்பது அவர்களுக்கு தெரியும். வேட்டையாடத் தக்க மிருகம் எனக் கண்டால் தயார் நிலையில் இருக்கும் வில்லிலிருந்து அம்புகள் மிருகத்தை நோக்கிப் பாயும்,குறி தவறாது. அவர்களின் அம்பு ஒரு அடி அல்லது ஒன்றரை அடி நீளமானது.

அவர்கள் தமது தானிய வயல்களைச் சுற்றி கொத்து வேலி போட்டிருப்பார்கள். அவ்வேலியில் மான் வந்து போயிருக்கும் தடம் இருக்கிறதா என்பதை நன்கு அவதானிப்பர். அவ்விடத்தில் மிகவும் கூரான ஈட்டியை நாட்டி வைத்திருப்பர். மான்கள் வழமை போல் பாயும் போது ஈட்டியில் வகையாக மாட்டிக் கொள்ளும்.

ஒரு புலி வந்து அவர்களின் வளவிற் புகுந்து ஒரு மாட்டை இழுத்துச் செல்லக் கூடிய வாய்ப்பொன்று இருந்தால், அது வரக்கூடிய வழியை அவதானித்து ஒரு நாண் ஏற்றிய வில்லைப் பொருத்தி வைப்பர். புலி அந்த வழியால் வரும் போது அங்கு பொறியாக வைத்திருக்கும் ஏதாவதொன்றில் பட்ட மாத்திரத்திலே அம்பு கிர்ரென்று வெளிப்பட்டு புலியைத் தாக்கும்.

மற்ற மிருகங்களைப் பிடிப்பதை விடக் காட்டுப் பன்றியை பிடிப்பது சிரமம். அவைகளைப் பிடிப்பது அபாயகரமானதும் கூட அவைகளைப் பிடிப்பதற்கு மூன்று உபாயங்களை அவர்கள் மேற்கொள்கின்றனர். ஒன்று: அவர்கள் ஓரளவு ஆழமான குழியை மண்ணில் வெட்டுகின்றனர். அக்குழிக்குள் கூரான கம்பிகளை நாட்டி வைக்கின்றனர். அதன் மேல் தடிகளை வைத்து மெல்லிய சீலை ஒன்றால் போர்த்தி மண், இலை, தழைகளால் குழி இருப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாமல் மறைத்து விடுவர். அதன் மீது காட்டுப் பன்றி உண்ணும் ஏதாவது கிழங்கைப் போட்டு விடுவர். இந்தக் குழி மாதக் கணக்காக ஒரு வருடம் வரையிலும் கூட காட்டுப் பன்றி வந்து விழும் வரையும் இருக்கும். பன்றி வந்தால் திடிரென குழிக்குள் விழும். அப்போது குத்தப்பட்டிருக்கும் கூரான கம்பியால் காயமடைந்தோ உயிரிழந்தோ காணப்படும். இரண்டு: அவர்கள் பன்றி அதிகமாக நடமாடும் இடங்களிற் பொறி அல்லது கண்ணி வைப்பர். அதனை கொடி தழைகளால் மறைத்து விடுவர். பன்றி விரும்பிச் சாப்பிடும் பொருள் ஒன்றையும் அதில் வைத்திருப்பர். பன்றி உணவுப் பொருளை கண்டவுடன் ஆவலுடன் ஓடி வந்து கவ்வும். அப்போது பொறியில் அல்லது கண்ணியில் அகப்பட்டுக்கொள்ளும். இதனில் மனிதர்களும் அகப்பட்டு பாதிப்படைவதும் உண்டு. மூன்று பெண்கள் இப்பொறியில் அகப்பட்டு உயிரிழந்தது எனக்கு ஞாபகம் வருகிறது. அவர்கள் திருட்டுத் தனமாகத் தோட்டத்திற் புகுந்து பருத்தியைப் பிடுங்கிக் கொண்டு வரும் போது பொறியிலே தற்செயலாக மாட்டிக்கொண்டனர்.

பறவைகளையும், பூச்சிகளையும் பிடிப்பதற்கு அவர்களிடம் பல முறைகள் உள்ளன. இதற்கு அவர்கள் பயன்படுத்துவது தமது கத்தியையும் காட்டில் வளரும் தடிகளையும் தான் . இவைகளைக் கொண்டு நுட்பமான முறைகளை வடிவமைத்து பறவைகளையும், பூச்சிகளையும் ஏன் சில வேளை மிருகங்களையும் பிடிப்பதில் சமர்த்தர்கள். உலகில் இந்த விடயத்தில் அவர்களை விடச் சமர்த்தானவர்கள் வேறு யாரும் இல்லை எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07

பறவைகள், மீன்கள், பாம்புகள் மற்றும் பண்டங்கள்

நான் இப்போது அங்குள்ள உயிரினங்களைப் பற்றிச் சொல்லி உங்களை மகிழ்விக்க விரும்புகிறேன். நான் முதலில் பறவைகளைப் பற்றிச் சொல்லப் போகிறேன். இந்த நாட்டில் இங்கிலாந்தைப் போல சிட்டுக்குருவிகள், டொம்ரிற்றீஸ் உள்ளான்கள், காகங்கள் என்பன உண்டு. காட்டுப்புறாக்களின் வகைகள் எங்களிடம் உள்ளதைப் போல் இல்லை. எனினும் காகங்களும், புறாக்களும் உண்டு. நான் அங்கு மரங்கொத்திகளையும், குயில்களையும் கண்டிருக்கிறேன். ஆயினும் அவைகள் அங்கு அருமையாகத்தான் தென்படுகின்றன. பெருமளவில் காட்டு மயில்கள்,சிறிய பச்சைக்கிளிகள் காணப்படுகின்றன. அங்குள்ள பச்சைக்கிளிகளைப் பேசப்பழக்குவது கடினம் ஆனால். அவர்கள் மொழியில்[22] மல்கௌடா என்று அழைக்கப்படும் பறவைக்கு சிறப்பாக பேசக் கற்றுக்கொடுக்கலாம். இது கறுப்புடன் மஞ்சள் நிறம் கலந்த கொண்டை கொண்டது. இதே பருமனுடன் இன்னொரு வகையுண்டு. அது கௌகௌடா என்று அழைக்கப்படும். அது தங்கம் போன்ற அழகிய மஞ்சள் நிறம் கொண்டது. அதையும் பேசப்பழக்கலாம்.

இன்னொரு வகை சிறிய பறவைகள் உண்டு. அவைகள் சிட்டுக்குருவியை விடப் பெரியவை. பார்ப்பதற்கு பனியின் நிறம் போன்று அழகிய நிறத்தில் இருக்கும். இவற்றின் வால் ஓர் அடி நீளம்வரை வளரும். அவைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைகள் கருநிறமாகவும், இறகின் குஞ்சம் நிமிர்ந்தும் இருக்கும். நிறத்தில் மாத்திரம் வித்தியாசமான வேறொரு வகையும் உண்டு. அது தோடம்பழ நிறத்தில் இருக்கும். அவற்றின் தலைக்குஞ்சம் நிமிர்ந்து நிற்கும். நான் ஒன்றைச் சேவல் என்றும் மற்றதைக் கோழி என்றும் நினைக்கின்றேன்.

[23]கார்லோ என்ற இன்னொரு வகைப் பறவையுண்டு. அது எப்பொழுதும் உச்ச மரக்கிளைகளிலேயே உலாவும். நிலத்துக்கு அது இறங்கி வருவதில்லை. கறுத்த நிறம் கொண்ட அவைகளின் கால்கள் குட்டையானவை. அன்னப்பறவை போன்ற அளவுடையன. அதன் தலை பார்ப்பதற்குப் பயங்கரமானதாக இருக்கும். அதன் சொண்டுகள் பருந்தின் சொண்டுகள் போன்று நீளமானதாக இருக்கும். காதுகள் போன்று தோற்றமளிக்கும். வெள்ளைப் பொட்டுகள் அதன் கன்னங்களில் காணப்படும். பொதுவாக ஐந்து அல்லது ஆறு பறவைகள் சேர்ந்து ஒரு கூட்டமாகத் திரியும். வாத்துக்கள் போன்று சதா சத்தமிட்டுக் கொண்டிருக்கும். அவற்றின் சத்தம் ஒரு மைல் தூரம் வரை கேட்கும். இப்படி அவை சத்தமிடுவதைக் கேட்டால் சிங்களவர்கள் மழைவரப்போகிறது என்று கூறுவார்கள். இதன் இறைச்சி மிகவும் சுவையானது.

வாத்துக்கள் போன்று தோற்றமளிக்கும் இன்னொரு வகைப் பறவையுண்டு. இவைகள் பெருமளவில் காணப்படுவனவல்ல. இன்னொரு வகைக் கோழி இனமுண்டு. அவைகளும் வாத்தளவு பெரியவை. அவைகள் மீன்களை உண்டு உயிர்வாழ்வன. நீரில் அவைகள் ஓரிடத்தில் மூழ்கி வெகு தொலைவில் உள்ள இன்னொரு இடத்தில் வெளிப்படுவது ஆச்சரியமாக இருக்கும். இவைகளை விட குளங்களிலும் குட்டைகளிலுமுள்ள மீன்களை உண்டு வாழும் அநேக பறவைகள் உள்ளன. அப்பறவைகள் அன்னம் போன்ற அளவுடையன. மக்கள் அவற்றை உண்பதில்லை; முதலைகளும் பிடிப்பதில்லை. அவைகள் பாட்டில் பல்கி பெருகி காணப்படுகின்றன.

அரசன், புறாக்கள், தாரா, வாத்து வான்கோழி ஆகியவைகளை பழக்கப்படுத்துவதற்காக வளர்த்து வருகிறான். ஆயினும் அவைகளைப் பழக்கப்படுத்த முடியவில்லை. வான் கோழிகள் தமது தலையின் நிறத்தை அடிக்கடி மாற்றி வருவது அரசனுக்குப் பிடிப்பதில்லை. எனினும் அரசன் அவைகளை கொன்று சாப்பிடுவதில்லை. அவன் வளர்க்கும் எதையும் கொன்று சாப்பிடமாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன் சாப்பிடுவதற்கு நல்லதாக இருந்த போதிலும் அவர்கள் அவ்வளவாக அதை விரும்புவதில்லை. பள்ளத்தாக்குகளூடாகப் பாயும் எல்லா சிறிய பெரிய ஆறுகளிலும் மீன்கள் நிறைந்துள்ளன. சிறுவர்களும் சிலரும்,அவைகள் முதிர்ச்சியடைவதற்கு முன்பிடித்து அரிசிச் சோற்றுடன் சேர்த்துச் சாப்பிடுவர். எல்லாக் குளங்களிலும் மீன்கள் நிறைந்துள்ளன. வற்றுக்காலங்களில் மக்கள் பெருந்தொகையாக அவைகளை அள்ளி எடுப்பர். அவர்களிடம் மெல்லிய பிரம்புபோன்ற குச்சிகளாலான கூடை ஒன்றிருக்கிறது. அது புனல் போன்று அடியில் அகலமாகவும் நுனியில் ஒடுங்கியுமிருக்கும். இரண்டு பக்கமும் திறந்திருக்கும். அதனைக் கொண்டு நீர் நிலைகளில் குத்தி குத்தி செல்வர். மீன் அதற்குள் பட்டால் கூடையில் மோதுவதைக் கொண்டு அறிந்து கையை விட்டு மீனை எடுப்பர். இந்த உபகரணத்தால் முழங்காலுக்கு மேல் நீர் உள்ள இடங்களில் மீன் பிடிக்க இயலாது.

மகாவெலி கங்கை என்னும் பேராறு பெருமளவு மீன்களைக் கொண்டது. சில மீன் வகைகள் சால்மன் மீன் போன்று பெரியவை. அவைகளை எவ்வாறு பிடிப்பதென்பது அவர்களுக்கு தெரியாது. வரண்ட காலங்களில் நீர் ஓடும் பாறைக்கு கீழே பானைகளை வைத்து மேலே இருந்து மரக்கிளைகளால் நீரை அடித்து மீன்களை விரட்டி பானைக்குள் மீன்களை விழவைப்பர். இதை விட வேறு வழிகள் அவர்களுக்கு தெரியாது.

கண்டி நகருக்கு அருகில் உள்ள நுழைவாசலில் மீன்கள் அரசனின் ஆணைப்படி உணவூட்டி வளர்க்கப்படுகின்றன. அவ்விடத்தில் நீரோட்டம் கூடுதலாக இருந்த போதிலும் போடப்படும் உணவுக்காக அங்கே மீன்கள் தரித்து நிற்கப் பழகிவிட்டன. நான் ஆட்களின் கைகளில் வந்து மீன்கள் உணவை எடுப்பதைக் கண்டிருக்கிறேன். அவைகளைப் பிடித்தால் மரணதண்டணை நிச்சயம். அவைகளை மன்னன் பார்த்து மகிழ்வது வழக்கம். மக்கள் இவ்விடத்தைக் கடந்து போகும் போது தமது பையிலிருந்து கொஞ்சம் அரிசியை எடுத்து மீன்களுக்கு போடுவது வழக்கம். அது அவர்களுக்கு மகிழ்ச்சியை கொடுப்பதோடு தர்ம காரியம் செய்கிறோம் என்கிற மனநிறைவையும் அவர்களுக்கு அளிக்கிறது. இதே போன்று பல இடங்களில் மன்னன் தனது பொழுது போக்கிற்காக இவ்வாறான ஏற்பாடுகளைச் செய்துள்ளான். இவ்விடங்களில் மீன்பிடிக்க அனுமதியில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்புவகைகளில் பல வகை உள்ளன. [24]பிம்பெரா என்னும் இனப்பாம்புகள் மிகப் பெரியவை. மனிதனின் இடுப்பு பகுதி அளவில் அதன் உடல் இருக்கும். அவைகள் விரைவாக நகராது. மிகத் தந்திரமாக மான்களை அல்லது கால்நடைகளைப் பிடித்து விடும். இம் மிருகங்கள் போகும் வழியில் வெறும் மரக்கட்டைகள் மாதிரி படுத்திருக்கும். அவை கிட்டவரும் போது திடீரென பற்றிப் பிடிக்கும். அதன் வால் நுனி ஆணி போன்றுள்ளது. இதனை தான் பிடிக்கும் இரையின் வாகான இடத்தில் பதித்து அமுக்கி அதனைக் கொல்லும். இரையை முழுமையாக விழுங்கும். சில சமயம் ஆண்மானின் கொம்புகளால் வயிறு கிழிபட்டு இறப்பதும் உண்டு.

மற்றது [25]பொலன்கா என்னும் நச்சுப்பாம்பு. இதன் விஷம் ஒரு மாட்டையே கொல்லும் அளவு கடுமையானது. இதில் இரண்டு வகைகளை நான் கண்டிருக்கிறேன். ஒன்று பச்சை, மற்றது சிவப்பு கலந்த நரை நிறம். உடம்பில் வெள்ளை நிற வளையங்கள் கொண்ட இந்தப் பாம்பு ஐந்து அல்லது ஆறடி நீளம் வரை வளரக்கூடியது.

நாக பாம்பு என்பது சாம்பல் நிறமுள்ள இன்னொரு விஷப் பாம்பு. இது ஏறக்குறைய நான்கு அடி நீளம் வரை வளரக்கூடியது. இது தனது நடு உடம்பிலிருந்து எழும்பி இரண்டு மூன்று மணித்தியாலம் நிற்கக் கூடியது. இதன் தலை அகலமானது. அதில் ஒரு கண்ணாடி வரையப்பட்டிருப்பது மாதிரி ஒரு சித்திரம் உண்டு. இந்தியர்கள் இதை பாம்புகளின் அரசன் என்ற கருத்தில் நோரோட்கெரா என்று அழைக்கிறார்கள். இது தீமை செய்யாது என்று கருதுகிறார்கள். நாகமும் பொலன்காவும் சந்தித்தால் ஒன்று சாகும் வரை சண்டை ஓயாது.

இந்த இரு பாம்புகளும் இவ்வாறு ஜென்மப்பகை கொண்டதற்கு சிங்களவர்கள் ஒரு கர்ணபரம்பரை கதை சொல்கிறார்கள். முன்னொரு காலத்தில், கடும் வரட்சி நிலவிய பொழுதில் இரண்டும் சந்தித்துக் கொண்டன. மிகவும் தாகமாக இருந்த பொலன்கா எங்கே குடிக்க தண்ணீர் கிடைக்கும் என்று நாகத்திடம் கேட்டது. சற்று முன்னர்தான் நாகம் தண்ணீர்க் கிண்ணத்தை வைத்து விளையாடிக் கொண்டிருந்த குழந்தைக்கு அருகில் சென்று அதனைச் செல்லமாக தட்டிக் கொடுத்து விட்டு அது வைத்திருந்த கிண்ணத்தில் தண்ணீர் குடித்து விட்டு வந்திருந்தது. பொலன்கா கேட்டவுடன் அதன் குணம் அறிந்த நாகம் தண்ணீர் இருக்கும் இடத்தைத் சொல்ல தயங்கியது. என்றாலும் பொலன்கா தாகத்தால் தவிப்பதை கண்டு மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளகிய நாகம் ஒரு வாக்குறுதியை வாங்கி விட்டு தண்ணீர் இருக்கும் இடத்தைக் கூறியது. தண்ணீர் குடிக்கும் போது குழந்தைக்கு ஒரு கெடுதலும் செய்யக் கூடாது என்பதே அந்த வாக்குறுதி. ஆயினும் மனம் கேளாமல் நாகம் பொலன்காவை பின் தொடர்ந்தது. நாகம் பயந்தது போலவே சம்பவம் நிகழ்ந்தது. குழந்தை அறியாத் தனத்தால் பொலன்காவின் தலையில் தட்டியது. உடனே கோபம் கொண்ட பொலன்கா குழுந்தையைத் தீண்டியது. குழந்தை நாகத்தின் கண்ணெதிரே உயிரை விட்டது. கொதித்த நாகம் பொலன்காவுடன் சண்டையிட்டது. அன்று தொடங்கிய சண்டை இன்னும் ஓயவில்லை. சிங்களவர்கள் ஒரே முரண்பாடு, சதா சண்டையிடும் இருவரைக் கண்டால் நாகமும் பொலன்காவும் போல என்று குறிப்பிடுவர்.

கிடுகு மேய்ந்த கூரைகளிலும் பொந்துகளிலும் பதுங்கி வாழும் [26]கரோலவா என்னும் பாம்புகள் சுமார் இரண்டடி நீளத்திற்கு வளரும். மிகவும் விஷமுள்ளவை. பூனைகள் இவற்றைக் கொன்று தின்னும்.

கெரண்டே என அழைக்கப்படும் மற்றொரு வகைப் பாம்புண்டு. அவைகள் அதிகமாகக் காணப்பட்ட பொழுதிலும் விஷமற்றவை. முன்கூறியவைகளில் ஒரு சில தான் இதனுடன் குறிப்பிடத்தக்கன. இவைகள் பறவைகளின் குஞ்சுகள், முட்டைகள் என்பனவற்றை புசிக்கின்றன. இவைகளைக் கண்டால் முயற்குட்டிகள் பயந்து ஓடி ஒளிந்து விடும். இவைகளால் மக்கள் பெரும் தொல்லைகளுக்கு உள்ளாகின்றனர்.

பல்லிகளைப் போன்ற பருமனுடைய ஹிக்கனெல்லா என்றொரு வகைப் பாம்பு ஒன்று உண்டு. இது விஷமுள்ளது. இதனைத் தொந்தரவு செய்யாவிட்டால் கடிக்காது.

[27]டிமோகுலோ என்றழைக்கப்படும் சிலந்தி ஒன்றுண்டு. இது கடும் கறுப்பு நிறமாகவும், பளபளக்கும் மயிர்களையும் கொண்டதாகவும் காணப்படும். ஒரு மனிதனின் முஷ்டி போன்ற உடம்பும் அதற்கேற்ற கால்களையும் கொண்டதாக இருக்கும். இது போர் மரங்களிலும் மரப் பொந்துகளிலும் வாசம் செய்யும். ஒரு மனிதன் இதன் கடியால் இறக்கமாட்டான். ஆனால் வேதனையால் மூர்ச்சையாகிவிடுவான்.

கால்நடைகள் பாம்புகளால் கடிபட்டு சில வேளைகளில் இறக்கின்றன. பரிகாரம் செய்யாமை, தூக்கிவிடுவது இதற்கு காரணமாகலாம். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் அவற்றால் கடிபடும் போது மாந்திரிகமோ மருத்துவமோ ஏதோ செய்கிறார்கள்.

டியுபெரியா எனப்படும் நீர்ப்பாம்புகள் இங்கே உள்ளன. அவைகள் தீங்கற்றவை.

மற்ற இடங்களில் முதலைகள் அருகி வருகின்றன. ஆனால் இங்கே அவைகள் பெருகி வருகின்றன. அவைகளைப் பற்றி முன்பு குறிப்பிட்டுள்ளேன்.

முதலை போன்ற வேறொரு உயிரினம் இங்கேயுண்டு. அதன் பெயர் கபற கொய்யாவாகும். அது ஐந்து அல்லது ஆறடி நீளம் கொண்டது. அதன் உடலில் கறுத்த, வெள்ளைப் புள்ளிகள் இருக்கும். அவைகள் அதிகமாக நிலத்தில் வாழும். ஆயினும் நீரில் நன்கு முக்குளிக்க வல்லன. தனது பிளவுபட்ட, நூல்போன்ற நாக்கை முன்னும் பின்னும் நீட்டும். இது கடிக்கவோ குத்தவோ செய்யாது. ஆனால் அதை தெரியாதவர்களுக்கு அதன் தோற்றம் பயத்தை ஊட்டும். அது ஆட்களைக் கண்டு பயப்படுவதில்லை. அது அவர்களை நக்க வரும் நாய், நரியை கண்டும் பயந்து ஓடாது, அவைகள் அதன் அருகில் குரைத்துக்கொண்டு வந்தால் சவுக்கு போன்ற வாலால் அடித்து விரட்டும். அவைகள் செத்துக்கிடந்தால் அவைகளின் உடலை உண்ணும். இப்பிராணிகள் சாப்பிடத்தக்கதன்று.

முன்னையது போன்ற இன்னொரு பிராணியுண்டு. அது உடும்பாகும். அதன் இறைச்சி சிறந்த உணவெனக் கருதப்படுகின்றது. இதன் இறைச்சியை நீங்கள் சாப்பிடும் போது வேறு இறைச்சி வகைகளை உண்டால் நீங்கள் வாந்தி எடுப்பீர்கள். அதன் இறைச்சியை மாத்திரம் வாந்தி எடுக்க மாட்டீர்கள் என்று சிங்களவர்கள் கூறுகின்றார்கள். இது அதன் சிறப்புக்கு சான்று என்று அவர்கள் சொல்வர். இவைகள் இறந்த மிருகங்களின் உடல்களை உண்ணுவதில்லை. இலைகளையும், மூலிகைகளையும் மாத்திரமே உண்கின்றன. இவை கபற கொய்யாவை விட சிறியது. மரப்பொந்துகளிலும், போர்மரங்களிலும் கறையான் புற்றுகளிலும் இவைகள் வாசம் செய்கின்றன. மேற்கிந்தியத் தீவுகளில் கைனா என்றழைக்கப்படுவது இதைத்தான் என்று நான் நினைக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாட்டில் பல வகை ஜந்துக்கள் வாழ்கின்றன. அதில் ஒன்று கஸ்தூரி எலியாகும். அது கிட்ட வந்தால் கஸ்தூரி மணம் மணக்கும். இந்த எலிகளைத் தவிர மற்ற எலி வகைகளை இந்த நாட்டில் வாழ்பவர்கள் உண்பர்.

இந்த நாட்டில் வளர்கின்றவைகளையும் உற்பத்தியா கின்றவைகளையும் பற்றிய எனது விபரிப்பு இங்கு விளைகின்ற பெறுமதியான கற்களைப் பற்றி சொல்லாவிட்டால் பூரணமாகாது.

இந்த தீவில் விளைகின்ற பெறுமதிமிக்க கற்களில் போதுமானவற்றை அரசன் தன்வசம் வைத்துள்ளான். இதனால் இவைகளை கண்டுபிடிப்பதில் அவன் அதிக நாட்டம் காட்டுவதில்லை. சில குறிப்பிட்ட இடங்களில் மாத்திரந்தான் அவைகள் விளைகின்றன. அந்த இடங்களில் கூரிய தடிகளைக் குத்தி வைத்திருப்பார்கள். இவ்விடங்களை யாரும் தொட்டாலோ தேடிப்பார்த்தாலோ இத்தடிகளின் மீது கழுவேற்றப்படுவர் என்பது இதன் அர்த்தமாகும். சில குறித்த ஆறுகள் இவ்விடங்களினூடாகப் பாய்வதால் எடுக்கும் மாணிக்கக் கற்களையும் நீலக்கற்களையும் அந்த ஆறுகளின் பெயரில் குறிப்பிட்டு அரசனுக்கு அனுப்பி வைப்பர். நான் பல வகை நிறக்கற்களை கண்டிருக்கின்றேன். அவைகள் என்ன கற்கள் என்று எனக்குத் தெரியாது. சில செர்ரி பழமளவும் சில பட்டன்கள் போன்றும் இருக்கும். அவை ஒளிபுகவிடும் தன்மையுடையன.

இங்கு பெருமளவு இரும்பும் பளிங்கும் காணப்படுகின்றன. சோல்ட் பீற்றரையும் (Salt - Petere) அவர்களால் உருவாக்க முடியும். கந்தகக்கல் இங்கேயுண்டு என்று சொல்கிறார்கள். ஆனால் அரசன் அதனை இன்னும் கண்டு பிடிக்கவில்லை. இரும்பிலிருந்து உருக்கை அவர்களால் தயாரிக்க முடிகிறது. உயரமாகவும் பெரிதாகவும் வளரும் கருங்காலி மரம் அவர்களிடம் உண்டு. ஏலக்காய், வெல்லம், சாராயம், எண்ணெய், கறுத்த ஈயம், மஞ்சள், உப்பு, அரிசி, பாக்கு, கஸ்தூரி, மெழுகு, கடுகு, என்பவைகள் அவர்களிடமுள்ளன. கடைசியாகச் சொன்னதை விற்பனைக்காக அமோகமாக விளைவிக்க முடியும். இந்தத் தீவின் முக்கிய பண்டம் கறுவாவாகும். காட்டு எருமைகள் மற்றும் காட்டுத்தேன் என்பவைகள் இங்கு அபரிமிதமாக உண்டு. காட்டுத்தேன் போர் மரங்களிலும் மரப் பொந்துகளிலும் காணப்படுகின்றன. யானைத்தந்தமும் பருத்தியும் இங்கு தாராளமாக உள்ளன. பருத்தியை நூற்று துணிகளாக்கி அது விளைய முடியாத மலை நாட்டில் கொண்டு போய் விற்கிறார்கள். இந்த நாட்டு மக்கள் சுறுசுறுப்பானவர்களாகவும் உழைப்பாளிகளாகவுமிருந்தால் இந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களை அதிகமாக உற்பத்தி செய்து விற்கலாம். ஆனால் சிங்களவர்கள் இயற்கையாகவே சுறுசுறுப்பில்லாதவர்கள்; சோம்பேறிகள். அவர்களின் தேவைகள் நிர்ப்பந்தித்தால் ஒழிய வேலை செய்ய மாட்டார்கள்.

அடிக்குறிப்புகள்

பாகம் - I அத்தியாயம் - 1

1. Jafnipatan
2. Mannur
3. Trenkimalay
4. Batticalow
5. Columbo
6. Negamba
7. Colpentine

பாகம் I அத்தியாயம் – 2

8. Candy
9. Ouvah
10. Anurodglurro
11. Porloon
12. உப்பளம்

பாகம் I அத்தியாயம் – 3

13 Tanna

பாகம் I அத்தியாயம் – 4

14. கடுக்காய் ?
15. ஆடாதோடை ?

பாகம் I அத்தியாயம் – 5

16. Sridrio mal
17. முல்லை?

பாகம் I அத்தியாயம் – 6

18. முசுறு
19. கட்டெறும்பு
20. கறையான்
21. புற்றுகள்

பாகம் I அத்தியாயம் – 7

22. மைனா
23. Carowala?
24. மலைப்பாம்பு / வெங்கினாத்தி
25. புடையன்
27. ஒட்டக சிவிங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் II

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01

கண்டியின் தற்போதைய அரசன்

நான் இதுவரையும் இந்த நாட்டின் உணவுப் பொருட்களையும் செல்வங்களையும் பற்றியே கூறினேன். அடுத்து என்னுடைய விபரிப்பு ஆட்சிமுறைகளைப் பற்றியதாக அமையும். அந்த ஒழுங்கில் முதலில் அரசனைப்பற்றியும் அவனோடு தொடர்பான விடயங்களைப் பற்றியும் சொல்லத் தொடங்குகிறேன்.

புராதன காலத்தில் இந்நாடு ஒன்பது ஆட்சிப்பிரிவுகளைக் கொண்டிருந்தது. ஒவ்வொன்றிற்கு ஓர் அரசன் இருந்தான். தற்போது காலத்தின் மாற்றத்துக்கேற்ப அவைகள் எல்லாம் ஓர் அரசனின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. ஆனால் அவன் கடும் கொடுங்கோலனாகவும் எதேச்சாதிகாரியாகவும் காணப்படுகிறான். நாங்கள் முதலில் அரசனின் தனிப்பட்ட திறமைகளையும் அடுத்ததாக அவனின் அரசியலையும் பேசுவோம்.

அரசனது தனிப்பட்ட திறமைகளைப் பற்றி பேசுகின்றபோது அவனது பிறப்பும், தாய் தந்தையரும், இயல்புகளும், அவனது சமய நம்பிக்கைகளும், அந்தஸ்த்தும், நடத்தைகளும், சந்தோசங்களும், பொழுதுபோக்குகளும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்க அரசன் என்னும் பொருள்படும் ராஜசிங்கன் என்பது அவனது பெயராகும். அவன் இரத்த தொடர்பில் அரச வம்சாவழியைக் கொண்டவனல்லன். முன்னைய அரசன் தனது மனைவியையும் இரண்டு இளவரசர்களையும் விட்டு இறந்தான். டொனா கதரினா என்னும் பெயரைக் கொண்ட அவள் போர்த்துக்கீசர்களால் ஞானஸ்ஞானம் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ பெண். அதன் பின்னர் அவள் போர்த்துக்கீச மொழியில் டிரிநாச்சி என்று அழைக்கப்பட்ட மதகுருவுக்கு வாழ்க்கைப்பட்டாள். அந்தக்குரு மூலமாக அவளுக்கு பிறந்தவனே இந்த அரசன். அந்தக்குரு, இளவரசர்கள் இளவயதினராக இருந்ததால் நாட்டை ஆண்டார். அவர் வயது போனமையால் இராச்சியத்தை மூன்றாகப் பிரித்தார். அப்போது நாட்டின் சிறந்த பகுதிகள் தனது சொந்த மகனான ராஜசிங்கா பெறத்தக்க வகையில் தந்திரம் ஒன்று செய்தார். பிரிக்கப்பட்ட மூன்று இராச்சியப்பிரிவுகளும் மூன்று காகிதத்துண்டுகளில் எழுதி ஒரு குடத்துக்குள் போடப்பட்டன. எந்தத் துண்டில் எந்தப் பிரிவு எழுதப்பட்டுள்ளது என்பதை ஒருவருக்கு மறைமுகமாகத் தெரியப்பண்ணி அவரை கொண்டு ஒவ்வொருவருக்கும் ஒரு துண்டை எடுத்துக்கொடுக்க ஏற்பாடு பண்ணப்பட்டது. இந்த வகையில் ஏற்கெனவே திட்டமிட்டபடி கண்டி மேல் இராச்சியம் எழுதிய துண்டு ராஜசிங்கவுக்குக் கொடுக்கப்பட்டது. பின்னர் இதை மறைக்க அரசனின் இறுதி விருப்பம் இது என்று வதந்தி பரப்பப்பட்டது. இந்த மூவரும் போர்த்துக்கீசரை எதிர்த்துக்கொண்டு நாட்டை ஆண்டனர். விரைவில் அவர்கள் தமக்கிடையே முரண்பட்டு பகையை வளர்த்துக்கொண்டனர். கடைசியில் இராஜசிங்கவே வெற்றி பெற்று மூன்று இராச்சியப் பிரிவுகளையும் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தான். அரசனின் மக்களில் இளையவன்-மாத்தளை பகுதி இராச்சியத்துக்கு அரசனாகப் போனவன்-தோல்வியடைந்து கொழும்புக்கு ஓடி போர்த்துக்கீசரிடம் சரணடைந்தான். அவர்கள் அவனைக் கோவாவிற்கு அனுப்பிவைத்தனர். அவன் அங்கே மரணமானான். கோரசிங்க என்ற பெயரை உடைய மூன்றாமவன்-ஊவாவுக்கு அரசனாக இருந்தவன்-பிடிபட்டு கைதியாக இருக்கும் போது கண்டியிற் காலமானான்.

தற்போதைய அரசன் ராஜசிங்க உயரமானவன் இல்லையாயினும் கட்டான உடலமைப்புக் கொண்டவன். ஓரளவு கறுப்பு; சதா அங்குமிங்கும் நோட்டமிடும் உருண்டைக் கண்கள்; தைரியமான பார்வை; தொந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிறு; வழுக்கை தலை; பெரிய தாடியும் மீசையும், இத்தியாதி இலட்சணம் கொண்டவன். தனது செயல்பாடுகளிலும் நடத்தைகளிலும் துடிப்புடன் செயல்படும் அவனின் வயது எழுபதுக்கும் எண்பதுக்குமிடையே இருக்கும். அவனது மனவோட்டத்தை அவனது முகக் குறிப்பால் உணர முடியாது. அவனது உடையலங்காரம் மிகவும் விநோதமாகவும் ஆச்சரியமூட்டுவதாகவும் இருக்கும். அது அவனது நாட்டுப் பாணியானதன்று. அது அவனது தனிப்பாணியானதாகும். அவன் தனது தலையில் ஒரு தொப்பி அணிந்திருப்பான். யேசுசபையினரைப் போல அத்தொப்பியில் நான்கு மூலைகளிருக்கும். தொப்பியில் ஒரு இறகு செருகப்பட்டிருக்கும். போர்த்துக்கீச பாணியில் அவன் பின்னால் ஒரு குஞ்சம் தொங்கும். அவன் அணிந்திருக்கும் சட்டை விசித்திரமானது. அது எப்படியென்று என்னால் விபரிக்க முடியாதுள்ளது. சட்டையின் உடலை ஒட்டிய பாகம் ஒரு நிறமாகவும் கைப்பாகம் வேறொரு நிறமாகவுமிருக்கும். அவன் முழங்காலுக்கு கீழே வரத்தக்கதாக காற்சட்டை அணிந்திருப்பான். சப்பாத்தும் கால்மேசும் போட்டிருப்பான். இந்த வகை உடையணிகளுடன் எப்போதும் இருப்பான் என்று கூறமுடியாது. அவைகளை அப்போதைய மனநிலைக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்வான். அவனது தோளில் இருந்து தொங்கும் பட்டியில் அவனது உடைவாள் இருக்கும். எந்தவொரு சிங்களவரும் இப்படி உடையணிய விரும்பமாட்டார்கள். அநேகமாக அவன் தனது கையில் பிரம்பை வைத்திருப்பான். பலவகை நிறங்கள் அதில் காணப்படும். பிரம்பில் பெறுமதியான கற்கள் பதிக்கப்பட்டிருக்கும். பிரம்பில் கையில் பிடித்திருக்கும் இடம் தங்கம் பொருத்தப்பட்டிருக்கும்.

கரைநாட்டிலிருந்து வந்தவளான அவனின் பட்டத்து அரசி ஒரு மலபார் பெண்ணாவாள். அவள் இப்போது அவனோடு இல்லை. அவள் இருபது வருடமாக கண்டியில் வாழ்கிறாள். அவள் அவனிடமிருந்து பராமரிப்புத் தேவைகளையோ பணியாட்களையோ எதிர்பார்ப்பதில்லை. ஒரு போதும் அரண்மனையை விட்டு வெளியே வந்ததுமில்லை. அவள் அவனுக்கு ஒரு மகனைப் பெற்றாள். அவனுக்கு என்ன நடந்தது என்பதை பிறகு சொல்வேன். அவனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அது தனது இளமைப்பருவத்திற் பரிதாபமான துரதிர்ஷ்ட வசமான முறையில் இறந்து விட்டது. அதைப்பற்றியும் பின்னர் விபரிப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தனது அரச சபையை இப்போது டிக்லிக்கு நகரத்துக்கு மாற்றியுள்ளான். அதற்குக் காரணம் கலவர காலங்களில் ஓடித்தப்ப வாய்ப்பிருக்கிறது என்பதாகும். அங்கே ஒரு பெரும் குன்று இருக்கிறது. அதன் ஓரத்தில் தான் அவன் தனது அரண்மனையை அமைத்துள்ளான். அந்த மலையில் ஏறினால் அவனை யாரும் கண்டுபிடிக்க முடியாது. அப்படியான பாதுகாப்பான இடம் அது. அவனது அரண்மனையின் சுவர் களிமண்ணால் ஆனது.கூரை கிடுகுகளால் வேயப்பட்டது. அந்த அரண்மனைக்குள் அநேக வீடுகள் உள்ளன. சில வீடுகள் மாடிகளையும் கொண்டிருக்கும். அவைகள் அழகாக காற்று வரத்தக்கதாக திறந்திருக்கும். படிகளில் வைத்திருக்கும் கிராதிகளில் ஒன்று கருங்காலி மரத்திலும் மற்றது, வேறு மரத்திலும் இருக்கும். வேறு மரத்தில் இருக்கும் கிராதிகள் வேவ்வேறு வண்ணம் பூசப்பட்டவையாக இருக்கும். இம்மாளிகை பல கம்பீரமான வாசல்களையும் பதாகைகளையும் கொண்டது. அவைகள் சிறப்பான வேலைப்பாடுகளாலானவை. பூட்டுகளும் தாழ்ப்பாளும் இரும்பால் ஆக்கப்பட்டவை, யன்னல்கள், கதவுகள் வெள்ளியினால் கரைபோடப்பட்டிருக்கும். பொக்கிச களஞ்சியங்களில் ஒவ்வொரு மூலையிலும் மண்ணாலாகிய குடங்கள் வைக்கப்பட்டிருக்கும். இவைகள் அலங்காரத்தின் பொருட்டாக அல்லது புதுப்பாணிக்காக இருக்கலாம். அத்தோடு மண்ணாற் செய்த பூக்களும் கொத்துக்களும் தொங்குவது போல் உள்ளன. கோவில்கள் தவிர, எந்த வீடும் அவ்வாறில்லை. அறியாதவர்களை இந்த அமைப்பு மரங்கள் நிறைந்த மனைகள் என்று எளிதில் ஏமாற்றி விடக்கூடியது. அரசனின் கட்டளைக்கேற்பப் பல வளைவுகளையும் திருப்பங்களையும் கொண்டு கட்டப்பட்டது. அரசனால் நியமிக்கப்பட்ட காவலாளிகள் எல்லாக் கதவுகளிலும் வழிகளிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அரசனின் அனுமதியில்லாமல் யாரையும் உள்ளே அனுமதிக்கமாட்டார்கள். இந்த அமைப்பின் தந்திரம் என்ன வென்றால், எந்த இடத்தில் அரசன் இருக்கிறான் என்பதையோ, அவன் இருக்கிறானோ இல்லையோ என்பதையோ இலகுவிலே தீர்மானிக்க முடியாததாகும்.

அவனிடம் இரவிலும் பகலிலும் காவல் புரியும் காவலர்கள் உண்டு. அவர்கள் ஒவ்வொருவரையும் அவன் எங்கே நியமித்திருக்கிறானோ அங்கே அவர் காவல்புரிய வேண்டும். சாப்பிடுதல் போன்ற காரியங்களில் ஈடுபடும் நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் அவர் அவ்விடத்தை விட்டு நகரக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு நேரத்தில் காவல் கடமை மிகவும் கடுமையாக்கப்பட்டிருக்கும். காவலாளிகள் கண்ணோடு கண்மூடாமல் காவல் கடமையில் ஈடுபட்டிருப்பர், யாருடனும் கதைக்க மாட்டார்கள். இரவில் அவர்களின் கொமாண்டர்கள் அவர்களுக்குத் தெரியாத இடங்களிலிருந்து அவர்களை நோட்டமிட்டுக் கொண்டிருப்பர், அந்தக் காவற் கடமை முடிந்தவுடன் தாரையும் தம்பட்டையும் முழங்கும். இது அரசனின் நேரம் தொடங்கிவிட்டதென அறிவித்து மக்களை எழுப்புவதற்காகும். இங்கே யானைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஏதும் கலவரங்கள் ஏற்பட்டால் ஆட்களை நசுக்கிக் கொல்வதற்காகவே அவை அங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவனிடம் காபிரிகள் அல்லது நீக்ரோக்கள் வேலை செய்கின்றனர். அவர்கள் மீது அரசன் தனது சொந்த நாட்டவர்களை விட கூடிய நம்பிக்கை வைத்துள்ளான். அவர்கள்தான் அவனின் தனிப்பட்ட அறையில் காவலில் இருப்பவர்கள்.

நிலைமை சரியில்லாத காலங்களில் ஒற்றர்களை அனுப்பி காவலர்கள் சரிவரக் கடமை புரிகிறார்களா என்பதை அறிந்து வந்து சொல்லும்படி ஏவுவான். அந்த ஒற்றர்கள் ஒரு காவலாளி நித்திரை கொள்வதைக் கண்டால், அவனின் தொப்பி, ஆயுதங்கள், போன்றவற்றை எடுத்து வந்து அரசனிடம் ஒப்படைப்பார்கள். அரசன் அவனை அழைத்து, கண்டித்து, எதிர்காலத்தில் கவனமாக இருக்க வேண்டும் என்று கூறி அப்பொருட்களை அவனிடம் திருப்பிக் கொடுப்பான். இந்த ஒற்றர்கள் இங்கும் அங்கும் என்ன கதைக்கிறார்கள், ஏதும் நடக்கக்கூடாதது நடை பெறுகின்றனவா என்பதையெல்லாம் நோட்டமிடுவர்.

முன்னைய காலங்களில் அரசனே மாறுவேடம் பூண்டு வெளியிற் போய், தெருக்களில் நடைபெறுவனவற்றை அவதானித்து வந்தான், ஆனால் இப்போது அவ்வாறான காரியங்களைச் செய்வதற்கு துணிவதில்லை.

அவனின் பணியாளர்களில் அநேகர் நல்ல குடும்பத்திலிருந்து வந்த இளைஞர்களும் பையன்களுமாவார். தனது திசாவைகளிடமும் ஆளுநர்களிடமும் சொல்லி, நாட்டின் பல பாகங்களிலும் வாழும் நல்ல வம்சாவழி கொண்ட குடும்பங்களிடமிருந்து பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புமாறு கூறுவான். அதற்கிணங்க தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டவர்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள். அவர்களின் முன்நெற்றி மயிர் சிரைக்கப்பட்டும் பின் மயிர் தொங்கிக் கொண்டும் இருக்கும். அவர்களிடம் ஆண் புணர்ச்சி பழக்கமோ வேறு தீய பழக்கமோ இருப்பதாக நான் கேள்விப்பட்டதில்லை.

அரசன் தனது உணவைத் தயாரிக்கப் பல பெண்களை வைத்துள்ளான். பல வேளைகளில் அவன் தனக்குத் தேவையான அழகான பெண்களைத் திரட்ட ஆட்களை அனுப்புவான். அவர்கள் திருமண மானவர்களாகவுமிருக்கலாம். திருமண மாகாதவர்களாவுமிருக்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் திரும்பி ஒரு போதும் வரமாட்டார்கள். நான் இந்த நாட்டில் இருந்த போது திருமணமாகிய, திருமணமாகாத அழகிய வெள்ளை நிறமுள்ள போர்த்துக்கீச பெண்களைப் பிடித்து அவன் சேவைக்கு அனுப்பினர். அவனது பார்வைக்கு அழகாகத் தெரியாதோர் திருப்பி அனுப்பப்பட்டனர். அவனுக்குப் பிடியாத கருமங்களைப் புரிந்தோர் ஆற்றில் வீசப்படுவார்கள். பெண்களுக்கு அவன் மரணதண்டனை கொடுப்பது இப்படித்தான். சில பெண்கள் சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவார்கள். அவனிடம் ஆசைநாயகிகள் குறைவு, ஒரு சிலர்தான் அரண்மனைக்குள் இருக்கின்றனர். சமையற் கட்டிலிருந்து அழகிய பெண்களை எடுத்துக்கொள்ளலாம். ஆயினும் அவ்வாறு நடந்ததாக தகவல் இல்லை, ஏனெனில் தனக்குப் பிடித்த அழகான பெண்களைச் சமையல் வேலைக்கு அவன் அனுப்பி இருக்கமாட்டான். அவனுக்கு பிடித்த பெண்கள் பலர் நகரத்தில் உள்ளனர். அவர்கள் இருக்கும் இடத்துக்கு புதியவர்கள் யாரும் வர அனுமதியில்லை. அவர்கள் அரண்மனைக்கு அருகில் வரவும் முடியாது. இந்த நகரத்தில் ஒரு வழக்கம் உண்டு. யாராவது அடிமைகள் எஜமானை விட்டு ஓடி வந்தால், அவனுக்கு எஜமானன் சேவையில் இருந்து விடுதலை கிடைக்கும்; ஆனால் அவன் இங்கு அடிமையாகச் சேவை புரிய வேண்டும்.

அவன் சில வேளையில் உல்லாச நடைபயில்வதுண்டு. அவன் நடப்பதற்கென்று பிரத்தியேகமான நடைபாதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஒப்பம் செய்த கற்பலகைகள் பரப்பப்பட்டு எண்ணையிட்டுப் பளபளமாக்கி பக்கத்தில் வெள்ளையடிக்கப்பட்ட அந்த நடைபாதையிலேதான் அவன் நடப்பான். அந்த நடைபாதை உயரமாக இருக்க வேண்டும்; மக்கள் அண்ணாந்து தான் அவனைப்பார்க்க வேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் தனது படாடோபத்தை எக்காரணம் கொண்டும் எப்பொழுதும் விட்டுக்கொடுக்கமாட்டான். அவன் அதிகம் வெளியிஙற போவதில்லை. அப்படி போக நேர்ந்தால் ஆயிரக்கணக்கான படை வீரர்களுக்குத் தயாராகும்படி கட்டளை போகும். பறை, தாரை, தம்பட்டை முழங்க, குழல் ஊத, பாடகர்கள் பாடிக்கொண்டு வாசற் படியில் நிற்பர். யானை, குதிரை படை வீரர்கள் தமது கொடிகளுடன் அணிவகுத்து நிற்பர். அவனின் படையில் ஒல்லாந்து, போர்த்துக்கீசப் படை வீரர்களும் இருக்கிறார்கள். அவர்களும் தத்தமது கொடிகளுடன் தயாராகுவார்கள். இவைகள், இவர்கள் எல்லாம் தயாராகி விட்டாலும் தனது செருக்கைக் காட்டுவது போல அரசன் உடனே வெளியே வரமாட்டான். சில வேளைகளில் அவர்களையெல்லாம் கலைந்து வீட்டுக்குப் போகுமாறு கட்டளை வரும். அப்படி மூன்று நான்கு தரம் தயாராக வைத்து ஒரு தடவை வெளிவருவான். சில வேளைகளில் வெளியில் இருக்கும் யாருக்கும் தெரியாமல் அரண்மனைப் பணியாளருடன் வெளியே வருவான் அவன் வெளிக்கிட்டதைக் கண்டு அவர்கள் விழுந்தடித்துக் கொண்டு தயாராவர். சில வேளைகளில், மிகவும் அரிதாக அவன் குதிரையில் அல்லது யானையில் ஏறி வருவான். வழமையாகப் பல்லக்கைத்தான் பாவிப்பதுண்டு. பல்லக்கின் காவிச் செல்லும் மூங்கிற் சட்டத்தின் நுனியில் வெள்ளிப்பூண் போடப்பட்டிருக்கும். பல்லக்கு நல்ல வேலைப்பாடமைந்ததாக இருக்கும். பல்லக்கை காவுவதற்கு நல்ல உறுதியான ஆட்கள் அவனிடம் உள்ளனர். ஆயினும் அங்குள்ள பல்லக்குகள் இந்தியாவிற் பாவிப்பன போன்று வேலைப்பாடமைந்தவை அல்ல.

குளங்களின் கரையில் அவன் தங்குவதற்கென்று பிரத்தியேகமாக அமைந்த வீடுகளை நோக்கியே வருவான். இவ்விடங்கள் மாளிகையிலிருந்து ஒரு மஸ்கேற் தூரத்துக்கும் குறைவானது நான் நினைக்கிறேன், அவன் இவ்வாறு வந்து தங்குவது ஒரு மாற்றத்திற்காகவாகும்.

அவனது பெருமையை எடுத்துக்காட்டும் இன்னொரு சம்பவம், தூதுவர்களை வரவேற்பதாகும். தாரை, தப்பட்டை, பறை போன்றன முழங்க குழல் ஊதிக் கொடிகளை தாங்கி ஒரு குழாம் முன்னர் செல்லும். அதன் பின்னர் பிரதானிகள் சகிதம் படையினர் அணிவகுத்துச் சென்று தூதுவர்களை வரவேற்பர். அவர்கள் வரும் வழிபூராகவும் அலங்காரமாக வெட்டப்பட்ட இலைகளும் புற்களும் தொங்கும். வீதியின் இரு மருங்கிலும் பதாகைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிகளையும் தாங்கிய ஆட்கள் நிற்பாட்டப்பட்டிருப்பர். வரவேற்று அழைத்து வரப்பட்ட தூதுவர்கள் அவர்களுக்கென்று தயாராக வைத்திருக்கும் வீடுகளில் வைக்கப்படுவர். அவர்கள் இந்த நாட்டில் தங்கி இருக்கும் காலமளவும் உணவுகளும் பானங்களும் அரச செலவில் வழங்கப்படும். அவர்கள் விரும்பிய பொருட்கள், பரிசுப்பொருட்கள் யாவும் வழங்கப்படும். அவர்களின் தேவைகளை நிறைவேற்றச் சுறுசுறுப்பான பணியாளர்களும், அழகிய இளம் பெண்களும் நியமிக்கப்பட்டிருப்பர். பார்த்து மகிழும் விளையாட்டுக்களும் பொழுது போக்குகளும் அவர்களுக்குக் காண்பிக்கப்படும். தூதுவர்கள் தங்கி இருக்கும் வீடுகளிற் பெரிய வெள்ளைச்சீலை தொங்க விடப்பட்டிருக்கும். அவ்வீடுகளுக்குக் காவலாகத் தலைமை கொமாண்டர்களும் படைவீரர்களும் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பார்கள். அவர்கள், அரசனைத் தவிர வேறு யாரையும் தூதுவர்களுடன் பேச அனுமதிக்கமாட்டார்கள். அரசன் அவர்களுடன் பேச விரும்பும் போது சிறந்த உடை உடுத்தி அவர்களின் உடை வாட்கள் பக்கத்தில் தொங்க அரச சபைக்கு அழைத்து வரப்படுவார்கள். இந்த ஏற்பாடுகள் அவர்களுக்கு மிக்க கௌரவமாகவும் மதிப்பாகவும் இருக்கும். அதே நேரம் அவைகள் அரசனின் கீர்த்தியையும் காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02

அரசனின் குணங்களும் குறைகளும் பொழுதுபோக்குகளும் சமயமும்

நாங்கள் அரசனது குணங்களைப் பற்றி யோசித்தால் அவனின் தன்னடக்கம், நோக்கம், தற்பெருமை, கொள்கை, பாசாங்குத் தனம், குரூரம், இரத்த வெறிபிடித்த சர்வாதிகாரம் என்பவைகளைக் கருத்தில் கொள்ள வேண்டியதாக உள்ளது.

அவன் தனது உணவிலும் சிற்றின்ப விவகாரங்களிலும் தன்னடக்கம் மிக்கவன். அவனது நாட்டில் கிடைக்கக்கூடிய எல்லா வகையான சிறந்த உணவுகளும் அவனது சாப்பாட்டு மேசைக்கு வரும். ஆனால் அவன் விரும்பிச்சாப்பிடுவது இலைக்கறி வகைகளையும் பழவகைகளையும் தான். அதுவும் ஒரு நாளைக்கு ஒரு தடவை மட்டுமே. எந்தப் பொருளையும் அவனுக்கு உண்பதற்கோ குடிப்பதற்கோ கொண்டுவரும் போது அதை வெள்ளைத்துணியால் சுற்றியே கொண்டுவர வேண்டும். அதைக்கொண்டு வருபவர் தனது வாயும் மூக்கையும் தடித்த துணியால் கட்டி இருக்க வேண்டும். அதன் நோக்கம் அதைக் கொண்டுவருபவரின் எச்சிலோ மூச்சுக்காற்றோ அதன் மீது பட்டுவிடக்கூடாது என்பதாகும். அவனது சாப்பாட்டு மேசையில் ஒரு தங்கத்தட்டு இருக்கும். அதன் மீது வாழையிலை ஒன்று போடப்பட்டிருக்கும். உணவுப்பொருட்களைத் தட்டில் எடுத்து போடுவதற்கென்று உயர் குலத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரும் உணவுப்பொருட்களை மேசை மீது கொண்டு வைப்பவரைப் போலத் தனது வாய் மூக்கை துணியினால் மூடிக்கட்டி இருக்க வேண்டும். அவர் உணவுப் பொருட்களைக் கரண்டியாற் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து தட்டிற் போடுவார். மேசையருகே உள்ள குற்றியில் இருந்து அதனை அரசன் உண்பான். இதைப்போலத்தான் அவனின் பெண் உறவும். அது மிகவும் அந்தரங்கமானது, யாராலும் அறியமுடியாதது.

சொல்லப்போனால் அவன் தனது பட்டத்து ராணியைச் சந்தித்து வெகுகாலமாகிறது. அவள் இருக்கும் கண்டி நகரத்துக்கு அவன் போய் இருபது வருடமாகிறது. அவன் தனது அரசசபையிற் பரத்தமையையோ விபச்சாரத்தையோ அனுமதிப்பதில்லை. பெண்கள் தொடர்பில் அவன் கறாரானவன். பிரபுக்கள் யாரும் கெட்ட நடத்தை கொண்டவர்களாக இருப்பதை அவன் கேள்விப்பட்டு, அது ஊர்ஜிதமானால் அவர்களுக்கு மரணதண்டனை விதிப்பதோடு, அப்பெண்ணுக்கும் கடும் தண்டனை கிடைக்கும். இதற்கென்றே ஒற்றர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான விடயங்களில் ஆத்திரம் வரும்போது எல்லாப் பெண்களையும் நகரத்துக்கு வெளியே போகுமாறு உத்தரவிடுவான். அவன் ஆத்திரம் அடங்கியதை அறிந்து அப்பெண்கள் மெல்ல மெல்ல அங்கு வருவார்கள், ஆயினும் அவர்களைக் காவலர்கள் அனுமதிக்க மாட்டார்கள். சிலர் ஆண்கள் உடையில் மறைந்து வரமுயல்வர். இது கண்டு பிடிக்கப்பட்டால் அவர்கள் ஒருபோதும் வீட்டுக்கு வரமுடியாது. அந்தப்பிரபுகள், அரசசபையில் இருக்கும் காலத்தில், தங்கள் மனைவிமாருடனோ வேறு பெண்களுடனோ உறவுகொள்ள முடியாது. அடிமைகளையும், குறைந்த தரத்தில் உள்ளவர்களையும் தவிர்த்து, மற்றவர்கள் பெண்தொடர்பு கொள்ள அனுமதியில்லை. பெண்களோடு தொடர்பு கொள்ளும் பிரதானிகள் மீது கலகக்காரர்களைவிட அவனுக்கு வெறுப்பேற்படுகிறது. இதனால் அவனைச் சந்திக்க வருபவர்கள் தங்களின் மனைவியுடனோ மற்ற பெண்களுடனோ தொடர்பு கொள்ளவில்லை என்பதற்கு உறுதியளிக்க வேண்டும்.

ஆனால் இந்தப் பெண்பித்தில் அவன் தங்கு தடையற்ற வெறிபிடித்தவன் என்பதை, அவன் மூலமாக அவனது மகளுக்கு ஒரு குழந்தை பிறந்தது எடுத்துக்காட்டுகிறது. குழந்தை பிறக்கும் போது தாயும் குழந்தையும் இறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டனர். இந்த முறைதவறிய உறவு அரசர்களுக்கு அனுமதிக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. அதாவது உரிமையுள்ள வாரிசு ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக இந்த முறைதவறிய உறவு அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டதாம். மற்றவர்களுக்கு இது அருவருக்கத்தக்கதாகும். கடும் தண்டனைக்குரிய குற்றமாகும். அதனால் இங்கு வழமையாகச் சொல்லப்படும் பழமொழி ஒன்றுண்டு. அது, ஒருவரும் பிச்சைக்காரர்களையும் அரசனையும் தண்டிக்க முடியாது. ஒருவன் மிக உச்ச உயரத்தில் இருந்தால் அவனை ஒருவராலும் ஒன்றும் செய்யமுடியாது. அதே போல் ஒருவன் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தால் அவனைத் தண்டிக்க எவரும் வெட்கப்படுவர் என்பது அப்பழமொழியின் கருத்தாகும்.

அவனுடைய தற்பெருமையும் சுயகௌரவத்தின் மீதுள்ள பற்றும் அளவிட முடியாதவைகளாகும். இது மக்கள் அவனை எதிர்கொள்ளும் விதத்தில் இருந்து இப்படித்தான் செய்ய வேண்டும் என்று அவன் கட்டளை பிறப்பிக்கா விட்டாலும்-வெளிப்படுகிறது. அவன் முன்னிலையில் அவர்கள் முகம் குப்புற விழுந்து எழும்புவார்கள். இவ்வாறு பலதடவைகள் செய்வார்கள். பின்னர் அவர்கள் முழுங்காலில் நிற்பார்கள். அப்படி அவன் அவர்கள் முன்னிலையை விட்டு நகரும் வரை நிற்பார்கள், அவர்களைப் போகுமாறு அவன் கூறினால், அப்படியே இருந்தவாறு அவனுக்குப் புறமுதுகு காட்டாமல் அவன் பிரசன்னம் மறையும் வரை நகர்வார்கள். ஆனால் கிறிஸ்தவ மக்கள் அவ்வாறு செய்ய வேண்டும் என அவன் எதிர்பார்ப்பதில்லை.

கடவுளை மகிமைப்படுத்தும் கொண்டாட்டங்களிலும் சடங்குகளிலும் அவன் கலந்து கொள்வதில் அக்கறை காட்டுவதில்லை. அவனின் நடவடிக்கைகள் அவனை அவர்களின் அரசனிலிருந்து கடவுளாக காட்டுகின்றன. அவன் அவர்களின் கடவுளாகவே கருதப்படுகின்றான். நான் அந்த நாட்டில் இருந்த ஆரம்பகாலங்களில் அவன் வெளியே வருவதைக் காணவில்லை. இப்போது அவன் வெளியே வருகின்றான் என்று கேள்விப்படுகின்றேன். அவன் வயது போனவனாக இருந்த பொழுதிலும் அரசன் என்ற மிடுக்கு குறையவில்லை. அவன் அதிகம் புளகாங்கிதம் உறுவது அவனுக்கு வழங்கப்படும் படோடோபமான பட்டங்களாலும் விருதுகளாலுமாகும். மகாவௌல் என்பது பெருமைமிக்கவன் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் எங்கள் மொழியில் அதன் சரியான பொருளை வெளிப்படுத்த முடியாது. ஹென்ரவ்லன் பௌடோனிட் என்றால் கீர்த்தி மிக்க அரசன் என்பது பொருளாகும். அரசன் அவர்களிடம் கதைத்தால் அவர்களின் ஒரே பதில் ஒய்வோ என்பதாகும். அதன் பொருள் நீடுவாழ்க. ஆனால் அவர்கள் தங்களுக்குட் கதைக்கும் போது நாய் என்று ஏளனமாக அரசனைக் குறிப்பிடுவர். அரசனுக்கெதிரான கலவரம் ஒன்று மிக அண்மைக்காலத்தில் நடந்தது. அதிலிருந்து தன்னை விட பெரும் சக்தியொன்று இந்த மண்ணில் இருக்கின்றதென்பதை கண்ணால் கண்டும் உணர்ந்தும் கொண்டான். அதனால் தன்னையே கடவுள் என்று கருதுவதற்கு பயப்படுகிறான்.

1675 இல் அரசனின் வலிமையான தளபதியாக செயற்பட்டவன், ஒல்லாந்தருக்கெதிரான போரில் குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்டியவன், அரசனுக்காகப் பல நல்ல காரியங்களை செய்தவன், ஒல்லாந்தர்களைப் பல துறைமுகங்களிலிருந்து விரட்டியடித்தவன், பலரைச் சிறைப்படுத்தியும் கொன்றும் உள்ளவன், இச் செயல்களைச் செய்த தளபதி ஒருவன் மீது அரசனுக்குப் பொறாமை ஏற்பட்டுவிட்டது. அரசன் அவனைவிட வலியவன் என்பதைக் காட்டுவதற்காக அவன் தலையைக் கொய்ய நடவடிக்கை மேற்கொண்டான். இதை எப்படியோ அறிந்த அந்தத் தளபதி கொழும்புக்கு ஓடி, ஒல்லாந்தர்களிடம் அடைக்கலம் புகுந்தான். தனது மனைவியையும் பொருட்களையும் அவன் தன்னுடன் எடுத்துக்கொண்டு போனது அரசனுக்கு பெரும் ஏமாற்றம். வேறொரு தளபதியை அவன் இடத்திற்கு நியமித்தான். ஓடிப்போனவனின் வீட்டையும் மீதமிருந்த பொருட்களையும் புதிய தளபதிக்கு வழங்கினான்.

இந்த அரசன் சம்பந்தப்பட்ட இரு சம்பவங்களை இங்கு தருதல் வேண்டும். முன்பெல்லாம் வருடப்பிறப்பன்று நாட்டில் உள்ள உயர்ந்த, தாழ்ந்த குடியினரெல்லாம் அரசனுக்கு ஏதாவது பரிசுப் பொருட்களை அளிப்பார்கள். அரசனும் அவைகளைப் பெற்றுக்கொள்வான். பின்னர் அவைகளை பொக்கிசக் களஞ்சியங்களில் இடுவதற்கு ஏற்பாடு பண்ணுவான். இவ்வாறு வாங்குவது தனது பெருமைக்கு அழகல்ல என்று மெல்ல மெல்லத் தவிர்த்துக் கொண்டான். தற்போது அவைகளை அவன் வாங்குவதில்லை. அவன் அளவற்ற தற்பெருமை கொண்டவன். அதனால் இந்த உலகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதனையும் அலட்சியம் செய்யக்கூடியவன். சில வேளைகளில் ஒல்லாந்தர் நாட்டை முற்றுகையிடலாம். அதனை முறியடிக்க அவனால் முடியும். ஆயினும் அதைப்பற்றி அவன் பெரிய அக்கறை காட்டுவதில்லை.

ஒல்லாந்தருக்கு அவனுடைய தற்பெருமை கொள்ளும் மனப்பாங்கு நன்கு புரியும். அவர்கள் தமது தூதுவர்களைக் கொண்டு அவனை புழுகித்தள்ளுவர். அவன் தான் தங்களின் அரசன், தாங்கள் அவனின் பிரஜைகள் என்றெல்லாம் கூறுவர். அவனுடன் கொண்ட விசுவாசம் காரணமாகத்தான் கோட்டைகளை கட்டிக் காவல் காக்கின்றோம், இதனால் வெளியார்கள் வராமல் தடுக்கப்படுகின்றனர், தாங்கள் இந்த அரச சேவையில் ஈடுபடுவதால்தான் நாங்கள் வாழ்வதற்கு வேண்டிய ஆகாரங்கள் கிடைக்கின்றன என்று பலவாறு புகழ்ந்து, அவனது விருதுகளையும் பட்டங்களையும் எடுத்துரைப்பர். அரசனும் மகிழ்ந்து அவர்களை இருக்கும்படி கூறுவான். சில வேளைகளில் இந்த வஞ்சகப்புகழ்ச்சிக்கு எடுபடாமல், அவர்களைத் தாக்கி அவர்களுக்கு பெரும் நாசம் விளைவிப்பான்.

அவனிடம் தந்திரமும் சூதும் பாசாங்குத்தனமும் நிறைந்துள்ளதே தவிர, எந்தவித அறிவு ஞானமும் காணப்படவில்லை. தனது கோபத்தை அவன் வெளியில் காட்டுவதில்லை. அவன் எந்த காரியத்தையும் அவசரப்பட்டு செய்யமாட்டான். எல்லாவற்றையும் நிதானித்துச் செய்வான். எவரிடமும் ஆலோசனை கேட்கமாட்டான். அவனின் நடவடிக்கை சமயோசிதமாகப் பொய்கூறலும் வேடதாரித்தனமுமாகும். ஆனால் மற்றவர்கள் இப்படி நடந்தால் சகிக்கமாட்டான்; வெறுப்பான்; தண்டனை கிடைக்கும்.

ஒல்லாந்தரிடமிருந்து பலர் தப்பி ஓடி, அவனிடம் சரணடைய வருவார்கள். அப்படி ஓடிவருபவர்களைப் பற்றி அவன் நல்லபிப்பிராயம் கொள்வதில்லை. அவர்கள் மோசடிக்காரர்கள் அல்லது திருடர்கள் அல்லது கொலைகாரர்களாக இருக்க வேண்டும் என்பான். இவ்வாறு இல்லாவிட்டால் ஏன் தப்பி ஓட வேண்டும் என்று கேட்பான். இதனால் இப்படி வருபவர்களை ஏற்றுக்கொள்வதுமில்லை, மதிப்பதுமில்லை.

அவனது கொடூர மனப்பாங்கால் எந்தவித காரணமுமில்லாமற் பெருமளவு இரத்தம் சிந்தப்பட்டுள்ளது. சித்திர வதையும், வதை செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லலும் அவனது தண்டனை முறைகளாகும். ஒருவன் குற்றம் செய்தால் அவனது குடும்ப உறுப்பினர்கள் யாவரும் தண்டனைக்குட்படுவர். அவன் யாருடனும் வெறுப்புக் கொண்டால் அவரை உடனடியாகக் கொன்றுவிடச் சொல்லமாட்டான். முதலில் அவரை சித்திரவதை செய்யச் சொல்வான். இதன் பின்னர் அவரின் கைகளை கழுத்து ஓரமாக தூக்கி, அவரின் உடம்பில் இருந்து சதையை வெட்டி, நெருப்பில் வாட்டி அதை தின்னும் படி அவரை வைப்பான். இவ்வாறு தாய் தனது பிள்ளைகளின் சதையையும் மற்றக் குடும்ப உறுப்பினர் ஒருவர் மற்றவரின் சதையையும் உண்ண வைக்கப்படுவார்கள். பொது மக்கள் முன்னிலையில் குற்றவாளி நகர வீதி வழியாக கொண்டு வரப்படுவார். நாய்கள் உடலைத் தின்ன பின் தொடரும். மரண தண்டனை மைதானத்தில் கூர்மையான தடிகள் நாட்டப்பட்டிருக்கும். அந்த தடியில் கழுவேற்றப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றபடும். சிலருக்கு யானையால் மிதித்து தண்டனை நிறைவேற்றப்படும். இந்த மைதானம் பெருந்தெருக்களின் ஓரமாகவே இருக்கும். போய் வருவோர் இக் கொடூரங்களை கண்டு பயப்பிராந்தி கொண்டு அவ்வாறு நடந்து கொள்ளக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வைப் பெற வேண்டும் என்பதற்காகவாகும்.

மேலும் பெருமளவு கைதிகளை அவன் சிறைவைத்துள்ளான். சிலர் கால்கைகளிற் சங்கிலியாற் பிணைக்கப்பட்டிருப்பர். சிலர் பொதுச்சிறையில் வைக்கப்பட்டிருப்பர். எதற்காக, எவ்வளவு காலத்துக்குச் சிறையென்பது யாருக்கும் தெரியாது. பொதுவாக அவர்கள் இரண்டு வருடத்திலிருந்து ஆறுவருடங்கள் வரை அவ்வாறு வைக்கப்பட்டிருப்பர். சிலருக்கு உணவு கொடுக்கப்படும். சிலருக்குக் கொடுக்கப்படமாட்டாது. அவர்கள் உணவுக்காக சிறைக்காவலரிடம் மன்றாடுவர். சிறைக்கைதிகள் பராமரிக்கப்படும் விதம் அவர்கள் செய்த குற்றத்தைப் பொறுத்தும் அரசனின் கட்டளையைப் பொறுத்துமாகும். சிலர் உணவுக்காகப் பிறரிடம் போய் வேலை செய்யுமாறு ஏவப்படுவர். அவர்கள் போய், தொப்பிகள், பணப்பைகள், சட்டைகள் என்பவைகளைத் தைத்துக் கொடுத்து உண்பர். இது அரசனின் காதுக்கு எட்டினால் அவர்கள் தைக்கும் நூலையும் ஊசியையும் பறித்து அவர்களுக்குச் சித்திரவதை கொடுக்குமாறு ஏவுவான். ஆயினும் அது நீண்டகாலம் நிலைக்காது. மீண்டும் அவர்கள் பழையபடி தங்கள் வேலையைச் செய்யத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிவிடுவர். அவர்களிடம் வேலை வாங்குவோர் தெருவிலே சிறைச்சாலைக்கு எதிரில் அவர்கள் செய்யும் பொருட்களை விற்கும் கடை ஒன்றைத் திறந்தனர்.

அரண்மனைக்குச் செல்லும் பாதை கூட்டித் துப்பரவு செய்யப்பட வேண்டும் என்றால் அதனைச் சங்கிலியாற் பிணைக்கப்பட்டிருக்கும் கைதிகளைக் கொண்டு செய்வர்.

சிறையில் வைத்திருப்பவர்களை எவ்வித விசாரணையுமின்றி கொண்டு சென்று மரணதண்டனை விதிப்பதுமுண்டு. பெரும் பிரபுக்குடும்பத்தை சேர்ந்தவராக இருந்தாலும், அவனுக்கு பிடிக்கவில்லை என்றால் தண்டனையிலிருந்து தப்பமுடியாது.

குற்றம் செய்தவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டாலும் அவன் ஆத்திரம் தணியாது. அக்குற்றவாளியின் இரத்த உறவினர்களையும் தண்டிப்பான், அது அவர்கள் எல்லோரையும் கொல்வதாகவுமிருக்கும்; அல்லது அடிமையாக்குவதாயிருக்கும்.

சில வேளைகளில் அக்குற்றவாளியின் பிள்ளைகளை தனது வேலைக்காரராக்கிக் கொள்வான். இந்த நாட்டின் சிறந்த குடும்பங்களைச் சேர்ந்த பல இளைஞர்கள் அரசசபையில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர் என்று நான் முன்பு கூறியிருக்கிறேன். அவர்கள் இங்கே சில காலம் வேலை செய்தவுடன் பிடிக்காதவர்களின் தலையைக் கொய்து அதை அவர்களின் வயிற்றில் வைப்பர். ஆனால் அவர்களுக்குத் தாங்கள் செய்த குற்றம் என்னவென்று புரியாது. அதன் கொடூரத்திலிருந்து அரண்மனையில் வேலை செய்யும் எவரும் தப்ப முடியாது. பின்னர் திசாவைகள் அல்லது ஆளுநர்களிடம் சொல்லி அவர்களுக்குப் பதிலாக ஆட்களைத் திரட்டுவர். அவர்கள் கொலைக்களத்துக்கு கொண்டு செல்லும் அடிமாடுகளைப் போல் கனத்த இதயத்துடன் வேலைக்கு வருவர். அரசசபையில் வேலை செய்பவர்களின் குடும்பத்துக்கு அரசனால் விதிக்கப்படும் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் அரசனிடம் கௌரவமாக வேலை செய்துவிட்டு திரும்புவார்கள் என்று எதிர்பார்த்திருப்பர். சில வேளைகளில் அவ்வாறு நடப்பதுமுண்டு. அந்தப் பையன்கள் பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளாகியதும் தப்பி ஓடி விடுவதுமுண்டு. இப்படி செய்தால் அப்பையன்களின் தந்தை வேறொருவரை நிரந்தர அடிமையாகத் தருதல் வேண்டும். அரசனிடம் இருக்குங் காலத்தில் அவன் எப்பொழுதும் தனது பெற்றோரைச் சந்திக்கப் போகக்கூடாது. ஆண் உறவினர்கள் அவனை வந்து பார்க்க அனுமதிக்கப்படுவர். பெண்கள் அவனுடைய தாயாக இருந்தாலும் அனுமதிக்க மாட்டார்கள். அவன் கொல்லப்பட்டால் ஒரு கிளர்ச்சிக்காரன் என்றோ அல்லது அரசனுக்கெதிரான துரோகி என்றோ கூறப்படுவான். அவனது தந்தையின் வீடு, நிலம், மற்றும் உடமைகள் யாவும் பறிமுதல் செய்யப்படும். அவர்கள் அதற்குரிய தண்டப்பணம், வரிகள் என்று ஒரு பெரிய தொகை வழங்கினால்தான் தமது சொத்துக்களை மீளப்பெறலாம். நான் முதலில் சொல்லியபடி மொத்தக் குடும்பமும் ஆட்படுவதுண்டு. இதனால் ஓர் இளைஞன் அரச சேவைக்கு எடுபட்டவுடன் அவனுக்கு பின்னுள்ள சகோதரர்கள் பயப்படுவர். இது காறும் சொன்னவைகளிலிருந்து அரசன் ஒரு கொடுங்கோலன் என்பது புரியும்.

சில வேளைகளில் விருந்து வீட்டுக்கு குதிரை, யானைமீதேறியோ பல்லக்கிலோ செல்வதுண்டு. அது அரண்மனையிலிருந்து ஒரு துப்பாக்கி சுடும் தூரத்தில் அமைந்துள்ளது. அது ஒரு சிறிய குன்றில் இருக்கிறது. அவ்வீடு பல நாட்கள், பெரும் உழைப்பின் ஊடாகக் கட்டப்பட்டதாகும். அங்குள்ள பள்ளத்தாக்கிற் பாயும் அருவி ஒன்றை மறித்து அணை ஒன்றைக் கட்டி அங்கே ஒரு குளத்தை உருவாக்கியுள்ளான். அதில் நிறைய மீன்கள் உள்ளன. அந்த இடத்தில் மேலும் பல வீடுகளை அழகிய வேலைப்பாடமைந்த தூண்களைக் கொண்டனவாக நிர்மாணித்துள்ளான். அங்கே ஒரு மேடை, அவன் உட்கார்ந்து யானை மற்றும் மிருகங்களின் விளையாட்டுக்களை கண்டுகளிக்க அமைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து மீன்களுக்கு சோறு, பழங்கள் மற்றும் தின்பண்டங்களை ஊட்டி மகிழ்வதுமுண்டு. அந்த மீன்கள் மிகவும் பழக்கப்பட்டவை. அரசன் கைக்கு வந்து உணவுகளை எடுக்கும். இந்தப் பொய்கை யானை குளிக்கவும் உதவுகிறது. சில வேளைகளில் குதிரைப் பாகர்களை அழைத்துத் தனது முன்னிலையில் அவைகள் மேல் சவாரி போகும் படி செய்வான். அவர்கள் அதனை திறம்படச் செய்தால் ஐந்து பத்து சில்லிங்குகளை அவர்களுக்குப் பரிசாக அளிப்பான். அது ஒரு துண்டு வாங்க போதுமான பணமாகும். சில வேளைகளில் அவன் வெளியே வரும் போது குதிரைகளைக் கொண்டு வந்து நிறுத்தும்படி ஏவுவான். குதிரைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமானவை ஒல்லாந்தரிடமிருந்து எடுத்தவை; சில பரிசாகக் கிடைத்தவை; சில போர்களிற் கைப்பற்றியவை. மொத்தமாக பன்னிரண்டுக்கும் பதினான்குக்குமிடையில் அவனிடம் குதிரைகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் பாரசீகக் குதிரைகள்.

அவனின் இன்னொரு பொழுதுபோக்கு யானை பிடித்தலாகும். இதைப்பற்றி நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். அரச சபையிலிருந்து வெளிவரும் போது அவன் கழுகைக் கண்டால் பெரிய சந்தோஷமடைகிறான். அதனைப் பொழுது போக்கிற்கு அவன் பயன்படுத்துவதில்லை. ஆனால் தனது நாய்கள், மான்கள், புலிகள் பலவகைப் பறவைகள் மற்றும் விலங்குகளையும் பொழுது போக்கிற்குப் பயன்படுத்துவான். சிலசமயங்களில் வெள்ளி, தங்கம், தந்தம் போன்றவற்றால் அலங்கரிக்கப்பட்ட துவக்கை எடுத்து குறியை பார்த்துச் சுடுவதுண்டு. கொல்லர்கள் தங்கள் திறமையை நிருபிக்காவிட்டால் அவனிடமிருந்து சன்மானம் பெறமாட்டார்கள். அவனிடம் எட்டு அல்லது ஒன்பது பீரங்கிகள் உண்டு. அவைகள் எல்லாம் ஒல்லாந்தரிடமிருந்து எடுத்தவை. அவைகள் வண்டியில் எடுத்துச் செல்வதற்கு வசதியாக வைக்கப்பட்டுள்ளன. எல்லா வண்டிகளும் வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டுள்ளன. அவைகளில் வெள்ளி வெண்கலம் ஆகிய உலோகங்கள் பொருத்தமான இடங்களில் அழகுக்காகப் பதிக்கப்பட்டுள்ளன; வண்ணங்களால் பூக்கள் வரையப்பட்டுள்ளன. ஒரு வீட்டில் வைக்கப்பட்டுள்ள அவைகள் கொண்டாட்ட காலங்களில் வெளியே எடுக்கப்படும். அவனுடைய கடைசி வெற்றியின் நினைவாகத்தான் அக்கொண்டாட்டங்கள் நடத்தப்படுகின்றன என்று நினைக்கிறேன்.

அரண்மனையிலிருந்து பொம்மைகளையும் விநோதப் பொருட்களையும் பார்த்து மகிழ்வதும் அவனது பொழுது போக்குகளில் ஒன்றாகும். ஆயுத, துப்பாக்கிப் படைகளில் உள்ள தளபதிகளை அழைத்து அவர்களையும் அவற்றைப் பார்க்கச் சொல்வான். அவற்றில் ஒன்றைக் குறியாக தூரத்தில் வைத்துச் சுடமுடியுமா என்று கேட்பான். உருக்கினாலான கத்தியைக் காட்டி இதுபோன்ற ஒன்றிருந்தால் உங்களுக்கு உபயோகமாக இருக்குமா என்று கேட்பான். அவனுக்கு நீந்துவதிற் பெருவிருப்பம். அதில் மிகவும் தேர்ந்தவன். அவன் நீர்நிலைக்குப்போகும் போது வேலையாட்களும் அவன் கூட நீந்த வேண்டும். இது சம்பிரதாயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியாக அவனது சமயம் பற்றி; இதில் அவன் பெரிய ஈடுபாடு இல்லாதவன். அவனது நாட்டில் உள்ள எல்லா சமயங்களுக்கும் அவன் கொஞ்சம் அனுசரணையானவன். இந்த நாட்டின் நீண்டகால நம்பிக்கையின் பிரகாரம் ஒரு பெரும் கடவுள் இருக்கிறார், அவரை வணங்குதல் வேண்டும் என்ற நோக்கம் உடையவன். இந்த நாட்டில் ஒரு வஞ்சகன், நெறிதவறிய முஸ்லிம் ஒருவன், பேரற்ற புதிய கடவுளுக்கு வணக்கத்தலம் ஒன்றை நிர்மாணித்தான். அவன் தன்னை அரசனாக்க முயற்சிக்கிறான் என்பதை அறிந்து அவன் வணக்கத்தலத்தை அழித்துவிட்டான்.

கிறிஸ்தவ மதத்தை அவன் வெறுக்கவோ விரும்பவோ இல்லை. நான் அறிந்தவரையில் அதை கௌரவிக்கின்றான்; மதிக்கிறான் என்று சொல்வேன். அவனுடைய பாசத்துக்குரிய சகோதரி காலமான போது, அவளுக்குப் பெரும் இரங்கள் நாடு முழுவதும் நடந்தேறிய போது, எல்லாக் களியாட்டங்களுல் ஒதுக்கி வைக்கப்பட்டு ஒருவரும் மகிழ்ச்சியை வெளிக்காட்டாமல் இருந்தபோது, அது நத்தார் காலமாகையால் கிறிஸ்தவர்கள் அதை மகிழ்ச்சியுடன் கொண்டாடத் தலைப்பட்டனர். அந்த செய்தி அரசனின் காதுக்கு எட்டியது. இதற்கு தடை வரும் என்று தான் பலரும் எண்ணினர். ஆனால் அதற்கு ஒரு தடையும் விதிக்காமல் அதை அங்கீகரித்தான். இது கிறிஸ்தவ சமயத்தை அவன் மதிக்கிறான் என்பதைக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

அரசனின் கொடுங்கோல் ஆட்சி

இந்த அரசனின் தனிப்பட்ட இயல்புகள், மனோநிலை, விருப்பங்கள் ஆகியவற்றை இதுவரை பார்த்தோம், இப்போது அவனது சபை நடவடிக்கைகள், அரசாங்கம், ஆட்சி என்பவைகளைப் பார்ப்போம். அதற்காக அவனது அரசின் இயல்புகள், அவனுடைய திறைசேரி மற்றும் வருமானம், அவனது உயர் அதிகாரிகள், அவனது போர்த்திறம் என்பவைகளைப் பற்றி அலசுவோம்.

அவனது ஆட்சி மிகக் கொடுங்கோன்மையானது; தன்னிச்சையானது. அவனது பிரகடனங்கள் அவனது தனிப்பட்ட இச்சை, மகிழ்ச்சிக்கானது. அவனது மூளைதான் அவனது ஆலோசகர். அவனது ஆளுகைக்கு உட்பட்ட நிலத்தில் வாழும் மக்கள் உயர் குடிபிறந்தவர்கள் தொட்டு கீழ் மட்ட அடிமைகள் வரை-அவனுக்கு அடிமைகள் தான். அவர்களின் உடலும் செல்வங்களும் அவனது அதிகாரங்களுக்குட்பட்டவை. அவனின் கொடுங்கோன்மை, பொறாமை, பாசாங்கு, கொடுமை என்பனவற்றை யாரும் விரும்புவதில்லை.

ஒரு கொள்கை ஒரு அரசனுக்கு அவசியமானது. இந்த அரசனுக்கு அது இல்லை என்பதற்கு இரண்டு சம்பவங்களை எடுத்துரைக்கப் போகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாடு அவனுக்குச் சொந்தமானது. இந்த நாட்டில் விவசாயம் செய்வது பணத்துக்காகவல்ல, சேவைக்காகவாகும். மக்கள் ஒரு பகுதி நிலத்தை அரசனிடமிருந்து வாங்கி அதற்குக் குத்தகை கொடுப்பதற்குப் பதிலாகச் சேவைகளைச் செய்கிறார்கள், சிலர் போர்களிற் பங்குபற்றுகின்றனர்; சிலர் அவனுக்காக வர்த்தகத்தில் ஈடுபடுகின்றனர். சிலர் வேலைக்காரராகப் பணியாற்றுகின்றனர். சிலர் பழமரங்கள் நட்டுப் பராமரிக்கின்றனர். இக்கருமங்கள் எல்லாம் கூலி இல்லாமல் செய்யப்படுகின்றன. நிலத்தைப் பயன்படுத்துவதற்காக எல்லா மனிதரும் ஏதாவது பணியை அரசனுக்குச் செய்ய வேண்டும். நெற்செய்கை பண்ணக்கூடிய நிலங்களில் நெல் பயிரிட்டவர் மாத்திரம் தான் குளத்தில் இருந்து நீரைப் பாய்ச்சமுடியும். நெற்செய்கைக்கு உதவாத நிலத்தில் நெல் பயிரிடுபவர் குளங்களிலிருந்து நீர் பாய்ச்சமுடியாது. அவ்வாறு நெல் பயிரிட்டவர் விசேட நாட்களில் அரசன் உபயோகத்துக்காகப் பாய், கோழி என்பவற்றை வழங்கினால் போதும். வரிப்பணம் கூடுதலாக இருக்கிறது என்று தமது வீட்டையும் நிலத்தையும் விட்டு விலகிக்கொள்பவர் அதிகம். அப்படியானவர்களுக்கு வாழ்க்கை இலகுவாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

பல பட்டணங்கள் அரசனின் கைகளில் உண்டு. அங்கு வாழ்பவர்கள் நிலத்தின் தன்மைக்கேற்ப உழுது, பசளையிட்டு பயிர் செய்வார்கள். இந்த பட்டணங்கள் சில வேளைகளில் சில பிரதானிகளுக்குச் சொந்தமாக வழங்கப்படுவதுண்டு. அப்பட்டணங்களில் உள்ளவர்களுக்குக் கருவிகள் செய்யக் கொல்லர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு அரசன் காணிகள் வழங்கியிருப்பான். அதே போல குயவன் மட்பாண்டங்கள் செய்யவும், வண்ணான் துணி வெளுக்கவும், இதே போல் மற்றவர்களும் தம்பணிகளைப் புரிவர். ஒவ்வொருவருக்கும் சிறிதளவு நிலத்தை அரசன் வழங்கி இருப்பான்.

தனக்கெதிரான சதி, கலவரங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதுதான் இந்த அரசனின் முக்கிய வேலை. அவனது கொடுங்கோல் ஆட்சியில் சதிகளும் கலவரங்களும் மலிந்து காணப்பட்டன. ஏதோ அதிர்ஷ்டத்தால் தற்காத்துக் கொண்டான். இதற்காக இரவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகக்கவனமாக இருப்பான். அவன் காவலர்கள் இடைக்கிடை அடிக்கும் தாரை தம்பட்டைகளால் அரசன் உட்பட யாவரினதும் தூக்கம் கெடும். இரவிலேதான் அரசன் தனது முக்கிய கடமைகளைச் செய்வான். தூதுவர்களை அழைத்துக் கலந்துரையாடுவது, அவர்கள் கொண்டு வரும் கடிதங்களைப் படிப்பது, தனது களப்பணியாளர்களை மாற்றுவது, பதவியுயர்த்துவது, மரணதண்டனை விதிப்பது, பிரதானிகளைப் பதவியிலிருந்து அகற்றுவது, சிலரைப் புதிதாகச் சேர்த்துக்கொள்வது ஆகிய முக்கிய காரியங்களை இரவிலே தான் நிறைவேற்றுவான்.

அவனது கொள்கை நாட்டிற் பயணம் செய்வதை சிரமமாக்குவதும், சிக்கலாக்குவதுமாகும். அதனால் மாகாணங்களுக்கிடையே உள்ள காடுகளைப் பாதுகாக்கிறான். பாலங்கள் கட்டுவதைத் தவிர்க்கிறான்.

அவன் தனது மக்களை அதிககாலம் பிடிக்கும் பெரும் வேலைத்திட்டங்களில் ஈடுபட வைப்பான். அவர்களை அவ்வாறு ஈடுபட வைப்பதால், அல்லது அடிமையாக வைத்திருப்பதால், அவர்களுக்குச் சதிசெய்ய அவகாசம் கிட்டாது என்று எண்ணுகிறான். ஆகவே மக்களைச் சோம்பேறிகளாக இருக்கக் கூடாது; எந்நேரமும் ஏதாவது செய்து கொண்டிருக்க வேண்டும் என்றும் கூறுவான். ஆயினும் எந்தவித நோக்கமும் பிரயோசனமுமில்லாத வேலைகளில் அவர்களை ஈடுபட வைப்பான். வேலையின் தரத்துக்கேற்ப ஓரிரு மாகாணங்ளின் மக்கள் அதைச்செய்வர். குறிப்பிட்ட பிரதேசத்தின் அல்லது மாகாணத்தின் ஆளுநர் அதை மேற்பார்வையிடுவார். மக்கள் வேலை செய்யும் போது படைவீரர்கள் வாட்களுடன் நிற்பர். இந்த வேலைகள் மலையை வெட்டிப் பள்ளத்திற் போட்டு ஒப்பமாக்குவதாகவோ, இருமலைகளுக்கிடையே உள்ள இடைவெளியை அகலிப்பதாகவோ இருக்கும். அல்லது ஒரு குளத்து நீரைக் கொண்டு வருவதாக அல்லது அரண்மனைக்குக் கொண்டு வருவதாக இருக்கும். இது இலகுவான காரியமன்று பள்ளத்தாக்கில் ஓடிவரும் அருவியை மறித்து நாலு பாகம் உயரத்துக்கு அணைபோட்டு உயர்த்தினால் தான் நீர் அரண்மனைக்கு பாயும். நீர் அரண்மனையை அடைய நான்கு அல்லது ஐந்து மைல் நீளத்துக்கு வாய்க்கால் வேறு வெட்ட வேண்டும். சில நேரங்களில் பாறைகள் குறுக்கிடும். அப்பாறைகளை அகற்ற அதன் மேல் நெருப்பைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்ற வைப்பார்கள். அது மென்மையாகும். அப்போது அதனை அகற்றுவது இலகுவாக இருக்கும்.

நீர் இந்த நாட்டை வளப்படுத்துகிறது; இந்த மக்கள் நிலத்தை அதிகம் உழத்தேவையில்லை. அப்படியான நீர் வளமுள்ள நாடு இது. இந்த மன்னன் இப்படியான நாட்டை அழிக்கிறான். மக்கள் தமக்காக இல்லாது அவனுக்காக உழைக்கிறார்கள். அவர்களின் தேவைகள் நிறைவேற முடியாமல் இருக்கிறது. நாட்டின் நன்மைக்கென்று சொல்லி அதை அழிக்கிறான். எனினும் அவனுக்கு வயது போய்விட்டது. அவனால் இயற்கையாக வாழ இனி இயலாது.

நீர் வளமுடைய இந்நாட்டில் மக்கள் பயிர் செய்வது குறைவு. அவர்களுக்குச் சொந்தமான நிலம் கம்மி. அரசனிடமே பெருவாரி நிலங்கள் உள்ளன. அதிக நீரைக் குளங்களிலிருந்து அரசன் எடுத்துக்கொள்வான். மக்களின் வயல்களுக்குப் போதிய நீர் கிடைப்பதில்லையாதலால் அறுவடையும் குறைகிறது. அதனால் விவசாயத்தில் அவர்கள் பெருநாட்டம் கொள்வதில்லை. அவனது நடைமுறைகள் மக்களுக்கு அதிருப்தியளிக்கின்றன. அவர்கள் தங்கள் கடமையையும் சேவையையும் செய்ய விடாமல் தடுக்கின்றன. இதனால் அவர்கள் அடையும் இன்னல்கள் அவர்களை அரசனுக்கெதிரான மனநிலை கொண்டவர்களாக மாற்றுகின்றன, நெபுகன்னெசரை போல அவன் ஒவ்வொரு நாளும் சதிகளுக்குப் பயந்து தனது அரண்மனையை மாற்றி மாற்றி வடிவமைக்கின்றான். ஆடையிலும் கோடையிலும் இரவிலும் பகலிலும் குறைந்தளவு நன்மைகளையும் அவன் மக்களுக்குத் தருவதில்லை. விதைப்பு, அறுவடை போன்ற அவசியமான நேரங்களிலும் தேவையற்ற வேலைகளுக்கு அவர்களை ஏவி விடுகின்றான்.

கலகத்திலிருந்து தப்பி மலைக்கு ஓடிய அரசன் மீண்டும் பழைய நகரான கண்டிக்கு வரமாட்டான்; அந்த மலையின் அடிவாரத்தில் உள்ள டிக்லிக்கி நகரத்தில் தங்க எண்ணம் கொண்டுள்ளான்; இதனால் தங்களின் வாடகையையும் வரிகளையும் கொண்டு கொடுப்பது சிரமமானதும் சிக்கலானதாகவும் இருக்கும் என்பதை உணர்ந்த மக்கள், ஒன்று திரண்டு அரசனிடம் பெருங் கூட்டமாகப் போய், தாங்கள் எங்களை நிராதரவாக விட்டுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லக் கூடாது. தாங்கள் எங்களுக்கு ஒரு ஞாயிறு போன்றவர்; எல்லாக் கலகக்காரர்களும் அழிக்கப்பட்டுவிட்டனர். அதனால் தாங்கள் பழைய நகரான கண்டிக்கு திரும்புதல் வேண்டும் என்று மன்றாடினர். அரசன் இந்த வேண்டுகோளுக்குக் பின்னர் ஏதும் சதிகள் இருக்கலாம் என்று யோசித்தான். ஆயினும் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமல், நீங்கள் என்மீது கொண்டுள்ள அன்புக்கும் கரிசனைக்கும் நான் நன்றியுடையேன். நான் இப்போது வாழத் தேர்ந்தெடுத்துள்ளதும் இந்த நாட்டின் பகுதி ஒன்றிலேதான், நீங்கள் எல்லாரும் கூடி எனக்கு ஒரு அரண்மனை அமைத்துத் தரவேண்டும் என்றான். மக்கள் ஓரளவு திருப்தி கொண்டு அரண்மனை அமைக்கும் கடினமுயற்சியில் இரண்டு வருடங்கள் ஈடுபட்டனர். காடுகளில் மரங்களைத் தறித்து, வீழ்த்தி வாளாற் குற்றிகளாக அறுத்துக் கொண்டுவந்தனர்; பொய்கை அமைத்தனர்; கற்களைப் பொளிந்து எடுத்தனர். வேலைப்பளு காரணமாக மாண்டுவிடும் அளவுக்கு களைத்து விழுந்தனர். ஒருவரோடு ஒருவர் முணுமுணுத்துத் தங்கள் வெறுப்பைக் காட்டினர்; மனம் புழுங்கினர். இதை உணர்ந்த அரசன் அவர்களைப் போகும் படி கட்டளையிட்டான். குறைகட்டிடம் சிதைவடையத் தொடங்கியது; மரக்குற்றிகளும் படிப்படியாக உக்கத் தொடங்கின.

இதுதான் மக்களைக் கொண்டு அவன் செய்யும் வேலையின் இலட்சணம். கட்டுமானங்களைக் கட்டுவதும், அதை தரைமட்டமாக்க ஏவுவதும், மேடுகளை வெட்டிப் பள்ளத்தை நிரப்புவதும் அரண்மனைக்குத் தண்ணீர் கொண்டு போக நீண்ட வாய்க்கால் வெட்டுவதும், யானைகளைப் பிடிக்க வேறு எளியமுறைகளிலிருந்தும் அதை செய்யாமல் காடுகளில் பெருமரங்களை வெட்டி இழுத்து அங்கு பொய்கைகளை அமைத்து, தன்முன்னிலையில் யானைகளைப் பிடிக்கச் செய்வதும், அவைகளைப் பராமரிக்க வீடுகளை அமைப்பதும் ஆகியவைகளை, அவன் செய்யும் மெனக்கெட்ட வேலைக்கு உதாரணமாகக் கூறலாம்.

மக்கள் தன்னை ஒரு கொடியவன், பயமுறுத்துபவன் என்று நினைப்பதை அவன் விரும்பவில்லை. கலவரத்துக்குப் பின் இந்த அரசனுடைய கைகளில் இராச்சியம் வந்தது. ஆயினும் மக்கள் தன் மீது நம்பிக்கை இழந்து விட்டனர் என்பதை உணர்ந்தான் சனங்களின் பார்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவரசன் மீது விழுவதைப் புரிந்து கொண்டான். வளர்ந்து வருகின்ற இளவரசனால், பதினைந்து வயதான மகனால் தனது இருப்புக்கு ஆபத்து வரும் என்பதை அறிந்துகொண்டான். அவனை எங்காவது வேறிடத்திற்கு அனுப்பலாமா என்று யோசித்தான். முடியவில்லை. தடுப்பதற்கு ஒரு வழி மகனைக் கொல்வதுதான். மகனுக்கு உணவில் நஞ்சு கலந்து கொடுத்தான். வைத்தியர்களை அழைத்து வைத்தியம் செய்து பாசாங்கு காட்டினான். சிகிச்சை பலனளிக்காமல் இளவரசன் மாண்டான். செய்தி அறிந்த மக்கள் சம்பிரதாயப்படி ஊத்தை உடையுடன் ஆண்கள் மொட்டைத் தலையராகவும் பெண்கள் தலைவிரி கோலமாகவும் நகரத்துக்கு வந்து அழுது புலம்பினர். இதனை கேள்வியுற்ற அரசன் இளவரசன் இறந்ததால் தான் அதிர்ஷ்டத்தை இழந்து விட்டேன், ஆயினும் நாட்டுக்கு ஆபத்து வரப்போகிறது, அதைத்தடுக்க புத்திபூர்வமாக செயல்பட வேண்டும் என்றும் அறிக்கைவிட்டுக் கூட்டத்தை போகச் சொன்னான். எந்த வித சடங்குகளோ மரியாதையோ இல்லாமல் இளவரசனின் உடல் தகனம் செய்யப்பட்டது.

அவனது மூத்த சகோதரியின் மரணச்சடங்கு பெரிய துக்க அநுசரிப்புடன் நடந்தது. அவள்தான் இளவரசனை கலவரத்தின் போது பாதுகாத்தாள் என்று சொல்லப்படுகின்றது. பிரதேசம் பிரதேசமாக வந்து சனங்கள் அழுது புலம்பினர். பேருக்கு அரசனும் அழுத முகத்தோடு இருந்தான். வெள்ளைக்காரர்களும் வந்தனர். அரசனும் அவர்களை வரவேற்றான். அவர்கள் வந்த நோக்கம் அரசன் இறந்து விட்டால், என்ன பொருட்களைச் சுருட்டலாம் என்பதை நோட்டமிடுவதற்காகும். ஆனால் அரசன் இங்கு இருக்கிறான்; தங்களை வரவேற்கிறான். தங்கள் தவறை உணர்ந்து திரும்பிச் சென்றனர். அரச மரியாதையுடன் அவள் உடல் தகனம் செய்யப்பட்டது. துக்கம் ஒரு வருடத்துக்கு மேல் நாடு பூராவும் அனுஷ்டிக்கப்பட்டது. அரசன் அவள் மேல் மிக்க அன்பும் மரியாதையும் கொண்டிருந்தான் என்று சொல்லப்படுகின்றது. ஆயினும் அவள் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் போது அரசன் போய் அவளைப் பார்க்கவில்லை; அவளுக்கு வேறு இரத்த உறவினர் ஒருவருமில்லை.

நீரில் நீந்தும் போது, தான் இதில் கைதேர்ந்தவன் என்றும், மூழ்கிவிடப் போகிறேன் என்றும் பாசாங்கு பண்ணுவான். ஒரு தடவை நீந்தும் போது தான் மூழ்கிவிடப் போகிறேன், உதவிக்கு ஓடி வாருங்கள் என்று கூக்குரலிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே இரண்டு இளைஞர்கள் நீரில் குதித்து அவனை எடுத்துக் கொண்டு கரைக்கு வந்தனர். இதைக்கண்டு அவன் மிகுந்த சந்தோசம் கொண்டான். தனது உடையை எடுத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்தான். தன்னை நீரில் இருந்து காப்பாற்றியவர்கள் யார் என்று கேட்டான், அவர்கள் செய்த நல்ல காரியத்துக்கு வெகுமதி அளிக்க வேண்டும் என்றான். அந்த இளைஞர்கள் தாங்கள்தான் என்று மகிழ்ச்சியுடன் முன்வந்தனர். மரண தண்டனை விதிக்கப்பட்வர்களின் தண்டனை நிறைவேற்றப்படுகிறதா என்பதை ஊர்ஜிதம் செய்யும் அதிகாரிகளை அழைத்தான். அவர்கள் இருவரையும் கொண்டுசென்று தலையைக் கொய்து விடுமாறு கட்டளையிட்டான். அவர்கள் என்னைத் தொட்டனர். தொடுவதற்கு முன்னர் குப்புற விழுந்து கும்பிடவில்லை, இது அவர்கள் செய்த குற்றம். அவனின் உத்தரவுக்கிணங்க அவர்கள் இருவரும் சிரச்சேதம் செய்யப்பட்டனர். இப்படி அரசன் சொன்னதை நான் என் காதாற் கேட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04

வருமானமும் வளங்களும்

மக்கள் மூன்று தடவை தங்கள் குத்தகையை அரசஅவுருதுக்குச் செலுத்த வேண்டும். முதலாவது வருடப் பிறப்பன்று கொடுக்கும் கொடமோல். மற்றது புதிய பழங்கள் என்று பொருள் படும் அலுசோல் கொடமோல். மூன்றாவது நவம்பர் மாதத்தில் நடத்தப்படும் ஒரு குறிப்பிட்ட பலியின் பெயரைக் கொண்ட இல் மோய் கொடமோல். இவைகளை விட அரசனுக்கு என்ன தேவைப்படுகிறதோ அதை இருப்பவர் கொண்டு வந்து கொடுக்க வேண்டும். இந்தக் குத்தகை அவர்கள் நிலத்தில் என்ன விளைகிறதோ அதில் குறிப்பிட்ட பாகமாக அமையும். முக்கியமாக அரிசி மற்றும் தானியங்களாயிருக்கும்.

முதலாவது புதுவருடத் தொடக்கத்தில் அரசனின் வரிகள் கொண்டுவந்து கொடுக்கப்பட வேண்டும். அவர்களின் புதுவருடம் எப்பொழுதும் மார்ச் மாதம் 27 ஆம் திகதி அல்லது 28 ஆம் திகதி அல்லது 29 ஆம் திகதிகளில் வரும். அந்த நாட்கள் சிறப்பான நல்ல நாட்களாகும். அந்த நாளில் (சோதிடர்களை கலந்தாலோசித்து) உடல் முழுதும் நனைய அரசன் குளிப்பான். அரண்மனை முழுவதும் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். அவர்கள் உயரமான தடிகளை ஒவ்வொரு அரண்மனை வாசலிலும் நாட்டி வைத்திருப்பார்கள். அவைகள் ஒன்பது அல்லது ஏழு கொண்ட வரிசையாக இருக்கும். நடுவில் நாட்டி இருக்கும் தடி மிக உயரமாகவும், பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டப்பட்டிருக்கும் தடிகள் உயரத்தில் குறைந்தும் கடைசியில் உள்ளவை மிக உயரம் குறைந்ததாகவும் இருக்கும். இவ்வாறு தொடர்ந்திருக்கும். நடுவில் ஒரு இடை வெளி விடப்பட்டிருக்கும். நடுவில் நாட்டப்பட்டிருக்கும் தடியிலே கொடி பறக்கும். கொடி, நிறத் துணியாகவும் அதில் மனிதர், மிருகம், பூக்களின் படங்கள் இருக்கும். பழங்கள் வரிசையாகத் தொங்கவிடப்பட்டிருக்கும். ஒவ்வொரு நுழைவாயிலிலும் குலை வாழைகள் வெட்டித் தொங்க விடப்படும்.

சில இடங்களில் மிக உயரமான தடிகள் நாட்டப்பட்டிருக்கும். அதிற் பல வகை நிறங்களிற் கொடிகள் பறந்து கொண்டிருக்கும். அக்கொடிகளில் ஒரு மணியின் படம் வரையப்பட்டிருக்கும். சொர்க்கத்தைவிட அரண்மனை இப்போது அலங்காரமாக இருக்கிற தென்று மக்கள் கூறுவார்கள்.

படைவீரர்கள் அழைக்கப்பட்டு நிறுத்தி வைக்கப் பட்டிருப்பார்கள். அரசன் குளிப்பதற்கென்று கட்டப்பட்ட அவ்ல் பங்கி என்னும் வீடுகளுக்குச் செல்வான், அவ்வீடுகளுக்கு அருவிகள் திருப்பி விடப்பட்டுள்ளன. இவ்வீடுகளைப் பராமரிப்பதற்கென்று சிறப்புப் பணியாளர்கள் உள்ளார்கள். அரசன் அன்று முழு உடல் நனையக் குளிப்பான். பின்னர் தயாராகிப் பொதுமக்களுக்குக் காட்சி தருவான், அப்போது அவன் படைவீரர்கள் ஆயுதங்களுடன் தோன்றுவர். இதன் பின்னர் பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும். பிரதானிகள், பிரபுக்கள், ஆளுநர்கள் அரசன் முன்னிலையிலே தங்கள் பரிசுப் பொருட்களுடன் வருவர். அவர்களின் பணியாட்கள் பரிசுப் பொருட்களை வெள்ளைத் துணியால் மூடித் தலையில் வைத்துச் சுமந்து வந்து மெல்ல அரசனின் காலடியில் வைப்பர். இந்தப் பரிசுகள் தங்கம், வெள்ளி, நகைகள், தட்டுகள், ஆயுதங்கள், கத்திகள், ஆடைகள் என்பவைகளாயிருக்கும். அப்பரிசுகள் பரிசளிப்பவரின் பதவியைப் பொறுத்தும், அவரின் பிரதேசத்தைப் பொறுத்தும் அமைந்து இருக்கும், இவற்றைத் தவிர ஒவ்வொருவரும் குறிப்பிட்ட பணத்தொகையைக் கொடுப்பர், அவர்கள் பெறுமதியான அரியவகைக் கற்களைப் பெற்றிருந்தால் அவற்றை அரசனிடம் கொடுத்துக் கௌரவம் பெறப் பெரிதும் விரும்புவர். இந்தப் புதுவருடப் பரிசுகளைப் பெறுவது தனது பெருமைக்கு நல்லதல்ல என்று அரசன் இப்போது எண்ணத் தொடங்கிவிட்டான். இப்பரிசுகளை நான் சொல்லும் வேறொரு தினத்தில் தாருங்கள் என்று இப்போது அரசன் கூறுகிறான். அவர்கள் பலதடவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகளைக் கொடுக்க முயன்ற போதும், அவன் ஏற்க மறுத்து விட்டதால் அவர்கள் இப்போது கொண்டு வருவதில்லை.

எல்லாவகை வர்த்தகர்களும் தங்கள் இயல்புக்கேற்ப ஒரு குறிப்பிட்ட தொகையைத் திசைசேரிக்குச் செலுத்த வேண்டும். அதையும் அவன் இப்போது ஏற்பதில்லை. இதே நேரத்தில் அல்லது மற்ற நேரத்தில் மக்கள் கொண்டுவரும் வரிகள், குத்தகைகள் இவ்வாறு இருக்கும்; வைன், எண்ணெய், தேன், மெழுகு, துணி, இரும்பு, யானைத்தந்தம், புகையிலை, பணம் அவைகளைக் கொண்டு வந்து அரண்மனை வாசலில் நிற்பர். பெரிய உத்தியோகத்தர்கள் மக்கள் இவ்வாறு வாசலில் நிற்கிறார்கள் என்பதைக் கூறுவார்கள். அரசன் நல்லது என்று கூறுவான். அவைகளைப் போய் வாங்குங்கள் என்று அரசன் கூறுமட்டும் அவர்கள் சுமையுடன் நிற்பர்.

அந்த நிலத்தில் விளையும், அரசனுக்குத் தேவைப்படும் எப்பொருளையும் அரசனுக்கு கொண்டுவந்து கொடுக்கலாம். அவர்கள் கொண்டு வரும் கோழிகளும், அவைகள் இடும் முட்டைகளும், பொரிக்கும் குஞ்சுகளும் இனிமேல் அவைகள் தேவையில்லை என்னும் அளவுக்கு அதிகமாக இருக்கிறது.

இந்த அரசன் பெறும் வருமானம் இன்னொன்று உண்டு. அது தற்செயலானது. ஆயினும் பெருமளவானது. மாட்டுப்பட்டியைக் கொண்ட மனிதன் ஒருவன் இறந்தால் உடனடியாக ஒரு காளையும் ஒரு பசுவும் கன்றும் ஓர் எருமையும் கொடுக்க வேண்டும். இந்த வரியை மரல என்று அழைப்பர். இதற்கென்று நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் உண்டு. அவர்கள் வந்து அவைகளைக் கொண்டு செல்வர். நிலத்தின் தன்மை மற்றும் பரப்புக்கேற்ப குறித்த அளவு தானியம் அரசனுக்குக் கொடுத்தல் வேண்டும். நிலத்தை குத்தகைக்குச் செய்பவர் இறந்துவிட்டால், அந்நிலம் அவரின் மகனுக்குக் கொடுக்கப்படும். அப்படி யாரும் இல்லாவிட்டால் வேறு ஒருவருக்கு கொடுக்கப்படும். போரில் இறந்த படை வீரர்களின் நிலத்திற்கு மாத்திரம் குத்தகை செலுத்த வேண்டியதில்லை. அவர் இயற்கையாக இறந்தால் குத்தகை செலுத்த வேண்டும். விவசாயிகள், தானியத்தைத் தவிர, ஒரு குறிப்பிட்ட அளவு வரியைக் காசு வடிவத்திற் கொடுக்கவேண்டும். மக்கள் தாங்கள் குத்தகை செலுத்தும் நிலத்தை விற்றாலோ வேறு ஒருவருக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராதீனப்படுத்தினாலோ வரி குறைக்கப்படமாட்டாது. இங்கே அரசனுக்கு வரி கொடாத நிலம் ஒன்றுமில்லை. அவர்கள் நிலத்தை ஒரு மதகுருவுக்குத் தானமாக கொடுத்தாலோ அர்ப்பணித்தாலோ கடவுளின் பெயரால் அதற்கு மாத்திரம் வரி விலக்களிக்கப்படும். ஏனென்றால் அவ்வாறு அறவிட்டால் அது தெய்வ நிந்தனையாகக் கருதப்படும். முன்பு இந்த அரசன் இரண்டு துறைமுகங்களைக் கொண்டிருந்தான். ஒன்று கொட்டியாரம்; மற்றது புத்தளம். இவைகளுக்கு வருடத்தில் இருபது முப்பது கப்பல்கள் வரும். இதனால் குறிப்பிடத்தக்க வரிகள் கிடைத்தன. அவைகளை இப்போது ஒல்லாந்தர் பிடித்துக்கொண்டதால், அந்த வருமானம் தடைப்பட்டுவிட்டது.

இந்த அரசன் பல களஞ்சியசாலைகளை நாட்டின் பல பாகங்களிலும் நிறுவியுள்ளான். அங்கெல்லாம் இரவு பகலாகப் படைவீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். என்னால் அவைகள் எவ்வெப் பொருட்களை எவ்வளவு கொண்டுள்ளன என்பதைச் சொல்ல முடியாதுள்ளது. அவைகளில் விலைமதிப்பற்ற கற்கள், துணிகள், உடைந்த கப்பல்களிலிருந்து எடுத்த பொருட்கள், மற்ற நாடுகளிலிருந்து பரிசாகப் பெற்ற பொருட்கள், யானைத்தந்தங்கள், மெழுகு, ஆயுதங்கள், வில் அம்புகள், பிக்காசுகள், ஹல்பேர்ட்கள், வாட்கள், வெடிமருந்துகள், கத்திகள், இரும்புப்பொருட்கள், தளப்பத்து ஓலைகள், கூடாரப்பொருட்கள், படுக்கைகள், மேசைகள், பெட்டிகள், பலவகைப் பாய்கள் என்பன இருக்கும். நான் இதற்குமேல் என்னென்ன பொருட்கள் இருக்கும் எனச்சொல்லி குற்றவாளியாக விரும்பவில்லை. ஆயினும் இந்த நாட்டில் கிடைக்கும் பொருட்கள் யாவும் பெருமளவில் அவனிடம் உள்ளன. இவ்வாறு தேவைப்படும் பொருட்களைச் சேமித்து வைப்பதில் அவன் மிகவும் கவனமானவன். அவைகள் எல்லாம் போதியளவு இருக்கப் பார்த்துக் கொள்வான். உக்கி அழியும் பொருட்களை எடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாகப் புதிய பொருட்களை அவன் பணியாளர்கள் வைப்பார்கள்.

அவனிடம் போதிய அளவு பழக்கப்பட்ட யானைகள் உள்ளன. பிடிபடாத யானைகளும் அவனுக்கு உரியவைகளாகும். அவன் விரும்பினால் அவைகளையும் பிடிப்பான். அரசனும் அவன் முன்னோர்களும் போர்த்துக்கீசர்களாலே துரத்தப்பட்டு ஓடியபோது தமது செல்வங்களை மகாவெலி கங்கையில் விட்டெறிந்துள்ளனர். அவைகளை இனி எடுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. இந்த ஆற்றை மறித்து இந்த அரசன் பொய்கை ஒன்றை உருவாக்கியுள்ளான். இந்தப் பொய்கையில் இரண்டு முதலைகள் வாசம் செய்கின்றன. அவைகள் பிடித்துவிடும் என்று யாரும் அதில் இறங்குவதில்லை. அந்தப் பொய்கைக்கு நீர் குடிக்கவரும் மாடுகளை அவைகள் இழுத்துச் செல்வதுமுண்டு. இந்த பொய்கையில் கட்டப்பட்டிருக்கும் அணை மேலதிக நீரை இலகுவாக வழிந்தோட விடும்.

முடிவாக, அவனது ஆட்சிக்குட்பட்டிருக்கும் நிலம், மக்கள், அவர்களின் சொத்துக்கள் மற்றும் பொருட்கள் யாவும் அவனுடையவை. ஆயினும் அவன் பெரிதாகக் கருதுவது விநோதப் பொருட்களையும் கழுகு, குதிரை, நாய், அழகியபறவைகள், மிருகங்கள் மற்றும் புள்ளிகள் கொண்ட யானை போன்றவற்றின் பொம்மைகளைத் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05

மாகாணங்களின் உயர் அதிகாரிகள் மற்றும் ஆளுநர்கள்

இந்த நாட்டில் இரண்டு உயர் அதிகாரிகள் உள்ளனர். அவர்கள் அதிகார் என அழைக்கப்படுகின்றனர். நான் அவர்களை உயர் நீதிபதிகள் என்று குறிப்பிடுகிறேன். இவர்களுக்குக் கீழேதான் நகரங்கள், பிரதேசங்கள் மற்றும், ஆளுநர் நியமிக்கப்படாத பிரதேசங்கள் என்பன உள்ளன. பிரஜைகளில் எவரேனும் ஆளுநர் தமக்கு வழங்கிய தீர்ப்பு அவர்களின் மனம்போன போக்கிலானது; அதனால் குறைபாடு கொண்டது என்று கூறி இந்த அதிகாரிகளிடம் மேன்முறையீடு செய்யலாம்.

அதிகாரிகளுக்குக் கீழே பல உத்தியோகத்தர்களும் சார்ஜண்டுகளும் இருப்பார்கள். அவர்கள் தமது உத்தியோகச் சின்னமாக ஒரு வளைந்த தடியைச் வைத்திருப்பார்கள். இதில் அதிகார்களின் இலட்சினை பொறிக்கப்பட்டிருக்கும். அந்தத் தடியை மற்றவர்கள் வைத்திருக்க முடியாது. அதிகார்களுக்குப் பிரதேசம் பற்றிய அறிவுறுத்தல்களை வழங்குவது இவர்களின் கடமையாகும்.

இந்த அதிகார்களுக்குக் கீழ் நாட்டின் மாகாணங்களுக்கான திசாவைகள் எனப்படும் ஆளுநர்கள் இருப்பார்கள். எல்லா திசாவைகளும் ஆளுநர் அல்ல. மற்றப் பெரும் உத்தியோகத்தர்கள் மாவட்டங்களுக்குப் பொறுப்பான ரெட்டேட்டரால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர்களும், மக்களுக்குச் செய்தியைத் தெரிவிக்கும் விதானை என்பவர்களுமாவர். ஜெனரல்களும் தலைமைக் கொமாண்டர்களும் குறிப்பிட்ட படைவீரர்களை தமது பொறுப்பில் வைத்திருப்பர். இந்த அதிகாரிகள் தமது பொறுப்பில் உள்ள பிரதேசத்தை அல்லது ஆட்களை ஒழுங்காக வைத்திருக்க வேண்டும். அவர்களுக்கு நாட்டின் நியாயாதிக்கத்துக்கும் மக்களுக்கும் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கவும், ஒழுங்கில்லாதவர்கள் முறைதவறியவர்களைத் தண்டிக்கவும், சிறைக்கனுப்பவும் அதிகாரமுண்டு. இவர்கள் ஒரு தடவை பிழை விட்டாலும் தண்டப்பணம் இல்லாமல் வெளியே வரமுடியாது. இவ்வதிகாரிகள் மரணதண்டனை விதிக்க முடியாது. அதை மன்னன் தான் செய்யமுடியும். அவர்கள் அரச சபை நிகழ்வுகளைத் தமக்கொதுக்கப்பட்டிருக்கும் ஆசனத்தில் இருந்து அவதானிக்கமுடியும்.

படையெடுப்பு நடக்கும் தருணங்களில் படை வீரர்கள் எல்லோரும் படையெடுப்புக்கு வந்துள்ளார்களா என்பதையும் அவர்களுக்கு கட்டளையிடுவதையும் திசாவைகள் கவனிப்பார்கள்.

இவர்கள் அரசனால் நியமிக்கப்படுவர். அந்நியமனங்கள் குறித்த காலத்துக்கே செல்லுபடியாகும். அவர்கள் இறந்தால், அல்லது நீக்கப்பட்டால், அப்பதவிகள் காலியாகப் பலமாதங்களுக்கு அல்லது பல வருடங்களுக்கு வெற்றிடமாக இருக்கும். அக்காலத்தில் அந்த இடங்களைப் பார்த்துக் கொள்வது அதிகார்களின் கடமையாகும். அவர்களின் வேலை நாட்டின் அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய வருமானத்தையும் இலாபங்களையும் அறவிடுதலாகும்.

அவர்களின் திறமைக்குறைவு, போதுமான அளவில் கடமையைச் செய்யாமை தொடர்பாக அவர்களின் அலுவலகத்துக்கு அரசன் விஜயம் செய்தால் அவர்கள் தமது உத்தியோகம் தொடர்பான சுருக்க அறிக்கைகளை அவனிடம் காட்ட வேண்டும். அவர் அரச சேவைக்குத் தகுதியற்றவர் எனக் கண்டால் அதிலிருந்து அகற்றப்படுவார். அவர் இயற்கையாக பொருத்தமானவர்; அரசன் மீது பக்தியும் நல்லெண்ணமும் உடையவர் எனக் கண்டால் முதலில் அவருக்கு பதவியுயர்வு வழங்கப்படும். (கிறிஸ்தவர்கள் மீது அவன் தனது நாட்டு மக்களை விடக் கூடிய நம்பிக்கை கொண்டுள்ளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கடமையுணர்வு மிக்கவர்களாக இருப்பதாலே திறம்படச் செயல்படுவர் என்பது அரசனின் நம்பிக்கை) அவருக்கு வெண்கலத்தால் வேலைப்பாடமைந்த பிடி போட்ட உடை வாளொன்று வழங்கப்படும். ஒன்று அல்லது பல பட்டணங்கள் அவர் பராமரிப்புக்குக் கீழே கொண்டுவரப்படும். அந்த பட்டணங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தை அவருக்கு கீழே உள்ள உத்தியோகத்தர்கள் திரட்டுவர். இப்பட்டணங்கள் எல்லா வர்த்தக நடவடிக்கைகளையும் கொண்டுள்ளன. இப்பட்டணங்களில் குயவன், கொல்லன், வண்ணான் ஆகியவர்களை அரசன் குடியமர்த்தி இருப்பான். குறித்த அளவு நிலம் அவர்களின் உபயோகத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கும். அதில் அவர்கள் உழுது, பசளையிட்டு விதைத்துக் கொள்ளலாம். இது பற்றி மூன்றாவது அத்தியாயத்தில் ஏற்கனவே கூறி இருக்கிறேன். பட்டணங்கள் அரசனுக்கு நேரடியாக வரியைச் செலுத்த வேண்டும், சிறிய பட்டணங்கள் ஆளுநர் மூலமாகச் செலுத்தலாம்.

எந்தப் பிரதேசத்திற்கும் ஆளுநர் நியமிக்கப்பட்டால் அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் எல்லோரும் ஆளுநர் முன்னிலையில் தோன்ற வேண்டும். அவர்கள் வெறும் கையுடன் வரக்கூடாது. ஆளுநருக்கு பரிசளிக்க ஏதாவது கொண்டுவர வேண்டும். ஏதும் அலுவல் காரணமாகவோ இல்லாமலோ ஆளுநரைச் சந்திக்கும் போதும் ஏதாவது கொண்டுவர வேண்டும். அவரின் தனிப்பட்ட படைவீரர், வாயிற் காப்போருக்கு ஏதாவது, நாற்பது வெற்றிலையாவது கொடுத்தால்தான் அவரைச் சந்திக்க அனுமதிப்பார்கள்.

ஆளுநர்கள் அல்லது யாராவது அரச மன்றுக்கு நியமிக்கப்பட்டால் அவர்கள் ஒருபொழுதும் வீட்டுக்குத் திரும்ப முடியாது. ஒரு பொழுது வேலை செய்து இப்போதும் வேலை செய்யாதவர்களும், தங்கள் வீட்டுக்குப் போய்த் தங்கள் மனைவிமார்களுடன் சுகித்திருக்க முடியாது. காவற்காரராக நியமிக்கப்பட்டவர்கள் தங்களுக்குரிய இடங்களில் இரவும் பகலும் கடமை புரிதல் வேண்டும்.

ஒருவருக்கெதிரான விடயங்களை விசாரித்து அறிவதற்குப் பல உத்தியோகத்தர்கள் உள்ளனர். அவர்களின் தலைமை அதிகாரியைக் கௌலி விதானை என்று அழைப்பர். இந்த அதிகாரி பல சுகபோகங்களுடன் சிறிது வருமானத்தையும் ஈட்டிக்கொள்வான். அவனின் வேலையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்திற்கு அபகீர்த்தி விளைகிறது. இரண்டு பேர்களிடையே சண்டை மூண்டால் இரண்டு பேர்களிடமும் ஏதும் வாங்கிக் கொண்டு யார் கூடுதலாகத் தந்தார்களோ அவர் பக்கம் நிற்பான். அவர்கள் அவன் தீர்ப்பை மறுத்து ஆளுநரிடம் போனால், அவர் தீர்ப்பும் அவரின் ஈடுபாட்டையும் இலாபத்தையும் பொறுத்து இருக்கும். மக்களிடையே நல்லிணக்கம் இல்லாவிட்டால் இவ்வாறான பிரச்சினைக்குத் தீர்வே கிடையாது. கௌலி விதானையூடாக ஆளுநர்கள் மக்களைப் பிழிந்து எடுப்பார்கள். சில குற்றங்களுக்கும் கெட்ட நடத்தைக்கும் தண்டனை செலுத்த வேண்டும். இந்தப் பணத்தால் அரசாங்கத்துக்கு நல்ல வருவாய் கிட்டுகிறது. இந்த நடவடிக்கைகளால் மக்கள் அரசாங்கத்தை வெறுக்கிறார்கள். அரசன் தனது மேலதிகாரிகளால் மக்கள் பாதிக்கப்படுவதைப்பற்றி கவலைப்படுவதில்லை.

கௌலி விதானைக்குக் கீழ் கொங்கண்ணா என்னும் மேற்பார்வையாளர்கள் இருப்பர். இவர்களுக்கு உதவியாக கௌலி அச்சிலா என்னும் எங்கள் கொன்ஸ்ரபிள் போன்றவர் இருப்பார். அவர் ஆளுநர்களின் கட்டளையை நிறைவேற்றல், அரசனுக்கு செய்திகளை அனுப்பி வைத்தல், ஆட்களை விசாரணைக்குக் கொண்டுவருதல் போன்ற காரியங்களை கவனிப்பார். இந்த விடயங்களை நிறைவேற்ற எவரையும் அவர்கள் துணைக்கழைக்கலாம்.

அடுத்த முக்கிய உத்தியோகத்தர் ஆளுநருக்குக் கீழ் இருக்கும் லியன்னா என்னும் எழுத்தராவர். வருகின்ற கடிதங்களை வாசித்தல், சகல நடவடிக்கையின் விபரங்களை எழுதி வைத்தல், சபையிலிருந்து கடிதங்களை எழுதி அனுப்பல் ஆகியவை அவரின் கடமையாகும். அவர் ஒரு பதிவை வைத்திருப்பார். அதில் அனுப்பிய, வந்த கடிதங்களின் விபரங்கள் பதியப்பட்டிருக்கும்.

இவருக்கு அடுத்தவர் உண்டியா என்னும் உத்தியோகத்தராகும். இச்சொல் மொத்தப் பணத்தை குறிக்கும். அரசனின் பணத்தை ஒன்றாகச் சேர்த்து, சேமித்து வைத்திருத்தல் இவரின் பணியாகும்.

மொன்னன்னா என்பது அளவையாளர் என்ற கருத்துடைய சொல்லாகும். அந்தப் பெயரையுடைய உத்தியோகத்தரின் கடமை அரசனின் தானியத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளந்து கணக்கிட்டு வைத்திருத்தலாகும். இந்த வேலை உண்டியாவுக்குக் கீழ் உள்ளதாகும்.

இந்த உத்தியோகத்தர்களின் அதிகாரம் ஒரு மாகாணத்துக்குள் அல்லது பிரதேசத்துக்குள் மாத்திரம் கட்டுப்பட்டதில்லை. சொல்லப்போனால் நாட்டின் கணிசமான பாகத்துக்குள் செல்லுபடியாகத் தக்கதாகும். அதாவது அவர்களால் நிர்வகிக்கக்கூடிய பகுதியாகும். நாட்டின் பல பாகங்களிலும் இம்மாதிரியான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நாட்டின் பிரிவுகள் நூற்றுக்கணக்கானவையாகும். அந்தப் பிரிவுகளின் தன்மைக்கேற்ப அந்த உத்தியோகத்தர் தொகுதிகள் அமைந்திருக்கும்.

சில குறிப்பிட்ட பட்டணங்களைத் தவிர, நாட்டில் உள்ள எல்லா இடங்களிலும் இந்த உத்தியோகத்தர்கள் தமது கடமையைச் செய்வர். அக்குறிப்பிட்ட பட்டணங்கள் இருவகைப்படும். ஒரு வகை, விக்கிரகங்களைக் கொண்ட கோயில்கள் உள்ள மதகுருவுக்கு முன்னைய அரசர்கள் காணிக்கையாகக் கொடுத்த பட்டணங்கள், இரண்டாவது வகை அரசனால் பிரபுக்களுக்கும் சேவகர்களுக்கும் கொடுக்கப்பட்ட பட்டணங்கள். இப்பட்டணங்களில் மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் தமது அதிகாரத்தைப் பிரயோகிக்கமுடியாது. இப்பட்டணங்கள் தமக்கெனப் பிரத்தியேக உத்தியோகத்தர்களைக் கொண்டுள்ளன.

இந்த உத்தியோகத்தர்களின் குடும்பத் தலைவர் இறந்தால் கொடுக்க வேண்டிய மாரல், ஹரியேட் வரிகளைச் செலுத்த தேவையில்லை. இந்த வழக்கத்தைப் பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். மற்றவர்கள் அவர்கள் செய்கை பண்ணிய நிலத்தின் தன்மைக்கேற்ப ஒரு குறித்த அளவு தானியத்தை அறுவடைக்குப் பின்னர் கொண்டு வந்து கொடுக்க வேண்டும்.

கீழ்மட்ட உத்தியோகத்தர்கள் இலஞ்சம் கொடுத்தே பதவிக்கு வருகிறார்கள். அவர்களின் பிள்ளைகள் தகப்பன் இறந்தால் அவர் வகித்த பதவி தனக்குத்தான் என்று பாவனை செய்வதனால் இலஞ்சம் கொடுக்காமல் அப்பதவியை அவர்கள் பெறமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உத்தியோகத்தர்கள் ஆளுநர் விரும்பினாலும் வாழ்க்கை பூராகவும் நிலைப்பதில்லை. சிலர் நீக்கப்படுவார்கள், சிலர் கடமையைச் சரியாகச் செய்யவில்லை என்று அகற்றப்படுவார்கள். அல்லது அவர்களிடமிருந்து பணம் பறிக்கப்படும். செல்வாக்கு மிக்க பலர் இந்த உத்தியோகத்தர் மீது முறைப்பாடு போட்டுத் தொல்லை கொடுத்து, வேலையைவிட அல்லது மாற்ற, முயல்வர். வேலையிலிருந்து நீக்கப்பட்டவருக்குப் பதிலாக வேறொருவர் நியமிக்கப்படுவார்.

இந்த வகை முறைப்பாடுகளைக் கேட்டு நீதிவழங்கப் பிரதேச நீதி மன்றங்கள் உண்டு. இதில் உயர் உத்தியோகத்தர்கள், பட்டணத்தின் தலைமை அதிகாரி ஆகியோர் அடங்கி இருப்பர். பட்டணத்தின் ஆலோசகர்கள் அடங்கிய இந்த அமைப்புக்குக் கிராமசபை என்று பெயர். அவர்களின் தீர்ப்புக்கு இஷ்டமில்லாவிட்டால், அல்லது அவர்களின் முடிவு பிழையெனக் கண்டால், தலைமை ஆளுநருக்கு மேல்முறைப்பாடு செய்யலாம். இதற்கு ஒரு கட்டணம் உண்டு. அவர் அந்த மேன் முறைப்பாடுகளை அதிகார் அல்லது தலைமை நீதிபதிக்கு அனுப்பிவைப்பார். ஆனால் யார் கூடுதலாக இலஞ்சம் வழங்குகிறாரோ அவர் எல்லாத் தண்டனைகளையும் மேவிச் சாதகமான தீர்ப்பை பெறலாம். இதனால் இந்த நாட்டில் பொதுவாக இப்படி சொல்லிக் கொள்வார்கள்; எவன் நீதவானுக்கு கொடுக்கப் பணம் வைத்துள்ளானோ அவன் தனது செய்கை சரியானதோ பிழையானதோ என்று கவலைப்படவோ பயப்படவோ தேவையில்லை. இவ்வகை மிகப் பெரிய குற்றவாளிகளுக்கு விதிக்கக்கூடிய மிகப்பெரிய தண்டனை சிறைவாசமாகும்.

சிலர் அரசனுக்கு மேன்முறையீடு பண்ணுவார்கள். அரசனது முன்னிலையிற் குப்புற விழுந்து தங்களுக்கு நிகழ்ந்த அநீதிக்கு நீதி கேட்பார்கள். சில வேளைகளில் அவன் தீர்ப்புச் சரியாக இருக்கும். சில வேளைகளில் அவர்களைச் சில காலம் பொறுத்திருக்கும் படி சொல்வான். அவர்கள் காத்திருந்து காத்திருந்து அலுத்து விடுவார்கள். முடிவு நோயை விடப் பரிகாரம் கடுமையானது போல் இருக்கும். அவர்கள் மீண்டும் மீண்டும் அவனிடம் வந்தால் அரசனுக்குத் தொல்லை கொடுத்தற்காக அவர்களைச் சங்கிலியாற் பிணைத்துச் சிறையிற் போடுமாறு கட்டளையிடுவான். அவர்கள் பல ஆண்டுகள் அங்கே இருக்க வேண்டிய நிலையும் உருவாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனின் முக்கிய உத்தியோகத்தர்கள் அரசனின் அலுவலாக வெளியிற் போனால், அவர்களுக்கு முன்னும் பின்னும் படைவீரர்கள் செல்ல வேண்டும். அந்த உத்தியோகத்தர்களின் உடைவாட்கள் அவர்களின் பக்கத்திலே தொங்க வேண்டும். அல்லது ஒரு பையன் அதைச் சுமந்து வரவேண்டும். இந்நடவடிக்கை நாட்டின் பெருமையைப் பறைசாற்றுவதற்காகும். போகும் போது அவர்களின் பயணச்சாப்பாடு தயாரிக்கப்பட்டு எடுத்து வரப்படும். ஒரு மனிதன் ஒரு தடியில் அவைகளைக் கொழுவி முதுகிற் சுமந்து வருவான். தண்ணீர்க் குடங்கள் இருவராற் காவிக்கொண்டு வரப்படும். இந்தச் சாப்பாட்டுக்கான செலவு நாட்டினுடையதாகும். இந்தச் சாப்பாடு, கூட வரும் படை வீரர்களுக்கு வழங்கப்பட மாட்டாது. அவர்களின் சாப்பாட்டை அவர்களே கொண்டுவர வேண்டும். ஆனால் கப்டன்களுக்கு சாப்பாடு வழங்கப்படும்.

நகரத்தில் வழங்கப்படும் மிகப்பெரிய விருது ஒஸ்பொரி என்பதாகும். அது வணக்கத்துக்குரியவர் என்ற கருத்துடையதாகும். அரசனின் வேலை நிமித்தம் வெளியிற் செல்பவர்கள் சிஹபடு என்றும் டிஸ்கொன்டிரு என்றும் அழைக்கப்படுவர். இவை முறையே பெருமையுடையவர் என்றும் சிறந்தவர் என்றும் பொருள்படும். வெளியில் இவர்களின் நடத்தை அரசைச் சார்ந்ததாகக் கருதப்படும். இந்த மனிதர்கள் வெளியிற் செல்லும் போது சில மனிதர்களோ பையன்களோ ஆயுதம் தாங்கிச்செல்வர். அதிகார் எங்கு சென்றாலும் குதிரையை அடிக்கும் கசை போன்ற குஞ்சத்தால் ஒருவர் விசிறிக் கொண்டு வருவார். இதனால் எல்லா மக்களுக்கும் அதிகார் வருகிறார் என்பது தெரியவரும்.

இவ்வாறான கௌரவம், செல்வாக்குகளாற் சிலவேளைகளில் அரசனின் வெறுப்புக்கு அவர்கள் ஆளாவதுண்டு. அப்படிப்பட்டவர்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டுப் பொதுவான சிறைச்சாலைகளில் வைக்கப்படுவர். சிலவேளைகளில் அவர்கள் வரிசையாக நின்று ஒருவரை ஒருவர் பற்றிப்பிடித்துக் கொண்டு அரசனின் கட்டளைப்படி மரண தண்டனையை ஏற்றுக்கொள்வதுண்டு.

இவ்வாறு ஒருவருக்கு மரணதண்டனை நிறை வேற்றப்பட்டால் அவரின் ஆண் வாரிசுகள், மகன்கள், சகோதரர்கள் போன்றவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனுக்கு எதிராகச் சதி செய்து பழிதீர்ப்பார்கள் என்ற பயத்தில் அவர்கள் சொத்துக்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்படும். சொத்துக்கள் இல்லாததால் அவர்களின் மனைவி சகோதரிகளுக்கு கௌரவம் இல்லாமல் போகும். சில வேளைகளில் அவர்களின் ஆண் பிள்ளைகள் மற்றும் சகோதரர்களைப் பிடித்து அவர்களைத் துரோகிகள் என்று கூறித் தலைகளைச் சீவிவிடுதலும் உண்டு. சிலவேளைகளில் அவர்களைத் தடுத்து வைத்து அவர்களுக்கு நல்ல கௌரவமுள்ள தொழில்களை வழங்குதலுமுண்டு.

பொதுவாக இப்படி கூறப்படுவதுண்டு, நானும் கண்டிருக்கிறேன். அரசன் தலையைச் சீவ வேண்டும் என்று எண்ணுபவர்களையே இவ்வாறு பொறுப்புள்ள முக்கிய பதவிகளில் நியமிக்கிறான். நீண்ட காலம் சேவையில் வைத்திருக்க வேண்டும் என்பவர்களுக்கு பொறுப்புள்ள முக்கிய வேலைகளை அவன் தருவதில்லை. பொறுப்புள்ள வேலையில் பிழைவிடச் சந்தர்ப்பம் அதிகம். நாளாந்தம் இவ்வாறு நடப்பது கண்டும் அவர்களது பேரவா அவர்களைத் தூண்டி உச்ச பதவிகளுக்கு அவர்களைக் கொண்டுவந்து சேர்க்கிறது. அவரது மனைவிமார்களும் அவர்களை உச்ச பதவியை நோக்கி தூண்டுகிறார்கள். தாங்கள் எத்தனை காலத்துக்குத்தான் வீட்டுப்பெண்ணாக முடங்கி கிடப்பது, தாங்கள் மதிப்புள்ள பெண்மணி என்று புகழப்படுவதை அவர்கள் விரும்புகிறார்கள். இவைகள் எல்லாம் கடைசியில் அழிவில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

06

அரசனின் வலிமையும் போர்த்திறமும்

நான் இப்போது இந்த நாட்டு அரசனின் இராணுவ நடவடிக்கைகள் பற்றிப் பேசப்போகிறேன். அவனின் வலிமை, இயற்கையாக அமைந்த அரண், அவனின் காவலர்கள், தந்திரம், படைவீரர்களின் வீரம் என்பனவற்றிலே அது தங்கியுள்ளது.

அவன் இயற்கையான கோட்டை, கொத்தளங்களைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், இயற்கை அவற்றை அவனுக்கு வழங்கியிருக்கிறது. அவனது நாடான கண்டிராச்சியம் உயர்ந்த மலை மீது அமைந்துள்ளது. அந்த இடத்தை இலகுவில் அடையவோ தாக்கி அழிக்கவோ முடியாது. அவன் தற்போது வதியும் டிக்லிக்கி நகரமும் அப்படித்தான். இந்த இடங்களைப் பற்றி முன்னர் நான் விபரித்துள்ளேன். இதனால் அது பற்றிச் சொல்வதைத் தவிர்க்கிறேன்.

நாட்டின் எல்லா வசதியான இடங்களிலும் காவலர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். அவ்விடங்களில் முள்வேலிகள் வேறு போடப்பட்டுள்ளன. மேலும் அபாயகரமான காலங்களில் சாதாரண காலங்களைவிட கூடுதலான காவலர்கள் எல்லாக் கடவைகளிலும் தெருக்களிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பர். அதனாற் கண்ணுக்குத் தெரியாமல் ஒரு காரியமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறமுடியாது. நான் முன்னர் சொல்லிய முள் கடப்புகள் முட்செடிகளாலும் முள் மரங்களாலுமானவை. இம்முட்கள் எல்லாப்பக்கமும் வளைந்து இரும்பு ஆணிகள் போன்று குத்தும் தன்மையன. இப்படியான முட்களை நான் பிற்காலத்தில் கிரஸ்காம் கல்லூரியின் பண்டகசாலையில் கண்டேன். இம்முட்களின் தண்டுகள் ஒரு நல்ல பிரம்பின் கனத்தில் இருக்கும். இந்த தண்டுகளில் அல்லது கிளைகளில் நிரையாக முட்கள் நெருங்கி இருக்கும். இவை நுழைவாசலிற் பத்து பன்னிரண்டு அடி உயரத்திலே தொங்கிக் கொண்டிருக்கும் (இப்படி இருந்த போதிலும் யானைகளால் இவைகளைக் கடந்து செல்லமுடியும்) இதற்குப் பின் கடையன்னல் போன்ற தட்டி பத்து பன்னிரண்டு அடி உயரத்தில் அமைக்கப் பட்டிருக்கும். இதனைப் பற்றி முட்செடிகள் படர்ந்திருக்கும். தேவைப்பட்ட போது இந்த அமைப்பை நகர்த்தி வழியேற்படுத்தலாம்.

அனுமதியில்லாமல் யாரும் நகரத்துக்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். அனுமதிச் சீட்டு என்பது களிமண்ணிற் இலட்சினை பொறிக்கப்பட்ட ஒரு களிமண் தட்டு ஆகும். இது அரச சபையாற் காவலரண் ஊடாகப் போய்வருவதற்கு கொடுக்கப்படுவதாகும். இந்த இலட்சினை பல வகைப்பட்டது. படை வீரருக்குக் கொடுப்பதில் ஒரு மனித உருவம் ஈட்டியைத் தோளில் தாங்கியிருப்பது போன்ற படம் பொறிக்கப்பட்டிருக்கும். பணியாளருக்குக் கொடுப்பதில் இரு முனைகளில் கூடைகளைத் தாங்கிய தடியை தோளில் வைத்திருக்கும் மனித உருவம் இருக்கும். வெள்ளைக்காரருக்கு கொடுப்பதிலே கையில் வாளும் தலையிலே தொப்பியும் அணிந்த மனித உருவம் பதியப்பட்டிருக்கும். கம்பெனியில் கூடுதலாக ஆட்கள் இருப்பதால் இவ்வகைச் சின்னங்கள் கூடுதலாகத் தேவைப்படுகிறது. சோதனை என்றால் அரைகுறைச் சேனையில்லை. யாவரையும் பூரணமாகச் சோதித்த பின்னர்தான் அனுமதிப்பார்கள். போவோர் வருவோர் என்ன கொண்டு செல்கிறார்கள் என்பது கவனமாகக் கண்காணிக்கப்படும்.

திசாவைகளைப்பற்றி முன்பு சொல்லி இருக்கிறேன். அவர்களிற் சிலர் இராணுவத் தளபதிகளாவர், சிலர் கப்டன்களாவர். இவைகளிடையே சிறிய கொமாண்டர்கள் என்ற தரமும் உண்டு. 970 படை வீரர்களின் விபரங்களை ஒரு ஓலையில் எழுதி வைத்து கையாளுபவரை மொடெ ரோல் என்பவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் திசாவையின் அதிகாரத்துக்குக் கீழ் இருப்பார்கள். அவர்களில் பிரதானமான நால்வர் உள்ளனர்.

எல்லாக் கொமாண்டர்களும் படைவீரர்களும் அரசசபையிலே காவற் கடமை புரிதல் வேண்டும். ஆனால் எந்நாளுமில்லை. பெரிய கொமாண்டர்கள்தான் தொடர்ச்சியாகப் பணிபுரிவர். மற்றவர்கள் அரசன் குறிப்பிடுகின்ற நாளில் பணிபுரிந்தால் போதுமானது. அதற்கென்று இருக்கும் படைவீரர்கள் தங்களுக்கு ஒதுக்கிய நேரப்படி பணிபுரிவர். அவர்கள் வீட்டுக்குச் செல்லும் போது தங்களுக்கு கூலியாகக் கொடுக்கப்பட்ட ஆதாரப்பொருட்களைத் தோளிற் சுமந்து கொண்டு செல்வர். இந்த வீரர்கள் பட்டியலில் உள்ளவர்கள் இல்லை. (பட்டியலில் உள்ளவர்கள் அசாதாரணமான காலங்களில் மாத்திரம் சேவைக்கு அழைக்கப்படுவார்கள்) அவர்கள் தந்தைக்குப் பின் மகன் என்ற முறையில் கடமை புரிவார்கள். இதற்காகச் சில குறிப்பிட்ட நிலங்களைப் பயன்படுத்தும் உரிமை அவர்களுக்குண்டு. இந்தக் கடமையில் அவர்கள் தவறினால் இந்த உரிமையை அவர்கள் இழப்பர். அவர்கள் தமது தவறுக்கு மன்னிப்புக்கேட்டு மீண்டும் வேலைக்குச் சேர்ந்தாலும் மீண்டும் நில உரிமையை இலகுவில் பெற முடியாது. கொமாண்டர்களுக்கு இலஞ்சம் கொடுக்க வேண்டும்.

மலை நாடு எனப்படும் கண்டி இராச்சியத்தின் படை வீரர்கள் அந்த நாடு முழுவதும் காணப்படுகின்றனர். இதனால் அவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்திருப்பது அரிது. இதனால் அரசன் தனது பட்டணத்தவர்களோ மற்றவர்களோ தனக்கெதிராக ஒன்று திரண்டு சதி செய்ய வாய்ப்புக் குறைவு என்று கவலையில்லாமல் இருக்கிறான்.

அரசன் கொமாண்டர்களையும் படைவீரர்களையும் வெளிநாட்டிற்கு போருக்கு அனுப்பிவைக்கும் போது, சில வேளைகளில் அவர்கள் அவன் முகத்தை பார்க்க முடியாத சந்தர்ப்பங்களுமுண்டு. சிலவேளைகளில் தூதுவர்கள் மூலமாகச் செய்தி அனுப்புவான். சில வேளைகளில் நேரடியாக அவர்களிடம் எடுத்துச் சொல்வான். எழுத்திற் கட்டளை அனுப்புவது கிடையாது. பல கொமாண்டர்களை அனுப்பும் போது அவர்களில் ஒருவரைத் தலைமைக் கொமாண்டராக நியமிக்கும் வழக்கம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் படைவீரர்களுக்குத் தம் விருப்பப்படி கட்டளையிடுவர். சில வேளைகளில் அவர்களிடையே அபிப்பிராய பேதம் ஏற்பட்டு நோக்கம் பிழைத்து விடுவதுமுண்டு.

இது பற்றி ஏதாவது செய்தி அரசனின் காதுகளுக்கு எட்டினால் எல்லோரும் ஒன்றாகப்போய் அதைப்பற்றிக் கதைக்கமாட்டார்கள். ஒவ்வொருவராகச் சென்று தமக்குத் தெரிந்தவைகளைத் தமக்கு விரும்பியவாறு கூறி மன்னனின் தயவு தம்மீது விழமுயற்சிப்பர். இந்த முறையால் உண்மை விபரங்களை மன்னன் ஊகித்துத் தெரிந்து கொள்வான். அவர்கள் அனுப்பப்பட்ட போர் முடிந்து திரும்பும்படி அரசன் கட்டளையிடும் வரையும் அவர்கள் திரும்ப முடியாது.

ஒல்லாந்தருக்கெதிராகப் படையினரை மன்னன் அனுப்பி வைத்திருக்கிறான். அதனால் படையினர் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டி வந்தது. அவர்கள் தங்கள் உணவுப் பொருட்களையும் தண்ணீர் முட்டியையும் பின் புறம் காவிச் செல்ல வேண்டியிருந்தது. இதைவிடப் பிக்காசு, வில் அம்பு, துப்பாக்கி இவைகளையும் சுமந்து செல்ல வேண்டும். களத்தில் இருக்கும் போது தங்குவதற்குரிய கூடாரங்களை அமைக்கத் தேவையான தளப்பத்து ஓலையையும் எடுத்துச் செல்ல வேண்டும். தடிகளை நட்டு மேற் கூரையாக ஒவ்வொருவரும் கொண்டு வருகின்ற ஓலைகளை மேய்வர். இதனால் மழையில் நனையாமல் இருக்கலாம். அமைக்கப்படும் கூடாரத்தின் உறுதி அவர்கள் தங்கி இருக்கும் காலத்தின் அளவைப் பொறுத்ததாக இருக்கும். அவர்கள் கொண்டு போகும் உணவுப்பொருட்கள் முடிந்து விட்டால், மீண்டும் வீட்டுக்குப் போய் எடுத்து வருவர். அப்படி போனவர் வராமல் விடுவதுமுண்டு. இதனால் ஓரிரு மாதங்களிற் படையினர் தொகை குறைந்து விடும்.

ஏதும் நடவடிக்கை காரணமாக அரசன் இராணுவத்தை வெளிநாட்டுக்கு அனுப்பும் போது எதிரிக்குத் தகவல் போகாமல் தடுக்கக் கடும் கவனம் எடுப்பான். படையினர் குறித்த இடத்திற்கு வரும் வரை அவர்களுக்கு எங்கே போகப்போகிறோம், என்ன நோக்கம் என்பவைகள் தெரியாது. சில நேரங்களிற் கொமாண்டர்கள் கட்டளை மேலிடத்திலிருந்து வரும் வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது வெடிப்பொருட்கள் வந்து சேரும் வரை அவர்களின் படைவீரர்களுடன் காடுகளிற் சில குறித்த இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பார்கள். ஒரு வேளை நீண்ட காலத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் அவர்கள் அழைக்கப்படுவதுமுண்டு. அவர்களை மீண்டும் தங்கி இருந்த இடங்களுக்குப் போகும்படி ஏவுவதுமுண்டு. இந்தத் தந்திரோபாயத்தால் ஒல்லாந்தருக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது. அவன் தனது தளபதிகளை சுதந்திரமாக செயற்பட அனுமதிப்பதில்லை. தன்னிச்சையாக அவர்கள் செயற்பட்டு விளைவு பாரதூரமாக இருந்தால் அவர்களின் தலைகள் கொய்யப்படும்.

அவர்களின் போர் நடவடிக்கைகளில் தனிப்பட்ட வீரம் வெளிக் காட்டப்படாவிட்டாலும் அவர்கள் மொத்தமாக குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்டுகின்றனர். அவர்கள் தங்கள் எதிரிகளை நேருக்கு நேராகச் சந்திப்பதில்லை. தங்கள் போர் வலிமையையோ படைப்பலத்தையோ காண்பிப்பதில்லை. அவர்களின் பிரதான தந்திரம் மறைந்திருந்து தாக்குவதும் முன்னேறுவதைத் தடுப்பதுமாகும். அதற்குரிய வசதியான இடங்கள் இந்த நாட்டில் நிறைய உள்ளன. அவ்வாறான இடங்கள் சிலவற்றிலே போதுமான காடுகள் இருக்காது. காடுகள் இல்லாவிட்டால் தூரத்தில் வரும் எதிரிக்குக் காடுகள் இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவார்கள். இங்கே மறைந்திருந்து எதிரியை திடீரெனப் பாய்ந்து தாக்கிப் பெரும் சேதத்தை ஏற்படுத்துவார்கள். சிலவேளைகளில் அவர்களின் பீரங்கிகள், துவக்குகள் போன்ற ஆயுதங்களை எடுத்துக்கொண்டு பாறைகளுக்குப் பின்னும் பற்றைகளுக்கு பின்னும் மறைந்து விடுவர். சில சந்தர்ப்பங்களில் மரக் குற்றிகளைத் தறித்து வைத்திருந்து எதிரிப்படை வரும் போது அவர்களின் மேல் உருட்டி விடுவதுமுண்டு. மறைந்திருந்து சுட்டும் அம்புகளால் எய்தும் அவர்களுக்கு பெரும் நாசத்தை விளைவிப்பர்.

போர்த்துக்கீசரோடும் ஒல்லாந்தர்களோடும் செய்த பெரும் யுத்தங்களால் அவர்கள் பெரும் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டனர். இதனாற் போர்க்கலையிற் பெரும் அபிவிருத்தியை அவர்கள் அடைந்துள்ளனர். போர்த்துக்கீசருடன் பணிபுரிந்த சில பெரிய கொமாண்டர்கள் இப்போது இவ்வரசன் படையில் வேலை செய்கின்றனர். அதனால் அவர்கள் கிறிஸ்தவப் படைகளின் வியூகத்தையும் ஒழுங்கமைப்பையும் நன்கு அறிந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காரணமாக ஒல்லாந்தரைத் தோற்கடித்து. பல கோட்டைகளை மீண்டும் அவர்களிடமிருந்து கைப்பற்றியுள்ளனர்.

எதிரிகளுக்கு சில பரிசுப் பொருட்களை கொடுத்து அரசன் அவர்களை முன்னர் சமாளித்து வந்தான். இப்போது இம்மாதிரி கொடுப்பதில்லை. அவர்கள் தம் நாட்டை நன்கு பலப்படுத்தி உள்ளதால் இப்போது அதற்கு அவசியமில்லை. தாங்கள் போரில் வெல்லமாட்டோம் எனக்கண்டால் அவர்கள் போரிடமாட்டார்கள் அதற்குப் பதிலாக அவர்களுக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் வழிகளை பார்ப்பர்.

படையினர் போரில் ஈடுபட்டிருக்கும் காலத்திலே தங்களுடைய உணவுக்குரிய பொருட்களைத் தங்கள் வீட்டிலிருந்தே காவிக் கொண்டு வரவேண்டும். அவர்களால் ஒரு மாதத்துக்குரிய உணவுப் பொருட்களைக் காவிக்கொண்டு வரமுடியாது. அவர்கள் கொண்டு போன பொருட்கள் முடிவடைந்தவுடன் வீட்டுக்குச்சென்று எடுத்து வருவர். அவர்களின் ஆளுநராலோ மேற்பார்வையாளராலோ அதற்கு எந்தவித கூலியும் கொடுக்கப்பட மாட்டாது. அவர்கள் இதற்கான அனுமதியைப் பெறாமல் வீட்டுக்கு உணவுப்பொருட்களை எடுத்துவரப் போனால் தெருவில் இருக்கும் அரசனின் காவலர்கள் அவ்வாறு வருபவரைப் பிடித்துக் கொடுப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07

அரசனுக்கெதிரான கலவரம்

இந்த அரசனுக்கெதிராக நிகழ்ந்த பயங்கரமான கலவரத்தைப் பற்றி விபரிக்காவிட்டால் இந்தப் பாகம் பூரணமடையாது. 1664 இல் இக்கலவரம் நிகழ்ந்தது. இந்தக் காலத்தில் ஒரு பயங்கரமான வால் நட்சத்திரம் பிரகாசமாக ஒளிவீசிக்கொண்டு வானிலே தோன்றியது. இந்தக்கிளர்ச்சி நடைபெறும் போது அந்த நட்சத்திரம் உச்சந் தலைக்குமேல் தோன்றியது. அதனுடைய வால், கிளர்ச்சி முளைவிட்ட இடமான மேற்கு நோக்கி இருந்தது. இது எனக்குப் பெரு வியப்பேற்படுத்தியது. அதனுடைய வால் அங்கிருந்து மெல்ல மெல்ல நகர்ந்து கிழக்கு நோக்கிவர, கிளர்ச்சியும் அவ்வாறு நகர்ந்தது. இது எனக்கு இன்னும் பெரு வியப்பை ஊட்டியது.

இந்த நாட்டின் மக்கள், அரசனின் காரணமில்லாத நீண்ட கால அடக்கு முறையால் அவனுக்கெதிராகச் சதி செய்யத் தலைப்பட்டனர் என்பதை நான் அறிவேன். இரவில் அரண்மனைக்குள் புகுந்து அரசனைக் கொலை செய்து விட்டு அவனின் மகனை அரசனாக்குவதே கிளர்ச்சிக்காரர்களின் திட்டம். அவனின் மகன் பன்னிரண்டு பதினைந்து வயதுக் கிடைப்பட்ட சிறுவனாக இருந்தான். அவன் தனது தாயுடன் கண்டி நகரத்தில் வசித்து வந்தான். அந்த நேரத்தில் அரசன் தனது சபையை நிலம்பே நகரத்தில் நடத்தி வந்தான். அந்த இடம் கண்டி நகரத்தில் இருந்து 14 மைல் தொலைவிலும் தற்போது வாழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிக்லிக்கி நகரம் அதிலிருந்த அதே அளவு தூரத்திலும் அமைந்திருந்தது. ஒரு நாயை முயல் துரத்தியது என்ற பாரம்பரியக் கதையிற் குறிக்கப்படும் இடத்தில் தான் அரசனின் மாளிகை அமைந்திருந்தது. அது இயற்கையாகக் குன்றுகளும் காடுகளும் அரணாக அமைந்த இடமாகும்.

கிளர்ச்சியாளர்கள் தமது நோக்கத்தைத் திட்டமிட்ட நேரம் 1664 டிசம்பர் 12 ஆம் திகதி 12 மணியாகும். அதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட சுமார் 200 பேர் அடங்கிய குழுவினர் (அவர்கள் எவ்வளவு பேர் என்று எனக்குத் தெரியாது) நகரத்தை ஊடறுத்துச் சென்றனர். காவலாளிகள் அதற்கு உடந்தையாக இருக்க வேண்டும் அல்லது அவர்களை எதிர்க்கத் தம்மால் இயலாது என்று வாளாதிருக்க வேண்டும். எப்படி இருந்தாலும் அவர்களுக்கு மரணதண்டனைதான். நகரத்தில் நுழைந்த அவர்கள் விரைந்து அரண்மனையை அடைந்தனர். அங்கு காவலில் நின்றவர்களில் தமக்கு சாதகமானவர்களை விட்டு எதிரானவர்களை வெட்டிச் சாய்த்தனர். இதைக்கண்ட சில காவலாளிகள் ஓடி அரசனிடம் விடயத்தைக் கூறினர். அவன் உடனே களிமண் தட்டியை எடுத்து வழியை அடைத்து விட்டு விடுமாறு கூறி ஒரு மனையில் ஐம்பதுக்கும் குறைவான பரிவாரங்களுடன் ஏறிவிட்டான். மலையேறும் வழிகள் மோசமாக இருந்ததாற் குதிரையில் ஏறிச் செல்வதும் கஷ்டமாகிவிட்டது. ஒரு யானையை முன்னால் நடக்கவிட்டுக் காட்டை விலத்தியே அரசனும் கூட வந்தவர்களும் தப்பினர்.

கலகக்காரர்களும் விடாமலே துரத்தினர். அரசன் அடைய முடியாத தூரத்தில் இருந்ததால் அவனைக் கொல்ல அவர்களால் முடியவில்லை. மலையிற் பதினைந்து மைல் தொலைவில் உள்ள கௌலுடா என்ற இடத்தில் தனது பாதுகாப்பைத் தேடிக்கொண்டான். அங்கிருந்து மொண்டமோனர் என்ற இடத்திற்கு அரசன் தனது இருக்கையை மாற்றிக்கொண்டான். அந்த இடம் ஏறுவதற்கு சிரமமானதும் செங்குத்தானதுமாகும். ஓர் இடத்தில் மாத்திரம்தான் ஒரு வழி இருந்தது. அத்தோடு பாறைக்கற்கள் நிறைய இருந்ததால் பின் தொடர்ந்து வரும் கலவரக்காரர்கள் மீது இலகுவாகத் தள்ளிவிடக் கூடியதாகவுமிருந்தது.

மக்கள் அரசனை விரட்டி விட்டு கண்டி நகரை நோக்கி அணிவகுத்துச் சென்றனர். அங்கிருந்த இளவரசனை அரசனாகப் பிரகடனம் செய்தனர். இந்த அரசன் தனது தன்னிச்சையான ஆட்சியில் மக்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டையும் அழிக்கிறான்; இந்த நாட்டிற்கு வரும் தூதுவர்களைத் தடுத்து வைத்து வர்த்தகத்தை நாசப்படுத்துகிறான்; நாட்டுக்கு வரும் மக்களைச் சிறைப்படுத்துகிறான்; பிரஜைகளையும் சிறுவர்களையும் கொல்கிறான்; மனைவியைப் பார்க்காமற் கணவர்களைத் தடுத்து வைத்திருக்கிறான்; இவைகள் எல்லாம் நியாயத்துக்கு முரணானவை. இதைப்பற்றி மற்ற நாட்டு அரசாங்கங்களுக்கு நாங்கள் அறிவிக்கிறோம் என்றும் அவர்கள் கூறினர். இந்த அநியாயங்களைப் பொறுக்க முடியாமல் நாங்கள் இந்த முடிவை எடுத்திருக்கிறோம் என்று அங்கிருந்த ஆங்கிலேயர்களான எங்களிடம் அவர்கள் எடுத்துரைத்தனர்.

இளவரசன் ஒரு நோஞ்சான், வயதும் குறைவு. அவன் ஒருபொழுதும் அரண்மனைக்கு வெளியே போய் அறியான். தனக்கு வேலை செய்கிறவர்களைத் தவிர, வேற்று மனிதர்களை அவன் கண்டறியான். பெருங் கூட்டமாக திரண்டு வந்த சனங்கள் அவனைத் தலை குனிந்து வணங்கி நீங்கள் தான் இனிமேல் எங்கள் அரசன், உங்கள் தகப்பனை நாங்கள் மலைக்கு விரட்டி விட்டோம் என்று சொன்னவுடன் சிறுவன் பயந்து விட்டான். அவனால் ஒன்றும் சொல்லவேச் செய்யவோ முடியவில்லை, திரு திரு வென்று விழித்தான். இது கிளர்ச்சிக்காரர்களுக்குக் குழப்பத்தையும் கவலையையும் தோற்றுவித்தது. அவர்களது துயரத்துக்கு ஆறுதல் சொல்வார் இல்லாமல் அவர்கள் தவித்தனர். இதுவெல்லாம் டிசம்பர் ஐந்துக்கும் இருபதுக்குமிடையே நடந்தது. அதன்பின் வேறு வழியில்லாமல் அரசனின் காலடியில் சரணாகதி அடைந்தனர்.

இக்காலத்தில் அரசனின் சகோதரி இளவரசனைக் கூட்டிக்கொண்டு அவன் இருக்கும் இடத்திற்கு வந்தாள். இதை அறிந்த கிளர்ச்சிக்காரர்கள் திகைத்துப்போயினர். தாங்கள் கொள்ளையடித்த பணம், உடைகள் ஆகியவற்றை தாங்கள் விரும்பியவர்களுக்குக் கொடுத்து விட்டு பயந்து நாலாபக்கமும் சிதறி நாட்டை விட்டு ஓடினர். சிலர் நல்லவர் போல் நடித்துப் பலரைக் கொன்றும் சிறைப்படுத்தியும் தர்பார் நடத்தினர். மக்கள் இப்போது ஒருவருக்கெதிராக ஒருவர் ஆயுதம் எடுத்துத் தமக்கு விரும்பியவர்களையெல்லாம் வெட்டிச் சாய்த்தனர். எங்கும் கொலையும் கொள்ளையும் தாண்டவமாடின. கிளர்ச்சிக்காரர்கள் எல்லாம் ஓடிவிட்டனர், தன்னை எதிர்ப்பதற்கு யாருமில்லை என்பதை நிச்சயித்து மன்னன் பகிரங்கமாகத் தோன்றினான். ஆயினும் மலையிலேயே இருந்தான். நாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பவைகளைக் கேள்வியுற்று இனிமேல் கொலைகளை நிறுத்தும் படியும் சந்தேகமானவர்களைச் சிறைப்படுத்தும் படியும் உத்தரவிட்டான். ஆயினும் அப்பாவிகளைக் காப்பாற்ற முடியவில்லை. குற்றத்தைக் கூறுமாறு சொல்லிச் சித்திரவதை செய்ததிற் பலர் மாண்டு போயினர். குற்றவாளி இல்லாமல் யாரும் தப்பமுடியவில்லை. எல்லோரையும் சங்கிலியாற் பிணைத்து வைத்து சித்திரவதை பண்ணியதால் யாரும் பிழைக்க முடியவில்லை. அரசன் முக்கியமான கிளர்ச்சிக்காரனான அம்போம் வெள்ளத்தோல், என்பவனை டச்சுக்காரர்களிடம் புதிய சித்திரவதைகளுக்குட்படுத்தி கொல்லுமாறு கூறி அனுப்பி வைத்தான். அவர்கள் அவனை கொல்லுவதற்குப் பதிலாக அவனை பிணைத்திருந்த சங்கிலியை அறுத்து, விடுவித்து, நல்ல விதமாக அவனைப் பராமரித்தனர். அவன் இன்னும் ஒல்லாந்தரிடமே கொழும்பில் உள்ளான். அவனை அரசன் மீது முற்றுகையிடும் போது பயன்படுத்தலாம் என்பது அவர்களின் திட்டம்.

இந்த அரசன் நியாயமானவன் இல்லை. அவனுடைய கடுமையான ஆட்சியின் விளைவுதான் இந்த கிளர்ச்சியாகும். இந்தக் கிளர்ச்சிக்குப் பிறகும் அவன் திருந்தவில்லை, மேலும் மக்களுக்குச் சுமையைத்தான் கொடுக்கிறான். கிளர்ச்சிக்காரர்களுக்குத் தனது மகன் இருப்பது ஊக்கத்தை கொடுக்கலாம் என்பதை அவதானித்து மகனை எங்காவது வெளியில் அனுப்பலாமா என்று யோசித்தான். அது சரிவராது போகவே, மகனுக்கு நஞ்சு கொடுத்தான். இதனை ஏற்கனவே நான் கூறி இருக்கிறேன். அவனின் நன்றி கெட்ட தனத்துக்கும் மடத்தனத்துக்கும், எடுத்துக்காட்டாகக் கூறக்கூடிய இன்னொரு விடயம், அவன் தன்னோடு இருந்த தனக்கு விசுவாசமுள்ளவர்களை கைவிட்டதாகும்.

இந்த நாட்டில், 1664 ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இன்னொரு வால் நட்சத்திரம் மேற்கு திசையிலே தோன்றியது. அதனுடைய தலை மேற்கில் மறைந்தும் காணப்பட்டது. இது 1680 ஆம் ஆண்டு டிசம்பரில் இங்கிலாந்தில் தோன்றிய வால் வெள்ளியை ஒத்தது. இதன் தோற்றத்தால் அரசனும் மக்களும் பெரும் பீதி கொண்டனர். அரசன் ஆட்களை தனது நாட்டில் உள்ள அதி உயர்ந்த மலைக்கு அனுப்பி வால் வெள்ளியின் தலையைப் பார்த்து வரச் சொன்னான். ஆனால் அதன் தலையை அவர்களால் காணமுடியவில்லை. இந்த வால் வெள்ளி ஒரு மாதமளவில் காணக்கூடியதாக இருந்தது. படிப்படியாகக் குறைந்து அது கடைசியில் மறைந்து விட்டது. ஆயினும் இதன் விளைவாகக் குறிப்பிடத்தக்க சம்பவம் ஒன்றும் நிகழவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் III

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01

இந்தத் தீவில் வசிப்பவர்கள்

இந்தப் பாகத்தில் இத்தீவில் வசிப்பவர்களைப்பற்றியும், அவர்களின் சமயம், பழக்க வழக்கங்கள் மற்றும் அவர்களோடு சம்பந்தப்பட்ட மற்ற விடயங்களைப் பற்றியும் பேசுவோம்.

எனது மதிப்பீடுகளின்படி ஒல்லாந்தர் கைப்பற்றியுள்ள பகுதிகளை விட இத்தீவில் நாலில் ஒரு பகுதியில் மலபார்கள் வாழ்கிறார்கள். அவர்கள் இங்கே இயற்கையான குடிமக்களாவர். மற்ற இயற்கையான குடிமக்கள் செய்வதைப் போல அவர்களும் அரசனுக்கு வரிகள் கொடுக்கிறார்கள். மூர்கள்[1] புதியவர்கள்; அதனால் அவர்களுக்கு நிலமில்லை. அவர்கள் இப்போது ஒல்லாந்தர் கைவசம் உள்ள துறைமுகங்களுக்குப் பொருட்களை கொண்டு வந்து கொடுக்கிறார்கள். மலபார் மற்றும் மூர்களைத்தவிர ரோமன் கத்தோலிக்கத்தைத் தழுவிக்கொண்ட கறுப்பர்களும் இங்கே வாழ்கிறார்கள். அவர்கள் சிலுவைகளையும், மணிகளையும் அணிந்திருப்பார்கள். ஒல்லாந்தரின் கீழ் இருக்கும் இவர்களிற் சிலர் அவர்களுக்குத் தீர்வையும் கப்பமும் கொடுக்கிறார்கள்.

நான் இப்போது சிங்களவர்கள் என்று அழைக்கப்படும் இந்த நாட்டின் இயற்கை குடிமக்களைப் பற்றிப் பேசப் போகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவர்களிடம் அவர்கள் எங்கிருந்து வந்தனர் என்று கேட்டபோது அவர்களால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. கட்டுக்கதை ஒன்றின் படி இந்த நாட்டில் முன்னர் பிசாசுகள்தான் வாழ்ந்தனவாம். இங்குள்ள போர்த்துக்கீசரின் ஐதிகம் ஒன்று மேல்வருமாறு கூறுகிறது; முன்னொருகாலத்திற் சீன நாட்டு அரசனுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் நாட்டு மக்களுக்குப் பெரும் இன்னல் விளைவித்து வந்தான். அவன் அரசனாக முடி சூடிய பின்னும் இக்காரியங்களைத் தொடர்வான் என்பதை அரசன் புரிந்து கொண்டான். குடிமக்கள் தனது மகனால் துன்பப்படுவதை அரசன் விரும்பவில்லை. வேறு வழியின்றி அவனை நாடு கடத்த ஏற்பாடு செய்தான். அவனையும் அவன் தோழர்களையும் கப்பல் ஒன்றில் ஏற்றி காற்று அடிக்கும் போது கடலில் தள்ளிவிட்டான். அக்கப்பல் இந்நாட்டின் கடற்கரையிலே தரைதட்டியது. அவர்கள் இங்கே நிரந்தரமாக வாழத்தொடங்கினர். இது எனக்கு ஒரு கதை என்றுதான் தோன்றுகின்றது. சீன நாட்டவரின் உருவ அமைப்பு மொழி மற்றும் உணவு முறைகளுக்கும் சிங்களவர்களுக்கும் எந்த ஒற்றுமையும் இல்லை. அவர்கள் மலபாரிலிருந்தே வந்திருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகின்றது. ஏனென்றால் இந்தத் தீவு மலபாருக்கு கிட்ட உள்ளது. சிங்களவர்களை ஒத்த மக்கள் யாரையும் இந்த உலகத்தில் காணமுடியாது.

இயற்கையான இந்த நாட்டை வாழ்விடமாகக் கொண்டவர்கள் இரு வகைப்படுவர். ஒரு வகையினர் காட்டுவாசிகள். மறு வகையினர் திருந்தியவர்கள். இந்த நாட்டின் காடுகளில் காட்டு மிருகங்கள் நிறைய உண்டு; அதே போல் காட்டு மனிதர்களுமுள்ளனர். பிந்தென பிரதேசம் அடர்ந்த காடுகளால் மூடப்பட்டுள்ளது. அங்கே மான்கள் பெருமளவில் காணப்படுகின்றன. அதே போல் காட்டுவாசிகள் எனப்படும் வேடர்களும் அதிகளவில் அங்கு வாழ்கின்றனர். அவர்கள் மானைக் கொன்று உரித்து அதன் இறைச்சியை நெருப்பில் வாட்டி வைத்திருப்பார்கள். நாட்டு மக்கள் வந்து அதை வாங்கிச் செல்வர். வேடர்கள் இறைச்சியை மாத்திரமே உண்கின்றனர். அவர்கள் ஒரு பொழுதும் உழுது தானியங்களை விதைப்பதில்லை. அவர்கள் வில்லைக் கையாளுவதிற் சமர்த்தர்கள். தேன் இருக்கும் போர் மரங்களை வெட்டிப் பிளந்து அதனை எடுப்பர். அதற்காக அவர்கள் தோளில் எப்பொழுதும் கோடரி இருக்கும். நாட்டு மக்களுக்கு கிட்ட வாழ்பவர்கள் அவர்களுடன் சிறிய வர்த்தகத்தில் ஈடுபடுவர். அவர்களுக்கு கிராமங்களோ, வீடுகளோ கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நீர் நிலைகளுக்கு அருகில் இருக்கும் மரங்களுக்குக் கீழ் வாழ்வர். தாம் இருக்கும் இடத்தைச் சுற்றி மரக்கிளைகளைத் தறித்து அல்லது முறித்துப் போட்டு விட்டுத்தான் இருப்பர். இது ஏனென்றால் அபாயமான மிருகங்கள் வந்தால் அவை வரும் போது கொத்துகளின் சரசரப்பு ஓசை கேட்டவுடன் தற்பாதுகாப்பைத் தேடிக் கொள்ளலாம் என்பதனாலாகும். நாங்கள் தப்பி ஓடி வரும்போது அவர்களைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது.

திருந்தியவர்கள் அரசனின் ஆட்சிக்குட்பட்டவர்கள். இவர்கள் சில வேளைகளில் காட்டுக்குப் போனால் தாம் அரசனின் உத்தியோகஸ்த்தர்கள் என்று காட்டுவாசிகளிடம் சொல்வர். அவர்களும் இவர்களைக் கௌரவிக்க எண்ணி யானைத்தந்தம், தேன், மெழுகு, மான் இறைச்சி ஆகியவைகளைக் கொடுத்து மகிழ்விப்பர். இவர்களும் பதிலுக்கு அம்புமுனைகள், துணி ஆகியவற்றை வழங்குவர். ஆயினும் தாம் இன்னார் என்று கண்டுபிடிக்க அவர்களுக்கு அவகாசம் கொடாமல் உடனே திரும்பி விடுவர்.

இரவிலே இக்காட்டு வாசிகள் வந்து கொல்லன் பட்டறையில் இறைச்சிப் பொதி ஒன்றைக் கட்டித் தொங்கவிட்டு ஒரு மரஇலையை எடுத்து அதில் தாம் விரும்பும் அம்பு நுனி வடிவம் ஒன்றை வெட்டி அதன் பக்கத்தில் வைத்துவிட்டுச் சென்று விடுவர். அவர்கள் குறித்த வடிவத்தில் கொல்லனும் அம்பு நுனிகளைச் செய்து இறைச்சி வைக்கப்பட்டிருந்த இடத்தில் வைத்துவிடுவான். அப்படிச் செய்தால் இன்னுமொரு பொதி இறைச்சி கிட்டும் அப்படி செய்யாது விட்டால் வேடர்கள் இரவில் மறைந்திருந்து கொல்லனின் மீது அம்பெய்வர்.

முன்பொரு தடவை துறைமுகங்களுக்குத் துணிகள், பாக்கு என்பனவற்றை மாட்டுவண்டிகளில் ஏற்றிச் செல்வோரை வழி மறித்து, அவர்களை வில்லால் எய்துவிடுவோம் என்று பயமுறுத்தி, தமக்கு தேவையானவற்றை இந்த வேடர்கள் பெற்று வந்தனர். இதை அறிந்த அரசன் அவர்களின் கொட்டத்தை அடக்கப் பல கொமாண்டர்களைப் படைவீரர்களுடன் காட்டுக்கு அனுப்பினான். அவர்கள் வேடர்களின் தலைவனைப் பிடித்துக்கொண்டு வந்து அரசனின் முன் நிறுத்தினர். அரசன் அவனைக் கண்டித்து இனிமேல் இவ்வாறு செய்யக்கூடாது என்று வாக்குறுதி வாங்கி விட்டு விடுவித்தான். சிறிது காலத்தின் பின் தமது வாக்குறுதியை கை விட்டு தம் கைவரிசையைக் காட்டத் தொடங்கினர். கேள்வியுற்ற அரசன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை கொன்றோ உயிரோடோ பிடித்து வரும்படி உத்தரவிட்டான். இதற்கெல்லாம் காரணம் நம்மிடையே உள்ள துரோகிகள்தான் என்று வேடர்கள் இரு வேடுவத்தலைவர்களைக் கொன்று அவர்களின் தலையை நகரத்தின் ஓரத்தில் இருக்கும் மரமொன்றிலே தொங்கவிட்டனர். எனினும் அவர்கள் அன்றிலிருந்து வழிபறிப்பு வேலைகளில் ஈடுபடுவதில்லை.

மன்னனின் அதிகாரத்துக்குக் கீழ் உள்ள பிரதேசங்களில் ஹௌர்லி மிகத் தூரத்தில் உள்ளதாகும். அங்கு நன்கு திருந்திய வேடர்கள் வாழ்கின்றனர். அவர்கள் மக்களுடன் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். அரசன் ஒரு பொழுது டச்சுகாரர்களுக்கெதிராக கடும் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டிருந்தான். அப்பிரதேச ஆளுநர் வேடர்களும் இத்தாக்குதலிற் கலந்து கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டார். அதன்படி அவர்களும் கலந்து கொண்டனர். அவர்களின் வில் திறமை அங்கு எவருக்கும் சளைத்ததாக இருக்கவில்லை. அவர்கள் தம்மிருப்பிடம் திரும்பியதும், மீண்டும் தம்மைப் போருக்கு அழைப்பார்கள் என்ற பயத்திற் கண்டுபிடிக்க முடியாதபடி காட்டில் மறைந்து விட்டனர். அதன் பிறகு அவர்களை யாரும் காணவில்லை.

அவர்கள் தம்தலைமயிரை ஒரு போதும் வெட்டிக்கொள்வதில்லை. மயிரை கற்றையாக்கி உச்சந்தலையில் முடிந்துகொள்வர். அகன்ற நீளத் துணிகளை அவர்கள் உபயோகிப்பதில்லை. அரையை மறைக்கக் கோவணம் ஒன்றைக் கட்டிக்கொள்வர். அவர்களிலே திருந்தியவர்களும் காட்டுவாசிகளும் சமயம் ஒன்றைக் கைக்கொள்கின்றனர். திருந்தியவர்கள் கோயில் ஒன்றைக்கட்டிக்கொள்வர். காட்டுவாசிகள் மரத்தின் கீழ் பலியிடல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர். இதன் போது ஆண்களும் பெண்களும் ஒன்று சேர்ந்து நடனமாடுவர்.

காடுகளில் ஒவ்வொரு கூட்டத்துக்கும் ஒரு பகுதி எல்லை வைத்து ஒதுக்கப்பட்டிருக்கும். அந்த எல்லையை மீறி யாரும் மிருகங்களை வேட்டையாடவோ தேன் எடுக்கவோ முடியாது. எல்லைக்கு ஒரு பலா நட்டு இருப்பார்கள். ஒரு வேடன் அந்தமரத்தில் பழத்தை எடுத்தால் அதைப்பார்த்துக் கொண்டிருக்கும் மற்றக் கூட்டத்தை சேர்ந்த இன்னொரு வேடன் அப்பழம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குரியதல்ல என்பான். பேச்சுமுற்றி, அடிதடியில் போய், இரு கூட்டமும் ஒருவரை ஒருவர் எதிர்த்து அம்பெய்யும். இரண்டு பக்கமும் இருபது முப்பது பேர் மாண்டு விழுந்த பின்னர்தான் சண்டை ஓயும்.

அவர்கள் தங்கள் பாணியில் அம்புநுனிகள் இருக்க வேண்டும் என்பதில் மிக்க கரிசனை எடுத்துக் கொள்வார்கள். கொல்லர்கள் இந்த விடயத்தில் அவர்களைத் திருப்திப்படுத்துவது கடினம். அரசன் ஒரு தடவை தனக்கு நல்லதோர் அன்பளிப்பைச் செய்வதற்காக மகிழ்விக்க எண்ணி அவர்களை வரவழைத்து, தனது சிறந்த அம்பு முனைகளை அவர்களுக்கு வழங்கினான். அது அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. அவர்களின் பாணி வேறு. சிங்களவர்களின் பாணி வேறு.

அவர்கள் இறைச்சியைப் பாதுகாக்க ஒரு உபாயத்தைக் கையாளுகின்றனர். அவர்கள் மரத்தைத் தோண்டி அதனுள் இறைச்சியை நிரப்பி அதனுள் தேனை ஊற்றி களிமண்ணால் அடைத்து விடுவர். அதைத் தேவைப்பட்ட போது பயன்படுத்துவர்.

எனக்கு, வேடர்களின் யானை பிடிக்கும் புதுமையான முறைப்பற்றிப் பலர் கூறியிருக்கிறார்கள். யானை தூங்கும் போது அதன் கிட்டப்போய் வேடர்கள் அதன் பாதத்தில் கோடாரியால் வெட்டுவார்களாம். இதன் பிறகு யானை பாதத்தை நன்கு பயன்படுத்த முடியாமல் நொண்டுமாம். யானையை வேடர்கள் எளிதாகக் கட்டுப்படுத்தி பிடித்துவிடுவார்களாம். எனக்கு இது ஒரு கட்டுக்கதை என்று படுகிறது. யானையின் பாதத்தை அதற்கு காயம் வரக்கூடிய வண்ணம் வெட்ட முடியாது. அது மிகவும் கடினமானது. மற்றது, அது நித்திரையிலும் மிகவும் விழிப்புடன் இருக்கக் கூடியது.

திருமணத்தின் போது கொடுக்கும் சீதனத்தின் ஒரு பகுதியாக வேடர்கள் வேட்டை நாய்களைக் கொடுப்பர். வேடர்கள் விருந்தோம்பும் தன்மையுள்ளவர்கள் என்று கேள்விப்பட்டுள்ளேன். குடும்பத்தில் அல்லது நண்பர்களோடு திருப்தியீனம் கொண்ட சிங்களவர்கள் அவர்களோடு சேர்ந்து வாழத் தலைப்படுவர். வேடர்கள் அவர்களை நன்கு உபசரிப்பார்கள். திருந்திய வேடர்கள் மக்களுடன் சில சிறிய வர்த்தகத்தில் ஈடுபடுவர். திருந்தாத வேடர்கள் இவ்வகைத் தொடர்புகளில் நாட்டம் கொள்வதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிக வாழ்முறையைக் கொண்டோரைப் பற்றியே நான் அதிகம் பேச வேண்டும். நான் இந்தியாவில் சந்தித்த மக்களை விட இவர்கள் தயாள சிந்தையுடையவர்கள். நல்ல மனநிலை கொண்டவர்கள். அவர்கள் இடுப்பைச் சுற்றி ஒரு துணியை கட்டியிருப்பார்கள். துணி வழுவாமலிருக்க ஒரு பட்டியை இடுப்பைச் சுற்றி மாட்டியிருப்பர். இதற்கு மேலே கழுத்துப்பட்டி கொண்ட இறுக்கமான சட்டையை ஆங்கிலேயப் பாணியில் அணிந்திருப்பர். தலையில் துனிஸ் தொப்பியை (Tuins Caps) போட்டிருப்பர். இல்லாவிட்டால் அவர்கள் நாட்டுப் பாணியில் தூக்கணாங்கள் தொங்கும் தட்டை தொப்பி ஒன்றை அணிந்திருப்பர். அதில் அழகிய குஞ்சம் தொங்கிக் கொண்டிருக்கும். மார்புப் பகுதியில் ஒரு கத்தி செருகப்பட்டிருக்கும். இதைப் பற்றி அடுத்த அத்தியாயத்தில் விபரிக்கப்படும்.

அவர்கள் கைகால்களில் சுறுசுறுப்பு கொண்டவர்கள். சாதுரியமிக்கவர்கள். இரும்பு வேலைகளைத் தவிர தங்களுக்கு தேவைப்படும் எந்த வேலையையும் தாமே செய்யும் திறன் மிக்கவர்கள். அவர்களுக்குத் தேவைப்படும் வீட்டைத் தாமே கட்டிக்கொள்வர். எதிர்ப்பு நடவடிக்கைகளில் தந்திரமும், காட்டிக் கொடுக்கும் தன்மையும்மிக்கவர்கள். ஆனால் அவர்கள் பேசும் தோரணை மற்றவர்களை மதிக்கும் தன்மை வாய்ந்ததாகவும், இலகுவானதாகவும் இருக்கும். அவர்களின் மனச்சார்பை விளங்கிக் கொள்ளாதவர்களை அவர்கள் இலகுவில் ஏமாற்றிவிடுவர். மனச்சாட்சி இல்லாமல் அவர்கள் பொய் சொல்வார்கள். அதற்காக வெட்கப்படுவதோ, அது தங்களுக்கு மதிப்புக்குறைவானது என்று கருதுவதோ கிடையாது. அது அவர்களின் இயல்பு. அவர்கள் தூக்கத்தைக் குறைத்து எச்சரிக்கையாகவும் விழிப்புடனும் இருக்கும் தன்மை மிக்கவர்கள். அவர்கள் பசியையும், பருவகால தட்பவெப்ப நிலைமைகளையும் தாங்கும் வலிமை மிக்கவர்கள். இது பற்றி தம்பட்டமும் தற்பெருமையும் கொள்வர். பிராமணர்களுக்கு அடுத்ததாக உணவிலும் மணவுறவிலும் மிகவும் கட்டுப்பாடான நடைமுறைகளை அநுசரிக்கும் தன்மையர். அவர்களிடையே பல்வேறு தரங்களும், சாதிப்பிரிவுகளும் காணப்படுவதால் உயர்ந்தவர், தாழ்ந்த பிரிவினரின் வீடுகளில் சமைத்த உணவை உண்ணார். தம் தரத்துக்குத் தக்க வீடுகளில் மாத்திரம் கை நனைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரும், மற்றவருக்கு தீங்கிழைக்க மாட்டார்கள். அவர்களின் கோபம் உடனே தணிந்துவிடும். அவர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிடும் போது இரத்தம் சிந்துவது அருமை. ஒருவரை அடிப்பது அவர்கள் வழமையில்லை. அடிமைகள் கூட தங்கள் எஜமானுடன் சகஜமாகக் கதைப்பதைக் காணலாம். அவர்கள் பேராசை பிடித்தவர்கள். இலாபத்துக்காக தம்வயிறையே கிள்ளி எடுக்கும் தன்மையர். அவர்களிடையே பொறுப்பில்லாமல் காசை செலவழிப்பவர்களையோ ஊதாரித்தனமுள்ளவர்களையோ காண்பதரிது.

மலை நாட்டில் வாழ்பவர்களினதும் கரைநாட்டில் வாழ்பவர்களினதும் இயல்பு வித்தியாசமானது. கரைநாட்டினரிடையே நாங்கள் வாழ்ந்த அனுபவத்தின் படி ,அவர்கள் இனிய சுபாவமும், வெளிப்படைத் தன்மையும் புதியவர்களை வரவேற்கும் பண்பும் மிக்கவர்கள். மலைநாட்டில் வாழ்பவர்கள் அப்படி அல்ல. அவர்கள் அநேகமாகப் பொய்யும் புரட்டும் கெட்ட நடத்தையும் கொண்டவர்கள். பேராசை பிடித்தவர்கள். ஆனாற் கரை நாட்டவர்களை விடச் சிறப்பாகக் கதைக்கும் இயல்பினர்.

எல்லாக் குற்றச் செயல்களிலும் அவர்கள் பாரதூரமாகக் கருதுவது திருடுவதை. அதனால் அவர்களிடையே குறைந்த அளவில் நடைபெறும் குற்றம் களவாகும். அவர்கள் மெச்சுகிற தன்மைகள் பலவீனம், இயலாமை போன்ற நிலைமைகளிலும் நிர்ப்பந்தம் இல்லாமல் குற்றத்தை ஒப்புக்கொள்ளல், செயலிலும், சொல்லிலும் உண்மையாக இருத்தல். கற்புடைமை, மதுபானம் அருந்தாமை என்பவைகளாகும். இவ்வாறான தன்மைகள் உள்ள வரை நேசிக்கின்றனர். கடவுளுக்கும் உயர்ந்த மனிதர்களுக்கும் ஒவ்வாத செயல்களை வெறுக்கின்றனர். சந்தேகமான விடயங்களிற் கிறிஸ்தவர்கள் செய்யும் சத்தியத்தை உண்மை என்று நம்புகின்றனர்.

அவர்களின் நடைமுறைகளில் மூடநம்பிக்கைகள் இழையோடி இருக்கும். சிறிய விபத்துக்கள் நேரிடப் போவதையும் தமக்கு வரப்போகிற நல்லதையும், கெட்டதையும் முன்னரே சகுனங்கள் அறிவிக்கின்றனவென அவர்கள் நம்புகின்றனர். ஏதாவது காரியமாகத் தன் வீட்டை விட்டுப் புறப்படும் போது தும்மல் திடிரென வந்தால், இக்காரியம் நல்ல முறையில் நடக்காது என்று நம்பி அதைத் தவிர்த்துக் கொள்கின்றனர். அல்லது தாமதிக்கிறார்கள். தும்மலைக் கெட்ட சகுனமாக அவர்கள் கருதுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் முன்னிலையில் யாரும் தும்மவோ, இருமவோ, துப்பவோ கூடாது. பல்லியை அவர்கள் தீர்க்கதரிசியாகக் கருதுவர். அவர்கள் ஒரு வேலை விடயமாக வெளியிற் கிளம்பும் போது பல்லி கத்தும் சத்தம் கேட்டால் தமக்கு கிரகம் சரியில்லை என்று பிரயாணத்தை ஒத்திப் போட்டு விடுவர். அவர்கள் காலைநேரத்தில் இதில் மிகவும் கவனமாக இருப்பர். அவர்கள் அலுவல்களுக்காக வெளியேக்கிளம்பும் போது, யார் முன்னால் வருகிறார் என்பதில் மிக அவதானமாக இருப்பர். ஒரு வெள்ளை மனிதனை, அல்லது பெரிய வயிறுள்ள பெண்ணை, கண்டால் நன்னிமித்தம் என்றும், வலது குறைந்தவர் துர்நிமித்தம் என்று கருதுவர்.

அவர்கள் கூட்டமாக ஒரு இருபதுபேர் சேர்ந்து ஒரு பிரயாணத்துக்கு வெளிக்கிளம்பினால் ஒருவர் பின்னால் ஒருவர் செல்வர். ஏனென்றால் பாதை மிகவும் ஒடுக்கமானது. ஏதும் உரையாடல் ஏற்பட்டால் முதலாவது செல்பவர் தனது கருத்தைச் சொல்வார். பின் அடுத்தவர் என்று, ஒவ்வொருவராக வரிசைப்படி தமது அபிப்பிராயத்தைச் சொல்லிமுடிப்பர். ஒவ்வொருவரும் தமது முதுகில் தமது சாப்பாட்டைக் கட்டிக்கொண்டு வருவர்.

சுருக்கமாக, போர்த்துக்கீசர் போன்று அவர்கள் ஒழுக்கத்தையும் நடத்தையையும் கறாராகக் கடைப்பிடிப்பர். அவர்கள் நுணுக்கமான சிக்கலான எந்த விடயத்தையும் நன்கு புரிந்து கொள்ளும் ஆற்றல் மிக்கவர்கள். உரையாடும் போது உயர்வு நவிற்சியுடன் சொற்களை அள்ளி வீசுவர். அவர்களிடம் கற்பு, குடும்பக் கவனம் என்பவற்றில் அக்கறை குறைவு. அவர்களின் மனச்சார்பு அவர்களின் விருப்பத்துக்குரியதல்ல. அவர்கள் இறைச்சியிலும் மதுவிலும் தன்னடக்கம் உள்ளவர்கள். அவர்களின் வாக்குறுதிகள் நம்பிக்கைக்கு உரியதல்ல. அது மற்றவர்களை ஏமாற்றிவிடக் கூடியது. அவர்கள் வேண்டும் என்று பொய் சொல்வர். சூழ் நிலை நிர்ப்பந்தித்தால் ஒழிய வேலையைப் பிற்போடுவர். சீராக உடுத்தியிருப்பர். ஆறுதலாகச் சாப்பிடுவர். கண்டபாட்டில் நித்திரை கொள்ளார்.

பெண்கள் வெள்ளைத் துணியை உடம்பில் போர்த்தி இருப்பர். அவைகளிற் சிவப்பு, நீலப் பூக்கள் பின்னப்பட்டிருக்கும். அவ்வுடைகள் அவரவர் தரத்துக் கேற்ப முழங்காலுக்கு கீழே இருக்கும். ஒரு துண்டு பட்டு அவர்கள் தலை மேல் போடப்பட்டிருக்கும். காதில் நகைகளும், மற்றும் கழுத்து, புயம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரையில் அலங்காரங்களுமிருக்கும். போர்த்துகீசப் பெண்களைப் போன்று, அவர்களின் நடத்தைகள் இருக்கும். அதை அவர்கள் அப்பெண்களிடமிருந்தே கற்றுக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் தம்மோடு கதைப்பவர்கள் எவ்வளவு கீழ் நிலையில் உள்ளவர்களாக இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது மதிப்பளித்துக் கதைப்பர். இப் பெண்கள்க் செலவு செய்வதில் மிகவும் கவனமானவர்கள். ஊதாரித்தனமிக்கவர் என்று சொன்னால் அது பெரிதாக அவர்களை அவமானப்படுத்தியதாக இருக்கும். சிறுசிறு துளிகளாகச் சேர்த்தல் அவர்கள் இயல்பு. அவர்கள் கணவர்கள்தான் அவர்களுக்கு எல்லாமாகும். ஆண்கள் தங்கள் மனைவிமாரில் குறுகிய மனப்பான்மை கொள்வதில்லை. தமது கணவர்மார் முன்னிலையிலும் கூட பெண்கள் யாருடனும் சகஜமாகப் பேசிப்பழகும் சுபாவம் உள்ளவர்கள். அவர்களிடம் அடிமைகளும் பணியாட்களுமிருந்தால் கூட, ஆண்கள் குடும்பவேலைகளில் பெண்களுக்கு கையுதவி புரிவார்கள். பொதுவாக இந்த நாட்டில் உள்ளவர்களின் இயல்பான நடைமுறை இதுவாகும்.

இந்நாட்டவர்கள் பிறப்பு வழியாகத் தங்கள் கௌரவம், அந்தஸ்த்து என்பனவற்றைக் கொண்டிருப்பதால் வருகின்ற அத்தியாயங்களில் அவைகளைப்பற்றி கூறுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02

அவர்களிடையேயுள்ள பல்வேறு கௌரவங்களும், தரங்களும், தன்மைகளும்

அங்குள்ள மக்களிடையே பல்வேறு சாதிகளும் தரங்களுமுள்ளன. இவைகள், அரசனால் அவர்களின் சேவையின் நிமித்தம் வழங்கப்பட்டதோ அவர்களின் செல்வாக்கால் கிட்டியதோ அல்ல. இவைகள், பிறப்பினாலும் இரத்த உறவுகளினாலும் வந்தவை. இந்தத் தரங்களும் சாதிகளும் கூடியதோ குறைந்ததோ, தந்தை வழி தனையனுக்கு தலைமுறை தலைமுறையாகத் தொடர்பவை. அவர்கள் தம்மிலும் குறைந்த சாதியினருடன் சேர்ந்து சாப்பிடுவதையோ திருமண உறவு கொண்டாடுவதையோ விரும்பமாட்டார்கள். உயர்ந்த தரத்தில் உள்ளவர் மார்புச்சட்டை அணிந்திருப்பர்.

அவர்கள் திருமணத்தில் பிரத்தியேக கவனமுடன் நடந்து கொள்வர். தங்களைவிடக் குறைந்த சாதியிற் கல்யாணம் நிகழ்ந்து விடாமல் பார்த்துக்கொள்வர். தங்களுக்குச் சமமான சாதியிலேயே திருமணம் செய்து கொள்வர். செல்வர்கள் தங்கள் கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படும் திருமண உறவுகளைத் தவிர்ப்பதில் அதிகூடிய கவனமெடுப்பர். ஒரு இளம் பெண் அவளுடைய மடத்தனத்தால் ஏமாற்றப்பட்டால், அவளுடைய உற்றார் உறவினர்கள் அவளால் நேர்ந்துள்ள கறையை நீக்கத் தங்களுக்கு அவளைக் கொல்வதை தவிர வேறுவழியில்லை என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த சாதியைச் சேர்ந்த ஆண், தாழ்ந்த சாதிப் பெண்ணுடன் - தன்னோடு இணைந்து உண்டு குடிக்க முடியாத, தான் மனைவியாக ஏற்று வீட்டுக்கு கூட்டிப் போக முடியாத தாழ்ந்த சாதிப்பெண்ணுடன் தொடர்பேற்பட்டால் அவனுக்கு அது களங்கத்தை ஏற்படுத்தாது. அதனால் அவனுக்கு நீதிபதியால் தண்டனை வழங்கப்பட்டதாகவோ, சாதிவிலக்கம் செய்யப்பட்டதாகவோ, நான் கேள்விப்படவில்லை. ஆனால் ஒரு பெண் திருமணமாகி இருந்து, மேல் சாதியான் ஒருவனுடன் அவள் தொடர்பு வைத்திருப்பதை அவளின் கணவன் எவ்வளவு இழிந்த சாதியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் - கையும் மெய்யுமாகப் பிடித்தால் அவனை அல்லது இருவரையும் அவ்விடத்தில் கொல்ல அவள் கணவனுக்கு உரிமையுண்டு.

கௌரவத்துக்குரிய மக்கள் ஹென்டறூக்களாவர். பெருமைக்குரியவர் என்று மன்னன் கொடுக்கும் பட்டப் பெயரிலிருந்தே இச்சொல் வந்திருக்க வேண்டும். அவர்களிலிருந்தே மன்னன் தனது உத்தியோகத்தர்களையும், தனது அரசசபையின் பணியாளர்களையும், ஆளுநர்களையும், தேர்ந்தெடுப்பான். வெறும் செல்வத்தை மாத்திரம் கொண்டிருத்தல் இங்கே கருத்தில் படமாட்டாது.

அவர்களின் பெயரின் தன்மையாலும், அவர்கள் அணிந்திருக்கும் உடையின் பாணியாலும், அவர்களின் அந்தஸ்த்து வெளிப்படுத்தப்படும். உயர் அந்தஸ்த்தில் உள்ள ஆண்கள் முழங்காலுக்கு மிகவும் கீழேயும் பெண்கள் பாதம் வரையிலும் உடையணிந்திருப்பர். அந்தப் பெண்களின் உடைகள் அவர்களின் தோளிலே தொங்கி அவர்களின் மார்புப் பகுதியைக் கவனக்குறைவாக மூடியிருக்கும். அதே நேரத்திற் குறைந்த தரத்து பெண்களின் இடுப்புக்கு மேல் பகுதி வெறுமையாக இருக்கும். அவர்களின் உடைகள் குட்டையாக, முழங்காலுக்கு கீழே வராது இருக்கும். அப்படி அவர்கள் ஹெண்ட்றூக்கள் எவராவது கண்டால் "என்னை மன்னித்து விடுங்கள். இது வெறும் உடலை கணகணப்பாக்கி கொள்ளத்தான்" என்று கூறுவார்கள். தொப்பிகளில் இரண்டு தட்டுக்கள் இணைக்கப்பட்டது போல் காணப்படும். பிரதேசத்துக்குப் பிரதேசம் தொப்பிகளின் பாணி வித்தியாசப்படும். அவைகளிலிருந்து அணிந்திருப்பவர் எந்தப் பிரதேசத்தை சேர்ந்தவர் என்பதை எளிதில் அடையாளம் காணலாம். மற்றது ஹென்ட்றூக்கள் அணியும் தொப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே நிறமாக, வெள்ளை அல்லது நீலத்தில் இருக்கும். ஹென்டறூக்களுக்குக் குறைந்தவர் அணியும் தொப்பியின் தட்டு, எப்பொழுதும் சிவப்பு நிறமாகவும் மற்றப்பகுதிகள் ஏதாவது நிறத்திலும் இருக்கும்.

ஹென்ட்றூக்களில் இரு வகையினர் உண்டு. ஒரு வகையினர் ஓரளவுக்கு மற்றவர்களை விடக் குறைந்தவர். அவர்கள் மற்றவர்களோடு திருமண உறவு வைத்துக் கொள்ளக் கூடாதே தவிர, மற்றக்காரியங்களில் சம்பந்தமுறலாம். இந்த நாட்டில் வசிப்போரில் கூடிய தொகையினர் ஹென்ட்றூக்களாவர்.

எல்லாக் கிறிஸ்தவர்களும் வெள்ளைக்காரரும் சரி, கறுப்பர்களும் சரி, ஹென்ட்றூக்களோடு சரிசமமாகக் கருதப்படுவர். வெள்ளைக்காரர்களைச் சற்றுக் கௌரமானவர்களாக எண்ணுகின்றனர். ஆனால் அவர்கள் மாட்டிறைச்சி உண்பதும், குந்தி இருந்த பின்னர் அடிக்கழுவிக் கொள்ளாமையும் அவர்களின் கௌரவத்தை மங்கச் செய்கிறது. இப் பழக்கங்கள் இந்நாட்டவர்களுக்கு அருவருப்பைத் தருகின்றன.

அரசன் கொடுக்கும் நைற்ஹுட் (Knighthood) போன்ற பட்டங்கள் ஒருவரின் இறப்புடன் முடிந்துவிடும். அது பரம்பரை வழி தொடராது. அரசன் பட்டம் பெறுபவரின் தலையில் ஒரு பட்டுத்துண்டை அல்லது தகடு போன்ற பட்டையைச் சூடுவதன் மூலம் அவைகளை வழங்குவான். அவைகளில் தங்கத்தாலும் வெள்ளியினாலும் பின்னல் வேலைகளைச் செய்து பட்டத்தின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கும். நாடு பூராகவும் இவ்வாறு பட்டம் பெற்றவர் இரண்டோ மூவரோதான் இருப்பார்கள்.

ஹெண்ட்றூக்களின் கீழ் பொற்கொல்லன், இரும்புக் கொல்லன், தச்சன், மற்றும் நிறம் பூசுபவர்கள் உள்ளனர். அவர்கள் எல்லாரும் ஒரே தரத்தினர். ஹென்ட்றூக்கள் அவர்களுடன் சாப்பிடமாட்டார்கள். ஆயினும் ஆடை அணிவதில் வித்தியாசமில்லை. ஹெண்ட்றூக்கள் குற்றியில் உட்காரத்தகுதி பெற்றவர்கள். அவர்களின் கீழ் உள்ள தரத்தினருக்கு அதற்கு உரிமையில்லை. சாப்பாடு விற்கும் இடங்களில் எல்லோரும் உட்கார்ந்து சாப்பிடுவார்கள். சாப்பாடு முடிந்து வெளியே வந்தால் அவரவர் பழைய நிலைக்குப் போய் விட வேண்டும். கொல்லனின் பட்டறைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹெண்ட்றூக்கள் வேலையாக வருவர். அந்நேரம் மத்தியானமாக இருந்தால் கொல்லன் பட்டறையில் ஹென்ட்றூவை பசியோடு விட்டு சாப்பாட்டுக்கு போய் விடுவான். ஒருவர் பசியோடிருக்க தான் சாப்பிடுகிறேனே என்று கொல்லனின் மனச்சாட்சி உறுத்தும். அவரை சாப்பிடக் கூப்பிடவும் முடியாமல், தானும் வயிறார சாப்பிடவும் இயலாமல், கொல்லன் தத்தளிப்பான். அவர் பசியைப் பொறுக்க முடியாமல் சாப்பிட வந்தாலும் விபரீதமாகப் போய்விடும் என்று கொல்லன் கதவை சாத்தலாம். இந்த நிலைக்குத் தடையாக இருப்பது கௌரவமும் அந்தஸ்த்தும்தான். அவைகள் இல்லாவிட்டால் யாவரும் ஒன்றாகச் சாப்பிடலாம். இந்த நிலை எப்போதாவது வரவேண்டும்.

அரசனுக்கென்று கொல்லர்கள் உள்ளனர். அவர்கள் பட்டணங்களில் வாழ்ந்து அவனின் வேலையைச் செய்வார்கள். மற்றக்கொல்லர்கள் ஒவ்வொருவருக்கும் பட்டணத்தில் ஒரு பகுதி உண்டு. ஒருவர் தனக்குரிய பகுதி வேலையை மாத்திரந்தான் செய்ய வேண்டும். மற்றப் பகுதி வேலையைப் பொறுப்பேற்கக் கூடாது. தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிக்குள் வாழும் மக்களின் கருவிகளைத் திருத்திக்கொடுப்பது அவர்களின் வழமையான பணியாகும். இதற்குப் பழைய வழக்கப்படி அறுவடையின் போது ஒரு குறித்த அளவு தானியம் கொடுக்கப்படும். ஆனால் புதிய கருவிகள் செய்தல் போன்ற காரியங்களுக்கு அவர்கள் பிரத்தியேகமாகக் கூலி கொடுக்க வேண்டும். அது அரிசி, கோழி, மற்ற வகை உணவுப் பொருட்கள் அல்லது ஒரு போத்தல் சாராயம் ஆகியவைகளாக இருக்கும். அவன் குறிப்பிடும் நாளில் அவர் கரியோடும் இரும்போடும் வரவேண்டும். அப்படி வந்தால், கொல்லன் சூளைக்கு காற்றடிக்கும் கம்பை இடக்கையிலும், வலக் கையில் சுத்தியலையும் பிடித்தபடி வேலையைத் தொடங்குவான். தங்கள் பகுதி கொல்லனிடம் வேலை செய்திருந்தால் கருவிகளில் பாதிப்பு ஏற்பட்டால் திருத்துவது அவன் பொறுப்பு. வேறு பகுதிக் கொல்லனால் செய்யப்பட்ட வேலையை அவன் பொறுப்பேற்க மாட்டான்.

எல்லாக் கைவினைஞர்களும் தாழ்ந்த சாதியினராகக் கருதப்படுகின்றனர். யானைப்பாகர்கள் கைவினைஞர்களோடு சேர்த்தெண்ணப்படுகிறார்கள். சேர்ந்து உணவு உண்ணவோ, கலியாணம் சம்பந்தம் கொள்ளவோ மாட்டார்கள். ஆயினும் ஹென்ட்றூக்கள் போல் தான் யாவரும் உடையணிவர். குற்றியில் இருக்கவும் முடியும். ஹென்ட்றூக்கள் இவர்களோடு சேர்ந்து உணவுண்ணமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவினைஞர் தலைமுறை தலைமுறைகளாகத் தமது தொழிலை மாற்றிக்கொள்ளவில்லை. தந்தை செய்த தொழிலைத்தான் தனையனும் செய்து வருகின்றான். ஒரே சாதியில் தான் திருமணம் முடிக்கிறார்கள். மகளின் திருமணத்தின் போது கருவிகளின் ஒரு பாகத்தை தந்தை அவளுக்கு வழங்குகிறார்.

அடுத்து நாவிதர்கள். ஆண்களும், பெண்களும் சட்டை அணிந்திருப்பர். அவர்கள் குற்றியில் இருக்கமாட்டார்கள். அவர்களோடு சேர்ந்து யாரும் உணவுண்ணார்.

குயவர்கள் மிகவும் தாழ்ந்த சாதியினர். அவர்கள் சட்டை அணிந்து போகக் கூடாது. அவர்கள் உடை முழங்காலுக்குக் கீழே வரவோ அவர்கள் குற்றியில் உட்காரவோ முடியாது. அவர்களோடு சேர்ந்து யாரும் சாப்பிடமாட்டார்கள். அவர்கள் ஹென்ட்றூக்களின் வீட்டில் வேலை செய்பவர்களாதலால் அவர்களுக்கு ஒரு சிறப்புரிமை உண்டு. அவர்களுக்கு தாகமேற்பட்டால் ஹென்ட்றூக்களின் வீடுகளில் பிரத்தியேகமாக உள்ள பானையில் நீர்நிரப்பித் தம் வாயில் நீரைப்பீச்ச வைத்துக் குடிப்பர். முற்காலத்தில் ஹென்ட்றூக்கள் பானையைப் பிடித்து நீரைச் சொரியக் குயவர்கள் தம் கையை வாயில் வைத்துக் குடித்து வந்தனர். இந்த வழக்கம் தமக்கு சிரமமாக இருக்கின்றது என்று முரண்டு பிடித்தனர். அவர்கள் குழாய் உள்ள பானையில் நீரை நிரப்பித் தாமே நீரை வாயில் பீச்சுக்குடிக்க வேண்டும் என்றனர். அவ்வாறான பானைகளில் ஹென்ட்றூக்களுக்காக செய்து விற்கவும் முன் வந்தனர். அதன் படியே இப்போதும் தண்ணீர் குடிக்கின்றனர். இந்தச் சலுகை மற்றக் கீழ் சாதியினருக்கு கிட்டாதவொன்றாகும்.

இவர்களுக்கு அடுத்தவர்கள், றுட்டாவ் என்கின்ற வண்ணார்கள். இவர்கள் அதிக எண்ணிக்கையினர். அவர்கள் குயவர்கள் தரத்துக்கு மேல் சாதியினர். துணிகளை வெளுக்கின்றார்கள். குயவர்களுக்கு கீழே சாதிகள் இல்லை. ஆண்பெண் இருபாலாரும் தோளில் துணிமூட்டைகளைக் கட்டிக் காவிச் செல்வது இங்கே வழமையான காட்சி. அவர்கள் ஒரு பெரிய குடத்தை எடுத்து அதனுள் ஏழு எட்டுக் கலன் தண்ணீரை ஊற்றுவர். அதன் பின் மரச்சாம்பலை அதனுட் கரைப்பர். பின்னர் அடுப்பு மூட்டி நெருப்பிற் குடத்தைத் தூக்கி வைப்பர். அதன் மேல் ஊத்தைத் துணிகளை வைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடத்திலிருந்து வெளிவரும் ஆவி துணிகளை ஊடறுத்து ஊத்தையை துணியிலிருந்து பிரிக்கும். பின்னர் இத் துணிகளை ஆற்றங்கரைக்கு எடுத்து சென்று அங்குள்ள பாறையில் துணிகள் பிய்ந்து போகா வண்ணம் அடிப்பர். துணிகள் அழுக்கு நீங்கி மிகச் சுத்தமாகும்.

இவர்களுக்கு கீழ் ஹுூங்கிராம் என்று அழைக்கப்படும் வெல்லம் செய்யும் சாதியினர் உண்டு. ஒருவரும் அவர்களுடன் சேர்ந்து உணவுண்ணமாட்டார்கள். ஆனால் அவர்கள் செய்யும் வெல்லத்தை உண்பர். (வெல்லம் என்பது சீனியின் ஒரு வகை)

பொட்டா எனப்படும் இன்னொரு சாதியினர் உள்ளனர். அவர்களுக்குச் சொந்தமாக ஒரு தொழிலும் இல்லை. ஆயினும் அவர்கள் விவசாயிகளாகவும், படை வீரர்களாகவும் இருக்கின்றனர். இது வரை கூறியவர்கள் யாவரினும் அவர்கள் கீழ்ப்பட்டவர்கள். இந்நிலைக்கு என்ன காரணம் என்று நானும் சிந்திக்கவில்லை. அவர்களும் சொல்லவில்லை. இந்த நிலை அவர்களின் முன்னோர்களிடமிருந்து தொடர்ந்து வருகின்றது. இவர்களுக்கு அடுத்தவர்கள் நெசவாளிகள். அதை விட, சோதிடர்களும் சேவையாற்றுகின்றனர். அவர்கள் மக்களுக்கு நல்ல நாள், நல்ல பருவம் என்பவற்றைச் சொல்வதோடு குழந்தை பிறந்தால் அது பிறக்கும் நேரத்தைக் கணக்கிட்டு அதன் கிரக பலனை எழுதிக் கொடுப்பர். இதனை அவர்கள் வாழ்நாள் பூராகவும் பேணிக்காப்பர். இதைக் கொண்டு அதன் வயது, அதற்கு வரப்போகின்ற நன்மை தீமைகளை அறிந்து கொள்வர்.

கோயில்களில் மேளம் அடித்து, குழல் ஊதுபவர்கள் என்று ஒருவகைச் சாதியினர் உள்ளனர். கோயில்களிற் படைக்கப்படும் உணவுகள் அனைத்தையும் எடுத்துப்போகும் உரிமை அவர்களுக்குண்டு. இவர்கள் செத்தமாடுகளின் இறைச்சியையும் புசிப்பர்.

நெசவாளர்களுக்கு அடுத்ததாக வருபவர்கள், கிட்டியா என்று அழைக்கப்படும் கூடை பின்னுபவர்களாவர். அவர்கள் கூடைகளை விட த்தானியத்தைக் கூளத்திலிருந்து அகற்றப் பயன்படும் சுளகுகள், படுக்கப் பயன்படும் கட்டில்கள், இருப்பதற்குரிய குற்றிகளையும் பிரம்பிலிருந்து செய்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து வருபவர்கள், கின்னராக்களாவர். இவர்களின் தொழில் பாய் பின்னுவதாகும். இவர்கள் ஆண்களாயினும், பெண்களாயினும் தம் தலையில் ஏதும் பொருட்களைக் கொண்டு செல்லார்.

யானைப்பாகர்களுக்கு கீழே வருபவர்கள் யாவரும், நாவிதர்களைத் தவிர, தொப்பி அணியவோ குற்றியில் அமரவோ முழுங்காலுக்கு கீழே வரத்தக்கதாக உடை உடுத்தவோ முடியாது.(குளிராகவோ சுகவீனமாகவோ இருந்தால் தவிர) அவர்கள் ஹென்ட்றூ ஒருவரைப் பெயர் சொல்லி விளிக்கக்கூடாது. அவர்கள் எந்த இடத்திலும் தாங்கள் உயர்ந்த சாதியினர் என்று பாசாங்கு பண்ணக்கூடாது. நான் நினைக்கின்றேன், அவர்கள் அவ்வாறு ஒரு போதும் செய்வதில்லை.

வெளிநாட்டினர் எல்லோரும் கீழ்சாதியினரை விட மதிப்புக்குரியவர்களாகக் கருதப்படுகின்றனர். ஹென்ட்றூக்களின் பெயர் முடிவுகள் ஒப்போ என்றும், யானைப்பாகர்களுக்கு குறைந்த சாதியினரின் பெயர் முடிவுகள் எப்போதும் அட்கா என்றும் இருக்கும்.

அடிமைகள் வேறொரு தரத்தினராவர். அவர்களின் எஜமான் அவர்களின் தாபரிப்புக்காக நிலமும் கால்நடைகளும் வழங்கியிருப்பான். இதனால் தங்கள் வசதிகளை மேம்படுத்திக் கொள்ள அவர்களால் முடிகிறது. அவர்களின் அந்தஸ்த்தைத் தவிர அவர்களின் நிலைமை எஜமானின் நிலைமையை விட பெரிதும் குறைந்ததன்று. தங்களது அந்தஸ்த்துக்கு மேற்பட்டவர்களை அடிமையாக வைத்திருக்க அனுமதியில்லை. அவர்கள் உழைத்து தங்களை விடுவித்துக் கொள்வதை எஜமானர்கள் ஊக்குவிக்கின்றனர். தம்மை அடிமைத்தளையிருந்து விடுவித்துக்கொண்டவரை தனது வீட்டில் காவலாளியாக வைத்துக்கொள்ள முடியும். அவருக்கு மனைவியொருவரைத் தேடிக்கொடுத்தல் எஜமானின் கடமை. இவருக்குப் பதிலாக புதிய அடிமை ஒருவரை வாங்கலாம். ஹென்ட்ரூ பெற்றோருக்குப் பிறந்த அடிமைகள் தங்கள் கௌரவத்தையும் அந்தஸ்த்தையும் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

இன்னும் ஒரு வகை மக்கள் உள்ளனர். அவர்கள் பிச்சைக்காரராவர். அவர்கள் பெரும் தொகையிற் காணப்படுகின்றனர். முன்னைய அரசர்கள் அவர்களைக் கட்டுப்படுத்தப் பலவழிகளில் முயன்றனர்; முடியவில்லை.

273573

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மக்களின் முன்னோர்கள் தொட்டவட்டா என்று அழைக்கப்பட்ட வேட்டைக்காரர்களாவர். அவர்களின் முன்னோர்கள் மான் இறைச்சியை மன்னனுக்கு வழங்குவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தனர். ஒரு தடவை தெரியாத் தனத்தால் மான் இறைச்சி என்று மனித இறைச்சியை வழங்கிவிட்டனர். சாப்பிட்ட மன்னன் அதன் சுவையில் கட்டுண்டு, இவ்விறைச்சி போலத்தான் இனியும் தனக்கு வேண்டும் என்று அடம்பிடிக்கத் தொடங்கினான். ஆயினும் அரசனின் நாவிதன் இவ்விறைச்சியைச் சரியாக இனம் கண்டு அரசனுக்குத் தெரிவித்தான். அதைக்கேட்டு ஆத்திரம் கொண்ட மன்னன், தனக்கு அந்த இறைச்சியை வழங்கியவர்களுக்கு மரணதண்டனை அளித்தாற் காணாது; அவர்கள் கூட்டம் மக்கள் வாழும் பகுதியிலிருந்து வெளியேற வேண்டும். அவர்கள் உயர்ந்தவராகவோ தாழ்ந்தவராகவோ இருந்தாலும், அந்தஸ்த்து மிக்கவராக இருந்தாலும், சமூ கத்தை விட்டு அகல்தல் வேண்டும். அவர்களுக்கு எந்த வித நன்மையோ வசதிகளோ செய்யக்கூடாது. அவர்கள் தலைமுறை தலைமுறைகளாக வீடுவீடாகச் சென்று பிச்சை எடுத்து வாழ வேண்டும், என்று கடுமையாகக் கட்டளையிட்டான்.

அந்த நாளிலிருந்து மக்கள் வெறுக்கும் மனிதர்களாக அவர்கள் மாறிவிட்டனர். அவர்களைத் தங்கள் கிணறுகளிலே தண்ணீர் எடுக்க மக்கள் அனுமதிப்பதில்லை. அதனால் பள்ளங்களிலும் ஆறுகளிலும் எடுத்துப் பயன்படுத்துகின்றனர். தொட்டால் களங்கம் என்று அவர்களை யாரும் தொடுவதில்லை.

அவர்கள் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சகிதம் பெரும் கூட்டமாக முட்டிகள், பானைகள், கோழிகள், குஞ்சுகள், என்பனவற்றைத் தூக்கிக்கொண்டு ஊர்ஊராகச் செல்வார்கள். ஒரு கூடையிற் பொருட்களை நிறைத்து அதனை ஒரு தடியில் கட்டி, அதன் இரு முனைகளை, தம் தோளில் வைத்து இருவர் தூக்கிக்கொண்டு செல்வர். பெண்கள் எவற்றையும் தூக்கிக்கொண்டு வரமாட்டார்கள். அவர்கள் ஒருவீட்டு வாசலுக்கு வந்தவுடன் நடனம் ஆடுவார்கள். சில வித்தைகளைச் செய்து காண்பிப்பர். ஆண்கள் டமாரம் அடிப்பர். வெண்கலத்தாற் செய்யப்பட்ட சல்லாரிகளை மிகவும் இனிமையாகப் புதுமையான ஒலிவருமாறு தட்டுவர். அவர்கள் ஒன்பது பந்துகளை வரிசையாக வானில் எறிவர். ஒவ்வொன்றையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துப் பிடித்து வரிசையாக எறிந்து கொண்டிருப்பர். அப்போது அவர்கள் கையில் இரண்டு பந்துகளும் வானில் ஏழு பந்துகளுமிருக்கும். ஒரே அளவுடைய பல நிறமுடைய சிறிய மணிகளை வாயில் போடுவர். போட்ட வரிசைப்படி நிற மணிகளை வாயிலிருந்து எடுப்பர். இவ்வாறு வாயில் போடுவதும் எடுப்பதுமாக கொஞ்சநேரம் தொடர்வர். இவ்வாறான வித்தைகளையும் நடனங்களையும் ஆடிக் காண்பிப்பதன் ஊடாகவும் கௌரவத்துக்குரியவர்களே, கம்பீரமானவர்களே, என்று ஆண்களையும், சீமாட்டிகளே, ராணிகளே என்று பெண்களையும், அரச வம்சத்தில் தோன்றியவர்களே, என்று வெள்ளைக்காரர்களையும், அவரவர்களின் மனம் குளிரும் வண்ணம் அழைப்பதன் ஊடாகவும் தமது பிழைப்பை நடத்துகின்றனர். இந்தத் தன்மைகள் இல்லாவிட்டால் அவர்கள் பிழைக்க முடியாது. இதற்காக ரோசமில்லாதவர்கள் என்று அவர்களை யாரும் கூறிவிடமுடியாது. அவர்களைக் கையைக் காட்டி, ஏசினாற் கலைந்து போய்விடுவர்.

இவர்கள் ஒதுக்குப்புறங்களிற் சிறுகுடிசைகள் அமைத்தும், பெருந்தெருக்கள் ஓரமாக இருக்கும் மரங்களின் கீழும் வாழ்வர். நிலங்கள் வேண்டி நிற்கும் உழைப்பை வழங்காமலும், வேறு சேவைகளைச் செய்யாமலும், இப்பிச்சைக்காரர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு சேவையும் வேலையும் செய்யவும் உரிமையில்லை. அவர்கள் செய்யும் ஒரே சேவை மாட்டுத்தோலாற் கயிறு திரிப்பதாகும். அக்கயிறு யானை பிடிக்க மிக அவசியமாகும். செத்துக்கிடக்கும் மாட்டைக் கண்டால், அதனை உரித்து இறைச்சியை உணவாக்கிக் கொள்வர். தோலைக் கயிறு கயிறாகத் திரிப்பர். இவர்கள் ரௌடீத் என்னும் மற்றுமொரு பிச்சைகாரக் கூட்டத்தை கண்டால் மிகவும் வெறுப்பர். தம்மிடமுள்ள மாட்டுத்தோல் கயிறுகளால் அடித்து அவர்களைத் துரத்துவர். அப்போது அவர்களிடம் சொல்வார்கள்: "நாங்கள் அரசனின் சேவையில் இருக்கிறோம். நாங்கள் திரிக்கும் மாட்டுத்தோற் கயிறு அரசனுக்கு மிகவும் அவசியமானது. நாங்கள் அழகிய மாட்டு இறைச்சியை தின்று கௌவரமுள்ளவர்களாக உழைக்கிறோம்." அவர்களை இவ்வாறு விரட்டி விடுவதில் அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சி.

ஆண்கள் ஒரு வேலையும் செய்ய முடியாதபடி மிகவும் குட்டையானவர்கள். ஆண்பிள்ளைகளை பெண்பிள்ளைகளுடன் அல்லது அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மார்களுடன் ஒப்பிட்டால் அவர்கள் இன்னும் குட்டையானவர்களாகத் தெரிவர். இதனால் அவர்கள் ஒரே இரத்த வழியைக் கொண்டவர்கள் இல்லை என்று தெரிகிறது.

அரசன் தன்னைக் கோபப்படுத்திய பெரிய மனிதர்களின், பிரபுக்களின் தலையைக் கொய்துவிடுவான். அதன் பின், அவர்களின் மனைவிமார்களையும் மகள்மாரையும் இந்தப் பிச்சைகாரர்களுடன் சேர்ப்பித்து விடுவான். இச்செய்கை மரணதண்டனையிலும் கொடுமையானது. சில வேளைகளில் மனம்மாறி அவர்களை ஆற்றங்கரைக்கு அழைத்து, கொல்லுமாறு உத்தரவிடுவான். அங்கே மரணதண்டனை நிறைவேற்றுபவர்களை விட மிகக் கொடியவர்களிடம் அவர்கள் ஒப்படைக்கப்படுவார்கள். தம்மை ஆற்றில் பாயவிடுமாறு அக்கொடியவர்களிடம் அப்பெண்கள் மன்றாடுவர். அவர்கள் அனுமதித்தால் ஆற்றில் பாய்ந்து உயிரை விடுவர். சில சமயங்களில் தமது போகக் பொருளாக அப்பெண்களை வைத்துக் கொள்வதுமுண்டு.

இவர்களை விட வேறு வகை மக்களும் அங்குண்டு. அவர்கள் தொலைதூரங்களில் வாழ்கின்றவர்கள், அவர்கள் கால்நடைகளை வைத்திருப்பர். அக்கால் நடைகளை அவசிய மேற்பட்டால் சிங்களவருக்கு விற்பர். அவர்கள் மான்களைச் சுட்டு இறைச்சியையும் விற்பனை செய்வர். அவர்கள் அவ்விறைச்சியைத் தொட்டால் யாரும் வாங்கமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

அவர்களின் சமயம், கடவுளர்கள், கோயில்கள், மற்றும் மதகுருக்கள்

இந்த நாட்டின் அரசு பற்றிய பிரத்தியேகப் பார்வையைப் பெற்றுக்கொள்வதற்கு இங்குள்ள சமயத்தின் தன்மைகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல் வேண்டும். அவர்கள் சமயத்துக்கு முதலிடம் வழங்கிய பிறகே உலகாயத விடயங்களைப் பற்றிக் கருத்திற் கொள்வர்.

சமயத்தைப் பற்றி நாங்கள் கருத்திற் கொள்ளும் போது அவர்களின் கடவுளர்கள், கோயில்கள், மதகுருக்கள், விழாக்கள், வழிபாடுகள், பலிகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பவைகள் முக்கியமானவைகளாகும்.

இந்த நாட்டின் சமயம் விக்கிரக ஆராதனையை அடிப்படையாகக் கொண்டது. பிரத்தியேகப் பெயர் பூண்ட தேவதைகளையும் அவர்கள் வணங்குகின்றனர். இந்த தேவதைகளில் உயர்வானது ஒஸ்ஸ பல்லா மவுட் என்னும் தேவதையாகும். அத்தேவதையே இந்த உலகத்தையும், சொர்க்கத்தையும் படைத்தார். இந்த உலகத்தில் தனது விருப்பமும் ஆசைகளும் நிறைவேற்றப்படுகின்றதா என்பதைப் பார்த்துவர தனது துணைத் தேவதைகளை அனுப்பினார். அந்தத் துணை தேவதைகள் அழகு மிக்கவர்கள். இந்த உலகத்தில் வாழ்ந்து மறைந்த நல்ல மனிதர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மாக்கள்தான் இந்தத் தேவதைகள் என்று அவர்கள் கூறுகின்றனர். மக்கள் மீது நோயையும், துன்பத்தையும் ஏவிவிடும் சாத்தான்களுமுண்டு. அவைகள் கெட்ட மனிதர்களின் ஆவிகள்.

இன்னுமொரு பெரிய கடவுள் உண்டு. அவரை புத்தர் என்று அழைப்பார்கள். அவர் ஆத்மாக்களை இரட்சிப்பவர். அவர் இங்கே வந்தபோது போகஹா என்னும் மரத்தின் கீழ் அமர்ந்தார். அன்றிலிருந்து இம்மரம் புனித மரமாகக் கருதப்படுகின்றது. அதன் கீழ் பக்தி பூர்வமான அனுட்டானங்களை மேற்கொள்வர். அவர் இந்தத் தீவின் உயரமான மலையான ஆதம்மலையிலிருந்து வெளியேறினார் என்று சொல்கிறார்கள். இதற்குச் சாட்சியாக இம்மலை உச்சியில் ஒரு காலடிச்சுவடு இருக்கிறது. அது பற்றி ஏற்கனவே கூறியுள்ளேன்.

சூரியனும், சந்திரனும் கடவுளர்கள் என்பது அவர்களை அவர்கள் அழைக்கும் பெயர்களிலிருந்து தெரிகிறது. அவர்கள் மொழியில் சூரியனுக்கு இரி; சந்திரனுக்கு ஹந்தஹண்த, சூரியனை இரிஹாமினி என்றும், இரி தெய்யோ என்றும், சந்திரனை ஹந்தஹண்தஹாமினி என்றும் ஹந்தஹண்த தெய்யோ என்றும் அழைப்பர். தெய்யோ என்பது கடவுள் என்றும் ஹாமினி என்பது வணக்கத்துக்குரியவர் என்றும் பொருள்படும் வார்த்தைகளாகும்.

புராதன காலத்திற் கட்டப்பட்ட பகோடா அல்லது கோயில்களில் பல கடவுளர்கள் இருக்கின்றனர். அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று எனக்குத் தெரியாது. பல கோயில்கள் செதுக்கப்பட்ட கற்களைக் கொண்டு மிகச் சிறந்த வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்டவை. மிக அபூர்வமானவை. அங்கே பல சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. அவைகள் எல்லாம் கடவுள் சிலைகளா என்பது பற்றி எனக்குத் தெரியாது. அங்குள்ள அநேகருக்கும் தெரியாது. ஆயினும் அவைகள் மிகச் சிறப்பான, இக்கால சிங்களவருக்குத் தெரியாத ஒரு கலை நுணுக்கத்துடன் செதுக்கப்பட்டுள்ளன என்பது தெளிவு. போர்த்துகீசர் முற்றுகையிட்ட போது சிலவற்றைச் சிதைத்துவிட்டனர். அவைகளைத் திருத்துவதற்கு இப்போது தகுதியான ஆட்கள் எவருமில்லை.

புராதன காலத்திற் கட்டப்பட்ட பகோடாக்களின் பாணிக்கும் இக்காலத்தவர் கட்டும் பாணிக்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. இக்காலத்தவர் பாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவானது. எவ்வித வேலப்பாடுகளும் இல்லாதவை. களி மண்ணாலும் தடிகளாலும் யன்னல்களுமில்லாமல் புறாக் கூடுகள் போன்று கட்டப்படுபவை. நான்கு சதுரங்கள் கொண்டு அதில் ஓரிரண்டு உயரமாக இருக்கும். இவைகளில் உள்ள அறைகளில் விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருக்கும். சிலவற்றின் கூரைகளுக்கு ஓடு போடப்பட்டிருக்கும்; சிலவற்றிற்கு கிடுகு மேயப்பட்டிருக்கும். பகோடாக்களில் உள்ள பெருங்கடவுள் புத்தராவர்.

அங்குள்ள விக்கிரகங்களும் பிரதிமைகளும் மிகப் பெரியவை. சில, வெள்ளியாலும் சில, வெண்கலத்தாலும் சில, வேறு உலோகங்களாலும் ஆக்கப்பட்டவை. அவைகளின் பக்கத்தில் நிறந்தீட்டப்பட்ட தடிகள், அம்புகள், ஈட்டிகள், வாட்கள்ளில், வைக்கப்பட்டிருக்கும். ஆனாற் புத்தரின் கோயில்கள் அவர் அமைதியானவராகையால் இவைகள் இருக்காது. அக்கோயில்களில் மனிதனின் பிரதிமைகள்தான் கால்களை மடித்து, மஞ்சள் உடையை போர்த்தியவாறு இருக்கும். அவைகளின் கைகள் பெண்கள் வைத்திருப்பது போல முன்னுக்கு மடித்து வைக்கப்பட்டிருக்கும். இந்தக் கோயில்கள் அங்குள்ள மக்களின் பொருளாதார நிலைக்கேற்ப அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

அவர்கள் சொல்வார்கள்: இந்தப் பிரதிமைகள் கடவுளர்களே அன்றி தங்களுக்குரியவைகளன்று. அவைகள் கடவுளைப் பிரதிநிதிப்படுத்துபவை; அவரின் நினைவுகள். இதனால் அவைகளைக் கௌரவப்படுத்தி வழிபடுகிறோம்.

பெண்கள் தங்களுக்கிருக்கும் இயற்கையான பயத்தால், இக்கோயில்கள் அருகில், அல்லது இந்தப் பிரதிமைகள் அருகில் வரத்தயங்குவர்.

இந்தப் பகோடாக்களுக்கு வருமானம் தரும் விளைநிலங்கள் உண்டு. இவை, பழைய அரசர்களால் அவைகளுக்கு வழங்கப்பட்டவை. இப்படியான விளைநிலங்கள் கொண்ட பகோடாக்கள் நாடு முழுவதும் பரந்து காணப்படுவதால் அரசுக்கு வருமானம் குறைகிறது. அரசுக்குச் சொந்தமான விளை நிலங்களைவிட இந்தப் பகோடாக்களுக்கு உரியவை கூட. இந்த விளை நிலங்களால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே இந்த விக்கிரகங்களுக்கு நாளாந்தம் படைக்கும் உணவு மற்றும் பலிகளுக்கான செலவுகள் ஈடு கட்டப்படுகின்றன. அரசன் உத்தியோகத்தர்களைத் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைக்கு வைத்திருப்பதைப் போல இக்கோயில்களும் தமக்குரிய உத்தியோகத்தர்களைக் கொண்டுள்ளன.

அவர்கள் கூறுகிறார்கள்; இந்த கோயில்களில் உள்ள கடவுளர்களுக்கும் தெய்வங்களுக்கும் இந்த உலகத்தில் உள்ள அரசாங்கங்கள் கட்டுப்பட்டவை. வாழ்க்கையில் உள்ள எல்லாப் பொருட்களும் அவர்களுக்குரியவை.

இந்தப் பொதுக் கோயில்களோடு பலர் தங்கள் தனிப்பட்ட வீடுகளில் சிறு வணக்க அறையை அல்லது சிறிய கோயிலை அமைத்துக் கொள்வர். அது வழமையாக இரண்டடி அகலத்துக்கும் குறைவாக இருக்கும். ஒரு தூணில் தரையிலிருந்து மூன்று நான்கு அடி உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கும். அதில் புத்தரின் பிரதிமை இருக்கும். அதனால் புத்தருக்கு அண்மையில் இருப்பதாகவும், அவர் மீதுள்ள அன்பைக் காட்டுவதாகவும், அவர்கள் கருதிக்கொள்வர். விக்கிரகங்களுக்கு ஒவ்வொரு நாளும் மெழுகு திரிகளையும், விளக்குகளையும் ஏற்றி, மலர் சாத்தி வழிபடுவர். சிலவேளைகளில் உணவு படைப்பர். அவ்வாறு வழிபாடியற்றுவதால் புத்தர் தங்களுக்கு பிரதியுபகாரம்ப் செய்வார் என்று நம்புகின்றனர்.

எல்லா வாய்ப்புகளும் வெற்றிகளும், கடவுளின் சித்தப்படி நடக்கின்றன. நோயும், துன்பமும் துர்த்தேவதைகளிடமிருந்து வருகின்றன. கடவுள், முடிவான சக்தியைக் கொண்டிருந்தாலும், எஜமானனிடமிருந்து சில காரியங்களைச் செய்யச் சேவகன் உரிமை பெற்றிருப்பது போல, இத்தேவதைகளும் சில சக்திகளைக் கொண்டுள்ளன, என அவர்கள் கூறுகிறார்கள்.

கடவுள் பலிபீடத்தில் காத்திருக்கும் படி மக்களுக்குக் கட்டளையிடுகிறான். இக்காரியத்தை அவர்கள் சிலரிடம் ஒப்படைக்கப்படுகின்றனர். அவர்களே மதக்குருக்கள். மூன்று வகை கடவுளர்கள் உள்ளனர். கோயில்களும் மூன்று வகைப்பெயர்களால் அழைக்கப்படுகின்றன. மதகுருக்களும் மூன்று வகைப்படுகின்றனர்.

முதலாவதாகப் புத்தர் என்னும் கடவுளும், அவருக்கு சேவை செய்ய டிரிநாச்சி என்ற உயர் குருவுமாவர். அவர்களின் கோயிலுக்கு விகாரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது பெயராகும். டிக்லிக்கி என்னும் நகரத்தில் இவர்களுக்கு ஒரு மடம் உள்ளது. அம்மடத்தையும் விகாரை என்றே அழைக்கிறார்கள். அங்கே அவர்கள் கூடி சமய விவகாரங்கள் பற்றி முடிவெடுக்கின்றனர். அதற்கு வேறு யாருக்கும் அனுமதியில்லை. ஆனால் அதியுயர் பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்த, நன்கு படித்த, ஒழுக்கமுள்ள, பிரபுக்களை மாத்திரம் கூட்டத்திற் கலந்து கொள்ள அனுமதிப்பர். டிரிநாச்சி வந்தால்தான் அவர்களும் வருவர். நாடு பூராகவும் மூன்றோ நான்கோ டிரிநாச்சிகள் தான் உள்ளனர். அவர்கள் மதகுருக்களிலிருந்து தலைமை மதகுருவாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த டிரிநாச்சிகள் விகாரையில் மாத்திரந்தான் வாழலாம். அவர்கள் பெரும் வருமானத்தைக் கொண்டவர்கள். அவர்கள் அரசனால் நியமிக்கப்படுவார்கள்.

பல விகாரைகளுக்குப் பெருமளவு விளை நிலங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அந்த விளை நிலங்களுக்கு உரிமையாளர் இந்த டிரிநாச்சிகளாவர். அவர்களுக்கு குறித்த தவணைகளில், குத்தகை இந்நிலங்களிலிருந்து வருகிறது. அந்த வருமானத்தை டிரிநாச்சி தம் விருப்பம் போலப் பயன்படுத்தலாம். மதகுருக்களின் சொகுசு வாழ்க்கையைக் கண்டு சிங்களவர்கள் இப்படிச் சொல்வார்கள், இந்தப் பிறவியில் இவர்கள் சொகுசு வாழ்க்கை வாழ்ந்தாலும், அடுத்துவரும் பிறவிகளில் இவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள். ஏனென்றால் புத்தருக்குச் சேவை செய்யாமல், அவரின் நிலத்தை அபகரித்து அனுபவித்து வருகின்றமையால் ஆகும்.

இவர்களுக்குக் கீழ் உள்ளவர்கள் கொன்னியாவர். கொன்னிக்கும் டிரிநாச்சிக்கும் ஒரே ஒழுங்குகள்தான். இவர்களும் மஞ்சள் துணியை இடுப்பை சுற்றிக் கட்டி, அதன் முனையைத் தம் இடது தோள்வழியாக எடுத்திருப்பர். இடுப்பில் கட்டியிருக்கும் துணி வழுவாமல் இருக்க ஒருபட்டி இடுப்பைச்சுற்றி இறுக்கி இருப்பர். தலை மொட்டையடிக்கப்பட்டிருக்கும். மரப்பிடிபோட்ட விசிறியை எடுத்து வெயில் தாக்காமல் மொட்டை தலைமேல் பிடித்தபடி நடந்து செல்வர்.

இவர்களுக்கு பல நலன்களும் கௌரவமும் உண்டு. அவர்கள் தங்கள் நிலத்தை அரசனுக்குக் குத்தகை கொடாமற் பயன்படுத்தலாம். அவர்கள் எங்கு சென்றாலும் அவர்களைக் காணும் மக்கள் தலைகுனிந்து வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துவர். அவர்கள் யாரையும் வணங்கத் தேவையில்லை. அவர்கள் அரசனைப்போல் தளப்பத்து ஓலையை ஆட்கள் பிடித்துக்கொண்டு வர அதன் நிழலிற் பயணம் செய்வர். அவர்கள் போகுமிடங்களில் மக்கள் வெள்ளைத் துணியை ஒரு குற்றியில் விரித்து உட்காரச்செய்வர். இது அரசன் ஒருவனுக்கு மாத்திரம் கிட்டும் பாக்கியமாகும்.

அவர்கள் தங்கள் கைகளை எந்த வேலையும் செய்யும் தோரணையில் வைத்துக் கொள்வதைத் தவிர்ப்பர். அவர்கள் கலியாணம் கட்டவோ அல்லது பெண்களைத் தொடவோ கூடாது. பழங்கள், சோறு, நீர் ஆகியவற்றை ஒரு நாளைக்கு ஒரு தரம்தான் உட்கொள்ள வேண்டும். மது அருந்தக் கூடாது. அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறைச்சி வகைகளை மாத்திரம்தான் உண்ணலாம். அதுவும் அந்த இறைச்சிக்குரிய உயிரைக் கொல்லவோ, கொல்ல ஒத்தாசை புரியவோ, சம்மதம் தெரிவிக்கவோ கூடாது.

அவர்கள் தங்கள் மதகுருத்தன்மையைக் கைவிட்டுச் சாதாரண வாழ்க்கைக்கு மாறிவிடுவதுமுண்டு. அதற்கு விரும்பினால் அவர்கள் முதலில் தமது காவியுடையைக் களைதல் வேண்டும். பின்னர் ஆற்றில் இறங்கி நன்கு முழுகி எழும்ப வேண்டும். அதன் பிறகு சாமானிய மனிதராகி விடுவர். அதன் பின் சாதாரண மனிதர் செய்யும் கலியாணம் போன்ற காரியங்களைச் செய்யலாம். அவர்கள் மதகுரு நிலையில் இருக்கும் போதே கலியாணம் முதலிய காரியங்களைச் செய்யலாம் என்று கூறுபவர்களுமுண்டு.

இந்த மதகுருக்களுக்கு வேறொரு நன்மையும் சம்பவிக்கிறது. புண்ணியம் தேட விரும்பும் ஒருவர் இந்த மதகுருக்களை வீட்டுக்கு அழைத்து வருவார். அழைத்து வருவதென்றால் வெறுமனே அவர் வரமாட்டார். முன்னும் பின்னும் மேளதாளங்கள், வாத்தியங்கள் முழங்க, ஒரு வெள்ளைத் துணியை எடுத்து அதன் நான்கு முனைகளை நான்கு பேர் பிடித்து வர, அதன் நிழலின் கீழ்தான் அவரை அழைத்துவர வேண்டும். வீட்டுக்கு வந்த பின்னர் விருந்துபசாரங்களும், பரிசளிப்புகளும் நடக்கும். ஓரிரு நாட்கள் அந்த வீட்டில் தங்கி சீர்வரிசைகளுடன் தமது விகாரைக்கு மீள்வார். வீட்டில் தங்கி இருக்கும் இரவில் அங்கு பண ஓதுவர். அது தளப்பத்து ஓலையில் எழுதப்பட்டிருக்கும் சுலோகங்களாகும். அவைகள் சொல்லாற்றல் மிகுந்துள்ளவாதலின் பொது மக்களுக்கு எளிதில் விளங்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம் மதகுருக்கள் அவைகளின் அர்த்தங்களையும் அங்குள்ளவர்களுக்கு எடுத்துரைப்பர்.

விரும்பத்தகாத காரியங்களைச் செய்த மதகுருக்களைப் பிடித்து அவர்களின் தலையைக் கொய்து இந்த அரசன் ஆற்றில் எறிந்துவிட்டான். இந்தச் செய்கை மக்களுக்கு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. ஏன் அரசன் இந்தப் புனித வணக்கத்துக்குரிய மனிதர்களுக்கு இப்படி ஒரு கொடுமையைச் செய்தான் என்று விளங்காமல் அவர்கள் திகைத்து நின்றனர். இந்த மதகுருக்கள் தமது கடமையை விட்டு மன்னனுக்கெதிரான கிளர்ச்சியில் பங்கேற்றமையே இதற்கான காரணமாகும்.

மற்றொரு வகை கோயில்களில் பணிபுரியும் மதகுருக்களுக்கு கம்புவா என்று பெயராகும். அவர்களின் கோயில் தேவாலய என்று அழைக்கப்படும். சுத்தமான உடைகளை அணிந்திருக்க வேண்டும். கோயிலுக்குச் செல்வதற்கு முன் ஆற்றில் முழுகிக் குளித்து வர வேண்டும் என்பவைகளைத் தவிர்த்து சாதாரண மக்களுக்கும் இவர்களுக்கும் எந்த வித்தியாசமுமில்லை. அவர்கள் ஹென்ட்ரூக்களைச் சேர்ந்தவர்களாவர். அவர்களுக்குத் தேவாலயத்துக்குச் சொந்தமான சிறிய நிலத்துண்டைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வருமானம் இல்லை. தாம் வேலை செய்யும் தேவாலயத்து வரும்படியில் ஏதும் சுருட்டினால்தான் உண்டு. காலையிலும், மாலையிலும் நடக்கும் தேவாலய பூசை நேரத்தில் அங்கே இருந்து அக்கருமங்களில் ஈடுபடுவர். கோயிலுக்கு மக்கள் சோறு மற்றும் உணவுப்பொருட்களைக் கொண்டு வந்தால் அவைகளை விக்கிரகத்துக்கு முன் படைப்பர். சிறிது நேரம் போக அதை எடுத்து மேளகாரர், குழல் வாசிப்பவர்கள் மற்றும் வேலைகளைச் செய்பவர்களுக்குப் பகிர்ந்தளிப்பர்.

மூன்றாவது மதகுருக்கள் யட்டியாவர். டயடோஸ் என்று அழைக்கப்படும் தேவதைகளின் மதகுருக்கள் இவர்களாவர். கோவல என்று அழைக்கப்படும் இவர்களின் கோவில் மற்றவைகளை விட குறைந்த தரமுள்ளவை. ஒருவன் இத்தேவதைகள் மீது கொண்ட பயபக்தி காரணமாக அவர்களுக்கு ஒரு வழிபாட்டிடத்தைத் தனது வளவில் அமைத்தால் அதன் மதகுரு அவன்தான். அதனுள் விக்கிரகங்களோடு வெட்டுக்கத்தி, வாட்கள், அம்புகள் மற்றும் கவசங்களை வைத்திருப்பான். பயங்கர மனித உருவங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக் கோயில்களின் சுவர்களில் தீட்டப்பட்டிருக்கும். இவைகளை வழிபாட்டிடம் என்று அழைப்பதை விட யக்கோ என்னும் தேவதையின் வீடு என்றழைக்கலாம். யட்டிகள் தங்கள் தலையை மொட்டையடித்து சில பிரத்தியேக சடங்குகளைச் செய்வர்.

யாரும் நோயுற்றால் தேவதைகள் குணமாக்கினால் ஒரு சிவப்புக் கோழியைத் தருவதாக நேர்ந்து விடுவர். சுகமடைந்தால் யட்டிகளின் வீட்டுக்கு போய் அதைக் கொடுப்பர். அந்த யட்டி ஒரு கையில் கோழியையும் மறுகையில் அம்பையும் எடுத்து தேவதைகளுக்கு காணிக்கையாக்குவதாக பாவனை செய்வார். பின்னர் கறிசமைத்து தேவதைகளுக்கு படைப்பேன் என்று கூறி, ஏற்கனவே இம்மாதிரி வந்துள்ள கோழிகளுடன் சேர்த்து விடுவார். ஓரிரு வருடங்களுக்குப் பின்னர் சேர்ந்துள்ள கோழிகளனைத்தையும் விற்பார். நான் ஒரு தடவை இப்படி மூன்று கோழிகளை நாலு பென்சுகளுக்கும் அரை பென்னிக்கும் வாங்கி இருக்கிறேன்.

மக்கள் தேவதைகளிடம் ஏதும் கேட்க விரும்பினால், இந்த மதகுருக்கள் இங்குள்ள ஆயுதங்களைத் தமது தோளில் வைத்து, தமக்கு உன்மத்தம் பிடித்துவிட்டது போன்று பாசாங்கு செய்தோ, உண்மையாகவோ ஆடுவர். அப்போது அவர் குறிப்பிட்ட தெய்வம் தம்மில் வந்துவிட்டதாகக் கூறுவார். இந்நிலையில் அவரை பிஸ்ஸோவெற் என்று அழைப்பர். பின்னர் மக்கள் தம் பிரச்சனை பற்றிக் கூறுவர். அவரும் தான்தான் அத்தெய்வம் எனக்கருதி அதற்கு பதிலளிப்பார்.

பொதுசன நூலகம்
01 SEP 2019
மாநகர சபை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04

அவர்களின் வழிபாடும் திருவிழாக்களும்

கடவுளோடு சம்பந்தப்பட்ட காரியங்கள் செய்வதற்குரிய நாட்கள் அவர்களுக்கு புதன்கிழமையும் சனிக்கிழமையுமாகும். அவர்கள் இந் நாட்களில் எதுவாகிலுமொன்றில் வந்து உடல் நலம் வேண்டியும், போர் போன்ற காரியங்களில் உதவுமாறு வேண்டியும், பிரச்சினைக்குரிய விடயங்களில் நல்ல வழியைக் காட்டுமாறு வேண்டியும் கடவுளர்களை மன்றாடுவர்.

ஆயினும் அவர்கள் அடிக்கடி வேண்டுவது உடல் நலம் பற்றித்தான். கடவுனர் அல்லது தேவதைகள்தான் நோய்களை விளைவிக்கின்றன. அவர்களால் அவைகளை மாற்ற முடியும் என்று நம்புகின்றனர். அவர்கள் நோய் வாய்ப்பட்டதும் எந்தக் கடவுள் எந்த தேவதை இதற்கு காரணமாக இருக்கும் என்பதை அறிவதற்கான வழிகளைப் பற்றி முதலில் யோசிப்பார்கள். ஒரு சிறுதடியை எடுத்து ஒரு வில் ஒன்று செய்வர். அதன் நாணில் சிறிய கத்தரிக்கோல் ஒன்றைத் தொங்க விடுவார். அது பாக்கு வெட்டி போன்று தொங்கும். பின்னர் வில்லில் இரண்டு முனைகளையும் பிடித்துக் கொண்டு கடவுளர்களினதும் தேவதைகளினதும் பெயர்களைத் திரும்பத் திரும்ப உச்சரித்துக் கொண்டு வருவர். எவர் அல்லது எவர்களின் பெயர்கள் உச்சரிக்கும் போது நாணில் தொங்கும் கத்திரிக்கோல் ஆடுகிறதோ அவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் தமது நோய்க்குரிய காரணகர்த்தாக்கள் என்று நிச்சயிப்பர். பின்னர் அவைகளுக்குப் பலிகளும் பூசைகளும் செய்வர். இந்த வில்லை நெடு நேரம் பிடித்துக்கொண்டிருப்பதாற் கைதளர்ந்து கத்தரிக்கோல் ஆடுகிறதென்று நினைக்கின்றேன்.

தெய்வங்கள் ஒன்பது உள்ளன. அவைகள் கிரகங்கள் என்று அழைக்கப்படும் ஒன்பது கோள்களாகும். பாதிப்புக்குக் காரணமான கிரகங்களின் உருவங்கள் களியினால் உருவாக்கப்படும். பல்வேறு நிறங்கள் அவைகளிற் பூசப்பட்டிருக்கும். காட்டுப்பன்றி போன்ற மூஞ்சியும், காளை மாட்டின் கொம்புகளும் கொண்டு பயங்கரமான தோற்றத்தில் அவைகள் இருக்கும். ஆயினும் அவைகளில் மனித உருவம் ஏதோ ஒரு வடிவில் மறைந்திருக்கும்.

அவைகளுக்கு முன்னால் உணவுப்பண்டங்களைப் படைப்பர். பாதிக்கப்பட்டவர், எதிரில் அமர்ந்திருப்பார். இந்தச் சடங்குகள் இரவு நேரத்திலே தான் செய்யப்படும். இரவு பூராகவும் மேளதாளங்கள் வாத்தியங்கள் முழங்கும். நடனங்கள் ஆடப்படும். அதன் பிறகு அந்தப் பிரதிமைகளையே போவோர் வருவோரின் கால்களில் பட்டு நசியும் படி தெருவில் எறிந்துவிடுவர். அவ்வுணவுகளை அங்கே வேலை செய்பவர்களும் இழிவான மக்களும்தான் உண்பர்.

முன்னர் இறந்து போனவர்களின் ஆவிகள் என்று நம்பப்படும் தேவதைகளுக்கு வழிபாடு செய்யும்போது கிரகங்களுக்குச் செய்வது போல் பிரதிமைகள் செய்வதில்லை. அவர்கள் வளவில் தானியக்களஞ்சியம் போல ஒரு கொட்டில் அமைத்து, கொத்துக்களால் வேய்ந்து பூக்களாலும், கிளைகளாலும் அலங்கரிப்பர். பகோடா அல்லது கோயிலிலிருந்து எடுத்து வரப்படும் கருவிகளையும் ஆயுதங்களையும் அங்கு துணியில் கட்டப்பட்டு தொங்கும் பலகையில் வைப்பர். வேறொரு பலகையில் உணவுப் பதார்த்தங்கள் படைக்கப்படும். பூசை நடக்கும் போது குழல் ஊதி மேளம் அடிக்கப்படும். ஆடலும், பாடலும் நடக்கும். பூசைமுடிந்தவுடன் உணவுப்பொருட்கள் மேளதாளக்காரர்களுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் நாடோடிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படும். மற்றவர்கள் இவ்வுணவுகளை உண்டாற் சந்ததியினர்க்குக் களங்கம் ஏற்படும் என்னும் பயத்தால் உண்ணமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தேவதைகளும் கடவுளர்களும் உள்ளூருக்குரியன. ஒரு பிரதேசத்தில் வணங்கப்படுபவைகளிற் சில, மறுபிரதேசத்துக்கு தெரியாதவை. சில மற்றப்பிரதேசங்களிற் சக்தி கொண்டனவல்ல. ஒவ்வொரு பிரதேசமும் தனக்குரிய தேவதைகளையும் தெய்வங்களையும் கொண்டிருக்கின்றது. தேவதைகளின் பெயர்கள் இடத்துக்கிடம் மாறுபடுவதுமுண்டு. தேவதைகள் ஒவ்வொருவரினதும் சக்தி என்ன என்பதனையும் அவர்கள் நன்கு அறிவார்கள்.

இந்த நாட்டில் வாழும் எளிய, வறிய மக்கள் துர்த்தேவதைகளும் கெட்ட ஆவிகளும் நடமாடுவதாக நினைப்பதையும் அவைகள் தம் மீது நோய் நொடிகளை ஏவி விடுகின்றன, என்று எண்ணுவதையும் அதனாலே தம்மைத்தாமே நொந்து கொள்வதையும் நினைத்தால் கவலையாக இருக்கிறது. இவ்வாறான நிலைமைகளுக்குட்பட்டு தமக்கு மீட்சி வேண்டிப் பிரார்த்திப்பவர், எவரும் கிறிஸ்தவர்களிலில்லை. ஆண்களும், பெண்களும் தம்மை ஆவிகளும், தேவதைகளும் பீடித்தாட்டுகின்றன என்று கூறுவதை அடிக்கடி கேட்டிருக்கின்றேன். அது அவர்களின் பிரமையே தவிர வேறு இல்லை என்பது எனது கருத்தாகும். இவ்வாறு பிடிக்கப்படுபவர்களிற் சிலர் பெரும் கூச்சல் இட்டுக் கொண்டும் அலறிஅடித்துக்கொண்டும் காட்டுக்குள் ஓடிவிடுகிறார்கள். இவர்களால் யாருக்கும் தொல்லை இல்லை; சிலர் மௌனியாகிவிடுவர்; நடுங்குவர். தலையை ஆட்டுவர்; தீ பாய்வர் ஆனால் பாதிக்கப்படமாட்டார்கள். பின்னர் மெல்ல மெல்லக் கத்தி கதைக்கத் தொடங்குவர்.

இந்த நிலை இரண்டு மூன்று மாதங்கள், சில வேளைகளில் இரண்டு மூன்று நாட்கள் வரை நீடிக்கும். இந்நிலைக்குக் காரணமான தேவதைகளிடம் சென்று பாதிக்கப்பட்டவரை குணமாக்கினால் பிரதியுபகாரம் செய்வதாக நேர்ந்து வைப்பர். சில வேளைகளில் அவர் சுகப்படலாம், சிலவேளைகளில் இறக்கலாம். இவர் தேவதைகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மீறியதால்தான் இந்த நிலைக்குட்பட்டார் என்றும் அவைகளுக்கு நேர்ந்துவிட்ட காயை, பழத்தை தின்றுவிட்டதால்தான் அது சம்பவித்தது என்றும் இதற்குப் பல விளக்கம் சொல்வர். சிலர் தமது தோட்டத்திற் தொடர்ந்து களவுப் போனால் காயையோ. பழத்தையோ குறிப்பிட்ட தேவதைக்குத் தருவதாக நேர்ந்து விடுவர். இப்விபரம் தெரியாமல் சிலர் இவைகளைத் திருடிவிடுவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவில் இந்த துர்த்தேவதைகள் கத்தும் சத்தம் கேட்கும். அச்சத்தம் நாய் குரைப்பது போல் இருக்கும். நான் பலதடவை அதைக்கேட்டிருக்கிறேன். ஆனால் எவருக்கும் அச்சத்தம் கெடுதி விளைவித்ததாகக் கேள்விப்படவில்லை. இங்கு வாழும் உயிரினங்கள் எதுவும் இம்மாதிரிச் சப்தமிடுவதில்லையாதலால் இது துர்த்தேவதைகளிடமிருந்து வருகின்றன என்று கூறுகிறார்கள். இச்சத்தத்தைக் கேட்டு நாய்கள் ஓடி ஒளிந்து கொள்கின்றன. ஒரு தரம் கதறுவது போலச் சத்தம் கேட்கும். உடனே கோழி பறப்பது போல் ஓர் ஓசை தொடரும். எனது அவதானிப்பின் படி இச்சத்தத்தை மனிதர்கள் தான் எழுப்புகின்றனர். ஒரு வேளை அரசன் ஆணைப்பிரகாரம் தலையை வெட்டி மரண தண்டனை நிறைவேற்றும் போது எழும் அவலக்குரலாகக் கூட இது இருக்கலாம்.

இச்சத்தம் கண்டியில் மாத்திரம் கேட்கிறது. வேறு கீழ் நாடுகளிற் கிடையாது. இந்தச் சத்தம் சிங்களவர்களின் வீடுகள் அருகே கேட்டால் அவர்கள் துர்த்தேவதைகளைச் சபிப்பர். "போகிறான் கேடு கெட்ட மாடு தின்னி. அவன் நின்றான் என்றால் அவன் மூக்கை வெட்டி அவனைக் கண்ட துண்டமாக கிழிப்பேன்" என்று ஏசுவார்கள். இந்தச்சொற்களைப் பயத்தோடும் பயமூட்டும் தோரணையிலும் கூறுவர். இந்தச் சொற்கள் எனக்குக் கேட்டவுடன் கதறும் சத்தம் வெகு தொலைவில் கேட்கும்.

சிறிய தேவதைகள் ஏமாற்றிவிட்டால் பெரிய தேவதைகளைப் பிடித்துப் பரிகாரம் தேடிக் கொள்வர். தொலை தூரக்காடுகளிற் பெரிய தேவதையை வசப்படுத்தும் சடங்கு நடைபெறும். புரடஸ்தாந்து கிறிஸ்தவர்கள் முனிவர்களுக்குச் செய்யும் மெழுகுதிரி ஆராதனை போல் முதலில் வழிபாடு நிகழும். பின்னர் உணவுப்பொருட்களைப் படைப்பர். அவ்வுணவில் ஒரு சிவப்புக் கோழிக் கறி கட்டாயம் இடம்பெற்றிருக்கும். அங்கே பயங்கரமான தோற்றத்திலே தேவதை போல் வேடம் புனைந்து காலிற் சலங்கை கட்டி, ஒரு விசித்திரமான பாணியில் மேல் சட்டை அணிந்து ஆடிப்பாடுவர். இவைகள் எல்லாம் திருப்தியாக இருந்தால் பெரிய தேவதைக்கு வேடம் புனைந்தவர் உணவுப் பொருட்களை வந்து உண்பார். நோயுற்றவர் அங்கு பிரசன்னமாகி இருப்பார்.

நான் இதுவரையும் கூறியது அவர்களது தனிப்பட்ட சிற்சில வேளைகளில் நடக்கும் வழிபாடுகளைப் பற்றியதாகும். மேலும் அவர்களின் வருடாந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாட்டங்களுமுண்டு. இவைகளில் இருவகைகள் உண்டு. இவ்வுலக வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட கடவுளர்க்கானது. சில, மனிதர்களைக் கடைத்தேற்றுவதையும் ஆன்மாக்களைப் பரிபாலிப்பதையும் நோக்கமாகக் கொண்ட புத்தருக்கானவை.

நான் முதலில் தனிப்பட்ட கொண்டாட்டங்களைப் பற்றிச் சொல்கின்றேன். அவை இரண்டு மூன்று உள்ளன. அவைகள் முன்சொன்ன கடவுளர்களைக் கௌரவப்படுத்தி அவர்களிடமிருந்து நன்மைகளையும், உதவிகளையும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் நடத்தப்படுபவை. அதில் ஒன்று பெரகராவாகும். அவைகள் வருடத்தில் ஜுன், ஜுலை மாதத்தில் வருவது. இது பயபக்தியுடன் கூடிய கொண்டாட்டமாகும். இது எல்லாப் பகோடாக்களிலும் நடக்கும். யாரும் குறிப்பிட்ட பகோடாக்களுக்குத்தான் வரவேண்டுமென்று நிர்ப்பந்தமில்லை. மிகப் பெரிய கொண்டாட்டம் நிகழ்வது கண்டி நகரத்திலாகும். இருந்த போதிலும் ஏனைய பட்டணங்களிலும் இது கொண்டாடப்படும்.

ஒரு மதகுரு நிறந்தீட்டப்பட்ட தடியை தனது தோளில் தாங்கி நிற்பார். அத்தடியில் பூங்கொத்துக்கள் தொங்கும். அதில் பட்டுத்துணிகளும் கட்டப்பட்டிருக்கும். அவரது மூச்சு தடியில் படாமலிருக்க, தனது வாயை இறுக்கமாகக் கட்டியிருப்பார். இத்தடியை மக்கள் தலை குனிந்து வணங்குவர். ஒவ்வொருவரும் தமது வசதிக்கேற்ப காணிக்கை செலுத்துவர். அப்போது உடலெல்லாம் வெள்ளைத் துணியால் மூடப்பட்ட யானை ஒன்று அரச மரியாதையுடன் அங்கு கொண்டு வரப்படும். அந்த யானையில் அவர் ஏறிக் கொள்வார். அவர் அலுத்நுவர தெய்யோவைப் பிரதி நிதித்துவம் செய்பவராவர். அத் தெய்வம் சொர்க்கத்தையும் பூமியையும் படைப்பவராவர். அவருக்குப் பின் இருப்பவர் அவருக்குக் குடைபிடிப்பவராவர். இந்த யானைக்கு பின்னால் ஒரு யார் தூரத்தில் இன்னொரு யானை வரும். அந்த யானையில் இருவர் அமர்ந்திருப்பர். அதில் முன்னிற்பவர் கதரகம தெய்யோவைப் பிரதிநிதித்துவம் செய்பவர். பின்னால் இருப்பவர் குடை பிடிப்பவர். அதற்கு பின்வரும் யானையில் பொருட்டீஸ் தெய்யோவை பிரதிபலிப்பவரும் குடை பிடிப்பவரும் அமர்ந்து பவனி வருவர்.

இவற்றை அடுத்து மல்யுத்தம் செய்பவர்கள் போன்று உடையணிந்தவர்கள் பாரம்பரிய நடனங்களை ஆடிய வண்ணம் போவர். அவர்களுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் பறை அடிப்பவர்களும், கொம்பு, குழல் ஊதுபவர்களும் பெரும் எண்ணிக்கையில் செல்வர். அங்கு எழுப்படும் பெருஞ் சத்தத்தால் வேறு சத்தங்கள் கேட்காது. அவர்களுக்குப் பின்னர் ஆண் நடனக்காரர் செல்வர். அவர்களுக்கு பின்னால் பகோடாக்களுக்கு தேவையான வேலைகளைச் செய்யும் குயவர்கள், வண்ணார்கள்,அவரவர் கூட்டத்துடன் செல்வர். இவர்கள் மூவர்மூவராகக் கையைப்பிடித்துக் கொண்டு செல்ல வேண்டும்.

இவர்களுக்குப் பின்னால் சமையல் வேலை செய்யும் பெண்கள் செல்வர். அவர்களின் கையில் சவுக்குகள் போன்ற உபகரணங்கள் இருக்கும்.

கடவுளர்களுக்கும், அவர்களின் சேவகர்களுக்கும் பின்னால் நாட்டின் உயர்ந்த வம்சாவழியைச் சேர்ந்த பெண்கள் மூவர்மூவராக கையை பிடித்துக்கொண்டு செல்வர். வீதிகள் எல்லாம் சுத்தம் செய்யப்பட்டு இரண்டு பக்கமும் கம்பங்கள் நடப்பட்டு அவற்றில் கொடிகளும் பதாகைகளும் இளநீர்க் குலைகளும் அங்கு தொங்கவிடப்பட்டிருக்கும். இரவும் பகலும் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும்.

கடைசியில் அரசனால் அனுப்பப்பட்ட கொமாண்டர்கள் தங்களின் படைவீரர்களுடன் சென்று கொண்டிருப்பர். அவர்கள் இரவும்,பகலும் நகரத்திற் சுற்றி வருவர். அந்தக் கொண்டாட்டங்கள் வளர்பிறைக் காலம் முழுவதும் தொடர்ந்து நடைபெறும்.

முன்நாட்களில் அரசன் குதிரையில் ஏறித் தனக்கு முன்போகும் ஊர்வலத்தைப் பார்த்துவருவான். ஆனால் இப்போது அவனுக்கு அதில் விருப்பமில்லை.

அந்தக் கடவுளர்கள் தங்கள் பவனியைத் தொடங்குமுன் பகோடா வாசலில் சிறிது நேரம் தரித்து நிற்பர். மக்கள் வந்து காணிக்கை செலுத்தி வணங்குவர். இவ்வேளையில் நடனக்காரர்கள் பல வித்தைகளை அவர்களுக்குச் செய்து காண்பிப்பர். பூரணைக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர் இந்த மூன்று தெய்வங்களும் பல்லக்கில் வைத்து கொண்டு வரப்படும். இப்பல்லக்கில் மூட பக்திக்குரிய பொருட்களும் ஒரு வெள்ளிக்குடமும் இருக்கும். அவைகளை ஆற்றுக்குக் கொண்டுபோய் மூழ்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து மீண்டும் எடுத்து வருவர். இதன்போது வெள்ளிக்குடத்திலிருக்கும் முன்னைய வருட நீரை வெளியே ஊற்றிவிட்டு புது நீரால் மீண்டும் நிரப்புவர். இவ்வாறு ஒவ்வோர் ஆண்டும் செய்வர்.

இந்தப் பெரகராக் கொண்டாட்டங்களை 1664 இல் நடத்த அரசன் அனுமதி வழங்கவில்லை. அந்த வருடத்திலே தான் அரசனுக்குகெதிரான கிளர்ச்சியும் நடந்தது. பயந்து போன அரசன் இதில் இப்போது தலையிடுவதில்லை.

நவம்பர் மாதத்தில், பூரணை நாளில் இன்னொரு பக்திபூர்வமான விழா நடக்கிறது. அது கவ்தபூஜா என்று அழைக்கப்படும். அந்நேரத்தில் பகோடாவைச் சுற்றி ஒளிவிளக்குகள் ஏற்றப்படும். அப்போது காட்டிலிருந்து எடுத்து வந்த நீண்ட கம்புகளைப் பகோடா வாசலிலும் அரண்மனை வாசலிலும் நாட்டுவர். அந்தக் கம்புகளில் பலவகை விளக்குகளை எரியவிடுவர். உச்சத்தில் உள்ள விளக்கை ரோர் நெஸ் என்று அழைப்பர். இக்கொண்டாட்டங்களின் செலவுகளை ஈடுகட்ட நாட்டில் உள்ளவர்கள் எண்ணெய் போன்றவைகளைக் கொடுத்து உதவுவர். இந்த பூசைகள் மக்களை மகிழ்ச்சிப்படுத்துவதை விட அரசனுக்கு மிகுந்த கௌரவத்தை அளிக்கின்றன. அரண்மனையிலும் நீண்ட மரத்தடிகள் நடப்பட்டு அலங்கரிக்கப்படுகின்றன. இக்கொண்டாட்டங்கள் ஒரு நாளுடன் நிறைவடையும்.

கடவுளர்களைப் பெருமைப்படுத்தும் வருடாந்த விழாக்கள் பல உள்ளன. இக்கடவுளர்களின் சக்திகள் வாழ்க்கைக்கு உதவியாக இருக்கின்றன. தங்களது ஆத்ம ஈடேற்றத்துக்கு உதவும் புத்தரை பெருமைப்படுத்துவதாக இவ்விழாக்களை நடத்துகின்றனர்.

அவர்கள் வெள்ளி, வெண்கலம், களி மற்றும் கல் போன்றவற்றிலே புத்தரின் சிறு பிரதிமைகளை உருவாக்குகிறார்கள். குகைகளும் உள்குழிவான பாறைகளும் உள்ள இடங்களில் இந்தப்புத்தர் என்னும் கடவுளின் பிரதிமைகளை வைத்து வணங்குவர். அவருக்குப் படைக்கும் உணவுகள் அரிசி, மரக்கறி வகைகளாக இருக்கும்.

புதுவருட காலத்தில் மார்ச் மாதத்தில் அவரின் பெருவிழா நடக்கிறது. அவரின் ஞாபகார்த்த இடங்கள் இருவகைப்படும். ஒன்று மலை, மற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களுக்கு கீழ். இந்த விழாவுக்கு சென்று வணங்க அவர்கள் மனைவி, பிள்ளைகளுடன் செல்வர்.

நாட்டின் தென் எல்லையில் இருக்கும் மலையை ஹம்மனெல்ல என்று சிங்களவர்களும் ஆதம்மலை என்று கிறிஸ்தவர்களும் அழைப்பர். இதுவே நாட்டின் மிக உயரமான மலையாகும். முன்னரும் இதைப்பற்றி விபரித்துள்ளேன். இந்தமலையின் உச்சியில் நின்றுதான் புத்தர் வானுலகத்துக்குப் போனார் என்று சிங்களவர்கள் சொல்லுகிறார்கள். அங்கே காலடித்தடம் ஒன்று உண்டு. அந்த காலடித் தடத்தை விளக்குகள் ஏற்றி நிவேதனப் பொருட்கள் வைத்து வணங்குவர். இங்கு வைக்கப்படும் நிவேதனப் பொருட்களை இங்கு வரும் முஸ்லீம் யாத்திரிகளுக்கு முன்னைய அரசன் வழங்கினான்.

நாட்டின் வடக்கு எல்லையாக அநுராதபுரத்தில் ஒரு மரம் இருக்கிறது. அந்த மரம் கடற்கரையிலிருந்து பறந்து வந்து தன்னைத் தானே நாட்டிக் கொண்டது என்று கூறுகின்றனர். இம்மரத்தின் கீழேதான் புத்தர் இவ்வுலகத்துக்கு வந்த போது இருந்தார். அந்த இடம் இப்போது பக்தியுடன் வணங்கப்படுகிறது. இதைவிட இங்கே தொண்ணூறு அரசர்கள் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி செய்திருக்கின்றனர். அவர்கள் பாறைகளையும் கற்களையுஞ் செதுக்கி மாபெரும் கோயில்களையும் தூபிகளையும் எழுப்பி உள்ளனர். இதற்காகப் பெரும் பிரயத்தனங்களை அவர்கள் மேற்கொண்டுள்ளனர். இதற்குச் சாட்சியாக அவைகளின் அழிபாடுகள் எங்கும் சிதறிக்கிடக்கின்றன. அந்த அரசர்களின் ஆத்மாக்கள் இப்போது நற்பேறு அடைந்து விட்டன என்றெல்லாம் இங்குள்ளவர்கள் கூறுகின்றனர். பலருக்கு இங்கெல்லாம் செல்லுவதற்குரிய வசதிகள் இல்லை. ஆயினும் பக்கத்தில் உள்ள விகாரைகளுக்குச் செல்கின்றனர். அங்குள்ள கடவுளுக்கு, மற்றத் தெய்வங்களிலும் பார்க்கக் கூடிய முக்கியத்துவம் கொடுக்கின்றனர் என்பது மேல்வரும் செயல்களிலிருந்து புலனாகிறது.

உயர்தரத்துப் பெண்கள் தங்கள் சேவகிகளை, நன்கு உடைஉடுத்தி ஊர் ஊராகச் சென்று காணிக்கை பெற்று வர அனுப்புவர். அந்தப் பெண்கள் புத்தரின் பிரதிமைகளை வெள்ளைத்துணியால் சுற்றி வீடுவீடாக எடுத்துச் சென்று காணிக்கை கேட்பர். மூன்று சாதாரண பொருட்களைத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் யாசிப்பர். விளக்கேற்றுவதற்கு எண்ணெய், நிவேதனத்துக்கான அரிசி, மற்றும் சிறிதளவு பணம் அல்லது துணி.

சில ஏழைகள் இந்தமாதிரிப் பிச்சை எடுத்துத் தன்னை பராமரித்துக்கொள்வர். அவர்கள் சமயப்புத்தகத்தை அல்லது புத்தரின் பிரதிமையை வெள்ளைத் துணியினால் சுற்றி எடுத்து, அவைகளின் பெயரைக் கூறி யாசிப்பர். மக்கள் அவர்களை வணங்கி அவர்களுக்குத் தானியம் அல்லது காசு அல்லது துணி ஆகியவற்றைக் கொடுப்பர். சில நேரம் பிச்சை கேட்பவரிடம் குறிப்பிட்ட பொருட்களைத் தரும்படி கேட்பர். அப்போது பிச்சையெடுப்பவர் உங்கள் இரு விரல்களால் எவ்வளவு எடுக்க முடியுமோ அவ்வளவு எடுங்கள் என்பார். அவ்வாறு பெற்றபின் அவர் அவர்களுக்கு புத்தர் உங்களுடன் எப்போதும் வருவார். உங்களுடைய தானியத்தை நன்கு விளைய வைப்பார். உங்களது கால்நடைகளை விருத்தி செய்வார். உங்களுடைய வாழ்வுடன் எப்போதும் இருப்பார் என்று வாழ்த்துவார்கள்.

சிலர் பக்தி மேலீட்டால் புத்தரின் பிரதிமைகளைத் தங்கள் சொந்தச் செலவிற் செய்து மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பார். இதைச் செய்யத் தாராள மனப்பான்மை இருக்க வேண்டும். இந்தப் பிரதிமைகளுக்கு கண் வைப்பதற்கு முன் இவைகள் கடவுளாகக் கருதப்படுவதில்லை. அவைகள் எல்லாப் பொருட்களையும் போல இடையில் தூக்கி வீசப்பட்டுக் கிடக்கும். இவைகளுக்கு கண் வைத்தவுடன், கைவினைஞருக்குப் பெரும் மனநிறைவுண்டாகும். இதிலிருந்து கடவுளாகக் கருதப்படும். இவை மிகுந்த சீர்வரிசையுடன் உரிய இடத்துக்குக் கொண்டு செல்லப்படும்.

சிலவேளைகளில் ஒருவன் கைவினைஞரிடம் தனக்கொரு பிரதிமை செய்து தரும்படி வேண்டுவான். பிரதிமை வேலை பூர்த்தியானவுடன் நல்லெண்ணமுடையவர் யாராகிலும் அதன் விலையைக் கொடுத்துவிட்டு போய்விடுவர். அதனால் செய்யச்சொன்னவர் இனாமாக அதைப் பெறுவார். இது பெரிய பக்தியாகக் கருதப்படும்.

நான் போகஹா[2] மரத்தைப் பற்றி முன்பு கூறியிருக்கிறேன். அது கடவுளின் நினைவாகக் கருதப்படுவதாற் புனிதமானது. அதன்கீழ் நிவேதனப் பொருட்களைப் படைத்து சமயக் கூட்டங்களை நடத்துவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

தெருவிற் பத்துப்பன்னிரண்டு அடி தள்ளி இருக்கும். இம்மரத்தின் கீழ் சிறு குடிலை அல்லது பந்தலை அமைத்திருப்பர். கொஞ்சம் சிரத்தை எடுத்து களிமண்ணினாலும் சீவப்பட்ட மரத்தினாலும் அவைகளைக் கட்டுவர். அங்கு வாழும் குறிப்பிட்ட குடும்பங்கள் தமக்கிடையே பங்கிட்டு இதற்குரிய செலவுகளை ஏற்றிருக்கும். சில வேளைகளில் மொத்த பட்டணங்களில் உள்ள குடும்பங்களே காசு திரட்டி வட்டவடிவில் இந்த போகஹா மரத்தைச் சுற்றி சிறிய கட்டடமொன்றைக் கட்டுவர். அதன் போது மரத்திற்கு இடைவெளி நடுவில் விடப்பட்டிருக்கும். இந்த இடங்களுக்கு பெண்கள் தங்களிடமுள்ள சிறந்த உடைகளை அணிந்து திருவிழா பார்க்க வருவர். அவர்கள் இங்கு நடக்கும் நடனங்களையும் வித்தைகளையும் கண்டு ரசிப்பர். இந்த நடனக்காரர்களும் வித்தைக்காரர்களும் அவர்களிடமுள்ள காசுகளைக் கறக்கக் குறியாக இருப்பர். இங்கே அவர்கள் வெற்றிலை, பாக்கு மென்று கொண்டும் தங்களது துணைவர்களோடு பேசியும் தாங்கள் அணிந்திருக்கும் உடைகளை மற்றவர்கள் பார்ப்பதைப் பெருமிதமாக எண்ணியும் மகிழ்ந்து இருப்பர். இவ்விழாக்கள் ஒரே இரவில் முடியாது. பூரணை வரை தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05

சமயமும் கோட்பாடுகளும், நடைமுறையும்

அவர்களிடையே அதிதீவிர சமயப் பற்றுள்ளவர்களையோ கடவுளர்கள் மீது பக்தி கொண்டவர்களையோ காண்பது அரிது. அவர்கள் நோயுற்றால் அல்லது வயது சென்றால் தவிர, சமய காரியங்களிற் சுறுசுறுப்புடன் ஈடுபடமாட்டார்கள். தமது சமயத் திருவிழாக்களைப் புதியவர்கள் பார்ப்பதையும் தடை செய்யமாட்டார்கள். அவர்கள் தமது வழிபாட்டு முறைகளைக் கண்டு முகம் சுளித்தால், அவைகளிடையே பரவிக்கிடக்கும் மூட நம்பிக்கையையும், மடத்தனத்தையும் கண்டு பரிகசித்தால், தாமும் அதை ஆமோதிப்பர். இதனால் மிகவும் சங்கடத்துக்குட்பட்டு, முரண்பாடாக இந்த நாட்டில் கெட்ட தேவதைகளாற் படிந்துள்ள தீமைகளையும், தொல்லைகளையும் நீக்க இவைகளைச் செய்ய நாங்கள் நிர்பந்திக்கப்பட்டுள்ளோம் என்பார்கள்.

சில வேளைகளில் அவர்கள் நோயுற்றால் கடவுள்களின் கோயில்களுக்குக் காணிக்கையுடன் சென்று அவர்களின் அனுசரணையை வேண்டுவர். தாம் சுகமடைந்தால் இன்னும் பெரிய காணிக்கைகளைத் தருவதாக வாக்குறுதியளித்து அதனை வழங்குவர். அது பெரும்பாலும் நிலம், அடிமை, கால்நடை, பணம், துணி, ஆகியவனவாக இருக்கும். சுகம் கிட்டாவிட்டால் அதனை வழங்க மாட்டார்கள் அந்தக் கடவுளால் முடியும்; ஆனால் அவர் என்னை ஏமாற்றிவிட்டார் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடையே வழமையாக வரும் சொல், அவரவர் கிரகபலன் படிதான் நன்மையும், தீமையும் நடக்கும். கடவுளால் இதற்கு என்ன செய்யமுடியும், ஒன்றுமில்லை என்பதாகும். அப்படிப்பட்ட தருணங்களில், இவர் என்ன கடவுள், அவருக்கு ஒன்றும் கொடுக்கக் கூடாது, அவர் வாயை வெறுமையாக விட வேண்டும். விக்கிரக கடவுள் மீது சிறிய மதிப்பைத்தான் அவர்கள் கொண்டிருக்கிறார்கள். அரசனும் அவற்றின் மீது குறைந்த மதிப்பையே வைத்துள்ளான். அவைகளை வணங்குபவர்களைப் பற்றி அரசன் அலட்டிக் கொள்வதில்லை. அவன் கிறிஸ்தவர்களின் வழிபாடுகளுக்கு எந்த வித இடைஞ்சல்களும் செய்வதில்லை. அவர்களை விக்கிரக வழிபாடுகளுக்கு மாறுமாறு கூறுவதுமில்லை. இதற்கு மாறாக, அரசனும், மக்களும் கிறிஸ்தவ சமயத்தைத் தங்களது சமயத்தை விட உயர்வாக மதிக்கிறார்கள். எந்த அலங்காரமும் தேவைப்படாத பெருங் கடவுளர் கிறிஸ்தவ சமயத்தில் உள்ளனர் என்று கருதுகின்றனர். இந்த மக்களைக் கிறிஸ்தவ சமயத்திற்கோ வேறு சமயத்திற்கோ இலகுவாக ஈர்க்கலாம். இதை மேல்வரும் சம்பவம் உணர்த்துகின்றது. பெயரிடப்படாத புதிய கடவுளால்தான் அனுப்பப்பட்டிருப்பதாகவும் தான் அவரின் தீர்க்கதரிசி என்றும் ஒருவன் பாசாங்கு செய்தான். அக்கடவுளின் துணையால் நோயுற்றவர்களைச் சுகமாக்கித் தருவதாகவும், அற்புதங்கள் செய்வேன் என்றும் தான் அக்கடவுள் மீது பெரும் பக்தி கொண்டுள்ளதால் அவைகள் சாத்தியமாகும் என்றும் அவன் கூறினான். கடவுளின் பெயரால் எழுப்பட்டிருக்கும் கோயில்களையும் தேவாலயங்களையும் அழித்துத் தரைமட்டமாக்குவது இந்தப் பெயரற்ற கடவுளின் விருப்பம் என்ற கருத்தையும் வெளியிட்டான். அவன் தனது கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் சில வெற்றிகளையும் ஈட்டியிருந்தான். அரசனாலோ மக்களாலோ அவனின் செயற்பாடுகளுக்கு எந்தவிதத் தடையும் ஏற்படவில்லை. அரசன் பொதுவாக இம்மாதிரி விடங்களில் அக்கறை காட்டுவதில்லை. புதியதோ, பழையதோ, எச்சமயமும் கடவுளை கொண்டு வந்து அவன் முன் நிறுத்தவில்லை என்பதால், இதில் எந்த வித கரிசனையும் அவனுக்கில்லை. ஆனால் மக்களோ கடவுள் பெயர் சொன்ன மாத்திரத்தில் அஞ்சி நடுங்குகிறார்கள். பெயரில்லாத கடவுள் என்பது எல்லா விதத்திலும் அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. எனினும் ஏதோ பயத்தில் பலிப் பொருட்களுடன் வந்து வழிபாடு செய்யத் தொடங்கினர். அந்த மதகுரு தன்னை அரசனாக மாற்றிக் கொள்ளும் வேலைகளிலும் ஈடுபடத் தொடங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் இது பற்றி சந்தேகித்தானா அல்லவா என்பது பற்றி எனக்குத் தெரியாது. அந்த மதகுரு ஹோட் கொலி பிரதேசத்தில் லீப்பென என்ற இடத்தில் இருந்தான். அரசன் தனது விரலிலிருந்து ஒரு மோதிரமொன்றைக் கழற்றி ஒரு தந்தத்திலான பெட்டிக்குள் இட்டு அந்த மதகுருவை அழைத்து வருமாறு தனது பிரதிநிதிகளை அனுப்பினான். அரசனின் பிரதிநிதிகளைக் கண்டவுடன், தான் கடவுளால் அனுப்பப்படவில்லை என்றும், நோயுற்றவர்களைக் குணமாக்குவதாகவும், பலவீனமான மக்களுக்கு உதவுவதாகவும் தெரிவித்தான். அவனைப் பிடித்து மரத்தில் கட்டி வைக்குமாறும், மழைபெய்தால் அவனை வெயிலில் காயவைத்து மீண்டும் கட்டுமாறுமாறும் உத்தரவிட்டான்.

இந்த மதகுருவின் தலைமைக் குரு இதனைக் கேள்விப்பட்டு இவ்வாறு தனக்கும் நடக்கும் என்று பயந்து தான் பகோடாக்களிலிருந்து சுருட்டிக் கொண்ட பொருட்களோடு தன்னைச் சுமந்து செல்ல அரசனின் யானை ஒன்றையும் அபகரித்துக் கொழும்புக்கு ஓட்டமெடுத்தான். அங்கே தான் மாத்தளை அரசனின் மகன் என்று பாசாங்கு செய்தான். (மாத்தளை அரசன் தற்போதைய கண்டியரசனின் இளைய சகோதரனாவான். அவன் கண்டி அரசனுக்குப் பயந்து கொழும்புக்கு ஓடி, போர்த்துக்கீசரிடம் அடைக்கலம் புகுந்தான். அவர்கள் அவனை கோவாவிற்கு அனுப்பி வைத்தனர். அவன் அங்கே மரணமடைந்தான்) அங்குள்ளவர்களிடையே அவன் இளவரசன் என்ற செய்தி பரவியது. முன்னிலும் கூடிய சனங்கள் குழுமத் தொடங்கிவிட்டனர். இதனால் அவன் பாவனை மதகுரு என்பதை விட்டு அரசன் என்று மாறத்தொடங்கியது. அதனால் டச்சுக்காரர்களுக்கு அவன் மீது ஒரு சந்தேகம் இருந்து வந்தது. இது ஆபத்தாக மாறத்தொடங்குவதற்கு முன் அவனாகவே இரவில் தனது பரிவாரங்களுடன் புறப்பட்டு, கண்டியில்தான் முன்னர் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

அவன் வந்ததைக் கேள்விப்பட்டவுடன் அரசன் தனது ஐந்து கொமாண்டர்களைப் படைவீரர்களுடன் அனுப்பி, அவனைப் பிடித்துவர உத்தரவிட்டான். அவர்கள் அவனையும் கூட்டத்தையும் பிடித்து அரசன்முன் நிறுத்தினர். அரசன், சங்கிலியால் அவனையும் பரிவாரங்களையும் பிணைக்கச் சொன்னான். அவர்களைச் சிங்களவர்களின் பகோடாக்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்குமாறு உத்தரவிட்டான். மக்கள் அவர்களுக்காகக் கவலைப்பட்டனர். ஆயினும் அவர்களால் உதவமுடியவில்லை.

தலைமை மதகுருவும் அவருடைய சீடர்களும் அரச சபைக்கு மீண்டும் கொண்டுவர உத்தரவிடப்பட்டனர். அரசன் அவர் மதகுருவா அல்லது இளவரசனா என்று விசாரணை நடத்தினான். அரசன் கடைசியில் அவரை நாலுதுண்டுகளாக வெட்டிப் போடுமாறு உத்தரவிட்டான்.

ஆயினும் சாதாரண சனங்கள் இந்தப் பேரற்ற கடவுளை நினைத்துத் துதிக்கின்றனர். அந்த மதகுரு சமய விவகாரங்களில் மாத்திரம் கவனஞ் செலுத்தி இருந்தால் இந்த விளைவுகள் ஏற்பட்டிருக்காது. மதவிவகாரமாக இருந்தால், அது எதுவாகிலும் அரசன் கேள்வி கேட்டிருக்கமாட்டான். அம்மதகுரு அரசனாக நினைத்ததால் வந்தது வினை.

இந்த மக்கள் உடலின் மீட்சிபற்றி நம்புகின்றனர். ஆன்மாவின் அழிவற்ற தன்மைபற்றியும், அதன் எதிர்காலம் பற்றியும், அக்கறை கொள்கின்றனர். இதற்காக அவர்கள் முன்னோர்களை வழிபடுகின்றனர். முற்காலத்தில் இவ்வுலகில் வாழ்ந்தவர்களின் ஆத்மாக்கள்தான் இப்போது கடவுளாக உள்ளனர் என்பது அவர்களின் பலமான நம்பிக்கை. இந்த உலகில் வாழ்ந்தவர்கள் எவ்வளவு ஏழைகளாகவும் கீழ் நிலையிலுள்ளவர்களாகவும் இருந்த போதிலும் நல்லவர்களாக வாழ்ந்தால் அடுத்த உலகத்தில் கண்ணியம் மிக்கவர்களாகத் திகழ்வார்கள். ஆனால் கெட்ட மனிதர்கள் விலங்குகளாகத் வாழ்வார்கள். அங்கு சிலந்தி ஒன்றிருக்கிறது. அது ஒரு பென்னி நாணயம் போன்று இருக்கும். அது முட்டையை இட்டு அதை வயிற்றிற் சுமந்து போகுமிடமெல்லாம் கொண்டுதிரியும். முட்டைக்குள் இருந்து குஞ்சுகள் வெளிவந்ததும் அக்குஞ்சுகள் அச்சிலந்தியை உண்டு வளரும். சொல்வழி கேளாத பிள்ளைகள் இச்சிலந்தியாகப் பிறப்பார்கள். அவர்களின் குஞ்சுகள் அவர்களை உண்பர் என்று கூறுகிறார்கள்.

ஒருவனுடைய நல்ல பலனும், தீய பலனும் அவன் பிறப்பதற்கு முன்னரே கடவுளால் தீர்மானிக்கப்படுகின்றன. 'ஒலுவா கோட்டாலு தியன்ன' எல்லாம் தலையிலே எழுதப்பட்டுள்ளன, என்ற பொருளுள்ள பழமொழியை அவர்கள் கூறுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் நல்ல அம்சங்கள் என்பன பூசை செய்வதற்கு உதவியான பொருட்களை வழங்குதல், எந்த உயிரையும் கொல்லாமல் இருத்தல்.(அதனை அவர்கள் போ பொய் என்னும் பெரும் பாவ மென்பர்.) கொலையிற் சம்பந்தப்பட்டிருந்த அல்லது கொலைக்கு ஒத்தாசை புரிந்த உயிரின் இறைச்சியைப் புசிக்காதிருத்தல் என்பனவாகும். அவர்கள் மரக்கறி உணவுகளைப் பாதகமில்லாத உணவுகளென்று கருதுகின்றனர். போகஹா மரத்தடியைக் கூட்டித்துப்பரவாக வைத்திருத்தல், சிறந்த சமயக் கடமையாக கருதப்படுகின்றது. அவர்களது சமயத்தில் நீதி, நிதானம், தூய்மை, ஆகிய பண்புகள் மிகவும் போற்றப்படுகின்றன.

அவர்கள் ஈகைக் கோட்பாட்டைப் பின்பற்றித் தங்கள் நாட்டு ஏழைகளுக்கு மாத்திரமல்ல, வெளிநாட்டவர்களுக்கும் ஈகிறார்கள். குடும்பத்தில் உள்ளவர்களுக்குப் போதுமான அளவு அரிசியைப் போட்டு அவிக்கும் போது அதற்கு மேலதிகமான ஒரு கைப்பிடி அரிசியை எடுத்து பானைக்குள் போடுவார்கள். அதற்கு மிற்றாஹேல் என்று பெயர். அச்சோற்றைத் தங்கள் வாசற்படிக்கு வரும் ஏழைக்கு வழங்குவர்.

அவர்கள் தங்கள் இனத்தவர்களுக்கு மாத்திரந்தான் தான தருமம் செய்கிறார்கள் என்றில்லை. மூர் பிச்சைகாரர்களுக்குங் கூடக் கொடுப்பார்கள். மூர்கள் முகம்மது சமயத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களுக்குக் கண்டியில் ஒரு கோயில் இருக்கிறது. முன்னைய அரசன் ஒருவன் வசதியுள்ளவர்கள் ஒவ்வொருவரும் ஒரு பணம் அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கூறி இருந்தான். இதனால் இந்த மூர்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் அதை வாங்கச் செல்கின்றனர். வீடு பூட்டி இருந்தால் அதை உடைத்துத் திறந்து, ஒரு பணமதிப்புள்ள பொருளை எடுத்துச் செல்ல அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அவர்கள் ஒவ்வொரு வசதியான வீட்டிலிருந்தும் ஒரு பணம் எடுக்கலாம், என்ற நம்பிக்கையோடு வருகின்றனர். மக்களின் ஈகைக் கடமையை பூர்த்தி செய்யும் பொருட்டுத் தாங்கள் வருவதாகக் கூறுகிறார்கள்.

இந்தமூர் கோயிலுக்கு, இவ்வாறு கொடுக்காத பிரதேசம் ஒன்றுண்டு. அப்பிரதேசம் டெலஸ்பங் ஆகும். ஒரு தடவை இந்த மூர்கள் அங்கு காசு கேட்கப் போன போது அப்பிரதேசத்தவர்கள் அவர்களை அடித்து விரட்டி விட்டனர். அப்பிரதேசத்தவர்களுக்கு இன்னொரு சலுகையுமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மறால, ஹரியோட் ஆகிய வரிகளையும் அரசனுக்குக் கொடுக்கத் தேவையில்லை. ஆனால் மற்றப் பிரதேசத்தவர்கள் கொடுக்கவேண்டும்.

இந்த மூர் யாத்திரிகர்களுக்கு அன்பளிப்பாக நிலங்களைக் கொடுக்க அதில் வீடுகட்டி தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மூர்கள் தங்கள் வளவுகளிற் சிறிய வழிபாட்டிடங்கள் அமைத்து பூக்களைத் தங்கள் கடவுளின் பிரதிமைகளுக்கு முன்வைத்து ஒவ்வொரு நாட் காலையும், மாலையும் பிரார்த்தனையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் தங்கள் கைகளிற் கோர்த்த மணிமாலைகளை வைத்துள்ளார்கள். இந்தப் பழக்கத்தை போர்த்துக்கீசரிடமிருந்து அவர்கள் கற்றுக்கொண்டிருக்க வேண்டும். அவர்கள் தங்கள் மார்க்கத்தை மதிக்கும் மனிதர்கள் மீது நேசம் பாராட்டுகின்றனர். அவர்கள் மற்றவர்களை விடக் கிறிஸ்தவர்களை அதிகம் மதிக்கின்றனர். கிறிஸ்தவர்கள் உண்மையானவர்கள், பொய் பேச மாட்டார்கள் என்று நினைக்கிறார்கள். இப்போது சமயத்தை பற்றிய எங்கள் பேச்சை நிறைவு செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06

அவர்களின் வீடுகள் பராமரிப்பு, உணவுகள் மற்றும் வரவேற்புகள்

ஏற்கெனவே சமயம் பற்றிச் சொல்லப்பட்டதால் இப்போது அவர்களின் சமயச் சார்பற்ற அம்சங்களைப் பார்ப்போம். முதலில் அவர்களின் வீட்டையும், அங்கே அவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதையும் உங்களுக்குக் காட்டுவோம்.

அவர்களின் வீடுகள் சிறியவை; பணிவானவை; கிடுகு வேய்ந்த குடிசைகள். அவைகள் தடியாலும் களிமண்ணாலுமாக்கப்பட்டவை. சுவர்கள் வாளிப்பாகப் பூசப்பட்டிருக்கும். வீடுகளை ஒரு மாடிக்கு மேல் கட்டவோ அவைகளுக்கு வெள்ளையடிக்கவோ அனுமதியில்லை. விரும்பினால் வெள்ளை நிறக்களியை உபயோகிக்கலாம். பிரபுக்களைத் தவிர, அவர்கள் வீடு கட்டத் தச்சர்களையோ வேறு ஆட்களையோ வேலைக்கமர்த்துவதில்லை. ஒவ்வொருவரும் தமக்குரிய வாழ்விடத்தை அமைத்துக்கொள்வர். வீடுகட்ட ஆணிகளைப் பயன்படுத்துவதில்லை. அவைகளுக்குப் பதிலாகப் பிரம்புகளும் மற்றக்கொடிகளும் உபயோகிக்கப்படும். அவைகள் மரம் எடுக்கும் இடங்களில் அபரிமிதமாகக் காணப்படும். இந்த நாடு வெப்பமான கால நிலை கொண்டதாகையாற் களியெடுப்பதற்குச் சிரமமில்லை. அவர்களின் வீடு ஒரு அறைக்கு மேல் இருக்காது. கொஞ்சம் வசதியுள்ளவர்களாக இருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு அறைகள் இருக்கும். அதற்கு மேல் விசாலமுள்ளதாக இருக்க அரசன் அனுமதிக்கமாட்டான்.

அவர்கள் வீடுகள் வசதியானவைகளோ, வேலைப்பாடு கொண்டவைகளோ இல்லை. புகை போக்கிகள் அவற்றில் இல்லை. அடுப்புகள் வீட்டின் ஒரு மூலையில் அமைக்கப்பட்டு உள்ளதால், கூரைகள் எப்பொழுதும் கரிபிடித்துக் காட்சியளிக்கும்.

பெரிய மனிதர்கள் அழகிய இடவசதியுள்ள வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். அவைகள் பொதுவாக இரு வீடுகளை ஒன்றை ஒன்று பார்த்து இருப்பது போல் இணைத்துக் கட்டியிருப்பார்கள். இணைக்கப்பட்ட இடத்தில் ஒவ்வொரு பக்கமும் ஒரு சுவர் இருக்கும். அப்பகுதி ஒரு கூடம் போன்று இருக்கும். அப்பகுதியில் உள்ள சுவரைசுற்றி அமரக்கூடிய திட்டு, களியினால் ஆக்கப்பட்டிருக்கும். அவைகளை மாட்டுசாணத்தைக் கலந்து மென்மையாகவும் தூய்மையாகவும் மெழுகிவைத்திருப்பர். அங்கு அவர்களின் அடிமைகளும் சேவகர்களும் தங்கிக் கொள்வர். மற்ற வீடுகளில் குடும்பப் பெண்களும் பிள்ளைகளும் வாழ்வர்.

அவர்களின் தட்டுமுட்டுச் சாமான்கள் மிகவும் குறைவானவை. அவர்களின் வீடுகளில் ராக்கைகள் இல்லை. ஆனால் பிரம்பினாற் செய்யப்பட்ட உறியில் குடங்கள் தொங்கும். சாப்பிடுவதற்கு ஒன்று அல்லது பித்தளை தட்டுகள், சாயும் பகுதி இல்லாத ஒன்று அல்லது இரண்டு குற்றிகள் சாயும் பகுதியுடன் கூடிய குற்றியில் மன்னன் ஒருவனே உட்காரத் தகுதி பெற்றவன். தானியத்தை போட்டு வைக்க சில கூடைகள், படுப்பதற்கு சில பாய்கள், நெல்லைக் குற்றி உமி நீக்க சில கருங்காலி உலக்கைகள், அரிசியைத் தீட்டிக்கொள்ளக் கூடிய மரஉரல்.தேங்காய், விறகு, மஞ்சள், போன்றவைற்றை அரைக்க அம்மி, இவைகளைத் தவிர கோடரி,ஈட்டிகள்,உளி போன்ற கருவிகள் இருக்கும். இப்படியான பொருட்கள் தான் அவர்கள் வீடுகளில் இருக்கும். அவர்களிடம் மேசைகள் கிடையாது. தரையில் உட்கார்ந்து சாப்பிடுவர்.

நாங்கள் இப்போது அவர்கள் உணவருந்தும் முறைகளைப் பார்ப்போம். அவர்களின் சாதாரண உணவு மிக எளிமையானது. அவர்களிடம் அரிசியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப்பும் இருந்தால் வேறொன்றும் தேவையில்லை. சில பச்சை இலைகளை அரிந்து அதனுடன் எலுமிச்சம் புளி, மிளகு, உப்பு, என்வற்றைக் கலந்து ஒரு மனநிறைவான உணவை ஆக்கிக்கொள்வர். இங்கே மாட்டிறைச்சி சாப்பிடக்கூடாது. அது மிகவும் அருவருக்கத்தக்க உணவு. இறைச்சியும் மீனும் அரிதானது. அவைகளை மிகக்குறைந்த அளவில்தான் பயன்படுத்துவர். அவைகளை விற்றுக் காசாக்கத்தான் விரும்புவர். அதனை வெளியார்தான் வாங்கிக் கொள்வர். அவர்கள்தான் இந்த நாட்டின் சிறந்த உணவுகளை உண்கின்றனர் எனலாம். உணவுகளைத் தவிர்த்துக் கொள்வதோ அல்லது அதில் கருமியாக இருப்பதோ இங்கு வெட்கப்படக்கூடியதல்ல. ஓரளவு சிறந்த பண்பு எனக் கருதப்படுகிறது. பசியைத் தாங்கிக் கொள்வது உயர்ந்த பண்பு என்றும் படைவீரர்களுக்கு இது மிக அவசியமானதென்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

பெரிய மனிதர்கள் ஒரு நேரத்தில் ஐந்து அல்லது ஆறுவகை உணவுகளை எடுத்துக் கொள்வார்கள். அவ்வுணவு வகைகளில் ஒன்று அல்லது இரண்டு உணவுவகைகளுக்கு மேல் இறைச்சி உணவுகளாயிராது. போர்த்துக்கீசர் வருகைக்குப் பின்னர் இவ்வகை உணவுகளிற் சற்று ஆர்வம் கூடியிருக்கிறதெனலாம். அவர்கள் தம் வயிறை நிரப்பிக்கொள்ளப் பயன்படும் முக்கிய பதார்த்தம் சோறாகும். மற்றப்பொருட்கள் அதற்கு சுவையூட்டவே அவர்களுக்குத் தேவைப்படுகிறது.

அவர்களை மந்தை மற்றும் கோழி வளர்ப்புக்கு ஊக்கப்படுத்தினால் அவைகளிலிருந்து கூடிய ஈட்டத்தை பெறலாம். அவர்களின் கோழிகளை நரிகளும், மாடுகளைப் புலிகளும் அழிக்கின்றன. அரசனின் பெருவிருப்பமும் அதுவாகும். அவர்களின் ஏழ்மை நிலையைக் கூட்டுவது அவன் நோக்கமாகும். உத்தியோகத்தர்கள் அரசனின் உபயோகத்துக்கென்று எதையும் கொடுக்காமல் அல்லது சிறிது கொடுத்துவிட்டு எடுத்துச்செல்வார்கள். ஆடுகளை வெளி நாட்டினர் தவிர வேறு யாரும் வைத்துக்கொள்வதில்லை.

உணவுகளைத் தயாரிப்பதில் அவர்கள் தேர்ச்சியுடையவர்கள் இல்லை. தங்களுக்குத் தெரிந்த பாகமுறையொன்றைத்தான் திரும்பத் திரும்பச் செய்வார்கள். புளிப்புச் சுவை அதிகம் கொண்டதாக அவர்கள் உணவுகள் இருக்கும். அவர்கள் பாய்மேல் அமர்ந்து உண்பர். மதிப்புக்குரியவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரம் ஒரு குற்றியில் அமர்ந்து, மறு குற்றியில் இருக்கும் உணவை எடுத்து உண்பர்.

அவர்களின் பொதுவான பானம் நீராகும். அவர்கள் சாராயத்தைச் சாப்பிடுவதற்கு முன் எடுப்பார்கள். இதனால் அது அவர்கள் உடம்பிற் கடுமையாக வேலைசெய்யும். அவர்கள் நீர் அருந்தும் போது முட்டியில் வாயை வைத்துக் குடிக்கமாட்டார்கள். அதைத் தூரத்தில் பிடித்துக்கொண்டு வாய்க்குள் ஊற்றிக்குடிப்பர். அவர்கள் பீங்கான் கோப்பைகளில் அல்லது பித்தளைத் தட்டுக்களில் இல்லாவிட்டால் இலைகளிற் சாப்பிடுவர். சோற்றுடன் கறிகளைச் சேர்த்து உண்பர்.அவைகள் பிரத்தியேகமாக வேறுபானைகளிலே தயாரிக்கப்பட்டிருக்கும். அவர்களின் மனைவிமார் அவைகளை எடுத்துப் பரிமாறுவர். கணவன்மார் சாப்பிட்டு முடிந்த பின்னர்தான் மீதியாக உள்ளவற்றை மனைவிமார் உண்பர். அவர்கள் சாப்பிடும்போது கதைப்பதோ மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதோ இல்லை.

அவர்கள் சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் தமது கையையும் வாயையும் கழுவுவார்கள். மற்றவர்கள் தங்கள் கைகளுக்கு மேல் நீர் ஊற்றுவதை மரியாதைக் குறைவாக எண்ணுவர். நீர் முட்டியை பிடித்துக் கொள்ள முடியாதவர்களுக்குத்தான் நீர் ஊற்றப்படும். அவர்கள் நீர் முட்டியை ஒருகையால் சரித்துப் பிடித்துக் கொள்ள வழிந்தோடும் நீரால் மறுகையைக் கழுவுவர். அவர்கள் தலை, மற்றும் உடலை அடிக்கடி குளித்துச் சுத்தமாக வைத்திருப்பர். இருக்கும் குற்றியையும் அடிக்கடி கழுவுவர்.

நான் அவர்களின் பாகமுறைகளைப்பற்றிச் சிறிது சொல்ல வேண்டும். பானைக்குள் அரிசிபோடும் தறுவாயில் ஆட்கள் கதைத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தால், அவர்களைக் கதைக்காமல் இருக்குமாறு வீட்டுக்காரி கூறுவாள். அவள் பானைக்குள் அரிசியைப் போட்டபின் தான் அவர்கள் மீண்டும் கதைக்கத் தொடங்குவார்கள். ஆட்கள் கதைக்கும் போது பானைக்குள் அரிசியைப் போட்டால் அரிசி நன்கு ஊதி அவியாது என்பது அவர்களது நம்பிக்கை.

எலுமிச்சை நிறையப் பழுக்கும் காலங்களில் அவற்றை எடுத்து மண்பானையிற் சாறைப் பிழிந்து, அடுப்பில் அதிக நேரம் காய்ச்சுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது இறுகிய குழம்பாக மாறித் தார் போன்று வரும். அதனை மிக நீண்ட காலம் பாவிக்கலாம். சிறிய அளவைக் கிள்ளி எடுத்துப் போட்டால் கறிக்கு காணும். இதனை அன்னகோ என்றழைப்பர்.

அவர்களிடையே பலவகை இனிப்புப் பண்டங்கள் உண்டு. அதில் ஒன்று கெவும் ஆகும். இது வெல்லத்துடன் அரிசிமாவைக் கலந்து செய்யப்பட்ட ஒரு பலகாரமாகும். இலை மேல் சிறிய கட்டி போன்று செய்து பெருவிரலால் அதை கொதிக்கும் எண்ணெய்ச் சட்டிக்குள் தட்டிவிடுவர். அது எண்ணெயில் பொரிந்ததற்குப் பின்னர் எடுப்பர். டச்சுக்காரர் முதன்முதலிற் கொழும்புக்கு வந்தவுடன் இக்கவுண்களைச் செய்து அவர்களுக்கு அனுப்புமாறு தனது ஆட்களுக்கு அரசன் கட்டளையிட்டான். டச்சுக்காரர் அப்பண்டம் மீது நாட்டம் கொள்ளவில்லை என்றும், இது மரத்தில் காய்க்கிறதா? அல்லது மனிதனால் செய்யப்பட்டதா? என்றும் அவர்கள் கேட்கின்றனர் என்று அரசனிடம் கூறினர்.

ஒக்குவா என்று அழைக்கப்படும் இன்னொரு இனிப்புப் பண்டமொன்று வறுக்கப்பட்ட அரிசி,வெல்லம்,மிளகு,ஏலக்காய், சிறிதளவு கறுவா போன்றவைகளால் ஆக்கப்படும் பண்டம் இது. அதை உருண்டையாகச் செய்வர். அது இறுகிக் கட்டியாக இருக்கும். பிரயாணம் போகும் போது அதைக் கொண்டு போவர். தமக்குப் பின்னேரங்களில் பசிவந்தால் எடுத்துப் உண்பர்.

அல்லோ வேய்ஸ் முன்னைய பண்டம் செய்யும் பொருட்களை கொண்டுதான் செய்யப்படுவதெனினும் தட்டையாக சற்று இளகிய வண்ணம் இருக்கும். தளர்வுற்ற நேரங்களிலும் தாகமேற்படும் போதும் உண்ணுவதற்கு ஏற்றது என்று சொல்கிறார்கள். மாலை நேரங்களில் எடுத்து உண்பர். பயணம் செல்லும் போது கூட எடுத்துச்செல்வர்.

யக்பெட்டிஸ் என்னும் தின்பண்டம் அரிமா, தேங்காய்த்துருவல், வெல்லம், ஆகியவற்றால் ஆக்கப்பட்டது. சிறுசிறு துணுக்குகளாக அவற்றைச் செய்து பானையில் வடிகட்டி அவிப்பர். பானையிலிருந்து வெளிவரும் ஆவியால் அது அவியும். சாப்பிடும்போது களி போன்றிருக்கும். வெள்ளைப் பாணுடன் வாதுமைக் கொட்டையும் சீனியும் கலந்து சாப்பிடுவது போல அது இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்டு என்னும் உணவுப் பண்டத்தை இவ்வாறு செய்வர்; குரக்கன் மாவை ஒரு சட்டிக்குள் எடுத்து அதனுட் சிறிது நீரை விட்டு அதனைக் குழைப்பர். அப்போது அது வெடி மருந்து போற் குறுணியாக வரும். பின்னர் ஒரு பானையில் வடி கட்டி அதன் மேல் இந்தக் குறுணியாக்கப்பட்ட மாவை போட்டு அடுப்பில் வைத்து அவிப்பர். பானையிலிருந்து எழும் நீராவி ஊடுருவிப்போவதால் மா அவியும். இது தான் பிட்டு. இதை அரிசிப் பதார்த்தம் போன்று அவிப்பர்.

பெண்களின் வீட்டு வேலைகளில் ஒன்று நெல்லை இடித்து உமி நீக்கி அரிசியாக்குவதாகும். முதலிற் கூறிய கருங்காலி உலக்கையை இதற்குப் பாவிப்பர். அவர்கள் கட்டாந்தரையில் நெல்லைப் போட்டு மாறிமாறிப் பிடித்து இருகைகளாலும் குற்றுவர். அதன் போது அவர்களின் கால்கள் சிதறிப் போகும் நெல்லை கால்கள் ஒன்று திரட்டிக்கொண்டிருக்கும். அதன் பிறகு அதை எடுத்து மர உரலிற் போட்டுக் குற்றி நன்கு பதர் நீக்குவர். இந்த வேலை மிகவும் கடினமானதெனினும் பெண்களுக்குரியதென ஒதுக்கப்பட்டுள்ளது. இதைவிட விறகு எடுத்து வருதலும் தண்ணீர் எடுப்பதும் அவர்களின் பணியாகும். விறகுக்கட்டுகளை தலையிலும், தண்ணீர்க்குடங்களை இடுப்பிலும் வைத்துக்கொண்டு வருவர். பெண்கள் மரக்கறி, பூசணிக்காய் போன்றவைகளை அரிய ஒருவகை கத்தி வைத்திருப்பர். ஒரு மரச்சட்டத்தில் அக்கத்தி பொருத்தப்பட்டிருக்கும். அந்தச் சட்டத்தில் அமர்ந்து அவற்றை வெட்டுவர்.

ஒருவர் மற்றவர் வீட்டுக்கு வந்தால், புலத் என்று அழைக்கப்படும் பச்சை இலை, பாக்கு, சுண்ணாம்பு மற்றும் புகையிலை ஆகியவற்றைக் கொடுத்து உபசரிப்பர். அதன் பிறகு வீட்டுச் சொந்தக்காரன் வந்தவரிடம் என்ன காரியம் என்று விசாரிப்பான். வந்தவரிடம் உடனடியாக வந்த காரியத்தை வினவினால் வீட்டுக்காரன் தன்னை அவமதிக்கிறான் என்று வந்தவர் முடிவு கட்டிவிடுவார். அவர் அந்த வீட்டுக்கு வருவதை இனிமேல் தவிர்க்கலாம்.

மிக நெருங்கிய உறவினர் வந்தால் அவர்கள் எல்லாம் வெளியார் போல, ஏதோ விவகாரங்கள் பேசுவதைப்போல குந்தியிருப்பார்கள். அவர்கள் ஓர் இரவுக்கு மேல் தங்கி இருந்தால் இங்குள்ள வழக்கப்படி வீட்டுக்குரியவரின் எல்லா வேலைகளிலும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் மற்றவர் வீட்டுக்குப் போவதென்றால் வெறுமனே கையை ஆட்டிக் கொண்டு செல்லார். அவர் தன்னுடன் உணவுப்பொருட்களையும் இனிப்புப் பண்டங்களையும் எடுத்துச் செல்வார். அப்பண்டங்களைக் கொண்டு வந்தவர் உண்ணமாட்டார். போகும் வீட்டிற் கலியாணம் போன்ற வைபவங்கள் இல்லாது விட்டாலும் வீட்டுக்காரன் தன் தகுதிக்கேற்ப விருந்தளித்து அவரைக் கௌரவிப்பான்.

ஒருவர் மற்றவரைச் சந்தித்துக் கொண்டால் உள்ளங்கைகளை ஒன்று சேர்த்து உயர்த்தி, உடலை வளைத்து வணங்குவதுதான் ஒருவர் மற்றவருக்குச் செய்யும் மரியாதையாகும். உயர்ந்தவர் தாழ்ந்தவரின் கையைப் பிடித்து அவரை அங்கீகரிப்பார். மிகவும் தாழ்ந்தவராயின் தலையசைத்து அவரின் வருகையை அறிந்து கொண்டேன் என்பதை உணர்த்துவார். பெண்கள் உள்ளங்கைகளை இணைத்துத் தமது தலையின் பக்க வாட்டில் வைத்து எதிரில் உள்ளவர்களுக்கு மதிப்பளிப்பார். ஒருவர் மற்றவரை முதல் தடவையாகச் சந்தித்தால் ஆ என்று கூறி முக்கியப்படுத்துவர். நீங்கள் எப்படி உள்ளீர்கள் என்று கேட்பார். அதற்கு ஹொந்தாய் (நல்லது) என்று பதில் வரும்.

பிரபுக்கள் வெளியிற் போகும் போது நடுவில் அணியும் வெள்ளைச் சட்டைக்கு மேலாக மார்பை மாத்திரம் இறுகிப் பிடிக்கும் சட்டை ஒன்றை அணிந்து கொள்வார். இது வெள்ளை அல்லது நீல நிறத்தில் இருக்கும். அவர்களது இடுப்புத்துணியை ஒரு பட்டி இறுகப்பிடித்திருக்கும். வேலைப்பாடமைந்த கத்தி ஒன்று வெள்ளி உறையிலிடப்பட்டு அதிற் செருகப்பட்டிருக்கும். இதைவிட உறைவாள் ஒன்று பித்தளையாலும் வெள்ளியாலும் செய்யப்பட்டது இடுப்பிலே தொங்கிக்கொண்டிருக்கும். அதனுள் ஒரு வாள் இருப்பது அதன் பிடியினாலே தெரியும். ஒரு பிரம்பு அல்லது ஒரு விசிறி கையில் இருக்கும். அவருக்குப் பின்னாலே தொப்பி அணியாத பையன் ஒருவன் தனது தலைமயிர் தோளில் அடிபட எப்போதும் தயாராகச் சிறிய பையை பிடித்துக் கொண்டிருப்பான். அந்தப்பையில் வெற்றிலை, பாக்கு இருக்கும். அவர் தொடர்ச்சியாக மென்று கொண்டிருப்பார். அவரின் கையிற் கடிகாரம் வைத்திருப்பது போலச் சுண்ணாம்பு நிரப்பப்பட்ட வெள்ளையினாலான குப்பி ஒன்றிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பையன்கள் தங்கள் தலைமயிரை பின்னாற் சீவி விட்டிருப்பர். அவர்கள் ஏதும் வேலை செய்ய முனைந்தால் அல்லது பிரயாணம் மேற்கொண்டால் அம்மயிர் அவர்களுக்குப் பெரும் தொல்லையாக இருக்கும். அப்போது அதைக் கொண்டையாக முடிந்து விடுவர். பொதுவாக அவர்கள் தங்கள் காதுகளில் பெரிய துளைகளையிட்டு அதிற் பாரம் கூடிய காதணிகளை அணிந்திருப்பர். இவைகளால் அவர்கள் மலபார் மாதிரி த்தோன்றுவர். ஆனால் இந்தப்பாணியை அரசன் விரும்பவில்லை. இதனால் அது கைவிடப்பட்டுவிட்டது. ஆண்கள் நகைகளாகப் பித்தளை, செம்பு, வெள்ளியினாலான மோதிரங்களைத் தங்கள் விரலில் அணிந்திருப்பர். ஒருவரும் பட்டுத்துணி அணிவதில்லை.

பெண்களின் உடைகள், ஆண்களின் உடைகளை விடச் சிறப்பாக இருக்கும். தங்களை விடத் தங்கள் மனைவிமார் உடுத்தி இருப்பதை ஆண்கள் விரும்புவர். வசதியானவர்கள் வேலைக்காரர்கள் வைத்திருக்கிறோம் என்று தம்பட்டம் அடிப்பார்கள். தங்களுக்கு முன்னும் பின்னும் ஆயுதம் தாங்கிய காவலர்கள் இருப்பதையும் பெருமையாகக் கருதுவர்.

வீடுகளில் பெண்கள் தாங்கள் அணிந்திருக்கும் உடைகளைப் பற்றிக் கவனம் எடுக்கமாட்டார்கள். தங்கள் வேலைக்கு இடைஞ்சல் விளைவிக்காத முறையில் உடையணிந்திருப்பர். ஆனால் வெளியிற் போகும் போது மிகச் சிறப்பாக உடையணிந்து போவர். அவர்கள் கைவரையும் மூடிய கட்டை மேலங்கியை அணிந்திருப்பர். அவைகளில் நீல, சிகப்பு நிற நூல்களால் பூக்களும் கொத்துக்களும் பின்னப்பட்டிருக்கும் அவர்கள் புஜத்தில் காப்பு அணிந்திருப்பர். அவர்கள் கைவிரல், கால்விரல்களில் நிறைய வெள்ளி மோதிரங்கள் இருக்கும். அவர்கள் கழுத்தில் வெள்ளி அல்லது மணிகளாலான நெக்லஸ் மார்பு வரையும் தொங்கிக் கொண்டிருக்கும். சில வேளைகளில் அவற்றிலே தங்க முலாமிடப்பட்டிருக்கும்.

அவர்கள் இளமையாக இருக்கும் போது காதுகளில் ஓட்டை போட்டுத் தென்னை ஓலையை அதனுட் சுருட்டி வைத்திருப்பார்கள். இதனால் ஓட்டை விரிவு பட்டு அவர்களின் முகத்தின் இரு பக்கமும் தொங்கும். இது ஒரு சிறந்த அலங்காரம் என்று இங்குள்ளவர்கள் கூறுவர். இது என்னுடைய நோக்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கப்பழுதாகக் காணப்படுகின்றது. பெண்களில் இது மிகவும் தூக்கலாகத் தெரியும்.

ஆனால் அவர்களின் மற்ற அலங்காரங்களும் ஆடையணிகளும் அழகானவை. அவர்கள் தலைமயிருக்கு எண்ணெய் இட்டு பின்னோக்கி வாரி இருப்பர். அவர்களது தலைமயிர் இடுப்பு வரையும் நீளாது. அவர்கள் மத்தியில் பெரிய கொண்டையைக் கொண்டிருப்பது பெரும் அலங்காரமாக கருதப்படுகின்றது. அவர்களது கொண்டை பின்புற அரைவாசியில் தொங்கிக் கொண்டிருக்கும். தலைமயிர் கண்டபாட்டில் வழிந்து விடாமலிருக்க, வேண்டிய இடத்தில் ஊசி செருகப்பட்டிருக்கும். அவர்களது கை வெறுமையாக இருக்கும். அல்லது கைகளில் சிறுபட்டுத் துணியை வைத்திருப்பர். சிலவேளைகளில் தலையில் அல்லது தோள்களிற் போட்டிருப்பர். அவர்களது இடுப்பில் கம்பியாலும் வெள்ளியினாலும் செய்யப்பட்ட ஒட்டியாணம் தொங்கிக் கொண்டிருக்கும். அவர்கள் வெற்றிலை பாக்கு போட்டபடி நடப்பர். ஆண்களும் சரி, பெண்களும் சரி சப்பாத்துகளோ காலுறைகளோ அணிய மாட்டார்கள். அரசன் மாத்திரம்தான் அவற்றை அணிந்திருப்பான்.

இங்குள்ள எல்லாத்தரத்து மக்களிடையேயும் உள்ள பொதுவான வழக்கம் வெளியிற் போக ஆயத்தமாகும்போது நகைகளையும், உடுப்புகளையும் இரவல் வாங்குவதாகும். அதற்கு வெட்கமோ கூச்சமோ படமாட்டார்கள். இதை இன்னாரிடம் வாங்கினேன், இன்னார் இதைக் கொடுத்தார் என்று தம்முடன் வரும் நண்பர்களிடமும் புதியவர்களிடமும் சொல்லிக்கொண்டு நடப்பார்கள். அவர்களது ஆடையணிகலன்களை அவர்களால் வாங்க முடியாது, ஆதலால் இவ்வாறு இரவல் வாங்குவது வழமையாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07

அவர்களின் தங்குமிடம், படுக்கை, பரத்தமை, திருமணம் மற்றும் பிள்ளைகள்

வெளிநாட்டிற் சிறந்த பெண்களுடன் மகிழ்ந்திருந்து எங்கள் நாட்டுக்கு இப்போது திரும்பியுள்ளோம். நான் இப்போது அவர்களின் படுக்கையறையையும் அவர்கள் எப்படித் தூங்குகிறார்கள் என்பதையும் உங்களுக்குக் காட்டப்போகின்றேன். இதில் அவர்கள் பெரிய அக்கறை எடுத்துக்கொள்வதில்லை. அவர்களது வீடுகள் அநேகமாக ஒரே அறையை கொண்டவைகளாதலால் ஆண்கள் ஒரு மூலையிலும், பெண்கள் வேறு மூலையிலும் தூங்குவார்கள்.

அவர்களிடம் பிரம்பினாற் பின்னப்பட்ட கட்டில்கள் உண்டு. அவற்றின் மேல் திரைச்சீலை இல்லை. அதைக் கட்டில்களில் இணைப்பதற்கு அரசன் அனுமதிப்பதில்லை. வீட்டு உரிமையாளர் படுப்பதற்கு ஒரு கட்டிலை மாத்திரம் வைத்துக்கொள்ளலாம் என்பது அரசனின் ஆணை. கட்டிலில் இரண்டு பாய்கள் போடப்பட்டு ஒரு தலையணையும் வைக்கப்பட்டிருக்கும். பெண்களும், சிறுவர்களும் தரையில் அடுப்புக்குப் பக்கத்திற் படுப்பார்கள். வீட்டுக்காரி மாத்திரம் ஒரு மரத்துண்டை தலையணையாகப் பாய்க்கு கீழ் வைத்திருப்பாள். பிள்ளைகளுக்குத் தலையணை கிடையாது. பகலில் கட்டியிருக்கும் துணியைத் தவிர வேறு போர்வைகளையும் அவர்கள் உபயோகிப்பதில்லை. ஆனால் இரவு முழுவதும் அவர்கள் காலடியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டப்பட்ட தீ இருக்கும். இதற்குரிய விறகைத் தேடி எடுத்து வருவது பெண்களின் வேலை. இக்காரியங்களில் ஆண்கள் ஈடுபடுவது அவர்களின் மதிப்பைக் குறைப்பதாகக் கருதப்படுகின்றது.

உடைகள் இன்றித் திறந்த மேனியுடன் சிறிய குழந்தைகள் தமது தாயின் உடையின் ஒரு பக்கத்திற் சுருண்டு கிடப்பார்கள். வீட்டில் உள்ளவர்கள் குளிரை உணர்ந்தால் வாயினால் ஊதி நெருப்பைத் தூண்டிவிடுவார்கள். அவர்கள் வீட்டில் துருத்தியோ புகை போக்கியோ இல்லாததால் வெப்பமாக இருக்கும்.

அவர்கள் நித்திரை கொள்வது குறைவு. இரவிற் பல தடவை எழும்பி வெற்றிலையையும், புகையிலையையும் மெல்லுவார்கள். நித்திரை வரும்வரை படுக்கையிலிருந்து பாடுவார்கள்.

படுக்கைக்குப் போகும் முதல் அவர்கள் கடவுளை வணங்குவதோ பிள்ளைகளுக்கு நல்லறங்களைப் போதிப்பதோ அருமையாகும். சில ஒவ்டியோ என்று சொல்வர். அதன் அர்த்தம் கடவுளே எனக்கு உதவு, அல்லது என்னைக் காப்பாற்று என்பதாகும். அவர்கள் சிறுவர்களுக்கு போதிப்பதற்கு பதிலாக அவர்களைப் பாடுமாறு தூண்டுவர்.

அவர்களின் வீடுகள் ஒரு அறையைக் கொண்டிருப்பதால், பக்கத்தில் இடவசதி அல்லது ஆக்கள் குறைவாக உள்ள வீடுகளுக்குச் சிறுவர்கள் செல்வார்கள். அப்படிச் செல்வது அவர்களுக்கு விருப்பம். ஏனென்றால் அங்கே கூட்டாளிகளைச் சந்திக்கலாம். அல்லது பெற்றோரின் நச்சரிப்பிலிருந்து தப்பிக்கலாம். நல்ல பண்புள்ள இளைஞர்கள் வீட்டில் உள்ள இளம் பெண்களுடன் அறிமுகமாவர். அப்பெண்கள் தமது வேலைகளை நிறைவேற்ற இவ்விளைஞர்களின் உதவியை நாடினால் அவர்களும் விருப்புடன் உதவுவர். அவர்களுக்கு அது மரியாதை குறைவான வேலையாயினும் செய்து கொடுத்துப் பெருமையடிப்பர்.

பரத்தமைக்கு இளைஞர்களே காரணமாகும். இங்கே உண்மையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பரத்தையர் விடுதிகள் கிடையாது. நகரங்களிற் சிலர் இத்தொழிலில் ஈடுபடுகின்றனர் என்பதைக் கேள்வியுற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன், அவர்களைப் பிடித்துச் சவுக்கடி கொடுத்துக் காதுகளை வெட்டியும் மொட்டை அடித்தும் கடும் தண்டனை கொடுத்தான். இதனாலும் குழந்தை உருவாகும் என்ற பயத்தாலும் அநேகர் இதில் ஈடுபட விரும்புவதில்லை.

விபசாரிகள் என்ற பொருள்படும் வேசே என்ற சொல்லை, பெண்கள் வெறுத்தாலும் கள்ள உறவில் ஈடுபடுகிறவர்களுக்குக் குறைவில்லை. கீழ்சாதி மனிதனுடன் தொடர்பு கொண்டால் தவிர இதற்காகப் பெண்கள் இகழப்படமாட்டார்கள். தன்னோடு தொடர்பு கொள்ளும் ஆணுக்குப் பெண் கடமைப்பட்டவளாக இருப்பாள். ஆண்களும் அவ்வாறே. இந்த விடயத்தை கணவனுக்குத் தெரியாமற் கையாளுவதில் பெண்கள் சமர்த்தர்கள். அதைத்தெரிந்தாலும் அவனால் ஒன்றும் செய்ய முடியாது. அவளையும் அவனையும் கையும் மெய்யுமாகப் பிடித்தால் தவிர அவள் கணவனால் அதை நிரூபிப்பது கடினம். கள்ள உறவு இங்கு அதிகம். இங்கு அதைப்பற்றி அக்கறை கொள்வதுமில்லை.

இங்கே ஒரு சட்டம் உள்ளது. தன் மனைவியோடு படுக்கையில் இன்னொருவன் இருப்பதைக் கண்டால் அவனையும் அவளையும் கணவன் கொல்லலாம். ஒரு பெண் வேறொருவனோடு இருக்கும் போது தனது கணவன் வாசல் படிக்கு வந்தால், அடுப்புச் சாம்பலை ஒரு பானையில் எடுத்து, கதவைத் திறந்து அச்சாம்பலை கணவனின் கண்ணில் படுமாறு வீசிவிட்டு ஓடிப்போய் விடுவதுமுண்டு. கள்ளக் காதலனிடம் கொண்ட மோக மிகுதியாற் கணவனிடம் கைக்குழந்தையை ஒப்படைத்துவிட்டு ஏதோ அலுவலாக வெளியே போய் வருகிறேன் என்று பொய் சொல்லித் திட்டமிட்ட இடத்திற்கு வந்து காதலனைச் சந்திப்பதுமுண்டு. தனக்கு அறிமுகமான பெண்ணின் வீட்டுக்குப் பின்னால் மறைந்திருந்து தனது வருகையைத் தடியை முறித்து அல்லது வெற்றிலைச் சாறைத் துப்பி காதலன் சமிக்ஞை காட்டுவான். இந்தச் சமிக்ஞையை உணர்ந்தவுடன் பெண் தாமதியாது வருவாள்.

காதலர் மேலுள்ள அன்பைக் காட்டப் பல்வேறு காரியங்களைப் பெண்கள் செய்வர். கணவன் வீட்டைச் சூழ்ந்து கொண்டால், காதலன் தப்பிக்க ஒரு ஓட்டையை செய்துவைத்திருப்பாள். அதனால் ஏற்படும் பின் விளைவுகளையும் பொறுத்துக் கொள்வாள். தனது காதலனுடன் இன்புற்றிருந்தது போதாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கண்டால் அல்லது கணவனுடன் கோபித்துக் கொண்டால் தங்களுக்கு பழக்கமான வீடுகளுக்குப் போய் நீண்ட நேரம் கூடிக்குலாவுவதுமுண்டு.

சில சந்தர்ப்பங்களில், சில மனிதர்கள், தங்கள் மனைவிமாரையும் மகள் மாரையும் மற்ற மனிதர்களின் இன்பத்துக்காகக் கொடுத்து விடுவது முண்டு. நெருங்கிய பெரிய மனிதர்கள் தங்கள் வீடுகளிலே தங்க நேர்ந்தால் இவ்வேற்பாடு நடைபெறுவதுண்டு. இதற்காகத் தங்கள் மனைவிமாரையும் மகள்மாரையும் விபச்சாரிகள் என்று யாரும் கருதுவதில்லை. அவர்கள் சேவை மனப்பான்மையை மதிக்கின்றனர்.

தனது மனைவி கலியாணம் முடித்தவளா இல்லையா என்பதையிட்டு யாரும் அக்கறை கொள்வதில்லை. தனது மகள் கன்னிப்பெண்ணாக இருக்கும் போது மணமுடிக்க வருபவருக்குச் சிறிய வெகுமதியை தாய் அளித்தலுமுண்டு. ஒரு உயர்ந்த சாதிப்பெண் தாழ்ந்த சாதி ஆணை விரும்பினால் அது அருவருப்புடன் பார்க்கப்படுகின்றது. ஆயினும் இவ்வாறு நடை பெறுவது அருமை.

ரிபால்ரி என்னும் திருமண நடைமுறையொன்றுண்டு. இந்தத் திருமணத்திற்குச் சட்ட அந்தஸ்த்து எதுவுமில்லை. சொல்லப்போனால் இது படுக்கையைப் பகிர்ந்து கொள்ளும் ஏற்பாடாகும். ஆகையால் எந்தச் சடங்குகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. சோடிப்பொருத்தம் பார்க்கப்பட்ட பின் பெண்ணுக்கு ஆடையணிகலன்களை மணமகன் அனுப்புவான். அது ஆறு அல்லது ஏழு யார் துணியையும் சிவப்பு மற்றும் நீல நிறம் கொண்ட மேல் சட்டையையும் கொண்டிருக்கும். மணமகன் அதை வாங்க முடியாத அளவு ஏழையாக இருந்தால் அதை வாங்கவும் தேவையில்லை. இரவல் வாங்கிக் கொள்ளலாம். உறவினர்களும் நண்பர்களும் மணமகனை அழைத்துச் சென்று மணமகளுடன் இரவைக் கழிக்க விடுவர். வேறொரு குறித்த நாளில் மணமகளை அழைத்துச் செல்லத் தனது சுற்றத்தார் சகிதமாக மணமகன் வருவான். இரண்டு வேளைக்குப் போதுமான உணவுப்பொருட்களையும் தின்பண்டங்களையும் தன்னுடன் கொண்டு வருவான். அது அநேகமாக பின்னேரமாக இருக்கும். அன்றிரவு மணமகனும் மணமகளும் இரவுச் சாப்பாட்டை ஒரு கோப்பையில் வைத்து உண்பர். அவர்கள் ஒரே அந்தஸ்த்தையும் தரத்தையும் கொண்டவர்கள். என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது வெளிப்படுத்தும். பின்னர் சிறிது நேரம் தமது பெருவிரல்களை தொட்டுக் கொண்டிருப்பர். அன்றிரவு இருவரும் ஒன்றாகத் தூங்குவர்.

அடுத்தநாட் காலை, உணவுக்குப் பின் மணமகளை முன்னுக்கு நடக்க விட்டு அவளை, பின்தொடர்ந்து நண்பர்கள் சகிதம் மணமகன் தனது வீட்டுக்கு வருவான். பெண்ணை முன்விட்டுக் கணவன் பின் தொடர்ந்து போதல் இந்த நாட்டின் பொதுவான வழக்கமாகும். முன்பு ஒரு காலத்திலே, கணவன் முன் போக, பின்னால் வந்த மனைவி களவாடப்பட்டாள் என்று அவர்களிடையே ஒரு கதை உலாவுகின்றது. மணமகளுக்குத் தனது தகுதிக்கேற்ப விருந்தொன்றை மணமகன் வைப்பான்.

சில வேளைகளில் ஆண், பெண்ணின் உடையின் ஒரு முனையைப் பிடித்துக் கொண்டு நிற்பான். பெண் ஆணின் உடையைப் பிடித்தப்படி நிற்பாள். பின்னர் தண்ணீர்க்குடத்தை எடுத்து இருவரும் தம்தலையில் ஊற்றுவார்கள். அவர்கள் உடல் நனைந்த பின் அவர்கள் திருமணம் நிறைவேறியதாகக் கருதப்படும். அவர்கள் விரும்பும் வரை ஒன்றிணைந்து வாழலாம். மணமகளின் உறவினர்கள் வந்து பார்த்து அவர்களுக்குப் பரிசளித்துச் செல்வார்கள்.

சிலர் தம் கலியாணத்தைப் படுக்கையிலேயே முடித்துக் கொள்வர். அதனால் கன்னித்தன்மையை இழந்த பெண்கள் சற்றுக் கவலையடைவர். இனித் தரமுள்ள ஆண்கள் தம்மை நாடமாட்டார்கள் என்பதால் ஏற்பட்டதென்று தாங்கள் எதையோ இழந்துவிட்டனர் என்ற இனம்புரியாத பயமாகும்.

அவர்களின் திருமணம் குறைந்த உறுதிப்பாடு கொண்டது. அவர்களிடையே உடன்பாடு இன்மையோ, ஒருவரை ஒருவர் விரும்பாமையோ ஏற்பட்டால், அவர்கள் எந்த வித சங்கடமுமின்றிப் பிரிந்து செல்வர். இதில் ஆண்கள் தரப்பு கருத்துத்தான் முக்கியம் பெறும். அவர்கள் தங்கள் தகுதிக்கேற்ப கால் நடைகள், அடிமைகள், பணம், ஆகியவற்றை கலியாணத்தின் போது தங்கள் மகள்மாருக்குக் கொடுப்பார்கள். திருமணம் முறிந்தால் கொடுக்கப்பட்ட சீதனம் மீண்டும் பெற்றோரை அடையும். இதன் பின் ஆண் திரும்பவும் கலியாணம் செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களும் ஆண்களும் தங்களுக்குப் பொருத்தமான வகையிலான உறவைத் தேடிக் கொள்வதற்கு முன்னர் நான்கு அல்லது ஐந்து முறை கலியாணம் கட்டிப் பிரிவதுமுண்டு. அவர்களுக்குப் பிள்ளைகள் இருந்தால்ப் ஆண்பிள்ளைகளை ஆண்களும், பெண்பிள்ளைகளைப் பெண்களும் எடுத்துக் கொள்வார்கள். பிள்ளைகள் இல்லாதவர்களுக்கு இப்பிரச்சனை இல்லை.

இந்த நாட்டில் பெரிய மனிதர்களுக்குத் தானும் ஒரு மனைவிதான் உண்டு. ஆனாற் பெண்கள் அநேகமாக இரு கணவர்களைக் கொண்டிருப்பர். இரண்டு சகோதரர்கள் ஒரு மனைவியைக் கொண்டிருத்தல் சட்டரீதியானதும் பொதுவானதுமான வழக்கமாகும். பிள்ளைகள் இருவரையும் அப்பா என்று அழைப்பர்.

பெண்கள் தமது மாதாந்த சுகவீனத்தைக் காட்டுவதற்காகத் தலையில் பூச்சூடி இருப்பார்கள். அத்தருணங்களில் அவர்கள் தூய்மையற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள். அந்த நேரங்களில் யாரும் அவர்கள் வீட்டுக்கு வரமாட்டார்கள். கவலையீனமாக யாரும் வருவதற்கு முன்னர் அதைத் தெரிவிக்க வேண்டும். மாதவிடாய் முடிந்தவுடன் அவள் நீரில் மூழ்கினால் அவள் சுத்தமடைவாள் என்பது அவர்கள் நம்பிக்கை. எந்தப் பெண்ணும் அவள் பெரிய மனிதரின் மனைவியாக இருந்தாலும் கூட ஆண்களின் முன்னிலையில் அமர்ந்திருப்பது சட்டப்படி குற்றமாகும். இவ்வாறான பெண்கள் இக்குற்றத்தைச் செய்யாமலிருக்க அவர்களின் நாக்கு வெட்டப்படும். எந்தச் சிறிய விடயமானாலும், அரசனின் பெயரால் எவரையும் குற்றம் சாட்ட அதிகாரம் உண்டு.

குற்றம் செய்த ஆண்களைச் சங்கிலியால் பிணைத்து வைத்தலும் சிறையிடலும் தண்டனையாகும். ஐந்து அல்லது ஆறு சில்லிங்குகள் தண்டப்பணம் விதிப்பதுமுண்டு. தண்டப்பணம் கட்டும் வரை குற்றவாளியின் முதுகில் ஒரு கல்லைத் தூக்கி வைப்பர். தண்டப்பணம் கட்டினால்தான் அது அகற்றப்படும். குற்றம் செய்த பெண்கள் தலை மேல் ஒரு கூடை மணலை வைத்துவிடுவர். அவர்களுக்குத் தண்டனை தருபவர் சொல்லும் வரை அவர்கள் அவ்வாறு நிற்கவேண்டும். அரசன் ஆணை பிறப்பித்தால் அல்லாமல் யாருக்கும் மரண தண்டனை நிறை வேற்றமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் நில உரிமைக்கான ஹரியோட் வரியை அரசனுக்கு வழங்கத் தேவையில்லை. துறைமுகங்களுக்குப் பெண்கள் கொண்டு போகும் பொருட்களுக்குத் தீர்வையில்லை. பெண் மந்தைகளில், பெண் மாடுகளில், பெண் எருமைகளில் கொண்டு போகும் பொருட்களுக்கும் தீர்வையில்லை.

அவர்களிடையே மருத்துவிச்சி இல்லை. ஆனாலே பிரசவம் பார்ப்பதிற் தேர்ந்த பெண்கள் வந்து உதவுவார்கள். ஒரு குழந்தை பிறந்தவுடன் அதன் தந்தை அல்லது நண்பர்கள் சோதிடரிடம் சென்று இந்தப்பிள்ளை நல்ல கிரக பலனுடன் பிறந்துள்ளதா, தீய பலனுடன் பிறந்துள்ளதா என்று விசாரிப்பர். அதன் பலன் தீயதென்றால், அதைப் பட்டினி போட்டோ, நீருக்குள் அமிழ்த்தியோ உயிருடன் புதைத்தோ கொன்று விடுவர். யாரும் விரும்பினால் அவர்களுக்கு வளர்க்கக் கொடுப்பார்கள். உங்களது இரக்கத்தை நாடி வந்த உயிர்களை நீங்கள் அழிப்பது தகுமா என்று நாங்கள் அவர்களிடம் பலதடவைகள் கேட்டிருக்கிறோம். அவர்கள் அதற்காக மனவருத்தப்பட்டனர். எனினும் எங்கள் வீட்டில் ஒரு பேயை வைத்து வளர்க்க முடியுமா என்று கேட்டனர். ஒரு குழந்தை கெட்ட நேரத்தில் பிறந்தால் அதன் பெற்றோருக்குத் தனது கீழ்ப்படிவின்மையாலும் கெட்ட நடத்தையாலும் துயரத்தைக் கொண்டுவரும் என்பது அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

முதல் குழந்தை நல்ல பலனுடன் பிறப்பது அருமை. அவ்வாறு பிறந்தால் அன்புடன் பேணி வளர்ப்பர். கெட்ட பலனிற் பிறந்தாற் கொன்று விடுவர். இது குற்றம் என்று சட்டத்தின் முன் கொண்டு வரப்படுவதில்லை.

மற்றவர்கள் அவர்களை அழைப்பதற்காகவும் வேறுபடுத்துவதற்காகவும் இளமையில் அவர்களுக்கு ஒரு பெயரொன்றை இடுவர். அவர்கள் வளர்ந்து வருகிறபோது அப்பெயரைக் கூறி அவர்களை அழைப்பது அவர்களுக்கு அவமானமாகக் காணப்படுகின்றது. அதற்காகத் தாம் பிறந்த பட்டணத்தில் வழங்கப்படும் விருதுகளில் ஒன்றைத் தம்பெயராகச் சூடிக்கொள்வர். பட்டங்களைப் பற்றிப் பெருமை கொள்வோர் குறைவாக இருந்தாலும் அவற்றைப் பெற மக்கள் ஆர்வமாக உள்ளனர். பெயர்களும் பட்டங்களும் அவர்கள் மொழியில் அபரிமிதமாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08

அவர்களின் தொழில்களும் பொழுது போக்குகளும்

இப்போது நிறைய நேரமிருக்கிறது. இதனால் அவர்களின் வாழ்க்கைப் போக்குகளையும் அவைகளுக்காக என்ன வேலைகளில் அவர்கள் ஈடுபடுகின்றனர் என்பதையும் விபரிப்போம். இதன் ஒரு பகுதியை ஏற்கனவே கூறி இருக்கிறேன். வெளி நாடுகளுடன் வர்த்தகமோ வேறு கொடுக்கல் வாங்கல்களோ நடைபெறுவதில்லை. போர்த்துக்கீசர் இந்நாட்டுக்கு வந்தபோது, அரசனுக்கும் அவர்களுக்கும் நல்லுறவு நிலவியதால், அரசன் அவர்களுக்குத் தனது மக்களோடு வர்த்தகத்தில் ஈடுபட அனுமதி வழங்கினான். டச்சுக்காரர்களும் அவ்வாறு பெறப் பெரிதும் முயன்றனராயினும் அரசன் அவர்களுக்கு அனுமதி வழங்கவில்லை. அவர்களிடம் போக்குவரத்து வசதிகள் இருந்தன. இந்த நாட்டின் தன்மைகளுக்கேற்ப சில பகுதிகளில் விளைவன மற்றப்பகுதிகளில் விளையாது. ஆயினும் பிரதேசங்கள் மற்றப்பகுதிகளில் விளைவன இல்லாமல் வாழப்பழகிக் கொண்டுள்ளன.

கால்நடை வளர்ப்பும் பயிர்ச் செய்கையும் பெருமளவு வேலை வாய்ப்பை இந்நாட்டுக்குத் தருகின்றன. இது பற்றி முன்னரும் கூறப்பட்டுள்ளது. இவை முக்கியமாக வேண்டி நிற்பது மனித உழைப்பையாகும். பெரும் மனிதர்களாயினும், வீட்டிலும் வயலிலும் வேலை செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புக்குறைவானதென்று கருதப்படுவதில்லை. ஆனால் தமது வேலையைச் செய்ய ஆட்களை அமர்த்துவது வெட்கக்கேடானதாகக் கருதப்படுகின்றது. அவ்வாறு செய்பவர்கள் இங்கு மிகவும் குறைவு. பெரும் மனிதர்கள் என்ற வரையறைக்குள் வருபவர்களும் சுமை தூக்குவதைத் தவிர மற்ற வேலைகளைத் தாமே மேற்கொள்வர். சுமை தூக்குவது அடிமையின் வேலையாகக் கருதப்படுவதால் அதற்கு ஆட்களை அமர்த்திக் கொள்வர்.

மந்தை வளர்ப்புப் பற்றி இங்கே விபரிப்பது பொருத்தமற்றதாகத் தோன்றுகிறது. மாடுகள் இரண்டு மூன்று வயதாக இருக்கும் போது அவைகளைக் கட்டி வீழ்த்தி, அவைகளின் விதைகளை இரண்டு தடிகள் இணைத்த உபகரணமொன்றால் நசுக்கிக் கட்டியில்லாமல் மாவாக்கிவிடுவர். பின்னர் விதைகள் மீது வெண்ணெய்யையும் கரியையும் கலந்து பூசுவர். இதன் காரணமாக எந்தமாடும் இறந்ததாக நான் கேள்விப்படவில்லை.

அவர்கள் தயிரை எடுத்துத் துணியிற் கட்டித் தொங்கவிட்டுத் தண்ணீரை நீக்குவர். பின்னர் ஒரு சீலையில் அதனை முடிந்து கொதிக்கும் தண்ணீருக்குள் போட்டு நன்கு அவிய விடுவர். அது வெண்ணெய்க் கட்டி மாதிரி வரும். அதனோடு சுண்ணாம்பைக் கலப்பர். அது சிறிது காலத்தில் இறுகிய உருண்டைக் கட்டியாக மாறும். தேவைப்படும் போது அதில் ஒரு துண்டை கத்தியாற் கீறி எடுத்துப் பயன்படுத்தலாம்.

உற்பத்தி வேலைகள் அவர்களிடையே குறைவு. கலிக்கோ என்றழைக்கப்படும் கனமான துணி, கொல்லர்கள், தச்சர்கள் மற்றும் விவசாயிகளுக்குரிய இரும்புக் கருவிகள், அவிக்கவும் பொரிக்கவும் வாட்டவும் மற்றும் தண்ணீர் எடுக்கவும் தேவையான மண்பாத்திரங்கள் செய்தல் பொற்கொல்லர் வேலை, நிறம் தீட்டல்,செதுக்கு வேலைகள், இரும்பு செய்தல், துப்பாக்கி செய்தல், வெடியுப்புச் செய்தல் போன்ற தொழில்கள் உண்டு. இரும்புக் கல்லை எடுத்து இரும்புருக்கல் சிறிய தொழிலாக உள்ளது. இந்த நாட்டில் பெருமளவு இரும்புத் தாது ஐந்து அல்லது ஆறு அடி ஆழத்தில் உள்ளது.

முதலில் இந்த இரும்புக்கட்டிகளை எடுத்துக் குவித்து விறகினாற் சுடுவார்கள். இதனால் அது மெதுவாகி உலைக்குப் பொருத்தமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலையை அவர்கள் வெள்ளைக் களியினால் ஆக்கியிருப்பர். ஒரு குறித்த அளவு கரியைப் போட்டு அதன் மேல் சுட்ட இரும்புக் கட்டிகளைப் போடுவார்கள். அதன் மேல் மீண்டும் கரிபோடப்படும். இரண்டு மரக்குற்றிகள் நடப்பட்டு அவைகளின் மேற் பகுதிகள் குடம் போல் குழிவாக குடையப்பட்டிருக்கும். அவைகளின் வாய்கள் வளைந்து மீளக் கூடிய குச்சிகளால் வளைத்துக் கட்டப்படும். பின்னர் குச்சிகளுக்கு மேல் மான் தோலால் வாய் கட்டப்படும். அத்தோலின் நடுவில் மனிதனின் விரல் போகக் கூடிய துவாரம் ஒன்று இடப்படும். இவ்விரு குழிகளும் சூளையும் குழாய்களால் இணைக்கப்படும். இதன் மீது ஒரு மனிதன் ஏறி நின்று மாறிமாறி அமுக்கிக் கொண்டிருப்பான். பெருமளவு காற்று உலைக்குப் போய்க் கரியை எரிய வைப்பதால் அளவற்ற வெப்பம் உண்டாகி இரும்பிலுள்ள கறள்கள் எரியும். இரும்பு உருகி அடிக்குப் போய்த் தங்கி இருக்கும். இவ்வாறு மீண்டும் செய்தால் இரும்பு மிகச் சுத்தமாகும். இந்தச் சூடாகிய இரும்பை நீரில் அமிழ்த்தினால் சூடு தணியும். இந்த இரும்பைத் துண்டு துண்டாக்கி விற்பர்.

தொழில்கள் பற்றிப் பேச வந்த இடத்தில் சமையற் செயல்பாடுகள் பற்றி பேசுவது பொருத்தமற்றது. ஆயினும் வெண்ணெய் தயாரிப்பது பற்றி சொல்வது அவசியமானது. முதலில் அவர்கள் பாலைக் காய்ச்சுவார்கள். பின்னர் அதைத் தயிராக மாற்றுவார்கள். மேல் வரும் ஆடையை எடுப்பார்கள். பின்னர் ஒரு தடியினால் தயிரைக் கடைவார்கள். வெண்ணெய் திரண்டுவரும். பின்னர் அதனை ஒரு சட்டிக்குள் சேகரித்து நெருப்பில் வைத்து வெப்பமேற்றுவார்கள். இதனால் தண்ணீர் எல்லாம் ஆவியாகி விடும். அதனை மண்பானையில் போட்டு உபயோகிப்பர்.

இந்தத் தீவில் சந்தை வசதிகள் இல்லை. சில கடைகள் நகரங்களில் உள்ளன. அவைகள் துணி, அரிசி, உப்பு, புகையிலை, சுண்ணாம்பு, மருந்துகள், பழங்கள், வாள், உருக்கு, பித்தளை, செம்பு, ஆகியவற்றை விற்பனை செய்யும் கடைகள்.

அப்பொருட்களின் விலைகளைக் கூறியதன் பின்னர்தான் விற்பனை நடக்கும். நகரத்தில் மிகவும் வேண்டிய பொருளாக இருக்கும் அரிசியை ஆறு குவாட்ஸ்க்கு நாலு பென்சுக்கும் அரை பென்னிக்கும் வாங்கலாம் அல்லது அரை ரொங்கா கொடுத்தும் வாங்கலாம். ஆறு கோழிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஒரு கொழுத்த பன்றியை அல்லது ஒரு காட்டுப் பன்றியை மூன்று சில்லிங்குகளுக்கும் ஆறு பென்சுக்கும் அல்லது நாலுசில்லிங்குகளுக்கு வாங்கலாம். அவைகள் எல்லாம் எங்களை விட மிகக் குறைந்த விலைகள். ஒரு கொழுத்த ஆடு இரண்டு சில்லிங்கும் ஆறு பென்சுகளுமாகும். 4000 பாக்குகள் ஒன்பது பென்சுக்கு விற்கிறது.

இப்போது அவர்களின் போக்குவரத்துப் பற்றியும், நிறை மற்றும் அளவீடுகள் பற்றியும் சிறிதளவு பார்ப்போம்.

ரியன் என்பது ஒரு நீட்டல் அளவாகும். முழங்கையிலிருந்து ஆரம்பித்து நாலாவது விரல் நுனி வரையுள்ள நீளம் ஒரு ரியன் ஆகும். வட்டுரியன் தச்சர்கள் பாவிக்கும் அளவாகும். அது இரண்டு முழங்கைகளை ஒன்றுக்கெதிராக இரண்டு பெருவிரல்கள் நுனிகள் தொட்டுக் கொண்டிருக்க வரும் நீளமாகும்.

தானிய அளவுகளில் மிகக் குறைந்தது பொட்டாகும். இது ஒரு மனிதன் தனது உள்ளங்கையால் அள்ளக்கூடிய அளவாகும். நாலு பொட்டுகள் சேர்ந்தது ஒரு பொண்டர் நெல்லியாகும். இது ஒரு நாளைக்கு ஒருவனால் உண்ணக்கூடிய தானிய அளவு என்று அரசனால் அங்கீகரிக்கப்பட்ட அளவாகும். எங்களுடைய ஆங்கிலேயர்கள் அங்கீகரித்திருப்பது இதன் இரண்டு மடங்காகும். நாலு பொண்டா நெல்லி ஒரு கோணியை உருவாக்குகிறது. இது ஒரு சுமாரான அளவாகும். இந்த அளவை வைத்துத்தான் கூடைகளை அவர்கள் பின்னுகிறார்கள். பத்துகோனி ஒரு பேல் ஆகும். நாற்பது கோர்னிகள் ஒரு லாரி விலைக்கு விற்கப்படுகின்றன. இது கண்டிப் பிரதேசத்தில் உள்ள வழமையான அளவுகளாகும். ஆனால் அறுவடை காலத்தில் இரண்டு பெல்லாக்களைத்தான் ஒரு லாரி விலைக்கு வாங்கலாம்.

அவர்களின் நிறுத்தல் அளவைகளில் மிகச் சிறியது கொலண்டாவாகும். இதில் கால் பங்கும் அரைப்பங்கும் உண்டு. காட்டில் உண்டாகும் மணிபோன்ற சிறிய சிவப்புக் காய்கள் இருபதின் நிறையே ஒரு கொலண்டாவாகும். இருபது கொலண்டாக்கள் சேர்ந்தது ஒரு பலமாகும். இந்நிறைகளைப் பொற் கொல்லர்கள்தான் வழமையாகப் பாவிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவீடு செய்யும் உபகரணங்களைச் சரியாகச் செய்து விற்காதவர்களுக்கு இங்கு தண்டனை கிடையாது. தானியங்களை விற்பவர்கள் அளவீடுகளை எவ்வளவுக்கு குறைக்க வேண்டுமோ அவ்வளவுக்கு குறைப்பார்கள். பணப்புழக்கம் அவர்களிடையே குறைவாக இருப்பதாற் பண்டமாற்றாகத் தானியத்தைப் பயன்படுத்துவர். ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று ஒரு அளவை வைத்துள்ளான். தான் கடன் கொடுத்த தானியத்துக்கு அதிக அளவை அறவீடு செய்வான். அநேகமாக இது ஏழைகளையே கூடுதலாகப்பாதிக்கிறது. அவர்கள்தான் கடன் வாங்குபவர்களாக உள்ளனர். அதிகாரிகளின் உத்தியோகஸ்தர்கள் அரச அங்கீகாரம் பெற்ற அளவுகளுடன் ஊரிலே பரிசோதிக்க வந்து, அளவீடுகளில் மோசடி இருப்பதைக் கண்டு பிடித்தால் கடும் தண்டனை கொடுப்பர். மோசடிக்காரர்களைத் துண்டுதுண்டாக வெட்டி பார்ப்பவர்கள் பயப்படும் வண்ணம் பாதை ஓரத்திற் போடுவர்.

அரசனுடைய நியாயாதிக்கமுள்ள இடங்களில் மூன்று வகைக்காசுகள் புழக்கத்தில் உள்ளன. ஒன்று போர்த்துக்கீசரால் வெளியிடப்பட்டதாகும். அதன் ஒரு பக்கத்தில் அரசனின் புஜமும் மறுபக்கத்தில் ஒரு பியரின் பிரதிமையும் இருக்கும். இதனைச் சிங்களவர்கள் தங்கம்மசா என்று அழைப்பர். இதன் பெறுமதி ஒன்பது பென்சுகளாகும். இதன் அரைவாசி பொடி தங்கம் என அழைக்கப்படுகின்றது. இன்னொரு வகை நாணயமும் அரச அங்கீகாரம் பெற்றுள்ளது. இதன் உருவம் அநேகமாக மீன் தூண்டில் போன்றிருக்கும். ஆயினும் சில வேளைகளில் அதன் தோற்றம் மாறும். இந்த நாணயங்கள் மீது சந்தேகம் ஏற்பட்டால் இவைகளை எடுத்து செந்தணலாகச் சூடாக்கித் தண்ணீருக்குட் போட்டால் அவைகள் தூயவெள்ளை நிறமாக இருந்தால் அசல் நாணயங்களாகும். இல்லாவிட்டால் போலி நாணயங்களாகும்.

மூன்றாவது வகை நாணயம் அரசனால் வெளியிடப்பட்டதாகும். இதில் யாரும் சந்தேகம் கொள்வதில்லை. இது பணம் என்று அழைக்கப்படும். இந்நாணயம் சிறிய சட்டைப் பொத்தான் அளவுள்ளதாகும். ஒரு பணம் எழுபத்து ஐந்து ஸ்பானிய டொலராகும். எல்லா வகை நாணயங்களும் இங்கே புழங்குவது மிகக் குறைவு, இங்கே பண்ட மாற்று முறைதான் வழக்கம்.

அவர்கள் மகிழ்ச்சியை பங்கிட்டுக்கொள்ளும் விளையாட்டுகளில் ஈடுபடுவது கிடையாது. அவர்கள் புதுவருடத்தில் மாத்திரம் மகிழ்ச்சியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுக்களில் ஈடுபடுவர். அன்று அவர்கள் ஒருவர் மீது ஒருவர் தேங்காய்களை எறிந்து விளையாடுவர். யார் யாருக்கு கடுமையாக எறிந்தார் என்பதே விடயமாகும். அவர்களுடைய சோதிடர் புதுவருட நாளிற் கருவிகளை எடுத்துப் பயன்படுத்தத்தக்க தருணத்தைக் கண்டு பிடித்துச் சொல்லும் வரை யாரும் அவைகளைத் தொடமாட்டார்கள். அந்தத் தருணத்தில் ஆண்கள் கோடரி, வாள், கத்தி, என்பனவற்றையும் பெண்கள் துடைப்பம், உலக்கை, சுளகு என்பனவற்றையும் எடுத்துப் பயன்படுத்துவர்.

இன்னொரு விளையாட்டு உண்டு. பொதுவாக இதைச் செய்யும் போது மக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள். அது பத்தினித் தெய்வத்துக்குக் கொடுக்கப்படும் பலியாகும். அதனால் நோயும் துயரமும் நீங்கி நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு கிட்டும் என்று நம்புகின்றனர். இதனுடைய அருவருப்புத் தன்மை காரணமாக இது பட்டணங்களின் பக்கத்திலோ பெண்கள் நடமாடும் இடங்களிலோ நடத்தப்படமாட்டாது. மாறாக இது மனித நடமாட்டமில்லாத தொலைதூரக் காடுகளில் நடத்தப்படும். அவர்கள் இரு வளைந்த தடிகளை எடுத்து ஒன்றோடு ஒன்றை கொழுவுவார்கள். பின்னர் இருதடி நுனிகளிலும் கட்டி இரு பகுதியினராகப் பிரிந்து இழுப்பார்கள். வளைந்த தடி ஒன்று உடையும் வரை இழுப்பார்கள். உடையாத தடிக்குரியவர்கள் வெற்றி அடைந்தவர்களாகக் கருதப்படுவார்கள். அவர்கள் தங்கள் வெற்றியை ஆடியும் பாடியும், அருவருக்கத்தக்க இழிந்த பாவனைகளை வெளிப்படுத்தியும் கொண்டாடுவர். இப்பாவனைகளை இங்கே விபரிக்க மனம் கூசுவதால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

முன்னாட்களில் இந்த ஆபாசச் சடங்கு அதிகமாக நிகழ்ந்தது. அரசனும் இதிற் பங்கு பற்றியுள்ளான். ஆனால் இப்போது அதை நடத்த அனுமதிப்பதிலை. மீறுபவர்களுக்குக் கடும் அபராதம் விதிக்கப்படும் என்று அறிவித்து முற்றாக நிறுத்திவிட்டான்.

அச்சடங்கு வழக்கொழிந்து விட்டபோதிலும், மக்களின் மகிழ்ச்சி மனப்பான்மை காரணமாக கம்பொல பிரதேசத்தில் மீண்டும் துளிர் விடத் தொடங்கிவிட்டது. இது அரசனின் செவிகளுக்கு எட்ட, தனது பிரதானிகளை அனுப்பி மீறுபவர்களுக்கு கடும் அபராதம் விதிக்குமாறு பணித்தான். மக்கள் அபராதம் கட்ட முன்வராமல் ராஜகாரியப் பணிகளைச் செய்வர் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதானிகளுக்குத் தெரியும். இதை உணர்ந்து கொண்ட அவர்கள், மக்களை அங்குள்ள குளத்து மீன்களை அரசனின் உபயோகத்துக்காகப் பிடித்துத் தருமாறு கேட்டனர். அதற்குரிய முக்கியமான மீன் பிடி உபகரணமொன்றும் அவர்களிடமில்லை. அதற்குரிய செலவை மக்கள்தான் பொறுப்பேற்க வேண்டும் என்று கூறிப் பிரதானிகள் தமது தொப்பியைக் கழற்றி மூன்று தரம் நிலத்தில் போட்டு எடுத்தனர். ஒன்றும் செய்ய முடியாத மக்கள் காசை பங்கிட்டு எடுத்து வந்து கொடுத்தனர். அக்காசு அரசனின் கருவூலத்துக்குள் சேர்க்கப்பட்டது.

அவர்கள் மனமகிழ்ச்சியாக இருப்பது பிரத்தியேகமாக வருடத்தில் ஜூன், ஜூலை மாதங்களில் வரும் புதுப்பூரணை விழாவிலாகும். அப்போது வித்தைகள் செய்து காண்பிக்கப்படும்; விருந்தளிக்கப்படும். ஒரு மனிதன் ஏழு அல்லது எட்டடி தடியை தனது மார்பில் வைத்திருப்பான். அத்தடியின் உச்சத்தில் ஒரு பையன் ஏறித் தனது வயிற்றை கம்பில் வைத்துப் படுப்பான். அந்தத் தடியை நடனமாடுவது போல அந்த மனிதன் அசைப்பான். இது முடிந்தவுடன் அந்தத் தடியின் மீது நாலு அம்புகளை குறுக்கும் நெடுக்குமாக வைத்துக் கட்டி விடுவான். தடியை மார்பில் வைத்திருக்கும் மனிதன் சடாரெனத் தடியை அசைத்துவிட்டு மேலெழுவான். அப்போது அம்புகள் சடாரெனப் பாய்ந்து நிலத்திற் குத்தி நிற்கும் இரண்டு விற்கள் ஒன்றுக்கு எதிராக மற்றொன்று நாணேற்றப்பட்டு வைக்கப்பட்டிருக்கும். மனிதன் குப்புறப்படுத்திருப்பான். வில்லிலிருந்து புறப்படும் அம்புகள் அந்த மனிதனின் முதுகை உரசியவாறு செல்லும். ஒரு மனிதன் இவ்வாறு நாணேற்றிய விற்களுக்கிடையே நடனமாடி வித்தைகள் காட்டிக் கொண்டிருப்பான். தப்பித் தவறி நாணில் கைகால் பட்டால், பாயும் அம்பு அவன் உடலை துளைத்து செல்லும். ஆனால் அவ்வாறு நிகழாமல் நடனமாடுவதே அவன் சிறப்பு. இரு வாள்களை எடுத்து ஒன்றைத் தனது வாயிலும் மற்றதைத் தனது புஜத்திலும் வைத்திருந்து தரையில் அதிகம் படாத முறையில் ஆடிக்கொண்டிருப்பான். இவ்வாறான விடயங்கள் அதிகம் உள்ளன. அவைகளை விபரிக்கிற் பெருகும்.

பொழுது போக்கிற்கு நேரம் இருந்தால் புதியவர்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் கட்டப்பட்ட இருப்பிடத்திற் கூடுவார்கள். அவர்கள் மொழியில் அது அம்பலம் என்று அழைக்கப்படும். அங்கே வெற்றிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்றபடி, ஒருவரை ஒருவர் கூர்மையாகப் பார்த்துக்கொண்டு அரசனுக்கும் பிரதானிகளுக்கும் நடக்கும் விவகாரங்களைப் பற்றியும் என்ன தொழில் நகரத்தில் மும்முரமாக நடக்கிறது என்பதைப்பற்றியும் தங்களுடைய கால் நடைகளைப் பற்றியும் விஸ்தாரமாகப் பேசுவார்கள். அவர்கள் வெளிநாட்டு மனிதர்களைக் கண்டால் அவர்களின் நாட்டு அரசாங்கத்தைப் பற்றி விசாரிப்பர். என்னென்ன வரிகள் பொதுவாக உள்ளன என்பதை மிக விருப்பமாகத் தெரிந்து கொள்ள முயற்சிப்பர்.

தங்களது ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியுடன் கழிப்பது அவர்களது சிறந்த பொழுது போக்காகும். மிடாக்குடி அவர்களால் வெறுக்கப்பட்ட ஒன்றாகும். அப்படிப்பட்டவர்கள் அவர்களிடையே குறைவு. புகையிலையையும் அவர்கள் வெறுக்கின்றனர். ஆயினும் ஆண்களும் பெண்களும் அதனை ப்பாவிக்கின்றனர். சுக்கானில் வைத்து புகையாக்கிக் குடிப்பதைவிட அதை உண்பதே அதிகம்.

எல்லாவற்றையும் விட அவர்கள் அதிகம் விரும்புவது வெற்றிலையாகும். அதைச் சாப்பிடுவது அவர்களுக்கு மகிழ்ச்சி தருகிறது. அவர்கள் படுக்கைக்குப் போகுமுதல் வெற்றிலை பாக்கால் தம் வாயை அடைத்துக்கொள்வர். முதல் விழிப்பு வந்ததும் அதை துப்பிவிட்டு மீண்டும் அடைத்துக்கொள்வர். இதனால் அவர்கள் வாய் வெறுமையாக இருக்கும் நேரம் குறைவு. ஆண்களினதும் பெண்களினதும் பொதுவான செயற்பாடு இதுவாகும். உணவு, உடையில்லாமலும் அவர்களால் இருக்க முடியும். ஆனால் வெற்றிலை போடாமல் அவர்களால் இருக்க முடியாது. இதை ஏன் போடுகிறீர்கள் என்று கேட்டால் தேகாரோக்கியத்துக்கு உகந்தது வாயை நறுமணமிக்கதாக வைத்திருக்கிறது பல்லைக் கறுப்பாக்குகிறது என்று, பதில் வரும். அவர்கள் வெள்ளைப்பல்லை வெறுக்கின்றனர். வெள்ளைப் பல் நாயின் பல் போன்றது என்கின்றனர்.

நல்ல நிலையில் உள்ள பெண்களுக்கும், பிரபுப்பெண்களுக்கும் ஆறுதலாக இருந்து வெற்றிலையை மென்று சாறை விழுங்கிச் சக்கையை துப்புவது போன்ற இனிமையான பொழுதுபோக்கு வேறு ஒன்றுமில்லை. நண்பர்கள் ஒருவரை ஒருவர் பார்க்க வந்தால் அவர்கள் ஒன்றாக இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிலை மென்று கதைத்து மகிழ்வார்கள். நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து வைன் குடிப்பது போல இது அவர்களுக்கு இருக்கிறது.

அவர்கள் இந்த இலைகளைச் சாப்பிடும் பாங்கு பற்றிச் சிறிது சொல்ல வேண்டும். அவர்கள் சுண்ணாம்பால் நிரப்பப்பட்ட குப்பிகளைக் கைவசம் வைத்திருப்பர். அதைத் திறந்து கொஞ்சம் சுண்ணாம்பை எடுத்து வெற்றிலையின் புறப் பக்கத்திற் பூசுவர். பின்னர் சிறிதளவு பாக்குச் சீவல்களை எடுத்து இந்த இலையில் போட்டு மடித்து அதை வாய்க்குள் திணிப்பர். இவ்வாறு தொடர்ந்து மெல்லுவதாற் பற்கள் கறுப்பாக மாறுகின்றன. பொதுவாக இவ்வாறு தான் வெற்றிலை போடுவார்களாயினும் வேறு முறைகளுமுண்டு. ஒரு கொஞ்சம் சுண்ணாம்பை விரல்களாற் கிள்ளி எடுத்து வாய்க்குட் போடுவர். பின்னர் பாக்குச் சீவல்களையும் வெற்றிலையையும் போட்டு மெல்லும் முறையொன்றும் உண்டு.

வெற்றிலை போடுபவர்களிடம் எப்பொழுதும் வெற்றிலையும் சுண்ணாம்பும் பாக்குச் சீவல்களுமிருக்கும். அவர்கள் வெளியில் நடந்து செல்லும் போது நத்தை போன்ற ஓடுகளைப் பொறுக்கியெடுப்பர். பாறைகளூடே ஓடிவரும் சுத்தமான நீரில் அவற்றை நன்கு கழுவுவர். இந்த ஓடுகளைக் கரியுடன் கலந்து வைக்கோலாற் சுற்றி ஒரு தடியில் கட்டுவர். இப்போது வைக்கோலுக்கு நெருப்பு வைத்துத் தடியை மாறிமாறிக் கையிற் பிடித்துக்கொண்டு ஒரு அரைமணி வரையிலும் சுற்றுவர். இந்த சுழற்சியில்க் கரி நன்கு எரிவதால் ஓடு நன்கு வெந்து இருக்கும். மீதியுடன் தண்ணீரை கலக்கச் சுண்ணாம்பு தோன்றும். சுண்ணாம்புக் கற்களைச் சூளையில் வைத்து எரித்து உருவாக்கப்படும் சுண்ணாம்பையும் அவர்கள் உபயோகிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09

அவர்களின் சட்டமும், மொழியும்

ஒரு சமூகத்தினரின் சட்டம், மொழி, கல்வித்தரம் ஆகிய முப்பொருள் களை, அவை இன்னும் நுட்பமான பயன்பாட்டுக்கு வரவில்லை, எனினும் கூர்மதியுடைய மனிதன் அறிய ஆவலுறுவான்.

சட்டத்தைப் பற்றி எடுத்துக் கொண்டால், இங்கு சட்டம் என்பது கிடையாது. அரசனின் அப்போதைக்கப்போதைய விருப்பமே சட்டமாகும். அவனுடைய வாயிலிருந்து என்ன வெளிவருகிறதோ, அதுதான் மாற்ற முடியாத சட்டமாகும். இருந்த போதிலும், அவர்களிடம் பாரம்பரியமாக வரும் வழமைகளும் வழக்காறுகளுமுள்ளன. அவை சட்டங்கள் போலப் பின்பற்றப்படுகின்றன. அவை ஆளுநர்களுக்குப் பெரும் வழிகாட்டியாயிருக்கின்றன.

அவைகளிற் சிலதைக் குறித்துக் காட்ட வேண்டுமென்றால், அவர்களின் நில உரிமை பற்றிச் சொல்லலாம். அது பரம்பரை வழியானது, பெற்றோர்களுக்குப் பின் பிள்ளைகளுக்கானது. ஆயினும், மூத்த மகன் தனது பிறப்புரிமையால் எல்லா நிலங்களையும் சொந்தம் கொண்டாட முடியாது. ஆனால் தந்தை விரும்பினால், தனது நிலத்தை தனது பிள்ளைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கலாம். தந்தைக்குப் பின் மூத்த மகன் தனது சகோதர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகள் வயதுக்கு வரும் வரை நிலத்தைப் பயன்படுத்தலாம். ஆனால் அவன் அவர்களைத் தாபரிக்க வேண்டும்.

ஊவா மாகாணம் மந்தை வளர்ப்புக்குப் பேர் போனதாகும். அங்கே காடுகள் குறைவு. அவர்கள் தமது காணிகளுக்கு வேலி போடுவதில்லை. அங்கே ஒரு பழக்கம் உண்டு. அவர்கள் விதைப்பு நடந்தவுடன் தங்கள் மந்தைகளை விரட்டி வேறொரு இடத்திற்குக் கொண்டுபோய் விடுவர். அவைகளை வயற்பக்கம் வராமற் கண்காணிப்பர். இரவில் அவற்றைக் கட்டி வைப்பர். ஒருவரின் மந்தை மற்றவரின் வயலில் பயிரை மேய்ந்தால் அவர் அதற்குரிய நட்ட ஈட்டைக் கொடுக்க வேண்டும்.

உழுவதற்கு சோம்பல் படுகிறவர்களும், விருப்பமில்லாதவர்களும், அல்லது விதைப்பதற்குத் தானியமில்லாத ஏழைகளும், மற்றவர்களுக்கு உழுது விதைக்கக் கொடுப்பார்கள். இவ்வழக்கம் அரை என்ற பொருளைக் கொண்ட அந்த என்ற சொல்லால் அழைக்கப்பட்டாலும், காணிக்குச் சொந்தக்காரர் அறுவடையில் அரைவாசி பெற மாட்டார். பயிர் செய்தவர் தனது அறுவடையில் தனது செலவுக்கெல்லாம் கழித்து மூன்றிலொரு பாகத்தைத்தான் வயல் சொந்தக்காரருக்குக் கொடுப்பார். பயிர் செய்தவருக்குப் பல வகையான செலவுகள் உள்ளன. முதலாவதாக, களத்திற் சேர்த்துள்ள வைக்கோலை முள்கட்டுகள் கொண்டு சுத்தமாக்குபவர்களுக்குக் கொடுக்கப்படும் கூலி. இது கோடௌமன் என்றழைக்கப்படும். அடுத்தது வரகூல் என்றழைக்கப்படும் உழுவதற்கும் விதைப்பதற்குமான செலவு. இது வயலின் அளவுக்கேற்ப மாறுபடும். மூன்றாவதாக வரபொல் என்பது களை பிடுங்குவதற்கும் அடர்த்தியாக இருக்கும் பயிர்களைப் பிடுங்கி ஐதாக இருக்கும் இடங்களில் நடுவதற்குமான செலவு. இவ்வேலையைச் செய்யப் பிரத்தியேகமாகப் பெண்கள் உள்ளனர். நாலாவதாக போலருட் என்னும் செலவு. இது பதர் நீக்குவதற்கும் குழியைத் துப்பரவு செய்வதற்குமான செலவாகும். இது தூற்ற இருக்கிற நெற்குவியலின் அளவைப் பொறுத்து வேறுபடும். ஐந்தாவதாக, பொல்டோரா எனப்படும் காவற் கூலியாகும். அவர்களின் வயலில் காட்டு மிருகங்களை விரட்டுவதற்கு ஒரு காவல் குடிசை அமைக்கப்பட்டிருக்கும். இதிலிருந்து காவற் காப்பவருக்குக் கொடுக்கும் கூலி இதுவாகும். ஒக்யால் எனப்படுவது கடவுளுக்கு கொடுக்க வேண்டிய காணிக்கையாகும். சில வேளைகளில் மதகுருமார் இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிச் செல்வார்கள். சில வேளைகளிற் பிச்சைக்காரர்களுக்குக் கொடுத்து விடுவதுண்டு. சில சந்தர்ப்பங்களிலே தங்கள் வீடுகளில் வைத்திருந்து கடவுளுக்குச் சடங்கு நடக்கும் போது அளித்துவிடுவதுண்டு.

இந்தத் தானியம் விளையும் வரையும் பயிர் செய்பவர் தனது குடும்பத்தைக் காப்பாற்ற யாரிடமாவது கடனாகத் தானியம் வாங்கி இருப்பார். அந்தக் கடனை ஒரு புசலுக்கு ஒன்றரைப் புசல் வீதம் கொடுத்து இறுக்க வேண்டும். இந்த வழக்கத்தை அங்கு வந்து வாழும் புதியவர்களும் பின்பற்றுகின்றனர். இதை ஒரு தொழிலாக மேற்கொள்பவர்களுமுண்டு. என்னைத் தற்காத்துக் கொள்ள எல்லாம் வல்ல இறைவன் எனக்குக் காட்டிக்கொடுத்த வழிகளில் இதுவுமொன்று.

தானியத்தை இவ்வாறு கொடுத்து வாங்குவது கஷ்டமானது. கடன் பட்டவர் ஏழையாக இருந்தால், கடன் கொடுத்தவர்களெல்லாம் வயலுக்கு வந்து விடுவார்கள். ஒவ்வொருவரும் தங்கள் பங்கை வாங்கிக் கொள்வர். அங்கிருந்து தானியத்தை தூரவோ கிட்டவோ கொண்டு செல்வது அவர்கள் பொறுப்பு.

கடனுக்கு வாங்கிய தானியம் இரண்டு வருடத்தில் இரு மடங்காக மாறும். இதன் பிறகு அது மாறாது. முன்பெல்லாம் ஓரிரு புசற்தானியத்தைக் கடன் வாங்கிக் கடனை அடைக்க முடியாமல் வருடா வருடம் கூடி அடிமையானோர் பலர், இதைத் தடுக்கும் முகமாக கடன் இரட்டிப்பான பிறகு மேலும் அதிகரிக்கக் கூடாது என்று ஏழைகள் சார்பாக அரசன் சட்டம் கொண்டு வந்தான்.

தானியத்தைக் கடன் கொடுத்தவர் அதை வாங்கியவரிடமிருந்து பெற முடியாமற் போனால், அவரிடமுள்ள பொருட்களில் எதையும் தனது தானியப்பெறுமதிக்கேற்ப எடுத்துச் செல்ல முடியும். ஆயினும் இதற்கு நீதிபதியிடமிருந்து முன் அனுமதி பெற வேண்டும். அவரிடமுள்ள மந்தைகள், பிள்ளைகள் ஆகியவற்றை அனுமதியின் பேரில் எடுத்துச் செல்லலாம். இவை இல்லாவிட்டாற் கடன் கொடுத்தவரை அல்லது அவரின் மனைவியையும் கொண்டு செல்லலாம். மனைவிக்கு பதிலாக கணவன் வந்தால் அவள் விடுபடுவாள். ஆனால் பிள்ளைகள் கடன் முடியும் வரையும் விடுதலையாக முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண் தனது கணவனின் விருப்பமில்லாமற் பிரிந்து போனால் அவளைத் திருமணம் முடிக்காதவர்கள் யாரும் திருமணம் செய்ய முடியாது. ஒரு வருடத்துக்குப் பணத்தை மற்றவர்களின் பாவனைக்குக் கொடுத்தால் அதற்கு இரண்டு மடங்கு பணம் கொடுக்க வேண்டும். தவணைக்கு மேல் ஒரு வருடத்துக்கு மேலாகியும் கடன் பட்டவர் கடனைக் கொடுக்கவில்லை என்றால், கடன் கொடுத்தவர் கடன்பட்டவர் கையை கொஞ்ச நேரம் பிடித்து வைத்திருப்பார். இதன் அர்த்தம் தவணை முடிந்து விட்டது, அவர் இரட்டிப்பாகத் தரவேண்டும் என்பதாகும். அடிமைப் பெண்களுக்கு அடிமையல்லாதவர்கள் மூலம் பிறந்த குழந்தைகள் எஜமானுக்கு அடிமைதான். ஆனால் அடிமை ஆணுக்கு அடிமையல்லாத பெண்கள் மூலம் பிறந்த பிள்ளைகள் அடிமையில்லை. அடிமையோ அடிமையில்லையோ குழந்தைகள் தாய்க்குரியதாகும். ஒருவரும் தென்னை மரத்தைத் தறிக்க முடியாது. ஒரு மனிதன் அரசனின் பெயரைச் சொல்லி ஒரு கல்லைத்தூக்கி கொடுத்து வாக்குறுதி செய்தால் அது முத்திரையிடப்பட்டது போன்று உறுதியானது. ஒருவன் ஒரு பொருளைக் களவெடுத்துப் பிடிப்பட்டால் அதற்கு மாற்றாக ஏழு மடங்கு பொருளை அல்லது பணத்தைக் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்க வசதியில்லாவிட்டால் அடிமையாக மாற வேண்டும்.

ஒரு மனிதன் இக்கட்டான நிலைமைகளிலே தன்னை அல்லது பிள்ளைகளை ஈடுவைத்தல் அல்லது விற்றல் இங்கு வழமையாகும். மற்றவர்களின் நிலத்தில் யாரும் வீடு கட்டமுடியாது. தனது சொந்த இடத்தை விட்டு ஒருவர் வெளியேறத் தீர்மானித்திருந்தால் அவரும் அவ்விடத்தில் வீடு கட்டமுடியாது. ஏற்கெனவே வீடு கட்டியிருந்தால் அதை தரைமட்டமாக்கிய பின்பே நகர வேண்டும்.

ஏதும் வாக்குவாதங்கள் ஏற்பட்டால், இருதரப்பினரும் கடவுளர் முன்னிலையில் அல்லது கோயில்களிற் கொதிக்கும் எண்ணெய்ச்சட்டிக்கு முன்னின்று சத்தியம் செய்வார்கள்.

கோயில்களுக்குச் சென்று தமது நிலைப்பாட்டை எடுத்துரைப்பர். ஒரு தடவை, அடிமையொருவனை ஒரு வியாபாரி தனது வீட்டில் திருடினான் என்று குற்றம் சாட்டினான். அந்த அடிமை தான் திருடவில்லை என்று சத்தியம் செய்யப்போவதாக கூறினான். திருடினான் என்பதற்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருடவில்லை என்பதற்கோ இருவரிடமும் ஆதாரமுமில்லை. அது கடவுள் ஒருவனுக்குத்தான் வெளிச்சம். இருவரும் கோயிலுக்குச் சென்று தமது நிலைப்பாட்டை எடுத்துரைத்தனர். இறைவன் தீர்ப்புக்காக இருவரும் காத்திருந்தனர். இக்காலத்தில் அடிமை மறைவாக வியாபாரியின் வீட்டுக்கு நெருப்பு வைத்துவிட்டான். அது அடியோடு எரிந்து தரைமட்டமாகியது. தன்னைப் பொய்க்குற்றம் சாட்டியதால்தான் இந்தத் தண்டனை என்று அடிமை கூறித் திரிந்தான். வியாபாரிக்கு ஒன்றும் செய்யமுடியவில்லை. அடிமையின் எஜமான் அடிமையிடம் வியாபாரியையோ அவனுடைய நெருங்கிய உறவினர்களையோ பிடித்துத் தடுத்து வைக்குமாறு கூறினான். சிறிது நாட்களின் பின் வியாபாரியின் உறவினன் கத்தியை எடுத்து அடிமையின் புஜத்தில் குத்திவிட்டு தப்பி ஓடிவிட்டான். வியாபாரி பிரதானிகளுக்கு இலஞ்சம் கொடுத்து, தனக்கு ஆபத்து நேரிடாமல் பார்த்துக் கொள்ளுமாறு கூறினான். இந்த அடிமை போக்கிரித்தனத்துக்கு பேர் போனவன். பலரிடம் பொருட்களை திருடியுள்ளான். என்னிடமும் பலதடவை தான் திருடிய பொருட்களை விற்க வந்துள்ளான்.

சத்தியங்கள், நிலம் போன்ற மிக முக்கியமான விடயங்களாக இருந்தால், சில வேளைகளிற் கொதிக்கும் எண்ணெய்ச் சட்டிக்குள் கைவிட்டுச் சத்தியம் செய்வர். அவைகளுக்குச் சாட்சியங்கள் இல்லாத போது மட்டுந்தான் இதைச் செய்வார்கள். இவ்வாறு செய்வதற்கு ஆளுநரிடமிருந்து எழுத்துமூல அனுமதி பெறப்பட வேண்டும். அனுமதி பெற்ற பின்னர், சமய நடவடிக்கையாக அவர்கள் தமது தலை மற்றும் உடல் நனைய நன்கு நீராட வேண்டும். பின்னர் இரு தரப்பினரும் அன்று முழுவதும் ஒரு வீட்டில் காவலில் வைக்கப்படுவார்கள், அப்போது அவர்களின் உள்ளங் கைகள் ஒரு துணியினாற் சுற்றிக் கட்டப்படும். ஏனென்றாற் சத்தியம் செய்யும் அவர்கள் தங்கள் விரல்களுக்குள் ஏதும் மந்திரங்களை வைத்துக் கொள்ளாமல் இருப்பதற்காக. விண்ணிலும் மண்ணிலும் உள்ள கடவுள் சத்தியமாக என்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றத்தை நான் செய்யவில்லை. அல்லது நான்கு கடவுள் சத்தியமாக சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் நிலம் என்னுடையதாகும் என்று கூறுவர். மற்றவரும் அதே போலக் கூறுவர். இருவரும் தங்கள் தங்கள் நியாயங்களை அங்கு எடுத்துரைப்பர். அவர் கையில் கட்டப்பட்டிருக்கும் துணி அகற்றப்பட்டவுடன் தனது விரல்களை, ஆட்காட்டி விரலையும் நடு விரலையும் மூன்று முறை விட்டெடுப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் கொதிக்கும் சாணிச்சட்டிக்குள் சென்று மற்றவர் அவ்வாறு செய்வார். அதன் பின் அவர்களின் கைகளை முன்போலக் கட்டி அடுத்தநாள் வரை வைத்திருப்பர். அவர்களின் விரல் நுனி தோல் உரிந்து துணி மீது ஒட்டியிருக்கிறதா என்று பரிசோதிப்பர். இந்தச் சத்தியம் செய்யும் நிகழ்வால் அரசனுக்கு பெருமளவு வருமானம் கிடைத்திருக்கிறது. இரு தரப்பினர்க்கும் திருப்தியேற்படுகிறது.

கொதிக்கும் எண்ணெய்ச் சட்டிக்குள் கையை விட்ட சில சம்பவங்களை நான் பரிசோதித்துப் பார்த்த பொழுது விரல்கள், வெந்த புண் இல்லாமலிருப்பதைக் கண்டு அதிசயித்தேன். இது அவர்களின் அறியாமையாக இருக்க வேண்டும். அல்லது எனக்கு விளங்காத, பரம்பரையாக அவர்களிடமுள்ள ஏதோ ஒரு வகைத் தந்திரமாக இருக்க வேண்டும். சட்டத்தின் பிரகாரம் அல்லது வழக்கத்தின் படி இந்த நாட்டில் வழங்கப்படும் தீர்ப்பு நீதிபதியின் விருப்பத்தின்பாற்பட்டதாகும்.

குற்றங்களுக்கு விதிக்கப்படும் தண்டப்பணத்தைக் குற்றவாளி கட்டுதல் வேணடும். இல்லாவிட்டால் அது அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்படும். உத்தியோகத்தர்கள் தண்டப்பணம் கட்டாதவரைக் கண்டால் அவரை அந்த இடத்தில் நிறுத்தி வைப்பர். அவரின் தொப்பியையும் சட்டையையும் கழற்றி விடுவர். தமது காவலர்களை அந்த மனிதன் தண்டப்பணம் கட்டும்வரை அந்த இடத்தில் தடுத்து வைத்திருக்கும்படி கட்டளையிடுவர். அவன் தாமதித்தால் இன்னும் ஒரு பெரிய கல்லைத் தூக்கி வைத்துவிடுவர். இந்த நிலையில் அவன் தண்டப் பணம் கட்டவில்லை என்றால் இன்னும் பாரமான கல்லை அவன் மீது ஏற்றிவிடுவர். தண்டப்பணம் அறவிட இன்னொரு முறையும் உண்டு. முட்செடிகளைப் பிடுங்கி அந்த மனிதனின் காலை அகட்ட வைத்து அதனோடே அவனை இழுப்பர். குற்றவாளி காசைக் கட்டும் வரை திரும்ப திரும்ப இழுப்பர். அதன் பின்னும் அவன் பிடிவாதமாக இருந்தால் அவனைச் சங்கிலியாற் பிணைத்துவிடுவர்.

அவர்களிடையே கடனைப் பெறுவதற்கு ஒரு வழக்கம் உண்டு. அவர்கள் கடன்பட்டவர் வீட்டுக்கு நெகின்தல என்ற செடியின் இலையை எடுத்துக்கொண்டு போவர். அது மிகவும் நஞ்சுள்ள இலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே போய்க் கடன்கொடுத்தவர் தனது கடனைத் தராவிட்டால் இந்த இலையைத்தின்று உயிரை மாய்க்கப் போவதாகச் சத்தியஞ் செய்வர். இதனைக் கண்டு கடன்பட்டவர் பயந்து போவர்.

எனக்குத் தெரிந்த விடயங்கள்

நஞ்சு உட்கொண்டு தமக்கெதிரில் ஒருவர் இறப்பதைத் தடுப்பதற்காகத் தமது குழந்தைகளை அவரிடம் கொடுத்து விடுவதோ விற்று விடுவதோ உண்டு. ஆயினும் அக்குழந்தைகள் தவளும் பருவத்தைக் கடந்து தம்மைத்தாமே கவனித்துக் கொள்ளும் பருவத்தை அடைந்தவைகளாக இருக்க வேண்டும். நஞ்சுண்டு ஒருவர் இறந்தால், அதற்குரிய தொகையைக் காரணமாயிருந்தவர் கொடுக்க வேண்டும். பழிவாங்கும் நோக்கத்துக்காகத்தான் நஞ்சுண்டு இறக்கிறேன் என்று கடன்கொடுத்தவர் கூறினால் கடன்பட்டவர் செங்குத்தான மலைமீது ஏறிக் குதித்தோ தூக்குக் கயிறு மாட்டியோ உயிரை மாய்க்க வேண்டும். அல்லது ஊரைவிட்டுப் போதலுமுண்டு.

இப்போது அவர்கள் மொழியைப் பற்றிக் கொஞ்சம் பேசுவோம். இது இந்தத் தீவில் மட்டும் பேசப்படும் மொழியாகும். இந்திய சமூகங்கள் ஏதும் இம்மொழியை பேசுகிறதா என்று எனக்குத்தெரியவில்லை. சிங்கள மொழிக்கும் மலபார் மொழிக்குமிடையே பொதுவான சில சொற்கள் உள்ளன. அவை ஒன்றிலிருந்து ஒன்று கடன் பெற்றதாக இருக்கலாம். ஆயினும் மலபாரிகள் சிங்கள மொழியை விளங்கிக் கொள்ள மாட்டார்கள். சிங்களவர்களும் அப்படியே. தங்களது மொழி அளவிறந்தது, சரளமானது, அழகானது, நயமுடையது என்பது சிங்களவர்களின் அபிப்பிராயமாகும். அம்மொழியில் நிறையச் சொற்களும் பட்டங்களும் பலதரப்பட்ட வாழ்த்துரைகளுமுண்டு. ஒரு பெண்ணின் தரத்துக்கேற்ப அவளைக் குறிக்கப் பன்னிரண்டு வார்த்தைகள் உண்டு.

புட்டோசி	-	மிகக்குறைந்த தரத்தில் உள்ள பெண்ணைக் குறிக்கும் சொல்.
கிட்டகெல்ல	-	ஒரு இளம் பெண்ணை பவ்வியமாக அழைக்கும் வார்த்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்தா - வயதில் குறைந்த பெண்ணை அழைப்பது. இதை மாமியை அழைக்கவும் பயன் படுத்துவர்.

நன்டகா - கொஞ்சம் வயதில் கூடிய பெண்

நவுன்செரே - சாதாரண பெண்ணை அல்லது தரத்திற் சிறிது கூடிய பெண்ணைக்குறிப்பது.

லம்ஹாமி - தம்மை விட உயர்ந்த பெண்ணைக் குறிப்பது.

எற்றனி - இப்போதும் உயர்ந்த தரத்தில் உள்ளவர்.

லம் - எற்றனி - மிகவும் மதிப்புக்குரிய பெண்.

எற்றனி ஹாமினி - மேலுள்ள தரத்தையும் விட உயர்ந்தவர்

மோகி - வயதில் கூடிய பெண், தரத்தில் அன்று

மோகி வன்சி - முன்னவரை விட மதிப்பில் உயர்ந்தபெண்

ஹெம்மோரேஹாமினி - கொஞ்சம் உயர்ந்த ஆனால் அதி கூடிய தரத்துப் பெண்.

ஹென்டெரெனி - அரசிக்குரியது.

முன்பின் தெரியாத பெண்ணைப்பற்றி அவர்களால் பேசமுடியாது. ஏனென்றால் அப்படிப்பட்டவர்களைக் குறிப்பிட என்ன வார்த்தையை உபயோகிப்பது என்பதை அவர்களாலே தீர்மானிக்க இயலாது. தமக்குரிய அந்தஸ்த்து, பெயரைக்குறிப்பிட்டு அழைத்தால்தான் பெண்கள் முகஞ் சுளிக்கமாட்டார்கள்.

ஆண்களுக்கும் பல வகைப் பட்டப்பெயர்கள் உண்டு. ஆயினும் பெண்களுக்குரியவை போன்று கூடியதல்ல, ஆண்களுக்குரிய பட்டப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்கள் அவர்களின் தொழிலைப் பொறுத்து அமையும். அவர்களிடமிருந்து ஏதும் சலுகைகளைப் பெற வேண்டும் என்றால், அல்லது அவர்கள் மீது அன்பை காட்ட வேண்டும் என்றால், அவர்களுக்குரிய அந்தஸ்துப் பெயர்களால் அவர்களை அழைத்தல் வேண்டும்.

அவர்களிடம் நீ,நீவீர் என்பதற்கு ஏழு அல்லது எட்டுச் சொற்கள் உண்டு. அவர்களின் தரம், அவர்களைப் பெருமைப்படுத்தும் தன்மைக்கேற்றவாறு அவைகளைப் பயன்படுத்துவர். அவைகள் ரொபி, உம்ப, உம்பொலா, கொம்னை. ரொம்ளி, கொம்பலா, ரொம்மச்சி, இந்த சொற்கள் ஏறுவரிசைப்படி ஒன்றை விட மற்றையது உயர்வானது.

சாதாரண உழவர்களும் பயிர் செய்பவர்களும், அவர்களிடையே வித்தியாசம் இல்லை என்றால் அவர்களின் பேச்சு சரளமாக இருக்கும். ஒரு பிரதானியிடம் ஒரு காரியம் ஆக வேண்டும் என்றால் அவர்கள் உடன் பேசத் தொடங்கமாட்டார்கள். பிரதானியின் அந்தஸ்த்துக்கேற்ப, அலங்கார மொழியில், பிரசங்கம் செய்யும் தோரணையில் அவர்கள் பேச்சு இருக்கும். மூச்சுத் திணறிப்பேசுவார்கள், உபசார வார்த்தைகள் நிறைந்திருக்கும். இந்த வகையிற் பேச குழந்தைகளைப் பயிற்றுவிப்பர். இவ்வாறான பேச்சுகளால் மயங்கி பிரதானிகள் மிடுக்குடன் காணப்படுவர்.

மனிதர்கள் யாவரையும் விட மிக உயர்ந்த பெயரைச் சொல்லி மன்னனை மக்கள் விளிப்பார்கள். அது கடவுளுக்கு அடுத்த தரமுள்ள கௌரவப் பெயராகும். போர்க் காலத்தில் அவனை டியோ நாச்சி என்று அழைப்பார்கள். நாச்சி என்ற அடைமொழி இருப்பதால் அது கடவுளை விட உயர்ந்தவர் என்பதைக் குறிக்கிறது. ஆயினும் அரசன் தனக்கெதிராகக் கிளர்ச்சி நடந்ததன் பின்னர் தன்னை அவ்வாறு அழைப்பதை விரும்பவில்லை. அரசன் முன்னிலையில் நான் செய்தேன் என்று, தன்மை ஒருமையில் மக்களில் எவரும் கூறமாட்டார்கள். இந்த நாய் செய்தேன் என்று கூறுவார்கள். உனக்கு எத்தனை பிள்ளைகள் என்று அரசன் கேட்டால், இந்த நாய்க்கு ஆண்குட்டிகள் இத்தனை, பெண்குட்டிகள் இத்தனை என்று கூறுவார்கள். இந்த இடத்தில் அரசனின் மிக உயர்ந்த தரத்தையும் மக்களின் கடைக்கோடி அடிமைத்தனத்தையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்ப சூழ்நிலைகளிற் பயன்படுத்தும் சொற்கள் ஏராளமாக அவர்களிடமுண்டு. அவர்கள் மற்றவர்களின் வீட்டுக்கு வந்தால் வீட்டுக்காரன் சற்று நேரம் கழித்து நீங்கள் எதற்கு வந்தீர்கள், உங்களது தரம் என்ன என்று கேட்பான். நீக்காம (சும்மாதான் வந்தேன்) என்பது பதிலாக இருக்கும். ஏதும் விடயமாக வந்திருந்தாற் கூட, அதுதான் அவர்களின் பொதுவான பதிலாக இருக்கும். இது பற்றி அவர்களிடம் ஒரு நாட்டார் கதை உண்டு.

கடவுள் ஒரு நாள் பூமிக்கு வந்தாராம். அவருக்கு முன்னே கெட்ட ஜீவராசிகள் வந்து தமக்கு இன்னும் கெட்ட தன்மைகளையே அருள வேண்டும் என்று மன்றாடின. கடவுள் அவைகளுக்கு இன்னும் அதிக கெட்ட தன்மைகளை வழங்கினார். இவ்வாறு மற்ற மிருகங்களும் பிராணிகளும் வந்து தத்தமக்கு விருப்பமானவைகளைக் கேட்டன. சில பலத்தையும், சில கால்களையும் சில இறக்கைகளையும் வேண்டின. இவைகள் எல்லாம் வழங்கப்பட்டன. இவைகளுக்குப் பின்னர் வெள்ளை மனிதர்கள் வந்தார்கள். கடவுள் எதற்காக நீங்கள் வந்தீர்கள் என்று கேட்டார். எங்களுக்கு அழகும் உறுதியும் செல்வமும் வழங்க வேண்டும் என்றனர். அவை அவர்களுக்கு வழங்கப்பட்டன. கடைசியாகச் சிங்களவர்கள் வந்தனர். கடவுள் அவர்களிடம் வந்த நோக்கத்தை விசாரித்தார். அதற்கு அவர்கள் நிக்காம என்றனர். அதற்குப் பொருள் சும்மாதான் வந்தோம் என்பதாகும். கடவுள் நீங்கள் சும்மாதான் வந்தீர்கள் என்றால் சும்மாதான் போய்விடுங்கள் என்றார். சிங்களவர்கள் வெறுமையாகத் திரும்பி விட்டனர்.

ஒருவர் இன்னொருவருக்கு ஏதாவது பரிசுப் பொருளைத் தரவிரும்பி அதை அவரிடம் தெரிவித்தால், அதைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்பினாலும், அவர் சொல்வார் ஏப்பா கொயிண்ட, வேண்டாம் உங்களுக்கு நன்றி. இவ்வாறு விலையுயர்ந்த பொருளை உங்களிடமிருந்து எடுக்க முடியுமா என்ற சொற்கள் அவர் வாயிலிருந்து வெளிவரும். அதே கணமே அவர் கையை நீட்டி அப்பரிசை எடுத்துக் கொள்வார்.

பரிசளித்தவருக்கு கைமாறு செய்யும் பழக்கம் அவர்களிடமில்லை. அவர்கள் பரிசை விரும்பிக் கொண்டு தேவையில்லை என்று பாசாங்கு செய்வார்கள். ஒருவர் பக்கத்து வீட்டுக்காரரிடம் ஒரு பொருளைக் கேட்டால் அவர் அப்பொருளைக் கொடுக்க மனமில்லாமல் கொடுப்பார். அவர் வெளிப்படையாக அப்பொருளைத் தரமுடியாது என்று கூறமாட்டார். அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை வெளியே கொடுத்துவிட்டோம் என்று கூறுவார். ஆனால் அப்பொருள் அவர் வீட்டில் தான் இருக்கும்.

அவர்கள் எனது அம்மா ஆணையாக, பிள்ளைகள் ஆணையாக, என்னுடைய இரு கண்சாட்சியாக என்றுதான் கூறுவார்களே தவிர, கடவுள் சத்தியமாக என்று கூறமாட்டார்கள், அவர்களின் சத்தியம் உறுதியானதல்ல. அது அலட்சியம் செய்ய முடியாத வகையில் உள்ளதல்ல. அவர்களின் நடவடிக்கைகள் உண்மையை விட வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டன.

அவர்களின் வசை மற்றும் பரிகாச வார்த்தைகள் வருமாறு; தனது தாயின் முன்னிலையில் ஒரு சகோதரன் மற்றச் சகோதரனிடம் கூறுவான். போய் உனது தாயுடன் படு, மற்றவனும் திருப்பி அதையே கூறுவான். தாய் மகளிடம் கூறுவாள். யொவி ஒப்போட் ஓடவின்ட, போய் உனது அப்பனோடு படு, அவர்கள் தமது பிள்ளைகளை எனது கால்களுக்குக் கீழே தவண்டு பார், உனது மூக்கை வெட்டியெறி, நீ ஊமையாகிப் போக, ஐநூறு பிறவி எடுத்தாலும் ஊமையாகப் பிறப்பாய். பெண்களுக்கு அவர்கள் கூறும் கடுமையான வசை; நீ பத்துக் கீழ்த்தர மனிதர்களுடன் படு என்பதாகும். இதனைக் கேட்டவுடனே வாழ்வதை விட சாதல் மேல் என்று அவர்கள் நினைப்பார்கள். தோட்டத்தில் ஏதும் பழம் அல்லது வேறேதோ களவு போனால் அவர்கள் பெருங்குரலில் அழுது புலம்புவார்கள். யார் அதனை செய்தார் என்பது தெரியாமல், இது கீழ்ச் சாதி பெண்பெற்ற அயோக்கியனின் வேலையாகத்தான் இருக்க வேண்டும் அல்லது கீழ்ச்சாதிகளோடு படுக்கும் வேசையின் வேலையாகத்தான் இருக்க வேண்டும் என்று உரத்துச் சத்தமிடுவார்கள். வெள்ளைக்காரர்கள் மீதும் கிறிஸ்தவர்கள் மீது மாட்டிறைச்சி தின்னும் அடிமைகள் என்ற வசை வார்த்தைகளைப் பிரயோகிப்பார்கள்.

அவர்களின் மொழி பற்றிய பேச்சை அவர்களின் பழமொழிகளின் சிறப்பைக் கூறி முடிக்கிறேன். எனினும் சில அவர்களின் பேச்சைக் களங்கப்படுத்துகிறது.

மிரிஸ்தீலா இங்குறு கத்தா - நான் மிளகை கொடுத்து இஞ்சியைப் பெற்றேன். மனிதர்கள் கெட்டவைகளைப் பரிமாறிக் கொண்டால் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமொழியைக் கூறுவார்கள். போர்த்துகீசர்கள் போக டச்சுக்காரர்கள் வந்ததைக் குறிப்பிட இந்த பழமொழியை அடிக்கடி சொல்வார்கள்.

தத்தா ஹெரெலா படா பேரிண்ட - உனது பல்லைப் பிடுங்கி உனது வயிற்றிலே போடு. கடும் கருமித் தனத்தைக் குறித்து பேசுவது:

கௌல யோனவா ருஸ் அட்டி - சாப்பிடப்போவதற்கு முன்னர் சாப்பாடு தூய்மையாக உள்ளதா வாய்ப்பாக உள்ளதா என்பதைப் பார். இதை எப்போதும் அவர்கள் கவனிப்பர்.

கியல்லாதியன்னே, டிகெறி இல்லாண்ட ஒவ்வா அப்போலா ஹங்குவண்ட் மோர்டி - வெண்ணையை இரவல் கேட்டு வந்தால் ஏன் நான் பானையை மறைக்க வேண்டும். ஒருவன் செய்கின்ற காரியத்தை மறைக்க வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தைக் கொண்டது.

அற்றிங் மிற்றிங் டிலா ஹெற்றரா ஹரகுநோவா - மற்றவரை எதிரியாக்கி விடாதே ஒருவர் உன்னை வெறுத்தால் அவரிடம் ஏன் என்று கேள்.

அன்னுன்னாமின்யயின் எக்க ஒவரோ வாயிங்யோன்டா எப்பா - அடிமைகளுடன் எவ்வித தொடர்புகளோ காரியங்களோ வைத்துக் கொள்ளக் கூடாது. பாதிப்புகள் ஏற்பட்டால் நீதான் பொறுப்பும். அவர்களின் சட்டப்படி அடிமை மீது எந்தப் பொறுப்பும் சாட்ட முடியாது.

இஸ்ஸரா ஒட்டிங் போலன்னவா பொஸ் கொட்டிங்- முதலில் கையைப்பார். பின்னர் வயிற்றை திற. இலஞ்சம் வாங்கிவிட்டு தனது தீர்ப்பைச் சொல்லும் நீதிபதிகளின் செயலைச் சொல்லும் பழமொழி இதுவாகும்.

ஏரிலிருந்து உழவனை மீட்டு, சேற்றைக் கழுவி, அவன் நாட்டை ஆள பொருத்தமானவனா என்பதைப் பார்.கண்டிப் பிரதேசத்தில் ஹென்டரூ தேசத்திற் சிறப்பு வாய்ந்த மனிதர்கள் உள்ளனர். அவர்கள் ஏழையாயினும் நல்ல பண்பும் அறிவும் நிதானமும் வாய்க்கப் பெற்றவர்கள். அவர்கள் நாட்டை ஆளத்தகுதி பெற்றவர்கள். என்பதைக் காட்டும் சொல்லடை இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரும் அரசனையும் பிச்சைக்காரனையும் தண்டிக்க முடியாது. முன்னையவர் மக்கள் தண்டனைக்கு அப்பாற்பட்டவர். பின்னையவரை குற்றஞ் சாட்ட எவரும் முன்வரார்.

நயாவும் பொலங்காவும் போல - எப்பொழுதும் ஒத்துவராத இரு எதிரிகளைக் குறிப்பது. இந்த இரு பாம்புகள் பற்றி ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளது.

நீதிபதிக்கு பணம் கொடுக்கக் கூடியவன், சரியோ பிழையோ பற்றி கவலைப்பட தேவையில்லை. பெரிய மனிதர்களின் இலஞ்ச ஊழல்களையும் சொல்வது.

எங்களுக்கு கிரகஞ் சரியில்லை என்றால் கடவுளை நோக்கி என்ன பலன்? இது கிரக பலன் சரியில்லாவிட்டால் கடவுளால் கூட மாற்ற முடியாது. என்ற கருத்தைச் சொல்வது.

தலைவலிக்கு முன்னால் குளிர் காய்ச்சல் ஒன்றும் பெரிதல்ல. நாடு குளிர்காய்ச்சலுக்கு உட்பட்டால், பொறுப்புள்ளவர்களுக்கு அது தலைவலியாக இருக்கும். நான் இவ்வாறு அவர்களின் பல பழமொழிகளைச் சொல்லமுடியும். போதுமான அளவு பழமொழிகளைக் கூறிவிட்டதால் இத்துடன் நிறுத்திக் கொள்கின்றேன்.

இந்த மொழியின் இலக்கணத்தை அறிந்தவன் என்று பாசாங்கு பண்ண நான் விரும்பவில்லை. அதை விளக்குவதைப் படித்தவர்கள் பொறுப்பில் விட்டு விடுகிறேன். சில சொற்களின் பொருளை மாத்திரமே நான் அறிவேன். சில பெயர் பன்மைகள் வருமாறு;

மினியா	-	மனிதன்	மினிஸ்	-	மனிதர்கள்
ககா	-	மரம்	கொஸ்	-	மரங்கள்
குகுலா	-	ஒரு கோழி	குகுலோங்	-	கோழிகள்
கொள்ளா	-	பையன்	கொள்ளனி	-	பையன்கள்
ஒகொன்	-	குதிரை	ஒபியோ	-	குதிரைகள்
பொலொஸ்கா	-	பலாமரம்	பொலஸ்	-	பலா மரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பெயர்ச் சொல்லுக்குப் பின்னர் எண்ணிக்கையைப் பலதை குறிப்பிடப் பயன்படுத்துவர். உதாரணமாக திஸா இரண்டு மூன்று என்றவாறு ஒரு முட்டை வித்திற வித்திற கட்டெய் என்றால் முட்டை பல.

வினைச்சொற்களைக் கையாளும் முறை

மம் கொன்னா	-	நான் சாப்பிடுகிறேன்
மம் கொன்னயும்	-	நான் சாப்பிடுவேன்
மம் காவா	-	நான் சாப்பிட்டுக் கொண்டுள்ளேன்
கொனோவா	-	சாப்பிடுதல்
கவ்பொடி	-	அவனைச் சாப்பிட விடு
கவ்ம்	-	எங்களை சாப்பிட விடு
கொண்டா	-	சாப்பிடுவதற்கு
கவ்லா	-	சாப்பிட்டுக் கொண்டது
மம் தெனியம்	-	நான் கொடுப்பேன்
மம் தெனன் - நா	-	நான் கொடுத்தேன்
தீலா	-	நான் கொடுத்துள்ளேன்
தென்டி	-	நான் கொடுப்பேனா / கொடுப்பதற்கு
தொம்	-	எங்களை கொடுக்கவிடு
தெனோவா	-	கொடுத்தல்
டிப்போன்	-	அவனுக்கு கொடு
துன்னா அல்லது தீலா தியன்ன	-	கொடுத்துவிட்டது
மம்யோன்யம்	-	நான் போவேன்
மம்யண்ட ஒனி	-	நான் போவேன்
யோங்க	-	எங்களை போகவிடு
யனவா	-	போதல்
யோன்டாடிபாடி	-	அவனை போக விடு
பொல்லாச்	-	போய்விட்டான் (சாதாரண ஆள்)
பொல்லாடா	-	போய் விட்டார் (உயர்தர ஆண்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மம் ஒய்	-	நான் இருக்கிறேன்
மம் கியா அட்டி	-	நான் இருந்தேன் (இருந்தேன் என்பதை முதன்மைப்படுத்துவது)
எயா	-	அவன் அல்லது அவர்கள் அல்லது
	-	அவன் இருக்கிறான்
கியதி என்டி	-	அவனை விடு அல்லது அவனுக்கு கொடு அல்லது அவனை போக விடு

தியோ	-	கடவுள்	கானி	-	பெண்
தியோ லோகோ	-	சொர்க்கம்	றொட்குரா	-	அரசன்
ஜக்கோ	-	பேய்	ஹால்	-	அரிசி
நராகௌடா	-	நரகம்	பத்	-	அவிந்த அரிசி
ஒகோஸ்	-	ஆகாயம்	பங்கலே	-	மேசை
தெயூர்	-	நீர்	வெலாவ	-	நேரம்
கின்தரெ	-	நெருப்பு	வெளரி	-	பருவம்
			கோலண்டிங்	-	அறுவடை

அப்பா, பியன்னா, அப்பாச்சி	}	தந்தை	துவ, தொனியன்னா	} மகள்
அம்மா, அம்மன்டியா	}	தாய்		
புத்தா, புதான்டி	}	மகன்		

மல	-	பூ
கவ்கா	-	மரம்
குரில்ல	-	ஒரு பறவை
கம்	-	பட்டணம்

ஒப்புலண்த	-	துணியை துவைப்பதற்கு
நவ்ண்ட	-	உடம்பை கழுவுவதற்கு
பின்னவுண்	-	நீந்துவதற்கு
கப்பவுண்ட்	-	வெட்டுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹெரண்ட	-	தாங்கிக் கொள்ளுவதற்கு
ஹெபகவ்ண்ட்	-	கடிப்பதற்கு
கோரண்ட	-	செய்வதற்கு
கொரோவண்ட	-	செய்வதற்குக் காரணமான

கௌமனிக்	-	ஒரு பயணம்

கௌமன கோரோவெண்ட - { வார்த்தைக்கு வார்த்தை அனுப்புவதற்கு / ஒரு பிரயாணத்தை மேற் கொள்வதற்கு }

ஹெவோயா, ஹெவோருன்னா, ஹெவோநன்னேரா } இந்த சொற்கள் படைவீரர்களைக் குறிக்கிறன. அவைகள வரிசைப்படி ஒன்றிலிருந்து ஒன்று உயர்ந்தவை கடைசி இரண்டும் கனவான் படை வீரர்கள்

ஹெவாகொம்	-	சண்டை செய்வதற்கு
கோரெண்ட்	-	படைவீரர்கள் செயலைக்குறிப்பதற்கு

மிகி	-	சாவதற்கு
மிச்	-	சா
மியென்யும்	-	நான் சாவேன்
மயோனோவா	-	சாதல்
எப்பா	-	முடியாது

நகிற்றிடை	-	எழும்புவதற்கு
உபண்தெனவா	-	மீளெழுச்சி
நகிற்றின்ட	-	எழும்ப வேண்டாம்

டொன்னானுட்	-	கட்டுவதற்கு
டொன்னிற்	-	கட்டு
டொன்செரோவிற்விச்	-	இது முடிந்தது
நா அல்லது நதி	-	இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நான்கு சொற்கள் பற்றி நான் அவதானித்த விடயம் அவர்கள் மொழியிற் கடவுளுக்கும் சொர்க்கத்துக்கும் சொற்களில்லை. அச்சொற்கள் அவர்கள் போர்த்துக்கீச மொழியிலிருந்து கடன் பெற்றிருக்க வேண்டும். அடுத்த இரண்டு சொற்கள் பேய்க்கும் நரகத்துக்குமானது. அவர்களின் சொந்த மொழிச் சொற்களாகும். அவைகள் வருமாறு.

எக்கோய்	- *I*	தொளகொய்	- *XII*
தெக்கோய்	- *II*	டகடுனாய்	- *XIII*
துணாய்	- *III*	டகஹதராய்	- *XIV*
ஹெதறரோய்	- *IV*	பவ்லொஹேய்	- *XV*
பஹொய்	- *V*	தஹேதிஹதராய்	- *XVI*
ஹெய்ஹெய்	- *VI*	டஹஹெட்டாய்	- *XVII*
ஹொத்ஹேய்	- *VII*	டஹஅட்டெய்	- *XVIII*
அட்டாய்	- *VIII*	டஹநவ்வோய்	- *XIX*
நவ்வோய்	- *IX*	விஸ்ஸாய்	- *XX*
டவ்கொய்கொய்	- *X*	ஹெட்டலெஹெய்	- *XL*
எக்கொலகய்	- *XI*	பளகாய்	- *L*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

அவர்களின் கல்வித்தரம், வானியல் மற்றும் மந்திரவித்தை

அவர்களிடம் கல்விப்பயிற்சி குறைவு. அவர்கள் சாதாரணமாக எழுத வாசிக்கக் கற்றுக் கொள்வார்கள். எழுத வாசிக்கத் தெரியாமல் இருத்தல் அங்கே ஒன்றும் வெட்கக்கேடானதல்ல.

அவர்களிடமுள்ள புத்தகங்கள் சமய சம்பந்தமானவையும் மருத்துவம் சம்பந்தமானவையுமாகும். அவர்களது பிரதான கலை, வானியலும் மந்திரவித்தையுமாகும். பேச்சுவழக்கை விட ஒரு வித்தியாசமான மொழி, எங்களுக்கு இலத்தீன் இருப்பது போல அவர்களுக்குண்டு. நிலத்தில் மண்ணைப் பரப்பி, கையினால் ஒப்பமாக்கி அதன் மீது விரல்களால் எழுதிப்பழகுவர்.

அவர்கள் காகிதத்தில் எழுதுவதில்லை. காகிதம் அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ. அவர்கள் தளப்பத்து ஓலை மீது சற்று பெரிய இரும்பு ஆணிகளால் எழுதுவர். இந்த ஓலையில் எழுதியதை மடிக்க முடியாது; மிருகங்களின் தோல் மாதிரிச் சுருட்டி வைக்கலாம்.

அவர்கள் புத்தகம் எழுத விரும்பினால், தளப்பத்து ஓலைகளை எடுத்து ஒரு அடி அல்லது எட்டடித் துண்டுகளாக வெட்டுவர். அவை மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல் அகலமுடையவைகளாக இருக்கும். இதனில் நாங்கள் எழுதுவது போல் இடப்பக்கமிருந்து வலப்பக்கமாக எழுதிக் கொண்டு போவர். புத்தகங்களுக்கு அட்டையிடுவது போல ஒரு மெல்லிய மரப்பலகையை எடுத்து இரண்டு நூல்களைத் துளைத்துக் கட்டி ஒவ்வொரு ஓலைத்துண்டின் ஊடாகத் துவாரமிட்டு, அதனுள் நூலைச்செருகிச் சேர்த்து மேற்பக்கத்தில் இன்னொரு மட்டையை வைத்துக் கட்டுவர். புத்தகத்தின் இருபக்கமும் அட்டையிருப்பது போல ஏட்டின் இரு பக்கமும் மரமட்டைகள் இருக்கும். வாசிக்கும் போது ஒவ்வொரு ஓலையாக பின்னுக்குக் கட்டி விடுவர். சிதையில் கொள்ளிக்கட்டைகளை அடுக்கி வைத்தது போல் அவைகள் இருக்கும்.

சாவதானமாக இருக்கும் கொன்னிகள் என்னும் மதகுருமார் சமயச்சடங்குகள் என்று சொல்லத்தக்க பொன்னாவைப் பற்றி புத்தகங்கள் எழுதுவார்கள். அவைகளைப் பெரிய மனிதர்களிடம் கொண்டு போய்க் கொடுத்துச் சன்மானம் பெறுவர்.

அரசன் தனது உத்தியோகஸ்த்தர்களுக்கு உத்தரவுகளை அனுப்புவதற்கு இவ்வாறு ஓலையில் எழுதி, தனக்குரிய பாணியிற்ச் சுற்றி, உரியவர்களுக்குச் சேர ஒழுங்குகள் செய்வான். இந்தப் பாணியில் சுற்றுவதை மற்றவர்கள் செய்யமுடியாது.

அவர்கள் முக்கிய நிகழ்வுகளை எழுதி பாதுகாப்பர். ரௌஸ் கோல் என்னும் இன்னொரு ஓலையையும் பயன்படுத்துவர். இது தளப்பத்து ஓலைகளை விட உறுதியானதும் விறைப்பானதுமாகும். ஆயினும் மடக்க முடியாதது.

தற்போதைய அரசனின் தந்தை போன்ற உயர்தரத்து மதகுருமார் தான் வானியல் பற்றி அறிந்து அதைப் பயன்படுத்துகின்றனர். ஆயினும் பொதுவாக நெசவாளர்கள்தான் வானியலாளர்களாக உள்ளனர். இவர்கள் சந்திர சூரிய கிரகணங்களைச் சரியாக் கணித்துச் சொல்வர். ஒரு மாதத்திற்குரிய பஞ்சாங்கங்களை அவர்கள் ஆக்கிக் கொள்வர். அது லீட் என்று அழைக்கப்படும். அதன் மூலம் சந்திரனின் வயது, விதைப்பதற்கும் அறுவடை செய்வதற்கும் ஏற்ற பருவங்கள், பிரயாணம் போவதற்குரிய நாட்கள், வேறு வேலை தொடங்குதற்கான நேரங்கள் என்பவனவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியலாம். இவைகளுக்கேற்ற சுபநேரங்கள் அமையவில்லை என்றால் அடுத்தமாதத்தில் அதற்குரிய சுபநேரங்கள் தேடுவர்.

இந்த வானியலாளர்கள்தான் வருடம் எத்தருணத்தில் முடிகிறது என்று சொல்வர். அவர்களைச் சோதிடர் என்பதைவிட வானியலாளர்கள் என்பதே பொருத்தமானது. நட்சத்திரம் மற்றும் ஒன்பது கிரகங்கள் பற்றி நன்கு அறிந்துள்ளனர். இக்கிரகங்கள்தான் ஒருவர் நோயுற்றாற் சுகமடைவாரா இல்லையா என்பதைத் தெரிவிக்கின்றனவாம். குழந்தை நல்ல கிரகபலனிற் பிறந்தாற் பேணி வளர்ப்பதையும், கெட்ட கிரக பலனிற் பிறந்தாற் கொல்லப்படுவதையும் இந்த வானியலாளர்களின் எதிர்வு கூறல்கள்தான் தீர்மானிக்கின்றன.

ஒருவர் நோய்வாய்ப்பட்டால் அவருடைய ஹன்னாஹம்பொத் என்கிற சாதகத்தை எடுத்துக் கொண்டு இவ்வானியலாளர்களிடம் வருவார்கள். அவர் நோயாளியின் தலைவிதியைக் கூறுவார். இந்த வானியலாளர்கள் பிரயாணம் மற்றும் காரியங்கள் செய்வதற்குரிய சரியான நேரத்தைக் குறித்துக் கொடுப்பர். ஆண் பெண் சாதகத்தைப் பார்த்துத் திருமணப் பொருத்தத்தை கூறுவார்கள்.

பண்டைய அரசனான சக்காவர்ஸி காலத்திலிருந்து அவர்கள் காலத்தைக் கணிக்கிறார்கள். அவர்கள் 365 நாட்கள் கொண்ட வருடத்தை மார்ச் மாதத்தில் எட்டாம் திகதிக்கும் இருபதாம் திகதிக்குமிடையே வரும் நாளில் ஆரம்பிக்கின்றனர். மிக எளிதாக ஒன்பதாம் திகதிக்கும் இருபதாம் திகதிக்குமிடையே ஆரம்பிக்கின்றனர். இது லீப் வருடம் என்று நினைக்கின்றேன். அவர்கள் புது வருடத்தை ஒவ்ருத் என அழைப்பார்கள். அதை வசசிமஹா, அஹகலமஹா, மினேச்சலா, போச்மோனா என்று பன்னிரண்டு மாதங்களாகப் பிரிப்பர். வருடப்பிறப்பன்று புண்ணிய காலத்தில் தமது கருமங்களைச் செய்வர். இந்த வருடப் பிறப்பு எங்களுடைய சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை அல்லது செவ்வாய்கிழமைகளில் வருகிறது. அன்று அவர்களின் கோயில்களிற் பூசைகளும் சடங்குகளும் நடக்கும்.

ரௌசக் என்னும் ஒரு நாள் முப்பது பாயா அல்லது மணித்தியாலமாக பிரிக்கப்படுகின்றது. சூரியன் உதிப்பதிலிருந்து மீண்டும் சூரியன் உதிப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை ஒரு நாளாகக் கருதப்படுகின்றது. உச்சியில் சூரியன் இருக்கும் நண்பகலில் 12 மணியில் பதினைந்து பாயாக கணிக்கப்படுகிறது. அவர்களிடம் ஒரு பூ இருக்கிறது. அது இரவு ஆரம்பமாவதற்கு ஏழுபாய்க்கு முன்னர் மலர்கிறது.

அவர்களிடம் கடிகாரங்களோ நிழற்கடிகைகளோ இல்லை. அவர்கள் ஊகத்தின் படிதான் நேரத்தை நோக்குகின்றனர். அரசன் நேரத்தை அளவிடக் கருவி ஒன்றை வைத்துள்ளான். அது அரைகால் கலன் அளவுடைய கிண்ணமாகும். அதன் அடியில் ஒரு துவாரம் இருக்கும். அதன் அடியில் ஒரு தண்ணீர்க் குடம் இருக்கும்.கிண்ணத்துக்குள் இருந்து ஒழுகும் தண்ணீர் இடத்துக்கிடம் வரும் இந்த கிண்ணத்தில் இருக்கும் தண்ணீர் முற்றாக ஒழுகி முடிய எடுக்கும் நேரம் ஒரு பாயாவாகும். அரசனைத் தவிர வேறு யாரிடமும் இந்த உபகரணமில்லை. அவன் இதனை இயக்க ஒரு ஆளை ஏற்பாடு பண்ணி வைத்துள்ளான். தங்களுடைய தானியத்தை விதைப்பதற்காக சுபநேரத்தைக் கணிப்பதற்காக மக்கள் இவ்வுபகரணத்தைப் பயன்படுத்த அரசன் அனுமதிப்பதுண்டு.

அவர்கள் இரு குறிப்பிடத்தக்க சந்தர்ப்பங்களில் மந்திர வித்தையை காட்டுவர்.

நுவரகலாவிய பிரதேசம் அதனுடைய நீர் வளம் காரணமாகக் பெருமளவு தானியம் விளையும் பிரதேசமாக உள்ளது. ஹெட்கோர்லி பிராந்தியத்தில் இருக்கும் கோர்ணகல் பிரதேசம் அடிக்கடி பஞ்சம் ஏற்படும் பகுதியாக இருந்தது. இதனால் அரசன் கோர்ணகல் மக்களுக்கு தானியமூட்டைகளைக் கொண்டு வந்து கொடுக்குமாறு நுவரகாலவிய மக்களுக்கு கட்டளையிட்டான். கோர்ணகல் நகருக்கு வந்ததும் தானிய மூட்டைகளிற் சிறிய ஓட்டை போடுமாறு கூறினான். தானியம் சிறிதளவு சிந்திக் கொண்டு வந்தது. ஒரு வீட்டின் வாசலிற் சிந்தியிருக்கும் தானியத்தை வீட்டுக்காரன் எடுத்துக் கொள்ளலாம் என்றான்.

நுவரகலாவிய மக்களிடம் அரசன் கேட்டான், இதற்கு பிரதியுபகாரமாக உங்களுக்கு என்ன வேண்டும்? அதற்கு அவர்கள் எங்களிடம் போதியளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

தானியம் உண்டு. எங்களுக்கு கஹா, மிரிஸ்தான் தேவையாக உள்ளது என்றனர். கஹமிரிஸ் என்றால் மஞ்சளும் மிளகுமாகும்.

தன்னால் முடிந்தளவு மஞ்சளும் மிளகும் கொடுத்து அரசன் அவர்களைச் சந்தோசமாக அனுப்பி வைத்தான். அவர்கள் நுவரகலாவுக்கு வந்தவுடன் அவற்றைத் தம்மிடையே பங்கிட்டுக் கொண்டனர். பங்கிட்ட போது ஒவ்வொருவருக்கும் சிறிய அளவே கிடைத்தது. அதை அரைத்து உணவுக்குக் பயன்படுத்திக் கொண்டனர். அவர்கள் சாப்பிட்ட தட்டை ஆற்றிலே கழுவினர். இதிலிருந்தே நுவரகலாவ என்ற பெயர் வந்தது என்று கூறுகின்றனர். நுவர் என்றால் நகரம்,கஹா என்றால் மஞ்சள், லவா அல்லது லல்லா என்றால் ஆற்றில் போடு.

இந்த செயற்பாடு அவர்களுக்குப் பிடிக்காமல் இருந்ததையும், தனது பிரதியுபகாரம் அவர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை என்பதையும், அரசன் கேள்விப்பட்டான். ஆயினும் எந்தப் பிரதிபலிப்பையும் வெளிக்காட்டவில்லை. சில காலத்தின் பின் ஏன் அவர்களின் பிரதேசம் இவ்வளவு செழிப்பாக இருக்கிறது என்று அறிவதற்காக அவர்களின் பிரதேசத்திற்கு ஒரு பிரயாணத்தை மேற்கொண்டான். எங்கள் பக்கத்தில் ஓடி வரும் ஆற்று நீரை தேக்கிக் குளமொன்று அமைத்திருக்கிறோம். அதிலிருந்து வாய்க்கால்கள் வெட்டி எங்கள் வயல்களுக்கு நீரைப் பாய்ச்சுகிறோம். அதுதான் எங்கள் வளத்துக்குக் காரணமென்று அங்குள்ளவர்கள் கூறினர். இக்குளம் பெரும் வினைத்திறனுடனும் மிகுந்த பிரயாசையுடனும் அமைக்கப்பட்டுள்ளது. பாதி சந்திரன் வடிவில் கற்பாறைகளைப் போட்டுப் பெரும் மண் அணைகளை யெழுப்பி இக்குளத்தை வடிவமைத்துள்ளனர். தனது இருப்பிடத்துக்கு மீண்ட அரசன் மந்திரவாதிகளைக் கொண்டு இந்த அணைக்கட்டை உடைத்து விட்டான். இதனால் செல்வம் கொழித்த இப்பிரதேசம் இப்போது வானம் பார்த்த பூமியாகிவிட்டது.

ஏதும் திருட்டு நடந்தால் திருடனைக் கண்டு பிடிப்பதற்கு அவன் சென்ற இடத்தில் ஒரு பாக்கை எடுத்து மந்திரித்துப் போடுவார்கள் பின் அதனுள் ஒரு தடியைச் செருகி ஒருவர் அதனைக் கையில் எடுப்பர். அத்தடிக்கு மந்திர உச்சாடனங்கள் நடந்து கொண்டிருக்கும். கமுகம் பாளையால் தடியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசிறிக் கொண்டு வருவார்கள்; மலர் தூவுவார்கள். அத்தடி திருடன் இருக்கும் இடத்தை நோக்கி வழிநடத்தும். கடைசியில் திருடன் பாதத்தை பாக்குத்தடி தொடும். இது திருடனைப் பிடிப்பதற்குச் சிறந்த முறையன்று. மந்திரவாதி தனது மனத்தில் நினைத்திருப்பவரைக் காட்டிக் கொடுக்கும் செயற்பாடு இதுவாகும். ஒரு வேளை தடி காட்டிக் கொடுத்தவர் உண்மையாகத் திருடி இருந்தாற் குற்றத்தை ஒப்புக் கொள்வதுமுண்டு.

தைரியமுள்ள மனிதர்கள் ஒன்று திரண்டு மந்திரவாதியை அடித்து விரட்டி விடுவதுமுண்டு. திருடர்கள் ஒரு தந்திரம் செய்வார்கள். தாங்கள் வந்த சில வழியில் சில பொருட்களை விட்டு ஆள் மாறி விடுவார்கள். வந்த பாக்குத்தடி அங்குமிங்கும் நகராமல் நின்று விடும். எனக்கு இந்தத் தடிகள் மீது சந்தேகம் வந்தது. நான் இந்தத் தடியை எடுத்த போதும், அவர்கள் மந்திரம் ஓதி, மலர் தூவி, கமுகம் பாளையால் விசிறிய போதும் அத்தடி என்னை நகர்த்தவில்லை. மற்றவர்கள் பிடித்த போது நகர்ந்தது. எனக்கு பாக்குத்தடி தங்களை நகர்த்துகின்றது என்ற அவர்களின் கூற்றில் பலத்த சந்தேகம் ஏற்படுகிறது.

இங்கே பாறையில் வெட்டப்பட்டிருக்கும் பண்டைக்கால எழுத்துக்கள் யாவருக்கும் ஒரு பெரும் புதிராக உள்ளன. இவ்வாறு எழுதப்பட்ட பாறைகள் கண்டியிலும் வடபகுதியிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. சில யார் அளவில், இந்த உலகம் அழியும் வரை நிலைக்கத்தக்க வகையில் இவைகள் பாறைகளில் மிக ஆழமாக வெட்டப்பட்டுள்ளன. ஒருவராலும் அவைகளை வாசிக்கவோ விளக்கவோ முடியாது. இதைப்பற்றி நான் மலபாரிகள், சிங்களவர்கள், மூர்கள் ஆகியோரிடமெல்லாம் கேட்டுப்பார்த்தேன். அவர்களில் அதைப்பற்றி அறிந்தவர் யாருமில்லை. யட்டிநுவர பிராந்தியத்திலே கடலாதெனிய என்னும் இடத்தில் ஒரு கோயில் உண்டு. அதன் பக்கத்திற் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவைகள் ஏதோவொன்றின் நினைவாக எழுதப்பட்டவைகளாக இருக்க வேண்டும். இவைகளைக் கற்றவர்கள் ஆய்வு செய்ய ஒழுங்கு செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

நோய், இறப்பு மற்றும் அடக்கம்

அவர்களின் நோய்ப் படுக்கைகளையும், தங்கள் உற்றார் உறவினர்களின் இறந்த உடல்களுக்கு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதையும், இந் நிகழ்வுகளின் போது அவர்களின் நடத்தைகளையும் உங்களுக்குச் சொல்லப்போகிறேன். அவர்கள் நீண்ட காலம் வாழ்கின்றனர். இந்த அரசனின் சகோதரி இறந்தபோது அவளுக்கு நூறு வயதுக்குக் கிட்ட இருந்தது. அவர்கள் நல்ல உடல் நலத்தோடும், உடல் கட்டுடனும் காணப்படுகின்றனர். இந்நாடு உட்படுகிற நோய்கள் மலேரியாயும் காய்ச்சலுமாகும். சில வேளைகளில் வயிற்றுளைச்சலுக்கும் பெரியம்மைக்கும் ஆளாகின்றனர். இவைகளிலிருந்து விடுபட மந்திர உச்சாடனங்களால் முடியாது. சில வேளைகளில் மற்றக் கோளாறுகளுக்கு இவைகள் பரிகாரமாகலாம். அவர்கள் எகிப்திய மந்திரவாதிகள் போல தமது பாவங்களுக்கு மன்னிப்புக் கோருகின்றனர். அவர்கள் உடலில் ஏற்படும் வீக்கத்துக்கும் வேதனைக்கும் மிகச் சிறந்த எண்ணெய்களையும் களிம்புகளையும் வைத்துள்ளனர்.

இங்கே தொழில் முறை வைத்தியர்களோ, சத்திரசிகிச்சை நிபுணர்களோ இல்லை. ஆனால் அவர்களிடம் பொதுவான சில திறமைகள் உ ண்டு. காட்டில் இருக்கும் இலைகள், பட்டைகள் கொண்டு மருந்துகளை அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குகின்றனர். இவைகளைக் கொண்டு வாந்தியெடுக்கவும் பேதியாகவும் செய்கின்றனர். பச்சைக் காயங்களையும் கண்நோவுகளையும் ஆற்றுகின்றனர்.

அவர்களுடைய மருத்துவம் பற்றியும் அவர்களின் கலவைகள் பற்றியும் சில குறிப்புகள் தருவோம்.

பேதியாவதற்கு டல்லுகோவா என்ற மரத்தை அவர்கள் உபயோகிக்கின்றனர். இம்மரத்தில் இலைகள் இல்லை. நொய்மையான சதையால் ஆக்கப்பட்ட இம்மரத்தில் முட்கள் உண்டு. வெட்டினால் பால் வடியும். இப்பாலில் முழுமையாக மிளகு மணிகளைப் போட்டு ஓர் இரவு பூராகவும் ஊறவைப்பர். அடுத்த நாள் இந்த மணிகளை எடுத்துத் துப்பரவாக்கி கொறுக்கா என்னும் புளிப் பழத்தையும் நிறையத் தண்ணீரையும் சேர்த்து அவிப்பார்கள். பின்னர் வடித்து இந்தத் தண்ணீரைக் குடித்தால் மிக இலகுவாகப் பேதியாகும். இந்தப் பால் நச்சுத்தன்மை வாய்ந்தது; எனினும் ஆடுகள் பேராவலுடன் உண்ணும்; பாதிப்படையாது.

வாந்தியெடுக்க வைப்பதற்கு கோவா இலையின் நிறத்தில் வரதோல் என்னும் செடியின் இலை ஒன்றுண்டு. இது சிறிய செடி. இதன் தண்டு மூன்றடி உயரம் வரை வளரும். இதன் இலையைத் தண்டிலிருந்து பிடுங்கியவுடன் பால் வழியும். அந்தப் பாலை எடுத்து அதனுள் சிறிது உப்பைக்கிள்ளிப் போட்டு ஓர் இரவு பூராகவும் வைத்திருப்பார்கள். அடுத்த நாள் போட்ட உப்பை எடுத்து விடுவார்கள். அது பாலிற் கரையாது. ஆனால் சுத்தமாக கழுவப்பட்டிருக்கும். பின்னர் இதனுள் அரிசியும் தண்ணீரும் சேர்த்துக் கொதிக்க வைக்கப்பட்டிருக்கும். இதை அடுப்பிலிருந்து இறக்கியவுடன் இதனுடன் சிறிது உப்பைக் கலந்து குடித்தால் வாந்தி தானாக வரும்.

ஜோபோல்ஸ் என்னும் சிறிய பழத்தைக் கொண்டு கடும் பேதியை அவர்கள் தூண்டிவிடுவார்கள். இது நச்சுத்தன்மை கொண்ட பழமாகும். இதை எடுத்து நீரில் புளியையும் மிளகையும் கலந்து, கொதிக்க வைத்துப் பேதியாக வேண்டியவருக்குக் கொடுப்பார்கள். உடனே பேதியாகும்.

புண்களைக் குணமாக்க மொக்கினா கொல என்றழைக்கப்படும் இலை ஒன்று அவர்களிடம் உண்டு. அது எங்களுடைய ரூன்ஹப்கிரவுண்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலை போன்றது. ஆனால் அவை பிரகாசமான பச்சை நிறமானவை. இந்த இலையை எடுத்துப் புண்ணில் ஒட்டிவிடுவார்கள். புண் மிக விரைவில் ஆறிவிடும்.

தொண்டை வீக்கம் வந்தால் அமரங்கா மரத்தின் பட்டைகளை எடுத்து அரைத்து, அதில் மஞ்சட் தூளையும் கலந்து வாழையிலையிற் சுற்றிச் சுடுதணலுக்குள் ஓரிரு மணித்தியாலம் வைக்க வேண்டும். அதனை எடுத்து சப்பிச் சாறை விழுங்கினால் தொண்டை வீக்கம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும். எனக்கே இந்த அனுபவம் ஏற்ப்பட்டிருக்கிறது. ஒரு தடவை தொண்டை வீக்கம் வந்த போது மேற் சொன்னவாறு செய்ய ஓர் இரவுக்குள் மாயமாய் மறைந்து விட்டது.

கண்களிற் சிறுபுண் அல்லது காயங்கள் இருந்தால் அவுல் கண்ட கோல், கொண்டகோல் என்னும் இரு மூலிகைகளை எடுத்து அவைகளின் சாறுடன் முலைப்பாலைக் கலந்து கண்ணுக்குள் துளித்துளியாக விடுவார்கள். என்னுடைய கண்ணின் நீல மொழியில் ஒரு முள்ளேறி எனக்குப் பெரும் வேதனையைக் கொடுத்தது. சிங்களவர்கள் மேற்சொன்ன மாதிரிச் செய்யும் படி எனக்கு ஆலோசனை வழங்கினர். ஆயினும் நான் மிக மெல்லிய இடத்தில் அவ்வாறான பொருட்களையிட்டு பரீட்சித்துப் பார்க்க விரும்பவில்லை. கடவுளிடம் முறையிட்டேன். சில நாட்களுக்குப் பின் அந்த முள் தானாக விழுந்துவிட்டது.

மியூசலை விட பெரிய பழம் ஒன்று, கௌடௌரோ ஜிட்டி என்று அழைக்கப்படுவது. அரிப்பை விரைந்து குணமாக்க வல்லது. இந்தப் பழத்தைத் துண்டுகளாக நறுக்கித் தேங்காய் எண்ணெயிலே பொரிப்பர். பின்னர் எடுத்து எண்ணெய்யுடன் சேர்த்துக் களிம்பாகப் பூசுவர்.

பிள்ளை பெற்ற பெண்களுக்கேற்படும் சாதாரண அசதியை நீக்க மிளகு, இஞ்சியுடன் கொரக்கா புளியையும் நீரில் கலந்து அவிப்பார்கள். பின்னர் நீரை வடித்துக் கொடுக்க அசதி நீங்கும். இந்தக் கொரக்கா என்பது அப்பிள் பழம் போன்ற ஒரு பழமாயினும், அதன் ஓரத்திற் பலமடிப்புக்களைக் கொண்டது. பழுத்தவுடன் சிவப்பு நிறத்திற் காணப்படும். இது புளிப்புச் சுவையுடையது. நாங்கள் தோடை, எலுமிச்சையை பாவிப்பது போல இதனை அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிப்பர். இதன் உட்பாகம் இனிப்பாகவும் மகிழ்வூட்டக் கூடியதாகவுமிருக்கும். மெல்லிய சதை கொண்டது. நீங்கள் இப்பழத்தைக் கடித்தால் பற்களில் அதன் சதை ஒட்டிக்கொள்ளும். அதன் முக்கிய உபயோகம் தயாரிப்புக்களை புளிப்புச் சுவையுடையதாக்கப் பயன்படுத்துவதாகும். அவர்கள் இதைப் பொறுக்கி அதனுடைய ஓட்டை விரலால் நசுக்கி மடிப்புள்ள பாகத்தை எடுத்துக் கொள்வர். பின்னர் வெயிலில் காயவைப்பர். அவை பார்ப்பதற்கு மனிதனின் காதுகள் போன்றிருக்கும். அதை அவர்கள் தங்கள் உபயோகத்துக்கு வைத்திருப்பர். ஒரு பெரிய பானையில் வைத்திருக்கும் திரவ பதார்த்தத்துக்கு இரண்டு மூன்று துண்டுகளையிட்டால் மனத்துக்கினிய புளிப்புச்சுவை கிட்டும். இந்தக் கொரக்கா அவர்களிடையே பெரிய உபயோகத்தில் இருக்கிறது.

இந்த நாட்டிற் பல நச்சுத்தாவரங்கள், நச்சுப்பிராணிகள் உள்ளன. ஆயினும் அவைகளாற் பாதிப்புற்றால் இங்குள்ளவர்களுக்கு அதற்குரிய பரிகாரமும் தெரியும். இங்கே கடுமையான நச்சுச் செடி ஒன்றுண்டு. எந்தப் பிராணியும் அதன் கிட்ட நெருங்காது. அதன் இலையை கடன்க் கொடுத்தவர் கொண்டு சென்று கடன் வாங்கியவரைப் பயமுறுத்துவார். நெய்யங்கல என அழைக்கப்படும் இது, மண்ணிலிருந்து கொடி மாதிரி வெளிவருகின்றது. இதன் பூ பார்க்க மனத்துக்கினிமையாக இருக்கும்.

அவர்கள் அடிக்கடி நச்சுப்பாம்புகளாற் கடிபடுவார்கள். உடனடிப் பரிகாரம் இல்லாவிட்டால் மரணங்கள் சம்பவிக்கின்றன. கடிபட்டவர் பரிகாரத்துக்குட்படுமிடத்து மிக எளிதிற் சுகமடைவார். இதற்கு அவர்கள் மந்திர உச்சாடனத்தையும் மூலிகைகளையும் பயன்படுத்துவர். இந்த விஷ எதிர்ப்பு மூலிகைகளை மொங்கெனட்டியா என்னும் ஒரு வகைக் கீரிப்பிள்ளையிடமிருந்து அவர்கள் தெரிந்து வைத்துள்ளனர். இந்தக் கீரிப்பிள்ளை நாக பாம்பைக்கண்டால் அதனைத் தாக்கத் தொடங்கும். நாகமும் திருப்பித் தாக்கும். அப்போது நாகத்தினால் அது கடியுண்டால், அது குறிப்பிட்ட மூலிகையைத் தேடிப் போய் உண்கிறது. பின்னர் ஓடிச் சென்று வந்து சண்டையைத் தொடர்கின்றது. இந்த இரு பிராணிகளும் சண்டை யிடுவதையும், கடியுண்ட கீரி ஓடி குறிப்பிட்ட செடியை உண்பதையும் கண்ட சிங்களவர்கள், அந்தச் செடியை இனம் கண்டு தாம் கடிபடும் போது பிரயோகிக்கக் கற்றுக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்புக் கடியிலிருந்து சுகம் பெற அல்லது கடிக்காமல் தற்காத்துக்கொள்ள மந்திரம் செய்வதிற் சிங்களவர்கள் வல்லவர்கள். மந்திரத்தால் நாகத்தைக் கட்டுவித்து அதனைக் கையில் எடுத்து, கூடையில் வைத்து, சில வேளைகளில் எந்த விதப் பாதிப்புக்கும் உட்படாமல் அதனை கொஞ்சவும் செய்வர். அதே போல் மற்ற நச்சுப் பிராணிகளையும், தங்கள் மந்தைகளை இழுத்து புசிக்கும் புலியையும், மந்திரத்தால் அவர்கள் கட்டுப்படுத்துவர். பொலன்கா மந்திரத்துக்குக் கட்டுப்படாது.

உள்ளங்கடக்கிய வியாதிகளைச் சுகமாக்குவதில் அவர்கள் வல்லவர்கள் அல்ல. வியாதிகளுக்கு உட்படும் போது கடவுளிடம் முறைப்பாடு செய்வர். இதற்காக அதிகம் அவர்கள் இரந்து வேண்டுவது, கடவுளின் கருவிகளாக இருக்கிற தேவதைகளைத்தான். கடவுள் இத் தேவதைகள் மூலமாகத்தான் வெறுக்கின்றவர்களுக்குத் தண்டனை கொடுக்கிறார் என்று அவர்கள் நம்புகின்றனர்.

இம்மக்கள் சாவதற்கு இயல்புக்கு மீறி அதிகம் பயப்படுவதால் இத் தேவதைகள் மீது மிகவும் அச்சம் கொண்டவர்களாக உள்ளனர். பிரதானமாக அவர்கள் வேண்டுவது அத்தேவதைகளைத்தான். தம்மை மாசுப்படுத்தும் என்று செத்த வீட்டுப்பக்கம் அவர்கள் பல நாட்கள் வரமாட்டார்கள்.

புழுக்களுக்கு இரையாகாதவாறு உடலைச் சிறப்பாக எரித்துவிடுவர். ஆயினும் ஏழைகள் இறந்தால் எரிப்பதில்லை. அவர்கள் உடலை பாயினால் சுற்றி, தடியில் வைத்துக் காவிக்கொண்டு வந்து காட்டிற் புதைப்பர். இரண்டு மூன்று பேர் சமூகமளித்திருப்பர். எந்த விதச் சடங்குகளும் நடத்தப்படமாட்டாது.

சில நாட்களின் பின்னர், இறந்தவரின் உற்றார் உறவினர் விரும்பினால் ஒரு மதகுருவை அழைத்து வந்து, இறந்தவரின் ஆத்ம ஈடேற்றத்துக்காக இரவு முழுவதும் பிரார்த்தனைகளும் பாராயணங்களும் நடத்துவார்கள். மதகுருவுக்கு நல்ல விருந்துபசாரங்கள் நடக்கும். காலையிற் சிறந்த பரிசுகளும் வெகுமதிகளும் கொடுக்கப்படும். அவர்கள் காட்டிய தாராளத்துக்கும் பெருந்தன்மைக்கும் மகிழ்ந்து, மதகுரு, இறந்தவர் மறு உலகத்தில் இப்போது தமது நண்பர்களால் வரவேற்கப்படுகிறார் என்று கூறுவார். இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குப் பெரிய ஆறுதலாக இருக்கும். அவர்கள் அவருக்கு வழங்கும் பொருட்கள் அவரின் இயல்புக்கேற்ப அமைந்திருக்கும். அவர் ஒரு போதும் தமக்கு ஈயப்படுபவைகளை மறுதலிக்க மாட்டார். அவரை வீட்டுக்கு அழைத்து வரும் போதும், மீளவும் அவரின் இருப்பிடத்துக்கு கொண்டு சென்று விடும் போதும் மேளதாளங்கள் முழங்கும்.

இறந்தவர் வீட்டில் பெண்கள் தங்கள் கொண்டையை அவிழ்த்து பரப்பிவிட்டு தங்கள் இரு கைகளையும் பின்தலையில் வைத்துக் கொண்டு அவர்களால் முடியுமட்டும் பெரும் குரலெழுப்பி அழுவார்கள். இறந்தவரின் உதாரகுணங்கள் பற்றியும் அவர் தம்மோடு நடந்து கொண்ட முறைகளைப் பற்றியும் புகழ்ந்துரைப்பார்கள். அவரில்லாமல் வாழப்போகும் துயரமான நிலைமைகளைச் சொல்லிப்புலப்புவர். இவ்வாறு மூன்று அல்லது நான்கு அதிகாலை வேளைகளில் எழுந்து புலம்புவர். மாலை நேரங்களிலும் இவ்வாறு செய்வர். ஆண்கள் அந்த நேரத்தில் எழுந்து நின்று பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பர்.

இந்தப் பெண்கள் மிகவும் தைரியமான ஆத்மாக்கள் எனலாம். அவர்கள் தமது இதயத்தில் எதையும் எடுத்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் அழுது புலம்புவது ஒரு பாணியே அல்லாது மனத்தில் எழும் சோகவெளிப்பாட்டால் அன்று. அவர்கள் குறியெல்லாம் ஒன்றும் கொண்டுவராதவர்களையெல்லாம் வீட்டிலே தங்க வைக்காமல் எப்படி அனுப்பிவிடுவது என்பதைப் பற்றித்தான் இருக்கும்.

குறைந்த தரத்துள்ள மனிதன் ஒருவன் இறந்தால் உடல் நான்கு பேர்களினாலே தூக்கிச் செல்லப்பட்டுக் காட்டில் எங்காவது ஓரிடத்திற் புதைக்கப்படும். இதன் போது எந்தச் சடங்கும் நடத்தப்படுவதில்லை. அவர்கள் குழிக்குள் கிழக்குப்பக்கம் தலையும் மேற்குப்பக்கம் கால்களும் இருக்கத்தக்கதாக கிடையாக வைப்பர். அடக்கம் முடிந்தவுடன் உடலைக் கையாண்ட மாசு நீங்குவதற்காக அவர்கள் நீரில் முழுகிக் குளிப்பர்.

ஆனால் உயர்ந்த தரத்தில் உள்ள மனிதன் இறந்தால், அவன் உடல் வெளியில் வைத்துக் குளிப்பாட்டப்பட்டு லினன் துணியால் சுற்றுப்பட்டு, தகனம் செய்யப்படும் இடத்திற்குக் கொண்டு போகப்படும். இறந்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனை உத்தியோகத்தர் என்றால் அரசன் உத்தரவில்லாமல் ஒன்றையும் செய்யமாட்டார்கள். அரசனின் தகனம் செய்வதற்குரிய உத்தரவு வரச் சுணங்கும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு நீண்ட மரத்தைத் தறித்து அதனுட் குழாய் அமைத்து அதனுட் சடலத்தையும் நிறைய மிளகுகளையும் சேர்த்து அடைத்து விடுவார்கள். இதனை வீட்டின் ஒரு மூலையில் புதைத்துவிடுவார்கள். அரசன் உத்தரவு கிடைத்ததும் சடலம் அடங்கிய மரம் தோண்டி எடுக்கப்பட்டுக் கட்டிலில் வைக்கப்படும். இது இறந்தவருக்கு அளிக்கப்படும் அதியுயர்ந்த கௌரவமாகும். பின்னர் இக்கட்டில் தகனம் செய்யப்படும் இடத்துக்குக் கொண்டு வரப்படும். அவ்விடம் நெடுஞ்சாலையோரம் போன்ற முக்கிய இடமாக இருக்கும். இரண்டு மூன்று அடி உயரத்துக்கு விறகு அடுக்கி அதன் மேற் கட்டில் வைக்கப்படும். அதன் மேலும் விறகுகள் அடுக்கப்படும். இறந்தவர் அதியுயர் கௌரவத்துக்குரியவர் என்றால் நிறச் சீலைகளாலும் கமுகம் பாளைகளாலும் பச்சைத் தழைகளாலும் ஒரு தோரணம் கட்டப்படும். அதற்கு பின்னர் தீ மூட்டப்படும். யாவும் எரிந்தவுடன் சாம்பலைக் கூட்டி குவிப்பார்கள். அந்தச் சாம்பல் குவியலை காட்டு மிருகங்கள் வந்து சிதைத்து விடாமல் இருக்கக் கொத்து வேலி அமைப்பார்கள். நாட்டின் மிகப் பிரதான பிரதானியாகக் கொள்ளத்தக்கவரான தற்போதைய அரசனின் சிறிய தந்தையாரான பிரதான மதகுரு (பிரதம ரிறிநாச்சி) இறந்த போது மிக உயர்ந்த இடத்தில் வைத்துத் தகனம் செய்யப்பட்டார். அச்சிதை எரிவதை மிகத் தூரத்திலிருந்து நான் கண்டேன். இறந்தவர் உயர்தரத்தவராக இல்லாவிட்டாலும் பிரபு வம்சத்தவராக இருந்தால், வாழை மரத்தாலும் பச்சை தழைகளாலும் குலைகளாலும் பந்தல் அமைக்கப்படும்.

ஒருவர் பெரியம்மையால் இறந்தால், அவர் எந்தத் தரத்தவராக இருந்தாலும் அவர் அடக்கம் செய்யும் போது முட்களையும் போடுவர். எந்தச் சமயச்சடங்கும் நிகழ்த்தப்படமாட்டாது.

அடிக்குறிப்புகள்

பாகம் III அத்தியாயம் – 1	1.	முஸ்லீம்கள்
பாகம் III அத்தியாயம் – 4	2.	அரசமரம்
பாகம் III அத்தியாயம் – 5	3.	வெற்றிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் IV



KOHA
JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01

நாங்கள் இலங்கைக்குச் செல்ல வேண்டிய காரணமும், அங்கே தடுத்து வைக்கப்படுதலும்

இந்த இறுதியான நாலாவது பாகத்தில் நாங்கள் இந்த தீவுக்கு வர வேண்டி நேரிட்டதையும், அங்கு தடுத்து வைக்கப்பட்டதற்கான காரணத்தையும் சொல்லப் போகிறேன். எல்லாம் வல்ல இறைவன் அருளால், நான் தப்பி வந்த விதத்தையும், அதனோடு அங்கு வாழும் ஒல்லாந்தர் மற்றும் ஏனைய ஐரோப்பிய இனத்தவர்கள் பற்றியும் எடுத்துரைக்கிறேன். இவைகள் எல்லாம் வாசகர்களுக்கு ஆர்வமூட்டும் பல்வேறு விடயங்களாகும். இவைகளில் பல ஏற்கெனவே விபரிக்கப்பட்டுள்ளன.

கப்டன் ரொபர்ட் நொக்ஸ்[1] தலைமையில் அன்னோ எம்டிகி viii (1658 புதிய பாணி) என்ற கப்பல் அதன் சிறிய பாதுகாப்புக் கப்பலுடன் ஜனவரி மாதம் இருபத்தோராம் திகதி தனது பயணத்தை ஆரம்பித்தது. எஸ். ஜோர்ஜ் கோட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் சேவையில் உள்ள இக்கப்பல், இந்தியாவின் கோரமண்டல கடற்கரையில் உள்ள துறைமுகங்களுடன் வர்த்தகம் செய்வதை நோக்கமாகக் கொண்டிருந்தது. நாங்கள் பொருட்களை ஏற்றிக்கொண்டு மசூலிப்பட்டணக் கரையோரமாக வந்து கொண்டிருந்த போது ஒரு பயங்கரமான புயற்காற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்குண்டோம். அதனால் பிரயாணத்துக்கு அவசியமான பாய்மரத்தை வெட்டிவிட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகினோம். எஸ். ஜோர்ஜ் கோட்டையின் பிரதான அதிகாரி தோமஸ் சம்பெர்ஸ் இலங்கையில் உள்ள கொட்டியாரம் இடவசதி கொண்ட துறைமுகமாக உள்ளதால் அங்கே பாயைத் திருத்தலாம் என்றும், அதற்கான பொருட்களை அங்கே வாங்கிக்கொள்ளலாம் என்றும் தரித்துநிற்கும் காலத்தில் அங்கே வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்புண்டு என்றும், எங்களுக்கு ஆலோசனை கூறினார். போர்டா நோவா[2] வியாபாரிகள் துறைமுகத்துக்கு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தந்தனர். நாங்கள் துறைமுகத்தை வந்தடைந்தவுடன் திருத்தப்பணிகளில் மும்முரமாக ஈடுபட்டோம்.

எங்களுடைய நாடு இதற்கு முன் அவர்களுடன் வர்த்தக நடவடிக்கை போன்ற எந்த தொடர்பினையும் கொண்டிருக்கவில்லை. நாங்கள் முதல் தடவையாக இங்கே வந்துள்ளதால், இப்பகுதி மக்களைச் சந்திக்க சற்று கூச்சமாகவும் தயக்கமாகவுமிருந்தது. இருபது நாட்கள் எந்தவித அலுவல்களுமில்லாமல் வெறுமனே கரைக்கு வருவதும் போவதுமாகக் கழிந்தது. ஒருவாறு அப்பகுதி மக்களிடம் எங்களைப்பற்றி இருந்த சந்தேகத்தை முதலில் நீக்கினோம். அவர்கள் எங்கள் காசை மதித்தனர். அதற்கு சிறந்த உணவுகளையும் பானங்களையும் எங்களுக்கு வழங்கினர். அப்பகுதி ஆளுநர் எங்களை வரவேற்பதாக கூறினார்.

அதே நேரம் அந்த நாட்டின் அரசனுக்கு நாங்கள் இருப்பது தெரிய வந்தது. நாங்கள் வந்த விடயம், நோக்கம் பற்றி ஒரு செய்தியும் அனுப்பாமையால், எங்கள் பிரசன்னம் சந்தேகத்தை ஏற்படுத்திவிட்டது என்று நினைக்கிறேன். இதனால் தனது திசாவையை அல்லது ஜெனரலை படையுடன் அனுப்பிவைத்தான். அவர்கள் உடனடியாக ஒரு தூதுவனை கப்பலுக்கு அனுப்பி, கப்டனை கரைக்கு வந்து அரசன் அனுப்பிய கடிதத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு பொய் கூறினார்கள். நாங்கள் அந்த தூதுக்கு மரியாதை செலுத்துமுகமாக பீரங்கியால் சுட்டோம். எனது தந்தையாரான கப்டன், என்னையும் வர்த்தகர் ஜோன் லௌவண்டையும் கரைக்கு செல்லுமாறு கூறினார். நாங்கள் கரைக்கு வந்தவுடன் திசாவை 'நீங்கள் யார், எவ்வளவு காலம் இங்கே தரித்து நிற்பீர்கள்' என்று கேட்டான். நாங்கள் ஆங்கிலேயர்கள், இருபது முப்பது நாட்களுக்கு மேல் இங்கே தங்கி இருக்கமாட்டோம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினோம் இங்கே தரித்து நிற்கும் காலத்தில் மேன்மை தங்கிய மன்னரின் துறைமுகத்தில் வர்த்தகம் செய்வதற்கு எங்களை அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டோம். ஆங்கிலேயர்கள் இந்த நாட்டுக்கு வந்திருப்பதையிட்டு மன்னர் மகிழ்ச்சியடைகிறார். அவர்களுக்கு உதவுமாறும் எங்களுக்கு பணித்திருக்கிறார். கப்டனுக்கு அரசரால் அனுப்பப்பட்ட கடிதத்தை அவரைத் தவிர வேறுயாரிடமும் கொடுப்பதில்லை என்று அவர் கூறினார்.

நாங்கள் கரையிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் இருந்தோம். கப்டன் கப்பலைவிட்டு இவ்வளவு தொலைவுக்கு வர முடியாது. ஆயினும் அவர் விரும்பினால் கரைக்கு வரலாம். வந்தால் உடனடியாக கடிதத்தை அவரிடம் கொடுக்க ஆவன செய்ய வேண்டும். அவர் கட்டாயம் கப்பலுக்குத் திரும்பியாக வேண்டும் என்று கூறினோம். நாங்கள் அங்கு அன்று தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. திசாவை அடுத்த நாள் எங்களை வந்து சந்திப்பதாகக் கூறிச்சென்றார்.

இது ஒரு சிறிய வேண்டுகோளாதலால், அவர்களை அதிருப்திப்படுத்த நாங்கள் விரும்பவில்லை, சம்மதித்தோம்.

அன்று மாலை திசாவை நாங்கள் தங்கி இருந்த வீட்டுக்கு வந்து, எங்களிடம் இன்று இரவுதான் தனது பிரதான கப்டன்கள் இருவரை கப்பலுக்கு கப்டனுக்கு பரிசுப் பொருட்களுடன் அனுப்ப இருப்பதாகவும், நாங்கள் ஏதும் கப்டனுக்கு சொல்ல விரும்பினால் அதை எழுதித்தருமாறும் கூறினார். எங்களுக்கு திசாவையினதும் அவர் ஆட்களினதும் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டது. அவர்கள் விரும்புவது போல் கப்டனை கரைக்கு வரும்படி கூறுவதற்கு பதிலாக அவரை எங்களை சந்திக்காமல் எக்காரணம் கொண்டும் கரைக்கு வரவேண்டாம் என்று எழுதி உறையிலிட்டு கப்டனிடம் சேர்ப்பிக்குமாறு கொடுத்தோம். எனினும் அவர்கள் அதை அவரிடம் கொடுக்கவில்லை.

அடுத்த நாள் காலை கடற்கரைக்கு மாடு, பழம் போன்ற அன்பளிப்புகள் கொண்டு வரப்பட்டன. கப்டனை கரைக்கு வரும்படியும், அங்கே திசாவை அரசனின் கடிதத்துடன் காத்து இருப்பதாகவும், கப்டனின் மகனும் மற்றவரும் தங்கி இருக்கும் இடத்திலிருந்து அங்கே வந்து கொண்டிருப்பதாகவும் தூதுவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் கப்பலுக்கு செய்தியனுப்பப்பட்டது. அதனை நம்பி கப்டன் சிறிய படகில் ஆற்றினூடாக வந்து அங்கிருந்த புளியமரத்தடியில் குந்தியிருந்தார். அதே நேரம் உள்நாட்டுப் படைவீரர்கள் கப்டனையும் அவரோடு வந்த சக கடலோடிகளையும் சூழ்ந்து கொண்டனர். ஆனால் அவர்கள் ஆயுதம் எதையும் பயன்படுத்தி அவரிடமிருந்த பொருட்களை கொள்ளையடிக்கவோ வன்முறையை பிரயோகிக்கவோ இல்லை. மேலும் அவர்கள் அவரை பவ்வியமாக ஒரு ஏணையில் வைத்து தம் தோளில் காவிக் கொண்டு திசாவையிருக்கும் இருப்பிடத்திற்கு கொண்டு வந்தனர்.

அடுத்த நாள், கப்பலில் இருந்த ஒரு குழுவினர் இங்கே என்ன நடந்திருக்கிறது என்று தெரியாமல் கரைக்கு வந்து காட்டில் பாய் மரத்துக்கான மரத்தை தறித்துக் கொண்டிருக்கும் போது பிடிபட்டனர். அவர்கள் சிறிதும் பயமில்லாது முரட்டுத்தனமாகவும் மிடுக்காகவும் நடந்து கொண்டதால் அங்கே கைகலப்பு ஏற்பட்டு, கயிறினால் பிணைக்கப்பட்டு நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் பின்னர் அடங்கிப்போய்விட்டதால் அவர்களின் கட்டுகள் தளர்த்தி விடப்பட்டன. அவர்கள் நாங்கள் இருந்த இடத்திற்கு கொண்டு வரப்படாமல் அதே பட்டணத்தில் வேறு வீட்டில் தங்க வைக்கப்பட்டனர். நாங்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கவில்லை. நாங்களும் கப்டனும் இருந்த வீடுகளில் எங்களுக்கு கௌரவமளிக்கும் நோக்கில் வெள்ளைத் துணி தொங்கவிடப்பட்டிருந்தது. நாட்டில் கிடைக்கக்கூடிய சிறந்த உணவு வகைகளை எங்களுக்கு தந்து அவர்கள் எங்களை மகிழ்வித்தனர்.

எங்களது படகுகளையும் பதினெட்டுப் பேரையும் தடுத்து வைத்திருப்பதை அடுத்து அவர்களின் கவனம் கப்பல் தனது பயணத்தை மேற்கொள்ளாமல் தடுப்பதில் இருந்தது. அதற்காக "உங்கள் நாட்டு அரசருக்குப் பரிசுப் பொருட்களுடன் ஒரு கடிதம் ஒன்றை தர எமதரசர் விரும்புகிறார். அவை வந்து சேரும் வரை உங்கள் கப்பல் பாதுகாப்பாக இருக்க வேண்டும். கப்பல் குடாவில் இருப்பது பாதுகாப்பானதல்ல. ஒரு வேலை டச்சுக்காரர்கள் அதற்கு நெருப்பு வைத்து விடலாம். இதை ஆற்றுக்குள் கொண்டு வருவது பாதுகாப்பானது," என்று திசாவை கப்டனிடம் கூறினான். ஆனால் கப்டன் இந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயினும் அதனைக் காட்டிக்கொள்ளாமல், தான் அவ்வாறு கொண்டு வரும்படி கூறினாலும் அவர்கள் நான் இப்போது தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் எனது கட்டளைக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியமாட்டார்கள். அவர்களை நிர்ப்பந்தித்தால் கப்பலை எங்கேயாவது கொண்டு போய் விடுவார்கள் என்று கப்டன் கூறினார். ஆயினும் அவரிடம் வேறு எண்ணமிருந்தது. திசாவையின் விருப்பப்படி ஆற்றுக்கு கப்பலை கொண்டு வருவதற்கான கட்டளை அனுப்புவதாக போக்குக் காட்டி தனது ஆட்கள் இருவரை இந்தியர்களுடன் ஒரு படகில் அனுப்பினார். இந்தியர்களை நன்கு உபசரித்து படகை அவர்களிடம் கொடுத்து விடும்படி கூறினார். அடுத்த கட்டளை வரும் வரை கப்பலை பாதுகாக்கும் படியும் சொன்னார்.

போனவர்கள் திரும்பி வரவில்லை. அவர்கள் திரும்பிவராததன் காரணத்தை கப்டனிடம் திசாவை வினவினார். "நான் இப்போது தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் எனது கட்டளைக்கு கப்பலில் உள்ளவர்கள் பணியமாட்டார்கள்" என்று கப்டன் பதிலளித்தார். சில நாட்களின் பின்னர், உங்கள் மகன் திரும்பி வருவான் என்று எனக்கு வாக்குறுதியளிக்கும் பட்சத்தில், அவனை கப்பலை ஆற்றுக்கு கொண்டு வரும்படி கூற அங்கே அனுப்பலாம் என்று தந்தையாரிடம் திசாவை கூறினான். அதன் படி கப்பலுக்கு நான் அனுப்பப்பட்டேன். கப்பலை ஆற்றுக்கு கொண்டு வரும்படி கூறுவதற்கு பதிலாக அவர் "அதன் சங்கிலிகள் பாதுகாப்பாக உள்ளதா, பீரங்கிகள் வேலை செய்கிறதா என்பவற்றை கவனி.மற்றது பாய்மரத்துக்கு பொறுப்பான மாலுமியிடமும் மற்றவர்களிடமும் உங்கள் உயிரையும் விடுதலையையும் நீங்கள் தான் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும், இரவில் ஏதும் படகுகள் நெருங்கி வந்தால் தயங்காமல் தாக்கும் படி கூறு" என்றும் சொன்னார். அதன் படி அவர்களிடம் கூறிவிட்டு, அவர்கள் என்னை திரும்பிப் போகாமல் தடுத்ததற்கு தகப்பனாரை இந்த நிலையில் தனியே விட்டால் தண்டனை நாளில் நான் என்ன பதிலளிப்பது, என்னை கீழ்ப்படிவுள்ள மகனாக இருக்க விடுங்கள் என்று கூறி விட்டு திரும்பி விட்டேன். திரும்பும் போது "நாங்கள் கப்டனின் கட்டளைக்கு பணியமாட்டோம். எங்கள் பாதுகாப்பை பற்றி நாங்கள் தான் முடிவெடுப்போம்" என்ற கடிதம் ஒன்றை கப்பலில் உள்ளவர்கள் சார்பாக நான் எழுதினேன். அதில் அங்குள்ளவர்கள் யாவரும் கையொப்பமிட்டனர். நான் இக்கடிதத்தை திசாவையிடம் ஒப்படைத்தேன். இதன் பிறகு திசாவை இது விடயத்தில் எங்களை நிர்ப்பந்திக்கவில்லை.ஆயினும் அரசனின் செய்தி திடீரென வருமென்று பாசாங்கு செய்து, விரும்பினால் கப்பலில் உள்ளவர்களுக்கு எழுதலாம் என்றான். நாங்கள் இந்த நிலையில் இருமாதங்களை இந்த நாட்டின் நல்ல உணவுகளோடும் படுக்கை வசதிகளோடும் கழித்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பல் தனது பயணத்தை மேற்கொள்ள வேண்டிய பருவ காலமும் வந்தது. எங்களது கவலைக்கிடமான நிலைமை படிப்படியாக புரிந்தது. நாங்கள் இப்போது கைதியாக்கப்பட்டுள்ளோம். கப்டன் கப்பலை நாங்கள் புறப்பட்ட போர்ட் நோவாவிற்கு கொண்டு சென்று அங்குள்ள பொறுப்பானவர்களின் கட்டளைப்படி செயற்படுமாறு செய்தியனுப்பினார்.

நாங்கள் அங்கே தங்கி இருந்தபோது எங்கள் பெண்களுக்கு தேவையான உடைகளை பெருமளவு வாங்கினோம். அவைகளை அங்கேயே விட்டு வந்தோம். அவைகள் அங்கே கிடந்து உக்கிப்போயின என்று பிற் காலத்தில் அங்குள்ளவர்கள் என்னிடம் கூறினார்கள்.

நாங்கள் வந்துள்ளதைத் தெரிவித்து அரசனுக்கு ஒரு அன்பளிப்பும் கடிதமும் எழுதாத குறையை இப்போதுதான் தெரிந்து கொண்டோம். அரசன் உரிய முறையில் தன்னை கௌரவிக்கவில்லை என்று கருதுகிறான் என்பது எங்களை நடத்துவதிலிருந்து புரிந்தது.

இதனால் நாங்கள் பதினாறு பேர் இந்த காட்டுமிராண்டிகளின் தயவை எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டோம். எங்கள் பதினாறு பேரின் விபரம் வருமாறு: கப்டன், ஜோன் லௌலண்ட், ஜோன் கிரகரி, சாள்ஸ் பீட், ரோஜர் கோல்ட், ஸ்டீபன் ருட்லண்ட, நிக்கொலஸ் முல்லீஸ், பிரான்சிஸ் குறுட்ச், ஜோன் பெரி, ஈரல்ப் நைற், பீற்றர்வின், வில்லியம் ஹப்பாட், ஆதர் எமரி, ரிச்சர்ட் வன்ஹாம், ஜோர்ச்ஸ் மித், மற்ம் நான். நாங்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை எண்ணும் போது எங்கள் இதயம் கனத்தது. கடவுளைப்பற்றியோ அவரின் நீதியைப்பற்றியோ அறியாதவர்களிடையே வாழ நேர்ந்துள்ள அவல நிலைமையைப் போக்க பரமண்டலத்தில் இருக்கும் பிதாவை வேண்டிக்கொண்டோம். அவர் எங்கள் மீது சற்று இரங்கினார். இந்த அஞ்ஞானிகள் நாங்கள் எதிர்பார்த்தது போலில்லாமல் எங்களை நன்கு பராமரித்தனர்.

கப்பல் போய் விட்டதால் அரசன் திசாவையையும் படை வீரர்களையும் அழைத்துக் கொண்டான். நாங்கள் எந்தவித முடிவும் இல்லாமல் கைவிடப்பட்டோம்.

273573
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02

நாங்கள் உள்நாட்டுக்கு கொண்டு வரப்பட்டு தடுத்து வைக்கப்படுதலும் எங்கள் நோய் நொடிகளும் கப்டனின் மரணமும்

திசாவை போனபின், அடுத்த கட்டளை வரும் வரை எங்களைக் கவனிப்பதும் பாதுகாப்பதும் பட்டணத்தில் உள்ளவர்களின் பொறுப்பாகியது. அவர்கள் எங்களைக் கப்பலில் உள்ளவர்கள் வந்து கடத்தி செல்ல அல்லது நாங்களாகவே தப்பிச்செல்ல முடியாதவாறு ஆறு மைல் நாட்டுக்குள் அழைத்துச்சென்று தங்க வைத்தனர். ஆற்றில் மூர்களின் மரக்கலம் ஒன்று இருந்தது. அம்மரக்கலம் எங்கள் கப்பலிலிருந்து எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அதற்கு நாற்பது மூர்கள் சொந்தம் கொண்டாடினார்கள். அவர்கள் எங்களைப் போல் கைதியாக்கப்படவில்லை. அங்கு இருக்க அனுமதிக்கப்பட்டனர். அவர்களிடம் எங்களை மீட்க உதவிகேட்டிருந்தோம். அவர்களும் அதற்கு உடன்பட்டிருந்தனர். இரவில் ஆயுதங்களுடன் வந்து எங்களை கடத்திச் சென்று கப்பலில் சேர்ப்பதாக கூறி இருந்தனர். நாங்கள் உள்நாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டதால் இத்திட்டம் பிழைத்துவிட்டது.

எங்களை எடுத்து வந்து வைத்த இடம் மிகவும் மனோரம்மியமான சூழலைக் கொண்டிருந்தது. அந்த இயற்கை அழகில் மூழ்கி நின்றதால் எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரம் ஓரளவு தணிந்தது. அங்குள்ள மக்களும் எங்கள் மீது அநுதாபம் கொண்டவர்களாகவும், சிநேகபாவமுள்ளவர்களாகவும் காணப்பட்டனர். இந்த நாட்டில் மலைப்பிரதேசங்களில் வாழ்கின்றவர்களுக்கும் கரையோரங்களில் வாழ்கின்றவர்களுக்கும் இயல்பில் நிறைய வித்தியாசம் உண்டு. முன்னையவர்களைவிட பின்னையவர்கள் கருணை மனப்பான்மை மிக்கவர்கள். முன்னைய நாட்களில் இக்கரையோரப் பிரதேசம் போர்த்துக்கீசர் ஆதிக்கத்துள் இருந்ததால் அவர்கள் அங்குள்ள மக்களிடையே கிறிஸ்தவ மக்களின் பழக்கவழக்கங்களை பரப்பியிருக்கின்றார்கள். புதியவர்களை வெறுக்கும் தன்மை அவர்களிடம் இல்லை. அவர்களோடு அன்புடனும் பரிவுடனும் நடந்து கொள்வார்கள். அவர்கள் மலை நாட்டு மக்களின் முரட்டு சுபாவத்தையும் திமிர்த்தனத்தையும் கண்டிக்கின்றனர்.

நாங்கள் ஒன்றாக இருந்ததால் துன்பத்தையும் துயரத்தையும் பகிர்ந்து கொள்ள முடிந்தது. பின்னர் நாங்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு கிராமங்களில் வைக்கப்பட்டோம். அவர்கள் மொழியில் ஒரு சொல்லும் எங்களுக்குத் தெரியாது. ஆறுதல் வார்த்தை கூறுவார் யாருமில்லை. எங்கு பார்த்தாலும் புறச் சமயத்தவர்களின் கரிய முகங்கள் தான் கண்ணில் பட்டது. இது எங்கள் துயரத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. ஆயினும் கடவுள் என்மீதும் தந்தையார் மீதும் இரக்கமுடையவராக இருந்தார். என்னையும் தந்தையாரையும் ஒன்றாக இருக்கக் கிருபை செய்தார்.

நாங்கள் கடைசியாகப் பிரிந்த பதினாறாவது நாள், எங்களை நகருக்கு கூட்டி வரும்படி அரசன் கப்டன் ஒருவனுக்கு கட்டளையிட்டான். முன்னர் எங்களை இவ்விடத்திற்கு கொண்டு வந்தவனே இப்போதும் வந்தான். இரு வீடுகளில் தங்க வைக்கப்பட்டிருந்த நாங்கள் ஒன்று சேர்க்கப்பட்டோம். நாங்கள் இருகுழுவினரும் சந்தித்த போது பெரும் துயரம் பெருக்கெடுத்தது. நாங்கள் கைதிகளாக மலைநாட்டிற்கு கொண்டு செல்லப்படப் போகிறோம் என்பதை அறிந்து கொண்டோம். அன்று இரவு ஒன்றாக இருந்து சாப்பிட்டோம். அவர்கள் ஆறுதலான வாக்குறுதிகளை எங்களுக்கு வழங்கினர். அரசனுக்கு உங்களை நீண்டகாலம் வைத்திருக்கும் நோக்கம் இல்லை என்றும், அடுத்த கப்பல் வந்ததும் உங்களை அனுப்பிவிடுவான் என்றும், ஆறுதல் வார்த்தைகள் கூறினர். நாங்கள் அவைகளை நம்பவில்லை. நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் போது அவர்கள் எந்த பொருளையும் சுமக்க எங்களை விடவில்லை. எங்களின் பொருட்களை சுமந்து வர ஆட்கள் அமர்த்தப்பட்டனர்.

அவர்கள் எங்கள் உடைமைகளை கொள்ளையடிக்கலாம் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். எதிர்பார்த்ததுபோல் ஒன்றும் நடக்க வில்லை. எங்களிடமிருந்து ஒரு துண்டு நூலைத் தானும் எடுக்கக் கூடாது என்பது அரசன் கட்டளை என்று கூறினார்கள். அவர்கள் எங்களோடு மிக மென்மையாக நடந்து கொண்டனர். எங்களால் முடிந்த அளவில்தான் நடக்கும் படி கூறினார்கள். அவர்களின் தயவு எங்களுக்கு ஆறுதலாக இருந்தது. காட்டின் ஊடாகவும் சமவெளிகள் ஊடாகவும் நாங்கள் நடந்து போய்க்கொண்டு இருந்தோம். காட்டின் ஊடாக செல்லும் போது அது எங்களுக்கு கொடிப்பந்தர் ஊடாக செல்வது போல் இருந்தது. அவர்களுக்கு எங்களது மெதுநடை அலுப்பாக இருந்திருக்கும். நான்கு ஐந்து இரவுகளை நாங்கள் வெறும் தரையில் மரக்கிளைகளை தலையில் வைத்துப் படுத்தோம். ஒரு நாளைக்கு இரண்டு தரம் வயிறாற எங்களுக்கு உணவளித்தனர். அவ்வுணவு அரிசிச் சோறு, உப்பிட்ட கருவாடு, காயவைத்த இறைச்சி ஆகியவைகளாக இருந்தது. சில வேளைகளில் மானைச்சுட்டும் மரத்தில் தேன் எடுத்தும் தருவார்கள். ஆறுகளும் அருவிகளும் வழியெல்லாம் ஓடிச்சென்றன. இதனால் குடிப்பதற்கு தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கவில்லை.

நாங்கள் பட்டணங்களுக்கு வந்தால் அவர்கள் பாணியில் ஆக்கிய சோறு, இறைச்சிக்கறி ஒன்று, மரக்கறிகள் இரண்டு அடங்கிய உணவை தருவார்கள். பழவகைகளுக்கு குறைவில்லை. அவைகளை மனம் சலிக்கும் வரை சாப்பிட்டோம். இவைகளுக்கான செலவெல்லாம் நாட்டினுடையதாகும். இவ்வாறு செய்வதற்கு அவர்களுக்குத் திருப்தியளிக்கக் கூடியவாறு ஏதாவது கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன். நாங்கள் பாயில் அமர்ந்து சாப்பிடுவது எல்லோருக்கும் ஒரு காட்சியாக இருந்தது. ஆங்கிலேய மனிதனை ஒருபோதும் கண்டிராத அவர்களுக்கு நாங்கள் சாப்பிடுவது ஒரு பெரும் புதினமாக இருந்தது. நாங்கள் போன பட்டணமெல்லாம் இளையவர்களும் முதியவர்களும் திரண்டு வந்து எங்களை உற்றுப்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

மற்றவர்களிடமிருந்து கப்டனும் நானும், ஜோன் லௌலெண்டும் ஜோன் கிரகரியும் நகரத்து அருகாமையில் அரசன் சமூகத்துக்கு கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்படுவதற்கு தயாராக வைக்கப்பட்டிருந்தோம். மற்றவர்கள் நகரத்தில் வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்தனர். எங்களை மனம் கோணாமல் உபசரிக்க வேண்டும் என்பது அரசனின் கட்டளையாகும். அதன்படி நாங்கள் நால்வரும் நன்கு பராமரிக்கப்பட்டோம். நாட்டில் கிடைக்கக்கூடிய தரமான உணவு எங்களுக்கு வழங்கப்பட்டது. மற்றவர்களுக்கு ஒவ்வொரு வீடாக போய் சாப்பிட ஏற்பாடு பண்ணப்பட்டது.

1660 செப்டம்பர் 16ந் திகதி நானும் எனது தந்தையாரும் பொண்டர் கடஸ்வத் என்று அழைக்கப்படும் பட்டணத்தில் இருந்தோம். அது மனத்துக்கினிமையான ஓர் இடமாகும். அது கண்டி நகரத்திலிருந்து வடக்கு நோக்கி முப்பது மைல் தூரத்தில் கோர்ட்கோர்லி பிரதேசத்தில் இருக்கிறது. எங்கள் ஆட்கள் இருக்கும் இடத்திலிருந்து அங்கே வரவேண்டும் என்றால் ஒரு நாள் பயணம் செய்ய வேண்டும். பொண்டா கூஸ் நகர மக்கள் எங்களுக்கு பிடித்த வீட்டில் இருக்கும்படி கூறினர். இந்த பிரதேசம் மிகவும் வெப்பமானதாக காணப்பட்டது. அவர்களின் வீடுகள் காற்றோட்ட மில்லாததாகவும், அழுக்கானதாகவுமிருந்ததால் அவர்கள் இல்லாத வீடொன்றை தந்தையார் தெர்ந்தெடுத்தார். அவருக்கு ஒரு கட்டிலும் அதுக்கு மேல் ஒரு பாயும் விரிக்கப்பட்டது. எனக்கு தரையில் ஒரு பாய் போடப்பட்டது.

எங்களிடம் காசு குறைவாக இருந்தது. கப்பலிலிருந்து அதை வரவழைத்திருக்கலாம். அதை இங்குள்ளவர்கள் கொள்ளையடித்து விடுவார்கள் என்ற பயத்தில் வரவழைக்கவில்லை. எனது தகப்பனாருக்கு ஒரு தலையணை மாத்திரம் வரவழைத்தோம். எங்கள் உடல்களை நீங்கள் கைதியாக்கி உள்ளதால் எங்கள் பொருட்களை நீங்கள் எடுக்கக்கூடாது என்று தந்தையார் கூறினார். பிள்ளைகள் இங்கு வந்து விளையாட தடையில்லை என்றும் சொன்னார். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டனர்.

எங்களுக்கு ஆறுதல் அளிக்கும் நோக்கில் அந்த நாட்டில் கிடைக்கும் சிறந்த உணவுகளை ஒரு நாளைக்கு இருதடவை எங்களுக்கு உண்ணக் கூடியமட்டும் தந்தனர். சொல்லப் போனால் ஒரு பானை நிறைய நல்ல அரிசிச் சோறு, மூன்று கறிகள், அவற்றில் ஒன்று இறைச்சி, முட்டை. மீன் ஆகியவற்றில் ஏதாவது ஒன்று, மற்ற இரண்டும் மரக்கறி மற்றும் பூசணி வகைகளாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப்பட்டணத்துக்கு நாங்கள் கொண்டுவரப்பட்ட முதல் வருடத்தில் இந்தப்பகுதி மலேரியா மற்றும் காய்ச்சலால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் பலர் இறந்து விட்டனர். பல சந்தர்ப்பங்களில் எங்களுக்கு உணவு எடுத்துவர ஆளில்லாமல் நாங்கள் பட்டினி கிடக்கவும் நேரிட்டது.

ரோஜரின் பக்தியைப் பிரயோகத்தில் என்பதை பற்றிய ஏழு விளக்கங்கள் அடங்கிய 'கிறிஸ்த்தவத்தைக் கைக்கொள்ளல்' என்ற நூல் எங்களிடம் இருந்தது. வீட்டில் அடைந்து கிடப்பதன் அலுப்புத்தீர அந்தப் புத்தகத்தை எடுத்து வயலுக்கு சென்று வாசிப்போம்.

அந்தச் செயல்பாடு மலேரியாவும் காய்ச்சலும் எங்களை சந்தித்ததால் முடிவுக்கு வந்தது. நோயினால் நான் பட்ட அவஸ்தையை விட, தகப்பனார் பட்ட அவஸ்தை எனக்கு பெரு வேதனையை அளித்தது. அவருக்கு உதவ முடியாது தத்தளித்தேன். அவர் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்த. "உன்னை கரைக்கு அனுப்பிய போது உனது கடமையுணர்வால் கைதியாக்கப்பட்டாய். எனக்கு வயது போய் விட்டது. இனி நான் நீண்டகாலம் வாழமுடியாது. உனக்கு துயரமான சம்பவங்கள் நிகழாமல் கடவுள் தடுப்பார். நீ எந்தக் குறையுடையவனாகவும் இருக்கக் கூடாது என்று கடவுளிடம் பிரார்த்திக்கிறேன்."

எனது தகப்பனாரின் காலம் நீடிக்கவில்லை. நாளாக நாளாக அவரின் நோய் அதிகரித்து வந்தது. ஒரு பெருமூச்சுடன் அவர் சொன்னார், "எனது இளமைக் காலத்திலிருந்து அநேக வருடங்களை கடலில் கழித்திருக்கிறேன். இக்காலத்தில் கடவுள் எனக்கு வந்த ஆபத்துக்களிலிருந்தெல்லாம் என்னைக் காப்பாற்றினார்" நீரிணைகளில் துருக்கியர்களாலும் வேறு இடங்களில் வேறு எதிரிகளாலும் ஏற்பட்ட அபாயங்களை விபரித்தார். (அவற்றை இங்கு எடுத்துரைத்தால்பெருகும்)அவைகளிலிருந்தெல்லாம் காப்பாற்றப் பட்டமையை விபரித்தார். தனக்கு எதிரிகளின் கைகளில் மாட்டுப்பட்ட அனுபவமில்லை என்றார். ஆனால் அவரின் தலை நரைத்துப்போன வயதில் இந்த அஞ்ஞானிகளின் பிடியில் அகப்பட்டு தனது எலும்புகளை இங்கே போட நேர்ந்துள்ளது. கருணையுள்ள ஆண்டவன் இந்தப் பயணத்தை முடிவுக்கு கொண்டு வந்து தனது நாட்டில், தனது வீட்டில், தனது பிள்ளைகளுடன் தனது இறுதி நாட்களைக் கழிக்க அருள் புரிய வேண்டும். தனது மகனாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கப்பலின் கப்டனாகவும் வேண்டும் என்பதே அவரின் கடைசி ஆசையாகும்.

இந்த எண்ணங்களோடு தந்தையார் மூன்று மாதங்கள் படுத்த படுக்கையாகக் கிடந்தார். தரையில் விரித்த பாயும் ஒரு சமுக்காளமுமே அவர் படுக்கை (அவர் படகில் இருந்து கரைக்குக் கொண்டு வந்த சமுக்காளம்). இதை விட ஒரு மெல்லிய மெத்தையால் நான் அவரை போர்த்தி இருந்தேன். நான் ஒரு பாயும் தலையணையும் கொண்ட படுக்கையில் கிடந்தேன். போர்த்திக்கொள்ள எனக்கு ஒன்றுமில்லை. எனக்குக் குளிராக இருக்கும் போது நெருப்பை மூட்டிவிடுவேன். விறகுக்கு காசில்லை ஆனால் எடுத்து வரவேண்டும்.

போர்ட் நோவாவிலிருந்து ஒரு கறுவல் பொடியனை தந்தையார் எங்களின் எடுபிடி வேலைக்கு கூட்டி வந்திருந்தார். அவன் தனது நிறமுடையவர்களின் கைதியாக தகப்பனார் இருப்பதைக் கண்டு அவரின் ஏவல்களைச் செய்ய மறுத்தான். அவனை வற்புறுத்துவதா அல்லது விரட்டி விடுவதா என்பதை விட அவனின் நடத்தை தந்தையாருக்கு பெரிய நகைச்சுவையாகி விட்டது. எங்கள் மடத்தனத்தை நொந்து கொண்டோம். எனக்கு வந்த மலேரியா ஓரளவு குறைந்தது. அது மூன்று நாளைக்கு ஒரு தரம் வந்தது. இவ்வாறு பதினாறு மாதங்கள் அது தொடர்ந்தது.

நாங்கள் விடுதலை செய்யப்படுவோம் என்பதற்கு எந்த அறிகுறியும் தென்படவில்லை. தகப்பனார் தாங்க முடியாத துயரத்தாலும் நோயின் வேதனையாலும் வருந்தினார். ஒன்பது நாட்களாக அவர் வாயிலிருந்து ஒரு வார்த்தை தானும் வெளிவரவில்லை. குளிர்ந்த நீர் மாத்திரம்தான் அவரின் உணவு. சில வேளைகளில் பரிதாபமான முனகலும் பெருமூச்சும் கேட்கும். ரோஜரின் புத்தகத்தில் வாசித்த கோட்பாடு உண்மையாகத் தெரிந்தது. "கடவுள் மிக இனிமையாக இருக்கும் போது இவ்வுலகம் மிகவும் கசப்பாக இருக்கிறது."

இந்நிலையில் தகப்பனார் 1661 பெப்ரவரி 9ந் திகதி வரை இருந்தார். அந்த நேரத்தில் தோலால் மூடிய எலும்பு மாத்திரமே அவர் உடலாக எஞ்சியிருந்தது. இந்நிலையிலும் அவர் சொன்னார் "விடுதலையின் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது உறுப்புகளுக்கு உரமளித்து என்னை மீள் எழுச்சியுற வைக்கும் என எண்ணினேன். ஆனால் அது அவனின் நாட்டமில்லை போலும். உனது விருப்பப்படி செய். இதைத்தான் நாம் அந்த ஆண்டவனுக்கு சொல்ல முடியும்."

இறப்பதற்கு முன் மாலையில் அவர் என்னைத் தனது படுக்கை அருகில் தனது பக்கத்தில் உட்கார வைத்தார். அந்த நேரம் எனக்கும் கடும் காய்ச்சலாக இருந்தது. அவர் சொன்னார். "இன்று இரவு எனது உயிர் இந்த உடலைவிட்டுப் போய் விடும். கடவுள் என்னை கைதியாக விடாமல் விடுதலையாக்கி விடுவார். என்னுடைய வாழ்நாளில் இப்படியொரு இலகுவான இறப்பு சம்பவிக்கும் என்று நினைத்திருக்கவில்லை. பெரும்பாலான மற்ற மனிதர்களுக்கு வாய்க்காததை கடவுள் எனக்கு அருளியுள்ளார், இந்த சந்தோஷத்தை உனக்கு சொல்கிறேன்" அவர் மேலும் சொன்னார். "இந்த சொற்கள் தான் நான் உனக்கு சொல்கிற கடைசி வார்த்தைகளாகும். கடவுள் விரும்பினால் உங்களை இங்கிலாந்தில் ஒன்று சேர்ப்பார். அப்போது இவைகளை உனது சகோதரனிடமும் சகோதரியிடமும் கூறு. எனக்கு நல்வரவு கூறு. நான் போய் வருகிறேன்." கொட்டியாரத்திலிருந்து அவர் அனுப்பிய கடிதத்தின் பிரகாரம் சொத்துக்களை நிர்வகிக்குமாறும் என்னிடம் சொன்னார்.

எல்லாவற்றையும் விட அவர் என்னிடம் வலியுறுத்தியது, கடவுளின் பாதையில் நட, கடவுள் உன்னை ஆசிர்வதிப்பார், உனக்கு அவர் வேண்டிய வளங்களை நல்குவார், கடும் மதுபானங்களைத் தொடாதே, கெட்ட சகவாசம் வைத்துக் கொள்ளாதே, இவைகளைத் தவிர்த்தவர்கள் புதுமனிதர்களாக வந்துள்ளதை நான் என் வாழ்நாளில் கண்டிருக்கிறேன். நான் எனது முக்கியமான பருவத்தில் கைதியாக்கப்பட்டிருப்பது அவருக்கு எல்லாவற்றையும் விட ஆழ்ந்த துயரத்தை அளித்தது. நான் அவருக்கு ஒன்றும் சொல்ல முடியாமல் அவரை மிகுந்த துயரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தேன்.

தன்னால்தான் நான் கைதியானேன் என்பது அவரைப் பெரிதும் வருத்தினாலும் தனது மரணப்படுக்கையில் சொந்த மகன் கைகளை மடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக் கொண்டு தனக்கு பக்கத்தில் அமர்ந்திருப்பது அவருக்கு பெரும் ஆறுதலை அளித்தது. இல்லாவிட்டடால் தனது உடலை நாயும் காட்டு விலங்குகளும் உண்பதுதான் தனக்கு கிடைக்கும் கதியாகும் என்றார். அதன் பின் தனது அடக்கம் எவ்வாறு நிகழ வேண்டும் என்று கூறினார். ''உடலை சுற்றிப் போர்க்க துணிக்கு அலைய வேண்டும். எனது சட்டையை தலை மாட்டிலும் கால் சட்டையை கால் மாட்டிலும் போட்டு படுத்திருக்கும் பாயினால் சுற்றி அடக்கம் செய்தால் போதும்'' என்றார். இவைகளை சொல்லிய பிறகு அவர் உறக்கத்தில் ஆழ்ந்தார். இது நடந்தது எட்டு அல்லது ஒன்பது மணியளவில் இருக்கும். அன்று இரவு இரண்டு மூன்று மணியளவில் அவர் ஆவி பிரிந்தது.

அவரின் விருப்பப்படி, நான் சுகவீனமாகவும் பலவீனமாகவும் இருந்த போதிலும், எனது கைகளால் அவர் உடைகளால் உடலைச் சுற்றி அடக்கம் செய்வதற்கு தயாரானேன். நிலம் கிட்டித்து வரண்டு கிடந்ததால் என்னாலும் பையனாலும் மட்டும் புதை குழியைத் தோண்ட முடியவில்லை. ஆயினும் குழியின் பெரும்பாகம் எங்கள் இருவரால் தோண்டப்பட்டது. அவர் உடலை கொண்டு வரவேண்டும். அதற்கு ஆட்களின் உதவி வேண்டும். எனக்கு சுதேசிகளின் மொழி தெரியாது. சிறுவனை உதவிக்கு ஆட்கள் யாரையாவது அழைத்து வருமாறு கூறினேன். அவர்கள் மாடு கட்டும் கயிறுடன் வந்தனர். அவரின் கழுதில் கயிறை கட்டி இழுத்து சென்றனர். அப்போது, ''நீங்கள் எங்களுக்கு கூலி தரவில்லை என்றால் நாங்கள் மேற் கொண்டும் எந்த உதவியும் செய்யமாட்டோம்''. இந்த அஞ்ஞானிகளின் தடித்த வார்த்தைகள் எனக்கு மிகுந்த துயரத்தை அளித்தன.

நான் இருந்த நிலைமையில் என்னுடைய தகப்பனாரின் உடலை அடக்கம் செய்தது பெரிய காரியம். அதற்கு கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். கந்தபொல நகருக்கு செல்லும் பிரதான வீதிக்கு பக்கமாக உள்ள வயலின் வடக்குப் பக்கமாக அவரின் புதைகுழி அமைந்துள்ளது. இப்பகுதி முன்னைய நாட்களில் அரசன் ஒருவனால் அரசி ஒருத்திக்கு ஜீவனாம்சமாக கொடுக்கப்பட்டதால் போண்டா கூஸ்வத் என அழைக்கப்பட்டது என்று சொல்கிறார்கள். தீவின் வட மேற்கில் ஹேர்ட்கோர்லி பிரதேசத்தில் இந்த இடம் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்திலிருந்து எனது முனகல்களை கேட்கக் கூடிய தந்தையர்கள் அற்ற தந்தையை நோக்கி, தன்னந்தனியனாக, நோயாளியாக, கைதியாக, இந்த உலகில் யாருமற்ற அநாதையாக உள்ள இந்த உதவியற்றவனுக்கு உதவி புரியுமாறு பிரார்த்தித்தேன்.

எனது தந்தையாரின் மரணச்செய்தி அரசசபைக்குப் போனதால் இரு தூதுவர்கள் என்னிடம் அனுப்பப்பட்டனர். எவ்வாறு அவர் மரணமடைந்தார் என்பதையும் அவர் எவற்றை விட்டுச்சென்றுள்ளார் என்பதையும் கேட்டனர். தங்க மோதிரம் ஒன்று, ஒரு பகோடா, இரண்டு மூன்று டொலர்கள், சில பழைய துணிகள் என்று சொன்னேன். அவைகளை என்னிடமிருந்து பிடுங்கிக் கொள்ளப்போகிறார்கள் என்று பயந்தேன். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அதற்கு பதிலாக பட்டணத்தில் உள்ளவர்கள் எனக்கு நல்ல உணவுகளை வழங்க வேண்டும் என்றும், தகப்பனை போல் மகனையும் மரணமடைய விடக்கூடாது என்றும் கூறி, தங்களின் முன்னைய கட்டளையை புதுப்பித்தனர். இதனால் கொஞ்சக்காலம் முன்னைய நாட்கள் போல நான் நன்கு கவனிக்கப்பட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

எனது தந்தையாரின் இறப்புக்கு பின் எனதும் மற்ற ஆங்கிலேயர்களினதும் வாழ்க்கை நிலைமைகளை பற்றி எங்கள் வாக்கு மூலம்

நான் முன்னர் இருந்த இடத்திலேயே இருந்தேன். என்னுடன் அந்த கறுவல் பையன் மாத்திரமே இருந்தான். மலேரியா என்னை விட்டு இன்னும் போகவில்லை. முன்னரைவிட வாசிப்பதிலும் தியானிப்பதிலும் பிரார்த்தனையிலும் அதிகம் ஈடுபட்டேன். இதைவிட என்னைக் குணப்படுத்திக் கொள்வதற்கு எதுவுமில்லை. நான் புத்தகங்களை மனதால் வாசிக்கும் பழக்கம் கொண்டவன். மதிய உணவுக்குப் பின், ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு வெளியே போய் ஒரு மர நிழலில் அமர்ந்து வாசிப்பதும், தியானம் செய்வதும் எனது வழக்கம். ஆனால் மலேரியா வந்த போது அவ்வாறு செய்ய முடியவில்லை. அப்போது எனது தலையை நிமிர்த்த முடியவில்லை. ஜூப்பிட்டர் மரத்தின் கீழ் இருந்து எலிஜா பிரார்த்தித்தது போல், நானும் எனது வாழ்க்கை எனக்கு பாரமாய் உள்ளதால் அதனை எடுத்து விடும்படி கடவுளிடம் பிரார்த்தித்தேன்.

கடைசியாக கடவுள் கிருபையால் மலேரியா ஒருவாறு இயல்பு நிலைக்கு வந்தது. ஆயினும் பூரண குணமடைய பதினாறு மாதங்கள் சென்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்களிக்கப்பட்டு வந்த உணவு குறைவடைந்து வந்தது. சோறு கிடைத்தது. அதனை அவ்வளவாக நான் விரும்புவதில்லை. நானும் பையனும் நீரோடைகளுக்கு தூண்டிலுடன் சென்று சிறிய மீன்களைப் பிடித்து வந்து சமைப்போம். இவ்வாறு மீன் பிடித்துக் கொண்டும் புத்தகம் வாசித்துக் கொண்டும் இருப்பதைக் கண்ட, இவ்வழியால் அடிக்கடி போகும் முதியவர் ஒருவர், எனது உதவிப் பையனிடம் கேட்டார். "உனது எஜமான் வாசிப்பாரா" "ஆம்" என்று அவன் பதிலளித்தான். முதியவர் சொன்னார் "நான் கேட்டது எதற்கென்றால், போர்த்துக்கீசர் கொழும்பை இழந்து விட்டோடிய போது போர்த்துக்கீசன் ஒருவனிடம் ஒரு புத்தகத்தை வாங்கினேன். அதை உனது எஜமான் வாங்கிக் கொள்வாரென்றால் அதனை விற்கத் தயாராக இருக்கிறேன்" இந்த வார்த்தைகள் எனக்கு கேட்டவுடன் பையனை பக்கத்திலிருந்த அவர் வீட்டுக்கு அனுப்பி அதனை பார்க்க எடுத்து வருமாறு கூறினேன். அது ஒரு போர்த்துக்கீச மொழிப் புத்தகமாக இருக்க வேண்டும் என்று எண்ணினேன்.

அவன் அந்தப் புத்தகத்தை கையில் எடுத்துக் கொண்டுவரும் போது, தூரத்தில் இருந்து கூவினான், "பைபிள்". இது என்னை திகைப்படைய வைத்தது. அவன் ஏற்கெனவே ஆங்கிலேயர்களிடம் வேலை செய்தவனாகையால் பைபிளைக் கண்டிருக்கிறான். அது என்னிடம் இல்லை. அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றோ பார்க்க வேண்டும் என்றோ நான் ஒருக்காலும் எண்ணவில்லை. உடனே எனது தூண்டிலை விட்டெறிந்துவிட்டு அவனை நோக்கி ஓடினேன். நான் புத்தகத்தை வாங்கித் திறந்தேன். செயலைப்பற்றிய பதினாறாவது அத்தியாயம் பதின்மூன்றாவது பாடல்கள், கண்ணில்பட்டது. சிறைக் காவலன் புனித பவுலிடம் கேட்கிறான் "நான் மீட்சியடைய என்ன செய்ய வேண்டும்" அதற்கு அவர் பதிலளிக்கிறார் "யேசு கிறிஸ்து பெருமானை நம்பு, நீயும் உனது வீட்டில் உள்ளவர்களும் இரட்சிக்கப்படுவீர்கள்"

ஒரு வானதேவதை சொர்க்கத்திலிருந்து பேசுவது போல பைபிளைக் கண்டதும் எனக்குள் கட்டுக்கடங்காத மகிழ்ச்சி பெருக்கெடுத்தது. எனது கருணையுள்ள ஆண்டவர் இந்த அசாதாரணமான பேற்றை எனக்கு வழங்கியுள்ளார். ஆங்கிலேயர்களை முன்னும் பின்னும் தெரியாத தொலைதூர நாட்டில், கடவுளின் நாமம் தெரியாத ஒரு இடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய ஆச்சரியமூட்டும் நிகழ்வாக என்னுடைய மொழியில் பைபிளை எனக்கு வரவழைத்துத் தந்துள்ளார். இது எனக்கு பத்துக்கட்டளைகளை சொர்க்கத்திலிருந்து வரவழைத்து இஸ்ரேலியர்களுக்கு வழங்கிய நிகழ்வுக்கு ஒப்பானதாகப்பட்டது. இதை நினைக்க எனது கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி வழிந்தது. அது அழுகையல்ல; ஆனந்த பரவசம்.

கூடவே அதை வாங்கிக் கொள்ளமாட்டேனோ என்ற கவலையும் தவிப்பும் என்னை சூழ்ந்து கொண்டன. என்னிடம் ஒரு பகோடா மாத்திரம் இருந்தது. எனது பையன் புத்தகத்தை வாங்க வேண்டாம் என்றும், பல வகைகளில் பணம் தேவையாக உள்ளதென்றும் கூறினான். ஆயினும் விலையை ஒருவாறு பேசிக்குறைத்தான். இந்தப்பேரம் பேசலை அந்த முதியவர் ஏளனத்தோடு என்னைப் பார்ப்பது போல எனக்குப்பட்டது. பைபிளை எப்படியாவது, என்னிடமுள்ள தங்க நாணயத்தையாவது கொடுத்தாவது வாங்கத் தயாரானேன்.

அப்போது மாலை பட்டு இரவு வந்து விட்டதால், நாளைக்காலை பையனை அனுப்பி புத்தகத்தை வாங்கிக் கொள்கிறேன் என்று கூறினேன். கடவுள் எனது ஆத்மாவிற்கு மீனைத் தந்தார். அது போதும் அதனை அனுபவிக்க வேண்டும் என்று வீட்டிற்கு வந்தேன். எனக்கு பைபிளைத் தந்தமைக்காக கடவுளுக்கு இதய பூர்வமான நன்றியைச் சொல்லி பிரார்த்தித்தேன்.

அன்றிரவு பூராவும் அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஏமாற்றப்பட்டுவிடக் கூடாது என்று அடுத்த நாள் காலை நேரத்துடன் பையனை தைத்த தொப்பியை அணிவித்து அனுப்பிவைத்தேன். நல்ல பலனோடு வரவேண்டும் என்று பிரார்த்தனையில் மூழ்கினேன். கடவுள் கருணை கூர்ந்தார். பையன் பைபிளோடு வந்தான்.

வாசகர்கள் என்னை மன்னிக்க வேண்டும். இந்தச் சின்ன விடயத்துக்குக்காக நான் ஒரு பக்கத்தை வீணடிப்பதாக அவர்கள் கருதலாம். இது சிறிய நிகழ்வென்றாலும் எனக்கு உணர்வுப் பெருக்கையுண்டாக்கியதால் கொஞ்சம் விரிவாகச் சொல்ல நேர்ந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுடைய அப்பாவி ஆங்கில மனிதர்களின் நிலை என்ன என்பதை பார்ப்போம். அவர்கள் அரசனின் உத்தரவுப்படி தனித்தனியாக நாலு ஐந்து மைல் வித்தியாசத்தில், கண்டிக்கு மேற்கேயுள்ள ஹெட்டரகோர்லி பிரதேசத்தில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு உணவு வழங்குமாறும் நன்கு கவனித்துக் கொள்ளுமாறும் மக்களுக்கு அரசன் கட்டளையிட்டிருந்தான். அவர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டுக்குப் போய் உணவுண்ண ஒழுங்கு செய்யப்பட்டது. அன்று இரவு அங்கே படுப்பதற்கு பாயும் படுக்கையும் கொடுக்கப்படும்.

அவர்களுக்கு தாங்கள் கிட்ட கிட்ட தான் உள்ளோம் என்பது தெரியாது. கொஞ்ச நாட்களுக்கு பிறகு, அவர்களின் துயரத்தைக் கண்டு எல்லாம் வல்ல இறைவன் அவர்கள் மேல் கருணை கொண்டதால் அவர்கள் ஒன்று சேர்க்கப்பட்டனர். ஆயினும் அது நீண்ட நாள் நீடிக்கவில்லை. கொழும்பு இரண்டு நாள் பயண தூரத்தில் உள்ளதால் அவர்கள் சேர்ந்திருந்தால் அவர்கள் ஓடிவிடுவார்கள் என்ற எண்ணம் அரசனுக்கு உதித்ததால், மீண்டும் அவர்கள் பிரிக்கப்பட்டனர். காட்டு மிருகங்கள் பழக்கப்படுவது போல அவர்களும் தம் நிலைமையை உணர்ந்து நடக்கப்பழகிக் கொண்டனர். மற்றவர்கள் இருக்கின்ற இடத்தை விசாரித்தறிந்து அவர்களைச் சந்தித்து வர ஆரம்பித்தனர். அவர்களுக்கு அது பெரும் ஆறுதலை அளித்தது. அவர்கள் பற்றிய கண்காணிப்பும் குறைந்து வந்தது. அவர்கள் ஆளை ஆள் கண்டு பேசினாலும் ஓடிப்போக எண்ணம் கொள்ளவில்லை. அவர்கள் ஒருவரோடு ஒருவர் இரண்டு மூன்று நாட்கள் சேர்ந்திருக்கவும் தொடங்கினர்.

அவர்கள் இந்த நிலையில், சாப்பிட்டுக் கொண்டு அலைந்து திரிந்து சகலவற்றையும் அவதானித்தனர். அவர்கள் இவ்வாறு ஒரு வேலையும் இல்லாமல் திரிவதைக் கண்ட மக்கள் அவர்கள் ஏதும் வேலைகள் செய்யலாம் என எதிர்பார்த்தனர் அந்த வேலைகள் அவர்கள் ஒரு போதும் செய்யாதவையும் முயற்சிக்காதவையுமாகும். அரசன் அவர்களுக்கு நல்ல உணவுகளை கொடுக்கும் படியும் நன்கு பராமரிக்கும் படியும் உத்தரவிட்டுள்ளான். எனினும் நாட்டு மக்களின் சோற்றை அவர்களுக்கு ஏதும் பிரதியுபகாரமில்லாமல் உண்பதால் அவர்கள் தங்களை அடிமைகளாகக் கருதுகிறார்கள் என்பது வெள்ளையர்களுக்குப் புரிந்தது. இந்த எண்ணத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்ற வேண்டும் என்றால், உழைத்துச் சாப்பிட வேண்டும் என்று தீர்மானித்தனர். இது அவர்களை சுயசார்புடையவர்களாக மாற்றியது. அவர்கள் வேலை செய்யத்தொடங்கிய பின்னர் மக்களும் வேண்டா வெறுப்பாக உணவுப்பொருட்களை விட்டெறிந்து விட்டு போகாமல் பவ்வியமாக தரத் தொடங்கினர்.

அவர்கள் இங்கு வந்து நீண்ட காலமாகி விட்டதால் அரசன் தங்களுக்கு வழங்கிய சலுகைகள், கட்டளைகளின் படி வாழப்பழகிக் கொண்டனர். இதனை விளக்குமுகமாக நான் இங்கு இரண்டு மூன்று சம்பவங்களை எடுத்துக்காட்டி ஆங்கில மனத்தை விளக்குகிறேன்.

அவர்களுக்கு வழங்க கட்டளையிட்டது உணவே ஒழிய உடையல்ல. இந்தக் காலத்தில் அவர்கள் உடைகள் கிழிந்து போய்விட்டன. அவைகளைப் பெற்றுக் கொள்ள என்ன செய்யலாம் என்று யோசித்தனர். அவர்கள் சமைத்துக் கொண்டு வரும் உணவுப் பொருட்களுக்கு பதிலாக மூலப் பொருட்களாக, சமைக்காத உணவுப் பொருட்களாகப் பெற்றுக் கொண்டனர். அவைகளில் கொஞ்சத்தை கிள்ளி வைத்து அதைக் கொண்டு உடைகளை வாங்கிக் கொண்டனர். கடவுளின் கருணையால் மக்கள் அவர்களை அப்பாவிகள் என்று கருதினராயினும் அவர்களுக்கு குறைந்த பட்ச உதவியைத்தானும் செய்ய முன்வரவில்லை. அவர்களுக்கு இரண்டு படி அரிசி தருவதற்கு இசைந்தனர். ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு ஒரு படி அரிசி போதுமானது. மற்றது உடைகள் வாங்குவதற்காக சேமிக்கப்பட்டது. இதைவிட உப்பு, மிளகு, எலுமிச்சை, மரக்கறிகள், பூசனிக்காய், தேங்காய், கொஞ்சம் இறைச்சி ஆகியவற்றையும் வழங்கினர்.

சில வருடங்களில் தங்கள் வாழ்க்கை முறைகளையும் மாற்றிக் கொள்ளப் பழகிக் கொண்டனர். சிலருக்கு தொப்பிகள் தைக்க தெரிந்திருந்தது. பின்னர் இதனை அனைவரும் பழகிக் கொண்டனர். இதுவே எங்களின் பிரதான தொழிலாகியது. சாதாரணமாக ஒரு தொப்பி ஒன்பது பென்சுக்கு விற்கப்பட்டது. தொப்பி தைப்பதற்கு நூல் செலவு மூன்று பென்சுகளாகும். கொஞ்சக்காலத்தில் இத் தொழில் பாதிப்புக்குள்ளானது. தொப்பிகள் விலை போகாமல் தேங்கிக் கிடந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் ஆங்கிலேயர்கள் தளர்ந்து விடவில்லை. அவர்கள் எந்த சூழ்நிலையிலும் தப்பிப்பிழைக்கும் தமது பழைய உணர்வால் நிலைமைக்கேற்ப புதிய உத்திகளைக் கைக்கொள்ளத் தொடங்கினர். அவர்கள் தமக்கு உணவுப் பொருட்களை தராதவர்களின் வீடுகளுக்குச் சென்று உபயோகமான பொருளொன்றை எடுத்து வந்து தம்முடன் வைத்துக்கொள்வார்கள். வீட்டுக்காரர் அப்பொருட்களை மீட்க உணவுப்பொருட்களைத் தர வேண்டும். இதனால் பூரணமாக தமது சலுகையைப் பெற்று தேவைகளை ஒருவாறு நிறைவேற்றிக் கொண்டனர்.

சிலர் இந்த வழியில் மேலும் சென்றனர். ஓர் உதாரணம், சிலவேளைகளில் பானை வாங்க குயவனிடம் வெள்ளைக்காரர்கள் போவார்கள். குயவன் உரியவிலைக்கு பானையை விற்கமறுத்து அவர்களுடன் சண்டைக்கு போவான். சில வேளைகளில் அவன் அவர்களை அடித்து விடுவதுண்டு. இதனை வெள்ளைக்காரர்கள் நீதிபதியிடம் முறையிடுவார்கள். நீதிபதி குயவன் வெள்ளைக்காரர்கள் மீது கைநீட்டியது குற்றம் என்று கூறி அவனைக்கட்டி இழுத்துவர தனது ஆட்களுக்கு உத்தரவிடுவார். நாட்டு மக்களுக்கு விற்கும் விலையிலேயே வெள்ளைக்காரர்களுக்கும் விற்க வேண்டும் என்று அவர் தீர்ப்பு சொல்வார். சில வேளைகளில் தேவையான பானைகளை காசு கொடுக்காமல் எடுத்துச் செல்லுமாறு கூறுவதுமுண்டு.

சில குறிப்பிட்ட பண்டிகை நாட்களில் கண்டபாட்டில் குடித்து கும்மாளமடிப்பது வெள்ளையர்கள் வழக்கம். அந்நாட்களில் மது வாங்க அவர்கள் போவார்கள். சில வேளைகளில் மதுவிற்பவர் உங்களது காசுக்கு சாராயம் விற்க முடியாது என்று மறுத்துவிடுவார். அவர்கள் சாராயப் போத்தல்களை பலாத்காரமாக பிடுங்கிக் கொண்டு வந்து குடிக்கத் தொடங்குவார்கள். மதுபானம் விற்பவர்கள் மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு அவர்கள் வீட்டுக்குள் புகுந்து அவர்களைத் தாக்கத் தொடங்குவார். வெள்ளையர்களும் பதிலுக்கு தாக்கி அவர்களின் மண்டையை உடைத்து விடுவார்கள். அவர்கள் இரத்தம் வழியச் சென்று பிரதானிகளிடம் முறையிடுவார்கள். “நீங்கள் முன்னர் அவர்களுக்கு மதுவை விற்றீர்கள்.” என்று பிரதானிகள் கேட்பார்கள் “ஆம்” என்று பதில் வரும். “அப்படியாயின் ஏன் இப்போது விற்க மறுக்கிறீர்கள், அது மாத்திரமில்லாமல் ஏளனம் செய்தும் உள்ளீர்கள்”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இப்போது என்னைப் பற்றிய விடயத்திற்கு திரும்புகிறேன். எனது தகப்பனார் இறந்து சரியாக ஒரு வருடம் கழிந்து விட்டது. இக்காலத்தில் எனது நாட்டவர் யாரையும் அல்லது என்னுடன் கைதியாக இருந்தவர்கள் யாரையும் நான் காணவில்லை. ஜோன் கிரகரி மட்டும் அனுமதி எடுத்துக் கொண்டு என்னை பார்க்க வந்திருந்தார். இது எனக்கு பெரும் ஆறுதலாக இருந்தது. மற்றவர்களின் சுக துக்கங்களையும் அவர் மூலம் அறிந்து கொண்டேன். அவர் ஒரு நாளுக்கு மேல் தங்க அனுமதிக்கப்படவில்லை. எனது சக கடலோடிகள் எங்கே வைக்கப்பட்டுள்ளனர் என்பது இதுவரை எனக்கு தெரியாமலிருந்தது. அவர்கள் ஒரு நாள் பயணதூரத்தில் தான் இருக்கிறார்கள் என்று கிரகரி கூறினார். அவர் போனபின் அங்குள்ளவர்களிடம் எனது நாட்டவர்கள் இருக்கின்ற இடங்களுக்கு என்னை அழைத்துச் சென்று அவர்களைக் காட்டுமாறு சதா கேட்டுக் கொண்டிருந்தேன். ஆரம்பத்தில் அவர்கள் மறுத்தனராயினும் பின்னர் சம்மதித்தனர். ஒரு நாள் என்னை அழைத்துச் சென்று ஓர் ஆங்கில மனிதனின் குடிசையைக் காட்டினர். அவன் அளவற்ற மகிழ்ச்சியுடன் என்னை வரவேற்றான். அடுத்த நாள் அவன் பக்கத்தில் வாழ்ந்த வெள்ளையர்களையும் அழைத்து வந்தான். அவர்களுக்கு என்னைக் கண்டதில் மிகுந்த மகிழ்ச்சி. அங்கு ஏழு எட்டுப்பேரை சந்தித்தேன்.

நாங்கள் எதிர்பார்த்ததை விட நிலைமை பரவாயில்லை. இதற்காக நாங்கள் கடவுளுக்கு நன்றி சொன்னோம். நான் அவர்களைப் பிரிந்த போதிருந்த நிலையில் அவர்கள் இப்போது இல்லை. வீட்டுக் காவலாளி, தொப்பி தைப்பவர், போன்ற தொழில்களை செய்யத் தொடங்கிவிட்டனர். அவர்கள் இப்போது தமது பழக்க வழக்கத்தை சிங்களவர்கள் போல மாற்றிக் கொண்டு விட்டனர். நான் எதிர்பார்க்காத உணவு வகைகளைத் தந்து அவர்கள் என்னை மகிழ்வித்தனர்.

என்னிடம் இருந்த பணம் எல்லாம் செலவழிந்துவிட்டது. எனது உடுப்புகள் கிழியும் நிலைக்கு வந்துவிட்டது. நான் தையலை அவர்களிடமிருந்து பழகிக் கொண்டது நல்லதாகி விட்டது. எனது உதவிப் பையன் அதன் நுட்பங்களைத் தெரிந்து கொண்டுவிட்டான். எனது உணவை பொருட்களாகப் பெற்றுக் கொள்ளும் படியும் அது எனக்கு நல்லது என்றும் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனை கூறினார்கள். விடுதலை செய்வதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லையாதலால் நாங்கள் எதிர்காலத்தில் எவ்வாறு வாழ்வது என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களானோம்.

அவர்களுடன் இரண்டு மூன்று நாட்கள் இருந்துவிட்டு, ஒருவரை ஒருவர் அடிக்கடி சந்திக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறி எனது இருப்பிடம் மீண்டேன். என்னுடன் காவலாளி ஒருவரும் வந்திருந்தார்.

இக்காலத்தில் அவர்களின் மொழியை ஓரளவு கற்றுக் கொண்டேன். எனக்கு உணவு கொண்டு வருபவரோடு எனது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள அது உதவியது. எனக்கு அரிசியை அவித்துத் தராமல் மூலப் பொருட்களாக மற்ற ஆங்கிலேயர்களுக்கு கொடுக்கும் அளவில் தாருங்கள் என்று நான் கேட்டது ஒரு சர்ச்சையாகிவிட்டது. ''நீங்கள் அவர்களை போன்று சாதாரணமானவர் இல்லை. கப்டன் மகன். அவர்கள் உங்கள் சேவகர்கள், அவர்கள் வீடுவீடாகப் போய் சாப்பிட்டு வருகிறார்கள், அவர்களைப் போன்று உங்களைப் பராமரிக்கக் கூடாது'' என்று அவர்கள் கூறினர். மேலும் ''அரசன் நாளாந்தம் உணவுகளை சமைத்து வழங்குமாறு கூறியிருக்கிறான், அவன் நினைவில் உங்கள் பெயரை வைத்திருக்கக் கூடியளவு நீங்கள் உயர்ந்தவராக உள்ளீர்கள்'' என்றும் எடுத்துரைத்தனர்.

நான் அவர்களின் நாட்டுக்குப் புதியவனாக இருப்பதால் அவர்களைப் பற்றி அறியாமல் இருக்கிறேன் என்பது அவர்கள் எண்ணமாகும், எனது பெருமையை சாட்டுக்கு கூறி அதனுள் தமது நன்மையை மறைத்துப் பேசும் அவர்கள் தந்திரம் புரிந்தது. உண்மையில் தங்களது நன்மையை நோக்கியே அவர்களின் பேச்சு அமைந்துள்ளது. மூலப்பொருட்கள் அளவுக்கு நாங்கள் சமைத்த உணவுகளை உண்ணமாட்டோம். நான் அவர்களை விட தரத்தில் உயர்ந்தவன் என்று நீங்கள் கருதினால், நீங்கள் கூடிய படி தர வேண்டும். ஆனால் நான் மற்றவர்களை விட கூடிய படியை கேட்க விரும்பவில்லை. சமைப்பதன் சிரமமும் வேலையும் எனக்கில்லை. அதற்கு என்னிடம் ஒரு பையன் இருக்கிறான் என்று பதிலளித்தேன்.

மேலும் சமைத்த உணவுகளைக் கொண்டு வருவதால் எனக்கேற்படும் வசதிக்குறைவுகளையும் எடுத்து சொன்னேன். எனது உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பத்திற்கேற்ப சமைக்கப்பட்டிருப்பதில்லை என்பதையும் சில வேளைகளில் எனக்குப் பசியில்லாத போது கொண்டுவரப்படுகிறது என்பதையும் சொன்னேன். முக்கியமாக எனது வயிறை ஒறுத்து கொஞ்சத்தை மிச்சம் பிடித்து உடுப்பு வாங்கிக்கொள்ள வேண்டிய நிலைமையையும் எடுத்துச் சொன்னேன். இதன் பிறகு எனக்கு இரண்டு அளவும் பையனுக்கு ஒரு அளவும் அதற்கேற்ற தேங்காய், பூசனிக்காய், மரக்கறிகள், எலுமிச்சை, மற்றும் மிளகு, உப்பு போன்றவையும் தர இசைந்தனர். சில வேளைகளில் கோழி, முட்டை,இறைச்சியும் தருவதாகவும் கூறினர். அவர்கள் இசைவுபடுத்தியதற்கு. இறைவனுக்கு நன்றி தெரிவித்தேன்.

எனது படி பற்றிய பிரச்சினை தீர்ந்ததால், அடுத்த நடவடிக்கை, வசதியான வீட்டைப் பார்ப்பதாக இருந்தது. நான் தற்போதிருக்கும் வீடு சமையல் வேலைகளைப் பார்ப்பதற்கும் படுப்பதற்கும் வசதியானதாக இல்லை. அங்கே தென்னந்தோட்டத்துக்கு மத்தியில் மனோ ரம்மியமான சூழலில் ஒரு வீடு இருந்தது. அது அரசனுக்குச் சொந்தமானது. அங்கே நான் எனது வீட்டைக் கட்டிக் கொள்ளலாம். என்று தீர்மானித்தேன். நான் மக்களிடம் சொல்லி அவர்களை கூப்பிட்டு அதைக்கட்டிக் கொண்டிருந்த போது, அவர்களின் விதைப்பு வேலையோ அறுவடை வேலையோ வந்ததால், அவர்கள் இடை நடுவில் விட்டு போய் விட்டனர். அதன் பிறகு நானும் எனது பையனும் சேர்ந்து வீட்டை முடித்து எனது நாட்டு வழக்கப்படி வெள்ளையடித்தேன். இந்த நாட்டு வழக்கப்படி அரண்மனைக்கும் கோயில்களுக்கும் தான் வெள்ளையடிக்கும் உரிமையுண்டு. இது பெரிய குற்றமாக அங்கு கருதப்படுகிறது. நான் புதியவன் என்பதால் இதைத் தெரியாமல் செய்தேன். இதனை இந்நாட்டவர் செய்திருந்தால் அதற்கு விலையாக தம்தலையைக் கொடுத்திருக்க வேண்டும்.

எனது வீட்டு வேலைகள் முடிந்த பிறகு நான் பன்றிகளும் கோழிகளும் வளர்க்கத் தொடங்கினேன். இவைகள் நல்ல பலனை எனக்கு தரத்தொடங்கின. இதைவிட தோட்டத்தில் வாழ்வது எனக்கு பெரிய நன்மையை தந்தது. அங்கே விழுந்த தேங்காய்களை எனக்குத் தந்தனர். அவைகளைக் கொண்டு விளக்கு எரிக்கவும் இறைச்சியைப் பொரிக்கவும் எண்ணெய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருக்கமுடிந்தது. இந்த எண்ணெய் வெண்ணெயை விட குறைந்த தரமுடையதாகக் கருதப்படுகிறது. நான் தொப்பி தைக்க கற்றுக்கொண்டதால் அதுவும் எனக்குப் பேருதவியாக இருந்தது.

எங்களுடைய பிரதான நோக்கம், காலம் சாதகமாக இருக்கிற போது ஓடிவிடுவதாக இருந்தது. எந்த வழியால் போவது என்பதைத் தெரிந்து அதற்கு வழிகாட்டக்கூடிய சுதேசிகளையும் கைவசம் கொண்டு போதல் வேண்டும். வழியில் யாரையும் சந்திக்கக்கூடாது. வெள்ளைக்காரர்களை வழியில் இந்நாட்டவர்கள் சந்தித்தால் அவர்களிடம் பல கேள்விகள் கேட்டு திருப்திகரமான பதில் வரவில்லை என்றால் பிடித்துக் கொடுத்துவிடுவார்கள். அவ்வாறு பிடிபட்டால் கடும் குற்றவாளிக்குரிய சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும். உணவும் வழங்கப்படமாட்டாது. பிச்சை எடுத்து உண்கிற அவலநிலை ஏற்படும். மக்களின் காட்சிப் பொருளாக வாழ்நாள் பூராக இருக்க வேண்டிய நிலையும் தொடரலாம். இப்படி, தப்பி ஓடிப்போய் பிடிபட்டுச் சீரழிவதை விட இப்படியே இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04

அந்த நாட்டில் ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு குழு ஆங்கிலேயர்களைப் பற்றி

இந்தத் தீவில் எங்களைப் போல இன்னுமொரு குழு ஆங்கிலேயர்கள் 1658 இல், எங்களுக்கு ஒன்றரை வருடத்துக்கு முன்னர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பதின்மூன்று பேராகும். அவர்களின் பெயர்கள்: வில்லியம் வஸ்ஸல், ஜோன் மார்கின்சன், தோமஸ் மார்ச், தோமஸ் கிர்பி, ரிச்சர்ட் ஜேல்ஃப், கமிலியல் காடினர், வில்லியம் டே, தொமஸ் பிடென், ஹென்ரி மேன், ஹியூக்ஸ் மார்ட், டேனியல் ஹெல்ஸ்டியன், ஜேம்ஸ் கேனி, ஹென்ரி பிங்காம், கப்டன் பிரான்சிஸ் ஜோன்சன் தலைமையில் வந்த பேர்ஸியா மேர்சன்ற் என்ற அவர்களின் கப்பல் மாலைதீவுக்கருகில் கடலில் மூழ்கிவிட்டது. படகில் தப்பிக்கொண்ட இவர்கள் இந்த நாட்டின் கரையோரமாக வந்த போது உணவுப்பொருட்கள் தீர்ந்துவிட்டன. அவற்றை வாங்கும் நிமித்தமாக கரைக்கு வந்தனர்.[3] சிங்களவர்கள் அவர்களைப் பிடித்து, அவர்கள் உடுத்தி இருந்த உடைகளைத்தவிர வைத்திருந்த யாவற்றையும் பறித்துக் கொண்டனர். இதை அறிந்த அரசன், கொள்ளையடித்தவர்களைப் பிடித்து அவர்களின் பொருட்களை மீட்டு அவர்களிடம் கொடுத்தான். ஜோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கின்சன் என்ற பெயருடையவன் மாத்திரம் கொள்ளையடித்தவர் கண்ணில் படாமல் கொஞ்சப் பணத்தை தந்திரமாக ஒளித்து வைத்திருந்தான். அப்பணத்தை அவனது சக பாடிகள் அவனிடமிருந்து களவாடி விட்டனர். அவர்கள் அரசன் முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர்.

"ஆங்கிலேயர்கள் ஒல்லாந்தர்களுடன் சண்டையிடுகிறார்களா?" என்று அரசன் கேட்டான்.

"ஆம், நாங்கள் அவர்களை கடைசியில் முறியடிப்போம்" என்று ஆங்கிலேயர்கள் கூறினர்.

அவர்களுக்கு உடையும் உணவுப்பொருட்களும் கொடுக்கும் படி அரசன் கட்டளையிட்டான். வில்லியம் வல்லஸ் அவர்களின் தலைவராக இருந்தபடியால் அவருக்கு இரண்டு மடங்கு கொடுக்கப்பட்டது. அவர்களில் ஹியுக் ஸ்மார்ட், ஹென்ரிமேன் என்னும் இரு இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அரசன் அரசசபை வேலைக்கு அமர்த்திக் கொண்டான். அவர்களின் ஏற்றத்தையும் இறக்கத்தையும் இனி நாங்கள் பார்ப்போம். அவர்கள் கண்டி நகரத்தில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு படுக்க புதிய பாயும் இருவேளை உணவும் அரச மாளிகையிலிருந்து சமைத்து வழங்கப்பட்டது. அவர்களுக்கு போதிய உடைகளும் கொடுக்கப்பட்டன.

இதனால் அவர்களின் நிலைமை எங்களைவிட பரவாயில்லை. எங்களுக்கு படுக்க பாயோ உடுக்க உடையோ வழங்கப்படவில்லை. எங்களுக்கு அரசன் முன்னிலையில் போகும் கௌரவமும் கிட்டவில்லை.

பேர்ஸியா மேர்ச்சன்ற் மனிதர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பொது மக்கள் வரவேற்பைக் கண்டு அரசன் தங்களை விடுவிக்கப்போகிறான் என்று நம்பினர். அங்கே பற்ரேவொர்க்கேன்ஸ் என்னும் முதிய போர்த்துக்கீச பாதிரியார் வாழ்ந்து வந்தார். அவரோடு கதைக்கும் போது இந்த ஆங்கிலேயர்கள் அரசன் தங்களுக்கு செய்யும் உபகாரங்களைப் பார்க்கின்றபோது வெகுவிரைவிலே தங்களை விடுதலை செய்வான் என்று தோன்றுகிறது என்று கூறினர். அதற்கு அவர் வெள்ளைக்காரர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவித்தல் இந்நாட்டின் வழக்கமில்லை என்று உண்மையைச் சொல்லிவிட்டார். இதைக் கேட்டவுடன் அவர்கள் ஆத்திரம் கொண்டு அவரை, போப்பின் நாய்' 'யேசு சபை அயோக்கியன்' என்றெல்லாம் திட்டினர். பின்னர் அவர்கள் அவர் கூறியது உண்மை என உணர்ந்து வருந்தினர்.

அந்த நாட்டின் ஏழ்மை நிலையோடு ஒப்பிடும் போது அவர்களுக்கு நடந்த உபசாரங்கள் பரவாயில்லை என்று தான் சொல்ல வேண்டும். ஆனால், அந்த ஆங்கிலேயர்கள் அரசனின் உத்தரவுப்படி அது அமையவில்லை என்று கருதினர். அவர்கள் தாங்கள் நன்கு பராமரிக்கப்படுவதில்லை என்பதைக் காட்டும் அடையாளமாக ஒவ்வொருவரும் கோழிக்கால் ஒன்றை கையில் எடுத்துக் கொண்டு நகர வீதிகளில் பவனி வந்து, அரசசபை வாசலில் நின்றனர். இதனைக் கேள்விப்பட்ட அரசன் அவர்களுக்கு நல்ல உணவுகள் தாராளமாக வழங்குமாறு உத்தரவிட்டான். அவர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்தவைகளைவிட இந்நாட்டில் வேறு தரமான உணவுகள் இல்லை என்பதை அறிந்த பிரதானிகள் அவர்களின் அறியாமையை எண்ணிச் சிரித்தனர். பின்னர் இந்த உண்மையை அறிந்த ஆங்கிலேயர்களும் தமது அறியாமையை எண்ணி வெட்கப்பட்டனர்.

இறைச்சி குறைவாக இருந்தாலும் அவர்களுக்கு தாராளமாகச் சோறு வழங்கப்பட்டது. மேலதிகமாக அவர்களுக்குத் தேவைப்பட்ட இறைச்சியை வாங்கிக் கொள்வதற்கு அவர்களிடம் காசு போதியளவு இல்லை. அவர்கள் மாடுகளைக் கொலை செய்து அதனைப் பெற்றுக்கொள்ளலாமா என்று யோசித்தனர். அது சட்டத்துக்கு உட்பட்டதா என்று அவர்களுக்குத் தெரியவில்லை. இதைப்பற்றி மேற்கூறிய பாதிரியாரிடம் விசாரித்தனர். அவர் அதற்கு ஒரு தீர்வு சொன்னார். "சிங்களவர்கள் உங்களின் எதிரியாகி உங்களின் உடல்களை கைதியாக்கி வைத்துள்ளதால் அவ்வுடல்களைத் திருப்திப்படுத்த அவர்களின் உடமைகளை உபயோகிப்பது எவ்வகையிலும் சட்டவிரோதமாகாது." இவ்வாறு தான் சாதகமான ஆலோசனை சொன்னதற்காக தனக்கும் ஒரு துண்டு இறைச்சி தருமாறு கூறினார். இதன் மீது திருப்தியடைந்து அவர்கள் தமது நடவடிக்கைகளைச் செயல்படுத்தத் தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைக்காரர்களின் மனப்படத்தையும் மனித நடத்தை விசித்திரங்களையும் முன்னரும் பல பந்திகளில் சொல்லி இருக்கிறேன். இப்போது ஒரு பந்தியில் அதைப்பற்றி விபரிக்கிறேன். அரசனின் உத்தியோகத்தர்கள் பலாப்பழம் விளையும் இடங்களுக்கெல்லாம் போய் அவைகளை எடுத்து வந்து அரசனின் யானைகளுக்குப் போடுவது வழக்கம். அது அரச காரியமாதலால் சொந்தக்காரரின் அனுமதியை பற்றி அவர்கள் அக்கறைப்படுவதில்லை. இந்த ஆங்கிலேயர்கள் இருப்பதற்கு ஒரு வீட்டை கொடுத்திருந்தனர். இந்த வீடு மரணதண்டனைக்குட்பட்ட ஒரு பிரபுவின் வீடாகும். இந்த வீட்டு வளவில் நிறைய பலா மரங்கள் இருந்தன. அரசனின் சேவகர்கள் பலாப்பழம் சேகரிக்க இந்த வளவுக்கு வந்த போது வெள்ளைக்காரர்கள் அவர்களைத் தம் தோள் மீது தூக்கிக்கொண்டு வந்து வளவுக்கு வெளியே விட்டனர். வெள்ளைக்காரர்களுக்கு அங்குள்ள எதையும் சாப்பிட உரிமையுண்டு. ஆனால் அரச சேவகர்களின் நடவடிக்கைகளில் தலையிட உரிமையில்லை. அவமானப்பட்ட போதிலும் சேவகர்கள் தமது இரக்க சிந்தை காரணமாக அதைப்பற்றி முறைப்பாடு செய்யவில்லை. செய்திருந்தால் வெள்ளைக்காரர்கள் தண்டனைக்குட்பட்டிருப்பார்கள். அவர்கள் சில நாட்களில் வேறு வீடொன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். அரசனின் ஊழியர்கள் பலாப்பழம் எடுக்க அந்த வளவுக்கு போனபோது வெறும் தோட்டமே மிஞ்சி இருந்தது. பலாமரங்கள் ஒன்றையும் காணவில்லை.

இந்தக் குழுவில் இருந்து அரச சேவைக்கு ஹியுக்ஸ்மார்ட், ஹென்ரிமேன் என்னும் இரு இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதை முன்னர் கூறியிருந்தேன். அவர்கள் அரசனின் சலுகைகளையும் கௌரவத்தையும் பெற்று அவனின் முன்னிலைக்கு செல்லும் சிறப்புரிமையையும் பெற்றிருந்தனர். அரசனும் அவர்களோடு நாட்டு நடப்புகளையும் போர் விவகாரங்களையும் பற்றி அந்நியோன்னியமாக அளவளாவுவான். இவ்வாறு அரசனின் பெருமதிப்புக்காளாகி சிலகாலம் வாழ்ந்திருந்தனர்.

ஒரு தடவை அரச சபைக்கு வந்திருந்த டச்சுத் தூதுவருடன் இங்கிலாந்து பற்றிய செய்திகளை அறியும் ஆவலில் ஹியூக்ஸ்மார்ட் தனியாகக் கதைத்தான். இதை அவதானித்த அரசன் அவனை அழைத்து விசாரித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹியூக் உண்மையைச் சொன்னான். அரசன் நம்பவில்லை. அவனை இரகசியமாகக் கண்காணிக்கும்படி ஒற்றர்களுக்கு அரசன் கட்டளையிட்டான். இது விடயம் தெரியாத அப்பாவி ஹியூக், அத்தூதுவருடன் மீண்டும் உரையாடல்களில் ஈடுபட்டான். அவனைப்பிடித்துக் கொண்டு அரசன் முன்னிலையில் நிறுத்தினர். அரசன் அவன் மீது பெரும் சீற்றம் கொண்டான். தூதுவருடன் கதைப்பதற்கு அவருக்கு சேவை செய்பவர்களைத் தவிர யாருக்கும் உரிமையில்லை. இவ்வாறு கதைத்தது சிங்களவர்களாயிருந்தாற் சிரச்சேதம் நிச்சயம். வெள்ளைக்காரனாக இருந்ததால் தயவுகாட்டி சங்கிலியால் பிணைக்காமஙற கைதியாக்கி மலைமேல் கொண்டுபோய் வாழ விடுமாறு அரசன் கட்டளையிட்டான். அங்கே அரண்மனையை விட திருப்தியாக ஹியுக் வாழ்ந்தான். அவன் அங்கே ஒரு மனைவியையும் தேடிக்கொண்டான். அவனுக்கு ஒரு மகனும் இருந்தான். அவன் ஒரு பொழுது பலாக்காய் ஒன்றை கொக்கித்தடியாற் பறிக்கும் போது அது தவறுதலாக அவன் மேல் விழுந்ததால் அவன் மரணமானான்.

ஹென்ரிமேன் என்னும் மற்றவன், அரசனின் அபிமானத்தைப் பெற்றதால் அரண்மனை ஊழியர்களின் தலைவனாகத் தரமுயர்த்தப்பட்டான். ஒரு நாள் அவன் தவறுதலாக அரசனின் பீங்கான் கோப்பைகளை உடைத்துவிட்டான். இதனால் பயந்து போன மேன், பக்கத்திலிருந்த விகாரையின் மதகுருவிடம் தஞ்சம் புகுந்தான். அவன் செய்தது அரசன் கருத்தில் எடுத்துச் சினம் கொள்ளத்தக்க செயலல்ல. ஆயினும் அவன் மதகுருவிடம் தஞ்சம் புகுந்ததும் அவர் தன்னைக் காப்பாற்றுவார் என்று நினைத்ததும் அரசனுக்குச் சங்கடமாகவும் அசௌகரியமாகவும் போய்விட்டது. அவனைப் பிடித்து வரும்படி அரசன் உத்தரவிட்டான். ஆயினும் தனது கட்டளையால் அவன் பயந்துவிடாமலிருக்க, அவன் செய்தது கருதத்தக்க குற்றமில்லை என்றும், பயப்படாமல் மீண்டும் வந்து வேலை செய்யும் படியும் சொல்லியனுப்பினான். ஹென்ரிமேனைப் பிடிக்கப்போனவர்கள் அவனை மிக இறுக்கமாகக் கட்டித் தூக்கிக் கொண்டு வந்தனர். இரவாகி விட்டதால் அக்கட்டுக்களுடன் அவனை வைத்துவிட்டனர். அவன் கைகால்கள் வீங்கியதால் கட்டிய கயிறு எலும்பு வரையும் வந்து விட்டது. காலையில் இதைக் கேள்விப்பட்ட அரசன் அவனின் கட்டுக்களை அவிழ்த்து விடுமாறு கட்டளையிட்டனர். அவன் கால்களுக்கு மாத்திரம் சங்கிலி மாட்டி, அவனுக்கு நல்ல உணவுகள் வழங்கி அவனது காயத்தை ஆற்றும்படி கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் காயங்கள் ஆற, ஆறுமாதங்கள் பிடித்தன. ஆயினும் பழைய பலம் அவன் கைகால்களுக்கு வரவில்லை. அவன் மீண்டும் பழைய செல்வாக்குடன் அரச பணிகளைத் தொடர்ந்தான். சிறிது காலத்தில் அரசனது வெறுப்பை மீண்டும் சம்பாதித்துக் கொண்டான். ஒரு போர்த்துக்கீசன் அரச சேவையிற் சேர விரும்பினான். அவன் நோக்கம் காசு சம்பாதிப்பதல்ல. அவனுக்கு வேறு ஏதோ விபரீதமான நோக்கம் இருந்தது. ஹென்ரிமேன் தனது செல்வாக்கால் அரச சபையிலே தனக்கொரு வேலை வாங்கித்தருவான் என்ற எண்ணத்தில், அவனுக்குப் போர்த்துக்கீச மொழியில் ஒரு கடிதத்தை எழுதினான். தனது நோக்கத்தை சாங்கோபாங்கமாக விபரித்திருந்தான். ஹென்ரிமேனால் போர்த்துக்கீச மொழியில் இருந்த கடிதத்தை வாசிக்க முடியவில்லை. அதை அரச சபையில் வேலை செய்யும் இன்னொரு ஆங்கிலேயனைக்கொண்டு வாசித்தான். அக்கடிதத்தில் உள்ளடங்கிய செய்தியை அறிந்து அது ஆபத்தான விடயம் என்பதை உணர்ந்து அதைக்கிழித்தெறிந்து விட்டான். அக்கடிதத்தை வாசித்த ஆங்கிலேயன் அதில் எழுதப்பட்டிருந்தவைகளைப்பற்றிப் பின்னர் அரசனிடம் கூறிவிட்டான். இதனால் அக்கடிதத்தை எழுதிய போர்த்துக்கீசன், அதை பெற்ற ஹென்ரிமேன், கடிதத்தை வாசித்தும் ஏன் உடனடியாக அறிவிக்கவில்லை என்பதற்காக அந்த ஆங்கிலேயன், ஆகிய மூவரும் யானையால் துண்டு துண்டாகக் கிழித்தெறியப்பட்டனர்.

இந்த மரணதண்டனையால் நாங்கள் அதிருப்தி கொள்ளலாம், அல்லது மக்களால் அதை தெரியப்படுத்தலாம் என்று உணர்ந்த அரசன், நாங்கள் வாழ்ந்த எல்லா இடங்களுக்கும் எங்களை உற்சாகமிழக்கக் கூடியவாறு யாரும் கதைக்கக்கூடாது என்று கட்டளையிட்டான்.

ஒரு கடிதத்தால் அப்பாவி ஹென்ரி மேனின் உயிர் காவு கொள்ளப்பட்டதால் கடிதங்களைப்பற்றி ஒரு பயப்பிராந்தி எங்களிடையே பரவத்தொடங்கிவிட்டது. கடிதப்போக்கு வரத்தில் ஈடுபடும் வில்லியம் வல்லஸ், பேர்ஸியா மனிதர்களின் தலைவர் இதையிட்டுப் பெரிதும் பயப்பட்டார். அவருக்கு வெளியிடங்களிலிருந்து பல கடிதங்கள் வரும். அவர் அரசனுக்குப் பயந்து தனது கடிதங்களை அவனுக்கு தெரியப்படுத்தல் பாதுகாப்பானது என்று எண்ணினார். முதலில் தனக்கு வரும் கடிதங்களில் இந்நாட்டுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டங்களுக்கு முரணான விடயங்கள் இருக்கின்றனவா என்பதை நிச்சயம் பண்ண வேண்டும் என்று நினைத்தார். அங்குள்ள முற்குறிப்பிட்ட முதிய போர்த்துக்கீச பாதிரியாரிடம் சென்று முதலில் தனக்கு வரும் கடிதங்களைக் காட்டுவதை வழக்கமாக்கி கொண்டார். அவர் ஆமோதித்ததன் பின்பே அரசனிடம் சென்று கடிதங்களைக் காட்டி வந்தார்.

அரசனிடம் சென்று கடிதத்தைக் காட்டினால் அவரை வாசிக்கும் படி அவன் கூறுவான். அவர் வாசிக்கும் போது ஆங்கில மொழியில் சகல சொற்களையும் அறிந்தவன் போல் பாவனை காட்டி, கவனமாகக் கேட்பது போல் பாசாங்கு பண்ணுவான். ஒரு தடவை இவ்வாறு வாசிக்கும் போது சந்தேகம் கொண்டு அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை தனக்கு அறிவிக்குமாறு சென். ஜோர்ஜ் கோட்டையின் அதிபதி சேர் எட்வர்ட் வின்ரருக்குக் கடிதம் ஒன்று எழுதுமாறு தனது உத்தியோகத்தர்களுக்கு அரசன் கட்டளையிட்டான். அக்கடிதம், ஆங்கிலேயர்கள் ஒல்லாந்தர்கள் மேல் மேற்கொண்ட தாக்குதலையும், ஒல்லாந்த அட்மிரல் கொல்லப்பட்டதையும், ஆங்கிலேயர்கள் வெற்றியடைந்தமையையும் பற்றி எழுதப்பட்டிருந்தது. இத்தாக்குதலில் நூற்று ஐம்பது கப்பல்கள் பங்கு கொண்டனவென்றும் ஒவ்வொரு கப்பலிலும் முந்நூறு சிப்பாய்கள் ஈடுபடுத்தப்பட்டர் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அரசன் "எத்தனை சிப்பாய்கள் அக்கப்பல்களில் மொத்தமாக இருந்தனர்." என்று கேட்டான். அதற்கு வல்லஸ் ஒரு கைப்பிடி மணலை அள்ளி இதில் உள்ள துணிக்கைகளின் அளவு என்றார். அரசனை யோசிக்கவைத்து சிரமப்படுத்தாமல் 45000 என்று அவரே பதிலளித்தார்.

ஒல்லாந்தர்களை முறியடித்து, ஆங்கிலேயர்கள் வெற்றி கொண்டதைக் கேட்டு மன்னன் மகிழ்ச்சியடைந்தான். ஆங்கில நாட்டுக்கு வாழ்த்துக்கூறி தான் ஒரு கடிதம் அனுப்ப இருப்பதாக பாவனை செய்தான். வல்லஸை நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமித்தான். அரசசபை முக்கியஸ்தர் ஒருவர் அதனை எதிர்த்து, அவர் பொருத்தமற்றவர் என்றும் சம்பந்தப்பட்ட விடயங்களைப்பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது என்றும் சொன்னார். வல்லஸும் தனக்கு வழங்கிய நியமனத்தில் ஏதும் உள்நோக்கம் இருக்கலாம் என்று சந்தேகப்பட்டார். தனக்குச் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றி எதுவும் தெரியாது என்று கடிதம் எழுதி வேலையை ஏற்க மறுத்துவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக்காலத்திலிருந்து அவருக்கும் அரசனுக்குமிடையே போர்த்துக்கீச மொழியில் கடிதப் போக்குவரத்துக்கள் நிகழ்ந்தன. அவைகளில் என்ன பரிமாறப்பட்டன என்பதை இரகசியமாக வைத்திருக்கும்படி அரசன் சொன்னதால் அவரிடமிருந்து அதைப்பற்றி அறிய முடியவில்லை. அரசனின் பிடியில் இருந்து வெளியேறும் வரை அதைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாது என்று அவர் என்னிடம் சொல்லிவிட்டார். சிறிது காலத்தில் இக்கடிதப்போக்குவரத்து நின்று விட்டது. இரகசியம் காக்கப்படவேண்டும் என்பதற்காக இக்கடிதங்களின் பரிமாற்றத்தில் ஈடுபட்ட மனிதன் விலங்கிடப்பட்டு அடைக்கப்பட்டான். இவ்வாறு பேர்ஸியா மனிதர்களின் நிலைமை போய்க்கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05

விடுதலைக்கான உபாயங்கள் மற்றும் கிளர்ச்சியின் போதும் பின்னரும் எங்கள் நிலைமைகள்

இவ்வாறான நிலைமைகளோடு அங்கே 1664 ஆண்டு வரையும் நாங்கள் இருந்தோம். அவ்வாண்டு எங்களைப்பற்றி ஒரு கடிதம் சென். ஜோர்ஜ் கோட்டையின் மதிப்புக்குரிய ஆளுநர் சேர் எட்வர்ட் வின்ரரால் அரசனுக்கு அனுப்பப்பட்டது. கொழும்பில் உள்ள டச்சு ஆளுநரின் தூதுவரும் எங்களைப் பற்றி அரசனிடம் விசாரித்திருந்தார். சேர். எட்வர்ட் வின்ரரின் கடிதம் அரசனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. டச்சுத் தூதுவரின் விசாரிப்பும் இதில் செல்வாக்கு செலுத்தியது என்பதையும் குறிப்பிட வேண்டும். அரசன் எங்களை அனுப்பி வைப்பதாக வாக்குறுதியளித்தான்.

வெவ்வேறு பிரதேசங்களில் வாழ வைக்கப்பட்டிருந்த நாங்கள் எல்லோரும் நகரத்துக்குக் கொண்டுவரப்பட்டோம். நாங்கள் நகரத்துக்கு வந்த போது விடுதலை செய்யப்படப் போகிறோம் என்பதோடு, நீண்ட காலத்துக்குப் பின்னர் ஒருவரை ஒருவர் பார்க்க இருக்கிறோம் என்பதும், சேர்ந்து எங்களை பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தின. நாங்கள் பிரிந்ததிலிருந்து ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை. நாங்கள் பேர்ஸியா மேசன்ற் மனிதர்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் தடவையாக சந்தித்தோம். எல்லாமாக நாங்கள் இருபத்தொன்பது பேர் இருந்தோம்.

நகரத்துக்கு வந்து சில நாட்களின் பின்னர் நாங்கள் அரசசபைக்கு அழைக்கப்பட்டோம். நாங்கள் யாவரும் அரண்மனை வளவில் பிரசன்னமானோம். அரசனின் உத்தரவிற்கிணங்கப் பிரபுக்கள் எங்களிடம் பேசினர்: மேன்மை தங்கிய மன்னர் எங்களுக்கு விடுதலை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறார். உங்களை உங்கள் நாட்டுக்கு அனுப்ப விரும்புகிறார். இனிமேல் நீங்கள் கைதியாகவோ தடுத்து வைக்கப்பட்டிருப்பவராகவோ கருதப்பட மாட்டீர்கள். இதைக் கேட்டவுடன் நாங்கள் தலையைத் தாழ்த்தி மன்னருக்கு நன்றி தெரிவித்தோம். அவர்கள் மேற்கொண்டும் அரசர் உங்களை டச்சு தூதுவர் மூலமாகவோ, சேர் எட்வர்ட் வின்ரர் அனுப்பும் படகின் மூலமாகவோ அனுப்பி வைக்கத்திட்டமிடுள்ளார் என்றார்.

நாங்கள் "அதற்கு மேன்மை தங்கிய மன்னர் தன் விருப்பப்படி செய்யலாம்" என்றோம்.

அதற்கு அவர்கள் "மேன்மை தங்கிய மன்னர் தன் விருப்பப்படி செய்வார். எதற்கும் உங்கள் மனதில் உள்ளவைகளை அறிய விரும்புகிறார்" என்றனர்.

எங்களுக்குள் சிறிது நேரம் யோசித்து மேன்மை தங்கிய மன்னர் எங்களது விருப்பத்தைக் கேட்டால், பலதடவை அதற்கு நன்றிகூறி, மிகவும் பணிவுடன் நாங்கள் சொல்வதென்னவென்றால் டச்சு தூதுவருடன் செல்வதையே விரும்புகிறோம். எங்கள் ஆளுநர் அனுப்பும் படகு சிறிதாகையால், இப்போதைய மனநிலையில் ஆபத்தை எதிர்கொள்ள நாங்கள் தயாரில்லாமல் இருக்கிறோம். ஆயினும் இனிமேற்கொண்டும் டச்சு தூதுவரின் தயவையோ அந்த நாட்டுடன் எந்த உறவையோ வைத்துக் கொள்ளமாட்டோம் .

அடுத்த தடவை அவர்கள் சந்தித்தபோது "மேன்மை தாங்கிய மன்னர் இங்கே தங்கிச் சேவை செய்ய விரும்புகிறவர்களுக்கு பட்டங்கள், காசு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமைகள். இன்னும் மதிப்புக்குரிய கௌரவங்கள் அளித்துச் சிறப்புச் செய்ய விரும்புகிறார்" என்றனர்.

எங்களில் ஒருவரும் உடன்படவில்லை. அவர்கள் எங்கள் பதிலை அரசனுக்குத் தெரியப்படுத்தினர். பின்னர் எங்களை ஒவ்வொருவராக அழைத்து முன்னைய வெகுமதிகளை மீண்டும் ஒப்புவித்தனர். விசாரணை முடிந்தவரை மற்றவருடன் சேரவிடாது அரண்மனை வளவில் ஒரு பக்கமாக அனுப்பிவிட்டு மற்றவரை அழைத்து பழைய பட்டியலைக் கூறினர். ஒவ்வொருவரின் தொழில் தேர்ச்சி, மற்றும் திறமைகள் பற்றி அக்கறையுடன் கேட்டனர். அவர்களுக்குக் கைப்பணியாளர்களும் வாத்தியமிசைப்பவரும் அவசியமாகத் தேவைப்படுவதாகக் கூறினர். இப்போதும் நாங்கள் மசியவில்லை. எங்கள் தாய்நாட்டுக்குப் போக வேண்டும் என்பதில் எல்லோரும் குறியாக இருந்தோம். இதனால் அரசனின் வெறுப்பை சம்பாதித்துக் கொண்டோம்.

பின் அவர்கள், நீங்கள் ஒவ்வொரு நாளும் வந்து அரண்மனை வாசலில் நிற்க வேண்டும். அப்போது உங்களைக் கண்டு அரசன் ஒருவேளை இரங்கலாம் என்று கூறினர். இந்த வகையில் நாங்கள் பல நாட்கள் அரண்மனை வாசலில் நின்றோம். இக்காலத்தில் அசம்பாவிதம் ஒன்று நிகழ்ந்தது. அது அரசன் எங்கள் மீது தப்பெண்ணம் கொள்ள ஏதுவாகிவிட்டது. அரசனுக்கெதிரான கிளர்ச்சியாளர் ஒன்றுசேர்ந்து இரவில் அரண்மனையைத் தாக்கினர். ஆயினும் அரசன் தங்கி இருந்த அறையை அடையத் தவறி விட்டனர். அவர்கள் இன்னும் தைரியமுடன் செயற்பட்டிருந்தால் அரசனைப் பிடித்துக் கொன்றிருக்கமுடியும். அவன் காலை வரையும் அரண்மனையிலேயே இருந்து கோழைபோல் பயந்து மலைமேல் ஏறி தப்பித்துக் கொண்டான். இதில் சொட்டு துணிவையும் அவன் வெளிப்படுத்தவில்லை. இந்தக் கிளர்ச்சியைப் பற்றி இரண்டாவது பாகத்தில் விபரித்துள்ளேன். தேவைப்பட்டவர்கள் திரும்பிப்பார்க்கலாம். இந்த அமளி துமளிக்குள் அகப்பட்டுக் கொண்ட எங்களைப்பற்றி சில விடயங்களை மாத்திரம் இங்கே விபரிக்கிறேன்.

உண்மையில் இக்கலவரத்தின் மத்தியில் அகப்பட்டு தப்பிப் பிழைத்தது எல்லாம் வல்ல கடவுளின் ஆச்சரியப்படத்தக்க கருணையாலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர, வேறு வகையில் இல்லை. கிளர்ச்சிக்காரர்கள் அரண்மனையைத் தாக்குவதற்கு முதல் எங்களைச் சங்காரம் பண்ணிவிட யோசித்தனர். நாங்கள் அரசனுக்கு உதவியாக இருந்து தங்களின் திட்டத்துக்கு முட்டுக்கட்டை போடலாம் என்று எண்ணினர். நாங்கள் சிறுதொகையினர்தான் என்றாலும் வெள்ளைக்காரர்கள் என்னும் பெயரே அவர்களுக்கு இனம் புரியாத பயத்தைக் கொடுத்தது. இதனால் எங்கள் தலைகளைச் சீவிவிடுதல் உசிதமானது எனச் சிலர் அபிப்பிராயப்பட்டனர். ஆனால் பலர் அதற்கு உடன்படவில்லை.

"வெள்ளைக்காரர்களுக்கு எங்கள் திட்டம் தெரியாது. அவர்கள் அப்பாவிகள். மற்றது அவர்கள் இருக்கும் விடுதிகள் பல இடங்களில் சிதறிக் காணப்படுகின்றன. அவர்கள் மீது கைவைத்தால் செய்தி அரசனின் காதுக்கு உடனே போகும். அவன் உடனே உசாராகி விடுவான். எல்லாத்திட்டமும் பிழைத்துப் போகும்" என்று அவர்கள் மற்றவர்களின் கருத்தை எதிர்த்தனர். இப்படி நடந்ததைச் சம்பந்தப்பட்டவர்கள் பிற்காலத்தில் எங்களிடம் கூறினர். உண்மையில் கடவுள்தான் அவர்களின் மனங்களுக்குள் புகுந்து எங்களைப் பாதுகாத்தார் என்று நான் திடமாக நம்புகிறேன். அரசன் ஓடிவிட்டவுடன் நகரமக்கள் தங்கள் வீடுகளையும் பொருட்களையும் விட்டு வெளியேறினர். அங்கே நாங்கள் கண்டது கொலையும் கொள்ளையுமாகும். அரசனோடு ஓடியவர்களின் வீடுகள் உடைத்துக் கொள்ளையிடப்பட்டன.

அன்று கிறிஸ்துமஸ் நாள். கிளர்ச்சிக்காரர்களின் தலைவன் எங்களை அழைத்து, முதலில் பணமும் உடைகளும் தந்தான். அவன் எங்களிடம் சொன்னான். "நாங்கள் இப்போது புதிய உற்சாகத்தில் இருக்கிறோம். இந்த அரசனின் நீதியற்ற அரசாங்கம் செய்தவைகள் எங்களுக்கு ஆதரவையும் நியாயத்தையும் தேடித் தந்திருக்கின்றன. இந்த அரசன் நாட்டையும் மக்களையும் அழிக்கிறான். தூதுவர்கள் போன்ற புதியவர்களுக்கு அவன் செய்பவை நியாயமாகத் தோற்றம் அளிக்கின்றன. உண்மை நிலை அது வல்ல. அவன் வர்த்தகத்தை நாசம் செய்கிறான். வெளிநாட்டவர்களைக் காரணமில்லாமலே தடுத்து வைத்திருக்கிறான். எல்லாவற்றுக்கும் மேலாகத் தனது சொந்த மக்களை நோக்கி கொடூரங்களை ஏவிவிடுகிறான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மேலும் தொடர்ந்தான் "எங்கள் காரியம் நிறைவேறியவுடன் மற்ற நாட்டு அரசாங்கங்களுக்கு இந்த மாற்றத்தை பற்றி அறிவிப்போம்."

மேலும் நாங்கள் யாரையும் தடுத்து வைத்திருக்கமாட்டோம். அவரவர் நாட்டுக்கு அவரவர் போக அனுமதிப்போம் என்று எங்களுக்கு வாக்குறுதியளித்தான்.

எங்களையும் ஆயுதம் எடுக்கும்படி கிளர்ச்சிக்காரர்கள் கூறினர். ஆனால் கடவுள் அருளால் நிலைமை சடாரென மாறிவிட்டது. அரசனை விரட்டி விட்டு கிளர்ச்சிக்காரர்கள் கண்டி நகரத்தை நோக்கிச் சென்றனர். அவர்களின் நோக்கம் அங்குள்ள இளவரசனை அழைத்து வந்து சிம்மாசனத்தில் அமர்த்துவதாகும். இளவரசனின் மாமியார் அவனை அழைத்துக் கொண்டு எங்கோ ஓடிவிட்டாள். இதைக்கண்டு கிளர்ச்சிப்படை அதிர்ச்சியடைந்து, தைரியத்தையும் இழந்துவிட்டது. இப்போது அரசனுமில்லை, இளவரசனுமில்லை. என்ன செய்வது என்று தெரியாமற் கிளர்ச்சிப்படையினர் நாலாபக்கமும் சிதறி ஓடத்தொடங்கினர்.

இப்போது தொடர்ந்தது ஆளை ஆள் குரல்வளையை அறுப்பது தான். இதன் மூலம் தாங்கள் கிளர்ச்சியோடு சம்பந்தமில்லாதவர்கள், விசுவாசமான பிரஜைகள் என்று காட்டமுனைந்தனர்.

நாங்கள் புதியவர்களாகவும் கைதியாகவுமிருப்பதால் நாங்கள் ஒரு பக்கமும் சாயமுடியாமல் தத்தளித்தோம். எங்களுக்கு விடுதலை வழங்கி எங்கள் தாய் நாட்டுக்கு அனுப்பிவைப்போம் என்று கிளர்ச்சிவாதிகள் எங்களிடம் சொன்னதைத் தவிர, அவர்களுடன் வேறு எந்தப் பேச்சுவார்த்தைகளிலும் நாங்கள் ஈடுபடவில்லை. அவர்கள் சபைக்கு அழைத்து எங்களுக்கு தேவைப்பட்ட பொருட்களையும் பணத்தையும் தந்த போது, அதை மறுதலிக்க முடியாமற் பெற்றுக் கொண்டோம். ஆயினும் நாளாக நாளாக இதை அரசன் எவ்வாறு எடுத்துக் கொள்வானோ என்ற பயம் எங்களிற் பூதாகாரமாக வளர்ந்துவிட்டது.

கிளர்ச்சியைப் பற்றிய சிந்தனையைவிட, எங்களைத் தற்காத்துக்கொள்ள வேண்டிய தேவை பெரிதாக இருந்தது. எங்கள் பெரும் தேவைக்குமுன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களது பணம் சிறு துளியாகத் தென்பட்டது. படிகளும் கிளர்ச்சியால் இல்லாமலாகி விட்டது. இந்நிலைமையில் எங்களிடமிருந்து சிறிதளவு பணத்தைக் கொண்டு மூன்று மாதங்களை கடத்தினோம். ஆயினும் இந்த அமளிதுமளிக்கிடையிலும் ஒன்றாக இருந்து கிறிஸ்துமஸ் உணவை உண்ண வைத்த ஆண்டவனின் அருளை எண்ணி வியந்தோம்.

ஒரு நாள், நாங்கள் எங்கள் வீட்டில் இருந்து இறைச்சியை வாட்டிக் கொண்டிருக்கும் போது ஒரு பிரதானி எங்களை அழைத்தார். அவர் தனியே வயலில் நின்று கொண்டிருந்தார். அவர் கிளர்ச்சிக்காரராக இருக்க வேண்டும், கொழும்புக்குத் தப்பியோடுவதற்கு ஆலோசனை கேட்பதற்காக வந்திருக்கிறார் என்று நாங்கள் நினைத்தோம். நாங்கள் அவரின் அருகில் போனபோது பழைய அரசனை அவர் வாழ்த்தினார். அவர் தனது ஆட்களுடன் எங்களை அழைத்துக் கொண்டு அணிநடையாகக் கிளர்ச்சிக்காரரைப் பிடிக்க வேண்டும், அவர்களைக் கொல்ல வேண்டும் என்று கூவி, கண்டி நகரத்தின் வீதிகளில் வலம் வந்தார். ஒருவரும் அகப்படவில்லை. பிறகு எங்களை விலத்தும் போது அவர் சொன்னார். "அரசனை எனக்குத் தெரியும். தேவையேற்பட்டால் அவனுக்காகப் போரிட நாங்கள் எப்போதும் தயாராகவுள்ளோம்."

நாங்கள் கிளர்ச்சிக்காரர்களிடமிருந்து பொருட்களும் பணமும் பெற்றதைப்பற்றியும் அவர்களோடு எங்களுக்கேற்பட்ட தொடர்பு பற்றியும் அரசன் அறிந்தான். "நான் போன பிறகு, அவர்களுக்கு யார் உணவளித்திருப்பார்கள்? அவர்களின் தேவைகள் கிளர்ச்சிக்காரர் கொடுப்பதை வாங்க அவர்களை நிர்ப்பந்தித்திருக்கின்றன." என்று அரசன் கூறினான். அரசனின் வாயிலிருந்து வந்த இந்த வார்த்தைகளைக் கேட்டு நாங்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டோம். நாங்கள் குற்றவாளிகள் இல்லை என்பது நிரூபணமாகியது. வாள் தன் பக்கம் சாயும்படி வற்புறுத்தும் போது கடவுளின் முன் ஜாக்கிரதை எங்களை ஒரு பக்கமும் சாயவிடாமல் செய்து எங்கள் தலைகளை மயிரிழையிற் காத்தது.

கிளர்ச்சி அடங்கி அமளிதுமளியும் ஒருவாறு ஓய்ந்தது. அரசன் மீண்டும் சிம்மாசனத்தைப் பெற்றுக்கொண்டான். இதெல்லாம் ஐந்து நாட்களுக்குள் நடந்து முடிந்துவிட்டது. எங்களுக்கு வாழ்க்கைத் தேவையைச் சமாளிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. அரசனின் வாயிலிருந்து புதிதாக ஏதும் கட்டளைகள் வருமா என்று காத்துக் கொண்டிருந்தோம். அவ்வாறு காத்திருந்து ஏமாந்து, வேறு வழியில்லாமல் யாசகம் கேட்பது போல் நெடுஞ்சாலையில் போய் நின்றோம். அரசனுக்கு அருகிற் செல்ல அரண்மனை ஆட்கள் எங்களை விடவில்லை. அரசனுக்கு எங்களைப்பற்றி செய்தி தெரிய வந்தது. எங்களது உணவுப்படிகளை வழங்குமாறு உத்தரவிட்டான். இந்த வழியாக எங்கள் தேவை ஒருவாறு நிறைவேறியது. இவ்வாறு இரண்டு மாதங்கள் கடந்தன. அரசன் எங்களை நாங்கள் முதல் இருந்த மாதிரி, நாட்டின் பல பாகங்களுக்கும் போய் வாழுமாறு பணித்தான். ஆயினும் கிளர்ச்சிக்கு முன் ஒப்புக்கொண்டிருந்தவாறு எங்களை எங்கள் தாய் நாட்டுக்கு அனுப்புவது பற்றி எந்தப் பேச்சும் இல்லை.

நாங்கள் முன்பிருந்த பழைய இடங்களுக்கு அனுப்பப்படாமற் புதிய இடங்களுக்கு அனுப்பப்பட்டோம். புதிய இடம் பழைய இடத்தில் இருந்து அலுப்பைப் போக்கும் என்று சற்று மகிழ்ச்சியடைந்தோம். எங்கள் உபசரிப்புக்காக ஒரு தொகை வழங்கப்பட்டது. அங்கே மூன்று மாதங்கள் இருந்தோம். நாங்கள் இப்போது முன்னைப்போல் பேர்ஸியா மேசன்ற் மனிதர்களுடன் வைக்கப்பட்டிருந்தோம். இங்கு மாறும் வரையும் அவர்களுக்கு உணவு அரண்மனையிலிருந்து சமைத்து எடுத்து வந்து கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது அவர்களும் எங்களைப் போல நாட்டுப்புறங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

அங்கே மக்களுக்கு படி வழங்கத் தோதான வகையில் இருப்பிடங்கள் அமைத்துக் கொண்டோம். நாங்கள் அம்மக்களின் மொழி, பழக்கவழக்கங்கள், மற்றும் அவர்களின் உணவு முறைகள் என்பனவற்றில் நல்ல பரிச்சயம் பெற்றிருந்தோம். பயிர்ச்செய்கை, உபகரணம் திருத்தல், தொப்பி பின்னல், அத்துடன் அங்குள்ள வேறு தொழில்களைச் செய்யப் பழகிக் கொண்டோம்.

நாங்கள் நாட்டின் எவ்விடத்துக்கும் கடற்கரையைத் தவிரப் போய்வர அனுமதிக்கப்பட்டிருந்தோம். இப்போது ஒருவரும் எங்களைக் கவனிப்பதில்லை. ஆனால் நாங்கள் கைதியாக்கப்பட்ட ஆரம்ப வருடங்களில் இந்நிலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

இல்லை. அப்போது நாங்கள் ஒரு இடத்திற்கும் போக முடியாமல் இருந்தது. சனங்களின் கண்கள் சதா சந்தேகத்துடன் அவதானித்துக் கொண்டிருக்கும். இப்போது வெள்ளைக்காரர்கள் தங்களுக்கென்று வீடுகளைக் கட்டிக் கொண்டு மனைவிமார்களுடன் வாழத் தொடங்கிவிட்டனர். நான் அங்கிருந்து ஓடிவரும் போது அவர்களுக்கு மொத்தமாக பதினெட்டு பிள்ளைகள் இருந்தனர்.

ஆங்கிலேயர்களைப் பற்றிப் பொதுவாகச் சொல்லிவிட்டேன். இப்போது எனது தனிப்பட்ட நிலைமைகளைப் பற்றிச் சொல்லத் தொடங்குகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

06

கிளர்ச்சிக்குப்பின் எனது நிலைமையும் மற்றும் ஒரு துண்டு நிலத்தைக் கொள்வனவு செய்தலும்

கண்டி நகரத்துக்கு மேற்கேயுள்ள ஹண்டபொண் பிரதேசத்திற்குச் சென்று வாழுமாறு நான் பணிக்கப்பட்டிருந்தேன். இந்தப் பிரதேசம் நான் வாழ்ந்த மற்றப் பிரதேசங்களைவிடக் கடலுக்கு அருகாமையில் இருந்ததால் நான் தப்பிப்போவதற்கு அதிகவாய்ப்பைத் தரலாம் என்பதால் அப்பிரதேசத்தை நான் மிகவும் விரும்பினேன். இக்காலத்தில் இரவும் பகலும் எனது நடவடிக்கைகளை அவதானித்துக் கொண்டிருக்கும் மக்களின் சந்தேகக் கண்களிலிருந்து விடுபட்டிருந்தேன். அங்கிருந்த ஆற்றங்கரையில் எனக்கொரு வீட்டை பக்கத்தவர்களின் உதவியுடன் கட்டிக்கொண்டேன். நீர் ஓடுவதற்கு சிறிய வாய்க்கால் ஒன்றையும் வெட்டி வீட்டு வளவைச் சுற்றி கொத்து வேலியும் அமைத்துக் கொண்டேன். எனது பின்னல் வேலையையும் ஊர் ஊராகச் சென்று வியாபாரமும் செய்து வந்தேன். வாழ்க்கை ஓரளவு திருப்தியாகச் சென்று கொண்டிருந்தது.

படி இல்லாததால் என்னிடமிருந்த ஏழு சில்லிங்குகளைச் செலவழித்துவிட்டேன். ஆயினும் இந்தப் புதிய இடத்தில் ஓரளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமிக்க வாய்ப்பேற்பட்டது. கடவுள் அருளால் நான் எனது முயற்சியிலே தோல்வியுறாமல் இருந்ததால் எனது கையில் ஓரளவு பணப்புழக்கம் இருந்தது. எனக்குத் தேவையான தட்டுமுட்டுச் சாமான்களையும் வாங்கிக் கொண்டேன். இதைக் கண்ட நகரமக்களும் பக்கத்தவர்களும் நான் ஓடிவிடமாட்டேன் என்று திடம் பண்ணிக்கொண்டு "உங்களுடைய உதவிப் பையனும் வேறு தொழிலை நாடிப் போய்விட்டான். உங்களுக்குச் சமைத்துத்தரவும் வீட்டைப் பராமரிக்கவும் யாருமில்லை. உங்களைப் போன்ற இளவயதினர் கலியாணம் கட்டாமல் வாழ்வது வசதியானதில்லை. உங்களது நாட்டுக்குப் போவதற்கு அரசன் அனுமதித்தாலும் நீங்கள் உங்கள் மனைவிக்கு எந்தக் கெடுதலும் செய்யவில்லை என்றால் நீங்கள் போவதற்கு எந்த தடையும் இல்லை." என்று ஆலோசனை கூறினர். நான் அவர்களின் ஆலோசனையை முற்றாக மறுதலிக்கவில்லை. அப்படிச் செய்தால் நான் இப்போதும் எனது நாட்டைப்பற்றிய சிந்தனையிலேயே மூழ்கியிருக்கிறேன் என்று நினைத்து விடுவார்கள்.

"நான் போதுமான அளவு சேமிக்கவில்லை. ஆயினும் இப்போது எனக்கு விருப்பமான ஒருவரை தேடிக்கொண்டிருக்கிறேன்" என்று அவர்களுக்குச் சொன்னபோதிலும் எனது உள்மனத்திற் கலியாணம் முடிப்பதைப்பற்றிய சிந்தனை ஒன்றுமில்லை. உண்மையைச் சொல்லப் போனால் அந்த எண்ணத்தை அடியோடு வெறுத்தேன்.

இந்த இடத்தில் நான் இரு வருடங்கள் இருந்தேன், இக்காலத்தில் ஓடிப்போவதற்குரிய சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. அவசரப்பட்டு முடிவெடுத்தால் பெரும் ஆபத்தில் சிக்கிக் கொள்ளலாம் என்றும் காலமும் அனுபவமும் ஒத்துழைக்கும் போதுதான் அது சாத்தியப்படும் என்றும் பொறுமையுடன் காத்திருந்தேன்.

1664 இல் ஒல்லாந்தர் நான் இருந்த மலை முகட்டுக்கும் மற்றொரு மலை முகட்டுக்குமிடையே ஒரு கோட்டையைக் கட்டினர். ஒல்லாந்தர் இருப்பது அண்மையில்தான் எனினும் என்னால் அவர்களை அடையமுடியாமல் வழி நெடுக பல காவற்கடவைகள் போடப்பட்டு இரண்டு கொமாண்டர்களும் அவர்களின் படைவீரர்களும் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர். அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் இருந்து இறங்கி வருபவர்களை அப்பால் போகாமல் தடுத்துக் கொண்டிருந்தனர்.

ஹெட்டரெற கோர்லி பிரதேசத்தில் இருந்து இந்த கோட்டை அரண் டெரி என அழைக்கப்பட்டுள்ளது. அந்த கோட்டை கட்டப்படுவதை அரசனாலே தடுக்க முடியவில்லை. ஆயினும் இருவருடங்களுக்கு முன்னர் அவர்களுக்குத் தெரியாமலே தாக்கி அங்கிருந்தவர்களையெல்லாம் சிறைப்பிடித்துக் கண்டிக்குக் கொண்டு வந்துவிட்டனர். நான் அங்கிருந்து வரும்வரை அவர்கள் அங்கேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கைப்பற்றிய கோட்டைக்குக் காவலாக பலர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். அதில் நான்கு ஆங்கிலேயர்களும் இருந்தனர். அதில் நானும் ஒருவன். டச்சுக்காரர்கள் படையெடுத்து வருகிறார்கள் என்று கேள்விப்பட்டவுடன், கண்டியைப் போர் அபாயமுள்ள இடமாகப் பிரகடனப்படுத்திவிட்டு அரசன் வேறு மறைவிடத்துக்குச் சென்றுவிட்டான்.

இந்தப் படையெடுப்புப் பற்றிய செய்தி திடீரென வந்ததால், கடவுள் கிருபையாற் கிடைத்த எனது சிறிய தோட்டத்தையும் அங்கு நிறைந்திருந்த கமுக மரங்களையும் (பாக்கு இந்த நாட்டின் முக்கிய பண்டமாகும்) விட்டுப் போக நேரிட்டது. எனது உடைகளை எடுத்துக்கொண்டேன். ஒல்லாந்தர்கள் அவர்களின் எதிரிகள் எனது நண்பர்கள்-கிட்ட வந்து கொண்டிருந்தனர். நான் ஏழையாகவே இங்கு வந்தேன். இப்போது எனது பயன்களை விட்டு ஏழையாகவே வெளியேறுகிறேன். அப்போது ஜாகோப்பின் வார்த்தைகள் எனக்கு நினைவுக்கு வந்தன. "இந்த உலகத்திற்கு வெறும் கையாக வந்தேன். வெறுமையுடன் திரும்புகிறேன். கடவுள் தந்தார். அவரே எடுத்துக் கொண்டார், நான் ஆண்டவனின் நாமத்தைப் பிரார்த்திக்கிறேன்."

நாங்கள் நால்வர்[4] லெகுண்டெனியாய பட்டணத்துக்கு கொண்டுவரப்பட்டோம். அது ஒரு மலை உச்சியில் இருந்தது. நானும், சக கைதியும் என்னைப்போல் பிரமச்சாரியுமாக இருக்கும் எனது நண்பனான ஜோன் வல்லசும் ஒரு வீட்டில் வைக்கப்பட்டோம், இப்போது எங்கள் மனிதர்கள் பலர் எங்களைப்போலத் தனி மனிதர்களாக இல்லை. விடுதலை பெறுவோம் என்ற நம்பிக்கையை இழந்து மனைவிமாரையும் படுக்கைத் துணைகளையும் தேடிக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் தடவையாக இந்த இடத்திற்கு வந்த போது நாங்கள் மிகவும் திகைத்துவிட்டோம். இதுதான் இந்த தீவில் நான் கண்ட மிக இருண்ட இடமாகும். இந்த இடம் ஒரு மலைச்சிகரத்தில் அமைந்திருந்ததால் பக்கத்தில் வேறு பட்டணங்கள் இருக்கவில்லை. நாலு ஐந்து வீடுகள் தான் அங்கு இருந்தன. அரசன் சிரச்சேதம் செய்ய எண்ணி இருப்பவர்களை இங்கு வாழ அனுப்புகிறான். எனினும் எங்களை இங்கே அனுப்பியது அந்த நோக்கத்துக்காக இல்லை என்பது எங்களுக்கு நிச்சயமாகத் தெரியும். ஆயினும் ஏதோ காரணத்துக்காக இங்கே போய் வாழ அரசன் பணித்திருக்கிறான் என்று மட்டும் புரிந்தது.

எங்களது திகைப்பும் கவலையும் ஒரு நாள்தான் நீடித்தது. மனத்துக்கினிமையான ஹரண்டபொன்டவுண் நகரத்திலிருந்து எங்களை மாற்றி இந்த இருண்ட மேகம் மூடிய இடத்திற்கு கொண்டு வந்தது எங்களுக்கு பயத்தையும் துன்பத்தையும் கொடுத்திருக்கும் என்பதை அரசன் உணர்ந்து கொண்டான் என்பது, அடுத்த நாள் அவன் வாயிலிருந்து வந்த வார்த்தைகளாற் புரிந்தது. "இவர்கள் குற்றம் செய்தவர்கள், எனது வெறுப்பை சம்பாதித்ததால் கைதியாக வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மக்கள் நினைக்கக்கூடாது. மாறாக இவர்கள் எனது அபிமானத்துக்குரியவர்கள், எனது சேவையில் பெரிய பதவியில் நியமிக்கப்படப் போகிறவர்கள். அவர்களை மக்கள் மதித்து உபசரிக்க வேண்டும். அங்குள்ளவர்கள் தங்கள் மாடு மனைகளை விற்றாவது, மனைவி பிள்ளைகளை விற்றாவது அவர்களைப் பராமரிக்க வேண்டும்" (அரசனின் பிரதானி ஒருவர் அதை எங்களிடம் சொன்னார்) இந்தக்கட்டளையால் நாங்கள் மிகவும் சிறப்பாகக் கவனிக்கப்பட்டோம். எங்களுக்குக் கூரை மேய்ந்த வீடுகள் கிடைக்கவில்லை. அவர்களை மாற்றிவிட்டு இடவசதியுள்ள பொருத்தமான வீட்டில் நாங்கள் இருக்க வைக்கப்பட்டோம்.

இந்தத் திடீர் கட்டளை அரசனிடமிருந்து வந்ததால் எங்களுக்கு பெரிய வசதியோ உற்சாகமோ ஏற்படவில்லை. சிறிது காலத்தில் அரசன் எங்களை இங்கு வாழச்சொன்னதன் தாற்பரியம் விளங்கியது. அது நிச்சயமாக எங்களைத் தண்டிப்பதற்கு அல்ல. கிளர்ச்சியின் போது அரசனின் மாளிகையைக் கொள்ளையடித்தவர்களை அவன் அங்கு வாழ அனுப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறான். அவர்களைக் கொடுமைப்படுத்துவதற்காக அரசன் எங்களை ஒரு கருவியாகப் பாவிக்கிறான் என்று எங்களுக்கு இப்போது புரிந்தது. கொள்ளையடித்தவர்கள் அரசனின் பல்லக்குகாவிகளும் அவனின் மாடுகளை பராமரிப்பவர்களும் அரண்மனைக்குப் பால் கொண்டுவருபவர்களும் தான். அரண்மனையும் அரசசபையும் பக்கத்துக்குப்பக்கம் இருந்ததும் அங்குள்ளவர்கள் ஓடிவிட்டதும் கொள்ளையர்களுக்குப் பெரிய வாய்ப்பாக அமைந்துவிட்டது.

இந்தப் பட்டணத்தில் நாங்கள் மூன்று வருடங்கள் இருந்தோம். இந்த இடத்தில் இருந்து களைத்தும் அலுத்தும் விட்டோம். அந்த மக்களும் எங்களால் மிகுந்த சிரமத்துக்குள்ளாகி விட்டனர். நாங்கள் அவர்களுக்குத் தொல்லைதரும் விருந்தாளிகள். அவர்களுக்கு கடும் உத்தரவு போடப்பட்டிருந்ததால் அவர்களின் சிரமத்தைக் குறைக்க எங்களால் முடியவில்லை. ஆயினும் எங்களால் இயன்றவரை அவர்களைச் சிரமப்படுத்தாமற் பார்த்துக் கொண்டோம். இரண்டு தரப்பினரும் களைத்துப் போய் விட்டோம். கடைசியில் எங்களைப் படிப்படியாக வெளியேறுமாறு அரசனிடமிருந்து கட்டளை வந்தது. எங்களுக்குரிய வாழிடத்துக்குச் செல்லுமுன் அரண்மனையின் திருத்த வேலைகளைக் கவனிக்குமாறு கேட்கப்பட்டோம். அரசனின் விசேட கட்டளை என்ற படியால் நகரத்தில் இருந்து, அந்த வேலையை நிறைவேற்றினோம்.

இங்கே நகரத்திலே தங்கி இருந்த காலத்தில், உணவுகள் ஒழுங்காகவும் நேரத்துக்கும் கொண்டு வரப்பட்டன. ஆளுநரிடமிருந்தும் மன்னரிடமிருந்தும் அதற்குரிய செலவுகள் வழங்கப்பட்டன. நாங்கள் சாப்பிட்டு, உடுத்து, பொழுது போக்கிற்காகப் பின்னிக்கொண்டிருந்தோம்.

நான் எனது முன்னைய இருப்பிடத்துக்குச் சென்று வர உரியவர்களைச் சமாளித்து அனுமதி பெற்றிருந்தேன். எல்லாப் பிரச்சினைகளும் ஒருவாறு தீர்ந்ததால் அங்கு நான் கொடுத்திருந்த கடன்களைப் பெறுவது எனது நோக்கமாக இருந்தது. ஆனால் எந்த வழியிலும் அதனைப் பெறமுடியவில்லை. நான் ஒருவரைக் கூலிக்கு அமர்த்தி அவரை அழைத்துக் கொண்டு அங்கே சென்றேன். நான் தனியாகச் சென்றால் என்னைக் காவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவையூடாக செல்லவிடாமலே தடுத்து விடுவார்கள். நான் எஜமானும் கூலிக்காரனுமாக இருந்த போதிலும் காவல் கடவையில் நான் கைதியாகவும் அவன் எனக்கு மேற்பார்வையாளனுமாக நடித்தோம். இந்த தந்திரத்தால், இலகுவில் கடக்க முடிந்தது.

எனது பழைய இருப்பிடத்தில் இந்த மனிதன் நீதவானால் எனது கடன்கள் சரியாக அறவிடப்படுகிறதா என்பதை அறிந்துவர அனுப்பப்பட்டவன் என்று பொய் கூறினேன். சில கடன்களை பெறமுடிந்தது. சில கடன்களைக் கைவிடும் நிலை ஏற்பட்டது. இனிப் புதிதாக ஆரம்பிப்பதுதான். என்னை, மீண்டும் ஓரளவு நல்ல நிலைக்குக் கொண்டுவந்த கடவுளுக்கு நன்றி தெரிவித்துவிட்டு அவ்விடத்திலிருந்து மீண்டேன்.

நான், இப்போது ஒரு துண்டு நிலம் விற்பனை செய்யப்பட இருப்பதாகக் கேள்விப்பட்டேன். இந்த இடத்தில் இருந்து களைத்து விட்டதால் எனக்கென்றொரு வாழ்விடத்தைத் தேடிக்கொண்டால் நல்லதென்று நினைத்தேன். கடவுள் இதற்கென்று ஒரு வழியை காட்டுகிறார் போலும். அதனால் அதைப்பற்றி அக்கறையுடன் விசாரித்தேன்.

நான் இந்த நாட்டில் ஏழு அல்லது எட்டு ஆண்டுகள் வாழ்ந்து, இந்த நாட்டின் வழமைகளையும் சட்டங்களையும் நன்கு அறிந்துள்ள போதிலும், நானே முடிவெடுத்தாற் சில வேளை வில்லங்கங்கள் நேரிடலாம் என்று பயந்தேன். இதனால் அந்த நிலம் அமைந்துள்ள பிரதேசத்தின் ஆளுநரிடம் சென்று நான் சட்டரீதியாக அந்த நிலத்தை வாங்கலாமா என்று கேட்டேன். அவர் அந்த நிலம் எப்படிப்பட்டது, யாருடையது என்று கேட்டார். அந்த நிலம் முன்னாளில் ஒரு மதகுருவுக்குக் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது. அவர் தனது மரணப்படுக்கையில் அதைத் தனது மருமகனுக்குக் கொடுத்திருக்கிறார். அவன் தற்போது தனது தேவை காரணமாக விற்க விரும்புகிறான் என்று கூறினேன். இந்த வகை நிலத்தை சட்டரீதியாக வாங்கவும் விற்கவும் முடியும். இதை வாங்குவதால் எந்தப் பிரச்சினையும் உங்களுக்கு நேராது என்று அவர் என்னிடம் கூறினார்.

அவருடைய ஆலோசனைக்குப் பிறகு நான் நிலம் வாங்கும் அலுவலில் ஈடுபட்டேன். இந்த நிலம் அமைந்துள்ள இடம் எனக்கு மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துக் கொண்டது. அந்நிலம் ஒரு வயலுக்குள் நீட்டிக்கொண்டிருக்கும் முனைப்பகுதியாதலால் மூன்று பக்கமும் வயலாற் சூழப்பட்டது. நல்ல நீர் வளமுள்ள இடம். அங்கே எட்டு தென்னை மரங்களும் பலவகை பழ மரங்களும் காணப்பட்டன. ஆயினும் மிகவும் தனிப்பட்டதாகவும் எங்கும் பற்றைகள் நிறைந்தும் இருந்தது. பக்கத்தில் சனப்புழக்கம் இல்லை.

அந்த நிலத்துக்குரிய விலை இருபது லார் அல்லது ஐந்து டொலராகும். இந்த நாட்டின் நிலைமையில் அது மிகவும் கூடிய தொகையாகும். ஆயினும் நான் எனது பெரும் இழப்புக்குப் பின் தேறி இங்கே குடியேற வைத்த ஆண்டவனுக்கு நன்றி சொன்னேன், நாட்டு வழக்கப்படி ஒரு ஓலையில் பத்திரம் எழுதப்பட்டது. பட்டணத்தில் உள்ள முதன்மை மனிதர்கள் ஏழு எட்டு பேர் சாட்சியாக, அவன் பத்திரத்தை என்னிடம் கொடுக்க நான் பணத்தை அவனிடம் கொடுக்க நிலக் கொள்வனவு நிறைவேறியது. ஒடானூர் பிரதேசத்தில் எலேடெற்ற பட்டணத்தில் இந்த இடம் அமைந்துள்ளது. அது கண்டி நகரத்தில் இருந்து பத்துமைல் தொலைவில் உள்ளது.

நான் அந்த நிலத்தில் வீடு ஒன்றைக் கட்டத் தொடங்கினேன். அதற்கு பக்கத்தில் வாழ்ந்த எனது நாட்டவர்களான ரோஜர் கோல்ட், ரால்ஃப்நைற், ஸ்டீபன் ரட்லாண்டு என்பவர்கள் வந்து உதவினர். அதனால் மிகக்குறுகிய காலத்தில் வீடு பூர்த்தியடைந்தது. நான் குறுகிய காலத்தில் நிலம் வாங்கி வீட்டைக் கட்டி வேலிபோட்டு முடித்ததைக் கண்டு பட்டணத்தில் உள்ளவர்கள் எல்லாம் ஆச்சரியப்பட்டனர். எங்களது மனது எங்களை, நாட்டை விட்டு, இந்நாட்டில் நிலைத்திருக்கிறது என்று எண்ணிக் கொண்டனர்.

லெகுண்டெனியாயவிலிருந்து எனது இருப்பிடத்தை மாற்றிக்கொள்ளாமல் நான் இங்கே வீடு கட்டிக்கொண்டேன். முற்கூறிய மூன்று ஆங்கிலேயர்களைப் புது வீட்டிற் குடி வைத்துவிட்டு, லெகுண்டெனியாயவுக்கு வந்தேன். அவ்விடத்தை விட்டு அகலும் உத்தரவுக்காகக் காத்துக்கொண்டிருந்தேன். எதிர்பார்த்த உத்தரவும் கிடைத்தது. என்னோடு இருந்த மற்றவர்களும் அவரவர் விருப்பப்படி வெவ்வேறு இடங்களுக்குச் சென்று வாழப் போய்க்கொண்டிருந்தனர். இதனால் நாங்கள் பெற்று வந்த சலுகை ஒன்றை இழக்க நேரிட்டது. எங்களுக்குக் கொண்டுவந்து தரப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுப்பொருட்களை நாங்களாகவே போய் பெற்றுக்கொள்ள நேரிட்டது. நாங்கள் போகுமிடமெல்லாம் உணவுப்பொருட்களைக் காவிக்கொண்டு வரமுடியாது என்று மக்கள் கூறிவிட்டனர்.

புதிய இடத்திற் குடியேறி, வளவு நிறையப் பலவகை பழமரங்களை நட்டேன். அவைகள் கடவுள் கிருபையால் வளர்ந்து நல்ல பலனைத் தந்தன. விளைந்த பழங்கள் எனக்கும் என்னுடன் வாழ்பவர்களுக்கும் போதுமானவைகளாக இருந்தன. நான் லெகுண்டெனியாவுக்கு போகும் போது இருந்த மூவரும் தொடர்ந்தும் இப்போதும் என்னுடன் வாழ்ந்தனர். நாங்கள் அனைவரும் தனிக்கட்டைகள். நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழ்வதென்றும், ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதென்றும், ஒருவர் ஈடுபாட்டில் மற்றவர் தலையிடுவதில்லை என்றும் தீர்மானித்துக் கொண்டோம். தனிக்கட்டையாக இருக்கும் பிரமச்சாரிகள் இங்கு வாழலாம், இந்த வாழ்க்கை வசதியானதில்லை என்னும் பட்சத்தில், எங்கள் கூட்டத்தில் இருந்து பிரிந்து சென்று வாழலாம். இத்தகையவருக்கு எவ்விதத்திலும் இந்த நிலம் மற்றும் மரங்களில் இருந்து கிடைக்கும் விளைவுகளில் பாத்தியதை இல்லை என்று ஓர் எழுதா ஒப்பந்தத்தைச் செய்து கொண்டோம்.

இந்த உடன்பாடு பெண்களை அப்பால் தள்ளி வைத்து, சண்டை சச்சரவு ஏற்படாமல் தடுக்கும் என்றும், எங்களுக்கு கிடைக்கும் உணவுப்பொருட்கள் போதியதாக இருப்பதால் வாழ்க்கையை திருப்தியாகவும் அமைதியாகவும் நடத்தலாம் என்றும் எண்ணிக்கொண்டோம். இந்த வழியில் இரண்டு வருடங்கள் அன்பாகவும் திருப்தியாகவும் வாழ்ந்தோம். எங்களுக்கிடையே இக்காலத்தில் ஒரு சுடுசொல்தானும் பரிமாறப்படவில்லை. நாங்கள் முறைவைத்து ஒருவரை வீட்டைப் பராமரிக்க வைத்துவிட்டு வியாபாரத்துக்குக் கிளம்பி போவோம். எங்கள் வீடு தனிமைப்பட்ட இடத்தில் அமைந்துள்ளதால், ஆங்கிலேய நண்பர்கள் நாலு அல்லது ஐந்து மைல் சுற்றுவட்டார ஊர்களில் வாழ்ந்தனர். நாங்களும் அவர்களும் அடிக்கடி சந்திக்கக் கூடியதாக இருந்தது.

நாங்கள் வாழும் இடம் மலை மேல் இருந்ததால் வழிகளில் பலகாவல் கடவைகள் போடப்பட்டிருந்தன. இப்போது எங்கள் மனிதர்களில் பலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப வாழ்க்கையில் இணைந்து கொண்டு விட்டனர். இதனால் நாங்கள் ஓடிவிடுவோம் என்ற மக்கள் நினைப்பு மறைந்தது. அதைவிட அதற்குச் சாத்தியமில்லாமலும் இருந்தது. நாங்கள் மலைகளுக்கிடையே போய் ஒருவரை ஒருவர் பார்க்க முடிந்தது. ஒருவரும் எங்களைத் தடைசெய்யவில்லை. நாங்கள் வடக்கு நோக்கி ஊர் ஊராக சென்று வியாபாரம் செய்து வந்தோம்.

இக்காலத்தில் எங்கள் குழுவில் இருந்த மனிதர்கள் விடுதலைக்கு எந்த சாத்தியமுமில்லை, தனிமனிதர்களாக இனியும் வாழ்வது கடினம் என்பதை உணர்ந்து திருமணம் செய்துகொண்டனர். எங்கள் முன்னைய உடன்பாட்டின்படி அவர்கள் எங்களை விட்டு விலகிச் சென்று விட்டனர். இதனால் எங்கள் குழு இரண்டு பேராகச் சுருங்கியது. அதாவது நானும் ஸ்டீபன்ருட்லாண்டும் .ஸ்டீபன் என்னைப் போல கலியாணம் கட்டுவதை வெறுப்பவன். நாங்கள் கடைசிவரை பிரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07

மீதி ஆங்கிலேயர்களின் விபரங்களும் மற்றும் எனது வாழ்க்கையின் போக்கும்

நாங்கள் மீதி ஆங்கிலேயர்களின் நிலைமைகளைப் பார்ப்போம். அவர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்காகத் திருமணம் முடிப்பதெனத் தீர்மானம் எடுத்தனர். இது பற்றி இங்கு ஏற்கெனவே பேசியிருக்கிறோம். வேசிகளுடன் வாழ்வதைவிட விக்கிரக ஆராதனை செய்யும் சிங்களவர்களுடன் வாழ்வது சிறந்ததுதான். அவர்களை இணைத்து வைப்பதற்குக் கிறிஸ்த மதகுருக்கள் இல்லாதபடியால் அவர்கள் மனைவிமாரை மாற்றியும் கொள்ளலாம். இந்தப் பிரச்சினையைப் பற்றி நாங்கள் ஒரு முடிவெடுத்தோம். நாங்கள் இரத்தமும் சதையும் கொண்டிருப்பதால் எங்களை வீணாக்கிக் கொள்வதிலும் பார்க்கக் கலியாணம் முடிப்பது நல்லதுதான். இருந்தாலும் வேதத்தை கொண்டவர்கள் அஞ்ஞானிகளிடமிருந்து மனைவிமாரை எடுப்பதை வேதம் எதிர்க்கிறது. அவர்களைத் தங்கள் வேதத்தைக் கொண்ட மக்களிடமிருந்தே மனைவிமாரைத் தேர்ந்தெடுக்கச் சொல்கிறது. இதைச் செய்ய முடியவில்லை என்றால்தான் வேதம் அற்றவர்களின் மக்களை மனைவியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று பழைய ஏற்பாடு விதிவிலக்களிக்கிறது. இங்கே உள்ள பெண்களைத் திருமணம் செய்து கொள்ள விரும்புபவர்களை நாங்கள் எதிர்க்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள பெண்களைத் திருமணம் செய்து கொண்டாலும் பிறக்கும் குழந்தைகளைக் கிறிஸ்தவர்களாகவே வளர்ப்போம் என்று அவர்கள் கூறினர்.

இந்த மணவினை சட்டரீதியானது; நன்மைகள் பல பயப்பது; எனினும் இதிலிருந்து விலகி இருப்பதையே நான் விரும்பினேன். கடவுள் என்னைக் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கை என்னில் வலுத்தது. "உங்கள் கைதி நிலையை நீக்கி உங்களை உங்கள் தந்தையர்களின் நாட்டுக்கு கொண்டு வருவேன்" என்று கடவுள் இஸ்ரேலியர்களுக்கு (நல்லோர் தீயோர் அடையும் பலன், முப்பதாம் அதிகாரம்) வாக்குறுதி அளித்தது போல அவர் என்னைக் காப்பாற்றுவார். எனது தியானங்களும் பிரார்த்தனைகளும் இந்த நம்பிக்கையில்லாதவர்களின் நுகத்தடியில் சிக்கிக் கொள்ளாமற் காத்தன. ஆனால் எனது நாட்டு மனிதர்கள் பலரும் சக கைதிகளும் இதிலே சிக்கிக் கொண்டனர்.

இக்காலத்தில் எமது மனிதர்கள் தொப்பி பின்னி விற்க முடியாத நிலைமைகளை எதிர்கொண்டனர். தொப்பி மவுசு குறைந்த பொருளாக மாறிக் கொண்டு வந்தது. இதனால் வேறு தொழில்களை அவர்கள் நாடத்தொடங்கினர். பயிர்ச்செய்கை, உழுதல், நெல் விதைத்தல், மந்தை பராமரிப்பு, மதுபானம் தயாரித்தல் மற்றும் பொருட்களை ஊர் ஊராகக் கொண்டு விற்றல் போன்ற தொழில்களை நாடினர். ஒரு பிரதேசத்தில் அபரிமிதமாகக் கிடைக்கும் பொருட்கள் அவை தட்டுப்பாடாக உள்ள மற்ற இடங்களுக்குக் கொண்டு சென்று விற்பதில் அதிகம் ஈடுபட்டனர். இதனால் பெறும் இலாபத்தால் வாழ்க்கையை ஓட்டினர். அவர்களின் மனைவிமார் அவகாசம் கிடைக்கும் நேரங்களிற் பருத்தி நூல் நூற்று ஆடைகள் செய்து விற்று மேலதிக வருமானம் ஈட்டினர்.

இந்த வகையில் எங்களது தேசத்தின் கடவுட் கிருபையால், இந் நாட்டின் மக்களை விடவும் எங்களின் வாழ்க்கை சிறப்பாக இருந்தது. அரண்மனை உத்தியோகத்தர்கள், பிரதானிகள் ஆகியோர்களின் வாழ்க்கைத் தரத்தை தவிர்த்து எங்களின் வாழ்க்கைத் தரம் மற்ற எவருக்கும் குறைந்த தரத்தில் இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் நாட்டவன் ஒருவனுக்கு பக்கத்து வீட்டுக்காரன் ஒருவன் பலமாக அடித்துவிட்டான். இதை நாங்கள் எங்கள் தேசத்துக்குச் செய்த அவமானமாக எடுத்துக் கொண்டோம். இதைச் சும்மா விட்டால் மற்றவர்களும் இவ்வாறு முனையலாம் என்று கருதினோம். இதனால் நாங்கள் எல்லோரும் கூடி ஒரு முடிவெடுத்து நீதிமன்றத்துக்குச் சென்றோம். அதிகார் ஆங்கிலேயனை அடித்தவனைக் கூப்பிட்டு விசாரித்தார். அவன் அதிகாரின் நண்பனாக இருந்தான். எனினும் நாங்கள் எல்லோரும் பிரசன்னமாகி இருந்தாலும் தீர்ப்பு திருப்தியளிக்கவில்லை என்றால் நாங்கள் மேலே பிரச்சினை கொண்டு செல்வோம் என்று அதிகார் பயந்து, வேறு வழியில்லாமல் அவனை தண்டப்பணம் கட்டுமாறு கூறி விசாரணையை ஒத்தி வைத்தார். நாங்கள் நாளும் அவன் போகுமிட மெல்லாம் அவனை கவனித்துக் கொண்டு வந்தோம். நாங்கள் அதிகாரிடம் மாத்திரம் அல்லாது நீதிமன்றத்தில் உள்ள மற்ற பிரதானிகளிடமும் அடியினால் நீலமாகவும் கறுப்பாகவும் மாறிவிட்ட அவனின் தடங்களைக் காட்டி நீதி கேட்டோம். கடைசியில் அரசனுக்கு பிரச்சினை போகலாம் என்று பயந்து அந்த சிங்களவனை சங்கிலியால் பிணைக்கும் படி அதிகார் உத்தரவிட்டார். முன்னைய தண்டப் பணத்தையும் விட கூடுதலாக தண்டனை அவனுக்கு விதிக்கப்பட்டது.

பின்னர் ரிச்சர்ட் வேர்ண்காம் என்பவன் அரச சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டான். அவன் தொள்ளாயிரத்து ஏழு படைவீரர்களுக்கு கொமாண்டராக ஆக்கப்பட்டிருந்தான். பல தொகைப் பீரங்கிகளும் பல பட்டணங்களும் அவன் பொறுப்பின் கீழ் வந்தன. அரசன் கௌரவத்தின் சின்னமாக அவனுக்கு வாள் ஒன்றை வழங்கி இருந்தான். இதுவரையும் கிறிஸ்தவர்கள் யாருக்கும் அந்தக் கௌரவம் கிட்டவில்லை. அவனைத் தொடர்ந்து மேலும் இருவர் அரச சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

ஒல்லாந்தர்கள் அரசனின் ஆதிக்க எல்லைக்குள் ஒரு கோட்டையைக் கட்டிக் கொண்டனர். அது பிப்லிகொம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. அரசன் அதை தரைமட்டமாக்கி விடுவதற்குத் தனது படையை அனுப்பத் தயாரானான். அந்தப் படையில் தொண்ணூறு ஒல்லாந்த சிப்பாய்களும் பெரும் தொகை நீக்ரோ சிப்பாய்களும் நான்கு பீரங்கிகளும் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. ஒல்லாந்தப் படையில் இருந்த சிப்பாய்கள், தங்கள் தாய்நாட்டுக்கு ஓடிவிட்டனர் என்றும், பயந்து பின் வாங்கத் தேவையில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், நிச்சயம் கோட்டையை தரைமட்டமாக்கலாம் என்றும், அரசனுக்கு தகவல் வந்தது. அவனது பக்கம் பல நாட்டவர்கள் இருந்தது அவனுக்கு உற்சாகமாக இருந்தது. எங்கள் நாட்டவர்கள் சிலரும் இதிற் பங்கு பற்றினர்.

மேலும் அரசன் பிபிலிக் கோட்டை முற்றுகையில் வெளிநாட்டு மனிதர்களையும் விரும்பினாற் பங்கு கொள்ள வருமாறு அறிவித்தான். அவன் யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. அவர்களுக்கு நிறையச் சன்மானம் கொடுக்கப்படும் என்று உறுதியளித்தான். இதனாற் போர்த்துக்கல், ஒல்லாந்து, ஆங்கில நாட்டவர்கள் முப்பது பேர் முன் வந்தனர். ஆயுதம் தூக்கிய அவர்கள் ஒவ்வொருவருக்கும் இருபது சில்லிங் பணமும் உடைகளும் வழங்கப்பட்டதுடன் பட்டி, தொப்பி, சட்டை போன்றவற்றை அணிந்து கொள்ளும் கௌரவமும் வழங்கப்பட்டது. அரசசேவையில் நெடுங்காலம் இருந்த ஒல்லாந்தன் ஒருவனைப் படைகள் எல்லாவற்றிக்கும் கப்டனாக நியமிக்க அரசன் விரும்பினான். ஒல்லாந்தர் தலைமையில் செல்ல போர்த்துக்கீசர் விரும்பவில்லை. அதனால் அவர்களை வெறுக்கக்கூடாது என்று போர்த்துக்கீசன் ஒருவனை கப்டனாக நியமித்தான். படையில் சேர ஆங்கிலேயர்கள் ஆறு பேர்தான் வந்திருந்தனர். மீதிப்பேர் வரவில்லை. அவர்களின் எண்ணமெல்லாம் எப்படியாவது தாய் நாட்டிற்குப் போவதிலேயே இருந்தது. மேலும் அஞ்ஞானிகளுடன் கிறிஸ்தவர்களை எதிர்க்கவும் அவர்கள் தயங்கினர். அந்த ஆறுபேரும் ஒல்லாந்த கப்டனின் கீழ் பணியாற்றுமாறு கூறப்பட்டனர்.

போருக்கு எல்லாம் தயாராகிவிட்டன. ஆயுதங்கள், பீரங்கிகள் சரிபார்க்கப்பட்டன; வெடிமருந்துகள் களஞ்சியப்படுத்தப்பட்டன. திடீரென கோட்டையில் உள்ளவர்கள் அரசனின் தயவை எதிர்பார்ப்பதாக செய்தி வந்தது. வெள்ளைக்காரர்கள் எங்களுக்கு அரசன் அளித்த வெகுமதிகள் மிச்சம் என எண்ணி மகிழ்ந்தனர். மேலும் தங்கள் தேவையைக் கவனிக்குமாறு விண்ணப்பித்துக் கொண்டனர். அரசன் அவர்களின் தேவையைக் கவனிப்பதாகவும் ஆனால் காலதாமதமாகும் என்றும் கூறினான். அவர்களில் பலர் மூன்று நான்கு வருடங்கள் பணியாற்றி அலுத்து தம் வறுமை காரணமாக ஒல்லாந்தரிடம் ஓடிவிட்டனர். இதைக் கண்டு அரசன் மீதியிருந்தவர்களுக்குப் பணம், உடை போன்றவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கினான். அவர்கள் தமது மனைவி மக்களைப் போய்ப்பார்க்கவும் அனுமதிக்கப்பட்டனர். டச்சுக்கப்டன், மீதி இருந்த ஆங்கிலேயர்களையும் படையில் சேரும் படியும் இல்லாவிட்டால் அவர்கள் அனைவரும் துரோகிகள் என்று அழைக்கப்படுவார்கள் என்றும் பயமுறுத்தினான். ஆனால் ஆங்கிலேயர்கள் அவன் கட்டளை பாதகமானது என்றும், அவனுக்குக் கீழ் படைவீரர்களாக தாம் பணியாற்ற முடியாது என்றும் கூறினர். அது அரசனின் கருத்தல்ல என்றும் கூறினர்.

நான் இப்போது எனது சொந்தக் கதைக்கு திரும்புகிறேன். இப்போது 1672 ஆம் வருடமாகும். நாங்கள் இருவரும் அந்த வீட்டில் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் வாழ்ந்தோம். நாங்கள் இப்போது ஆடுவளர்க்க ஆரம்பித்தோம். நாங்கள் இரண்டு ஆடுகளுடன் தொடங்கினோம். அவை நாளடைவில் பெருமளவு பெருகிவிட்டன. இவற்றைவிட கோழிகளும் வளர்த்தோம். அண்மையில் விடுதலைக்கான சாத்தியம் இல்லாததால் தப்பி ஓடக்கூடும் என்ற சந்தேகத்தை நீக்க முடிந்தது. எங்கள் வீடுகளையும் வளவுகளையும் மிகவும் சிறப்பாக நாங்கள் வைத்திருந்தோம். சில பிரபுக்களின் வீடுகள் மாத்திரந்தான் எங்கள் வீடுகளை விடச் சிறப்பாக இருந்தன. இந்த நாட்டுப்பாணியில் வாசலில் ஒரு முள்கடப்பு போட்டிருந்தோம். திறந்தவெளி கொண்ட இன்னொரு வீட்டைக் கட்டிக்கொண்டோம். நாங்கள் காற்றாட இருக்கவும், பக்கத்தவர்கள் வந்து எங்களுடன் கதைத்திருக்கவும் அது உதவியாக இருந்தது. அவர்களின் வருகை பெரும்பாலும் கடன் வாங்குவதற்காகவோ இரவல் பெறுவதற்காகவோ இருக்கும். நாங்கள் கைதியாகவும் புதியவர்களாகவும் இருந்தாலும் கடவுள் எங்களுக்கு நல்ல வளத்தை கொடுத்துள்ளான். நாங்கள் அவர்களை விட வசதியாக வாழ்கின்றோம் என்று அவர்கள் சொல்வார்கள்.

தொப்பி வியாபாரம் நலிவடையத் தொடங்கிவிட்டது. பயிர்ச் செய்கை எங்களுக்கு ஒத்து வராது. அதற்கு பெண்களின் ஒத்துழைப்பு தேவை. இதனால் புதிய தொழில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தேன். அது தானியத்தைக் கடனுக்கு கொடுப்பதாகும். அது வருடத்துக்கு ஐம்பது வீத வருமானத்தைக் கொண்டு வந்தது. அது இலகுவானதாகும்; இலாபகரமான தொழிலாக இருந்தது. வாடிக்கையாளருக்கு அங்குள்ள வழக்கப்படி அறுவடையின் போது ஒன்றுக்கு ஒன்றரை வீதம் தர வேண்டும் என்ற நிபந்தனையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரில், நெல்லை விநியோகித்தேன். இதன் இலாபம் அதிகமாக இருந்தாலும் நெல்லை அறவிட்டுக் கொள்வதுதான் இதிலுள்ள சிரமம். கொஞ்சம் தாமதித்தால் மற்றக் கடன்காரார்கள் வந்து அறுவடையான நெல்லை மீதி இல்லாமல் கொண்டு போகச் சந்தர்ப்பம் இருந்தது. நான் சுணங்கிப்போனால் சில வேளைகளில் அங்கே நெல் மீதி இருக்காது. அடுத்த வருடத்தில் வயல் சொந்தக்காரர் இரட்டிப்பாகத் தரவேண்டும். இதற்கு மேல் எத்தனை வருடம் சென்றாலும் உயராது. இதனால் உரிய காலத்தில் கடனைப் பெற கவனமுடன் இருந்தேன். என்றாலும், சில தவிர்க்க முடியாத காரணங்களாலே தவறவிட்டு விடுவதுமுண்டு. எனது முதல் கூடுதலாக இருந்ததால், நான் கூடியவர்களோடு கொடுக்கல் வாங்கல் வைத்திருந்ததால் எனது இழப்புகளை விட வருமானம் கூடுதலாக இருந்தது.

கடவுள் கிருபையால் கொஞ்சம் கொஞ்சமாக எனது முதலீடு வளர்ந்தது. இவ்வாறு எனது எதிரிகளிடையே ஒரு முன்னேற்றக ரமான வாழ்க்கையை, அவர்களிடம் இருக்காத ஒரு வாழ்க்கையை வாழ்ந்தேன். இதுவெல்லாம் ஆண்டவன் கிருபையாலே ஒழிய எனது திறமையால் அல்ல. நான் இந்த இடத்தில் ஜாகோப்பின் வார்த்தைகளை நினைவு கூருகிறேன்: "அவன் எனது ஊன்று கோலுடன் என்னை இங்கே கொண்டு வந்தான். அவன் இங்கே இரு குழுவினராக என்னை ஆசீர்வதித்தான்."

லெகுண்டெனியாயவில் இருக்கும் போது இங்கே எனக்குப் படி வழங்கப்பட்டு வந்தது. எனது சக மனிதர்கள் எனது படியை எடுத்து வந்தனர். நான் சிறப்பாக வாழ்ந்து வருவதால் அவைகளை தாங்கள் தரத்தேவையில்லை என்று மக்கள் கூறினர். அது சரிதான் என்றாலும், அரசன் அளிக்கும் படியாக இருப்பதால் அதனை இழப்பது நல்லதில்லை என்று நினைத்தேன். அதனால் நான் அதிகாரியிடம் போய் முறையிட்டேன், அந்த மக்கள் மிகவும் ஏழ்மை நிலையில் வாழ்வதால் அரசனின் மாளிகைக்கு வந்து மாதாமாதம் ஒரு சிட்டையை வாங்கி அவனின் களஞ்சியத்திலிருந்து அவைகளைப் பெறுமாறு அவர் கூறினார்.

இதனால் நான் ஓர் ஆபத்துக்குள் மாட்டிக் கொண்டேன். நான் தப்பி ஓடப்போகிறேன் என்ற வதந்தி உருவாகி பரவத் தொடங்கிவிட்டது. அடுத்த அத்தியாயத்தில் அதைப்பற்றி விபரிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08

அரசசேவைக்கு உட்பட கட்டாயப்படுத்தப்படலும் அதை தவிர்த்துக் கொள்ளலும் தப்பி ஓடும் முயற்சி தோல்வி அடைதலும்.

மாதாமாதம் அரண்மனைக்குப் போய் பிரதானிகள் கவனத்துக்கு என்னைக் கொண்டு வந்து உணவுச் சிட்டையை வாங்கி வந்தேன். அரச சேவைக்கு நான் மிகவும் பொருத்தமானவன் என்று அவர்கள் கருதி, நான் முன்னர் நடந்தவைகளை மறந்துவிட்டேன் என்று நினைத்து, அதில் இணைந்து கொள்ளுமாறு பலமாக என்னை வற்புறுத்தினர். கூடுதலான வசதிகளும் வாய்ப்புகளும் கிட்டும் என்று ஆசைவார்த்தை கூறினர். நான் இணங்க்வில்லை. கோபத்திற் சிட்டையை அவர்கள் எனக்குத் தரவில்லை. நான் அரசனின் முன்னிலைக்கு எந்த நேரத்திலும் கொண்டு போய் நிறுத்தப்படலாம் என்று பயந்து கொண்டிருந்தேன். கடவுள் எனக்கு அவர்கள் படி இல்லாமல் வாழக்கூடிய வளத்தை வழங்கியிருக்கிறார். நான் இனி ஒரு போதும் அரண்மனைக்குச் சென்று உணவுச் சிட்டையை கேட்பதில்லை என்று தீர்மானித்துக் கொண்டேன். இஸ்ரேலியர்கள் மன்னா நிறுத்தப்பட்டவுடன் கனானின் தானியத்தை சாப்பிட்டது போல் எனக்கு படி மறுதலிக்கப்பட்ட போது கடவுள் வேறு வழியில் எனக்கு உதவுவார் என்று நினைத்துக் கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காலத்திலிருந்து இந்த நாட்டை விட்டு போகும் வரையும் உள்ள ஐந்து வருடகாலத்தில் நான் படிகள் வேண்டும் என்று கேட்கவில்லை. இதனால் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி வந்தது. நான் கடைசியாக அரண்மனையிலிருந்து வந்த ஐந்து அல்ல ஆறாவது நாளில், அதிகாரால் ஒரு சிப்பாய் என்னிடம் அனுப்பப்பட்டான். எழுதப்பட்டிருந்த கட்டளை ஒன்றை என்னிடம் தந்தான். "இக்கடிதம் கண்டவுடன் உடனடியாக அரசசபையில் அரசன் முன் ஆஜராக வேண்டும். தாமதித்தால், நாட்டின் உத்தியோகத்தர்கள் இதற்கான நடவடிக்கையை உங்கள் மீது எடுப்பார்கள்" என்று அக்கட்டளை கூறியது.

இந்தக் கட்டளையைக் கொண்டு வந்தவன் சிறிது காலத்துக்கு முன்னர் எனது பக்கத்து வீட்டுக்காரனாகவும் எனக்கு மிகவும் அறிமுகமானவனாகவுமிருந்தவன். அவன் பல தடவை எனது வீட்டுக்கு வந்திருக்கிறான். ஒவா மற்றரெல் என்பது அவனது பெயராகும். அவனுக்கு எனது இயல்புகள் தெரியும். அவன் இப்போது அரச சேவையில் இணைந்துள்ளான். எங்களது நட்பு ஒரு பக்கம் இருக்க, கட்டளைப்படி என்னை அரச சபைக்குக் கொண்டு போக வந்திருக்கிறான்.

இந்தக் கட்டளையை நான் மீறமுடியாது. நான் எனது பழைய அயலவனிடத்தில் "ஒவா மற்றரெல், நான் இந்தக் கட்டளைக்கு பணிகிறேன். ஆயினும் என்ன காரணத்துக்காக நான் அரசசபைக்கு அழைக்கப்படுகிறேன் என்பதையாவது அறிய முடியுமா" என்று கேட்டேன். "உனக்கு ஒரு நல்ல செய்தி காத்திருக்கிறது. அரசனின் முன் ஆஜராகப் போகிறாய். உனக்கு ஒரு பதவி தரப்போகிறார்கள். இதுவரை உனது நாட்டு மனிதர்கள் எவருக்கும் கிட்டாதது" என்று அவன் கூறினான். இதைக் கேட்டவுடன் எனக்கு திகிலாக இருந்தது. எனது வாழ்க்கையை விட முக்கியமானதாக நான் கருதும் சுதந்திரம் என்னிடமிருந்து பறிபோகப்போகிறதென்று பயந்தேன்.

எனக்கு இந்த உலகில் உதவி செய்ய யாருமில்லாததால் அரசனின் மனதை மாற்றுமாறு கடவுளிடம் முறையிட்டேன். கௌரவத்துக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு அரசனின் சேவையில் சேர்ந்தால் எனது விடுதலைக்கான எண்ணத்தைக் கைவிட வேண்டியதுதான். இதனை ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் மரணம்தான் முடிவு. நான் அரசனின் சேவையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுதலித்தால் நான் அப்பாவியாக மரணத்தைத் தழுவ வேண்டும். ஏற்றுக் கொண்டால் அப்போதும் அப்பாவியாக அவனின் சேவையில் இருந்த மற்ற மனிதர்களுக்கு நிகழ்ந்ததை ஒரு கிளர்ச்சிக்காரனென்றோ துரோகி போல என்றோ குற்றம் சாட்டித் தலை கொய்யப்படுவேன். எனது நிலை சமாரியா வாசலில் இருந்து கதைத்துக் கொண்டிருந்த அந்த நான்கு குஷ்ட ரோகிகளின் நிலை போல் இருந்தது.

நான் பிரதானி முன் நின்ற போது, மேல்வருமாறு எனது முடிவைச் சொல்ல கடவுள் எனக்குத் துணிவைத் தந்தருளினார். "முதலாவதாக ஆங்கில நாட்டைச் சேர்ந்த நான் மேன்மை தங்கிய மன்னருக்கு எந்தக் கெடுதியும் சொல்லாலோ செயலாலோ செய்தறியேன். இரண்டாவது, நான் இங்கு வந்தது எனது நாட்டின் விருப்பப்படியல்ல, நான் எதிரியாக கைப்பற்றப்பட்டும் அல்ல, அரசனின் வள்ளல் குணத்தை நாடியும் அல்ல, தண்டனைக்கு பயந்தும் இங்கு ஓடி வரவில்லை, எல்லாரும் அறிந்தபடி, அரசனின் ஒப்புதலின் பிரகாரம், திசாவையின் சம்மதத்தின் பின்னர்தான் நாங்கள் இங்கு வந்தோம். இதனால் மிக நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டோம். எனினும் நாங்கள் ஒரு குறையுமில்லாமல் வாழ்வதற்கு மேன்மை தங்கிய மன்னருக்கு நன்றி தெரிவிக்கிறோம். ஆயினும் எனது உடலில் உயிர்ப்பே இல்லாமல் இருக்கிறது. இந்தக் கௌரவமான பதவியை வகிப்பதற்குரிய திறமையும் பலமும் எனது நோய்வாய்ப்பட்ட உடலில் இல்லை. நான் எந்த வேலையும் செய்ய முடியாதவனாக இருக்கிறேன்"

"உன்னால் ஆங்கிலம் எழுத வாசிக்க முடியாதா, உன்னிடமிருந்து உடல் வேலையை மன்னர் எதிர்பார்க்கவில்லை" என்று பிரதானி கூறினார்.

"இந்த நாட்டின் கரைக்கு வந்த போது நான் மிக இளவயதினனாக இருந்தேன். நான் அறிந்தவைகளை பயிற்சியில் வைக்காததால் பெருமளவு மறந்து விட்டேன். எழுதிப்பழக என்னிடம் மையோ காகிதமோ இருக்கவில்லை.

சாதாரண தேவைகளுக்கு வந்த எங்களை தடுத்து வைத்திருப்பது இந்த உலகத்தில் உள்ள அரசர்களினதும் இளவரசர்களினதும் நடைமுறைகளுக்கும் வழக்கத்துக்கும் மாறானதாகும். எங்களின் ஆற்றல்களுக்கும் திறமைகளுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாற்பட்டு எங்களை நிர்ப்பந்திப்பதும் அத்தகையதே". நான் பயப்படாமல் எனது மனதில் பட்டவைகளை சொல்லத்தொடங்கினேன்.

இதனை அடுத்து இன்னொரு பிரதானியிடம் நான் அனுப்பப்பட்டேன். அவர் எதிரில் நான் போனவுடன் அவன் என்னை இனிமையாகப் பார்த்தான். புன்சிரிப்புடன் கதைக்கத் தொடங்கினான். சிறிது நேரத்தில் அவன் புன்சிரிப்பு முகச் சுளிப்பாக மாறத்தொடங்கியது. இனிமையான பார்வை போய்விட்டது. நான் எனது முறைப்பாட்டை மீண்டும் ஒப்புவிக்கத் தொடங்கினேன்.

"நீ போய் அதிகாரிடம் உனது கதையைக் கூறு" என்றான். கடுமையாக நான் உடனடியாக சென்று அவரிடம் எனது முறைப்பாட்டை சொன்னேன். அவர் ஏதோ அலுவலில் இருந்ததால் நான் சொன்னவைகளைக் காது கொடுத்துக் கேட்கவில்லை. ஆயினும் அரசசபையை விட்டு வந்தது எனக்கு ஆறுதலாக இருந்தது. நான் சங்கிலியால் பிணைக்கப்படப் போகிறேன் என்று பயந்தேன். எனது ஒரே அடைக்கலம் கடவுளிடம் பிரார்த்தனை செய்வதுதான். என்னைக் காப்பாற்ற முடியாத அளவு அவனின் கரம் குட்டையானதில்லை. நான் அவனையே நம்பினேன்.

நான் நகரத்தைவிட்டு எங்கும் போவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அந்த நகரத்தில் ஒரு ஆங்கிலேயனின் வீட்டில் பத்து நாட்கள் வைக்கப்பட்டிருந்தேன். என்னுடைய விதியை எதிர்பார்த்து நான் காத்திருந்தேன். இக்காலத்தில் எனது நாட்டவர்களும் தெரிந்தவர்களும் நான் நல்லதொரு பதவியை மறுக்கிறேன் என்று என் மீது குற்றம் சாட்டினர். என்னால் நான் மாத்திரமல்லாது சக ஆங்கிலேயர்களும் நன்மையடைவார்கள் என்று சிலரும், கடவுள் தடுக்கவில்லை என்றால் இந்த கொடுங்கோல் மன்னனின் கோபத்துக்கு ஆளாகி மரணத்தைதான் எதிர் கொள்ள நேரிடும் என்று சிலரும் கூறினர். அரச சேவையிற் பெரிய பிரதானியாக இருந்த எனது நாட்டவன் ரிச்சர்ட் வார்ங்காம் என்னை ஏறெடுத்தும் பாராமல் நடந்து கொண்டான்.

நான் நகரத்தில் தங்கி இருந்த நாட்களில் ஒரு நாள் யாரிடமும் சொல்லாமல் ஒரு நாட் பயண தூரத்தில் இருந்த எனது வீட்டுக்குச் சென்று உணவுப் பொருட்களை எடுத்து வந்தேன். நான் வீட்டுக்கு வந்த அன்று என்னை அழைத்திருக்கிறார்கள். எனது விடுதி வீட்டிற்கு வந்து உணவுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்கள் முடியும் மட்டும் அவர்கள் அழைப்பிற்கு காத்திருந்தேன். அவர்கள் என்னைத் திரும்ப அழைக்கவில்லை. நான் எனது தோட்டத்துக்கு வந்து வேலைகளில் மூழ்கிவிட்டேன். எல்லாம் கடவுள் அருள்தான்.

எனது முன்னைய வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கினேன். தண்ணீரும் விறகும் எடுத்து வந்து எனது உணவுகளை நானே சமைத்து உண்ணத் தொடங்கினேன். இதில் எந்த இசகு பிசகான அம்சமும் இருப்பதாக எனக்கு தோன்றவில்லை. இவ்வாறு வாழ்க்கை பூராகவும் இருக்க விரும்பினேன். இந்த வாழ்க்கையை எப்போதும் தொடரலாம் தான். ஆயினும் இந்த வாழ்க்கைப் போக்கு வயது போன தளர்ந்த காலத்திலும் சாத்தியப்படுமா என்று எனக்குள் சிந்தித்து வந்தேன். ஒரு வழி எனக்கொரு மனைவியைத் தேடிக் கொள்வதாகும். ஆனால் இது எனக்கு ஒரு பொழுதும் உடன்பாடானது இல்லை. என்னோடு கூட இருந்து எனக்கு உணவுகளைச் சமைத்து தந்து என்னோடு வாழக்கூடிய ஏழை மனிதன் ஒருவனைத் தேடினேன். கிடைக்கவில்லை. எனது நாட்டு ஏழை மனிதனின் பிள்ளைகளில் ஒன்றை எடுத்து வந்து என்னோடு வைத்துக் கொள்ளத் தீர்மானித்தேன். அப்பிள்ளைக்கு எங்களின் சமயத்தையும் மொழியையும் கற்றுக் கொடுக்கலாம். இது அப்பிள்ளைக்கும் எனக்கும் நன்மை பயக்கும். அந்த வகையில் ஒரு குழந்தையை வளர்க்க தத்து எடுத்துக் கொண்டேன். அக்குழந்தையின் சாமர்த்தியமும் சமயோசிதமும் கூட்டுறவும் எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்தது. அது பிற்காலத்தில் என்னை நன்கு பேணும் என்று நம்பினேன்.

இப்போதைய ஆண்டு 1673. இந்த நாட்டிற் பல வருடங்கள் வாழ்ந்தாலும் இந்த நாட்டிலே பெற்றுக் கொண்ட எதையும் நான் விரும்பவில்லை. நான் சதாகாலமும் என் தாய்நாட்டை நினைத்து ஏங்கினேன். இல்லாவிட்டாற் கடவுளை நோக்கி என்னைத் தன்னோடு எடுத்துக் கொள்ளுமாறு மன்றாடினேன்.

நானும் எனது கூட்டாளியும் எங்களுடைய தப்புதலைப்பற்றியும், அதற்கான உபாயங்களைப் பற்றியும் எப்போதும் யோசித்தோம். அவர்களின் மொழியை நன்கு பேசி, பண்டங்களை ஊரூராக கொண்டு சென்று விற்றதாலும், எங்கே எங்கே அரிதாகவும் செறிவாகவும் சனங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கிறார்கள் என்பதையும், எங்கே காவலர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர் என்பதையும், எந்தப் பொருளை எங்கே விற்கலாம் என்பதையும் அறிந்து கொண்டோம். இந்த விடயங்களை நாங்கள் விசாரிப்பது, எங்களது வியாபார நோக்கத்துக்காகவென்று யாரும் எங்கள் மீது சந்தேகம் கொள்ளவில்லை. அதைவிட எனது தோட்டத்தைவிட்டு நான் போகமாட்டேன் என்று அவர்கள் எண்ணினர்.

வடக்கு நோக்கி போவதுதான் நல்லது, ஏனென்றால் அங்கே குறைந்த தொகை மக்கள் வாழ்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன். அந்த இடங்களில் விற்பதற்குரிய புகையிலை, மிளகு, வெள்ளைப்பூடு, சீப்பு, பல வகை இரும்பு உபகரணங்கள் எடுத்துக் கொண்டு வடக்குப் பக்கமாகப் புறப்பட்டோம். பொதுவாக இந்த நாட்டில் நெடும் சாலைகள் இல்லை. சிறிய சிறிய பாதைகள் தான் எங்கும் காணப்படும். அவைகளில் வழிகண்டு பிடித்து உரிய இடத்திற்கு போவதென்பது மிகவும் சிக்கலானதும் சவாலானதுமாகும். பழைய பாதையைச் சில வேளைகளிற் கைவிட்டு, புதுப்பாதை உண்டாக்கி, இருப்பார்கள். பாதைகள் அடர்ந்த காடுகளினூடாகச் செல்வதால் எதிரில் வருபவரைச் சில வேளைகளிற் காணமுடியாது. சில வேளைகளில் வழிகள் பட்டணங்கள் ஊடாகச் செல்லும். வெள்ளைக்காரர்களாகிய நாங்கள் வழிகேட்டுச் செல்வது மிகவும் அபாயகரமானது. சில வேளை சிங்களவர்கள் சந்தேகம் கொள்ளலாம். ஆயினும் சிங்களவர்களுக்கும் வழிகள் பற்றி அதிகம் தெரியாது., அவர்களுக்குப் பயணம் செய்து அனுபவமில்லை. எங்களை கடற்கரைக்கு அழைத்துச் செல்வதற்கு யாருமில்லாது தடுமாறினோம்.

நாங்கள் கண்டி நகரிலிருந்து வடக்கு நோக்கி, பட்டணம் பட்டணமாகப் போய்க் கொண்டிருந்தோம். நான் முதல் அறிந்திருந்த இடத்திற்கு வந்தோம். கூஸ் வத்தயிலிருந்து என்னைக் கொண்டு வரும் போது இவ்விடத் தூடாக என்னைக் கூட்டி வந்தனர். போகோஸ் குன்றிலிருந்து இறங்கி இங்கே வரவேண்டும். கலவர காலங்களைத் தவிர இங்கு காவலர்கள் இருப்பதில்லை. அங்கிருந்து கடவுளின் அருளால் எல்லாத் தடைகளையும் தாண்டி, நுவரங்கல பிரதேசத்துக்கு வந்தோம். இது அரசனின் இராச்சியத்தில் மிகவும் தாழ்ந்த பிரதேசமாகும். இந்தப் பிரதேசத்துக்கு வர மூன்று நாட்கள் பிடித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் போக வேண்டிய இடத்திற்கு இன்னும் தூரமிருந்தது. எங்களிடமுள்ள சாமான்கள் யாவும் விற்று முடிந்துவிட்டது. இதனால் நாங்கள் வியாபாரிகள் என்று பாசாங்கு செய்ய முடியாமல் இருந்தது. இதை நினைக்கும் போது எங்களுக்கு சற்று பயமாகவுமிருந்தது. பட்டணத்து ஆட்கள் எல்லோரும் எங்களை வந்து பார்த்தனர்.

வடக்குப் பக்கத்தில் இருந்து இந்த அரசனின் ஆளுகைப் பிரதேசத்தின் எல்லைப் பட்டணமான ஹோர்லியை அடைந்தோம். ஆயினும் எங்களது இலக்கு வெகுதூரத்தில் இருந்தது. இந்த வடக்குப் பகுதி வறண்ட காலநிலைக்கு உட்பட்டிருந்தமையால் அருவிகளோ குளங்களோ காணப்படவில்லை. இங்கிருந்த ஓரிரு குளங்களும் எருமைகள் படுத்து கலக்கியதால் சேறும் சகதியுமாக இருந்தன. நாங்கள் தாகம் தாங்காமல் இந்த தண்ணீரைக் குடித்த போது எங்கள் தாடிகளில் சேறு ஒட்டிக் கொண்டது. அவ்வளவு சேறு. இதனால் நடுக்கத்துடன் கூடிய காய்ச்சல் எற்பட்டது. இந்த நோய் எங்களை மாத்திரமல்லாது அந்த மக்களையும் வாட்டி வதைத்தது. அங்குள்ள சிங்களவர்கள் அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. நாங்கள் இருவரும் ஆளுக்கு ஆள் உதவி செய்ய முடியாதவாறு நோய் வாய்ப்பட்டோம். இந்நிலையில் எங்கள் நாட்டு மனிதர்களும் பக்கத்தவர்களும் மேலும் போய் உங்கள் வாழ்க்கையை பலி கொடுக்கப் போகிறீர்கள் என்று கேட்டனர். நாங்கள் எங்கள் நோக்கத்தை அவர்களிடம் கூறவில்லை.

கடைசியாக அசுத்த தண்ணீரை குடித்தவர்களுக்கான எதிர்ப்பு மருந்தொன்றை அறிந்து கொண்டோம். இந்த மருந்தை உட்கொண்டதன் பிறகு எங்களுக்குக் காய்ச்சல் வரவில்லை. இது ஒரு உலர்ந்த இலையாகும். போர்த்துக்கீசர் இதைப் பங்கா[5] என்று அழைப்பர். இதனை மாவாக்கி அங்கு கிடைக்கும் வெல்லத்துடன் கலந்து வெறும் வயிற்றில் காலையிலும் மாலையிலும் சாப்பிட வேண்டும். போதையூட்டி, ஒரு வித கிளர்ச்சியை உண்டாக்கி வாந்தியோ வயிற்றுப்போக்கோ இல்லாமல் இது நோயைக் குணமாக்கிவிட்டது.

எங்களுடைய பிரயாணம் பெரும் அநுபவமாக இருந்தது. நாங்கள் இன்னும் கீழே வந்தோம். அந்தப் பகுதி விரிந்த பிரதேசமாக இருந்தது. நாங்கள் முன்னும் பின்னும் பிரயாணம் செய்தோம். அங்குள்ளவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமொழி சொல்வது போல் ''பிச்சைக்காரனும் வியாபாரியும் எப்போதும் வழி தவறுவதில்லை.'' அதன் கருத்து, போகுமிடமெல்லாம் பிச்சைக்காரன் பிச்சையெடுப்பான். போகுமிடமெல்லாம் வியாபாரி வியாபாரம் செய்வான். கொண்டு வந்த பொருட்கள் எல்லாம் விற்று முடிந்து விட்டது; நாங்கள் இப்போது வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறோம் என்று மக்களிடம் சொன்னோம். இப்பிரயாணத்தால் மக்களும் பாதைகளும் பரிச்சயமாகின.

இந்த இடத்தில் என்னுடன் முன்பிருந்த கறுவல் பொடியனைக் கண்டேன். அவன் என்னை விட்டு விலகிச் சென்று பல வருடங்கள் ஆகின்றது. அவன் கலியாணம் முடித்து அங்கு பிள்ளை குட்டிகளுடன் வாழ்கிறான். அவன் இப்பிரதேசத்திற் பல வருடங்களாக வாழ்வதால் எனக்கு வழிகாட்டி உதவினான். அவன் மிகவும் ஏழையாக இருந்ததால் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாமற் பெரிய சிரமப்பட்டான். எங்களைக் கொண்டு டச்சு காரர்களிடம் சேர்ப்பித்தால் உனக்கு நல்ல சன்மானம் கிடைக்கும் என்று நான் அவனிடம் கூறினேன். அவன் மகிழ்ச்சியுடன் உடன்பட்டான். ஆயினும் இப்போது அறுவடை நேரமாக இருப்பதால் மக்கள் நடமாட்டம் எப்போதும் இருக்கும் என்றும், இன்னும் இரு மாதங்களில் உங்களை டச்சுக்காரர்களிடம் கொண்டு போய் சேர்ப்பிக்கிறேன் என்றும் கூறினான்.

அதற்குரிய நேரம் எங்களுக்கிடையே திட்டமிடப்பட்டது. எல்லாம் தயாராக நாளை புறப்படுவோம் என்றிருக்கும் போது, கடவுள் கிருபை செய்ய வில்லை போலும். எனது முள்ளம் தண்டில் கடும் வலி ஏற்பட்டு நெருப்புக்கு பக்கத்தை விட்டு என்னால் நகர முடியாமல் போய்விட்டது. ஐந்தாவது நாள் ஒருவாறு வலி குறைந்தது.

நான் நோயிலிருந்து மீண்டவுடன் புதிய தெம்பைப் பெற்றேன். நாங்கள் கீழே இறங்கி அங்குமிங்கும் சென்று பொருட்களை விற்று வந்தோம். எங்களுடன் இன்னுமொரு ஆங்கிலேயனும் இணைந்து கொண்டான். அவனிடம் எங்கள் நோக்கத்தைச் சொல்லவில்லை. அவனுக்கு மனைவியும் பிள்ளைகளுமிருக்கிறார்கள். அவன் அவர்களிடம் எங்கள் நோக்கத்தைச் சொல்லலாம். அவர்கள் மற்றவர்களிடமும் சொல்லிச் செய்தி பரவி, எங்கள் நோக்கம் கெட்டுவிடும் என்று நாங்கள் பயந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் எங்கள் பிரயாணத்தை இரவில் வைத்துக் கொள்வதெனத் தீர்மானித்தோம். நாங்கள் பிரயாணத்துக்குத் தயாரான போது எங்கள் வழிகாட்டி வேறொரு பிரதேசத்துக்குப் போய்விட்டான் என்று செய்தி வந்தது. இது எங்கள் நம்பிக்கையை இழக்கச் செய்தது. எங்களுக்கு உதவி செய்யுமாறு கடவுளிடம் மன்றாடினோம்.

ஒரு எட்டு ஒன்பது வருடங்கள் இந்த வியாபாரத்தைச் செய்தோம். கடைசி மூன்று அல்லது நான்கு வருடங்கள் வரட்சி நிலவியது. நாட்டில் உழவு நடை பெறவில்லை; கிணறுகள் வற்றிவிட்டன; பட்டணங்களில் குடிக்க நீரும் சாப்பிட உணவும் கிடைக்கவில்லை. நாங்கள் காட்டு வழியே ஓடிப்போனால் தாகத்தால் மடிவோம் என்று பயந்தோம். இதனால் ஓடிப்போவதை நினைத்தும் பார்க்க முடியவில்லை. நாங்கள் மூன்று பேர் ஒன்று சேர்ந்து செல்வது சனங்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தும்.

எங்களைப் போல சில ஆங்கிலேயர்களும் தமது பண்டங்களோடு இந்தத் தாழ் நிலப்பகுதிக்கு வர்த்தகம் செய்யவந்தனர். அவ்விடங்களிற் போதிய இலாபம் கிடைத்ததால், மேலும் கீழ் இறங்கித் தாழ் நிலப்பகுதிகளுக்கு அவர்கள் செல்லவில்லை. நோய் பயமும் அவர்களைக் கீழ் இறங்கவிடாமல் தடுத்தது. நாங்கள் எங்கள் முயற்சியில் தளராமல் இருந்தோம். கடைசியில் வடக்கைக் கண்டடைந்தோம். காட்டுவழியாக மக்களுக்குத் தெரியாமலே தப்பி ஓடி ஒல்லாந்தர்களை அடைந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09

நூற்றுக்கணக்கான மைல்களை கடந்து தப்பி ஓடுதல்

விடுதலையைத் தேடி மேலும் மேலும் முயன்றோம். ஆனால் அதை அடைய முடியவில்லை. ஆயினும் முயற்சியைக் கைவிடாமற் கடவுள் வெற்றியைத் தருவார் என்ற நம்பிக்கையில் செப்டம்பர் 22, 1679 இல் பயணத்தை ஆரம்பித்தோம். எங்கள் பாதுகாப்புக்காக இரகசியமாகக் கத்தியும் கோடரியும் கொண்டு சென்றோம்.

முன்னரைப் போல நாங்கள் இப்பொழுதும் பொருட்கள் விற்கும் சாட்டில் சென்றோம். நாங்கள் புறப்படும் போது சந்திரனுக்கு இருபத்தேழாவது நாளாக இருந்தது. வழிகண்டு செல்ல மெல்லிய நிலவொளி நாளாக இருப்பது நல்லதென்று தீர்மானித்தோம். எனது ஆடுகளையும் வீட்டையும் பராமரிக்க ஒரு முதியவரைக் கூலிக்கு அமர்த்தி இருந்தேன்.

போகவில் என்னும் மலைக்குப் போய் அங்கிருந்து பயணம் செய்தோம். அந்த மலையில் காவல் கடவையில்லை. அங்கிருந்து இறங்கி எனது தகப்பனார் இறந்த இடமான பொண்டகூஸ் வத்தைக்கு வந்தோம். அங்கிருந்து சென்று ஹெற்றர் கோர்லி பிரதேசத்தின் கடைசி நகரமான நிக்கவரை அடைந்தோம். அவ்விடத்திலிருந்து காட்டு யானைகள், புலிகள், கரடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் பர்ரோமோகலன என்று அழைக்கப்படும் அடர்ந்த காட்டினூடாகப் பதினாறு மைல் நடந்து பர்ரோ என்னும் பட்டினத்தை அடைந்தோம். இப்பட்டினம் நுவரங்கலாவ பிரதேசத்தில் உள்ளது.

இங்கிருந்து கண்டி அரசுக்குரிய தாழ் நிலப்பிரதேசத்தை அடைவது எங்கள் நோக்கமாகும். அங்கே எப்பொழுதும் காவலாளிகள் உள்ளனர். அநுராதபுரத்துக்குட் பன்னிரண்டு அல்லது பதினான்கு மைல் தொலைவுக்கு நாங்கள் ஒரு போதும் போனதில்லை.

அப்பிரதேசத்துக்கு வந்த போது, அப்பிரதேச ஆளுநர் தனது உத்தியோகத்தரை அரசனின் வருமானத்தையும் வரிகளையும் அறவிட்டு வருமாறு அனுப்பிக் கொண்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டோம். அவர்கள் எங்களைக் கண்டால் திருப்பி விடுவார்கள் என்று பயந்தோம். அதனால் மேற்கு பக்கத்தில் இருந்து ஒதுக்குப் புறமான எப்பாவெல பகுதிக்கு போய் ஒதுங்கிக் கொண்டோம். அவர்கள் போய்விட்டார்கள் என்பதை கேள்விப்படும் வரை அங்கிருந்து நாங்கள் நகரவில்லை. எங்கள் பின்னல் வேலைகளில் மூழ்கி இருந்தோம்.

அவர்கள் போய்விட்டார்கள் என்பதைக் கேள்விப்பட்டவுடன் எங்கள் பயணத்தை நிலாவொளியிலே தொடர்ந்தோம். எங்களது பொருட்கள் நாங்கள் வியாபாரிகள் என்று பாவனை செய்வதற்கு உதவின. இதற்கு மேலதிகமாகத் தொப்பி பின்னுவதற்குப் பருத்தி நூல் பொதி ஒன்றையும், வற்றல் இறைச்சி கொஞ்சமும் வாங்கிக் கொண்டோம் இறைச்சி மட்டுமே இங்கு வாங்கக் கூடிய பொருளாக இருந்தது. இவைகள் வாங்குவதற்கு நாங்கள் கொண்டு வந்திருந்த பொருட்களை விற்ற காசு உதவியது.

எங்கள் வழியில் கோலிவில்லாவில் இருந்த ஆளுநரின் இடத்தைக் கடந்து போக வேண்டும். அங்கு அவர் இருப்பதன் நோக்கமே போவோர் வருவோரைக் கண்காணிப்பதற்காகத்தான். இது பெரும் தயக்கத்தையும் பயத்தையும் எங்களுக்கு உண்டு பண்ணியது. இதற்குக் காரணங்கள் பல, முதலாவது, அவர் எங்களுக்குப் புதியவர்; நாங்கள் ஒரு போதும் சந்திக்காதவர். இரண்டாவது, நாங்கள் கைதிகள் என்னும் உண்மையை அவரிடம் சொல்ல வேண்டும். அதோடு வேறு எல்லை மீறி வந்திருக்கிறோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது. ஆயினும் அவரைத் தவிர்ப்பதற்கு வேறு வழியும் இல்லை. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நாங்கள் ஊர் ஊராகச் சென்று வியாபாரம் செய்பவர்கள்; அதற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது என்று கூறுவதென்று தீர்மானித்தோம்.

நாங்கள் வரும் போது அப்படி ஒரு நிலை வரலாம் என்று எதிர்பார்த்து, அதைச் சமாளிக்க வேண்டும் என்று வேலைப்பாடமைந்த பிடி போட்ட கத்தி ஒன்றையும் துனிஸ் தொப்பி ஒன்றையும் கொண்டு வந்திருந்தோம். அவைகளை எடுத்துக் கொண்டு அவரைச் சந்திக்கப் போனோம். அவர் இடத்திற்கு குறுக்கும் நெடுக்குமான பாதையால் செல்ல வேண்டியிருந்தது. கடவுள் கிருபையால் சரியான பாதையைக் கண்டுபிடித்துச் சென்றோம். அங்கே போய், அப்பிரதேச வழக்கப்படி, திறந்த மண்டபத்தில் அமர்ந்தோம். அம்மண்டபம் ஆளுநரைச் சந்திக்க வருபவர்களுக்காகக் கட்டப்பட்டது. நாங்கள் வந்து இருந்தவுடன் ஆளுநர் வந்து சந்தித்தார். அவர் எங்கள் மீது சந்தேகம் கொள்ளவில்லை என்பது அவர் பேச்சிலிருந்து தெரிந்தது. நாங்கள் கொண்டு வந்திருந்த வேலைப்பாடமைந்த கத்தியைக் கண்டவுடன் மிகவும் விருப்பத்தோடு அதனை வாங்கிக் கொண்டார். நாங்கள் கொண்டு வந்த பொருட்கள் விற்றுப் போய் விட்டன என்றும், இப்போது நாங்கள் வீட்டுக்கு போகிறோம் என்றும் கூறினோம். அவருக்கு புகையிலையும் வெற்றிலையும் பரிசளித்தோம். அவர் எங்களை நீங்கள் யார் என்று கேட்பதற்கு முன்னர் நாங்கள் கொண்டு வந்திருந்த பொருட்களையும் பருத்தி நூல் பொதியையும் காட்டினோம். "எங்களுக்கு அரசன் அளித்திருக்கும் படிகளைவிட கூடுதலாக தேவைப்படுகிறது. இந்தப் பகுதியில் வற்றல் இறைச்சி பிரதான பண்டமாக உள்ளதால் எங்கள் பொருட்களுக்கு மாற்றீடாக அதை வாங்க வந்தோம். இங்கு வியாபாரம் செய்ய தங்கள் அனுமதி தேவை. நீங்கள் எங்கள் காசுக்கு அல்லது பொருட்களுக்கு காய்ந்த இறைச்சி தந்தால் உதவியாக இருக்கும். உங்களைச் சந்தித்ததில் பெருமகிழ்ச்சியடைகிறோம். நாங்கள் உங்களுக்கு வேண்டிய பொருட்களை எதிர்காலத்தில் கொண்டு வந்து தருவோம்" என்று, கூறினோம்.

"நீங்கள் வரண்ட காலத்தில் வந்திருப்பதையிட்டு மனவருத்தமடைகிறேன். இக்காலத்தில் மான்களைப் பிடிக்க முடியாது. மழை பெய்தால் உங்களுக்கு தேவையான இறைச்சியைத் தரலாம். நீங்கள் விரும்பினால் இப்பிரதேசத்தில் உள்ள பட்டணங்களுக்கு போய் விசாரிக்கலாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பதில் எங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஒன்று, நாங்கள் சந்தேகிக்கப்படவில்லை. மற்றது, நாங்கள் மேலும் செல்வது தடுக்கப்படவில்லை. இங்கிருந்து ஆறு மைல் வடக்கு நோக்கிச் சென்றால் அநுராதபுரம் வரும்.

நாங்கள் அங்கே வந்தவுடன் எங்கள் கவனமெல்லாம் எப்படியும் அநுராதபுரத்தை அடைய வேண்டும் என்பதிலேயே இருந்தது. எனினும் அவசரப்பட்டாற் சந்தேகிப்பார்கள் என்று இங்கே இரண்டு மூன்று நாட்கள் தங்கினோம். ஒருவர் ஆளுநர் வீட்டிலிருந்து பின்னல் வேலையைச் செய்து கொண்டிருக்க, மற்றவர் பட்டணத்துக்குச் சென்று கருவாடு கிடைக்குமா என்று பார்த்தார். இங்குள்ள குளங்கள் வற்றிவிட்டதால் அபரிமிதமாக மீன் கிடைத்தது. அந்த மீன் கருவாடுகள் நெத்தலிக் கருவாடு போல் இருந்தது. அக்கருவாடு முழுவதையும் மொத்தமாக எங்களுக்கு விற்க முனைந்தனர். "இவைகள் இறைச்சி போல் இலாபம் தருபவை அல்ல. நாங்கள் இங்கே பத்து நாட்கள் வரையில் தங்கி இருப்போம். எங்கள் பின்னல் வேலைகளால் இங்கு உழைக்கக் கூடியதாக உள்ளது. நாங்கள் கெதியில் வெளியேற மாட்டோம்" என்று கூறி அவர்களை நம்பவைத்தோம்.

இக்காலத்தில் ஓர் எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. அது எங்களை மிகவும் பயப்படுத்திவிட்டது. கைதியாக இருந்து பல பிரமுகர்கள் ஓடிவிட்டனர் என்றும், காவலைப் பலப்படுத்தும் படியும் அரசன் தனது ஆளுநர்களுக்கு உத்தரவிட்டிருந்தான். அவ்வுத்தரவு நாங்கள் தங்கி இருக்கும் ஆளுநருக்கும் வந்தது. இவ்வாறு செய்வது அரசனின் வழக்கமாகும் என்று கூறப்பட்டது. தனது பணியாளர்களை உசார் நிலையில் வைத்திருக்க அரசன் அடிக்கடி இவ்வாறு ஏதும் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருப்பானாம். காவல் கடவையில் இருக்கும் படைவீரர்கள் எங்கள் மீது கவனம் செலுத்திக் கீழே இறங்க விடாமற் செய்து விடுவார்களோ, திருப்பி அனுப்பி விடுவார்களோ, என்று பயந்தோம். கடவுள் கிருபையால் விபரீதமாக ஒன்றும் நடக்கவில்லை. நாங்கள் வெகுமதிகளை காவலில் இருப்பவர்களிடம் கொடுத்து எங்களுக்குக் கீழே போய் வியாபாரம் செய்ய உதவுமாறு கோரினோம்.

அவர்கள் நாங்கள் அளித்த வெகுமதிகளைக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். எங்களோடு இணக்கமாகவும், அன்பாகவும் நடந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுடைய துர்ப்பாக்கிய நிலைமையை எண்ணி வருந்தினோம். நாங்கள் கூட்டமாகச் செல்ல முடியாத. ஒரே பிரதேசத்தில் அல்லது பக்கத்தில் வாழ்பவர்கள் மாத்திரந்தான் ஒன்று சேர்ந்து செல்வது உசிதமானது என்று தீர்மானித்து, மற்றவர்களுக்குப் பிரியா விடை அளித்தோம். நகரத்தில் வாழும் மற்ற ஆங்கிலேயர்களுக்கும் எங்கள் வாழ்த்துக்களைச் சொல்லுமாறு கூறினோம். நாங்கள் விருந்தினராக இருக்கும் ஆளுநருக்கு உண்மை தெரியாமல் இருக்க மிகவும் முன் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டோம்.

அன்று இரவு ஆளுநர் எங்களுக்கு விருந்தொன்றை ஏற்பாடு பண்ணினார். நடனமாடுபவர்களையும் வித்தை காட்டுபவர்களையும் அழைத்து எங்களை மகிழ்வித்தார். அவர்கள் அன்று இரவு பூராகவும் தமது திறமையை காட்டினார்கள். நாங்கள் அவரின் உபசாரத்துக்காக நன்றி தெரிவித்தோம். உண்மையில் அவர் நல்ல கனவான்.

அடுத்த நாள் எங்கள் பிரயாணத்துக்குத் தேவையான பொருட்களைப் பொதிசெய்து கொண்டோம். மற்றப் பொருட்களையும் எங்கள் பிரயாணத்துக்கு அவசியமில்லாத பருத்தி நூல், உடைகள் போன்றவற்றை மீண்டும் வந்து எடுத்துக்கொள்வதாக ஆளுநர் வீட்டில் ஒப்படைத்தோம். இதனால் நாங்கள் திரும்பி வருவோம் என்று அங்குள்ளவர்கள் நம்பினர். பின்னர் எங்கள் வயிற்றை நன்கு நிரப்பிக் கொண்டோம்.

ஆளுநருக்கு நாலு ஐந்து தரம் சுடக்கூடிய அளவு வெடி மருந்தைக் கொடுத்தோம். அது அங்கு அரிதாக உள்ள பொருளாகும். அதை அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். (எங்களிடம் துப்பாக்கி இல்லாததால் அது தேவைப்படாத பொருளாக இருந்தது) ஆளுநர் எங்களுக்கு காய்ந்த இறைச்சி கொடுக்கவில்லையே என்று ஆதங்கப்பட்டார். நாங்கள் அநுராதபுரத்துக்கு போகிறோம். அங்கு இறைச்சி கிடைக்கும் என்று எண்ணுகிறோம் என்று கூறினோம். இவ்வாறு நாங்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போது, ஏற்கெனவே நாங்கள் திட்டமிட்டபடி ஸ்டீபன் ஒரு பொதியுடன் வந்து, இதை தனது குடும்பத்தவர்களுக்கு கொடுக்க கொண்டு வந்ததாகவும், தான் திரும்பும் வரை இது இங்கே இருக்கட்டும் என்றும் கூறி, அதனை அவரிடம் ஒப்படைத்தான். இதனால் அவர்கள் நாங்கள் அநுராதபுரம் போய் வருவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று திடமாக நம்பினர். மேலும் ஆளுநர் எங்களைப்பற்றி யோசிக்க இடம் கொடாமல் அவரிடம் பிரியாவிடை சொல்லி புறப்பட்டோம்.

நாங்கள் ஒரு காலும் அநுராதபுரத்துக்கு வரவில்லை என்பதால் எங்களுக்கு அங்கே போகும் வழிகள் தெரியாது. கேட்டால் சந்தேகம் கொள்வார்கள் என்பதற்காக யாரிடமும் வழிகேட்கவும் இல்லை, நாங்கள் துணிவுடன் காட்டினூடாக நடந்து சென்றோம். வழியில் மல்வத்தை ஓயா என்னும் சிறிய ஆற்றை கண்டோம். அதன் வழியே நடந்தால் அது எப்படியும் எங்களைக் கடற்கரைக்குக் கொண்டு சேர்க்கும். இருந்த போதிலும் அநுராதபுர வழியில் போவது இலகுவாகவும் சுருக்கமாவும் இருக்கும் என்று நினைத்தோம். இது சரிவராத பட்சத்தில் எங்களுக்கு கைகொடுக்க கூடியது இந்த ஆறுதான்.

அநுராதபுரத்துக்கு வருவதற்கு முன்னர் நாங்கள் நுவரவேவா என்ற இடத்தை அடைந்தோம். அது ஒரு சிறிய பட்டணமாகும். இப்பிரதேசம் நான் இதுவரை இந்த நாட்டிற் காணாத விரிந்த சமவெளியாகக் காணப்பட்டது. இதன் நடுவில் ஒரு வாவி இருந்தது. இவ்வாவி இயற்கையாக உருவானதில்லை. செயற்கையாக, மனிதரின் திறமையால் உருவாக்கப்பட்டது. இது ஒரு மைல் வரை விஸ்தீரணமுள்ளது. இதிலிருந்து நீர் நெல்வயல்களுக்கு பாய்ச்சப்படுகிறது. வயல் நிலங்கள் காடுகளாற் சூழப்பட்டுள்ளன. இங்கு வாழ்பவர்கள் மலபார்களாவர். இவர்கள் சிங்களவர்களிடமிருந்து வேறுபட்ட மக்களாவர். நாங்கள் காட்டினூடாக வந்து சமவெளிக்கு வந்தவுடன் சுற்றுமுற்றும் பார்த்து எந்த வழியில் செல்வது என்று திகைத்து நின்றோம். அப்போது ஒரு கோழி கூவும் சத்தம் கேட்டது. கிட்டத்தில் குடியிருப்பு இருக்க வேண்டும் என்று தீர்மானித்து அச்சத்தம் வந்த திசைவழி சென்றோம்.

அங்கே பல குடிமனைகளைக் கண்டோம். ஒரு மரத்தின் கீழ் எங்கள் பொருட்களை பரப்பி விலை கூறத்தொடங்கினோம். அங்கே நுழைந்தவுடன் எங்களுக்கு ஏதோ தயக்கமாக இருந்தது. அந்த மக்கள் எங்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டனர். அவர்களைப் பயப்படுத்தக் கூடாது என்று முன் ஜாக்கிரதையாக இருந்தோம்.

அவர்கள் மலபார்கள் ஆயினும் கண்டிராச்சியத்துக்கு உட்பட்டவர்கள். நாங்கள் சிங்களத்தில் பேசியதை அவர்களாற் புரிந்து கொள்ள முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் அவர்களையும் அவர்கள் எங்களையும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும் போது சிங்களம் தெரிந்த ஒருவன் அவ்விடத்துக்கு வந்தான்.

"நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்" என்று அவன் எங்களிடம் கேட்டான்.

"நாங்கள் கண்டியிலிருந்து வருகிறோம்"

ஆனால் அவர்கள் நம்பவில்லை. நாங்கள் மன்னாரிலிருந்து வரும் டச்சுக்காரர்கள் என்று எண்ணினர். அவர்களின் ஆளுநரை கூட்டிக்கொண்டு வந்தனர். அவர் சிங்களம் தெரிந்தவன் ஊடாக எங்களிடம் பேசினார். உண்மையை நிலை நாட்டுவதற்காக நாங்கள் கடந்து வந்த இடங்களை பற்றிச் சொன்னோம். ஆளுநர் அரசசபைச் செய்திகளை பற்றிக்கேட்டார். சொன்னோம். கடந்து வந்த இடங்களில் உள்ள ஆளுநர்களின் பெயர்களை கேட்டார். சொன்னோம். அண்மையில் சிரச்சேதம் செய்யப்பட்ட பிரபுக்களின் விபரங்களை வினவினார். சொன்னோம். அரண்மனையில் வேலை செய்கின்ற முக்கிய உத்தியோகத்தர்களைப் பற்றி விசாரித்தார். சொன்னோம். அவருக்கு நாங்கள் சொன்ன பதில்கள் திருப்தியளித்தன. அதன் பின் அவர், "யார் உங்களைத் தாழ் நிலப்பகுதிகளுக்கு சென்று வியாபாரம் செய்ய அனுமதி அளித்தது" என்று வினவினார்.

"அரசன்தான் அனுமதி அளித்தான்" என்று கூறினோம்.

நாங்கள் நெலம்பி நகரத்தில் பதினான்கு வருடங்கள் வாழ்ந்ததால் நீங்கள் இனிமேல் கைதிகள் இல்லை என்று பிரகடனப்படுத்தி எனது ஆட்சிப் பிரதேசங்கள் எங்கு சென்றும் வியாபாரம் செய்யலாம் என்று அரசன் கூறியுள்ளான் என்று சொன்னோம். பிரதேச ஆளுநர்கள் தங்கள் பொறுப்பில் உள்ள காவல் கடவைகளைக் கடந்து செல்ல இசைவளித்ததையும் சொன்னோம்.

நாங்கள் கடைசியாக கோலிவில்லாவிலுள்ள அதியுயர் ஆளுநர் வீட்டில் மூன்று நாட்கள் தங்கி இருந்ததையும் சிங்களக் கைதிகள் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பி ஓடுகின்றனர், வெள்ளைக்காரர்கள் அல்ல என்பதையும் அவரிடம் கேட்டு உறுதிப்படுத்தலாம் என்றோம். நாங்கள் அப்பாவி வர்த்தகர்கள்; வியாபாரத்துக்காக பொருட்களுடன் வந்திருக்கின்றனர். என்று அந்த ஆளுநர் நம்பினார்.

நாங்கள் அங்கே வந்தது அம்மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. அவர்கள் ஒரு வீட்டைத் தந்து அங்கு இருக்கும்படி கூறினர். நாங்கள் இரண்டு மூன்று நாட்கள் தங்கி அங்கிருந்து போகும் வழிகளையும் எங்கே காவலர்கள் உள்ளார்கள் என்பதையும் அறிந்து கொண்டோம். அங்கே வாங்கக் கூடிய அளவு இறைச்சி இல்லை.

நாங்கள் ஓடிவிட எத்தனிக்கிறோம் என்று அவர்கள் என்ணாமலிருக்க ஸ்டீபனை வீட்டில் வைத்துவிட்டு வற்றல் இறைச்சி வாங்கும் சாட்டில் வழிகண்டு பிடிக்கும் நோக்கத்துடன் சுற்று வட்டாரங்களுக்கு போய்த் திரும்பிவந்தேன். வரும் போது அரிசி, அதை சமைக்கக்கூடிய பித்தளை பானை, கொஞ்சம் வற்றல் இறைச்சி, சப்பாத்து தைக்க கூடிய மான்தோல் ஆகியவற்றை வாங்கி வந்தேன். நாங்கள் இறைச்சிக்காக காத்துக் கொண்டிருக்கிறோம் என்று மக்கள் நினைத்தனர்.

அநுராதபுரத்துச் சன சஞ்சாரமற்ற வனத்தினூடாகப் பயணம் செய்து, மனிதக் குடியிருப்பொன்றை அடைந்தோம். இங்கு வாழ்பவர்கள் டச்சுக்காரர்களினதோ கண்டியரசனதோ ஆட்சிக்குட்படாத மலபார்களாவர். அவர்கள் எங்களை பிடிக்கவோ விரட்டிவிடவோ இல்லை. அவர்கள் பயந்த சுபாவம் உடையவர்கள். அவர்களுக்கென்று ஓர் அரசன் இருக்கிறான். அவனுக்கும் கண்டியரசனுக்குமிடையே நல்லுறவு நிலவுவதால் அவன் எங்களைப் பிடித்துக் கொடுத்து நல்ல பெயர் எடுக்க விரும்பலாம். எதற்கும் அவர்களிடமிருந்து விலகிப் போவதையே விரும்பினோம். எனவே திரும்பிவந்த பாதையால் அநுராதபுரத்துக்கு வந்தோம்.

அங்கிருந்து வடபகுதியில் உள்ள டச்சுக்காரருக்குச் சொந்தமான யாழ்ப்பாணத்துக்கு ஒரு நெடுங்சாலை போகிறதென்பதை அறிந்து கொண்டோம். இப்பாதையால் டச்சுக்காரர்கள் வசமுள்ள மன்னாருக்கு இரண்டு மூன்று நாள் பயணத்தில் சென்றடையலாம் என்பதும், இடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காவல் கடவை உள்ளதென்பதும், எங்களுக்குத் தெரியவந்தது. இக்காவல் கடவையில் இருக்கும் காவலர்களின் கடமை நேரங்களை அறிய முயன்றோம். அந்த நேரங்களைத் தெரிந்தால் காவலர்களின் கண்ணிற் படாமல் தப்பிச் செல்லலாம். நாங்கள் இரவில் அவர்களுக்குத் தெரியாமல் காட்டினூடாக சென்று நெடுஞ்சாலைக்கு வரலாம் என்று தீர்மானித்தோம். பின்னர் இத்திட்டத்தை கைவிட்டோம். அப்பகுதி பல மைல்தூரம் சமவெளியாக இருப்பதால் அவ்வாறு கடக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டோம்.

பல அசௌகரியங்களை நாங்கள் எதிர்நோக்கினோம். எந்த வகையிலும் இந்த நெடுஞ்சாலையாற் போவது எங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று தெரிந்தது. நாங்கள் அவர்களுக்குத் தெரியாமல் காட்டு வழியாகப் போய் நெடுஞ்சாலையில் ஏற நினைத்தாலும் அதில் வில்லங்கங்கள் உண்டு. வழி தவறிவிடலாம். இரவு வருவதற்கிடையில் எங்களைக் கண்டு பிடிக்கலாம். துணிந்து சூரியனையும் சந்திரனையும் துணையாகக் கொண்டு சென்றாலும் கடும் வரட்சி நிலவுவதாற் காட்டில் நீர் இல்லாத நிலை ஏற்படலாம். இவ்வாறு நாங்கள் பலவாறு சிந்தித்துக் கடவுளை எங்களுக்கு ஒரு வழிகாட்டுமாறு பிரார்த்தித்தோம். முடிவில் மல்வத்து ஓயாவுக்குத் திரும்பி வந்து, அதன் வழியே போவதே உசிதமானது என தீர்மானித்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

அநுராதபுரத்திலிருந்து காடுகள் ஊடாக மலபார்களின் நாட்டுக்கு வரும் வரையில் எங்கள் நிலைமைகள்

அது வரையும் கடவுள் அருளால் எங்கள் நோக்கம் வெற்றிகரமாக நிறைவேறி வந்தது. நாங்கள் மல்வத்தை ஓயாவை நோக்கித் திரும்பி வந்து கொண்டிருந்தோம். அநுராதபுரத்தில் எங்களைக் கண்டவர்கள் யாரும் எங்களை இங்கே கண்டால் நாங்கள் ஓடத்திட்டமிடுகிறோம் என்று நினைப்பார்கள். சந்தேகத்தில் எங்களை வேவு பார்க்கப் பின்தொடர்வார்கள். அவர்கள் காட்டுப்பாதைகளிலும் நன்கு பரிச்சயமுள்ளவர்கள். நாங்கள் அங்கிருந்து வரும் போது இங்கே போகிறோம் என்பதைச் சொல்லி இருக்க வேண்டும். ஆகவே பட்டணத்தின் ஒரு பக்கத்தில் தங்கி இருந்து யார் கண்ணிலும் படாமல் பிரயாணத்தை தொடர்ந்து முன்னர் சந்தித்த மலபார் ஆளுநரிடம் வந்தோம் அவர் ஒரு கிண்ணம் பாலைக் குடிக்கத்தந்து எங்களுக்கு பிரியாவிடை அளித்தார். நாங்கள் கூறினோம்; "நாங்கள் கோலிவில்லாவில் இருக்கும் அதியுயர் ஆளுநரிடம் (செரிஃப்) வெடிமருந்து கொஞ்சம் கொடுத்துவிட்டு வந்திருக்கிறோம்." அவர் மான் ஏதும் சுட்டு வைத்திருக்கலாம். அவரைச் சந்தித்து விட்டு வீடு திரும்புவோம். எங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைச்சி கூடுதலாகத் தேவைப்படுகிறது. அவர்கள் பாணியில் கடவுள் காப்பாற்றுவார் போய் வாருங்கள். என்று ஆளுநரும் மற்ற மலபார்களும் எங்களை வழியனுப்பிவைத்தனர்.

அன்று ஒக்டோபர் மாதம் ஞாயிற்றுக்கிழமை. சந்திரன் பதினெட்டாவது நாளாக இருந்தான். எங்களுக்குத் தேவையான பொருட்களைச் சேர்த்துக் கொண்டோம். பத்து நாட்களுக்குரிய உணவுப் பொருட்கள்: அரிசி, காய்ந்த இறைச்சி, கருவாடு, மிளகு, உப்பு, சமையல் பாத்திரம், தண்ணீர் எடுக்க இரண்டு செப்பு குடங்கள், மழை வந்தால் தற்காத்துக் கொள்ள கூடாரம் அடிக்க இரண்டு பெரிய தளப்பத்து ஓலைகள், வெல்லம், இனிப்பு பண்டங்கள், புகையிலை, வெற்றிலை, நெருப்பு மூட்டுவதற்குரிய கந்தக குச்சி பெட்டிகள் இரண்டு, சப்பாத்து தைப்பதற்குரியய மான் தோல் (காட்டில் நடந்து போகும் போது முள் குத்தாமல் தடுக்க சப்பாத்துகள் அவசியமானது. ஆயினும் கால்களை அவைகளால் மாத்திரம் காக்க முடியாது. கால்களுக்கு கடவுள் தான் பொறுப்பு). எங்களுடைய ஊன்று கோலில் செருகப்பட்டிருக்கும் சிறிய கோடரி, எங்கள் பக்கத்து உடைகளில் பொருத்தப்பட்டிருக்கும் கத்தி. இவைகள் கடவுள் துணைக்கு மேலாக எங்களை காக்கப் போதுமானவைகளாகும். ஆனால் யானை களிடமிருந்து எங்களைக் காக்க இவைகள் போதுமானதில்லை. ஓடித்தப்புவது தான் ஒரே வழி.

இவ்வாறான தயாரிப்புகளோடு நாங்கள் பயணத்தை ஆரம்பித்தோம். நாங்கள் ஒரு மைல் ஆற்றின் வழியே வந்தபோது மாலை நாலு மணியாகிவிட்டது. அநுராதபுரத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் எங்களைப் பின் தொடர்கிறார்களோ என்று பயந்தோம். கோலிவெலா வரும் வரையும் இவ்வாறு பயந்து கொண்டிருந்தோம். நாங்கள் பாறை மேல் ஏறிப்பார்த்தோம். மாலையாகிவிட்டதால் அவதானிக்க முடியவில்லை. எங்களை யாரும் பின்தொடர்ந்து வந்தால் எங்களில் ஒருவர் சுகவீனமாக உள்ளார், அதனால் எங்களால் மேற்கொண்டும் போகமுடியாமல் உள்ளது என்று சொல்வதெனத் தீர்மானித்திருந்தோம். ஆயினும் நல்ல வேளயாக யாரும் எங்களைப் பின் தொடரவில்லை. சூரியன் மறைந்து கொண்டிருக்கும் வேளையில் சாப்பிடுவதற்கு வற்றிக் கிடந்த ஆற்றுக்குட் சென்றோம். எங்கள் பாதப்பதிவுகள் மண்ணில் பதியாமல் இருக்க கூடிய கவனம் எடுத்துக் கொண்டோம். அப்படிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிந்தாலும் நாங்கள் போவதுபோல் இல்லாமல் வருவது போல் இருக்குமாறு பார்த்துக் கொண்டோம்.

அப்போது மழை வந்தது. இருட்டாவதற்கிடையில் விறகுகளை எடுத்து நெருப்பை மூட்டினோம். கூடாரத்தை அடித்தோம். மழைவிட்டவுடன் எங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தோம். நாங்கள் விற்பனை செய்யக் கொண்டு வந்த பொருட்களை எல்லாம் அங்கே கைவிட்டு அவசியமான உணவுப் பொருட்களை மாத்திரம் எடுத்துக் கொண்டோம்.

முள் குத்துவதைத் தடுப்பதற்காக எங்களுடைய பாதங்கள் மான்தோலாற் கட்டப்பட்டிருந்தன. அதனால், நடக்கும் போது பெரிய அசௌரியமாக இருந்தது. நாங்கள் எப்பொழுதும் வெறும் கால்களால் தான் பிரயாணம் செய்வது வழக்கம். ஆனால் அப்படி இரவில் காட்டில் நடக்கப்பயமாக இருந்தது. பிரயாணத்துக்கு பாதம் தான் முக்கியமானது. ஒத்துழைக்காவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் கொஞ்சநேரம் இருந்து போர்த்துக்கீச இனிப்பு பண்டமான மோர்சலை எடுத்து சாப்பிட்டு, எங்களை சுதாகரித்துக் கொண்டோம். கடவுளிடம் எங்களை ஒப்படைத்து உணவுப் பொருட்களை தோளில் சுமந்து கொண்டு நடக்கத் தொடங்கினோம். மூன்று மணிநேரம் நடந்தோம். மரங்கள் அடர்த்தியாகவும் நிலவு மங்கலாகவுமிருந்ததால் நடப்பது பெரும் சிரமமாக இருந்தது. ஆயினும் நாங்கள் மனதைத் தளரவிடாமல் போய்க் கொண்டிருந்தோம்.

திடீரென யானை ஒன்று எங்கள் எதிரில் நின்றது. அதனை விலகி ஓட வைக்க முயன்றோம். முடியவில்லை. நாங்கள் நெருப்பை மூட்டி புகையிலைச் சுக்கானை எடுத்து புகைத்துக் கொண்டு விடியும் வரை இருந்தோம். காலையில் பார்க்கும் போது மனித நடமாட்டமில்லாத அடர்ந்த காட்டில் வெகுதூரம் வந்து விட்டோம் என்று புரிந்தது. எங்களுக்கு இனி எந்த ஆபத்துமில்லை என்றும் நாங்கள் பகலில் பிரயாணத்தைத் தொடரலாம் என்றும் தீர்மானித்துக் கொண்டோம். எங்கள் வழியில் புத்தளத்துக்கு போகும் நெடுஞ்சாலை குறுக்கிட்டது. அந்த நெடுஞ்சாலையால் போவதை நாங்கள் தவிர்த்துக் கொண்டோம். அந்த வழியிற் செல்லும் மக்கள் யாராவது எங்களைக் கண்டால் செய்திபோய் ஆபத்தாகிவிடும் என்பதால் அப்பாதையைத் தவிர்த்தோம். இந்த ஆறு வடக்கு நோக்கி வளைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றது. வழியில் திஸ்ஸ வேவா என்று அழைக்கப்படும் பட்டணம் ஒன்று குறுக்கிட்டது. அப்பட்டணம் காடுகள் சூழ்ந்து காணப்பட்டதால் மனிதக்குரல்கள் கேட்கும் வரை நடந்தோம். அங்கே ஒரு பாதையை எதிர்கொண்டோம். அது முன்னர் நான் குறிப்பிட்ட நெடுஞ்சாலை என்று நினைத்தேன். அது ஒரு பட்டணத்துக்கும் இன்னொரு பட்டணத்துக்கும் இடையேயுள்ள சிறிய பாதையாகும். பின்னர் போகும் போது பல பாதைகளைக் கண்டோம். இவைகள் எல்லாம் பட்டணத்துக் கிடையிலான பாதைகள், நெடுஞ்சாலை அன்று என்பதைப் புரிந்து கொண்டோம்.

மனிதர்களையும் பட்டணங்களையும் தவிர்த்துக் கொண்டோம். இது ஒரு பெரும் சிக்கலாக எங்களுக்கிருந்தது. மனிதக்குரல்கள் கேட்கின்ற போது அதனை எவ்வாறு தவிர்த்துக் கொள்வது என்று தெரியாமல் தவித்தோம். எங்களைக் கண்டாற் பிடித்துக் கொண்டு அரசனிடம் கொடுப்பது மாத்திரமல்ல. கொண்டு செல்லும் போதுஅடித்தும் பொருட்களை பறித்தும் விடுவார்கள்.

இந்த பட்டணங்கள் ஆற்றிலிருந்து சற்றுத் தள்ளி இருந்தன. அவைகளுக்குக் கிட்டவரும் போது மனிதர்கள் கண்ணில் சிக்காமல் இருக்க வேண்டும் என்பதில் மிகக் கவனமாக இருந்தோம். நாங்கள் திரும்பிச் சென்று பல பாதைகளையும் வயல்களையும் கடந்து முன்னர் இருந்த இடத்துக்கு வந்தோம். இரவில் பிரயாணத்தை வைத்துக் கொள்வதென்று தீர்மானித்தோம். காடு மிக மெல்லிதாக இருந்தபடியால் பற்றைகளுக்குள் பகலில் ஒளித்துக் கொண்டோம்.

அவ்வாறு நான் ஒளித்துக் கொண்டிருக்கும் போது மக்களின் குரல் எல்லாப்பக்கமும் கேட்டது. எந்த நேரத்திலும் மனிதர் யாரையாவது காணலாம் என்று பயந்தோம். இது எவ்வளவு ஆபத்தானது; திகில் நிறைந்தது என்பதைச் சொல்லால் விபரிக்க முடியாது. நாங்கள் மாறிமாறி ஒளித்துக் கொண்டிருந்தோம். பக்கத்தில் ஒரு பெரிய மரம் இருந்தது. அதில் எங்களை மறைத்துக் கொள்ளக்கூடிய போர் இருக்கலாம் என்று அதன் அருகிற் சென்று பார்த்தோம். நாங்கள் நினைத்தது போல் மூன்று அடியுயரத்தில் ஒரு போர் இருந்தது. உடனே நாங்கள் இருவரும் ஏறி அதனுட் பதுங்கிக் கொண்டோம். அப்போர் ஈரமாகவும் சேறாக இருந்தது. ஆயினும் நாங்கள் இருந்த பயப்பிராந்தியில் அவ்விடம் மிகவும் சொகுசாகத் தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் கவியத் தொடங்கியவுடன் போர் மரத்தில் இருந்து இறங்கி எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக நடந்தோம். மீண்டும் முதல் நாள் கண்ட நெடுஞ்சாலை குறுக்கிட்டது. நாங்கள் போய்க் கொண்டிருக்கும் போது கூக்குரல் சத்தம் கேட்டது. ஆட்கள் எங்களை தொடர்ந்து விரட்டி வருகிறார்களோ என்று பயந்தோம். பின்னர் அது மனிதர்களின் குரல் அல்ல. யானைகள் காட்டினூடாக நடப்பதால் கிளைகளும் கொத்துக்களும் உரசும் முறியும் சத்தமே அது என்று தெளிந்தோம். இஸ்ரேலியர்களுக்கும் எகிப்தியர்களுக்கும் இடையே இருட்டு இருந்தது போல் இந்த யானைகள் எங்களுக்கு பாதுகாப்பாக இருக்கின்றன போலும்.

நாங்கள் ஆற்றோரத்தில் ஒரு கூடாரத்தை அடித்தோம்.எங்களுக்கு மிகவும் பசியாக இருந்தது. அரிசியை அவித்து இறைச்சியை வாட்டினோம். மனிதக்குரல்கள் கேட்டுக்கொண்டே இருந்தன. அது வயல்களில் நுழையும் காட்டு மிருகங்களை விரட்டுவதற்கு மக்கள் போடும் கூப்பாடாகும். இவ்வாறு திங்கட்கிழமை கழிந்தது.

அடுத்த நாள் நிலவு மறைந்தவுடன் காலையில் எங்களது பொதிகளை தூக்கிக் கொண்டு பிரயாணத்தை ஆரம்பித்தோம். பொதியில் தேவையில்லாத பொருட்களை எல்லாம் நீக்கி அதை இலகு வாக்கி இருந்தோம். அங்குள்ள காடுகளில் காட்டு மனிதர்கள் நிறைந்து காணப்பட்டதால் அவர்களைப் பற்றிய பயம் எங்களைப் பிடித்துக் கொண்டது. அவர்கள் எங்களைக் கண்டால், பிடித்துக் கொண்டு வந்து அரசனிடம் சேர்ப்பிக்கலாம். அவ்வாறு நடந்தால் அரசன் நிச்சயம் எங்களுக்கு மரணதண்டனை விதிப்பான்.

நாங்கள் சென்ற ஆற்றோரமெல்லாம் மலபார் சுதேசிகளும் இலைகளாலும் தளைகளாலும் ஆக்கப்பட்ட குடில்களில் வாழும் காட்டுமனிதர்களும் வாழ்ந்தனர். கடவுள் கிருபையால் அவர்களில் ஒருவரையும் நாங்கள் சந்திக்கவில்லை, அங்கே மாடுகளின் எலும்புகள் அங்கும் இங்கும் சிதறிக்காணப்பட்டன. தண்ணீர் தேடி ஆற்றங்கரைக்கு வந்த மாடுகள் அது கிடைக்காததால் இறந்திருக்க வேண்டும். பழங்களின் கோதுகளும் சிதறிக்கிக்கிடந்தன. அவை மனிதர் நடமாட்டம் அங்கு இருக்கிறது என்பதற்கு அறிகுறியாகும். அன்று மதிய நேரம் ஒரு பாறையில் அமர்ந்து, சுக்கானை எடுத்து புகைத்துக் கொண்டு ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுப்பெண்களும் பிள்ளைகளும் போய் கொண்டிருப்பதை கண்டோம். அவர்கள் ஆற்றுக்கு குளிக்க வருகிறார்கள் என்று நினைத்தோம். அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் வந்தனர். அவர்கள் தூரத்தில் வரும் போதே அவர்களின் குரல் கேட்டது. அது என்னவென்று தீர்மானிக்க முடியாமற் சற்று நேரம் திகைத்தோம். கிட்ட வந்த போதுதான் அது பெண்களினதும் சிறுவர்களினதும் குரல்கள் என்று தெரிந்தது. உடனே நாங்கள் எங்கள் பொருட்களை எடுத்துக் கொண்டு அவர்கள் பார்வைக்குத் தெரியாமல் மறைந்துவிட்டோம். நல்ல வேளையாக அவர்கள் எங்களைக் காணவில்லை.

நாங்கள் இவ்வாறு காலையிலிருந்து மாலைவரை பிரயாணம் செய்தோம். ஆறு வளைந்தும் நெளிந்தும் சென்று கொண்டிருந்தது. கொஞ்சம் பற்றைகளும் புதர்களும் இருந்த இடங்களில் பிரயாணம் செய்வது மிக இலகுவாக இருந்தது. அவை அடர்த்தியாக இருந்த இடங்களில் நடப்பது சிரமமாக இருந்தது. எங்களது தோள்கள் கீறல்களாலும் காயங்களாலும் நிறைந்திருந்தன. எங்களது கைகளில் தளப்பத்து ஓலையும் கோடரியும் தோள்களில் உணவும் எங்கள் அரையில் உடுத்த உடையுமிருந்தன.

ஆற்றின் கீழ்ப்பகுதியில் வரவர நீர் குறைந்து வந்தது. சில இடங்களில் ஒருமைல் இருமைல் தூரம் வெறும் மணலாக இருந்தது. ஒரு இடத்தில் ஆறு பல கிளைகளாகப் பிரிந்தது. அப்போது மதியமாக இருந்தது. சூரியன் எங்கள் உச்சந் தலைக்கு மேலாக இருந்தான். ஆற்றில் தண்ணீரும் இல்லை. எந்த வழியால் போவதென்று தெரியாமல் யோசித்தவாறு சூரியன் மறையும் வரை இருந்தோம். நாங்கள் கரடிகள், பன்றிகள், மான்கள், எருமைகள் என்பவற்றைக் கண்டோம். நாங்கள் முதற் கண்ட யானைகளைத் தவிர வேறு யானைகளைக் காணவில்லை. ஆற்றின் மேற் பகுதியில் முதலைகள் காணப்படவில்லை. ஆனால் ஆற்றின் கீழ்ப்பகுதியில் அவைகள் அதிகம் தென்பட்டன. ஆற்றின் ஓரத்தில் கற்தூண்கள் நாட்டப்பட்டிருந்தன. சில இடங்களில் செதுக்கப்பட்ட கற்கள் குவியலாகக் காணப்பட்டன. அவைகள் இங்கே முன்னைய காலத்தில் இருந்த கட்டடங்களின் சிதைவுகளாக இருக்க வேண்டும். இரண்டு மூன்று இடங்களில் கற்பாலங்கள் சிதைந்து கிடப்பதையும் சில கற்தூண்கள் இப்போதும் நின்று கொண்டிருப்பதையும் கண்டேன். சில இடங்களில் வேலைப்பாடு கொண்ட கல்மேடைகள் ஆற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கே காணப்பட்டன. அவைகள் முன்னைய அரசர்கள் அமர்ந்து ஓய்வெடுப்பதற்காக அமைக்கப்பட்டன வென்று நான் நினைக்கிறேன். இவைகள் ஆற்றின் போக்கை நெறிப்படுத்த அமைக்கப்பட்டனவென்று கூறமுடியாது. ஏனெனில் அங்கே ஆற்றிடையே பாறைகள் நிறைந்து காணப்படுகின்றன. படகுகள் இவ்வாறுகளிடையே செல்லமுடியாது.

வடக்குப் பக்கத்தில் காடுகள் குட்டையாகவும் பற்றைகளாலும் ஆனவை. அதுவும் காடுகள் ஆற்றின் கரைகளில்தான் உள்ளன. மாலையில் ஒரு கூடாரமொன்றை அமைத்தோம். காட்டு மிருகங்கள் வந்து தொல்லை கொடுக்கலாம் என்பதற்காக எங்களுக்கு முன்னும் பின்னும் நெருப்பு மூட்டினோம். சகல வகையான சத்தமும் கேட்டுக்கொண்டிருந்தன. புலி ஒன்று எங்களை ஏமாற்றிவிட்டது. அது எப்படியெனில் நாங்கள் ஒருமானை வாங்கி இருந்தோம். அதில் போட உப்பில்லாமல் இருந்தது. பின்னர் உப்பிட்டுத் தோலில் கட்டிவைத்தோம். அதனை நான் படுத்திருந்த பரணில் வைத்திருந்தேன். ஸ்டீபன் எனது பக்கத்திற் படுத்திருந்தான். மற்றும் மூவர் அந்த கூடாரத்துக்குள் படுத்திருந்தனர். இரவில் புலி வந்து பரணில் வைக்கப்பட்டிருந்த மான் இறைச்சியை கவ்விக் கொண்டு போய்விட்டது. நாங்கள் அது ஒரு கள்வன் என்று நினைத்தோம். நான் தரையில் படுத்து கிடந்தவர்களை எழுப்பி மான் இறைச்சிப்பொதியை காணவில்லை என்று கூறினேன். எரியும் பந்தத்தை எடுத்துக் கொண்டு தேடினர். சில பகுதிகளை கண்டெடுத்து வந்தனர். காலையில் நாங்கள் விழித்துத் தேடிய போது இன்னும் கொஞ்சம் இறைச்சியையும் தோலையும் கண்டெடுத்தோம். புலி தோலை உண்ணவில்லை.

நாங்கள் வியாழக்கிழமை பின்னேரம் வரையும் பயணித்தோம். இடையில் கொறொண்ட ஓயாவைக் கடந்தோம். அது வற்றிக் கிடந்தது. இந்தப் பகுதி மலபார்கள் வாழும் கண்டியரசனின் பகுதியாகும். ஆனால் மனிதர்கள் வாழும் அறிகுறி ஒன்றையும் காணவில்லை. இங்குள்ள காடுகள் புதர்களாக இருந்தன. இடைக்கிடை பற்றைகளும் வெறும் தரையுமாக காணப்பட்டன. ஓரங்களில் நடப்பதைவிட வற்றிக்கிடந்த ஆற்றின் மணல்வழியே நடப்பது இலகுவாக இருந்தது. ஆற்றில் இடைக்கிடையே பாறைகளும் குழிகளும் காணப்பட்டன. மேல் பகுதியைவிட இரவில் கீழ் பகுதியில் யானைகள் கூடுதலாகப் படுத்துக்கிடந்தன. பகலில் அவைகளைக் காணவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணியளவில், நாங்கள் சில சுதேசிகளைக் சந்தித்தோம். கழுத்தில் மணிகோர்த்திருக்கும் மாடுகளை கட்டி கையில் கயிறுகளை பிடித்துக்கொண்டிருந்தனர். அவர்களைத் தவிர்ப்பதற்கு வேறு வழியில்லாமல் நாங்கள் அவர்களைக் கடந்து சென்றோம். நாங்கள் மேற்கொண்டு போன போது குரக்கன் வயலைக் கண்டோம். அங்கே பட்டணமோ நகரமோ காணப்படவில்லை. மனிதக்குரல் எதுவும் கேட்கவில்லை. நாங்கள் இருப்பது மலபார் நாட்டில் என்பது விளங்கியது. அவர்களின் அரசன் அல்லது வன்னியன், டச்சுக்காரர்களுக்கு திறை செலுத்த முடியாமலும், கண்டியரசனின் நெருக்குதலை சமாளிக்கமுடியாமலும், பெரிதும் துன்பப்படுகிறான். நாங்கள் அவன் கையில் அகப்பட்டால் கண்டியரசனைத் திருப்திப்படுத்துவதற்காக எங்களைப் பிடித்து அவனிடம் ஒப்படைப்பான் என்று பயந்தோம். இதனால் அம்மக்களைச் சந்திப்பதை இயன்றவரை தவிர்த்தோம். ஆயினும் அதற்கு வழியொன்றும் புலப்படவில்லை. காடுகள் பற்றைகள் மற்றும் முட்புதர்கள் நிறைந்து காணப்படுவதால் இரவில் காட்டு யானைகள், அங்குள்ள குளங்களும் குழிகளும் வற்றி விட்டதால், ஆற்றிலே படுத்து கிடக்கின்றன. இதைவிட இரவில் வேறு காட்டு மிருகங்களும் தண்ணீர் குடிக்கவரும். பகலில் மாட்டைக் கட்டிக் கயிற்றைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் மலபார்கள். இதனால் மிக விடியற்காலையில் எவ்வளவு விரைவாக நடந்தோம். அந்நேரத்தில் யானைகளும் இல்லை, மனிதர்களுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
0 1 SEP 2019
மாநகரசபை
யாழ்ப்பாண

11

மலபார் தேசத்தில் இருவரைக் கண்டு உரையாடல்.

டச்சுக் கோட்டைக்குப் பாதுகாப்பாக வந்து சேரலும் வரவேற்பும். மன்னார் தீவிலிருந்து கொழும்பைச் சென்றடைதல்.

இவ்வாறு நாங்கள் பின்னேரம் மூன்று மணிவரை பிரயாணம் செய்தோம். ஒரு மரத்தின் கீழ் இருந்து அரிசியை அவித்துக் கொண்டிருந்த இரு பிராமணர்களைத் திடீரென சந்திக்க நேரிட்டது. நாங்கள் நாற்பது பாகம் தள்ளி நின்றோம். அவர்கள் எங்களைக் கண்டதும் ஆச்சரியப்பட்டனர். நாங்களும் அவர்களைக் கண்டு ஆச்சரியப்பட்டோம்.

அவர்களைக் கண்டு ஓடுவதைவிட, அவர்களோடு பேசுவது நல்லதென்று நினைத்தோம். அவர்கள் அம்பும் வில்லும் வைத்திருக்கலாம் என்று அவர்களை நெருங்கப் பயந்தோம். எங்களிடம் கத்தியும் கோடரியுமே இருந்தது. நாங்கள் நின்று சிங்கள மொழியில் உங்களுக்கு கிட்ட வரலாமா என்று கேட்டேன். ஆனால் நாங்கள் சொன்னவைகளை அவர்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்கள் மலபார் மொழியில் எதையோ கூறினர். அது எங்களுக்குப் புரியவில்லை. நாங்கள் தள்ளிநின்று கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைவுகளால் எங்கள் கருத்தை தெரியப்படுத்தினோம். அவர்களும் அவ்வாறு செய்தனர். அவர்கள் பயப்படாமல் இருப்பதற்காக எங்களது ஆயுதங்களையும் பொதிகளையும் நிலத்திற் வைத்துவிட்டு அவர்களை நெருங்கி வந்தோம். அவர்களின் அருகில் போன போது தான் அவர்களிடம் ஆயுதம் இல்லை என்பது தெரிந்தது. காயங்களாலும் கீறல்களாலும் பாதிக்கப்பட்டிருந்த கைகளையும் முதுகுகளைக் காட்டி, நாங்கள் எங்கிருந்து வருகிறோம் என்பதையும், எங்கே போகப் போகிறோம் என்பதையும், சைகைகளால் அவர்களுக்கு உணர்த்தினோம். அவர்களும் புரிந்து கொண்டனர். கடவுளின் அதிசய நிகழ்வைப் பற்றித் தமக்குட் கதைத்தவாறு தமது கைகளை வானத்தை நோக்கி உயர்த்தி 'தம்பிரானே, தம்பிரானே' என்று பலமுறை உச்சரித்தனர். தம்பிரானே என்றால் மலபார் மொழியில் கடவுளே என்று அர்த்தம்.

அவர்கள், நாங்கள் தள்ளி வைத்திருந்த ஆயுதங்களையும் பொதிகளையும் எடுத்து வரும் படி சைகை காட்டினர். ஆயினும் உடனே அவைகளை எடுத்துவரவில்லை. எங்களுக்குச் சோறும் கறியும் ஆக்கித்தந்தனர். எங்களை உண்ணுமாறு பரிவுடன் தெண்டித்தனர். அதன் சுவை எங்களுக்கு ஒத்து வரவில்லை. இதய பூர்வமான அன்புடன் அவர்கள் வற்புறுத்தும் போது அவர்கள் அன்புக்கு நன்றி சொல்லி சாப்பிட்டோம். நாங்கள் புகையிலையை கொஞ்சம் அவர்களுக்கு கொடுத்தோம். நாங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கெஞ்சியதன் பின்னர்தான் அதைப் பெற்றுக்கொண்டனர். அது அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

அதன் பின் அவர்களை எங்களுடன் வந்து ஒல்லாந்தர் கோட்டையை காட்டுமாறு கேட்டோம். அதற்கு அவர்கள் இணங்காமல், நாங்கள் விளங்கிக் கொள்ளத்தக்க சொற்களாலும், சைகைகளாலும், உங்களுக்கு ஆபத்தெல்லாம் கழிந்துவிட்டது, இன்று இரவு நீங்கள் ஒல்லாந்தர்களின் ஆட்சிப் பரப்புக்குள் போய்விடுவீர்கள் என்று கூறினர். சிரமமிகுந்த பிரயாணத்தால் களைத்திருந்த எங்களுக்கு எப்படியும் ஒரு வழித்துணையைப் பெற்றுக் கொண்டால் நல்லது என்ற ஆவலில் என்னிடம் மிஞ்சி இருந்த ஐந்து சில்லிங்குகளை எடுத்து அவர்களிடம் நீட்டினேன். பெற்றுக் கொண்டவர் எங்களுடன் ஒருமைல் தூரம் வந்தார். பின்னர் விலகிவிட்டார். நாங்கள் அவர் இன்னும் பணம் கேட்கிறார். போலும் என்று நினைத்தோம். பின்னர் துனிஸ்தொப்பி ஒன்றையும் கத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றையும் அவரிடம் கொடுத்தோம். மேலும் ஒரு மைல் வந்து "நீங்கள் ஆபத்தைக் கடந்து விட்டீர்கள். இனிமேல் நீங்கள் மேலே போகலாம்" என்று கூறிவிட்டு எங்களை விட்டு அகலப்பார்த்தார். ஆயினும் அவரை நாங்கள் விடவில்லை. அவருக்கு இன்னும் கொடுத்து அவரை மேலும் எங்களோடு கூட வரவைப்பதற்கு எங்களிடம் ஒன்றுமில்லாமல் இருந்தது. அவரைப் போகவிட்டால் எங்களைப் பற்றிய செய்தியை மக்களிடம் சொல்லிவிடுவார் என்றும் பயந்தோம். அவரைக் காட்டுக்குள் மெல்லக்கூட்டிச் சென்று அவரிடம் இருந்த பொருட்கள் எல்லாவற்றையும் பறித்து, எங்களுடன் தொடர்ந்து வருமாறு அவரை அச்சுறுத்தினோம். தவிர்க்க முடியாமல் அவர் இன்னும் நாலு ஐந்து மைல் எங்களுடன் வந்தார். மீள ஒப்படைத்து, நாங்கள் இரவு வரும் வரை பிரயாணம் செய்தோம். ஆற்றங்கரையில் இருந்த ஒரு மரத்தின் கீழே இரவைக் கழித்தோம். யானைகள் வந்து எங்களுக்குத் தொல்லை கொடுத்தன. நாங்கள் எங்கும் நெருப்பு மூட்டியிருந்ததால் அவைகள் பயந்து சென்றுவிட்டன. அடுத்த நாள் சனிக்கிழமை காலை. வெளிச்சம் தெரிந்தவுடன் குதிரைக்குப் பிரயாணம் தொடங்குவதற்கு முன் அதன் வயிற்றை நிரப்புவது போல உண்டோம். ஆற்றில் இறங்கி நடக்கத் தொடங்கினோம். மணல் மிகவும் காய்ந்திருந்ததால் மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது. ஆற்றின் இரு கரைகளிலும் பற்றைகள் மிகவும் படர்ந்து வளர்ந்திருந்ததால் ஆற்றில் நடப்பது கஷ்டமாக இருந்தது. மத்தியால் மாத்திரமே நடக்கமுடிந்தது. புற்கள் மிகவும் செழிப்பாகக் காணப்பட்டது. ஆயினும் சற்று காய்ந்திருந்தது.

நாங்கள் இரண்டு மணித்தியாலம் நடந்தோம். ஒரு மனிதன் எங்கள் முன் நடந்து போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. அவன் எங்களைப் பார்ப்பதிலிருந்து தவிர்த்துக் கொண்டோம். பின்னர் அவனைக் காணமுடியவில்லை. அவன் மிக விரைவாக நடந்ததால் நாங்கள் பின்னடைந்து விட்டோம்.

பிராமணர்கள் சொன்ன விபரங்களை வைத்துப் பார்க்கும் போது நாங்கள் இப்போது ஒல்லாந்தர் ஆட்சிப் பிரதேசத்துக்குள் வந்து விட்டோம் என்பதை உணர்ந்து கொண்டோம். ஆகவே எங்களுக்கு முன் போன மனிதனைப் பிடிப்பதற்காக சற்று எட்டி நடந்தோம். அவனுக்கு வெள்ளைக்காரர்களைத் தெரியாமல் இருக்க முடியாது என்று நினைத்தோம். நாங்கள் அவனைக் கண்டவுடன் "நீங்கள் யார் ஆட்சிக்கு உட்பட்டவர்" என்று சிங்களத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டோம். அவன் அதற்கு "டச்சுக்கு" என்று பதிலளித்தான். அவன் மேலும் சொன்னான். இந்த நாடு டச்சுக்காரர்கள் ஆட்சிக்குட்பட்டது. அதனால் நீங்கள் ஆபத்தைத் தாண்டி விட்டீர்கள். அரிப்பு கோட்டை இவ்விடத்திலிருந்து ஆறுமைல் தூரத்தில் உள்ளது. "இது எங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. நாங்கள் அவனிடம் கூறினோம்." நாங்களும் ஒல்லாந்து நாட்டை சேர்ந்தவர்கள் தான். நாங்கள் கண்டியிலிருந்து தப்பி ஓடிவருகிறோம். நாங்கள் அங்கே பல ஆண்டுகள் கைதியாக இருந்தோம். உங்களுக்கு தர இப்போது எங்களிடம் ஒன்றுமில்லை. நீங்கள் எங்களைக் கூட்டிக் கொண்டு போய்க் கோட்டைக்குள் சேர்த்தால் தலைமைக்கொமாண்டர் உங்களுக்கு பெறுமதிமிக்க பரிசுகளை தருவார். நாங்கள் கூறியவைகளைப் பற்றி அவன் சந்தேகித்தானோ அல்லது உடனே ஏதும் எதிர்பார்த்தானோ தெரியவில்லை. அவன் சொன்னான் "மன்னித்துக் கொள்ளுங்கள். நான் முக்கியமான அலுவலாகப் போய்க் கொண்டிருக்கிறேன். ஆற்றிலிருந்து வெளியேறிப் போங்கள். ஆறு கன வளைவு நெளிவுகளுடன் செல்கிறது. அதன் வழிபோனால் வெகுதூரம் செல்லவேண்டும்.பயப்படாமல் பட்டணங்கள் வழியே போங்கள். அங்குள்ளவர்கள் உங்களுக்கு வழிகாட்டுவார்கள்"

ஆற்றின் குறுக்கே ஒரு பாதை வந்தது. அது ஒரு பட்டணத்துக்குப் போகும் என நினைத்துப் போய் பார்த்தால், அங்கே பட்டணத்தை காணவில்லை. ஆனால் குறுக்கு மறுக்குமான பலபாதைகள் காணப்பட்டன. எந்தப் பாதையால் செல்வதென்று தெரியவில்லை. இந்தப்பிரதேசம் சமதரை கொண்டது. தூரத்தில் வீடுகள் தெரிகின்றதா என்று பார்ப்பதற்காக மரத்தில் ஏறிப்பார்த்தேன். கோட்டையையோ வீடுகளையோ காணமுடியவில்லை. சூரியன் எனது உச்சந்தலையில் இருந்ததால் தூரத்தில் உள்ளவற்றை என்னாற் பார்க்கமுடியவில்லை. நாங்கள் மீண்டும் எங்கள் பழைய நண்பரான ஆற்றுக்கு வந்தோம். பல நெளிவு சுளிவுகளைக் கடந்த பின் சூரியன் மறையும் வரை காத்திருந்தோம். அப்போது அங்கே நாலைந்து பேர் வந்தனர். அவர்கள் மலபார்கள். அவர்களில் ஒருவன் போர்த்துக்கீஸ் மொழி பேசக்கூடியவனாக இருந்தான். அவர்களிடம் நாங்கள் ஒல்லாந்தர்கள் என்று கூறினோம். அவர்கள் எங்களுக்கு வழிகாட்டுவார்கள் என்று எதிர்பார்த்தோம். அவர்களும் முதல் குறிப்பிட்டவனைப் போலத்தான். சாட்டுபோக்குகள் கூறினர். கடைசியில் ஒருவனுக்கு பாக்குகளை வெட்டக்கூடிய கிறிஸ் கத்தி ஒன்றைக் கொடுத்தோம். ஆயினும் அவன் எங்களுடன் வர விரும்பவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் பட்டணம் வரையும் வந்து ஓர் ஆளைத் துணைக்குப் பிடித்து தரலாம் என்றான். அவன் பிடித்துத் தந்த மனிதனுடன் பட்டணம் பட்டணமாக வந்து அரிப்பு கோட்டையை அடைந்தோம். அப்போ சனிக்கிழமை பின்னேரம் நாலு மணி ஒக்டோபர் எட்டாம் திகதி 1679ம் ஆண்டு. அந்த நாளிலே கடவுள் மறக்கமுடியாத கிருபையை எங்களுக்கு வழங்கினார். பத்தொன்பது வருடங்களும் ஆறுமாதங்களும் சில நாட்களும் அஞ்ஞானிகளிடம் கைதியாக மலை மேல் வாழ்ந்த எனக்கு அவர் விடுதலை அளித்தார். எனக்கு இப்போது முப்பத்தெட்டு வயது. அடர்ந்த காட்டில், காட்டு மிருகங்களுக்கு மத்தியில் பாதுகாப்பாகவும் ஆழ்ந்தும் வீட்டில் நித்திரை செய்வது போல் நித்திரை செய்தேன். இந்தக்காட்டுப் பிரயாணம் முதலில் எண்ணி இருந்தது போல் எனக்கு பிற்பாடு திகிலாக இருக்கவில்லை. ஆச்சரியமாகவும் விநோதமாகவுமிருந்தது. கடவுள் எனது பிரார்த்தனைக்கு இரங்கி அளவற்ற தைரியத்தையும் ஊக்கத்தையும் என்னுள் தோற்றுவித்தார். சுருக்கமாக, புராதன இஸ்ரேல் மக்களுக்கு துணைநின்றது போல் இந்த ஆச்சரிய மூட்டும் நிகழ்வைப் பார்க்கின்ற போது, கடவுள் வெளிப்படையாக எங்களுக்கு தோன்றாத்துணையாக நின்று செயல்பட்டுள்ளார் என்பது தெரிகிறது.

ஒல்லாந்தர்களுக்கு எங்கள் வருகை பெரு வியப்பாக இருந்தது. அவர்கள் ஆச்சரியத்தின் எல்லைக்கே போய்விட்டனர். அவர்கள் அன்பாகவும், இரக்கமாகவும் எங்களை உபசரித்தனர். அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை ஒரு கோப்ரலோடு எங்களை மன்னாருக்கு அனுப்பி வைத்தனர். எங்கள் கொஞ்சம் பொருட்களை கறுவல் மனிதன் ஒருவன் தூக்கிக் கொண்டு வந்தான்.

மன்னாரில் பிரதான ஆளுநர் எங்கோ போய்விட்டதால் கோட்டைக்குப் பொறுப்பான கப்டன் எங்களை வரவேற்றார். நாங்கள் போன நேரம் அவர் மதிய உணவுண்ணத் தயாராகிக் கொண்டிருந்தார். அவர் மிக அன்புடனும் பரிவுடனும் தன்னோடு மதிய உணவை அருந்துமாறு வேண்டிக்கொண்டார். இது எங்களுக்கு பெரும் விசித்திரமாக இருந்தது. வைக்கோல் மேய்ந்த குடிசைகளில், வெறும் தரையில் அமர்ந்து, இலைகளில் கறுத்த அஞ்ஞானிகளுடன் உணவுண்ட எங்களுக்கு, மேசையில் அமர்ந்து சீன பீங்கான் கோப்பைகளில் உண்ணும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. அங்கே மிக எளிய உணவு; இங்கே சுவைமிக்க பலவகை உயர்தர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுவகைகள். அங்கே கரிய அஞ்ஞானிகள்; இங்கே வெள்ளைக் கிறிஸ்தவர்கள். எங்கள் நிறத்தைத் தவிர அவர்களின் சேவகர்களுடனும் அடிமைகளுடனும் அமர்ந்து உணவுண்ண நாங்கள் தகுதியில்லாதவர்கள் போல தோன்றியது. என்னே ஆச்சரியம் !

உணவுக்குப் பின்னர், கப்டன் அரசனைப்பற்றியும் நாட்டைப்பற்றியும் அங்குள்ள தூதுவர்களைப்பற்றியும் மக்களைப்பற்றியும் விசாரித்தார். நாங்கள் எங்களுக்கு தெரிந்த அளவு திருப்தியான பதில்களை அவருக்கு அளித்தோம். "நாளைக்கு ஒரு சிறிய கப்பல் ஒன்று யாழ்ப்பாணத்துக்கு புறப்படுகிறது. அதில் நான் உங்களை அனுப்பி வைக்கிறேன். அங்கிருந்து நீங்கள் விரும்பியபடி சென்.ஜோர்ஜ் கோட்டைக்கு அல்லது மற்ற கடற்கரையில் உள்ள இடங்களுக்கு போகலாம்." இவ்வாறு சொல்லிவிட்டு, கப்டன் எங்களுக்கு கைச்சிலவுக்கு சிறிது பணம் தந்து, நீங்கள் போய் கோட்டையில் உள்ள உங்கள் நாட்டு மனிதர்களுடன் குடித்து மகிழ்ச்சியாக இருக்கும் படி கூறினார். அவரின் தயாளத்துக்குப் பலமுறை நன்றி தெரிவித்துவிட்டு, அவரிடமிருந்து விடை பெற்றோம். எங்கள் பேச்சுகள் எல்லாம் போர்த்துக்கீச மொழியில் இருந்தது.

நாங்கள் கோட்டைப் பாதுகாவலரிடம் இங்கே யாரும் ஆங்கிலேயர்கள் உள்ளார்களா என்று கேட்டோம். கேட்டு முடிவதற்கிடையில் இரு மனிதர்கள் எங்கள் முன் வந்தார்கள். ஒருவன் அன்ரு பிரவுண் என்ற பெயருடைய ஸ்கொட்லாந்துக்காரன். மற்றவன் பிரான்சிஸ் ஹெட்ஜ் என்னும் அயர்லாந்துகாரன். அவர்கள் மிகவும் பாசமுடன் கோட்டையில் உள்ள தங்கள் இருப்பிடத்துக்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். அங்கே அவர்களின் தகுதிக்கேற்ப புகையிலையும் சாராயமும் தந்து உபசரித்தனர்.

இதற்கிடையில் பட்டணம் எங்கும் எங்களைப் பற்றிய செய்தி பரவி விட்டது. மக்கள் முண்டியடித்துக் கொண்டு ஆச்சரியப் பொருளைப் பார்ப்பது போல் எங்களை வந்து பார்த்தனர் சிலர் கண்டியில் சிறை வைக்கப்பட்டிருக்கும் தங்களின் கணவர்களை, பிள்ளைகளை உறவினர்களை பற்றி விசாரித்தனர்.

அடுத்த நாள் திங்கட்கிழமை, யாழ்ப்பாணத்துக்கு புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் போது கப்டனிடமிருந்தும் செயலகத்திலுமிருந்தும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளை வந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கொமாண்டர் வரும் வரை காத்திருக்கும் படி அக்கட்டளையிற் சொல்லப்பட்டிருந்தது. அவர் எந்த நேரத்திலும் வரலாம் என்றும் கூறப்பட்டது. எங்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களையும் ஏனைய தேவைகளையும் நன்கு கவனிக்கும்படி கட்டளையிடப்பட்டிருந்தது. இதைக் கேட்டு எங்களோடு இன்னும் கூடுதலாக இருந்து கூடிக்கழிக்கலாம் என்று ஸ்கொட்லாந்து, அயர்லாந்து மனிதர்களுக்கும் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அவர்கள் எங்களுக்காக செலவளிப்பதை நாங்கள் விரும்பவில்லை. கப்டனின் கட்டளைப்படி அவர் செலவில் தங்கி இருப்பதையே விரும்பினோம். கடவுள் கிருபையால் நாங்கள் தப்பி ஓடிவரும் வழியில் எங்களுக்கு ஒரு நோயும் ஏற்படவில்லை. ஆனால் மன்னாருக்கு வந்தவுடன் எனது நண்பன் நோயில் விழுந்தான். நான் அவனை இழந்து விடுவேனோ என்று பயந்தேன்.

அதனால் அங்கு பத்து நாட்கள் இருந்தோம். அக்காலத்தில் கொமாண்டர் அங்கு வந்தார். அடுத்த நாள், நாங்கள் போய் அவர்முன் நின்றோம். தான் நாளை கொழும்புக்குப் புறப்படுவதாகவும், கப்பல் தயாராக இருப்பதாகவும் தன்னுடன் எங்களை வரும்படியும் அவர் கூறினார். நாங்கள் வாழ்க்கையில் இனி கடற்பிரயாணம் செய்வோம் என்று ஒரு போதும் எண்ணவில்லை. ஆனால் அது இப்போது சாத்தியமாகியிருக்கிறது. நான் இப்போது கடலுக்குப் புதியவனாக இருப்பதால் பிரயாணத்தின் போது ‘கடல் நோய்’க்கு ஆட்பட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

கொழும்பு வருகையும், விருந்துபசாரங்களும், பட்டேவியாவுக்கு புறப்படுதலும், அங்கிருந்து பண்டம் ஊடாக இங்கிலாந்தை அடைதலும்

கொழும்பில் கப்பல் வந்து நங்கூரமிட்டது. ஒரு வத்தை கரைக்கு கொமாண்டரைக் கொண்டு வந்தது. மாலையாகிவிட்டதாலும், எனது நண்பன் மலேரியாக் காய்ச்சலால் அவதிப்பட்டுக் கொண்டிருந்ததாலும், நாங்கள் காலை வரை கப்பலிலேயே இருந்தோம். கப்பற் தலைவனுக்குப் பிரியாவிடை சொல்லிவிட்டு, அதிகாலையில் வந்த படகில் ஏறி கரைக்கு வந்தோம். வாயில் காவலர்களுக்கு முன்னே வந்தபோது அங்கிருந்த எல்லாரும் சிங்களத் தோற்றத்துடன் இருந்த வெள்ளையர்களாகிய எங்களை உற்றுப்பார்த்தனர். அவர்களிடம் நாங்கள் இங்கே யாரும் ஆங்கிலேயர்கள் உள்ளார்களா என்று கேட்டோம். இங்கே யாரும் இல்லை, ஆனால் நகரத்தில் பலர் உள்ளனர் என்று கூறினர். எங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு பக்கத்தில் நின்ற குழல் வாத்தியமிசைப்பவர் எங்களைத் தனது இருப்பிடத்துக்கு அழைத்துச் சென்று உபசரித்தார். காய்ச்சலால் நடுங்கிக்கொண்டிருந்த நண்பனை தனது படுக்கையிற் படுக்க வைத்தார். அவர் முன்னர் ஆங்கிலேயர்களின் கப்பலில் வேலை செய்தவர் என்று அறிந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் கண்டியிலிருந்து தப்பி வந்திருக்கிறோம் என்ற செய்தி காட்டுத்தீ போல் நகரமெல்லாம் பரவி விட்டது. இதனைக் கேள்விப்பட்ட ஆங்கிலேயர்கள் வந்து எங்களுக்கு வாழ்த்துக் கூறினர். அவர்களிடம் எவ்வாறு போய் ஆளுநரைச் சந்திப்பது என்று கேட்டோம். அவர்களிற் செல்வாக்குடைய ஒருவன் காவலர்களின் தலைவனோடு கதைத்து அடுத்த நாளே ஆளுநரை நாங்கள் சந்திக்க ஏற்பாடு செய்தான்.

எனது நண்பனும் வருத்தத்திலிருந்து தேறிவிட்டான். எங்களது நாட்டு மனிதர்கள் எங்களை அழைத்துச் சென்று நகரத்தைக் காட்டினர். நாங்கள் சிங்களவர்கள் போல் வெறும் காலுடனும் நீண்டதாடியுடனும் இருப்பதைக் கண்டு மக்கள் ஆச்சரியத்துடன் எங்களை நோக்கினர். பலரும் நாங்கள் யார், ஏன் நாங்கள் இந்த நிலைமையில் உள்ளோம் என்று விசாரித்தனர். நகரத்தின் பல இடங்களைச் சென்று பார்த்தோம். அவர்கள் தமது சீமாட்டியின் வீட்டுக்கு எங்களை அழைத்துச் சென்றனர். அங்கே உணவும் பானங்களும் வழங்கி உபசரித்தனர். பின்னர், முன்னர் எங்களை உபசரித்த குழல் ஊதுபவர் மீண்டும் எங்களைத் தனது இருப்பிடத்துக்கு அழைத்துச் சென்றார். அப்போது ஒரு பையன் வந்து ஆளுநர் தனது மாளிகையில் எங்களுக்கு விருந்தளிக்க உள்ளார் என்றும், அதில் அவசியம் கலந்து கொள்ளுமாறும் கூறினான். நாங்கள் இப்போது குழல் ஊதுபவர்களின் வீட்டில் விருந்துபசாரத்தில் இருக்கிறோம் என்றும், ஆளுநரின் அன்பான அழைப்பை ஏற்றுக் கொள்ள முடியாதிருப்பதாகவும் கூறினோம். அன்றிரவு குழல் ஊதுபவர் வீட்டிலேயே தங்கினோம்.

அடுத்த நாள் காலை, ஆளுநர் ரிக்கோஃப் வான்கோன் எங்களை தனது மாளிகைக்கு அழைத்தார். அவர் பற்றேவியாவின் ஜெனரல் ரிக்கோஃப் வான் கோனின் புதல்வராவர். அவரின் மாளிகை கருப்பு வெள்ளை நிறக்கற்களால் தளம் பதிக்கப்பட்டிருந்தது. ஆளுநரின் பக்கத்தில் எங்களை மன்னாரிலிருந்து கூட்டி வந்திருந்த கொமாண்டர் நின்று கொண்டிருந்தான். நாங்கள் போனவுடன் ஆளுநர் எங்களுக்கு வரவேற்புக் கூறினார்.

"நீங்கள் இப்போது சுதந்திர மனிதர்கள். உங்கள் தாய் நாட்டுக்கு மீள்வதற்கு உதவியளிப்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். நான் உங்களை எனது நாட்டு மக்கள் போல் பராமரிப்பேன்" என்று அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களிடம் கூறினார். எனக்குப் போர்த்துக்கீச மொழி தெரிந்திருப்பதை அறிந்த ஆளுநர் என்னுடன் அதிகம் அளவளாவினார். கண்டி அரசனின் விவகாரங்கள் பற்றி என்னிடம் அதிகம் விசாரித்தார். அவர் என்னை விட அவைகளைப் பற்றி அதிகம் அறிந்து வைத்துள்ளார் என்று தெரிந்தது. அவரின் பல கேள்விகளுக்கு திருப்தியான பதில்களைக் கூற என்னால் முடியவில்லை. அவர் குறிப்பாகக் கேட்டவைகள் மேல்வருபவனவையாகும். முதலாவது கேள்வி " கொட்டியாரத்துக்கு நீங்கள் போனதன் காரணம் என்ன" அதற்கு நான் விபரமாகப் பதிலளித்தேன். " கண்டி அரசன் அதற்கு என்ன செய்தான்" " நாங்கள் அங்கே வந்திருக்கிறோம் என்ற செய்திபோனது. ஆனால் அவன் என்ன நடவடிக்கை எடுத்தான் என்று தெரியாது" " அந்தப் பிரதேசத்தில் அரசனுக்கு அடுத்தவர் யார்" அங்கே அப்போது பொறுப்பானவர் யாருமில்லை. பொறுப்பில் இருந்தவரை அரசன் கொன்று விட்டான்." " அங்குள்ள மக்களின் மனநிலை எவ்வாறிருந்தது" " அவர்கள் அரசனை வெறுக்கிறார்கள். அவன் மிகவும் கொடுங்கோலன்" " நீங்கள் அரசன் முன் எப்போதாவது கொண்டு போய் நிறுத்தப்பட்டீர்களா" " இல்லை, அவனுக்கு வெகு கிட்டப் போகும் சந்தர்ப்பம் கிட்டவில்லை" "போரில் அவன் பலம் என்ன" " அவனால் எதிரிகளைத் தோற்கடிக்க முடியாது. பிரதான காரணம் மக்கள் இதயத்தில் அவன் இல்லை. ஆனால் அந்த நாட்டின் பலம் மலைகளிலும் காடுகளிலும்தான் தங்கி உள்ளது" " எந்த வகையான படையினரை அவன் வைத்துள்ளான்" "விபரமாக எனக்குத் தெரியாது. முப்பதாயிரம் படையினரை அவன் வைத்துள்ளான் என்று நினைக்கிறேன். " அவனின் எதிரிகள் சமாதானமாக விரும்பிப் பரிசுப்பொருட்களை அனுப்பியும் ஏன் அவர்களுடன் உறவாட வில்லை" " நான் இதைப்பற்றி விசாரிக்கவில்லை. இது ஏனென்று எனக்கு தெரியாது" " நீங்கள் அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்" " மலைகள் எப்போதும் இருக்கும் என்பதாலும், போக்குவரத்துக்கு வாய்ப்பு இல்லாததாலும், அவன் யாருக்கும் பயப்படத்தேவையில்லை" "கண்டிக்கு ஒற்றர்களை அனுப்பித் தகவல் பெற பாதுகாப்பான வழி என்ன" " யாழ்ப்பாணத்திலிருந்து அந்த நாட்டு மனிதர்களைக் கொண்டு நுவரகலா மக்களுடன் தொடர்பை ஏற்படுத்தித் தகவல்களைப் பெற முடியும். நுவரகலா மக்கள் அரச சபையுடன் அதிகம் தொடர்பு கொண்டவர்கள்" " இந்த அரசனின் இறப்புக்குப் பின் அந்த நாட்டையாள யார் வருவார் என்று நீங்கள் கருதுகிறீர்கள்" "அரசனுக்கு வாரிசு இல்லை. அது மக்களின் கையிலே விழும்" எத்தனை ஆங்கிலேயர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசசேவையில் உள்ளனர்? அவர்களுக்கு என்ன நடந்தது" அவைகளை விபரமாக அவருக்கு விளக்கினேன். " உங்களுக்கு அரசசபையில் இருக்கும் பிரதானிகள் யாரையும் தெரியுமா? அவர்களோடு நான் அதிகம் சிநேகங் கொள்ளவில்லை. அதிகமாகக் கதைக்கவுமில்லை" "பொது மக்கள் எவ்வாறு தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்கின்றனர்" "அரசன் பிரதேசவாரியாக நீதிக்கும் வரிக்கும் பொறுப்பானவர்களை நியமித்திருக்கிறான். அவர்களோடு தொடர்பு கொண்டு மக்கள் தங்கள் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வார்கள்" " அரசன் யாருடனாவது ஆலோசிப்பதுண்டா? கட்டளைகளையும் சட்டங்களையும் தன் விருப்பப்படி எடுக்கிறானா?" "நான் அரச சபையோடு சம்பந்தமில்லாதவன்; அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது" அவர் அதைப்பற்றி மேலுங் கேட்டார். " நீங்கள் அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்" " அவன் அங்கே ஈடுஇணை இல்லாத பெரியவன். அவனுக்கு ஆலோசனை வழங்க யாருமில்லை." " பிரெஞ்சுக்காரர்கள் வருவதற்கு முதல் அவர்களைப்பற்றி அரசன் அறிந்திருப்பானா?" " அப்படி இருக்காது. அவர்களின் வருகை புதினமாகவும் விநோதமாகவும் அரசனுக்கு இருந்திருக்கும்." "அரசனால் அவர்கள் எவ்வாறு பராமரிக்கப்படுகின்றனர்?" இதற்கு நான் பதிலளித்தேன். இதைப்பற்றி பிரெஞ்சுக்காரர்களை பற்றி எழுதப்படும் அத்தியாயத்திற் காணலாம். " கண்டியில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை விடுவிப்பதற்காக ஏதும் ஏற்பாடுகள் செய்யப்பட்டதா?" " அவர்கள் போரால் கைப்பற்றப்படாதிருந்தால் நடக்கலாம். ஆனால் அதைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது."

மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு தண்டனை நிறைவேற்றப்படுகின்றது என்று கேட்டனர். நாங்கள் அந்த மக்களிடம் கண்ட விநோதங்களையும் உபசாரங்களையும் வழமைகளையும் ஆர்வமுடன் விசாரித்தனர். நாட்டின் எந்தப்பகுதியில் எங்கள் வாழ்விடம் அமைந்திருந்தது, எவ்வளவு காலம் எவ்வாறு நாங்கள் வாழ்ந்தோம், மற்றும் எனது வயது என்று பல்வேறு விடயங்களைப்பற்றியும் ஆளுநர் துருவித் துருவி விசாரித்தார். எல்லாக் கேள்விகளுக்கும் எனக்கு தெரிந்த அளவில் பதிலளித்தேன்.

"அங்கு தற்போது எத்தனை ஆங்கிலேயர்கள் உள்ளனர்" என்று ஆளுநர் கேட்டார். " அங்குள்ள ஆங்கிலேயர்களின் தொகை பதினாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் அவர்களுக்கு மொத்தமாக பதினெட்டுப் பிள்ளைகள் இருக்கிறார்கள்" என்றும் பதிலளித்தேன். அவர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தனது நாட்டுத் தூதுவர்களையும் அவர்கள் அங்கு எவ்வாறு வாழ்கிறார்கள் அவர்கள் வாழ்வாதாரத்துக்காக என்ன கொடுக்கப்படுகின்றது என்பவற்றை அக்கறையுடன் விசாரித்தார். அவ்வாறே அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மற்ற நாட்டவர்களின் விபரங்களையும் அறிந்து கொள்ளவிரும்பினார். அவைகளுக்கு நான் அறிந்தவாறு பதிலளித்தேன். " இங்கிருந்து தப்பி ஓடி அரசனிடம் அடைக்கலம் புகும் ஒல்லாந்தர்களை அரசன் ஆதரிக்கிறானா?" என்று ஆளுநர் கேட்டார். " அவ்வாறு ஓடி வருபவர்களை அயோக்கியன் என்றே அரசன் கருதுகிறான்" என்று பதிலளித்தேன். அங்குள்ள போர்த்துக்கீசர்களைப் பற்றிக் கேட்டார். " அங்கே அவர்களில் ஐம்பது அறுபது பேர் வரையில் உள்ளனர். அவர்களில் ஆறு, ஏழு பேர் ஐரோப்பாவிற் பிறந்தவர்களாக இருப்பார்கள்." மேலும் நாங்கள் தப்பி ஓடுதலை எவ்வாறு மேற்கொண்டோம் என்று கேட்டார். என்னென்ன வழிகள், பட்டணங்கள், எவ்வளவு நாட்கள் பயணம் செய்து வந்தீர்கள் என்று கேட்டார். " உங்களுடைய தற்போதைய விருப்பம் என்ன?" என்று ஆளுநர் கேட்டார். " சென் ஜோர்ஜ் கோட்டையூடாக எங்கள் தாய் நாட்டுக்கு போவதுதான் என்று பதிலளித்தோம். " என்னுடன் பட்டேவியாவுக்கு வாருங்கள். அங்கே ஜெனரலாக உள்ள எனது தந்தையார் உங்களைக் கண்டால் பெரும் மகிழ்ச்சியடைவார் என்று ஆளுநர் கூறினார். இவ்வேண்டுகோளை எங்களால் மறுதலிக்க முடியவில்லை. அதன்பிறகு டச்சு கப்டன் ஒருவனுக்கு எங்களை மாளிகைக்கு அழைத்து சென்று உபசரிக்குமாறும் தனது தையல்காரனுக்கு எங்களுக்கு உடைகள் தைக்கச் சொல்லுமாறும் கட்டளையிட்டார். " நாங்கள் எதிர்பார்த்ததை விட உங்களது உபசரிப்பு அதிகமாக உள்ளதென்றும் எங்கள் உடைகளுக்கான செலவுகளை சென் ஜோர்ஜ் கோட்டையிலிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள்" என்றும் நாங்கள் கூறினோம். அதற்கு அவர் "நான் உங்களுக்கு காசு தந்தேனா, நீங்கள் திருப்பித் தருவதற்கு, நான் எனது சொந்தக்காசிலிருந்து உங்களுக்கு உடுப்புகள் தைப்பதற்கு ஒழுங்குகள் செய்கிறேன்" என்று கூறினார். நாங்கள் அவரின் பெருந்தன்மைக்கு நன்றி தெரிவித்தோம். நாங்கள் விடைபெற்று அவரின் மாளிகைக்கு வந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உபசாரங்களோடு நாங்கள் நகரத்துக்குப் போகும் போது எங்கள் செலவுக்கு ஆளுநர்க் காசும் அனுப்பி இருந்தார். கொழும்பில் நாங்கள் இருக்கும் போது எந்தவித குறையுமில்லாமல் உபசரிக்கப்பட்டோம். எனது நண்பரின் மலேரியாக் காய்ச்சல் உரத்து அவன் நிலை மோசமாகிவிட்டது. ஆளுநரின் உத்தரவுப்படி மருத்துவர் வந்து நாளாந்தம் அவனுக்குச் சிகிச்சையளித்தார். கடவுள் கிருபையால் விரைவில் அவன் தேறிவிட்டான்.

இக்காலத்தில் எனது சக கைதிகளுக்கு நான் கண்டியை விட்டு வந்ததைப் பற்றி ஒரு கடிதம் எழுதினேன். நான் எவ்வாறு வந்தேன் என்பதையும் நிலைமை சாதகமாகவும் பாதுகாப்பாகவுமிருந்தால் எனது வழியைப் பின்பற்றுமாறும் கூறினேன். வாய்ப்பு வரும் போது அவர்களிடம் சேர்ப்பிக்குமாறு புதிய ஆளுநரிடம் அதை ஒப்படைத்தேன். இக்கடிதத்தின் பிரதியை அங்கு வாழும் தமது டச்சு கைதிகளுக்கும் கொடுக்கப் போவதாக ஆளுநர் கூறினார். இக்கடிதத்தை அங்குள்ள டச்சுக் கைதிகள் விளங்கிக்கொள்வதற்காக போர்த்துக்கீசமொழியில் எழுதித் தருமாறு ஆளுநர் கேட்டுக்கொண்டார். நான் சம்மதித்ததால் பேப்பரும் பென்னும் கொண்டு வந்து தந்தனர். ஆங்கிலக் கடிதத்தில் விபரிக்கப்பட்டவைகளைப் போர்த்துக்கீச மொழியில் எழுதிக் கொடுத்தேன்.

ஆளுநர் புறப்படுவதையிட்டு விருந்துகளும் அணிவகுப்புகளும் இடம் பெற்றன. கொண்டாட்டங்களுக்கு என்னையும் கலந்து கொள்ளுமாறு ஆளுநர் அழைத்தார். ஆடல்பாடல்கள் இடம் பெற்றதுடன் பல வகையுணவுகள், வைன், இனிப்புப் பண்டங்கள் ஆகியவை பரிமாறப்பட்டன. கொழும்புக்கு வந்து இருபத்தெட்டாவது நாளில் ஆளுநருடன் பட்டேவியாவுக்கு புறப்பட்டோம். கப்பலில் கொடிகளும் மணிகளும் தொங்கவிடப்பட்டிருக்க வேண்டும். எண்ணூறு தொன் பொருட்கள் அங்குள்ளதால் ஒரு ஆயுதம் தாங்கிய சிப்பாய் இரவும் பகலும் சதா காவலில் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும் முதலான ஒழுங்குகள் பிரகடனப்படுத்தப்பட்டன, ஆளுநர் என்னைத் தன்னோடு ஒரே மேசையில் உணவுண்ண அழைத்து எனக்கு கௌரவமளித்தார். ஒவ்வொரு தடவையும் பத்துக்கு மேற்பட்ட உணவு வகைகளும் வைன் வகைகளும் பரிமாறப்பட்டன. நாங்கள் கொழும்பில் இருந்து நவம்பர் இருபத்துநாலாம் திகதி புறப்பட்டு ஜனவரி ஐந்தாம் திகதி பட்டேவியா துறைமுகத்தில் நங்கூரமிட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

பட்டேவியாவில் ஆளுநரின் தந்தையான ஜெனரலைச் சந்தித்தோம். அவரின் பதவியைப் போலவே அவரின் குணநலன்களும் மிக உயர்வாக இருந்தன. மகனை விடக் கனிவாக அவர் எங்களை வரவேற்றார். நாங்கள் அவரின் கிட்டப்போனபோது அவர் மிகுந்த அன்புடன் எனது கைகளைப் பற்றிக் கொண்டு ஆசிகள் கூறினார். ஆச்சரியமூட்டும் படி எங்களை விடுவித்ததற்கு கடவுளுக்கு நன்றி சொன்னார். கடவுள் விமோசனத்துக்குரிய எல்லா வழிகளையும் அடைக்கமாட்டார், நாங்கள் அவர் மேல் பாரத்தை போட்டால், அவர் எங்களுக்கு விடுதலையைத் தருவார் என்று எங்களுக்கு ஆறுதல் கூறினார். நான் அவரின் பரிவுக்கும் தயைக்கும் நன்றி சொன்னேன்.

பின்னர் அவரின் தையல்காரனை அழைத்து எங்களுக்கு உடைகள் தைக்க அளவெடுக்குமாறு கூறினார். இரண்டு சோடி உடுப்புகள் ஒவ்வொருவருக்கும் தைக்க உத்தரவிட்டார். பின்னர் நகரத்தைச் சுற்றிப் பார்க்கவும் புகையிலை, வெற்றிலைக்கும் கைசெலவுக்கும் காசு தந்தார். கோட்டையில் கப்டனின் அறையில் நாங்கள் தங்கிக் கொள்ள ஏற்பாடு பண்ணினார். அடிக்கடி என்னை ஜெனரல் உணவுண்ண தனது சாப்பாட்டு மேசைக்கு அழைத்தார். அவருக்குப் பக்கத்தில் முத்துக்களாலும் வைரங்களாலும் செய்யப்பட்ட நகைகள் அணிந்த பெண் ஒருத்தி எந்நேரமும் இருப்பாள். சில வேளைகளில் அவரின் மகனும் மருமகளும் அங்கிருப்பார்கள். இந்த நேரத்தில் வாத்தியமிசைக்கப்படும். இவ்வாறு மிகவும் கோலாகலமாக உபசரிக்கப்பட்டோம். நாங்கள் இனிமேல் யாருக்கும் எங்கும் கைதியாக இருக்கப்போவதில்லையாதலால் எங்கள் பழக்கவழக்கங்களில் மாற்றங்கள் நிகழத்தொடங்கின. நாங்கள் வைத்திருந்த தாடியைக் கண்டியை கண்டிக்கும் நோக்கில் வெட்டி எறிந்தோம்.

கண்டியைப் பற்றி மீண்டும் மீண்டும் கேட்டுத் தெரிந்து கொண்டனர். எல்லாவற்றையும் எழுதி எடுத்துக் கொண்டனர். என்னையும் எழுதித் தருமாறு கேட்டனர். எனக்கு டச்சு மொழி தெரியாது என்று மறுதலித்தேன். எழுத்தாளர்களை வரவைத்து இலங்கை பற்றியும் கண்டியைப் பற்றியும் எனது வாயிலிருந்து வருபவற்றை எழுதிக் கொண்டனர்.

ஜெனரலின் இளைய மகன், தாய்நாட்டுக்குப் போக இருந்தான். அவன் ஓர் அட்மிரல் ஜெனரல். அவன் போகும் கப்பலில் எங்களுக்கும் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

ஒதுக்கித்தந்தார். கொழும்பிலிருந்து வரும் போது அவரின் மூத்தமகன் (ஆளுநர்) என்னைக் கூப்பிட்டு உணவருந்தச் செய்தது போல், இளைய மகனையும் செய்யுமாறு பணித்தார். நீங்கள் இலங்கையைப் பற்றி கூறுபவைகளை எல்லாம் ஒல்லாந்தர் கேட்டு மகிழ்வார்கள் என்று கூறினார்.

அந்த நேரத்தில் பன்டமிலிருந்து இரு ஆங்கிலேய வணிகர்கள் வந்தனர். அவர்களிடம் எங்களைக் கூட்டிச் செல்லுமாறு ஜெனரல் மிக விநயமாக வேண்டிக்கொண்டார். அவர்களும் மிக விருப்புடன் தங்கள் கப்பல் சீசரில் எங்களை அழைத்துச் சென்றனர். இங்கிலாந்து போகும் வழியில் பண்டத்திற்கு போனபோது அங்கிருந்து ஆங்கில அதிபதி எங்களை மிக அன்புடன் உபசரித்ததார். அங்கிருந்து இங்கிலாந்து பயணமானோம். கடவுள்தான் எங்கள் ஆங்கில நாட்டுக்கப்பலை தக்க சமயத்தில் அனுப்பி, ஒல்லாந்துக்குப் போய் காலத்தை வீணே கடத்தாமல் நேரே இங்கிலாந்திற்கு வர உதவியளித்தார். அவர் அருளால் செப்டம்பர் மாதத்தில் இங்கிலாந்தை அடைந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

இந்த நாட்டில் வாழும் மற்ற நாட்டவர்களைப் பற்றி, குறிப்பாக, ஐரோப்பியர்களான போர்த்துக்கீசர்களையும் ஒல்லாந்தர்களையும் பற்றி!

ஆங்கிலேயர்களைப் பற்றி மட்டும் சொல்லிவிட்டு, தானாகவோ, நிர்ப்பந்தத்தாலோ அங்கு வாழும் மற்ற வெள்ளையர்களைப் பற்றி சொல்லாமல் விடுதல் ஏற்புடையதல்ல. ஆங்கிலேயர்களை விட மற்ற வெள்ளையினத்தவர்களான போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரெஞ்சுக்காரர்கள் அங்கே வாழ்கிறார்கள். நான் இவர்களைப் பற்றிப் பேசுமுன் அங்கே வாழும் மற்றுமொரு இனத்தினரைப் பற்றி வாசகருக்குச் சொல்ல வேண்டும். அவர்கள் மலபார்களாகும். அவர்கள் புதியவர்களாகவும், மற்ற நாட்டிலிருந்து வந்தவர்களாகவுமுள்ளனர். அவர்களைப் பற்றி இடைக்கிடை இந்தப் புத்தகத்திற் குறிப்பிட்டுள்ளேன்.

மலபார்கள், இந்தத் தீவின் தன்னிச்சையான சுதேசிகளாவர். அவர்களுக்கென்று ஒரு நாடு இங்குள்ளது. ஆயினும் அது சிறியது. அது வடக்கு பக்கமாக கண்டிராச்சியத்துக்கும் ஒல்லாந்தர் பிரதேசத்துக்குமிடையே உள்ளது. கண்டி ராச்சியத்தில் இருந்து பாய்ந்து வரும் கொருவாவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் ஆறு மலபார் நாட்டினூடாகவும் செல்வதை நாங்கள் தப்பி வரும் போது கண்டோம். மலபாருக்கென்று ஒரு மொழி இருக்கிறது. அம்மொழியைச் சிங்களவர்களும், சிங்கள மொழியை மலபார்களும் புரிந்து கொள்ளமாட்டார்கள்.

அவர்களுக்கு ஓர் அரசன் இருக்கிறான், அவனின் பெயர் கிழக்கு வன்னியன் என்பதாகும். அவன் கண்டி அரசனுக்கோ டச்சுக்காரருக்கோ கட்டுப்பட்டவனில்லை. அவன் அன்பளிப்பொன்றை டச்சுக்காரருக்கு கொடுக்கிறான். அவனைப் போரில் முறியடிக்க ஒல்லாந்தர் முனைகின்றனர். ஆனால் முடியவில்லை. ஆயினும் அவன் அவர்களுக்கு ஆண்டுக்கு ஒரு சிறு தொகை யானைகளையும் கொடுக்கிறான். கண்டி அரசனும் மலபார் அரசனும் சிநேகிதர்கள். அவர்களுக்கிடையே கடிதப் போக்குவரத்து நடை பெறுகிறது. கடைசியாக ஒல்லாந்தருக்கு எதிராகக் கண்டியரசன் படையெடுத்த போது, அப்படைகள் தனது ஆட்சிக்கு கீழுள்ளப் பிரதேசமூடாகச் செல்ல அனுமதித்ததோடு மலபார் அரசனே நேரடியாகச் சென்று அப்படைகளை வழிநடத்தினான். அந்தச் சண்டையில் கண்டியரசன் சில கோட்டைகளை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றினான்.

கண்டி அரசனை விடக் கூடுதலான வரிகளை மலபார் அரசன் வசூலிக்கிறான். எனினும் மக்கள் அவனுக்கு விசுவாசமுள்ள பிரஜைகளாக உள்ளனர். காரணம் மலபார் அரசன் கண்டியரசன் போற கொடுங்கோலன் அல்லன். காவற் கடமையில் இருக்கும் போதோ, போரில் ஈடுபடும் போதோ சிப்பாய்களின் உணவுக்கான செலவுகளை அரசனே பொறுப்பேற்றுக் கொள்கிறான். இது உணவுக்கான செலவுகளைச் சிப்பாய்களே ஏற்கும் கண்டி வழமைக்கு மாறானதாகும். இதற்காக விளை நிலங்களுக்கு ஒரு சிறப்பு வரி விதிக்கப்படுகிறது.

இந்த மலபார் நாட்டின் முக்கிய பொருட்கள் யானைகள், தேன், வெண்ணெய், பால், மெழுகு, பசுக்கள், காட்டெருமைகள் ஆகும். கடைசியாகக் குறிக்கப்பட்ட மூன்றும் மிக அபரிமிதமாக கிடைக்கின்றன. தானியமும் பருத்தியும் இந்த நாட்டில் மிக அரிதாக உள்ள பொருட்களாகும். அதனால் மலபார் நாட்டவர்கள் மந்தைகளை ஓட்டிக் கொண்டு தானியமும் பருத்தியும் எடுத்து வரக் கண்டிப் பிரதேசமான நுவரகலாவவுக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வார்கள். பருத்தி கிடைப்பது அரிதாயினும், நெசவு வேலைகளில் மலபார்கள் சிங்களவர்களிலும் பார்க்கச் சிறந்த தேர்ச்சியுள்ளவர்கள். இவர்கள் போகும் போது உப்பு, உப்பிட்ட மீன், பித்தளை உபகரணங்கள் போன்றவற்றையும் மற்றும் ஒல்லாந்தர்களிடம் வாங்கிய பண்டங்களையும் மாடுகளில் கட்டிக் கொண்டு வருவார்கள். கண்டியரசன் ஒல்லாந்தர்களிடம் எந்த வர்த்தகத் தொடர்புகளும் வைத்துக்கொள்ளக்கூடாது என்று கட்டளை பிறப்பித்துள்ளதால் அவர்களின் பொருட்களை மலபார் மக்கள் ஊடாகத்தான் கண்டி மக்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

நாங்கள் இனி ஐரோப்பிய நாட்டவர்களை நோக்கித் திரும்புவோம். போர்த்துக்கீசர்கள்தான் இந்நாட்டுக்கு முதலில் வந்தவர்களாதலால் முதலில் அவர்களைப்பற்றிப் பார்ப்போம்.

இந்தத் தீவைச் சுற்றியுள்ள கடற்கரை பல வருடங்கள் அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்தது. இக்காலத்திற் பல சுதேசிகள் கிறிஸ்தவர்களாகவும் போர்த்துக்கீச மொழியை அறிந்தவர்களாகவும் மாறினர். இக்காலத்திலிருந்து அம்மொழி இந்நாட்டிற் பேசப்படுகின்றது. அரசனுங் கூட இம்மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றவன் இந்நாட்டில் போர்த்துக்கீசர் பல முற்றுகைகளை நடத்தியுள்ளனர். பிரதான தலைநகரான கண்டியும் பலமுறை அவர்களது முற்றுகைக்குட்பட்டது. அவர்கள் அரண்மனை, கோயில் ஆகியவற்றைத் தீயிட்டுக் கொளுத்தியதுடன் அரசனை வருடத்துக்கு மூன்று யானைகள் கப்பம் தரவும் வைத்தனர். கண்டி, மலைகளுக்கு மத்தியில் அமைந்து இயற்கையாக அரண்மிக்கதாக இருப்பதால், அதனைத் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப் போர்த்துக்கீசர்களால் முடியவில்லை. அதனால் அது தனது சொந்த அரசர்களாலேயே எப்பொழுதும் ஆளப்பட்டு வருகிறது.

இலங்கை அரசர்களுக்கும் போர்த்துக்கீசருக்குமிடையே மூண்ட போர்களிலே துணிகரமான வீரசாகசங்களை வெளிக்காட்டிய பல போர்த்துக்கீசத் தளபதிகளின் பெயர்கள் இன்னும் அம்மக்களிடம் நீங்காத நினைவுகளாக உள்ளன. அவர்கள் அரசனுக்குப் பல தொந்தரவுகளையும் இன்னல்களையும் ஏற்படுத்தினர். சண்டையில் இரு தரப்பினரும் வென்றும் தோற்றும் உள்ளனர். இரண்டு பக்கமும் பெரும் உயிர்,பொருள் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. கண்டி மன்னர்கள் இனி பொறுக்க முடியாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர்களின் தயவை நாடினர். தக்க சமயத்தில் அவர்கள் செய்த உதவியால் இந்த நாட்டை விட்டுப் போர்த்துக்கீசரைத் துரத்த முடிந்தது. அவர்கள் இடத்தை டச்சுக்காரர்கள் பிடித்துக் கொண்டனர்.

போர்த்துகீசர்களின் கடைசி இடமான கொழும்பு வீழ்ச்சியடைந்த போது தங்களிடம் அடைக்கலம் தேடிவரும் போர்த்துக்கீசரை ஆதரிக்க வேண்டும் என்று அரசன் மக்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் குடும்பம் குடும்பமாக, மனைவிகள், பிள்ளைகள், சேவகர்கள், அடிமைகள் சகிதம் ஒல்லாந்தர்களுக்கு கீழ் வாழப்பிடிக்காமல் கண்டியை நோக்கி ஓடி வந்தனர். அவ்வாறு வந்தவர்களை அரசன் கட்டளைப்படி மக்கள் நன்கு ஆதரித்தனர். அவர்களுக்கு மாதப்படி அரசனால் வழங்கப்பட்டது. அவர்களது சேவகர்கள், அடிமைகளுக்குக் கூட அது கொடுக்கப்பட்டது. அவர்கள் இப்போதும் கண்டிராச்சியத்திலேயே வாழ்கிறார்கள். இம்மக்கள் ஓடிவிட மாட்டார்கள் என்பதால் மற்ற வெள்ளைக்காரர்கள் போலல்லாது நாட்டின் எப்பாகத்துக்கும் சென்றுவர உரிமை பெற்றுள்ளனர்.

துறைமுகங்களில் வர்த்தகம் செய்ய வாய்ப்பிருப்பதால் அவர்கள் பொருட்களுடன் அங்கே செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது. தன்னிச்சைப்படிக் கண்டியரசனுக்கு கீழே வாழ வந்தவர்கள் தவிர, சிறைபிடிக்கப்பட்ட போர்த்துக்கீசர்களும் அங்கே இருக்கின்றனர். தகுதியுள்ள போர்த்துக்கீசர் அரச சேவையிற் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மற்ற சேவகர்களுக்கு உள்ள வழமைகள், கட்டுப்பாடுகள், மற்றும் ஒழுங்குகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர அவர்கள் விவசாயம், வர்த்தகம், சாராயம் வடித்தல், தவறணை நடத்தல், பெண்கள் பெண்களின் உடைகளைத் தைத்தல், ஆண்கள் ஆண்களின் உடைகளைத் தைத்தல் போன்றவற்றைச் செய்கின்றனர்.

நான் இப்போது கண்டி அரசனின் கீழ் வாழும் சில போர்த்துக்கீச தளபதிகளைப் பற்றிச் சொல்லப்போகிறேன்.

போர்த்துகீசர் இந்நாட்டில் காலடி வைத்த போது கொன்ஸ்ற்ரன் சா என்ற தளபதி தற்போதைய அரசனுக்குக் கெதிராக முற்றுகை நடவடிக்கைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமாக முன்னெடுத்தான். தலை நகருக்கு வந்து அங்கிருந்த கோயிலுக்குத் தீ வைத்தான். அவனுக்குப் பெறுமதிமிக்க கப்பம் ஒன்றை அளிப்பதாக அரசன் ஒரு செய்தியை அனுப்பினான். அதற்கு அவன் " கப்பம் மாத்திரம் செலுத்தினாற் போதாது, நீங்கள் எனது போர்த்துக்கல் நாட்டிற்கு அடிமையாகவுமிருக்க வேண்டும்." என்று கர்வத்துடன் பதிலளித்தான். கண்டி அரசன் வயிற்றெரிச்சலைத் தாங்கிக்கொள்ள முடியாமல் " தலைகுனிவதைவிட எனது உடம்பில் சிறுதுளி இரத்தம் இருக்கும் வரை போராடுவேன்" என்று சூளுரைத்தான். அப்போது அந்த தளபதியின் படையில் இருந்த பல கொமாண்டர்கள் சிங்களவர்களாக இருந்தனர். அரசன் இரகசியமாக அவர்களைத் தன் பக்கம் வருமாறு கூறினான். அப்படி வந்தால் போதிய சன்மானம் தருவதாக வாக்களித்தான். அரசனின் திட்டம் வெற்றியடைய, அவர்கள் போர்த்துக்கீச தளபதிக்கெதிராகக் கலகம் செய்து அரசனின் பக்கம் மாறினர். அப்படி வந்தவர்கள் மீது அரசன் முழு நம்பிக்கை கொள்ளாமல் போரில் முன்னரங்குகளில் நின்று பெறுபேறுகளைக் காட்டுமாறு ஏவினான். அதன்படி சாவின் கண்முன்னே அவன் படைகளைத் தோற்றோட வைத்தான். கடைசியில் சிங்களப்படைகளால் சா கைதியாக்கப்பட்டான். தனது கறுவல் பையனை தனக்கு தண்ணீர் குடிக்க எடுத்துவருமாறு சொல்லிவிட்டு பக்கத்திலிருந்த கத்தியை எடுத்து தனக்குதானே குத்தி தற்கொலை செய்து கொண்டான்.

அவனுக்கு பின்வந்த ஜெனரலின் பெயர் லெவிஸ் திஸ்ஸெரா அவன் அரசனைக் குரக்கன் களியைச் சாப்பிடவைப்பேன், என்று சபதம் செய்தான். குரக்கன் களி என்பது குரக்கன் மாவையும் நீரையுங் கலந்து அவித்து எடுக்கப்படும் உணவாகும். அது மிக எளிய முரட்டுத்தனமான உணவென்று இந்த நாட்டிற் கருதப்படுவதாகும். பின்னர் அரசன் லெவிஸ் திஸ்ஸெராவை பிடித்து; சங்கிலியாற் பிணைத்துப் பொது சிறையில் அடைத்து குரக்கன் களியை அவனுக்கு உண்ணக்கொடுத்தான். இந்தப் பகுதியில் அவனைப் பற்றிய கதைப்பாடல் ஒன்று இன்றுவரையும் பொதுமக்களாற் பாடப்படுகிறது.

இவனை அடுத்து வந்த தளபதி கிறிஸ்தவனாக ஞானஸ்நானம் பெற்ற சிங்களவன். அவன் சிறந்த கொமாண்டர் என்று பெயர் பெற்றவன். அவன் சிங்களவர்களை வெற்றிக்கொள்ளும் போதெல்லாம் கடும் கொடூரங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மீது நிகழ்த்தியவன். அவன் பிள்ளைகளை உரலில் போட்டு அப்பிள்ளைகளின் தாய்மாராலேயே நெல்குத்துவது போல் உலக்கையால் குத்தவைத்தவன்.

கஸ்பர் பகாரி ஒரு போர்த்துக்கீச தகப்பனுக்கும் சிங்களத்தாய்க்கும் பிறந்தவன். இந்த நாட்டின் கடைசிப் போர்த்துக்கீச ஜெனரல் ஒரு தைரியமிக்க படைவீரன். முன்னையவனின் கொடூரத்திலிருந்து இவனும் சற்றும் சளைத்தவன் அல்லன். அவன் தலைகீழாக ஆட்களைக் கட்டி அவர்களின் நடுப்பகுதியை வெட்டிவிடுவான். அவன் தனது கோடாரியை வெள்ளைத் துணியால் மூடிக்கொண்டு யுத்த களத்திற்குப் போய்த் தனக்கு மாறாகச் செயற்படுபவர்களை அல்லது ஓடி விட எண்ணுபவர்களைக் கொத்திவிடுவான். அவன் காட்டுங் 'கருணை' குற்றவாளிகளின் வலது கையைத் துண்டித்து விடுவதுதான். அப்படி கை துண்டிக்கப்பட்டவர்கள் பலரை நான் கண்டிருக்கிறேன்.

இந்த ஜெனரல் ஹெற்றர் கோர்லி பிரதேசத்தில் மோடோபுல் என்ற இடத்தில் முகாம் ஒன்றை அமைத்து அரசனுக்கெதிராகப் போரிட முனைந்தான். அரசன் துணிவுடன் அதனை எதிர்கொண்டான். போர்த்துக்கீசரை எதிர்கொள்ளக் கோடாகோபுல் என்ற இடத்தில் ஒரு முகாமை அரசனின் ஆட்களும் அமைத்திருந்தனர். இரண்டு முகாம்களுக்குமிடையே பத்துமைல் வித்தியாசம் இருந்தது. அரசனின் முகாம் இருக்கும் இடத்தையும் அங்கு அவன் வரப்போவதையும் ஒற்றர் மூலம் கஸ்பர் அறிந்தான். ஆனால் அரசன் வரப்போகும் நாளுக்கு முதல் நாள்தான் அவன் வருவான் என்று ஒற்றர்கள் தவறுதலான தகவலை கஸ்பருக்கு கொடுத்துவிட்டனர். ஜெனரல் அன்று ஒரு விருந்துக்கு ஏற்பாடு பண்ணினான். வாத்திய இசை முழங்க, முரசு அடிக்க மிகவும் ஆடம்பரமாக விருந்து நடந்து கொண்டிருக்கும் போது தனது தனிப்பட்ட படை வீரர்கள் சிலரை அழைத்துக்கொண்டு கஸ்பர் இரகசியமாக அரசனின் முகாமுக்கு வந்தான். கோலாகலமாக விருந்து கொண்டாட்டங்களில் ஜெனரல் மூழ்கிக்கிடக்கிறார் என்று அரசன் ஒற்றர்களை நினைக்கச் செய்வதற்கே இந்த ஏற்பாடு. இரகசியமாக வந்து அரசனைக் கொலை செய்வது அவனது நோக்கமாகும். முகாமில் அரசனைக் காணவில்லை. ஆயினும் அவன் அரசனை எதிர்பார்த்துக் காலை வரை காத்திருந்தான். அரசன் ஒரு குன்றில் நிற்பதைக் கண்டான். கண்டதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சகோதரனே, உன்னோடு சிறிது பேச வேண்டும்” என்று கூறி அரசனை அணுகி, சடாரென பாய்ந்து தாக்க முனைந்தான். அரசன் மயிரிழையில் தப்பித்துக் கொண்டான். அரசனின் பாதுகாவலர்கள் அஜாக்கிரதையாக இருந்ததால் அவனைப் பிடிக்கமுடியவில்லை. டச்சுக்காரர்கள் சற்று தூரத்தில் நின்றதால் அவர்களாலும் பிடிக்கமுடியவில்லை. அவர்கள் பக்கத்தில் இருந்திருந்தால் கஸ்பரை பிடித்திருப்பார்கள்.

துணிகரமிக்க இந்த ஜெனரல் சிங்களவர்களை அடிக்கடி முறியடித்து வந்தான். அவனை மற்ற ஐரோப்பிய தேசத்தவர்களாலும் கட்டுப்படுத்த முடியவில்லை. ஒல்லாந்தர் ஒரு தடவை கொழும்பின் மீது முற்றுகையிட்ட போது அவன் அவர்களை எதிர்த்தான். அவனுக்கு அவர்கள் “நீங்கள் இப்போது சிங்களவர்களோடு போரிடவில்லை. உங்கள் சொந்த சமயத்தவர்களுடன் போரிட முனைகிறீர்கள்” என்று கூறினர். ஆயினும் அவர்கள் பேச்சுக்கு அவன் செவி சாய்க்கவில்லை. ஒல்லாந்தர் அவனை எதிர்கொண்டனர். அவர்கள் ஒரு தந்திரம் செய்தனர். தங்கள் படைகளுக்குப் பின்னர் சுடுகலன்களை மறைத்துவைத்து பின் வாங்கினர். இதை அறியாத கஸ்பரின் படைகள் ஒல்லாந்தரை விரட்டிச் சென்றனர். திடிரென வலது பக்கமும் இடதுபக்கமும் இருந்து கஸ்பரின் படைமீது வேட்டுகள் சரமாரியாக தீர்க்கப்பட்டன. ஒல்லாந்தர் கொழும்பைக் கைப்பற்றினர். கஸ்பர் பிடிபட்டான். அவனை கோவாவிற்கு நாடு கடத்தினர். அவன் அங்கே மரணமடைந்தான்.

போர்த்துக்கீசரோடு போரிட்டு களைத்திருந்த அரசன், அவர்களை எப்படியும் வெளியேற்றிவிட வேண்டும் என்ற ஆவலில் பட்டேவியாவிலிருந்து ஒல்லாந்தர்களை உதவிக்கு அழைத்தான். அவ்வாறுதான் அவர்கள் முதலில் இந்நாட்டுக்கு வந்தனர். இப்போது போர்த்துக்கீசர் இடத்தை ஒல்லாந்தர் பிடித்துக்கொண்டனர். அரசனுக்கு உதவி செய்து கொண்டே தங்களுக்குரிய “கூட்டையும்” அவர்கள் கட்டிக்கொள்ளத் தவறவில்லை. இப்போது அவர்கள் கணிசமான கடற்கரைப் பிரதேசங்களைத் தமதாக்கி கொண்டுள்ளனர்.

கண்டியரசன் இப்போது ஒல்லாந்தருடன் இணக்கம் காணமுடியாமல் போரில் ஈடுபட்டுள்ளான். 1665 இல் கொழும்பைக் கைப்பற்றிய போர்த்துக்கீசரை விரட்டியடித்து, ஒல்லாந்தர் அதைக் கண்டியரசனிடம் ஒப்படைத்தனர். இப்போரை ஒல்லாந்தர் தனியே நடத்தவில்லை. கண்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைகளின் உதவியில்லாமல் இப்போரில் அவர்கள் வென்றிருக்க முடியாது. இப்படி நிலைமை இருக்க திடீரெனக் கொழும்பை ஒல்லாந்தர் தம் வசமாக்கிக் கொண்டனர். இச்செயல் அரசனின் ஆத்திரத்தைத் தூண்டிவிட்டது. அவன் ஒல்லாந்தர்களை வெறுக்கத் தொடங்கினான். சமாதானம் பேச வந்த அவர்களின் தூதுவர்களைத் தடுத்து வைத்திருந்தான். அவர்களோடு எந்த வர்த்தகத் தொடர்புகளும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று தனது மக்களுக்குக் கட்டளையிட்டுள்ளான்.

டச்சுக்காரர்களைப் பிடித்தால், அவர்கள் யாரென்றாலும், அவர்களுக்கு கருணை காட்டாமல், அவர்களின் தலையைக் கொய்து விடுகிறான். அல்லது நகரத்தில் இருக்கும் மரங்களில் தூக்கி விடுகிறான். இவ்வாறு தூக்கில் தொங்கிய பலரை நான் கண்டிருக்கின்றேன். சில வேளைகளில் டச்சுக் கைதிகளை நெடுஞ்சாலைக்கு கொண்டுவந்து, அவர்களை தான் வென்று வாகை சூடியுள்ளேன் என்று காட்டுவதற்காக நிறுத்திவைத்திருப்பான். அவர்களுக்கு சிறுபடியே வழங்கப்படுகிறது. அதைக் கொண்டு வாழ முடியாமற் பலர் பிச்சையெடுக்கின்றனர். அவர்களின் வாழ்க்கை அங்கே துன்பம் நிறைந்ததாக உள்ளது.

டச்சுக்காரர்கள் வாளினால் மன்னனை வெல்லமுடியாமற் தவிக்கின்றனர். அவர்களுக்குக் காடுகள் பரிச்சயமில்லை. சிங்களவர்களின் சண்டை பாணியும் தெரியாது. அரசனோடு சமாதானமாகப் படாதபாடு படுகின்றனர். பல தூதுவர்களைச் சமாதானம் பேச அனுப்பியும் உரிய பலனில்லை. பெறுமதிமிக்க பரிசுப்பொருட்களை வழங்கிக்கொண்டும் தங்கமும் வெள்ளியும் இழைத்த துணியினால் சுற்றப்பட்ட இலச்சினை பொறித்த கடிதங்களை அனுப்பிக்கொண்டும், அவனுக்கு பட்டங்களை சூடிக்கொண்டும், வெற்றுப்புகழ்ச்சி மொழிகளை கூறிக்கொண்டும், அரசனின் பிரஜைகள், சேவகர்கள் என்று தங்களைத் தாழ்த்திக் கொண்டும் அவர்களின் விசுவாசத்துக்குத்தான் தாங்கள் கோட்டை கட்டுகிறோம் என்று சொல்லிக்கொண்டும், ஒல்லாந்தர்கள் தங்களைத் தக்கவைக்க முயல்கின்றனர்.

ஹப்பரகொன் பிரதேசத்தில் உள்ள பிபிலிக்கோம் கோட்டை கண்டியசரன் கைப்பற்றிக் கொண்டவிதம் இங்கே குறிப்பிடத்தக்கதாகும். கோட்டையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர் இல்லை. அதைப் பெற டச்சுக்காரர்கள் பக்கத்திலிருந்த ஆற்றிலிருந்து ஒரு வாய்க்காலை வெட்டிக் கோட்டைக்கு கொண்டு வருகிறார்கள் என்பதை அறிந்து கொண்ட சிங்களவர்கள், அந்த வாய்க்காலை மூடிவிட்டு, பல பீரங்கிகளை நிறுத்திக் காத்திருந்தனர்.

மேலும் சிங்களவர்கள் பக்கத்திலிருந்த காட்டை வெட்டி விறகுகளை கோட்டையைச் சுற்றி அடுக்கிக்கொண்டு வந்தனர். அவ்விறகுக்குவியலை கோட்டையை நோக்கி, நாளாந்தம் மெல்ல மெல்ல நகர்த்திக் கொண்டு வந்தனர். அவர்களது நோக்கம் கோட்டையை நெருங்கி விறகு குவியலுக்கு நெருப்பு வைத்துவிடுவதாகும். அங்கே ஓர் அரசமரம் கோட்டையை விட உயரமாக வளர்ந்திருந்தது. அதில் ஏறி, இருந்து கோட்டைக்குள் சுடுவதும் அவர்கள் நோக்கமாக இருந்தது. அத்தோடு கோட்டைக்குள் இருந்த வீடுகள் கிடுகினால் வேயப்பட்டவைகளாக இருந்ததால் அவைகள் மீது தீப்பந்தங்களை எறிவதற்கும் வாய்ப்பாக இருந்தது. டச்சுக்காரர்களால் கிடுகுகளை நீக்கவும் முடியாதிருந்தது. நீக்கினால் மழைக்கும் வெயிலுக்கும் தாக்குப் பிடிக்க முடியாது. தங்கள் மேல் சூழ்ந்துவரும் அபாயங்களை உணர்ந்த டச்சுக்காரர்கள் சரணடைந்தனர்.

இந்தக் கோட்டையை சிங்களவர்கள் தரைமட்டமாக்கினர். அங்கிருந்த நான்கு பீரங்கிகளை எடுத்து, அரசனின் வலிமையின் சின்னமாக அரண்மனையில் நிறுத்திவைத்துள்ளனர்.

சரணடைந்த ஒல்லாந்தர்களை இரண்டு மூன்று நாட்தூரம் நடத்திக்கொண்டுச் சென்று ஊவாவிற் சிறைவைத்தனர். அவர்கள் தொன்னூறு பேர் அளவில் இருப்பார்கள். அவர்களுக்கு மிகக்குறைந்த படியே வழங்கப்படுகின்றது. அதனால் அவர்கள் பசிதாங்க முடியாமல் துன்பப்படுகின்றார்கள். நான் அங்கிருந்து வரும்போது இருபத்தைந்து பேர்களுக்குக் குறைவானவர்களே அங்கிருக்கக் கண்டேன்.

அங்கே பல டச்சுத் தூதுவர்களும் சிங்கள மக்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் பரிசுப் பொருட்கள், மற்றும் கடிதங்களைக் கொண்டு வந்தவர்களும் சமாதானம் பேச வந்தவர்களுமாவர். அவர்கள் தனித்தனி வீடுகளில் வைக்கப்பட்டு அங்கே காவலர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சமைத்த உணவு அரண்மனையிலிருந்து எடுத்துவந்து தரப்படுகிறது. அவர்களுக்கு விலங்கிடப்படவில்லை. அவர்கள் யாருடனும் கதைப்பதற்கு அனுமதியில்லை. இந்த நிலையில் அவர்கள் பல வருடங்கள் இருக்கின்றனர். பல வருடங்கள் காவல் காத்து நிற்கும் படைவீரர்கள் சில நேரங்களில் அசண்டை யீனமாக இருந்துவிடுவதுண்டு. இந்நேரங்களைப் பயன்படுத்தி தூதுவர்களும் கைதிகளும் வீதியில் இறங்கிப் போய் வருவோரிடமெல்லாம் கதைக்கத் தொடங்கி விடுவார்கள். அவர்கள் பல வருடங்கள் வெளித் தொடர்புகள் இல்லாமற் தடுத்து வைக்கப் பட்டிருப்பவர்களாதலால், அவர்கள் சொல்லுபவைகள் மக்களுக்கு புளித்துப் போன செய்திகளாக இருக்கும். இதை அறிந்து அரசன், அவர்கள் கவனத்தைத் திசைதிருப்புவதற்காக ஆண் பெண் அடிமைகளை அவர்களுக்கு வழங்கியுள்ளான். அவர்களை எப்படியாவது மாற்றி தனது சேவையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது சம்பந்தப்பட்டதை வைத்து அவரை அரசன் வழிக்கு கொண்டு வந்த சம்பவங்கள் ஒன்றை இங்கு விபரிக்கின்றேன்.

நான் அங்கு வந்த காலத்திலிருந்து ஐந்து தூதுவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களோடு சிறிதுநேரம் நான் கதைத்தும் உள்ளேன். அவர்களில் இருவரை அரசன் திருப்பி அனுப்பி வைத்துவிட்டான்.

அரசனுக்கெதிரான கிளர்ச்சி நடைபெறுவதற்கு சற்று முன்னர் ஒல்லாந்தராலே தூதுவர் ஒருவர் அனுப்பப்பட்டார். அவரைக் கண்டியரசன் தடுத்து வைத்தான். கிளர்ச்சியின் பின் டிக்விக்கி நகரத்துக்கு மீண்ட அரசன் அவரை தான் ஒளித்திருந்த கலுடா மலைமேல் போய் வாழுமாறு பணித்தான். அது மிகவும் தனிமையான வசதிக்குறைவான இடமாகும். அங்கு அத்தூதுவர் போய் வாழும் காலத்தில் பக்கத்தில் வாழ்ந்த சிங்களவன் ஒருவனுக்கும் அவன் மனைவிக்கும் இடையே சண்டை மூண்டு அவன் அவளை வெளியே துரத்திவிட்டான். அவள் இந்த தூதுவரின் வீட்டில் தஞ்சம் புகுந்தாள்.

அந்தப் பெண் ஓரளவு அழகானவள். அந்த பெண் மீது தூதுவர் காதலில் விழுந்தார். அவளைத் தன்னுடன் வாழ அனுமதித்தால் அரச சேவையில் தான் சேர்வதாகத் தூதுவர் கூறினார். அவரை எப்படியாவது தனது சேவையில் ஈர்த்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணியிருந்த அரசன் அதைக்கேட்டு பெரும் மகிழ்வெய்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் அவர் விருப்பத்தை அங்கீகரிப்பதாகக் கூறினான். அத்தோடு இருவருக்கும் உடுப்புகளும் பெண்ணுக்கு வெள்ளி,தங்க நகைகளையும் அனுப்பி வைத்தான். அத்தோடு நகரத்தில் அவர்களுக்கு ஒரு வீட்டை அமர்த்தி, தனது களஞ்சியத்திலிருந்து தளபாடங்களை வருவித்தும், இல்லாதவற்றை தனது செலவில் வாங்கியும் ஒழுங்குபடுத்தினான். இவைகள் எல்லாம் முடிந்தவுடன் தூதுவரை மலையில் இருந்து அழைத்து வந்தனர். ஆனால் அவள் வரவில்லை. அவளைக் காணவில்லை. அவர் அரசசேவையில் சேர்ந்து கண்டியில் உள்ள தச்சர்கள் மற்றும் கைவினைஞர்களின் மேலதிகாரியாக நியமிக்கப்பட்டார். இச்சேவையில் இருக்கும் போது 1666 இல் அருண்டேரியிற் கட்டப்பட்ட ஒல்லாந்தரது கோட்டையை முற்றுகையிட அரசன் தனது படைகளை அனுப்பினான். அவர் அரசனின் சேவையில் இருந்ததால், இந்த நாட்டின் நன்மையில் அக்கறை கொண்டவராகப் பாவனை காட்டி, அரசனின் தந்திரங்களை பற்றி ஒல்லாந்தருக்கு இரகசியமாக ஒரு கடிதம் எழுதினார். அதற்குப் பதிலாக ஒல்லாந்தர் நன்றி தெரிவித்து அவருக்கு எழுதிய கடிதம் அரசனின் கைகளுக்குக் கிட்டியது. “உங்களது நமது நாட்டுக்கான விசுவாசத்தைக் கண்டு மகிழ்கிறோம். தங்கள் ஆலோசனையின் அடிப்படையில் தாக்குதலை திட்டமிட்டுள்ளோம்.” என்று பதில் கடிதத்தில் இருந்தது. அரசன் கடிதத்தை அவரை வாசிக்குமாறு கூறினான். அதில் அவர் முக்கிய விபரங்களை விட்டு வாசித்தார். சில இடங்களில் எழுத்து தெளிவற்று இருப்பதாகச் சொன்னார். உடனே வெறொரு டச்சுக்காரன் அழைக்கப்பட்டு அவனிடம் அக்கடிதம் வாசிக்கக் கொடுக்கப்பட்டது. அவன் அக்கடிதத்தை வாசித்து அதில் எழுதப்பட்டிருந்தவைகளை அரசனிடம் சொன்னான். அதன் பிறகு அரசன் “ அவர் எனக்குப் பயத்தால் சேவை செய்ய வந்திருக்கிறார், அவரின் பயம் இங்கேயும் அவரின் பற்று அங்கேயும் இருந்திருக்கிறது” என்று கூறி அவருக்கு மரண தண்டனை விதித்தான். அந்தக் கடிதம் சிலரால் அவருக்கு தீங்கிழைக்கும் நோக்கில் வேண்டும் என்று தயாரிக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது.

ஹென்றிக்ட்ரக் என்பவர் இன்னொரு தூதுவராவார். இவர் மிக உயர்ந்த கனவான். ஆங்கிலேயர்கள் மீது மிகவும் நல்ல அபிமானம் கொண்டவர். 1664 ஆம் வருடம் இவர் நியமிக்கப்பட்டார். இவர் இங்கே தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆங்கிலேயர்களையும் அவர்களின் விடுதலையையும் பற்றி அரசனிடம் விசாரித்தவராவார். இவர் எங்களைப் பற்றி விசாரித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில்தான் சேர் வின்ரர் எங்களை விடுதலை செய்யுமாறு கோரி ஒரு கடிதத்தை அரசனுக்கு எழுதியிருந்தார். இதைப் பற்றி இப்பாகத்தின் ஐந்தாவது அத்தியாயத்தில் விபரித்துள்ளேன். இந்தத் தூதுவர் அரசனின் அபிமானத்துக்குரியவராக இருந்தார். ஆயினும் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் இறந்துவிட்டார். அவரின் உடம்பை ஒரு பல்லக்கில் வைத்து, அரச மரியாதையுடன் பெரிய கொமான்டர்கள் புடை சூழ, கொழும்புக்கு அனுப்பிவைத்தான்.

1670 ஆம் ஆண்டு அருண்டெரி கோட்டையின் இழப்பிற்கு பிறகு ஒல்லாந்தர் புதுப்பாணியிலே தூதுவர்களை மன்னனிடம் அனுப்பத் தொடங்கினர். மிகவும் விநயமாகவும் பணிவுடனும் சமாதானம் கேட்கிறோம் என்பதைக் காட்டுமுகமாக மன்னிப்புக் கடிதம் அடங்கிய பெட்டியைத் தூதுவரின் தலைமேல் வைத்து அனுப்பி வைத்தனர். இத்தூதுவர் அரசனின் அபிமானத்தைப் பெற்றவர். சிங்கள வழக்கப்படி உடையணிந்து வந்த அவரைக் கோலாகலமாக வரவேற்க அரசன் ஏற்பாடு பண்ணினான். ஆயினும் அவரைச் சந்திப்பதை மன்னன் பல காலம் வேண்டுமென்றே தவிர்த்தான். கடைசியில் அவர் ஒரு தீர்மானத்திற்கு வந்தார். முன்னைய தூதுவர்கள் பெண்களைப்போல மரணமடைந்தனர். இவ்வாறு நான் மரணமடைய மாட்டேன், நான் ஒரு ஆண்மகனாக மரணமடைய வேண்டும் என்று கூறிய அவர், ஒரு வாளை எடுத்து தனது அரையில் செருகிக் கொண்டு அரண்மனை வாசலுக்கு வந்தார். அரசன் தன்முன் நிற்கிறான் என்று பாவனை செய்து தொப்பியை கழற்றி அவனுக்கு மரியாதை செய்தார். அரசன் வரவேற்பு அளித்ததாக நினைத்து அதற்கு நன்றி சொன்னார். ஆங்கிலேயர்களான நாங்கள் பக்கத்தில் நிற்பதைக் கண்டு தனது சுகத்துக்கு குடிக்குமாறு கூறி எங்களுக்கு காசு தந்தார். தனது வாளை உருவி தன்னைத்தானே வெட்டிக் கொள்ள ஆயத்தமானார். இதைக் கேள்விப்பட்ட அரசன், அவரை அழைத்துவருமாறு கூறினான். அவருடன் கதைத்து அவரை நல்ல செய்தியுடன் கொழும்புக்கு அனுப்பி வைத்தான்.

அவருக்கு பின் வந்தவன், ஜோன் பப்ரிஸ்ட். மற்றவர்களை விட மிதமான குணமும் அரசன் கருத்தறிந்து நடக்கும் பாங்கும் கொண்டவன். அவன் அரசனிடமிருந்து பல சலுகைகளைப் பெற்றான். ஆண்,பெண் அடிமைகள் என்று பலர் அவனுக்கு வழங்கப்பட்டனர். அரசன் நீண்ட நேரம் அவனுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதைக் கழித்து தான் விரும்பும் போது அவனை வீட்டுக்கு அனுப்பி வைப்பபான்.

அவனுக்குப் பின்வந்த தூதுவர் அரசனுக்குப் பரிசளிக்க ஒரு சிங்கத்தைக் கொண்டு வந்தார். டச்சுக்காரர்கள் சிங்கத்தை அரசனுக்கு நல்ல பரிசு என்று நினைத்தனர். அது சிங்கம் இல்லை, அது ஒரு குட்டி என்று அரசன் ஏற்கவில்லை. சிங்கக்குட்டியோடு வந்த மனிதன் அரசசபையிலிருந்து இருபதுமைலுக்கப்பால் ஒட்டப்பொல்லற் பிரதேசத்தில் வைக்கப் பட்டிருந்தான். அங்கே ஒரு வருடம் இருந்தான். இக்காலத்தில் சிங்கக்குட்டி செத்துப்போய்விட்டது. ஒல்லாந்தரது தூதுவன் அரசன் தனக்கு சமூகந்தருவார் என்று பார்த்துப் பார்த்து இருந்து அலுத்துப்போய், அவனை சந்திக்க முனைந்தார். இவ்வாறு பல தடவை முயன்றதால், அரசன் அவரை நகரத்துக்குக் கொண்டு வந்து அரசசபைக்கு அண்மையில் ஒரு வீட்டில் தங்கவைக்குமாறு கட்டளையிட்டான். அங்கு பல நாட்கள் காத்துக்கொண்டிருந்தும் அரசன் சமூகம் தருவதற்கு எந்த அறிகுறியும் தென்படாததால், அவன் ஓய்வெடுக்க வெளியில் செல்வதற்கிடையில் அவனை எப்படியாவது சந்தித்துவிட வேண்டும் என்ற ஆவலில் பலாத்காரமாக அரச சபைக்குள் நுழைந்தார். இவ்வாறு அவர் நுழைந்து வருவதைக் கண்ட காவலர்கள் பிரதானிகளிடம் கூறினர். கேள்விப்பட்ட அரசன், அவரை அவ்விடத்திலேயே நிற்க வைக்குமாறும் தான் வந்து சந்திப்பதாகவும் பிரதானிகளிடஞ் சொன்னான்.

''இந்நிலையில் அவரை மூன்று நாட்கள் முன்னுக்கும் நகரவிடாமல் பின்னுக்கும் நகரவிடாமல் காவலர்கள் நிறுத்தி வைத்திருந்தனர். இவ்வாறு அரசன் அவரை வழிக்கு கொண்டு வந்தான். பின்னர் அரசன் அவரை தனது முன்னிலைக்கு அழைத்தான். நான் அந்த நாட்டைவிட்டு வரும் போது,அவர் அரசனின் செலவில் மிக ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டிருந்தார்.

அங்கு வாழ்கிற டச்சுக்காரர்களின் தொகை ஐம்பது அல்லது அறுபது இருக்கும். சிலர் தூதுவர்கள்; சிலர் போர்க்கைதிகள்; சிலர் தப்பி ஓடி வந்தவர்கள்; சிலர் டச்சு நீதிமன்றங்களின் விசாரணைக்குப் பயந்து ஓடி வந்த குற்றவாளிகள். எல்லோருக்கும் படிகள் வழங்கப்படுகின்றன. தப்பி ஓடி வந்தவர்கள் குறைவு. அப்படியானவர்களை அரசன் மதிப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டச்சுக்காரர்கள் இங்கே கடுங்குடிகாரர்களாக உள்ளனர். அவர்கள் இங்கே துர்ச்செயல்களில் அதிகம் ஈடுபடுகின்றனர். அதிகாரியாக வேலை செய்யும் ஒல்லாந்தன் ஒருவன் அரைவெறியில் அரசசபைக்கு வருவான். அரசன் அவனைத் தவிர்க்க முயல்வான். அவன் ஒரு தடவை நிறைவெறியில் சுய உணர்வற்று இருப்பவனாகப் பாசாங்கு செய்து அரசனிடம், "நீங்கள் ஏன் ஒழுங்கற்று நடக்கிறீர்கள்? நான் காரியமாற்ற நீங்கள் தகுந்தவர் இல்லை" என்று கூறிவிட்டான். அதற்கு அரசன், இவன் தாய், பாலுக்குப் பதிலாக வைனை புகட்டிவிட்டாள்" என்று கூறிவிட்டுச் சிரித்தான். அங்குள்ள அநேகமான வெள்ளைக்காரர்களின் நிலைமை இவ்வாறுதான் உள்ளது. இதனால் சிங்களவர்கள், "பிள்ளைகளுக்கு பால் இயற்கையாக இருப்பது போல வெள்ளைக்காரர்களுக்கு வைன் இருக்கிறது" என்று அடிக்கடி கூறுவார்கள்.

டச்சுக்காரர்கள் தங்கள் ஆட்சியின் கீழ் உள்ள சிங்கள மக்களின் தரம், சமூக, அந்தஸ்த்து என்பவைகளைக் கருத்திற் கொள்வதில்லை. ஹெண்டுறாக்களும் கீழ்ச்சாதி மனிதர்களும் அவர்களுக்கு ஒன்றுதான். கீழ்ச்சாதி மனிதர்களை உயர்சாதி மனிதர்களைப்போல் குற்றியில் உட்காரவைக்கின்றனர். அவர்களை உயர்சாதியினரோடு திருமண உறவு கொள்ள வைக்கின்றனர். இவைகள் தண்டனைக்குரிய குற்றம் என்ற எண்ணமோ கருத்திற் கொள்ளத்தக்க விடயம் என்ற உணர்வோ அவர்களிடமில்லை. கண்டிச் சிங்களவர்கள், இவை தங்களுக்கு டச்சுக்காரர் செய்யும் கெடுமதி என்றும், தங்களைக் கீழ்ச்சாதிகளின் தரத்துக்கு மாற்ற அவர்கள் முனைகிறார்கள் என்றும் கருதுகிறார்கள். இதனால் டச்சுக்காரர்களைப் பற்றிய நல்லபிப்பிராயம் கண்டிச் சிங்களவர் மத்தியில் இல்லை. சிங்களவர்களுக்குத் தங்கள் தரமும் அந்தஸ்த்தும் உயிரைவிடப் பெறுமதி வாய்ந்தவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

அங்கு தடுத்து வைத்திருக்கும் பிரெஞ்சுக்காரர்கள், மற்றும் அங்குள்ள கிறிஸ்தவ சமயத்தின் நிலைமை

கிட்டத்தட்ட 1677 இல் பிரெஞ்சு அரசனால் பதினான்கு கப்பல்கள் இங்கே வியாபாரம் செய்வதற்காக அனுப்பப்பட்டன. அட்மிரல் டி லே ஹாய் தலைமையில் வந்த அக்கப்பல்கள் கொட்டியார துறைமுகத்தில் நங்கூரமிட்டன. அட்மிரல் மூன்று மனிதர்களை அரசனிடம் அனுப்பினான். அவர்களை அரசன் கோலாகலமாக வரவேற்று உபசரித்தான். அவர்கள் ஒவ்வொருவருக்கும் கழுத்தில் தங்கமாலை அணிவித்து, வெள்ளைக் கைப்பிடி போட்ட வாள் ஒன்றையும் துப்பாக்கி ஒன்றையும் பரிசளித்தான். அவர்களின் அட்மிரலுக்கும் அம்மாதிரி அனுப்பி வைத்தான்.

இவ்வரவேற்பைக் கண்டு உற்சாகமடைந்த அட்மிரல், ஒரு தூதுவரையும் மற்றும் ஆறுபேரையும் அரச சபைக்கு அனுப்பிவைத்தான். அரசன் கப்பலில் உள்ளவர்களுக்கு உணவுப் பொருட்கள் தாராளமாக வழங்கி உதவினான். அவர்கள் கோட்டை ஒன்றைக் கட்டிக்கொள்ள அனுமதி வழங்கியதோடு, அதற்கு வேண்டிய உதவிகள் செய்வதாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்களித்தான். அவ்வாறு சிங்களவர்களின் துணையோடு தங்கள் மனிதர்களைக் கொண்டு பிரெஞ்சுக்காரர்கள் கோட்டை ஒன்றைக் கட்டத் தொடங்கினர். அரசன் வழங்கும் பொருட்கள் மாத்திரம் தங்கள் தேவைக்கு காணாது என்று கருதிய அட்மிரல், அவற்றைக் கொண்டுவர கோரமண்டல கடற்கரைக்கு பயணமானான். அவன் திரும்பி வரும் வரையும் கட்டுமான வேலைகளைக் கவனிக்க தனக்கு அடுத்த நிலையில் பதவியில் இருந்தவரை நியமித்தான். "நான் விரைவில் திரும்பிவருவேன்" என்று அரசனிடம் வாக்குறுதியளித்துவிட்டுச் சென்ற அந்த அட்மிரல், ஏது பற்றியோ திரும்பிவரவில்லை. புயற்காற்றில் அவன் கப்பல்கள் மூழ்கிவிட்டன என்றும், இல்லை டச்சுக்காரர்கள் அவர்களை அழித்துவிட்டார்கள் என்றும் அங்கு பேசிக்கொள்கிறார்கள். அந்த அட்மிரல் சொன்னமாதிரி திரும்பி வரவில்லை என்று அரசன் திட்டிக் கொண்டிருந்தான். அட்மிரல் அரசனுக்கு விலை மதிப்புள்ள பரிசுப் பொருட்களை பரிசாக அளித்திருந்தான். அவைகளை அரசன் ஏற்றெடுத்தும் பார்க்கவில்லை. அரண்மனையிலிருந்து அவைகளை அப்புறப் படுத்துமாறு ஆத்திரத்துடன் கூறிவிட்டான். கொட்டியாரத்தில் கட்டப்பட்டு வந்த அந்த பிரெஞ்சுக் கோட்டையை இலகுவாகப் பின்னர் டச்சுக்காரர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

கோட்டையை டச்சுக்காரர்கள் கைப்பற்றியவுடன் பிரெஞ்சுக்காரர்கள் கண்டிக்கு வந்தனர். கொட்டியாரத்திலிருந்து தூதுவர் குதிரையில் ஏறிவந்தார். அவ்வாறு செல்வது இந்த நாட்டில் மிக அதியுயர் கௌரவத்துக்குரியவர்களுக்கு மாத்திரந்தான் அனுமதிக்கப்பட்ட செயலாகும். அவர்கள் வருவதைக் கேள்விப்பட்டு, அவர்களைத் தாமதிக்கச் சொல்லி, அவர்கள் தங்க இங்கே ஒரு வீட்டை ஒழுங்குபடுத்தினர். பின்பு பிரபுக்கள் போய் அவர்களை எதிர்கொண்டழைத்து வந்து உபசரித்தனர். அவர்கள் அரசனுக்கு பரிசுப்பொருள் ஒன்றையும் கொண்டு வந்தனர்.

தூதுவர் குதிரை மீதமர்ந்து நகரத்துக்கு வருவதை அவதானித்த பிரதானிகள், அவ்வாறு வரவேண்டாம், அதற்கு அனுமதியில்லை, இறங்கி நடந்து வாருங்கள் என்று கூறினர். ஆனால் அதைப் பொருட்படுத்தாமல் தூதுவர் அரண்மனை வாசல்வரையும் குதிரையிலேயே வந்தார். இச்செய்கையை ஓர் அவமதிப்பு என்று அரசன் கருதிவிட்டான். அதனால் அவர் கொண்டு வந்த பரிசுப் பொருட்களையும் ஏற்றெடுத்தும் பார்க்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதுவர் வீதிக்கு வந்து இறங்கினார். அவரும் பரிவாரமும் நன்கு உபசரிக்கப்பட்டனர். ஒரு நாளைக்கு மூன்று தடவை தரமான உணவு அரண்மனையில் சமைத்து அவர்களுக்கு வழங்கப்பட்டது. பலவகை வசதிகள் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டன. ஒரு நாள் இரவு அவரை அழைத்து வரும்படி அரசன் ஆணையிட்டான். இரவில்தான் அரசன் தூதுவர்களைச் சந்திப்பது வழக்கம். அதன்படி பிரபுக்களும் மந்திரிமாரும் சென்று அவரை அழைத்து வந்தனர். அவர் அரசசபையில் மூன்று மணித்தியாலயங்களுக்கு மேலாக அரசனுக்காகக் காத்திருந்தார். ஆனால் அரசன் வரவில்லை. இந்தப் புறக்கணிப்பாலும் அவமதிப்பாலும் அவர் மனம் வெதும்பி, தனது இருப்பிடத்துக்குப் போக ஆயத்தமானார். அப்போது அரண்மனை வாசலில் யானைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் அவரால் வெளியேற முடியவில்லை அவர் ஆத்திரம் கொண்டு வாளை உருவி எடுத்துக் கொண்டு யானையை நோக்கிப் போனார். அதை அவதானித்த பணியாளர்கள் யானைகளை விலக்கி அவருக்கு வழிவிட்டனர்.

இதைக் கேள்வியுற்ற அரசன் மிகவும் கோபப்பட்டான். அவரையும் அவர் பரிவாரத்தையும் அடித்துத் துன்புறுத்தி, விலங்கிட்டு வைக்குமாறு தனது பணியாளர்களுக்குப் பணித்தான். அட்மிரலால் முன்னர் அனுப்பப்பட்டவர்களுக்கும் தூதுவரின் செயலுக்கும் சம்பந்தமில்லை என்பதால் அவர்களைத் தவிர்க்குமாறு அரசன் கூறினான்.

அவர்களிடமிருந்து ஆயுதங்கள் பறிக்கப்பட்டன. தூதுவர்களின் பணியாளர்கள் தங்களுக்கும் தூதுவரின் செயலுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்றும், மேலதிகாரியின் கட்டளைக்குப் பணிவது சேவகர்களின் கடமை என்றும், அதன்படிதான் தாங்கள் நடந்து கொண்டோம் என்றும், காவலர்களிடம் கூறினர். இவைகளைக் காவலர்கள் அரசனிடம் கூறினர். அரசன் அவர்களின் நியாயத்தை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு விலக்களித்தான். விலங்கிடப்பட்ட நிலையில் தூதுவர் ஆறு மாதங்கள் இருந்தார். பிரதானிகளிடம் மற்ற பிரெஞ்சுக்காரர்கள் கெஞ்சிக்கேட்டதன் பேரில் அவர் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

தூதுவரின் புத்தியற்ற செயல்களால் தங்களுக்கு இன்னல்கள் விளைகின்றன என்று உணர்ந்த பிரெஞ்சுக்காரர்கள், அவருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்திருப்பதைத் தவிர்த்துக் கொண்டனர். ஒவ்வொருவரும் அரசனின் அனுமதியைப் பெற்றுத் தனித்தனியாக வாழத் தொடங்கினர். அவர்களில் ரியு பினெஸ்ஸி (பிரபல பிரஞ்சுக் கனவான் ஒருவரின் புதல்வர்) ஜீன்பிளும் மற்றும் தூதுவரின் வேலைக்காரப் பையன், அவனின் பெயர் எனக்கு நினைவில்லை ஆகிய மூவருக்கும் அரசன் தனது அபிமானத்துக்குரிய குதிரையைப் பராமரிக்கும் பொறுப்பை ஒப்படைத்தான். ஆயினும் அக்குதிரை சில காலத்துக்குப் பின்னர் இறந்துவிட்டது. அது இயற்கையாக வயது போய் விட்டதால்தான் மரணமடைந்தது என்று சொல்லப்படுகின்றது. குதிரை அவர்களின் பராமரிப்புக்குறைபாட்டாலேயே இறந்துவிட்டது என்று அவர்களைக் குற்றம் சாட்டினான். டியு பினெஸ்ஸியையும் ஜீன் பிலும்பையும் விலங்கிட்டு மலையில் கொண்டு போய்விடுமாறு கட்டளையிட்டான். நான் அங்கிருந்து வரும்போது அவர்கள் அங்கேயே இருந்தனர்.

மீதிப் பிரெஞ்சுக்காரர்கள் அங்கே பல தொழில்களைச் செய்து பிழைக்கின்றனர். சிலர் சாராயம் காய்ச்சி நகரத்திற் பெரிய தவறணைகளை நடத்துகின்றனர்.

நான் அந்தத் தீவை விட்டு வருவதற்கு சிறிது காலத்துக்கு முன்னர் தனக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்குமிடையே நடந்தவைகளுக்குக் காரணம் அவர்களை சரியாகத்தான் விளங்கிக்கொள்ளாததுவே என்பதை அரசன் உணர்ந்து கொண்டு அவர்களை நண்பனாக்கிக்கொண்டான். அவன் தூதுவரையும் மிகுதி பிரெஞ்சுக்காரர்களையும் அழைத்து நீங்கள் வெகு தூரமிருந்து வந்தவர்களாதலால் உங்களுக்கு விரோதம் பாராட்டுவது நல்லதில்லை. நீங்கள் கடவுளை அல்லது பிரெஞ்சுக்காரர்களை நம்பினால் தூதுவருடன் சென்று ஒன்றாக வாழவேண்டும் என்று கூறினான். அரசனின் விருப்பத்துக்கெதிராக போகமுடியாமல் அவர்கள் தூதுவருடன் சென்று வாழ்ந்தனர். பின்னர் அரசன் அவர்களுக்கு பழவகைகள், இனிப்புப்பண்டங்கள் வைத்து விருந்தளித்தான். ஆயினும் அவர்களுக்கிடையே இருந்த கருத்து வேறுபாடுகளைக் களைய முடியவில்லை. ஒவ்வொருவரும் பிரிந்து சென்று தனித்தனி வீடுகளில் வாழத்தொடங்கினர். அரசன் இதைக் கண்டு அவர்களுக்கு வழங்கும் படியை நிறுத்தி விடுவதென்று முடிவெடுத்தான். ஆயினும் அவர்கள் ஒத்துவருவாதாயில்லை. இக்காலத்தில் நான் அங்கிருந்து புறப்பட்டுவிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இங்கிலாந்து வந்ததற்கு பிறகு, கிறிஸ்தவர்கள் என்ற முறையில் அவர்கள் மீது அனுதாபம் கொண்டு, கிறிஸ்தவ அறங்களை அறிவுறுத்துவதற்காக அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அக்கடிதம் இவ்வாறு அமைந்திருந்தது.

மகிமைக்குரியவர்களே,

இந்தத் தீவிலுள்ள கண்டிராச்சியத்தின் அரசனால் நீண்ட காலம் கிட்டத்தட்ட இருபது வருடங்கள் கைதியாக இருந்தபோது பிரெஞ்சுத் தூதுவரையும் அவரோடு வந்த உங்களையும் நான் அறிவேன். திரு டிலா ஹேய் உங்களில் எட்டுப்பேர்களைக் கண்டியரசனுடன் பேச்சுவார்த்தை நடத்த அனுப்பினார். அப்போது நீங்கள் கைதியாகத் தனிமையில் யாருடனும் தொடர்பு கொள்ள முடியாதிருந்த எனது நிலைமையைக் கண்டு மனவருத்தமடைந்தீர்கள். நீங்கள் என்மீது காட்டிய அநுதாபத்துக்கும் பரிவுக்கும் நான் என்றும் கடமைப்பட்டவன். பிரெஞ்சுக்காரர்களாகிய உங்களுக்கும் நான் விட்டு வந்த பதினாறு ஆங்கிலேயர்களுக்கும் என்னால் உதவ முடியாதுள்ளதை எண்ணி நான் மிகுந்த மனவருத்தமடைகின்றேன். உங்களுடைய உறவினர்களுடன் தொடர்பு கொண்டு உங்களைப்பற்றிய செய்திகளை நான் அவர்களுக்கு அறிவிப்பேன். இதை மாத்திரமே நான் இப்போது செய்ய முடியும். தூதுவரின் பெயர் என்ன என்று எனக்கு நினைவில்லை. ஆனால் அவரின் உறவினரான திரு லா சேர்ல் என்பவரை நான் அறிவேன். அவர் நல்லதொரு பிரெஞ்சுக் கனவான், இளைஞர் திரு டியு பிளெஸ்ஸையும், திரு லா ரொக்கையும் எனக்குத் தெரியும். அவர்களும் நல்ல இளைய கனவான்கள். இந்தக் கடிதம் ஏதும் வில்லங்கங்களை உங்களுக்கு ஏற்படுத்தி இருக்குமோ என்று பயப்படுகிறேன். மேலும் சலிப்பேற்படுத்தி உங்கள் பொறுமையைச் சோதிக்கிறேனோ என்றும் அஞ்சுகிறேன். அப்படியென்றால் என்னை மன்னித்துவிடுங்கள். அங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு எனது அன்பைத் தெரிவியுங்கள். நீங்கள் விரும்பினால் என்னுடன் மேலும் கடிதத்தொடர்பு கொள்ளலாம். நான் அதற்கு ஆவலுடன் தயாராக உள்ளேன்.

உங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பியர்களை ஏன் இந்த அரசன் தடுத்து வைத்திருக்கிறான் என்பதை அறிதல், இவ்விடத்தில் அவசியமாக உள்ளது. வெள்ளைக்காரர்களைத் தடுத்து வைத்திருப்பதால் அவனுக்கு எந்த இலாபமோ நன்மையோ ஏற்படுவதாகத் தெரியவில்லை. மாறாக, அவர்களைப் பராமரிப்பதற்கு பெரும் செலவு மக்களுக்கும் அரசனுக்கும் ஏற்படுகிறது. இவைகளைப் பற்றியெல்லாம் கவனத்தில் எடுத்து யோசித்தால் தெளிவாவது என்னவெனில், அன்பினாலோ வெறுப்பினாலோ ஏதும் இலாபம் ஏற்படும் என்றோ வெள்ளைக்காரர்களை அரசன் தடுத்து வைத்திருக்கவில்லை. அவர்கள் தனது நாட்டு மக்களை விட தனக்கு சேவை புரிவார்கள். தனது கட்டளைகளை விசுவாசமாக நிறை வேற்றுவார்கள் என்று கருதியதாலேதான் இவ்வாறு நடந்து கொள்கிறான். ஆயினும் காவற் கடமையில் வெள்ளைக்காரச் சிப்பாய்கள் பொறுப்பில்லாமல் ஒருவர் அங்கும் மற்றவர் இங்கும் குடித்துவிட்டு மயங்கிக்கிடந்ததை அறிந்து அரசன் முகம் சுளித்தான். தனது சிப்பாய்கள் பரவாயில்லை போலும் என்று கருதினான். எனினும் அவர்களைக் காவற் கடமையிற் பொறுப்புள்ளவர்களாக்க முயற்சிகள் எடுத்தான்.

இந்தச் சிப்பாய்களில் ஒருவர் டச்சுக் கப்டனின் கீழும் மற்றவர் போர்த்துக்கீச கப்டனின் கீழும் வேலை செய்தவர்களாவர். அவர்கள் அரசனின் ஆயுதச்சாலையில் இரவுபகலாகக் காவலுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். அந்த ஆயுதசாலை அரசசபையில் இருந்து சற்று தூரத்தில் இருந்தது. அவர்களை எவரும் தொந்தரவு செய்யக்கூடாது. அவர்களும் யாருடனும் தொடர்புகொள்ளக்கூடாது என்று கட்டளை பிறப்பித்திருந்தான். டச்சுக் கப்டனும் சிப்பாய்களும் ஒரு பக்கத்திலும், போர்த்துக்கீச கப்டனும் சிப்பாய்களும் மறுபக்கத்திலும் காவலில் இருந்தனர்.

வெள்ளைக்கார சிப்பாய்களுக்கு அரசன் உறுதிமொழி அளித்தவாறு யாவற்றையும் கொடுத்து அவர்களைக் கௌரவப்படுத்தினான். அவர்களின் ஏவல் வேலைகளைச் செய்யச் சிறுவன் ஒருவனை அனுப்பினான். அச்சிறுவன் அவர்களோடு இரண்டு வருடங்கள் இருந்த காலத்தில் ஒல்லாந்த போர்த்துக்கீச மொழிகளை கற்றுக் கொண்டான். பின்னர் அரசன் அவனைத் தன்சேவையில் எடுத்துக்கொண்டு சிறிது காலத்தின் பின் சிரச்சேதம் செய்துவிட்டான். இந்தச் சிறுவனை அரசன் அவர்களோடு இணைத்துக்கொண்டதன் நோக்கம் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை வேவு பார்ப்பதற்காகும். அச்சிப்பாய்களில் ஒருவன் குற்றவாளியாக இனங் காணப்பட்டான். அவனது கைகளைச் சங்கிலியாற் பிணைத்து வைத்திருக்கும் படி கட்டளையிட்டான். அவனது கால்கள் சங்கிலியாற் பிணைக்கப்படவில்லையாதலால் அவன் ஓடிவிட சாத்தியம் உண்டு. அவ்வாறு நடந்தால் அவனைக் காவல் காப்பவர்களே அதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். அதனால் அவர்கள் கவனமாக இருந்தார்கள். இவ்வாறான தந்திரங்களால் வெள்ளைக்காரப் படைவீரர்களின் கவலையீனத்தைக் களைய முயற்சித்தனர்.

உண்மையில் அரசன் தனது நாட்டு மனிதர்களை விட வெள்ளைக்காரர்கள் மீது நல்ல நம்பிக்கை கொண்டிருந்தான். அவர்களோடு நாட்டு விவகாரங்கள் பற்றிக் கலந்துரையாடுவான். அவர்கள் பலருக்கு அவர்களின் தகுதிக்கு மீறிய உத்தியோகங்களையும் வழங்கி இருந்தான். நாடு பூராவிலும் வெள்ளைக்காரர்களுக்கு நல்ல மதிப்பிருந்தது. அதனால், கடவுளும் வெள்ளை, அவன் அருள் பெற்று முக்தியடைந்த ஆத்மாக்களும் வெள்ளை, கறுப்புக் கடவுளால் நிராகரிக்கப்பட்டு, குற்றம் சாட்டப்பட்ட நிறம் என்று சிங்களவர்கள் அடிக்கடி சொல்லிக்கொள்வார்கள்.

அரசனின் அபிமானத்தை அவர்கள் பெற்றுள்ளதால் அவர்கள் பல சலுகைகளைப் பெற்றுக்கொண்டனர். அவர்கள் மதிப்புக்குரிய வகையில் ஆடைகள் உடுத்தவும், தங்கம், வெள்ளி நகைகள் அணியவும், சப்பாத்து கால் மேசு போடவும், பட்டி மாட்டிக்கொள்ளவும், வாள் வைத்திருக்கவும் உரிமை பெற்றிருந்தனர். இவைகளை அணியும் உரிமை சிங்களவர்களுக்கில்லை. வெள்ளையர்கள் தங்கள் வீடுகளுக்கு வெள்ளையடித்துக் கொள்ளலாம். சிங்களவர்கள் அடிக்கமுடியாது.

அரசன் வெள்ளையர்களை முக்கியமாக வெள்ளையினத் தூதுவர்களை தனது முன்னிலைக்கு அழைத்து. அவர்களுக்கு மிகுந்த மதிப்புக்கொடுத்து அவர்களுடன் அளவளாவுவான். அவர்களைப் பராமரிப்பதற்கு மிகுந்த செலவாகிறது. அதை அவன் பொருட்படுத்துவதில்லை. இதனால் பொருளாதார நிலைமையில் எங்களுக்கும் அரசனுக்கும் இடையே நிலவும் தூரத்தை விட மக்களுக்கும் எங்களுக்குமிடையே கூடிய தூரம் உள்ளது. சுருக்கமாகச் சொன்னால் மக்கள் அடிமைகளைவிடக் கேவலமாக வாழ்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் அவர்களை எங்களைப் பராமரிக்கும் படி ஏவுகின்றான். அவர்களின் மனைவி பிள்ளைகள் பட்டினி கிடக்க அவர்கள் எங்களைப் பராமரிக்க வேண்டும். வரிகளைக் கட்ட வேண்டும். மக்கள் ஒரு தடவை தங்களால் இவைகளைச் செய்ய முடியாமல் இருக்கிறது என்ற போது நீதவான் இது அரசனின் கட்டளை, யாரும் இதனை மீறமுடியாது என்று கூறிவிட்டார். எங்களுக்கு உணவு தரமுடியாதவர்கள் தங்களின் மனைவி, பிள்ளைகளை விற்றாவது எங்களைப் பராமரிக்க வேண்டும் என்று கூறிவிட்டார். இவ்வாறு இந்த அஞ்ஞானிகளின் அரசனால் எல்லாம் வல்ல இறைவன் கிறிஸ்தவ மக்கள் வசதியாக வாழ அருள் செய்துள்ளான்.

இந்த நாட்டில் உள்ள கிறிஸ்தவ மக்களிடையே சமயம் எவ்வாறு அனுஷ்டிக்கப்படுகிறது என்பதைப் பற்றி சொல்வதற்கு எனக்கு மனவருத்தமாக உள்ளது. இங்கே சேர்ச்சுகள் இல்லை. மதகுருமார் இல்லை. புனித நாட்களில் ஆராதனை செய்ய வசதிகள் இல்லை. ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளில் புனிதநூலை வாசித்துப் பிரார்த்தனை செய்கிறார்கள். புனித நாளில் வேலை செய்வதைத் தவிர்த்துக்கொண்டு ஒன்று சேர்ந்து சாராயம் விற்கும் வீடுகளில் இருந்து குடிப்பார்கள். மதகுரு இல்லாமல் தமது பிள்ளைகளுக்கு தாங்களாகவே ஞானஸ்நானம் செய்வார்கள். அப்போது பிதாவினதும் அவரின் தேவகுமாரரினதும் புனித ஆவியினதும் நாமத்தால் என்ற வார்த்தைகளைச் சொல்லிக் கிறிஸ்தவப் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்கு சூட்டுவார்கள். அச்சடங்கின் போது அவர்களின் நண்பர்கள் எல்லாம் கூடியிருப்பார்கள். ஒரு விருந்து ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும். சிலர் புனித நூலை வாசிக்கவும், பிரார்த்தனை செய்யவும், மற்றும் சில காரியங்களையும் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பார்கள்.

அவர்கள் புறச் சமயத்தவர்கள் இல்லை. அவர்கள் விக்கிரக ஆராதனை செய்வது இல்லை என்பதும், கிறிஸ்தவ பெயர்களையும் பழக்க வழக்கங்களையும் வரித்துள்ளார்கள் என்பதும், மணிகளையும் சிலுவைகளையும் தங்கள் கழுத்தில் அணிந்துள்ளார்கள் என்பதும் சிறந்த அம்சங்கள் என்று கூறலாம். ஆயினும் அவர்களின் எல்லா நடைமுறைகளும் திருப்தியைக் காட்டுவதாயில்லை. உதாரணமாக, அவர்களில் ஒருவர் நோய்வாய்ப்பட்டால், அந்த நாட்டு அஞ்ஞானிகள் செய்யும் சடங்குகளையே இவர்களும் செய்கிறார்கள். களியினால் விக்கிரகங்கள் செய்து வீட்டில் வைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகளுக்கு முன் அரிசியை வைத்து நெசவு செய்பவர்களைக் கொண்டு நடனமாட வைப்பார்கள். இதற்காக வெட்கப்படும் ஒருவரையும் நான் அவர்களிற் காணவில்லை. அங்குள்ள யேசு சபையைச் சேர்ந்த கிறிஸ்தவ பாதிரியார் வெர்க்கோன்ஸ் கோயில்களுக்குச் சென்று விக்கிரகங்களுக்குப் பலியிடப்பட்ட உணவை நெசவாளர்களுடனும் பொது மக்களுடனும் அமர்ந்து உண்கிறார் என்றும் கேள்விப்பட்டேன். "நான் கடவுளின் பிராணிகளின் இறைச்சியைத்தான் உண்கிறேன். ஆகவே அது பொதுவான இறைச்சி இது அவர்களின் மூட நம்பிக்கையால் வீணாகிவிடக்கூடாது" என்று அவர் இதற்குச் சமாதானமும் சொல்லிக் கொள்கிறாராம்.

இருந்த போதிலும் இந்தத் திருத்தந்தையின் விதந்துரைக்கத்தக்க சிறப்பு ஒன்றுண்டு. அரசன் இரண்டு மதகுருமாரை அரண்மனைக்கு அழைத்துக் கௌரவித்தான். அவர்களில் இவரும் ஒருவர். அரசன் அவரிடம் "நீங்கள் உங்களது பழைய மேலங்கிகளையும் தொப்பியையும் மற்ற மதகுரு போல் நீக்கி, கௌரவத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறினான். அதற்கு பாதிரியார் "யேசுவின் திருநாமத்தை மகிமைப்படுத்துவதற்காக நீண்டகாலமாக இந்த மேலங்கியையும் தொப்பியையும் அணிந்து வருகிறேன். இந்த கௌரவத்துக்காக இதனைக் கைவிட முடியாது" என்று பதிலளித்தார். அரசனும் பாதிரியாரின் பதிலைக் கனம் பண்ணி ஏற்றுக்கொண்டார். இந்த பாதிரியார் சுமாரான நூலகம் ஒன்றையும் வைத்திருக்கிறார். இந்நூலகத்தில் முப்பது நாற்பது புத்தகங்கள் வரை இருந்தன. அந்நூல்களை அவரின் இறப்புக்கு பின் அரசன் எடுத்துக் கொண்டான். பாதிரியார் வயது முதிர்ந்து நோய்வாய்ப்பட்டு இறந்தார். மற்றவர் கொல்லப்பட்டார்.

நான் அங்கிருக்கும் போது, வேர்க்கோன்ஸ் பாதிரியாரைத் தவிர மற்றவர்கள் எல்லாம் இறந்துவிட்டனர். கட்டிய சேர்ச்சை, அஞ்ஞானிகளின் சமயத்துக்கும் கிறிஸ்தவ சமயத்துக்கும் வித்தியாசம் தெரியாதபடி, போர்த்துக்கீசர் விபச்சார விடுதி போல் ஆக்கிவிட்டனர். அதனால் அரசன், அதனைத் தரைமட்டமாக்கி விட்டான்.

இருந்த போதிலும் புரொடெஸ்தாந்துகளும் பப்பிஸ்டுகளும் அங்குள்ளவர்களில் வித்தியாசமான கிறிஸ்தவர்களாக உள்ளனர். தங்களிடையே எந்த வித்தியாசமும் பாராட்டாமல், அவர்கள் இனிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL

நண்பர்களாகப் பழகுகின்றனர். அவர்கள் மதுபான விருந்துகள் நடத்துவது கிடையாது. அவர்களையே உண்மைக் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கலாம்.

அடிக்குறிப்புகள்

1. நூலாசிரியரின் தந்தையார் தகப்பனும் மகனும் ரோபேர்ட்நொக்ஸ் என்ற ஒரே பெயரால் அழைக்கப்பட்டனர்.
2. பாண்டிச்சேரிக்கு முப்பது மைல் தொலைவில் உள்ள துறைமுகம்
3. கற்பிட்டி - புத்தளம் கடற்கரைக்கு வந்தனர்.
4. கண்டுகார பகலே கொரல பற்றில் உடபலாத் பிரதேசத்தில் உள்ள ஒரு கிராமம். இது நிலம்பே நகரத்திலிருந்து ஒன்றரைமைல் தூரத்தில் உள்ளது. இங்கே நொக்ஸ் வாழ்ந்த வீடு (இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொல்லியல் திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்டு அங்கு ஒரு கல்வெட்டு நாட்டப்பட்டுள்ளது. அதில் அவர் இங்கு 1667 - 1670 காலப்பகுதியில் வாழ்ந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
5. கஞ்சா.

12844CC

பொதுசன நூலகம்
01 SEP 2019
மாநக
யாழ்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12844 CC

273573

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலைப் படிக்கின்ற போது ஒரு நாவலைப் படிப்பது போன்ற உணர்ச்சி ஏற்படும் ஆனால் நொக்ஸ் தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் தான் புரிந்தவாறு பதிவு செய்தான். ஒரு வரலாற்று ஆதாரம் போன்று வேறெந்த நூலும் இதனைப் போன்று எழுதப்படவில்லை. இது வரலாற்று ஆசிரியர்கள், மாணவர்கள் ஆழமாகப் படிக்க வேண்டிய நூல் கண்டி இராச்சியத்தின் சமூக வழமைகள், ஆட்சிமுறை, பொருளாதாரம் என்பன பற்றி அறிந்து கொள்ள விரும்புபவர்கள் எல்லோரும் இதனைப் படிப்பதன் மூலம் அதிக பயன் பெறுவர். பதினேழாம் நூற்றாண்டிலே கண்டிச் சிங்களவரிடையே காணப்பட்ட சமூக, பண்பாட்டு நிலைகள் இந்த நாட்களிற் பெரிதும் மாற்றம் அடைந்துவிட்டன. நொக்ஸினுடைய நூலைப் படிக்கின்ற பொழுது 17ஆம் நூற்றாண்டுக் காலத்துச் சமுதாயமும், நிகழ்ச்சிகளும் சித்திரக்கோலம் போல் படிப்பவர்களின் உள்ளங்களிற் பதிந்துவிடுகின்றன.

PBD
4801/00990
Rs. 550.00

SIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. TEL: 011 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org